211,32 N80
N80·168;1
122009

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 2ND JULY 1980
4th, 5th, 7th to 7th July 1980

Index - Nil

**Volume CLXVIII No. 1 to 7**

©
**GOVERNMENT OF TAMIL NADU**
**1980**

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

PRICE 2 *Rupees*.]

D
Y211.32 N80
N80 - 16831
122009

# பொருளடக்கம்

| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—v |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல். | vii—x |
| 1. அறிவிப்பு .. .. .. | 1 |
| 2. 1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை .. | 1—37 |
| 3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 38—41 |

# பொருளடக்கம்


பக்கங்கள்

1. ஒத்தி வைப்புத் தீர்மானம்—

   (1) மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமை குறித்து .. .. .. 133—136

   (2) பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேருவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி குறித்து. .. .. 136—138

2. தகவல் கோரல் 139

3. கவன ஈர்ப்பு—

   தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் முன் ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட மாறுதல்களை எதிர்த்து நடத்திய உண்ணாவிரதம் குறித்து .. .. .. 139—140

4. 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி. .. 140—190

5. ஆவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 190

## பொருளடக்கம்


பக்கங்கள்.

1. ஒத்திவைப்புத் தீர்மானம்—

திண்டிவனம் அருகே எரிவாயு சிலிண்டர் அடங்கிய லாரி விபத்துக்குள்ளாகி 2-7-80 அன்று 14 பேர் மரணமடைந்தது குறித்து 193—198

2. அறிவிப்பு—

உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து .. .. 199

3. கவன ஈர்ப்பு—

மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காததினால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து .. .. .. 199—202

4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. 203—255

## பொருளடக்கம்

4—7—1980


பக்கங்கள்

தகவல் கோரல்—

(1) அவைக் கூட்டம் குறித்து. 77

(2) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து. 78

அறிவிப்பு—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி. 77

(2) மதுரை காமராஜர் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்கு மேலவையிலிருந்து ஓர் உறுப்பினர் தேர்வு குறித்து. 78

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு. 92

கவன ஈர்ப்பு—

கால்நடை மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் ஆகியோருடைய போராட்டத்தின் காரணமாக கால் நடை மருந்தகங்கள் மூடிக்கிடப்பது குறித்து. 79

1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம் 80—90

சட்டமன்ற மேலவை விதி 82ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை— 93—131

மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் தளர்த்தப்படுதல் குறித்து. 90—91

## பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | ஒத்தி வைப்புத் தீர்மானம் | 337 |
| 2 | அறிவிப்பு— | |
| | மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பாடக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் .. | 337 |
| 3 | கவன ஈர்ப்பு— | |
| | திருச்சி அரசு மருத்துவ மனையில் செவிலியர் நடத்தி வரும் வேலை நிறுத்தம் குறித்து | 337—339 |
| 4 | 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம். | 339—420 |
| 5 | அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 420—422 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNER OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. THE HONOURABLE THIRU V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Planning, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official language.

8. THE HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister in-charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles and Minerals.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister in-charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 5வன ஈர்ப்பு— | |
| (1) தூத்துக்குடி—இராமேஸ்வரம் கடலோரப் பகுதிகளில் அந்நிய கப்பல்கள், படகுகள் சட்ட விரோதமாக நடமாடுதல் குறித்து. | 259-261 |
| (2) எழும்பூர், திருவல்லிக்கேணி அரசாங்க மகப்பேறு மருத்துவ மனைகளில் பிறந்த குழந்தைகள் களவாடப் பட்டது குறித்து. | 262 |
| !980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. | 263-331 |

# பொருளடக்கம்


பக்கங்கள்.

அறிவிப்பு— 423

தகவல் கோரல்—

வினாக்கள் காலாவதி ஆனது குறித்து .. 423—426

கவன ஈர்ப்பு—

(1) மதுரை மாவட்டத்தில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் உண்ணாவிரதம் குறித்து .. .. .. 426—427

(2) உள்ளாட்சித்துறை ஆசிரியர்கட்கு மிதி வண்டிக் கடன் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருந்தும், தஞ்சை மாவட்ட திருமருகல் ஒன்றிய ஆணையர் மறுத்து வருவதை எதிர்த்து ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து .. 428—429

1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. 429—527

ஒழுங்குப் பிரச்சினை—

அவையில் மானியக் கோரிக்கைகள் குறித்து வைக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து .. 484—486

அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 527—528

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம், மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.



13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும், மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மற்றும் பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. புலவர் புலமைப்பித்தன்.
2. திரு. சோ. ஆறுமுகம்.
3. திரு. பா. ரா. தாமஸ்.
4. திருமதி தாரா செரியன்.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அருணாசலம், திரு. கே. | நியமனம். |
| 2. ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3. ஆறுமுகம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4. ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6. இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8. இராமமூர்த்தி, திரு. ம., எம்.எ., | |
| 9. கண்ணப்பன், காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10. சங்கரலிங்கம், திரு. ம., எம்.எ., | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 11. சந்தோஷம், திரு. த., எம்.எ., பி.எல். | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 12. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 13. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 14. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 15. சீதாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 16. சுவாமிநாதன், தி. ஜி. பி. பார்ம். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 17. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 18. தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19. தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 20. தாஸ், திரு. ஏ.கே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 21. துரை சாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23. நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25. புலவர் புலமைப்பித்தன். | மாநிலச் சட்டமன்றப பேரவை. |
| 26. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 27. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29. மீனாட்சி சுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 30. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 31. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 32. முத்தையா செட்டியார், டாக்டர், எம்.ஏ. | நியமனம். |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம். |
| 34. ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 35. லீலாவதி, செல்வி ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 38. வள்ளி முத்து, திரு. ஈ. வி. ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41. ஹண்டே, டாக்டர். எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 42. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர்இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| | (2) |
| 49. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 50. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 51. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைந்த சட்டமன்ற மேலவையின் ஐம்பத்தி எட்டாவது கூட்டத் தொடர்.

**புதன்கிழமை, 1980 ஜூலை 2.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (**டாக்டர்** ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்பு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. எஸ். முத்து, திரு. ஓ. எஸ். துரைசாமி ஆகியோர் இன்று மாலை எனது அறையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர் என்பதை அறிவிக்கிறேன்.

## 2. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், நான் இதை முழுவதும் படிக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதி முக்கியமான சில பகுதிகளை மட்டும் படிக்கிறேன்.

"மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும்—காத்த
வகுத்தலும் வல்ல தரசு

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி. தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேலும் மேலும் உருவாக்குதல், அவ்வாறு வந்தவற்றை ஒரு வழித் தொகுத்தல், தொகுத்தவற்றைப் பேணிக் காத்தல், காத்தவற்றை அற நெறி வழிச் செலவிடுதல் ஆகியவற்றில் வல்லமை கொண்டதே அரசு ஆகும். இந்த இலக்கணத்திற்கு ஏற்ப, 1979-80 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும் @ இந்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

@ 42—75 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2. நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு திங்கள்களுக்கு வேண்டிய மானியக் கோரிக்கைக்கான முன் அனுமதி, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது, நாடாளுமன்றத்தில் பெறப்பட்டதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். எஞ்சியுள்ள எட்டுத் திங்கள்களுக்கும் சேர்த்து, இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையின் முன் வைத்து, ஆண்டு ஒதுக்கீட்டுக்கான ஒப்புதலைக் கோருகிறேன்.

3. சனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் மக்களாட்சி மலர்ந்து, இந்தப் புதிய அமைச்சரவை பதவியேற்றபின், குறுகிய காலத்திற்குள், போதுமான அளவு வாய்ப்பும், வசதியும் இல்லாதிருந்தபோதிலும், முக்கியமான கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் கூடுமான வரையில் மதிப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசு செய்திருக்கிறது. மக்கள்மன்றம் இந்த அரசு முன்னுரிமை அளிக்க இருக்கும் திட்டப் பணிகளுக்கும், வேலைத் திட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளையும், மாற்றங்களையும் தொடர்ந்து செய்யும் என்று அவையினர்க்கு உறுதி கூறுகிறேன்.

4. இன்றைய நிலையில், இந்தியா முழுவதும் நிலவி வருகின்ற நெருக்கடியான பொருளாதார நிலை தமிழகத்தையும் தாக்கியிருக்கிறது. அனைத்திந்திய பொருளாதாரத்தில் பணவீக்கச் சக்திகள் வலிவுடன் தலைதூக்கியிருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்; உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இவற்றிற்கான நிதி நிருவாகக் கொள்கைகளையும், வரி விதிப்புக் கொள்கைகளையும் வகுக்கும் அதிகாரம் பெரிதும் மத்திய அரசிடமே உள்ளது. தேசிய பொருளாதாரக் கொள்கைகளைச் செம்மைப்படுத்தி, மாநில அரசுகளுக்கு வலிவூட்டி, மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் உடனடித் தேவைகள், குறுகிய காலத் தேவைகள், நீண்ட காலத் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நடைமுறையில் இருந்துவரும் திட்டங்களைத் தொடர்ந்து செம்மையாகச் செயல்படுத்துவதற்கும், புதிய திட்டங்கள் பலவற்றைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.





## வேளாண்மை.

5. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள வேளாண்மை வளர்ச்சிக்கான பணிகளைப் பரவலாக்கும் முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. சென்ற ஆண்டு 62.29 இலட்சம் டன் அரிசி உற்பத்தியும், 19.03 இலட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தியும், 2.60 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தியும் ஆக மொத்தம் 83.92 இலட்சம் டன் உணவு உற்பத்தியாவதற்கான வசதிகள் உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டில் 64 இலட்சம் டன் அரிசி உற்பத்தியும், 21.45 இலட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தியும், 3.75 இலட்சம் டன் பயறு உற்பத்தியும் ஆக மொத்த உணவு உற்பத்தி 89.20 இலட்சம் டன்களாக உயருவதற்கான வாய்ப்புக்களை வேளாண்மைத் துறை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

6. நெல், பருத்தி போன்ற பயிர்களுக்கான விதைகளை சிறந்த விவசாயிகள் உதவியுடன் உற்பத்தி செய்யும் பதினொன்று மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனுடன் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி செய்யும் பணியைச் சிறப்பாக நடத்துவதற்காக நான்கு எண்ணெய்வித்து உற்பத்தி மையங்கள் தொடங்கப்படும். தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த விவசாயிகள் அடிப்படை விதைகளைப் (Foundation Seeds) பெற்று, அவற்றிலிருந்துத் தக்க விதைகளை உற்பத்திச் செய்து வேளாண்மைத் துறைக்கு வழங்கவும், அவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும்போது பயிர்கள் தக்க முறையில் பயிரிடப்படுகின்றனவா என்பதைத் தொடர்ந்து கவனித்து வருவதற்கும் முயற்சிகள் செய்யப்படும்.

7. தமிழ்நாட்டில் பயறு வகைகளின் உற்பத்தி, தேவையை விடக் குறைவாகவே உள்ளது. எனவே, பயறு வகைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை, மொத்தம் 30 இலட்ச ரூபாய்ச் செலவில் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி மூல விதைகள் (Breeder Seeds) தனியே உற்பத்தி செய்யப்பட்டு மாநிலம் முழுவதும் தரமான விதைகள் படிப்படியாக வழங்கப்படும். எதிர்காலத்தில் இதன் விளைவாகப், பயறு வகைகளின் உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கென மொத்தம் 54 இலட்ச ரூபாய்ச் செலவில், கூடுதலாகப் பெரிய அளவில் எட்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்படும். ஆண்டுக்குச் சுமார் 13 இலட்சம் நாற்றுகள் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்து வருவதற்குப் பதிலாக, மொத்த உற்பத்தி 31 இலட்சம் நாற்றுகளாக உயர்ந்து, அதிகமான அளவில் தென்னை நாற்றுகள் வழங்கப்படும். புதிதாகத் தொடங்கப்பட்ட பெரியார்

மாவட்டத்தில், தாராபுரத்தில் விவசாயிகள் பயிற்சிப் பள்ளியொன்று இந்த ஆண்டில் திறக்கப்படும்; இதன்பின் மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களும் விவசாயப் பயிற்சிப் பள்ளிகள் கொண்டனவாக அமைந்துவிடும்.

9. சென்ற ஆண்டு விதைச் சான்றளிப்பு அமைப்பை வேளாண்மைத் துறையிலிருந்து தனியாகப் பிரித்துத் தனி நிறுவனமாக ஆக்கியதையொட்டி, அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு 10 இலட்ச ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தோட்டப் பயிர்கள் இயக்குநரகம் சென்ற ஆண்டு புதி தாக அமைக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள். மதுரை யிலுள்ள சிறுமலைப் பகுதியில் பெரிய பழத் தோட்டம் ஒன்றையும், கல்ராயன் மலைப் பகுதியில் ஒரு பெரும் பழவகைப் பண்ணையையும் நிறுவுவதற்கு இந்த ஆண்டில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதிலுமுள்ள அரசுப் பழப் பண்ணைகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக மொத்தம் 7.66 இலட்ச ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. வேளாண்மை விளைபொருள்களை நன்முறையில் விவசாயிகள் விற்றுப் பலனடைவதற்கு 10 தரம் பிரிக்கும் ஆய்வுக் கூடங்களைப் புதிதா நிறுவுவதற்கும், 5 ஆய்வுக் கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அர மொத்தம் 14.7 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இந்த ஆண் வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண்மைத் துறையில் பல்வேறு புதி ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக 20 இலட்சம் ரூபாய் ஒதுக்க பட்டுள்ளது. பயறு வகைகள், சிறு தானியங்கள் இவற்றின் மேம்பாடுபற்றி ஆராய்ச்சிகளுக்கு இதன்மூலம் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

## இன்றியமையாப் பொருட்களை வழங்குதல்.

10. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம், மத்திய அரசு நிர்ண யித்த கொள்முதல் விலைக்குக் கூடுதலான விலையில், நெல்லை விவசாயிகளி லிருந்து நேரடியாக வாங்கியதன் மூலம் விவசாயிகளுக்கு உதவி புரிந்துள்ளது சென்ற குறுவைப் பருவத்திலும், சம்பாப் பருவத்திலுமாக மொத்தம் இரண் இலட்சம் டன் நெல்லை இவ்வாறு கூடுதலான விலையில் இந்த நிறுவன கொள்முதல் செய்துள்ளது; பொது விநியோக முறையில் வழங்குவதற்கா அரிசியைக் கணிசமான அளவில் இக்கழகம் தன் கையிருப்பில் வைத்துள்ள மேலும், தனது பணிகளை விரிவாக்கி, ஆண்டுக்குச் சுமார் இரண்டு இலட்ச டன்களுக்கு மேலாகச் சென்ற ஆண்டு முதல் சிமிட்டி விநியோகிக்கும் ப யையும் நடத்தி வருகின்றது. முதன்முறையாக மண்ணெண்ணெய் சில்லல விநியோகத்தில் நேரடிப் பொறுப்பேற்று, அரசால் நிர்ணயிக்கப்பட்ட வில யில் சிற்றூர்களிலும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செ





துள்ளது. மாநிலம் முழுவதும் வெளி சர்க்கரையின் மொத்த விநியோகப் பொறுப்பை, இக்கழகம் 1979 டிசம்பர் மாதம் முதல் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு பல்வேறு இன்றியமையாப் பொருள்களிலும் வாணிபம் நடத்துவதற்கு வகை செய்யும் முறையில் இக்கழகத்திற்கு 6.84 கோடி ரூபாய் கூடுதல் பங்கு மூலதனமாகத் தர வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு.

11. விவசாயிகள் வேளாண் பொருட்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய ஊக்கம் அளிக்கப்படும். இதற்கான வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 76,000 டன் சேமிப்பு திறன் கொண்ட 498 கிராம கூட்டுறவுச் சங்கக் கிடங்குகளும், 16 கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. 1980-81 ஆண்டில் 20,000 டன் சேமிப்புத் திறன் கொண்ட 200 புதிய கிராமக் கூட்டுறவுச் சங்கக் கிடங்குகளும், 5 கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அழுகும் பொருட் களைச் சேமித்துவைக்க தமிழ்நாடு கூட்டுறவு இணையம் ஒரு குளிர்சாதன சேமிப்புக் கிடங்கை வைத்துள்ளது. மாநிலத்தில் மேலும் நான்கு இடங்களில் ஒவ்வொன்றும் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன கிடங்குகள் இந்த ஆண்டில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 4,000 டன் காய்கறி, பழ வகைகள் போன்ற அழுகும் பொருட்களைச் சேமித்து வைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோர்க்கும் சாதகமான விலையில் விற்க வசதி செய்யப்படும்.

## வேளாண்மைக் கடன் நிவாரணம்.

12. விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி அரசுக்குப் பரிந்துரை செய்யத் தமிழக அரசினால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு 1979 ஆம் ஆண்டில் செய்த பரிந்துரைகளின் பேரில் தமிழக அரசு ஏறக்குறைய 40 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குப் பல சலுகைகள் அளித்தது. இச்சலுகை களுக்குப் பின்னும் கடன் சுமையினால் வருந்தும் விவசாயிகளின் கடன்களை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாநில அரசுக்குக் கணிசமான நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரி, மத்திய அரசுக்கு நாம் எழுதியுள்ளோம். இக்கோரிக்கையை மத்திய அரசு ஆதரவாகப் பரிசீலிக்கும் என்று நாம் நம்புவதுடன், மத்திய அரசின் கணிசமான உதவி நமக்குக் கிட்ட வேண்டும் என்பதில் இம் மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்கு நாம் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் குரல் கொடுக்க விரும்புகின்றோம்.

13. இதற்கிடையில் தமிழக அரசு, தன் சொந்த நிதி பொறுப்பிலிருந்து, விவசாயப் பெருமக்களுக்கு மேலும் சில சலுகைகளை வழங்க முன் வந்துள்ளது. அரசு அளித்திருந்த தக்காவிக் கடன்களில் சுமார் 21 கோடி ரூபாய் இன்னும் பாக்கி நிற்கின்றது. இதில் ஏறக்குறைய 5 கோடி ரூபாய், டிராக்டர்கள் வாங்குவது, இயந்திரக் கலப்பை வாங்குவது, கிணறு தோண்டுவது போன்ற உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவும் முதலீடுகளுக்கான கடன்களாகும். இதுபோக, எஞ்சியுள்ள சுமார் 16 கோடி ரூபாய், விவசாயிகளுக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டுள்ள தக்காவிக் கடன்களில் உள்ள நிலுவையாகும். வட்டியும் முதலுமாகச் சேர்ந்த, இந்த 16 கோடி ரூபாய் நிலுவையையும் ரத்து செய்துவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

14. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையிலே, ரிசர்வ் வங்கியிலிருந்து பெறும் நிதி உதவியையும் பொது மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகைகளையும் கொண்டுதான் கடன் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. கடன்கள் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் நமக்கு கிடைக்காது. கூட்டுறவுக் கடன் திட்டம் செவ்வனே செயல்பட வேண்டுமென்றால், வாங்கிய கடன்களை விவசாயிகள் செலுத்துவது இன்றியமையாததாகும். குறுகிய காலக் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் சுமார் 97 கோடி ரூபாய், பல ஆண்டுகளில் பருவ நிலைப் பொய்த்ததன் காரணமாகவும் விளைச்சல் பாதிக்கப்பட்டதன் காரணமாகவும் மத்திய காலக் கடன்களாக நீட்டிக்கப் பட்டுள்ளன. அத்தொகையில் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அசல் மட்டும் நிலுவையில் இருந்தது. வட்டித் தொகையில் இதுவரை ஏறத்தாழ 15 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இதில் 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவான உடைமை உள்ள விவசாயிகளின் கடன் நிலுவைகள் ஏறத்தாழ 50 விழுக்காடு இருக்கும். ஆகவே, இந்த சிறிய விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலுவையில் அசலாகச் சுமார் 35 கோடி ரூபாயும், இதுவரை செலுத்த வேண்டிய வட்டி நிலுவையாகச் சுமார் 7 கோடி ரூபாயும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சிறிய விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை முழுவதையும் முதலும் வட்டியும் உட்பட, அடியோடு ரத்து செய்து விடுவது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு 42 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும். தக்காவிக் கடன்களை ரத்து செய்வதன் மூலம் 16 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். இவை இரண்டும் சேர்ந்து 58 கோடி ரூபாய் அல்லது 60 கோடி ரூபாய் கடன் நிலுவைகளை ரத்து செய்ய தமிழக அரசு முன் வந்துள்ளதை விவசாயப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். இந்த அளவில் இழப்பை ஏற்பது மாநில நிதி நிலைமையைப்



பெரிதும் பாதிக்கும்; இருந்த போதிலும் விவசாயிகளின் நிலைமையை முன்னிட்டு துணிகரமான இந்த நடவடிக்கையைத் தமிழக அரசு எடுக்க முன் வந்துள்ளது. எனவே இந்த இழப்பை ஈடு கட்ட மத்திய அரசின் நிதி உதவியைக் கோரியுள்ளோம்.

15. இச்சலுகைகளுக்குப் பின்னும் செலுத்தப்பட வேண்டிய கூட்டுறவுக் கடன்களை விவசாயப் பெருமக்கள், தங்கள் சமுதாயப் பொறுப்பை உணர்ந்து, உடனடியாகச் செலுத்தி கூட்டுறவுக் கடன் இயக்கம் தீவிரமாகவும், செம்மையாகவும் நடப்பதற்கு வழிவகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### கால்நடை வளம்.

16. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை மருந்துகள் உற்பத்தி நிலையத்தைச் சிறப்பாக மேம்படுத்துவதற்குக் கால்நடை வளர்ப்புத் துறை திட்டமொன்றை வகுத்துள்ளது. இதன்படி, பல்வேறு நோய் தடுப்பு மருந்துகள் தயாரிப்பதற்கான வசதிகளைப் பெருக்குவதற்கு மொத்தம் 34.85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு கால்நடைப் பண்ணைகளில், தரமான கன்றுகளை வளர்ப்பதற்கான திட்டமொன்றை அரசு மேற்கொண்டுள்ளது; இதற்காக மொத்தம் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பத்து கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்படும். ஐந்து மருந்தகங்கள், கால்நடை மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும். காங்கேயம் ரகக் காளைகளை உற்பத்தி செய்வதற்கென பண்ணை ஒன்று, இந்த ஆண்டு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. ஓங்கோல் மாடுகளை வளர்க்கும் பிரிவு ஒன்றை அரசு கால்நடைப் பண்ணை ஒன்றில் நிறுவுவதற்கு 1.77 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவம் பற்றிய புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்கு இந்த ஆண்டு 20 இலட்சம் ரூபாய் தரவும் வகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைக்குப் பயன்படும் உழவு மாடுகள் வேலை நேரத்தில் விபத்து காரணமாகவோ, நோய் காரணமாகவோ இறக்க நேரிட்டால், அதற்கு ஈடு செய்யும் வகையில் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் புதிதாக உருவாக்கிச் செயல் படுத்தும் பொருட்டு, பொது காப்புறுதி நிறுவனத்துடன் ( General Insurance Corporation ) அரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகின்றது.

### பால் பெருக்கம்.

17. பால் பெருக்கு முயற்சிகளையொட்டிக் கூடுதலாக நான்கு நடமாடும் மருத்துவப் பிரிவுகளை அமைக்க அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்

இந்த நடமாடும் மருந்தகங்கள் செயல்படும். இந்தியப் பால்பண்ணை நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் "பால் பெருக்குத் திட்டம்" இந்த மாவட்டங்களில் செயல்படாததால், அரசே தனது நிதியிலிருந்து இந்த மாவட்டங்களுக்கு இவ்வசதியைச் செய்து கொடுக்க முடிவு செய்துள்ளது. இத்துறையின் செலவுக்கென 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## காடுகள்.

18. காட்டு வளத்தை மேம்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. மண் அரிப்பைத் தடுப்பதில் காடுகளின் முக்கிய பங்கை உணர்ந்துள்ள அரசு, மேட்டூர் அணைக்கட்டின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 26 இலட்சம் செலவில் காடுகள் வளர்க்கத் திட்டமிட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 146 இலட்சம் ரூபாய் செலவில் எரிபொருளுக்காக மரங்கள் வளர்க்க அரசு திட்டமிட்டுள்ளது. மக்களின் எரிபொருள் தேவைக்காகத் தரிசு நிலங்களிலும், குன்றுகளிலும், சாலை ஓரங்களிலும், ஆறுகள், கால்வாய்கள் இவற்றை ஒட்டியும் மரங்கள் வளர்க்க மிகப் பெரிய திட்டமொன்றை அரசு சுவீடன் நாட்டு உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் காட்டுப் பகுதிகளில் சாலைகள் அமைக்கவும், 35 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில் இந்தத் துறைக்கென 650 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மீனளமும் மீனவர் நலனும்.

19. மீனவருக்கு அதிக லாபம் ஈட்டித் தரக்கூடிய இறால் வளர்ப்பின் செயல் முறைகளை விளக்க 10 இடங்களில் மாதிரிப் பண்ணைகள் 16.5 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வாண்டு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதிராமபட்டினத்தில் அரசு இறால் பண்ணை அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது ; 100 பேர்கள் கொண்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 50 ஹெக்டேர் பரப்புடைய இப்பண்ணை பயன்படுத்தப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து நீர் நிலைகளில் மீன் வளர்க்க 350 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவையானவை. 109 இலட்சம் ரூபாய் செலவில் 30 ஹெக்டேர் பரப்பில் 100 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய மீன் குஞ்சு வளர்ப்பிடங்களை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு இவ்வாண்டு தொடங்கும். தற்போது உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையைப்போல் இது சுமார் இரண்டு மடங்கு என்பதும், இவற்றின் மதிப்பு 50 இலட்சம் ரூபாய் என்பதும்



இவற்றை வளர்த்து நீர் நிலைகளில் விடுவதன் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 25,000 டன் மீன்கள் கூடுதலாக உற்பத்தியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். மீனளத் துறை தற்போது நான்கு ஆழ்கடல் மீன்பிடி கலங்களை Trawlers இயக்கி வருகின்றது. ஆழ்கடல் மீன் வளத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில், மேலும் பல ஆழ்கடல் மீன்பிடிக் கலங்களை வாங்குவதற்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவற்றை இயக்குவதற்குமான திட்டங்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

20. கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர் குடியிருப்புகள் மொத்தம் 214-இல் 20 குடியிருப்புகள் நல்ல குடிநீர் வசதியுடன் இருந்து வந்தன. சில ஆண்டுகளில் அரசு திட்டமிட்டுச் செயலாற்றியதன் பயனாக 106 இலட்ச ரூபாய் செலவில் மேலும் 30 குடியிருப்புகள் நல்ல குடிநீர் பெற்று உள்ளன. இந்த ஆண்டு மேலும் 29 குடியிருப்புகள் 43 இலட்ச ரூபாய் செலவில் நல்ல நீர் வசதி பெற்றுவிடும். சுமார் 5 கோடி ரூபாய்ச் செலவில் மீதமுள்ள 145 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி தருவதற்கான திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தும். மீனவர் குடியிருப்புகளுக்குச் சாலைகள் அமைக்க இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் வீடு கட்டும் திட்டத்திற்கென இந்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாசனம்.

21. பாசன வசதிகளைப் பெருக்குவதிலும், தற்போதுள்ள பாசன வசதிகளை நன்முறையில் செயல்படுத்துவதிலும் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் நெடு நாட்களாகப் பணி நடந்து வந்த நீரார் அணை வேலையும் நீராறு குடைவு வேலையும் (Tunnel) முடிக்கப்பட்டுவிட்டன. இந்தத் திட்டத்தின்கீழ் ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்கும் வேலை தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு 9,100 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகத் தண்ணீர் விடப்படும். சாத்தனூர் அணை வலப்புறக் கால்வாய்த் திட்டம் இவ்வாண்டு முழுமையாக நிறைவேற்றப்படும் ; திட்டமிட்டபடி மொத்தம் 20,000 ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதிகள் பெற்றுவிடும். தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பாம்பாறு திட்டமும் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு 4,200 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி அடையும். திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டார் அணைத் திட்டம், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தும்பளஹல்லி, நாகவதி, ஈச்சம்பாடி, தொப்பையாறு, வாணியாறு அணைக்கட்டுத் திட்டங்கள், இராமநாதபுரத்தில் உள்ள வேம்பக்கோட்டை அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. ஆண்டுத் திட்டத்தில் பெரிய-நடுத்தர-சிறிய பாசன திட்டங்

இந்த நடமாடும் மருந்தகங்கள் செயல்படும். இந்தியப் பால்பண்ணை நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் "பால் பெருக்குத் திட்டம்" இந்த மாவட்டங்களில் செயல்படாததால், அரசே தனது நிதியிலிருந்து இந்த மாவட்டங்களுக்கு இவ்வசதியைச் செய்து கொடுக்க முடிவு செய்துள்ளது. இத்துறையின் செலவுக்கென 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## காடுகள்.

18. காட்டு வளத்தை மேம்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. மண் அரிப்பைத் தடுப்பதில் காடுகளின் முக்கிய பங்கை உணர்ந்துள்ள அரசு, மேட்டூர் அணைக்கட்டின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 26 இலட்சம் செலவில் காடுகள் வளர்க்கத் திட்டமிட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 146 இலட்சம் ரூபாய் செலவில் எரிபொருளுக்காக மரங்கள் வளர்க்க அரசு திட்டமிட்டுள்ளது. மக்களின் எரிபொருள் தேவைக்காகத் தரிசு நிலங்களிலும், குன்றுகளிலும், சாலை ஓரங்களிலும், ஆறுகள், கால்வாய்கள் இவற்றை ஒட்டியும் மரங்கள் வளர்க்க மிகப் பெரிய திட்டமொன்றை அரசு சுவிடன் நாட்டு உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் காட்டுப் பகுதிகளில் சாலைகள் அமைக்கவும், 35 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில் இந்தத் துறைக்கென 650 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மீனளமும் மீனவர் நலனும்.

19. மீனவருக்கு அதிக லாபம் ஈட்டித் தரக்கூடிய இறால் வளர்ப்பின் செயல் முறைகளை விளக்க 10 இடங்களில் மாதிரிப் பண்ணைகள் 16.5 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வாண்டு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதிராமபட்டினத்தில் அரசு இறால் பண்ணை அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது; 100 பேர்கள் கொண்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 50 ஹெக்டேர் பரப்புடைய இப்பண்ணை பயன்படுத்தப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து நீர் நிலைகளில் மீன் வளர்க்க 350 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவையானவை. 109 இலட்சம் ரூபாய் செலவில் 30 ஹெக்டேர் பரப்பில் 100 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய மீன் குஞ்சு வளர்ப்பிடங்களை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு இவ்வாண்டு தொடங்கும். தற்போது உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையைப்போல் இது சுமார் இரண்டு மடங்கு என்பதும், இவற்றின் மதிப்பு 50 இலட்சம் ரூபாய் என்பதும்



இவற்றை வளர்த்து நீர் நிலைகளில் விடுவதன் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 25,000 டன் மீன்கள் கூடுதலாக உற்பத்தியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். மீனளத் துறை தற்போது நான்கு ஆழ்கடல் மீன்பிடிகலங்களை Trawlers இயக்கி வருகின்றது. ஆழ்கடல் மீன் வளத்தைத் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில், மேலும் பல ஆழ்கடல் மீன்பிடிக் கலங்களை வாங்குவதற்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவற்றை இயக்குவதற்குமான திட்டங்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

20. கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர் குடியிருப்புகள் மொத்தம் 214-இல் 20 குடியிருப்புகள் நல்ல குடிநீர் வசதியுடன் இருந்து வந்தன. சில ஆண்டுகளில் அரசு திட்டமிட்டுச் செயலாற்றியதன் பயனாக 106 இலட்ச ரூபாய் செலவில் மேலும் 30 குடியிருப்புகள் நல்ல குடிநீர் பெற்று உள்ளன. இந்த ஆண்டு மேலும் 29 குடியிருப்புகள் 43 இலட்ச ரூபாய் செலவில் நல்ல நீர் வசதி பெற்றுவிடும். சுமார் 5 கோடி ரூபாய்ச் செலவில் மீதமுள்ள 145 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி தருவதற்கான திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தும். மீனவர் குடியிருப்புகளுக்குச் சாலைகள் அமைக்க இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் வீடு கட்டும் திட்டத்திற்கென இந்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாசனம்.

21. பாசன வசதிகளைப் பெருக்குவதிலும், தற்போதுள்ள பாசன வசதிகளை நன்முறையில் செயல்படுத்துவதிலும் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் நெடு நாட்களாகப் பணி நடந்து வந்த நீரார் அணை வேலையும் நீராறு குடைவு வேலையும் (Tunnel) முடிக்கப்பட்டுவிட்டன. இந்தத் திட்டத்தின்கீழ் ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்கும் வேலை தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு 9,100 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகத் தண்ணீர் விடப்படும். சாத்தனூர் அணை வலப்புறக் கால்வாய்த் திட்டம் இவ்வாண்டு முழுமையாக நிறைவேற்றப்படும்; திட்டமிட்டபடி மொத்தம் 20,000 ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதிகள் பெற்றுவிடும். தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பாம்பாறு திட்டமும் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு 4,200 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி அடையும். திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டார் அணைத் திட்டம், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தும்பலஹல்லி, நாகவதி, ஈச்சம்பாடி, தொப்பையாறு, வாணியாறு அணைக்கட்டுத் திட்டங்கள், இராமநாதபுரத்தில் உள்ள வேம்பக்கோட்டை அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. ஆண்டுத் திட்டத்தில் பெரிய-நடுத்தர-சிறிய பாசன திட்டங்

களுக்கென ஒதுக்கப்படும் தொகை 1979-80 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடு
களில் 25.20 கோடி ரூபாயாக அமைந்தது ; இந்த ஆண்டு இது 32.74 கோடி
ரூபாயாக உயரும்.

22. பெரிய அணைத் தேக்கங்களில் உள்ள நீரைத் தக்க முறையில் விநியோ
கிப்பதற்காகச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்ததன் வாயிலாகக், கீழ் பவானி
அணைக் கட்டிலிருந்து வேர்க்கடலை போன்ற பயிர் விளைவிப்பதற்காகக்
கூடுதலாகத் தண்ணீர் விடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். முதன் முறை
யாக மேட்டூர் உயர் மட்டக் கால்வாய்ப் பகுதியில் 40,000 ஏக்கர் நிலங்கள்
கூடுதலாக ஒரு பயிர் விளைவிப்பதற்காகத் தண்ணீர் விடப்பட்டதையும்,
கல்லணைக் கால்வாய்ப் பகுதியில் கூடுதலாக ஒரு போகம் புஞ்சை பயிரிடு
வதற்குத் தண்ணீர் விடப்படுவதையும் மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என
நம்புகிறேன்.

### மின் உற்பத்தி.

23. மின்சார உற்பத்தியைப் பெருக்குவதிலும் மின்சாரத்தை வழங்குவதி
லும் அரசு முனைப்பாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது.
குறைவான அழுத்தம் ( Low Tension ) உள்ள மின் கடத்திகள்
இந்தியாவிலேயே மிக அதிகமான அளவில் உள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
2.4 இலட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள இத்தகைய கடத்திகளைக் கொண்
டுள்ள தமிழ்நாடு மின் வாரியம், இதுவரை 8.9 இலட்சம் பாசன கிணறுகளுக்கு
மின் இணைப்பு கொடுத்துள்ளது, மொத்த குடியிருப்புகள் 63,605 இல், 63,431
குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விட்டது ; மாநிலத்
திலுள்ள எல்லா தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கும் மின்சாரம் அளிக்கப்
பட்டுவிட்டது; 7.33 இலட்சம் தெரு விளக்குகள் மின் வாரியத்தால் பராமரிக்
கப்பட்டு வருகின்றன; குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ்
1.93 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்
வாறு பரவலாக மின்சாரத்தை விநியோகித்து வரும் அதே நேரத்தில்
மின்சாரம் அனுப்புவதில் ஏற்படும் இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கை
களையும் மின்வாரியம் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. இதன் விளைவாக
1974—75 இல் 21.45 சதவிகிதமாக இருந்த மின் இழப்பு (Line Loss)
1978—79 ஆம் ஆண்டில் 18.10 சதவிகிதமாக குறைந்து உள்ளதை அவையின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

24. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது இயந்திரத்தை
நிறுவும் பணி இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்
கப்படுகிறது. சேர்வலாறு நீர்மின் திட்டமும் காடம்பாறை நீர் ஏற்று மின்



நிலையத்தின் முதல் இயந்திரமும் 1982—83 ஆம் ஆண்டில் செயல்படத்
தொடங்கும். மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு திட்டங்
களை மத்திய மின்சார ஆணைக் குழுவின் ஒப்புதலுக்காகத் தமிழ்நாடு அரசு
அனுப்பியுள்ளது. மேட்டூர் அணைக்குக் கீழே காவிரியில் மின் உற்பத்தி
செய்யும் திட்டம், மேல் அமராவதி நீர்மின் திட்டம், சண்முகா நதி நீர்மின்
திட்டம், மணிமுத்தாறு நீர்மின் திட்டம், மேல் தாமிரபரணி நீர்மின் திட்டம்
ஆகியவை இவற்றுள் குறிப்பிடத் தக்கவையாகும். இந்தத் திட்டங்களுக்கு
மத்திய அரசு விரைவில் தனது ஒப்புதலை வழங்குவதன் மூலம் மாநில அரசு
மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எடுக்கும் விரைவான முயற்சிகளுக்கு
உதவ வேண்டுமென்று கோருகின்றேன். வங்கக் கடலில், கடல் நீர் மேற்பரப்
பிலும் ஆழ்கடலிலும் உள்ள வெப்ப வேறுபாட்டைப் பயன்படுத்திப் புதிய
தொரு அறிவியல் அடிப்படையில், மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (
(Ocean Thermal Energy Conversion) அமைக்க ஆய்வுகள் நடத்த
மின்வாரியம் மத்திய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளது. வெளிநாட்டு உதவி
யுடன் செயல்படவிருக்கும் இந்த ஆய்வுக்கு மத்திய அரசு விரைந்து அனுமதி
யளிக்குமென நம்புகிறேன். மின்சார திட்டங்களுக்காக வரும் ஆண்டில்
மொத்தம் 155.76 கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வற்றுக்
காக அரசு நிதியிலிருந்து 75 கோடி ரூபாய் அளிப்பதற்கு வரவு-செலவுத்
திட்டம் வகை செய்துள்ளது.

25. மின் உற்பத்திச் செலவும், வெளியிலிருந்து வாங்கும் மின்சாரத்தின்
விலையும் சமீப காலமாக மிகவும் உயர்ந்து வருகின்றன. கேரள மாநிலத்
தினால் 1977—78 ஆம் ஆண்டில் சுமார் 12.5 பைசாவுக்கு விற்கப்பட்டு வந்த
மின்சாரம், இந்த ஆண்டு பிப்ரவரி திங்களிலிருந்து 28 பைசாவாக விலை
உயர்த்தப் பட்டுள்ளது. அவ்வாறே நெய்வேலியிலிருந்து பெறப்படும் மின்
சாரத்தின் விலை 1977—78 ஆம் ஆண்டில், இருந்துவந்த 14.37 பைசாவி
லிருந்து, 18.88 பைசாவாக தற்போது உயர்ந்துள்ளது. சிங்கரேணியிலிருந்து
பெறும் நிலக்கரியின் விலை சென்ற ஆண்டு ஜுலைத் திங்களிலிருந்து டன்னுக்கு
82 ரூபாயிலிருந்து 110 ரூபாயாகவும் மற்ற பகுதியிலிருந்து பெறும் நிலக்கரி
யின் விலை 80 ரூபாயிலிருந்து 123 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதன்
விளைவாக, இந்த ஆண்டு மின்சாரத்தை உற்பத்திச் செய்யும் செலவு மிகவும்
அதிகமாகி உள்ளது. மின் வாரியம் தனது நிதி நிலையைச் சீர்படுத்துவதன்
இன்றியமையாமையை இந்நிலை சுட்டிக் காட்டுகின்றது. மின் வாரியம் இது
பற்றித் தக்க ஆய்வுகள் நடத்தி வருகின்றது.

26. குறைந்த அழுத்த ( Low Tension ) மின்சாரத்தை வழங்குவதில் மின்வாரியத்துக்குச் செலவு, மின் அலகு ( Unit ) ஒன்றுக்கு 43 பைசா ஆக இருக்கின்றது. வேளாண்மை உற்பத்தியின் இன்றியமையாமையை உணர்ந்த அரசு வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படும் மின் கட்டணத்தை 14 பைசாவாக, அதிலும் சிறு விவசாயிகட்கு 12 பைசாவாகக் குறைந்த நிலையில் அமைத்துள்ளது. ஒத்த பிற மாநிலங்களுடனும் ஒப்பிடுகையில் இக்கட்டணம் குறைவானது என்பதை அனைவரும் அறிவர். இந்நிலையில் மின் கட்டணத்தைப் பாக்கி ஏதுமின்றி, விவசாயிகளும் மற்றவர்களும் மனமுவந்து செலுத்துவதன் வாயிலாக, மின்வாரியம் தனது பணிகளைத் தடங்கலின்றிச் செய்ய உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## தொழில் வளர்ச்சி.

27. பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்குவதற்குக் இசைவுக் கடிதங்கள், உரிமங்கள் அளிப்பதற்காகத் தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசிற்கு அனுப்பிவரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. 1979ஆம் ஆண்டில் 49 விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. நடப்பு ஆண்டில் அதாவது சனவரித் திங்கள் முதல் சூன் திங்கள் வரை 47 விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசிற்கு அனுப்பியுள்ளது. மொத்தம் 80 விண்ணப்பங்கள் மைய அரசின் முடிவுக்காக நிலுவையில் இருக்கின்றன. இவற்றிற்கு விரைந்து அனுமதி கிட்டுமென்று நம்புகிறேன்.

28. அரியலூரில் தமிழ்நாடு சிமின்ட் நிறுவனம் நிறுவிய ஆலை முடிக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியுள்ளது. இன்டர்கான்டினென்டல் லெதர் என்ற பெயரில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ( TIDCO ) கூட்டுத் துறையில் நிறுவிய தோல் நிறுவனம் தனது உற்பத்தியைத் துவங்கியுள்ளது. மேலும், பொதுத் துறையில் வெடி மருந்துகள் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்த நிறுவனம் ( TIDC ) மேற்கொண்டுள்ளது. கூட்டுத் துறையில், பழைய கப்பல்களைப் பிரித்து எடுக்கும் திட்டத்தை நிறுவுவதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1980—81 ஆம் ஆண்டில் மொத்தம் 3.75 கோடி ரூபாய் அரசு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துக்கு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

29. தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு மத்திய அரசு அளிக்கும் மூலதன மானியத் திட்டம் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1979—80 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகையான சுமார் 69 கோடி ரூபாயில் தமிழ்நாட்டில் சுமார் 10 கோடி ரூபாய்





ற்று முதலிடம் வகிப்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். ாழிலில் பின்தங்கியுள்ள இதே பகுதிகளில், புதிய தொழில்களுக்கும் விரிவு த்தும் தொழில்களுக்கும் மாநில அரசின் விற்பனை வரிக் கடன் திட்டத்தை இந்த நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது. இதற்கென இந்த நிறுவனத் ற்குச் சென்ற ஆண்டு 180 இலட்சம் ரூபாய் அரசு அளித்ததுடன் இந்த ண்டில் 225 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இராணிப் பட்டை, ஓசூர் ஆகிய இடங்களில் புதிய தொழில் பகுதிகளை இந்நிறுவனம் மைத்துள்ளது. இதைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும், புதுக் ாட்டைப் பகுதியிலும் புதிய தொழில் பகுதிகளைத் தொடங்குவதற்காக தவும் முறையில் 50 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் இந்த நிறுவனத்திற்கு ளிக்க வரவு-செலவுத் திட்டம் வகை செய்துள்ளது.

30. சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் கடந்த சில ஆண்டுகளாக ழப்பமான நிலை இருந்துவருகிறது. 1978 ஆம் ஆண்டு சர்க்கரை மீதான ல்லா கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டபோது, புதிதாக ஆரம்பிக்கப்படும் ர்க்கரை ஆலைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் சர்க்கரை ஆலைகளுக் ும் அதற்கு முன் மைய அரசால் அளிக்கப்பட்டு வந்த ஆயத் தீர்வை சலுகை ள் கைவிடப்பட்டன. இதனால் இந்த சலுகைகளை எதிர்நோக்கி திட்டங்க ளைச் செயல்படுத்தியவர்கட்கு இழப்பு ஏற்பட்டது. இதுவன்றி, புதிய ஆலை ள் நிறுவுவதற்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்கத் தயங்கியதால் புதிய ஆலைகள் நிறுவுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தென்னாற்காடு மாவட்டம் பெரியசெவலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆலையின் வேலைகள், நிதி நிறுவனங்கள் கடன் உதவி கொடுக்காததால் நின்று விடாதவாறு, தமிழக அரசு பங்கு மூலதனத்தையும் கணிசமான அளவு கடனையும் அளித்து நிதி உதவி செய்துள்ளது. இதன் விளைவாக, வரும் அக்டோபர் திங்களில் இந்தப் புதிய ஆலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை நுகர்வோர், கரும்புப் பயிரிடுவோர், சர்க்கரை ஆலைகள் அதிலும் குறிப்பாக புதிதாக நிறுவப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும் ஆலைகள் ஆகிய அனைவருக்கும் பயன் தரக்கூடிய ஏற்ற கொள்கை ஒன்றை மைய அரசு விரைந்து வகுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

31. உற்பத்தித் திறன், சாதகமான விலை இவற்றின் காரணமாக நடப்பு ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா நூற்பு ஆலைகளும் நன்கு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தனியார் துறையில் 36 புதிய நூற்பு ஆலைகள் அமைப்பதற்கும் செயல்பட்டு வரும் ஆலைகளில் 16 ஆலைகளை விரிவுபடுத்து

வதற்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை நிறைவு பெறும் போது 19 ஆயிரம் பேர் கூடுதல் வேலை வாய்ப்பு பெறுவார்கள் எனக் கணக் கிடப்பட்டுள்ளது.

32. கைத்தறித் தொழில் முன்னேற்றம் பற்றி ஆளுநர் தனது உரையில் முன்பே சுட்டிக்காட்டி உள்ளார். இந்த ஆண்டில் 2 வடிவமைப்பு நிலையங்கள் (Design Centres) அமைப்பதற்கு 7 இலட்ச ரூபாயும் வீடு கட்ட உதவும் மானியத்துக்காக 10 இலட்ச ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துறைக்குப் பயனளிக்கும் வகையில் தேசிய பஞ்சாலை நிறுவனம் (National Textile Corporation) மாநில கைத்தறிக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (Co-optex) ஆகியவற்றுடன் இணைந்து துணிகளைப் பதப்படுத்தும் தொழிற்சாலையைக் கூட்டுத் துறையில் அமைக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. கைத்தறித் துறைக்கென ஆண்டுத் திட்டத்தில் 452 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கும் பொருட்டு, 1980—81 ஆம் ஆண்டு மேலும் 8,000 ஏக்கர் பரப்பில் முசுக்கொட்டை உயரிய ரகம் பயிரிட அரசு ஏற்பாடுகள் செய்து வருகிறது. பட்டுப்புழு வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் மாவட்டங்களின் தலைநகரங்களில் 45 இலட்ச ரூபாய் செலவில் பட்டு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மையங்களில் மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு விவசாயிகள் பட்டுப் பூச்சி வளர்ப்பு முறைகளைக் கண்டு பயன்பெற வசதிகள் செய்யப்படும். மேலும் 28 இலட்சம் ரூபாய்ச் செலவில் சீரிய முட்டைகள் உற்பத்திச் செய்வதற்கான திட்டமும் செயல்படுத்தப்படும். 1979—80 ஆம் ஆண்டில் திட்டச் செலவாக 138 இலட்சம் செலவிடப்பட்டதற்கு எதிராக, 1980-81 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 265 இலட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

34. சென்ற ஆண்டு 20 கூட்டுறவுத் தீப்பட்டிச் சேவை சங்கங்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கெதிராக 26 சங்கங்கள் மூலம் 2,600 தீப்பெட்டி உற்பத்தி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவை முழு உற்பத்தித் திறனை அடையும் போது, இவை மூலம் 52,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். மேலும் சென்ற ஆண்டு 2,000 நிலையங்கள், தனியார் துறையில் குடிசைத் தொழிலாகத் தீப்பெட்டி உற்பத்தி நிலையங்களை ஆரம்பிக்க தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் சான்றிதழ்கள் வழங்கியுள்ளது; இந்த நிலையங்கள் மூலம் 40,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். இந்த ஆண்டு, இந்தத் தொழிலின் கீழ்க் கூடுதலாக 10 சேவை சங்கங்களும் 20 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் தொடங்கத் திட்டமிட்டு 24.87 இலட்சம்



ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. தீப்பெட்டித் தொழில் நன்கு செயல்பட வேண்டுமானால், தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம். எனவே, கூட்டுறவுத் துறையிலுள்ள, குடிசைத் தொழில் தீப்பெட்டி நிலையங்களுக்குத் தேவையான மரக் குச்சிகளைத் தயாரித்துக் கொடுப்பதற்கு மூன்று ஆலைகள் கூட்டுறவு முறையில் அமைப்பதற்காக, இந்த ஆண்டில் 3.19 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான மரங்களை அந்தமான் நிக்கோபார் தீவுகளிலிருந்துப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

35. தமிழ் நாட்டில் கிடைக்கும் தேங்காய் நாரைப் பயன்படுத்திப் பல்வேறு பொருட்களைச் செய்வதற்கான திட்டமொன்றை அரசு தயாரித்து வருகின்றது. இத்திட்டம் விரைவில் இறுதி செய்யப்பட்டு உடனடியாகச் செயல்படுத்தப் படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கன்னியாகுமரியிலும், சேலத்திலும், தேங்காய் நார் தயாரிப்பதற்கும் அதிலிருந்து கயிறு தயாரிப்பதற்கும் பத்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கிராமத் தொழில்கள்.

36. மண்பாண்டத் தொழில், செக்கு மூலம் எண்ணெய் தயாரித்தல், கையால் காகிதம் செய்தல், பனைவெல்லம் காய்ச்சுதல், சோப்பு தயாரித்தல் போன்ற பல்வேறு கிராமத் தொழில்களுக்கு ஆதரவு தருவதன் வாயிலாகக் கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பெரும் பணியாற்றி வருகின்றது. 1979—80 ஆம் ஆண்டில் சுமார் 37,000 பேர்களுக்குக் கூடுதலாக இவ்வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 35 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு இந்த விற்பனை 39 கோடி அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாநில அரசு இந்த வாரியத்துக்கு 158 இலட்சம் ரூபாய் நிதி அளிக்க வகை செய்துள்ளது.

37. மேலும் இத்தகைய தொழில்களை நடத்த பல்வேறு தொழிலாளர்களுக்கான தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் முயற்சிகள் விரைந்து மேற் கொள்ளப்படும். பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக, வேலையற்று இருக்கும் பொற் கொல்லர்கள் பற்றிய விவரங்கள் உடனடியாகத் தொகுக்கப்படும்; அதனடிப்படையில் பொற்கொல்லர் தொழிற் கூட்டு

றவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஏழை எளியோர்க்கு மலிவு விலையில் திருமணத் தாலி செய்து தரும் திட்டம் இவை மூலம் செயல்படுத்தப்படும்.

## சாலை, சாலைப் போக்குவரத்து.

38. சாலைகளை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த இந்த அரசு நடப்பு ஆண்டில் அரசுச் சாலைகள் பராமரிப்பிற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசே ஏற்று மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 1979—80 ஆம் நிதி ஆண்டில் 6 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டது. இதன் பயனாக 2,000 கிலோ மீட்டர் சாலைகளில் பணி முடிந்துள்ளது; சுமார் 500 கிலோ மீட்டர் சாலைகளில் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. இந்த ஆண்டில் இதை உயர்த்தி 10 கோடி ரூபாய் செலவிடவும் அரசு வகை செய்துள்ளது. 1,500 மக்கட் தொகை கொண்ட ஊர்கள் அனைத்திற்கும் சாலைப் போக்குவரத்து செய்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1979—80 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது; இந்த ஆண்டு இதற்கென 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

39. சென்ற ஆண்டு செய்யப்பட்ட விரிவான ஆய்வின்படி, 476 புதிய பேருந்து வழித்தடங்கள் திறப்பதன் மூலம் 18 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 968 பஞ்சாயத்துக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க முடியுமென்றும், இரண்டாம் கட்டமாக 426 வழித்தடங்களைத் திறப்பதன் மூலம் மேலும் 22 இலட்ச மக்கள் தொகைக்குப் பலனளிக்க முடியுமென்றும் கண்டறியப்பட்டது. இரண்டாம் கட்டத்தைச் செயல்படுத்த சாலைகளை மேம்படுத்துவதும் ஓரளவிற்கு அவசியமென்று கண்டறியப்பட்டது. 1979—80 ஆம் ஆண்டில் 32 இலட்ச மக்களுக்கு பலனளிக்கும் வகையில் 1,395 குடியிருப்புகளைத் தொடும் வகையில் புதிய பேருந்து வழித்தடங்கள் திறக்கப்பட்டன; தொழிலாளர் நல் உறவின் காரணமாகவும் நல்ல நிர்வாகத்தினாலும் போக்குவரத்து நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் 1978-79 ஆம் ஆண்டிற்காக உயர்ந்த அளவு சிறப்பு ஊதியம் (போனஸ்) தொழிலாளர்கள் பெற்றுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1979-80 இல் மொத்தம் 1,501 புதிய பேருந்துகள் அரசுப் பேருந்து நிறுவனங்களின் பொறுப்பின் கீழ்க் கூடுதலாகச் சேர்க்கப்பட்டன. இந்த ஆண்டில் பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கும் வகையிலும், கூடுதலாகச் சேர்க்கும் முறையிலும் மொத்தம் 1,800 புதிய பேருந்துகள் விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## சுற்றுலா வளர்ச்சி.

40. சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில் மதுரையிலும், கோவையிலும், புதிய சுற்றுலா விடுதிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டி வருகிறது. கன்னியாகுமரி, இராமேஸ்வரம் ஆகிய இடங்களைத் தகுந்த முறையில் சுற்றுலாத் தலமாக வளர்ச்சி அடையச் செய்ய அரசு வல்லுநர்களைத் திட்டம் தீட்டக் கோரியுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மூலதனமாக 15 இலட்ச ரூபாயும், கடனாக 15 இலட்ச ரூபாயும் அளிப்பதற்கு அவையின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் பயணிகளுக்கான வசதிகள் செய்து தருவதற்கும், மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதற்குமாக அரசு 12 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவிடத் திட்டமிட்டுள்ளது.

## கல்வி.

41. மேல் நிலைப் பள்ளிக் கல்வியைச் செயல்படுத்துவதில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணியில் இருந்து வருகிறது. 1980 ஆம் ஆண்டில் மொத்தம் 1.18 இலட்சம் பேர் 12-வது ஆண்டுத் தேர்வுகளை எழுதியுள்ளார்கள். அவர்களில் 25 ஆயிரம் பேர் தொழில் பற்றிய கல்விப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதும், அதில் சுமார் 6,600 பேர் மாணவியர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1979 ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கையான 79,000-த்துடன் இதனை ஒப்பிடும்போது, மேல்நிலைக் கல்வியைப் பள்ளிகளுடன் இணைத்ததன் மூலம் எந்த அளவுக்குக் கல்வி வசதிகளை அரசு பரவலாக்கியுள்ளது என்பது தெளிவாகும். 1980-81-ல் மேலும் 150 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பிரிவுகள் துவக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் விளைவாக மொத்தம் 1,242 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டு மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கிராமப் பகுதிகளில், மேல்நிலைக் கல்விக்கான வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன. மேல்நிலைக் கல்விக்கான ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்காகவும், அறிவியல் கருவிகளை வழங்குவதற்காகவும், நூல் நிலையங்கட்குப் புத்தகங்கள் தருவதற்காகவும் மொத்தம் 3.3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் பல்வேறு நிலைகளில் மொத்தம் புதிதாக 2,800 ஆசிரியர்கள் பதவிகளும் உருவாக்கப்படும்.

42. கிராமங்களில், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளில் மொத்தம் 4,000க்கும் மேற்பட்ட ஆரம்ப இடைநிலைப் பள்ளிகள் தக்க கட்டடமின்றி இன்றும் இருந்துவருவது அரசு, அண்மையில் எடுத்த கணக்கெடுப்பின்படி

தெரிய வருகிறது. இவை அனைத்திற்கும் 3 ஆண்டுகளுக்குள் கட்டிடங்கள் கட்டும் பணியை மேற்கொள்வதற்காக அரசு சிறப்பான திட்டமொன்றை வகுத்துள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கென, இவ்வாண்டில் மொத்தம் 5.5 கோடி ரூபாய் மானியம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும். 5 ஆம், 6 ஆம் நிலை ஊராட்சி ஒன்றியங்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கேற்றவகையில் அவற்றிற்குத் தரப்படும் மானியத்தை இத் திட்டத்தின் கீழ் அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

43. பள்ளிகளில் சேரும் மாணவர் இடையில் நின்று விடுவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 6 முதல் 11 வயது மாணவ மாணவியரில், முதல் வகுப்பில் சேர்ந்த 100 பேர்களில், ஐந்தாம் வகுப்புவரை படிக்காமல், இடையில் நின்று விட்டவர்கள் எண்ணிக்கை 51 ஆக 1973-74 ஆம் ஆண்டில் இருந்தது. இது 1978-79 ஆம் ஆண்டில் 38 சத விதமாகவும், 1979-80 ஆம் ஆண்டில் 33 சத விதமாகவும் குறைந்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

44. பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெறாதவர்களுக்கும், பள்ளியிலே கல்வியை இடையிலே நிறுத்திவிட்டவர்களுக்கும் பயன் அளிப்பதற்காகச் செயல்பட்டு வரும் முறைசாராக் கல்வி இயக்கம் வரும் ஆண்டில் மேலும் பலப்படுத்தப்படும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் கூடுதலாக இரண்டு கல்வி மையங்களைத் திறப்பதற்காக 7.85 இலட்ச ரூபாயும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 600 பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் வாயிலாக 600 மையங்கள் நடத்துவதற்காக 3 இலட்ச ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979-80-ல் 4 இலட்சம் பேர் முறைசாராக் கல்வி இயக்கத்தின் கீழ் பங்கு பெற்றனர். இந்த ஆண்டில் மொத்தம் 4.8 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

45. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு கோவை, திருச்சிப் பல்கலைக் கழகங்களை நிறுவ ஆரம்ப நிதி ஒதுக்கம் முறையே ஒரு இலட்சம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே புதிதாக அறிவியல் ஆய்வு நிலையம் அமைப்பதற்காக ஆரம்ப நிதி ஒதுக்கமாக ஒரு இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிய விவரங்களை முடிவு செய்ய வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆய்வின் அடிப்படையில் அடுத்த ஆண்டு இதனை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

46. இந்த ஆண்டு பாலிடெக்னிக்குகளில் கூடுதலாக 546 இடங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. குமாரபாளையத்தில், துணி உற்பத்தி பற்றிய சிறப்பு பாலிடெக்னிக் ஒன்றும், தஞ்சையில் பெரியார்-மணியம்மை அறக்



கட்டளை அமைக்கும் மகளிர் பாலிடெக்னிக் ஒன்றும், கோவையில் தனியார் பாலிடெக்னிக் ஒன்றும் அமைய இவ்வாண்டு அரசு அனுமதித்து உள்ளது. மேலும், பல்வேறு பாலிடெக்னிக்குகளில், புதிய தொழிற் கல்வி வகுப்புகள் தொடங்குவதற்கும் அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது. இத்துறைக்காகத் திட்டத்தின்கீழ் 141 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 857 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## இளைஞர் நலத் துறை

47. சென்ற ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு, இளைஞர் நலத் துறையின்கீழ் மூன்று சிறப்பு விளையாட்டு பயிற்சி விடுதிகளும் மூன்று விளையாட்டு பயிற்சிப் பள்ளிகளும் அமைக்க இவ்வாண்டு மொத்தம் 10.92 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 25 வட்ட, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கு 5.15 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத் தலைநகரங்களில் நீச்சல் குளங்கள் அமைக்க உதவும் வகையில் 2 இலட்ச ரூபாய் ஆரம்ப நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதுவன்றி, சென்னையில் வட்டாரப் பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கும் 15 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டு, இளைஞர் நலப் பணிகளுக்காக, இந்த ஆண்டு மொத்தம் 274 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மருத்துவம்.

48. மருத்துவ வசதிகளை மாநிலமெங்கும் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் கடந்த சில ஆண்டுகளாக அரசு செயல்பட்டு வருவதை மன்றம் நன்கு அறியும். தற்சமயம் இயங்கி வருகின்ற 224 நடமாடும் மருத்துவக் குழுக்களோடும், 164 சிறு சுகாதார நிலையங்களுடனும் மேலும் 50 சிறு சுகாதார மையங்கள் ( Mini Health Centr ) இவ்வாண்டில் நிறுவுவதற்கும், பல்வேறு வட்ட மருத்துவ மனைகளில் கூடுதல்

வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மாவட்ட மருத்துவ மனைகளில் அறுவைக் கூடங்களுக்குக் குளிர் சாதன வசதியை அமைப்பதற்கும், மாவட்ட மருத்துவ மனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவுவதற்கும் அரசு மொத்தம் 61 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவன்றி, கிராமப்பகுதிகளில் மருத்துவர்கள் மனமுவந்து சென்று தங்குவதற்கு வகை செய்யும் விதத்தில் அவர்களுக்கு விடுகள் கட்டித் தரும் முயற்சிக்கு 70 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மருத்துவக் கல்லூரியை ஒட்டிய மருத்துவ மனைகளுக்குக் கூடுதல் வசதிகளைச் செய்து தருவதற்காக மொத்தம் 24 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

49. கிங் நிறுவனத்தில் மருந்துகள் உற்பத்திப் பிரிவில் கூடுதல் வசதிகள் செய்வதற்காக இவ்வாண்டில் 6.1 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. இந்த ஆண்டு 9.5 இலட்சம் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படும். 11 இலட்சம் குழந்தைகட்கு பி.சி.ஜி. (B.C.G) தடுப்பு ஊசி போடப்படும். இளம்பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டு மருந்து 4 இலட்சம் குழந்தைகட்கு அளிக்கப்படும். மாநிலத்திலேயே முதன் முறையாக டைபாய்ட் தடுப்பு ஊசி 7.5 இலட்சம் குழந்தைகட்கு போடப்படும். 20 இலட்சம் குழந்தைகட்கு கண்ணொளி காக்கும் முயற்சியாக 'ஏ' உயிர்ச்சத்து A Vitamin சொட்டு மருந்தாகத் தரப்படும். இவ்வாண்டில், கிராமப் பகுதிகளில் சென்று இளநிலை மருத்துவர்கள் பணிபுரிய, திட்டமொன்றும் புதிதாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் படி, மருத்துவர்கள் ஆறு திங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மற்றொரு ஆறு திங்கள் வட்ட மருத்துவ மனைகளிலும் பணியாற்றுவார்கள்.

50. இந்திய மருத்துவ முறையில் சிறப்பு நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, 15 மருத்துவ மனைகளில் புதிதாகச் சித்த மருத்துவப் பிரிவுகள் துவங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. தஞ்சை, பெரியார் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்தப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.



## குடிநீர் வசதி

51. தமிழ் நாட்டிலுள்ள குடியிருப்புகளை அவற்றின் குடிநீர் வசதியின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தி குடிநீர் வசதி செய்து தரும் முயற்சியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டு வருகிறது. இதன்படி குடியிருப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) குடியிருப்புகளிலிருந்து ஒரு கிலோ மீட்டர் வரையிலும் குடிநீர் ஆதாரங்களே இல்லாத இடங்கள்.

(2) ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் அவை நல்ல குடிநீராக இல்லாத இடங்கள்.

(3) ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஆதாரங்கள் இருப்பினும் போதுமான அளவு நீர் இல்லாத இடங்கள்.

(4) ஒரு கிலோ மீட்டருக்குள் குடிநீர் ஆதாரங்கள் இருந்தும், அவைகள் பாதுகாக்கப்படாமலோ தனி நபர்கள் உடைமையாகவோ உள்ளவை.

(5) குடியிருப்புக்குள் நல்ல குடிநீர் ஆதாரங்கள் இல்லாமல் இருப்பினும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேறு நல்ல குடிநீர் ஆதாரம் உள்ள இடங்கள்.

(6) குடியிருப்புக்குள்ளேயே நல்ல குடிநீர் ஆதாரங்கள் இருக்கும் இடங்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள், முதலாம், இரண்டாம் வகைக் குடியிருப்புகளுக்கு இவ்வாண்டு குடிநீர் வசதி செய்து தரும் பணி நிறைவேற்றி முடிக்கப்படும். சுமார் 20 இலட்சம் மக்கள் பயன் அடையும் இப் பணிக்கு மொத்தம் 25 கோடி ரூபாய் மொத்தச் செலவு ஆகும். இந்தப் பணி சிறப்பாக நிறைவேறியதை அடுத்து, கோடைக் காலத்தில் நீர் வற்றிவிடும் மூன்றாம் வகைக் குடியிருப்புகள் 6,500 ல் நீர் வசதிகளை அதிகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மொத்தம் 45 கோடி ரூபாய் செலவு ஆகலாம் எனக் குடிநீர் வாரியம் கணக்கிட்டுள்ளது. 26 இலட்சம் மக்களுக்குப் பயன் தரக்கூடிய இப்பணியைச் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் 17 நடமாடும் குழுக்கள் மூலம் 235 பழுது பார்ப்போர் உதவியுடன் 18,000 குழாய் கிணறுகளை மாநிலம் முழுவதிலும் பராமரித்து வருகின்றது.

52. இந்த வாரியத்தின் மூலம், 32 நகராட்சி குடி நீர் வழங்குத் திட்டங்களையும் 74 நகரப் பஞ்சாயத்துக்களுக்கான திட்டங்களையும் 9 வடிகால் வசதித் திட்டங்களையும் அமைக்கும் பணிகள் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. இதுவன்றி 7 நகர குடிநீர் வழங்குத் திட்டங்களும் 22 நகரப் பஞ்சாயத்துக்கள் குடிநீர் வழங்குத் திட்டங்களும் புதிதாக அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது. இவ்வாண்டில் இவ்வாறு செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களில் 32 திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கோவை நகருக்கும் அடுத்துள்ள 15 நகர பஞ்சாயத்துக்களுக்கும் குடிநீர் வழங்கும் சிறுவாணித் திட்டம் முடிவுறும் நிலையை எய்தியுள்ளது. இது முற்றிலும் நிறைவேறுவதற்கு முன்னதாகவே, தற்போது கூடுதல் தண்ணீர் கோவை நகருக்குக் கொடுக்கப்படுகின்றது. இதனால் கோவை நகருக்கு நாள் ஒன்றுக்கு மொத்தம் 7 மில்லியன் காலன் தண்ணீரை உறுதியுடன் அளிக்க முடிகின்றது. ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல் படுத்தப்பட்டு வருகின்ற இப்பணிகளைச் செயல்படுத்த 1980-81 இல் மாநில அரசு 6.83 கோடி ரூபாயைக் குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அளிக்க இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது.

## வீட்டு வசதித் திட்டம்.

53. இந்த அரசால் தொடங்கப்பட்ட கிராமப்புற வீடு கட்டும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3,000 ரூபாய் மதிப்புள்ள வீடுகள் கட்டுவதற்கு 2,400 ரூபாய் வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனாக அளிக்கப்பட்டு வந்தது; விலைவாசி உயர்வை முன்னிட்டு இவற்றின் மொத்தத் தொகையை 3,750 ரூபாயாக இவ்வாண்டு உயர்த்தி கடன் தொகையும் 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1978—79 ஆம் கூட்டுறவு ஆண்டில் 5.45 கோடி ரூபாய் மொத்தம் செலவிடப்பட்டு 7,430 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் 15.56 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 31—5—1980 வரை 22,318 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இத் திட்டம் நிதி நிறுவனங்களின் உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டம் இந்த ஆண்டும் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். இதற்காக இந்த ஆண்டு இத்திட்டத்தில் அரசு தன் பங்காக இரண்டு கோடி ரூபாய் மாநில வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்க வகை செய்துள்ளது.





54. குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் சென்ற ஆண்டு 4,088 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூபாய் 80 இலட்சம் செலவில் மற்ற குடிசைப் பகுதிகளுக்கு மாநில அரசே அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தது. உலக வங்கி உதவியுடன் மேலும் 16,000 குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம் சுமார் 153 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் சென்ற ஆண்டில் செய்து முடிக்கப்பட்டன. உலக வங்கித்திட்டத்தின் இறுதி ஆண்டான இந்த ஆண்டில், அந்தத் திட்டத்தின் கீழ் குடிசை மேம்பாட்டுப் பணிகளுக்காக 120 இலட்சம் ரூபாயும் மாநில அரசு நேரிடையாக 100 இலட்சம் ரூபாயும் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை நகரில் முக்கியமான சில குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்து 1,008 குடியிருப்புகள் மொத்தம் 105 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## சென்னை நகர் மேம்பாடு.

55. சென்னைப் பெருநகர் கழிவுநீரகற்று வாரியம் இவ்வாண்டு பல புதிய பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. செங்குன்றத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர மூன்றாவது பெரும் குழாய் அமைக்கவும், சென்னை மாநகராட்சியில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கலை விரிபடுத்தவும், கழிவு நீர் அகற்றக் குழாய்களைச் சீரமைக்கவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. இப்பணிகளுக்காகப், பெருநகர் குடிநீர் கழிவு நீரகற்று வாரியத்திற்கு மொத்தம் 11.02 கோடி ரூபாய் கடனாகவும் மானியமாகவும் இவ்வாண்டு வழங்கப்படும். சென்னை நகரில் தனிப்பட்டோரால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களில் தெருக்களை மேம்படுத்துவதற்காகப் புதிய திட்டமென்றுக்காக 50 இலட்ச ரூபாய் கொண்ட நிதி ( Fund ) ஒன்றை அரசு உருவாக்கி யுள்ளது. இதனைப் பயன்படுத்தி தனிப்பட்டோரால் அமைக்கப்பட்ட குடியிருப்புகளிலுள்ள தெருக்களை மாநகராட்சி மேம்பாடு செய்து, பின்னர் அந்தப் பகுதியிலுள்ள மக்களிடமிருந்து மேம்பாட்டுச் செலவைத் திரும்பப் பெற்று நிதியில் சேர்ப்பதன் மூலம் தொடர்ந்து

இப்பணி நடைபெற வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் தெருவிளக்கு அமைப்பதற்கான பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்குச் சென்னை மாநகராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் நிதி வழங்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. சென்னை நகரில் பெருகிவரும் போக்குவரத்துத் தேவை களை நிறைவு செய்ய ஓரளவுக்கு உதவும் விரைவுப் போக்குவரத்து அமைப்பு (Mass Rapid Transit System) அமைக்க மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### வேலைக்கு உணவு—வேலை வாய்ப்புறுதித் திட்டம்.

56. கிராமங்களில் வேலையற்று இருப்போர்க்கு வேலை வாய்ப்புறுதி அளிக்கும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு 1979 பிப்ரவரித் திங்கள் ஆளுநர் உரையில் அறிவித்தது. மத்திய அரசு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கோதுமை மட்டும் அளித்து வந்த நிலைமாறி அரிசியை அளிக்க முன்வந்ததையொட்டி வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் உணவுப் பொருட்களையும் வேலைவாய்ப்புறுதித் திட்டத்திற்குப் பயன் படுத்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. பாசனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, வேளாண்மைத் துறை ஆகியோர் கூடுதலான பணிகளை மேற்கொள் வதற்காக வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் அரிசி பயன்படுத் தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அந்தத் துறையினர், சாலை அமைத் தல், வாய்க்கால்களை வெட்டுதல், மண்வளப் பாதுகாப்பு போன்ற பணிகளில் வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் 1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் 4,948 டன்கள் அரிசி இந்தத் துறையினரால் பயன் படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஊரக வளர்ச்சித் துறை கிராமப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி மன்றங்கள், மகளிர் மன்றங்கள் ஆகியவற்றை புதிதாகக் கட்டும்போதும் ஊராட்சி ஒன்றியங்களின்கீழுள்ள பல்வேறு நிர்வாகக் கட்டிடங்கள், சாலைகள், பாசன ஆதாரங்கள், குடிநீர் ஆதாரங்கள் போன்ற வற்றை பராமரிக்கும்போதும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 50,636 டன்கள் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 43,199 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 32,904 வேலைகள் முடிவுற்றன. 23





இலட்சம் பேர்களுக்குமேல் வேலை செய்து, மொத்தம் 142 இலட்சம் உழைப்பு நாட்கள் ( Mandays ) பணியாற்றி, 9.27 கோடி ரூபாய் மதிப் புள்ள வேலைகளைச் செய்துள்ளனர். இத்தகைய பணிகளை மேற்கொண்டு வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் பணி செய்ய முன்வருவோர்க்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான ஊரக வளர்ச்சித் துறையின் இயல்பான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலாக 3.76 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்க மும் செய்யப்பட்டது. சென்ற ஆண்டு வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் 1,89,000 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டது. இந்த ஆண்டும் இப் பணி தொடர்ந்து நடத்தப்படும். பல்வேறு துறைகள் தத்தம் நிதி ஒதுக்கங்க ளுடன் உணவுத் தானியங்களைக் கூடுதலாகப் பெற்று பணிகளை மேற்கொள் ளும். வேலை வாய்ப்புறுதித் திட்டத்தை இணைத்துக் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு 10 கோடி ரூபாய் இவ்வாண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 55,584 டன் அரிசி பயன்படுத்தப்பட்டது ; இந்த ஆண்டு முதற்கட்டமாக ஒரு இலட்சம் டன் அரிசி அளிக்க வேண்டுமென மத்திய அரசைக் கோரியுள்ளோம்.

### கிராம இளைஞர் தொழிற் பயிற்சி.

57. கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கட்குக் குறுகிய காலக் கைத் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டத்தை மாநில அரசு சென்ற ஆண்டு தொடங் கியது. இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 5,600 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசும் முன்வந்துள்ளது. பல்வேறு பயிற்சி நிலையங்களில் கூடுதல் வசதிகளை உரு வாக்குவதன் மூலம், இந்த ஆண்டு 16,200 இளைஞர்கட்கு இத்தகைய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில் வாரியம், கிராம வளர்ச்சித் துறையின் கீழுள்ள பயிற்சி நிலையங்கள், தொழிற் பயிற்சி நிலை யங்கள், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் போன்ற அமைப்புகளின் மூலம் இப்பயிற்சி அளிக்கப்படும்.

## கிராம வளர்ச்சிப் பணிகள்.

58. இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, பள்ளிக் கட்டிட வசதி, போன்ற பல்வேறு வசதிகளை கிராமப் பகுதிகளில் ஒருங்கிணைந்த முறையில் தருவதற்கான 'தன்னிறைவுத் திட்டம்' சென்ற ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் இது தொடங்கப்படும். பல்வேறு துறைகளும், தத்தம் வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்தப் பகுதிகளில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளனர். அதற்கும் மேலான சிறப்பான நிதி ஒதுக்கமாக 10 கோடி ரூபாய் இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

59. கிராமங்களில் நிலையான வேலையின்றி, வசதியற்று, ஆதரவு ஏதுமின்றி ஏழை, எளியவராய் வறுமைக் கோட்டிற்குக் கீழும் வாடுபவர் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படும். அவர்கட்குத் தக்க முறையில் வேலை வாய்ப்பு வசதிகள் உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், கிராம இளைஞர் தொழிற் பயிற்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களிலுள்ள நிதி வசதிகள் இதற்குப் பயன்படுத்தப்படும்.

60. பட்டினிச்சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. ஏழை எளியவர், வகை ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலை ஏற்பட்டால், அத்தகையோர் கிராம வளர்ச்சி அலுவலரிடம் சென்று தம் நிலையை எடுத்துக் கூறி 100 ரூபாய் உதவித் தொகை பெறலாம்; அத்தகையோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் பணியாற்றுவர். வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறத்தக்க நிலையில் உள்ளவர்களாக இருப்பின், ஓய்வூதியம் பெற்றுத் தருவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## நலிந்தோர் நலன்.

61. சமுதாயத்தில் சிறப்புக் கவனம் தேவைப்படுவோருக்காக உதவிகள் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் உதவியுடன் சத்துணவுத் திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கு உள்ள தாய்மாரில் ஒருவருக்கு அடிப்படை மருத்துவம், சத்துணவு பற்றிய பயிற்சி அளிக்கப்படும். அவர் பகுதி நேரச் சத்துணவு பணியாளராகப் பணிபுரிவார்;



மொத்தம் இவ்வாறு சுமார் 9,000 பேர் பணிபுரிவார்கள். மேலும் 5,000 மக்கட்தொகைக்கு முழு நேர மக்கள் நலப் பெண் பணியாளர் ஒருவரும் பணிபுரிவார். ஆறு மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள இளம் சிறார்கள் உடல் நலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அனைவருக்கும் தடுப்பு ஊசி போன்ற மருத்துவப் பாதுகாப்பும் தேவையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவும், அளிக்கப்படும். ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற மகளிருக்கு ஏழாம் மாதம் முதல் குழந்தை பிறந்த நான்கு மாதம் முடியும் வரை சத்துணவு வழங்கப்படும். மாதந்தோறும் அவர்கள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துக்களும் வழங்கப்படும். மகளிர் ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு வசதிகளுக்குமாக 150 ரூபாய்க்குக் குறையாமல் செலவிடப்படும். முன்னோடித் திட்டமாக முதலில் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக, சத்துணவு நிலை குறைவாக உள்ள மதுரை, செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வடஆர்க்காடு மாவட்டங்களுக்கு ஐந்தாண்டுகளில் விரிவாக்கப்படும். மாநிலத்தில் கிராமங்களில் உள்ள மக்கள் தொகையில் இந்த மாவட்டங்களில் 44 சதவீதம் பேர் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த ஆண்டு இதற்கென 2.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

62. கிராமங்களில் உள்ள மகளிர் நலன் கருதி கிராமங்களில் மகளிர்க்குத் தனியாக நவீன முறையில் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் இந்தப் பணி தொடங்கப்பட்டு, மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

63. முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர்கள் எண்ணிக்கை வரம்பு, தேவையுள்ளோர் அனைவரும் பெறும் வகையில் படிப் படியாக உயர்த்தப்பட்டு வருகின்றது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் அன்று இத்தகைய உதவி பெறுவோர் தொகை மொத்தம் 81,204 ஆக இருந்தது. அது டிசம்பர் 1979-ல் 1,13,970 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாயத் தொழிலாளருக்கு ஓய்வூதியம்.

64. உதவி தேவைப்படுபவர்கள் பலருக்கும் பயன் கிட்டும் வகையில், முதியோர் உதவித் தொகை திட்டம் பற்றிய விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஆதரவற்ற கைம்பெண்கள் உதவித் தொகை பெறுவதற்கான வயது 45 லிருந்து 40 ஆக 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குறைக்கப்பட்டது. கண்ணொளி

யற்றோர் வயது எல்லை ஏதும் இன்றி உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு சென்ற ஆண்டு ஜூலை முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையான 20 ரூபாய் சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சென்ற ஆண்டு சுதந்திர தினத்திலிருந்து ஆண்டுதோறும் இரு முறை ஆடைகள் அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. மேலும், 60 வயதுக்கு மேற்பட்டு, வேலை செய்ய இயலாத நிலையில் உள்ள, ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் முறையில் இத் திட்டம் விரிவு படுத்தப்படும்.

## எளியோர்க்கு இலவச உணவு.

65. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகளுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும் என்னும் கொள்கையை நிறைவேற்றும் வகையில், முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள் உதவித்தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, கண்ணொளி அற்றோர் உதவித்தொகை, விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை ஆகியவற்றைப் பெறுபவர்களுக்கு, வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள உதவித்தொகை பெறுவோரின் எண்ணிக்கை, அரிசியின் விலை இவற்றின் அடிப்படையில் இதனைச் செயல்படுத்த ஆண்டொன்றுக்கு சுமார் 1.25 கோடி ரூபாய் செலவு ஆகும். இதனைச் செயல்படுத்துவதன் மூலம் உதவித் தொகை பெறுவோர் உணவுப் பொருளாகவும், உடையாகவும், பணமாகவும் அரசின் உதவியைப் பெறுவார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு.

66. பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் கீழ் செய்யப்படும் நிதி ஒதுக்கங்களைச் செலவிடும்போது தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் தத்தமக்கு உரிய பங்கினைப் பெறுவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இதற்கும் மேலாகச் சிறப்பாகத் திட்டங்களை மேற்கொள்ளதற்காக 1979—80 ஆம் ஆண்டின் வருவாய், மூலதனக் கணக்குகளில் திருத்த மதிப்பீடுகளில் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக 21.23 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டது. இது 1980-81 ஆம் ஆண்டில் 24.72 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காப் பல புதிய திட்டங்கள் இவ்வாண்டு செயல் படுத்தப்படும். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் இணைப்புச் சாலை வசதி, பள்ளி வசதி, குடிநீர் வசதி, இடுகாட்டுக்குச் சாலை போன்ற அடிப்படை வசதிகள் அனைத்



தையும் ஒருங்கிணைந்த முறையில் அளிப்பதற்கு அரசு இந்த ஆண்டு 75 இலட்சம் ரூபாய் செலவு செய்ய முடிவு செய்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் நடத்திவரும் பள்ளிகள் அனைத்திற்கும் தக்க கட்டிட வசதி, நூல் நிலைய வசதி போன்ற வசதிகளைச் செய்துதரும் புதிய திட்டம் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் இவ்வாண்டில் தொடங்கப்படும். மேலும் இவ்வாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தாழ்த்தப்பட்டோர் பள்ளி மாணவர் மாணவியர் தங்கும் விடுதிகளுக்காகக் கட்டிடங்கள் கட்ட 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் நலன் பற்றிய சிறப்பான இம்முயற்சிகள் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

## தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி

67. கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறும் கடனுக்காக வட்டியை அவர்கள் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக அளிப்பதுடன் அவர்களில் வருமானம் குறைவாக உள்ள தாழ்த்தப் பட்டோர் வீடுகள் கட்டும்போது அரசு 600 ரூபாய் மானியமாகவும் தருகிறது. ஆயுள் காப்புறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்று, பரவலான முறையில், பெருமளவில் தாழ்த்தப்பட்டோர் தத்தமக்கு ஏற்ற இடங்களில் வீடு கட்டிக் கொள்ளுவதற்கு இத் திட்டம் வகை செய்கின்றது. 1978-79 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் அந்தக் கூட்டுறவு ஆண்டில் 3,003 வீடுகள் தாழ்த்தப்பட்டோரால் கட்டப்பட்டன. 1979—80 ஆம் கூட்டுறவு ஆண்டில் 16,000 வீடுகளை தாழ்த்தப்பட்டோர் இத் திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார்கள். தற்போது தரப்படும் மானியத்தின் அளவை 600 ரூபாயிலிருந்து, ஆயிரம் ரூபாயாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் அதிக அளவில் தாழ்த்தப்பட்டோர் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1980—81 கூட்டுறவு ஆண்டில் தாழ்த்தப்பட்டோர் 30,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது.

68. இந்த ஆண்டு கூடுதலாக 15 பள்ளி மாணவ மாணவியர்க்கான விடுதிகள் திறக்கப்படும். தாழ்த்தப்பட்டோர் பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி அளிப்பதற்காகத் தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூடுதலாக மூலதனம் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தாழ்த்தப்பட்டோர் தொடங்கும் தொழில்களுக்கும் வேலை வாய்ப்பு

முயற்சிகளுக்கும் தேவையான நிதிப் பங்கை (Margin Money) பல்வேறு நிதி நிறுவனங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றிற்குத் தாழ்த்தப் பட்டோர் சார்பில் இந்தக் கழகம் அளிக்கும். இதனால், தாழ்த்தப்பட்டோர் தொழில் முயற்சிகளுக்கு மிகப் பெரிய அளவில் நிதி நிறுவனங்கள் உதவி கிடைக்க வகை ஏற்படும். மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ள தாழ்த் தப்பட்டோருக்கான சிறப்பு நிதி ஒதுக்கத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கி னைப் பெறவும், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்கள் தீட்டப் பட்டு வருகின்றன.

### பிற்படுத்தப்பட்டோர் நலன்.

69. பிற்படுத்தப்பட்டோர் நலனை மேம்படச் செய்வதற்காகக் கல்விக் கூடங்கள், வேலை வாய்ப்பு வசதிகள் இவற்றில், அரசு, 50 சதவீத இட ஒதுக் கீடு செய்தது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். வரும் ஆண்டில், புதிதாக 34 மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கப்படும். முன் னாள் குற்றப் பட்டியலில் இருந்தோர் (De-notifiedtribes) நலனுக்காக, இரண்டு மாணவர் விடுதிகள் புதிதாகத் திறக்கப்படும். இந்தத் துறைக்கு இந்த ஆண்டு மொத்தம் 761 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

### பெரியார், அண்ணா நினைவுச் சின்னங்கள்.

70. சென்ற ஆண்டு பெரியார் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாகக் கொண்டாடியதை மன்ற உறுப்பினர் கள் நன்கறிவார்கள். பகுத்தறிவு அடிப்படையில் மக்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று காலமெல்லாம் மொழிந்துவந்த பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக் பெரியார் அறிவியல் அருங்காட்சி அகம் ஒன்றைச் சென்னையில் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டது. மேலும், பெரியார் நினைவு அரங்கமொன்றைக் கட்டுவதற்கும் அரசு முடிவு செய்துள் ளது. ஒரே நேரத்தில் பல மொழிகளில் மொழி பெயர்க்கும் வசதிகளுடன் சிறப்பான மாநாடுகள், கூட்டங்கள் கூட்டுவதற்கு ஏற்ற முறையில் இந்த அரங்கம் அமைக்கப்படும். காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா வாழ்ந்த வீட்டை அரசு விலைக்கு வாங்கி உள்ளது ; அதனை அவர் நினைவுச் சின்ன மாகப் போற்றி பாதுகாக்கவும் முடிவு செய்துள்ளது.





### கலைத்துறை மேம்பாடு

71. சென்னையிலுள்ள அருங் காட்சியகத்தை அடுத்துள்ள கலைக் கூடத்தை விரிவுபடுத்த 16.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அள்ளுவர் கோட்டத்தைச் சுற்றியுள்ள பகுதி அழகுபடுத்தத்தக்க வசதிகளுடன் மேம்படுத்தப்படும். திரைப்படத் தொழிற் பயிற்சி நிறுவனம் தக்கக் கருவிகளைப் பெறுவதற்கு ரூபாய் 4 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் இந்த ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. மேலும், அடுத்தாண்டில் வண்ணத் திரைப்படங்களை பதப்படுத்துவதற்காக (Processing) ஒரு ஆய்வுக் கூடம் 12.65 இலட்சம் ரூபாயில் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. திரையரங்குகள் அமைக்கக் கடனுதவி அளிக்கும் பணியை விரிவு படுத்துவதற்காகத் தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்துக்கு அரசு இந்த ஆண்டு 20 இலட்சம் ரூபாய் கடனுதவி அளிக்கும்.

### அலுவலர் நலன்

72. தனது அலுவலர் நலன் குறித்து அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட முடிவின் பயனாக அலுவலர்கள் வீடு கட்டும் கடன்கள் சென்னையில் வழங்கப்படுவதற்குப் பதிலாக மாவட்ட தலைநகர்களிலேயே வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனால் சென்னை நகர் மட்டுமன்றி மற்ற பகுதிகளிலும் வீடுகட்டும் பணி எளிதாக்கப்பட்டது. இதற்கென சென்ற ஆண்டு செய்யப்பட்ட நிதி ஒதுக்கான 207 இலட்சம் ரூபாயை உயர்த்தி 332 இலட்சமாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. காவலர் குடியிருப்புகள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கமும் திருத்த மதிப் பீட்டில் ஒதுக்கப்பட்ட 125 இலட்ச ரூபாயைவிட ஒரு கோடி ரூபாய் கூடு தலாக, 225 இலட்ச ரூபாயாக அமைக்கப்பட்டுள்ளது. மற்ற அரசு அலுவலர் கள் குடியிருப்பதற்கான வீடுகள் கட்டுவதற்கு 250 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஆண்டுத் திட்டம்.

73. 1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 342.85 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டது. திருத்த மதிப் பீடுகளின் அடிப்படையில் 1979—80 ஆண்டுத் திட்டம் 347.41 கோடி ரூபாய் இருக்குமென கணக்கிடப் பட்டுள்ளது. இதற்கு எதிராக, 1980—81 ஆம் ஆண்டு 430.37 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டமாக இருக்கிறது. இவ்வாண்டின் [illegible] குறைந்த ஆண்டுத்

### 3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

24. Notification issued with G.O. Ms. No. 942, Home (Transport-I), dated the 26th March 1980 in regard to cancellation of the Home Department notification S.R.O. No. A-4416 of 1958, dated the 19th June 1958, published at page 1195 in Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th July 1958. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).].

25. Notification issued with G.O. R. No. 864, Home (Transport-I), dated the 29th February 1980 exempting the vehicle TMX 2994 belonging to Trade Representation of U.S.S.R. at Madras from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, with effect from 1st April 1980. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).].

26. Notification issued with G.O. Ms. No. 1834, Housing and Urban Development, dated the 22nd September 1979 in regard to an amendment to the Tamil Nadu Slum Clearance Board Non-Technical Subordinate Services Rules, 1972 (English and Tamil) [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).].

27. Notification issued with G.O. Ps. No. 210, Commercial Taxes and Religious Endowments, dated the 10th March 1980 in regard to exemption in respect of the tax payable by the Rehabilitation Centre for the Adult Blind, Podanur, Coimbatore district under the Tamil Nadu General Sales Tax Act, on the sale of the products manufactured by the inmates of the said Rehabilitation Centre. [Laid on the table ofthe House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).].



28. Notification issued with G.O. Ps. No. 278, Commercial Taxes and Religious Endowments, dated the 28th March 1980 in regard to exemption in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act, on the sale of building materials and aluminium utensils made to Church's Auxiliary for Social Action, Madras Zone, in connection with flood relief operations and rehabilitation work undertaken by the said institution. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959.)]

29. Notification issued with G.O. Ms. No. 2234, Education, dated the 3rd December 1979 in regard to amendments to the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Rules, 1974. [Laid on the table of the House under section 57 (2) of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974.)]

30. Notification issued with G.O. Ms. No. 533, Home, dated the 26th February 1980 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles, Rules, 1940. [Laid on the table of the House under section [133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).].

31. Notification issued with G.O. P. No. 83, Commercial Taxes and Religious Endowments, dated the 1st February 1980 in regard to amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959.)]

32 Notification issued with G.O. Ps. No. 198, Commercial Taxes and Religious Endowments, dated the 5th March 1980 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/672/79, dated the 8th October 1979, published at page 234 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st October 1979. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 Tamil Nadu Act 1 of 1959).]

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1980 ஜூலை 2

விற்பனை வரியில் ஏற்பட்ட கூடுதலான வருவாயும், போக்கு வரத்து நிறுவனங்களிலிருந்து கிடைத்த கூடுதலான வாகன வரியும், கேளிக்கை வரி, முத்திரைத்தாள் வரி உயர்வும் வருவாய் உயர்வுக்கு காரணங்களாகும். கூடுதல் செலவினங்களில் இயற்கைச் சீற்றத்தின் விளைவான சேதங்களைச் சீர் செய்யும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை முக்கியமானதாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மூலதன கணக்கில் 72.25 கோடி ரூபாய் செலவிற்கும் கடன் கணக்குகளில் 79.94 கோடி ரூபாய் நிகர செலவிற்கும் வகை செய்யப்பட்டது. திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 70.06 கோடி ரூபாயாகவும் கடன் கணக்கில் நிகரச் செலவு 1,20.82 கோடி ரூபாயாகவும் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களில் கடன் நிலுவை நிலை மோசம் அடைந்த போதிலும், சரியாகக் கடன் திருப்பியவர்களுக்கு மேலும் கடன் வழங்குவதற்காகவும் அரசு அளித்த சலுகைகளைச் செயல்படுத்துவதற்காகவும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 43.5 கோடி ரூபாய் சிறப்பு உதவி செய்ய திருத்த மதிப்பீடுகளில் வகை செய்யப் பட்டுள்ளது. 1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ஆண்டு இறுதியில் எல்லாக் கணக்குகளுமாகப் பார்க்கும்போது, செலவுகள் வரவைவிட 4.25 கோடி ரூபாய் கூடுதலாக இருக்கும் என கணிக்கப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின்படி, இது 59 இலட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி இறுதிக் கையிருப்பு 234 இலட்சம் ரூபாய் அதிகப்பற்றில் முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

81. 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வரி மாற்றங்களைக் கணக்கில் எடுத்த பின், வருவாய் 9,82.66 கோடி ரூபாயாகவும் செலவுகள் 9,67.27 கோடி ரூபாயாகவும் வருவாய்க் கணக்கில் நிகர உபரி 15.39 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உறுதியான வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கத்தை கூடுதலாக்கி மொத்தம் ரூ. 10 கோடி அளித்துள்ளது. தன்னிறைவுத் திட்டத்திற்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது, மற்றும் பல புதிய திட்டங்கள் செயல் படுத்துவதற் காக ஒதுக்கீடுகள் செய்தது ஆகியவை 1979-80 ஆண்டின் வருவாய் உபரியை விட 1980—81 ஆம் ஆண்டு வருவாய் உபரி குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணங்களாகும். 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 94.21 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு விடுதிகள் கட்டுவதற்கும், பள்ளிகள் கட்டுவதற்கும் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தும் சத்துணவுத் திட்டத்திற் காக கட்டிடங்களுக்கும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் பங்கு மூலதனத்திற்கும் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் செய்யப்பட்டுள்ள



1980 ஜூலை 2] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

கூடுதல் ஒதுக்கீடுகள் மூலதனச் செலவுகள் உயர்ந்ததற்குக் காரணங்களாகும். கடன் கணக்கில் நிகரச் செலவு 76.33 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. எல்லாக் கணக்குகளுமாக ஆண்டின் வரவு-செலவுகள் அனைத்தும் சேர்த்துப் பார்க்கும் போது, இறுதியில் உபரி 33 இலட்சம் இருக்கும் என்றும், இதன் விளைவாக இறுதிக் கையிருப்பு 201 இலட்சம் அதிகப் பற்றாகக் குறைந்து நிற்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

## மத்திய திட்ட நிதி உதவி.

82. 1980-81 முதல் ஐந்து ஆண்டுகளுக்கான புதியதொரு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கவேண்டும் என மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மாநில அரசும் தனது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைக்கப்படும்போது தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும் மத்திய அரசின் உதவி மிகக் குறைவான நிலையில் இருந்து வந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

83. மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கும் திட்ட நிதி உதவியில் தமிழ்நாட்டின் பங்கு முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து குறைந்துக்கொண்டே வருவதை கீழ்க்காணும் அட்டவணையில் இருந்து அறியலாம் :—

| | மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் வழங்கும் திட்டநிதி உதவியில் தமிழ் நாட்டின் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951—56) .. .. .. | 10.8 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—61) .. .. .. | 9.0 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) .. .. .. | 7.4 |
| ஆண்டுத் திட்டங்கள் (1966—69) .. | 6·8 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969—74) .. .. .. | 5·5 |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974—78) .. .. .. | 4,1 |

திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. மின்சாரத்துக்கு 155.76 கோடி ரூபாயும், பாசனத்துக்கு 32.74 கோடி ரூபாயும், வேளாண்மைக்கும் பிற சார்ந்த துறைகளுக்கும் 78.25 கோடி ரூபாயும், தொழில் துறைக்கு 23.22 கோடி ரூபாயும், சாலைகள், சாலைப் போக்குவரத்துக்கு 37.84 கோடி ரூபாயும், கல்விக்கு 20.73 கோடி ரூபாயும், மருத்துவத்துக்கு 12.28 கோடி ரூபாயும், குடிநீர் வசதி, கழிவு நீர் அகற்றலுக்கு 33.36 கோடி ரூபாயும், வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டுக்கு 23.68 கோடி ரூபாயும், ஏனைய துறைகளுக்கு 18.51 கோடி ரூபாயும் ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

### அரசின் நிர்வாக அலுவலகங்கள்.

74. அரசின் நிர்வாக அலுவலகங்களைப் பரவலாகத் திறக்க வேண்டியதன் அடிப்படையில், இவ்வாண்டு புதிதாக 15 துணைப் பதிவாளர் அலுவலகங்களும் 4 இடங்களில் கிளைக் கருவூலங்களும் திறக்கப்படும். வளர்ந்துவரும் மக்கட் தொகையையும், உருவாகியுள்ள புதிய குடியிருப்புகளையும் கருத்தில்கொண்டு, புதிதாக 10 காவல் நிலையங்கள் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கு விரைந்து நீதி கிட்ட உதவும் வண்ணம் 11 புதிய நீதி மன்றங்கள் அமைக்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது. திட்டத்திற்கு அப்பால் செய்யப்படும் செலவுகளாக இருப்பினும், மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு இவ்வாறு வசதிகளை விரிவுபடுத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு உள்ளதை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

### வரி விதிப்பில் மாற்றங்கள்.

75. பற்பல பண்டங்களின் மீது விதிக்கப்படும் பல முனை விற்பனை வரியை, ஒருமுறை விற்பனை வரியாக மாற்ற வேண்டுமென்பது, வணிகர்களால் நெடு நாட்களாக எழுப்பப்பட்டு வரும் கோரிக்கையாகும். இதனை ஏற்று, பூட்டு, சீப்பு, எழுது பொருட்கள், பேனா வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், துத்தநாக முலாமிட்ட இரும்பு வாளிகள், பெருங்காயம், சூடம், மெழுகு வத்தி, நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின் மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள, 4 சதவீத பலமுனை விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்படும். இப்பொருட்கள் பொது மக்கள் வாங்கும் கட்டத்துக்கு முன்பாக, ஒரு முறையேனும் விற்பனை இருந்து வருவதால், ஒரு முனை விற்பனை வரி 8 சதவீதமாக இருக்கும். இந்த மாற்றம், நாளை முதல் அமலுக்கு வரும்.



76. வணிகர்கள் கணக்கு வைத்திருக்கும் சிரமங்களைத் தவிர்க்கும் முறையில், சொற்ப அளவில் வரி வருவாய் தந்து வருகின்ற, குடிசைத் தொழில்கள் உற்பத்தி செய்யும் எலுமிச்சைப் புல் எண்ணெய், லாரெல் எண்ணெய், எளியவர் பயன்படுத்தும் அரிக்கன் விளக்கு, காற்றழுத்தம் செய்யப்படாத மண்ணெண்ணெய் அடுப்பு (Non-pressure kerosene stove ஆகியவற்றின் மீதுள்ள விற்பனை வரி அறவே விலக்கப்படும். இதுவும் நாளைய முதல் செயல்படுத்தப்படும்.

77. தமிழ்நாட்டில் செய்யப்படும் சைக்கிள்கள், வெளி மாநிலங்களுக்கு விற்பனையாவதில் உள்ள சிரமங்களைக் குறைப்பதற்காகச் சைக்கிள்கள் மீதான வெளி மாநில விற்பனை வரியை 4 சத வீதத்திலிருந்து ஒரு சத வீதமாக, அரசு சென்ற ஆண்டு குறைத்தது. இதையொட்டி, சைக்கிள் உறுப்புகள் வெளி மாநிலங்களுக்கு விற்கப்படுகையில் அவற்றின் மீதான விற்பனை வரி, தற்போதுள்ள 4 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக நாளைய முதல் குறைக்கப்படும்.

78. ஏழை எளியவர் வாகனமான சைக்கிள்கள் மீதான வரியை 6 சத வீதத்திலிருந்து, பாதியாக்கி 3 சதவீதமாக வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவும் நாளை முதல் செயல்படுத்தப்படும். ஏழை எளியவர்கட்கும், வணிகப் பெருமக்களுக்கும் பலனளிக்கும் இந்த வரிக் குறைப்பு, வரி விலக்கு யோசனைகளை அனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன். இந்த முடிவுகளினால் ஏற்படும் மொத்த இழப்பு ஆண்டொன்றுக்கு ரூ. 1.6 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

79. வணிகர் நலன் பற்றி ஆராய்ந்து, தக்க பரிந்துரைகளை அரசுக்குத் தருவதற்காக வணிகர் நலக் குழு ஒன்றை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

### வரவு-செலவு மதிப்பீடுகள்.

80. 1979-80 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் மொத்த வருவாய் 849.83 கோடி ரூபாயாகவும், செலவுகள் 849.25 கோடி ரூபாயாகவும் நிகர உபரி 58 இலட்சம் ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டது. தற்போதுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி வருவாய் 9,24.06 கோடி ரூபாயாகவும், செலவுகள் 8,84.44 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. விலை வாசிகள் உயர்வின் காரணமாக

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1980 ஜூலை 2

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கும் திட்ட நிதி உதவி குறைந்து கொண்டே வருவதன் காரணமாக தமிழ்நாட்டின் நபர்வாரி திட்டச் செலவும் Per Capita Plan Outlay ) குறைந்து வருவதை கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம் :—

நபர்வாரி திட்டச் செலவு.

| | தமிழ்நாடு. | இந்தியா முழுவதும். | அனைத்து மாநிலங்களில் (22) தமிழ்நாட்டின் நிலை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| (நான்காவது ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள் (1969—74). | 114 | 133 | 17 |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள் (1974—78). | 272 | 345 | 19 |

84. இந்த நிலை மாறி புதியதாக உருவாக்கவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு தருகின்ற உதவிக்கு கணிசமான உயர்வு காணுவதன் மூலம் தமிழ்நாடு அகில இந்திய சராசரி நபர்வாரி திட்ட அளவையாவது எட்டுவதற்கு ஏற்றதோர் திட்டத்தை அமைப்பதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலவைத் தலைவர் அவர்களே,

85. தமிழக அரசின் நிதிநிலையை மன்றத்திடம் தெளிவுபெற விளக்கிக் காட்டியுள்ளேன். சமத்துவம்—சமதர்மம்—சனநாயகம் எல்லா வகைகளிலும் வெல்ல வேண்டும் ! தமிழர் எல்லா வழிகளிலும் ஏற்றமும் எழிலும் பெற வேண்டும் ! தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் வளமும் வலிவும் பெற வேண்டும் ! இவற்றின் மூலம் இந்தியா எல்லா நிலைகளிலும் வெற்றியும் பொலிவும் பெறவேண்டும் !



) ஜூலை 2] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

86. இந்த வரவு-செலவுத் திட்டத்தையொட்டி மன்ற உறுப்பினர்கள் க்கும் கருத்துக்கள், தரும் விளக்கங்கள், கூறும் அறிவுரைகள், சுட்டிக் டும் திட்டங்கள் ஆகியவை இந்த அரசு தன் கடமை ஆற்றப் பெருந் ணயாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். மன்ற உறுப்பினர்கள் னவருடைய ஒத்துழைப்பையும் கோருகிறேன். அறிஞர் அண்ணா ர்கள்,

“ நல்ல ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும் ? நல்ல விளக்குக்கு ரிச்சம் எப்படியோ நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ அப்படித்தான் ல ஆட்சியில் மக்களுக்கு மன அமைதி வேண்டும் ” என்று குறிப் டார்கள். அப்படிப்பட்ட நல்ல மன அமைதி மக்களுக்கு ஏற்பட ண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆட்சி, திட்டங்கள் பலவற்றையும் தீட்டிக்கிறது.

87. மிகக் குறுகிய காலத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்க க்கு உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் . க. வேங்கடேசன் அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய அலுவலாளர் க்கும் என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

88. 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு வயினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம் !

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடி றன. அவை மீண்டும் வெள்ளிக்கிழமை 1980 சூலை 4 ஆம் தேதி அன்று ல 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4.40)

33. Notification issued with G.O. Ps. No. 272, Commercial Taxes and Religious Endowments, dated the 22nd March, 1980 in regard to an amendment to the Revenue Department Notification II (1) No. 5064 of 1971, dated the 25th September 1971, published at page 1128 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th November 1971. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

34. Notification issued with G.O. Ps. No. 308, Commercial Taxes and Religious Endowments, dated the 2nd April 1980 in regard to exemption in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act in respect of declared goods which are taxable at the point of last purchase, if such goods are sold in the course of inter-State trade and tax has been paid under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956). [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

35. Notification issued with G.O. Ms. No. 380, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd April 1980 in regard to an amendment to the Revenue Department Notification III No. 116, dated the 28th March 1970, published at page 471 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 15th April 1970. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

36. Notification issued with G.O. Ms. No. 288, Commercial Taxes and Religious Endowments, dated the 27th March 1980 in regard to inclusion of Punjab and Sind Bank Limited, situated within the State of Tamil Nadu, as approved banks for the purposes of the Tamil Nadu Chit Funds Act, 1961. [Laid on the table of the House under section 63 (4) of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961.)]



B. Reports, Notifications and Other Papers.

8. Speech of Hon. Dr. V. R. Nedunchezhiyan, Minister for Finance, presenting the Budget for the year 1980-81. (English and Tamil).

9. An introduction to the Budget for the year 1980-81. (English and Tamil).

10. Appendices to Budget Speech for the year 1980-81. (English and Tamil).

11. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu for the year 1980-81. (English and Tamil).

12. Budget Memorandum for the year 1980-81. (English and Tamil).

13. Appendices to the Budget Memorandum for the year 1980-81. (English and Tamil).

14. Annual Plan, 1980-81.

15. List of New Schees for 1980-81. (English and Tamil).

16. Notice of Demands for the year 1980-81. (English and Tamil).

## இணைப்பு—I.

[1 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு வருவாய்க்கணக்கில் வரவினமும் செலவினமும்.

அ. வருவாய்.

பழைய வகைப்பாடு.

(ரூபாய் இலட்சத்தில்)

| பெருந் தலைப்புகள். | 1938–39. | 1965–66. | 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. | 1972–73. | 1973–74 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| t1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| கூட்டு நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்— | | | | | | | | | | |
| வருமான வரியில் பங்கு .. | 22·50 | 10,01·27 | 11,44·64 | 14,60·13 | 16,27·70 | 24,04·96 | 29,46·82 | 37,79·87 | 40,11·98 | 39,52·00 |
| வேளாண்மை வருமான வரி .. | .. | 1,22·73 | 1,45·82 | 1,61·71 | 1,88·05 | 1,97·28 | 1,83·25 | 2,01·14 | 2,17·52 | 2,17·20 |
| சொத்துரிமை வரி .. .. | .. | 58·91 | 35·86 | 1,19·75 | 55·38 | 58·87 | 63·78 | 76·23 | 85·21 | 1,42·95 |
| நில வரி— | | | | | | | | | | |
| பாசனத்திற்குரிய பகுதி உட்பட பெரு மொத்த வருவாய் .. | 7,00·78 | 9,12·84 | 6,65·94 | 8,16·84 | *3,28·67 | 3,60·67 | *4,14·92 | *4,49·08 | *7,36·28 | *7,84·53 |
| ஆயத் தீர்வை .. .. .. | 3,72·23 | 49·02 | 51·29 | 76·06 | 84·49 | 1,16·72 | 1,39·87 | 22,22 55 | 39,15·30 | 56,46·05 |
| வாகன வரி .. .. .. | 81·22 | 13,31·11 | 14,96·08 | 1,68·36 | 18,65·17 | 19,46·98 | 21,84·15 | 22,99 34 | 26,15·24 | 27,62·74 |
| விற்பனை வரி .. .. .. | .. | 40,95·38 | 48,76·51 | 56,47·74 | 61,12·64 | 72,15·47 | 81,85·51 | 98,97 11 | 1,14,01·77 | 1,32,24·68 |
| ஏனைய வரிகளும் தீர்வைகளும் .. | 3·19 | 10,50·79 | 12,46·43 | 15,22·00 | 16,70·15 | 18,04·43 | 20,68·77 | 22,00·35 | 18,07·03 | 17,87·97 |
| முத்திரைத் தாள்கள் (நிகர வருவாய்). | 1,73·37 | 8,15·13 | 8,99·05 | 11,04·89 | 10,91·13 | 12,77·09 | 13,42·44 | 14,35·64 | 15,77·37 | 21,63·22 |
| பத்திரப் பதிவு .. .. .. | 32·70 | 1,80·52 | 2,03·00 | 2,29·81 | 2,59·52 | 2,76·11 | 3,35·95 | 3,26·60 | 3,45·41 | 3,99·17 |
| வட்டி .. .. .. .. | 19·73 | 13,76·54 | 15,27·45 | 20,63·67 | 31,17·60 | 19,01·61 | 19,26·76 | 31,20·94 | 28,32·61 | 16,75·51 |
| நீதி நிர்வாகம் .. .. .. | 15·39 | 1,21·80 | 1,23·90 | 1,37·91 | 1,55·30 | 1,80·15 | 1,81·00 | 1,36·11 | 1,11·89 | 1,22·69 |
| சிறைச் சாலைகள் .. .. .. | 5·98 | 42·35 | 58·94 | 41·31 | 53·59 | 63·11 | 73·85 | 76·43 | 80·76 | 87·94 |
| காவல் துறை.. .. .. .. | 5·66 | 51·00 | 41·38 | 56·44 | 57·12 | 67·17 | 49·98 | 1,05·52 | 96·12 | 1,33·13 |
| பல்வகைத் துறைகள் .. .. | 7·62 | 45·32 | 53.54 | 60·57 | 2,35·75 | 2,25·22 | 1,51·75 | 1,45·65 | 1,87·43 | 1,58·77 |
| துறைமுகங்களும் கப்பலுக்கு வழி காட்டலும் .. .. .. | 44·67 | .. | .. | — | .. | .. | .. | .. | .. | .. |
| கல்வி .. .. .. .. | 8·35 | 91·20 | 1,09·79 | 1,80·14 | 2,64·52 | 2,08·44 | 1,31·77 | 2,08·02 | 1,97·37 | 5,75·24 |
| மருத்துவம் .. .. .. | 10·25 | 1,12·72 | 1,18·20 | 1,86·09 | 1,02·39 | 2,94·14 | 2,60·08 | 3,24·12 | 3,75·26 | 3,57·78 |

* பாசனத்திற்கு உரிய பகுதி நீங்கலாக

## இணைப்பு I—தொடர்ச்சி.

## தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வரவினமும் செலவினமும்—தொடர்ச்சி.

### அ. வருவாய்—தொடர்ச்சி.

### பழைய வகைப்பாடு—தொடர்ச்சி.

| பெருந் தலைப்புகள். | 1938–39. | 1965–66. | 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. | 1972–73. | 1973–74 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| பொதுச் சுகாதாரம் .. .. .. | 2·59 | 16·66 | 13·36 | 15·08 | 18·07 | 33·78 | 20·03 | 26·61 | 22·63 | 15·29 |
| குடும்ப நலன் .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 0·92 | 2·20 |
| வேளாண்மை.. .. .. .. | 3·12 | 3,84·40 | 4,51·78 | 6,12·85 | 6,01·02 | 8,29·03 | 7,38·05 | 9,84·73 | 11,58·86 | 16,08·01 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. | 1·02 | 30·65 | 32·34 | 41·50 | 41·19 | 40·51 | 40·30 | 59·24 | 61·08 | 42·83 |
| கூட்டுறவு .. .. .. .. | 4·18 | 59·33 | 64·84 | 59·79 | 60·91 | 89·39 | 86·23 | 1,36·35 | 1,24·40 | 1,66·19 |
| தொழில்கள் .. .. .. | 18·85 | 3,39·93 | 1,49·04 | 2,67·15 | 3,81·71 | 3,09·37 | 3,38·20 | 2,75·18 | 3,40·34 | 3,37·31 |
| சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, உள்ளாட்சி மேம்பாட்டுப் பணிகள் .. .. | .. | 6·78 | 9·93 | 17·39 | 12·10 | 10·99 | 10·82 | 12·83 | 13 08 | 32·69 |
| பல்வகை, சமூக, மேம்பாட்டு நிறுவனங்கள் .. .. .. | .. | 33·41 | 36·92 | 82·99 | 3,55·11 | 3,71·79 | 4,26·24 | 4,74·75 | 2,80·54 | 2,43·06 |
| பாசனம்— | | | | | | | | | | |
| நேரடி வருவாய்கள் .. .. | 6·31 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 2,34·43 | 2,19·46 | 2,88·62 | 57·81 | 1,96·18 |
| (கழிக்கவும்) நடைமுறைச் செலவுகள் .. .. .. | (—)38·39 | † | † | † | † | † | † | † | † | † |
| நிகரவருவாய்கள் .. | (—)32·08 | 14·80 | 13·26 | 20·43 | 1,93·16 | 2,34·43 | 2,19.46 | 2,88·62 | 57·81 | 1,96·18 |
| நேரடி வருவாய்கள் ‡ .. .. | 1·99 | 5·13 | 6·18 | 23·60 | 1,60·19 | 1,39·19 | 1,24·19 | 1,52·80 | 7·22 | 9·27 |
குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பல திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றிற்குரிய நிதி ஆதாரங்கள் எங்கே என்ற கேள்வி இன்றையதினம் அரசியல் வட்டாரத்திலே பரவலாக இருந்துகொண்டிருக்கிறது. ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற ஏடு என்று கூறப்படுகின்ற ‘ இந்து ’ பத்திரிகை கூட தன்னுடைய தலையங்கத்திலே இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற தன்மையிலே, ஏறக்குறைய சிறு விவசாயிகளுடைய கடனை ஏறக்குறைய அறுபது கோடி ரூபாயை இந்த அரசு தள்ளுபடி செய்வதற்கு முன்வந்திருக்கிறது என்ற அந்த இனிப்பான செய்தியை இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் காண்கிறோம். ஆனால், இதற்குரிய நிதியாதாரங்களைச் சேகரிப்பது குறித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையிலோ, நிதிநிலை இணைப்புகளிலோ ஏதாவது இனம் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறதா என்றால், அது தெளிவாக்கப்படவில்லை என்று நானல்ல, ‘ இந்து ’ பத்திரிகையே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. நான் ஏன் ‘ இந்துப் பத்திரிகையைக் குறிப்பிடுகிறேன் என்றால், நாங்கள் சொன்னால், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள் என்று எண்ணக்கூடும். ஆனால் அரசியல் தெளிவுள்ள ‘ இந்து ’ பத்திரிகையே அப்படிப்பட்ட ஒரு கருத்தை, இந்த நிதிநிலை அறிக்கைமீது கூறியுள்ளது. இத்தகைய ஒரு கருத்தைக் கூறும் நிலை இந்த அரசுக்கு ஏன் ஏற்பட்டது ? நிதியாதாரங்களை நாம் தேடக் கூடாதா ? தேடுவதற்குரிய வழிவகைகள் இல்லையா ? நிதியாதாரங்களைத் தேட, புது வரிகள் போடலாம் அல்லது வேறு வழிகளிலும் நிதியாதாரங்களைத் தேடலாம். நிதிநிலை அறிக்கையிலேகூட பல டெக்ஸ்டைல் மில்கள் தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் பலவற்றை அரசேகூட ஏற்று நடத்தலாம். அத்தகைய நிலையை உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, “ நாங்கள் வரிகள் எதையும் போடப் போவதில்லை ”, “ இது வரிகளற்ற பட்ஜெட் ”,

"வரிகளற்ற பட்ஜெட்டை நாங்கள் சமர்ப்பித்திருக்கிறோம். அது எங்களால் முடியும்" என்று சுட்டிக் காட்டவே இன்றைதினம் இத்தகைய நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட வரி போடுவதைப் பாவமாகக் கருதிய தில்லை. எந்தக் கட்சி ஆட்சி ஏற்பட்டாலும், தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள, அது சொன்ன திட்டங்களை, நடைமுறைப்படுத்த வரி போட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால் என்ன காரணத்தாலோ இந்த அரசு இன்றையதினம் அத்தகைய வரி எதையும் போடவில்லை. இதைச் சொல்லும் போது, நான் வரி போட வேண்டும் என்று கூறுவதாக தயவுசெய்து யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறிய சிரிய யோசனையை என்னுடைய உள்ளத்தில் இருத்தி, எப்போது அதைப் பயன்படுத்த வேண்டுமோ அப்போது பயன்படுத்தி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முழுத் திருப்தியளிக்கிற வகையில் நடப்பதற்கு நான் முயலுவேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்பது எனக்குத் தெரியும். இதனைத்தான் ஏற்கனவே தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் சூசகமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இப்போது வரிபோடவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இம்மன்றத்திற்குக் கூறும் வகையில் "எதிர் காலத்தில் திட்டங்களை நிறைவேற்றவும், மற்ற பணிகளுக்காகவும், எல்லா வகைகளிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" என்ற சூசகமாக நிதி நிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அநேகமாக அது சப்ளிமெண்ட்டரி பட்ஜெட்டில் வந்தாலும் வரக்கூடும் என்று கருதுகிறேன்.

இங்கே அளிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. விவசாயிகளின் கடன்களைத் தற்போது தள்ளியிருக்கிறார்கள். நான் இப்போது அந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை. அநேகமாகக் கடைசியில் அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன், அல்லது எனக்குப் பின்னாலே பேச இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றிப் பேசக்கூடும், என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசுக்கு ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



விவசாயம் என்பது இந்த நாட்டின் முதுகெலும்பு போன்ற தொழிலாகும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளை உற்சாகப்படுத்த வேண்டியதும், அவர்களுக்கு உதவி புரிய வேண்டியதும், அரசினுடைய கடமை என்பதில் இரு வேறு கருத்திற்கு இடமிருக்காது. ஆனால் நம்முடைய அரசோ இதை ஒரு விளம்பரமாகத்தான் இன்றையதினம் செய்து கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேனே தவிர, உண்மையிலேயே விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் எதையாவது செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக ஒன்றும் இல்லை என்றுதான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட அதிகமான விலையைக் கொடுத்து நாங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கதாகும். ஆனால் அது எந்த அளவில் நடந்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், வேதனையாக இருக்கிறது. சென்ற ஆண்டு தமிழகத்தில் 62.29 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து எவ்வளவு நெல்லை நேரடியாகக் கொள்முதல் செய்திருக்கிறது என்று பார்த்தால், சுமார் 2 லட்சம் டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு லட்சம் டன் அரிசிதான் அரசாங்கத்தால் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 1 லட்சம் டன் அரிசியைத்தான் அதிக விலை கொடுத்து அரசு வாங்கியிருக்கிறது. அப்படியென்றால், மீதியுள்ள 61 லட்சம் டன் அரிசி என்ன விலைக்குப் போயிற்று என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த விவசாயிகளின் நிலைமை என்னவாயிற்று? கட்டுப்படியான விலைக்கு அவனால் விற்க முடியவில்லை என்கிற நிலைதான் இதிலிருந்து ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இத்தகைய நிலைமைகள் இனி எதிர்காலத்திலாவது சீர்படுத்தப்படும் என்ற நம்பிக்கையோடு நான் மேலே தொடருகிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், மற்றொன்றையும் நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 81.29 லட்சம் டன் உணவு தமிழகத்தில் உற்பத்தியாகியிருக்கிறது. இந்த ஆண்டு 89.20 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது ஏறக்குறைய

[திரு. நீலநாராயணன்] [1980 ஜூலை 4

6 லட்சம் டன் இந்த ஆண்டு அதிகமான உணவு ஆற்பத்தியை அரசு எதிர்பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையின் 21-வது பாராவில் 'பாசன வசதிகள்' என்ற தலைப்பில் ஒரு விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 33,300 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் புதிதாக பாசன வசதி பெற்ற சாகுபடி செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை முன்னேறியிருப்பதாக அதில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். 33,300 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்கிறபோது, வெறும் 6 லட்சம் டன் உணவுதான்யம் மட்டுமே அதிகமாகக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறதே, இது எந்த அளவுக்குப் பொருத்தமானது ? எந்தக் கணக்கின் அடிப்படையில் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. காரணம் விவசாயத்தில் எனக்கு அவ்வளவு பழக்கமில்லை.

அடுத்து, விவசாயமானாலும், வேறு எந்தத் தொழில் வளர்ச்சியானாலும், அதற்கெல்லாம் மிக இன்றியமையாத தேவையாக உள்ளது மின்சார உற்பத்தி. மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில், எத்தனையோ முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு இருக்கிறோம் என்றும், எல்லா சாலைகளுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதோடு ஏறக்குறைய எல்லாக் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு விவசாயிகளைப் பொறுத்த வரையில் 8.9 லட்சம் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்றப் பேரவையில் கலசபாக்கம் தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பேசும்போது, ஒரு நிலைமையைச் சுட்டிக் காட்டினார்கள். அவருடைய மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட மின்வாரிய அதிகாரிகளைக் கேட்டு அவர்கள் விவசாயிகளுக்கு உத்தரவாதம் அளித்ததற்குப் பிறகு அங்குள்ள விவசாயிகள் பம்பு செட்டுகளை வாங்கி, ஓராண்டல்ல, இரண்டு ஆண்டுகளாகிவிட்ட இன்றைய நிலையிலும் அந்தப் பம்பு செட்டுகளுக்கு எல்லாம் மின்னிணைப்புக் கொடுக்கப்படவில்லை என்றும், அவ்வாறு மின் இணைப்புக் கிடைக்காத காரணத்தால், அந்த பம்பு செட்டுகளை வாங்குவதற்காகப் பெற்ற கடன்கள் மீது வட்டி ஏறிக்கொண்டே போயிருக்கிறது என்ற அவல நிலையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-20)

மின்சாரத்தைப் பொறுத்த வரையில், தன்னிறைவைப் பெற்றிருப்பதைப் போல, 8.9 இலட்சம் பாசனக் கிணறுகளுக்கு மின்சாரத்தை வழங்கியிருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக



ஜூலை 4] [திரு. நீலநாராயணன்]

ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சாரத்தை ...ாக்குகின்ற பணியில், நம் நாட்டைப் பொறுத்த வரையில், மிக இன்றி...யாதது நிலக்கரி என்றால், அது மிகையல்ல. அந்த நிலக்கரியை ...றைய தினம் நாம் எந்த அளவிற்குப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்...் என்னைப் பார்க்க வேண்டும். நிலக்கரியை வெளி மாநிலங்களிலிருந்து ...குமதி செய்வதற்காக பூம்புகார் கார்ப்பரேஷனை ஆரம்பித்து பெரியார் ...ரிலும், பேரறிஞர் அண்ணா பெயரிலும் கப்பல்களை வாங்கி தமிழகத்...் நிலக்கரியைக் கொண்டுவருகிற பணியிலே இந்த நாடு ஈடுபட்டிருந்தது. ...றைய தினம் அந்த பூம்புகார் கார்ப்பரேஷனும், கப்பல்களும் எந்த நிலை...யிலே இருக்கின்றன என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் இணைப்பில் ... 225 ஆகிய பக்கங்களை புரட்டிப் பார்த்தால் தெரிகிறது. 1978-79 ஆம் ...ாடில் பூம்புகார் கார்ப்பரேஷனுக்காகவும், அதில் உள்ள கப்பல்களை நடத்...செல்வதற்காகவும் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ...ால் 1980-81 ஆம் ஆண்டில் வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்...ருக்கிறதென்று சொன்னால், பூம்புகார் கார்ப்பரேஷன் என்பது ஒதுக்கப்... – ஒன்றாகிவிட்டதா, அல்லது தேவையில்லை என்று மூடப்பட்டுவிட்டதா ...பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை கப்பல் பேர...லைப் பற்றி எங்களுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ...டமன்றத்திலே எடுத்துக் கூறியதன் எதிரொலியாக அந்தப் பணி அடியோடு ...த்தப்பட்டிருக்கிறதா என்பதும் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ...புகார் என்ற சொல்லைக் கேட்டவுடனே கசப்பாக இருக்கிறதா ? ...தன் ...ணமாகத்தான் இதை நிறுத்திவிட்டார்களோ என்று ஐயப்படுகிறேன். ...வே அதற்கு எதிர்காலத்திலே இந்த அரசு வழிவகை செய்யுமென்று மன...ா நம்புகிறேன்.

மின் வசதியைப் பொறுத்துத்தான் நம்முடைய நாட்டிலே பெரிய பெரிய ...ாழில் வளர்ச்சிகள் ஏற்பட வேண்டும். தொழில் வளர்ச்சியைப்பற்றி ...நர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிடுகிறபோது, மத்திய ...க்கார் போதிய உதவி அளிக்காத காரணத்தாலே, மத்திய அரசு சரியான ...துழைப்பைக் கொடுக்காத காரணத்தாலே, தமிழகத்திலே இன்றைய தினம் ...ாழில் வளர்ச்சி நசித்துவிட்டது என்ற பொருள்படத்தக்க அளவிற்குச் ...ட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்னொன்றையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்...். "1979 ஆம் ஆண்டு, தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற, 49 ...ண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்து எந்தவித

மான பதிலும் வரவில்லை. இந்த ஜூன் மாதம் வரையில் மேலும் 47 விண்ணப்பங்கள், அனுமதி கோரி அனுப்பப்பட்டன. அதற்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகமொத்தம் 96 விண்ணப்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால்- இந்த நிதிநிலை அறிக்கையிலே 80 விண்ணப்பங்கள் மட்டும் நிலுவையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது அச்சுப் பிழையா, அல்லது கணக்கிலே ஏதாவது பின்னப் பேதம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அந்த 16 விண்ணப்பங்களுக்கு மத்திய அரசாங்கத்திலிடமிருந்து பதில் வந்துவிட்டதா என்றும் தெரியவில்லை. மேலும் அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் இந்தச் சபையிலே வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். 49 விண்ணப்பங்கள் 1979 ஆம் ஆண்டு வரையில் மத்திய சர்க்காரிடத்தில் தேங்கிக்கிடந்தன என்றும் அங்கேயிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை என்றும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது மத்திய சர்க்காரில் இருந்தவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுடைய அரசுதான் அன்றைய தினம் மத்தியில் ஆட்சி செய்துகொண்டிருந்தது. இன்றைய தினம் தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதிக்கம் நிறைந்த அரசாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டதை அப்படியே பெறுகின்ற அளவிற்குச் செல்வாக்கும், வாய்ப்பும், வசதியும் பெற்ற தன்மைகள் நிறைந்த அரசாக 1979 ஆம் ஆண்டில் மத்திய அரசு இருந்ததை நாம் பார்த்தோம். அப்போது இந்த ஆளுங்கட்சி சார்பிலே 18 எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் இருந்தார்கள். அவர்கள் குரல் கொடுத்தால், செவி மடுத்துச் செயல்படுத்தத் தயாராக இருந்தது அந்த அரசு, அது மட்டுமல்லாமல் தமிழகத்தின் இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைச்சர் அந்தஸ்தில் ஒரு பிரதிநிதியை அன்றைய அரசு டில்லிக்கு அனுப்பி வைத்திருந்தது. இதற்காக அவர் பாடுபட்டாரா, இல்லையா? எம்.பிக்கள் இதுபற்றிக் கேட்டார்களா, இல்லையா? அவர்களெல்லாம் அந்தச் சமயத்தில் என்ன செய்தார்கள்? நம் நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்காக அவர்களுக்கிருந்த செல்வாக்கை, வலிமையை, ஆதிக்கத்தைப் பயன்படுத்தி வந்தார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

இன்றைய தினம் மற்றொன்றையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய நீங்காத கடமையென்பதால் சுட்டிக்காட்டுகிறேன். இதைப் போன்றதொரு செல்வாக்கு, இதைப் போன்றதொரு ஆதிக்கம், இதைப் போன்றதொரு வாய்ப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 1971 ஆம் ஆண்டில் கிட்டியிருந்தது. இதே அளவு என்று சொல்லமாட்டேன். இதைவிட ஓரளவு குறைவான



சுமுகமான உறவு, நேசக் கரம் நீட்டுகிற நிலையில் இருந்தது. அதை வைத்துக்கொண்டே, அந்தச் சிறிய செல்வாக்கை வைத்துக்கொண்டே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டுக்கு என்னென்ன தேவையென்பதை எண்ணிப் பார்த்து, அவற்றையெல்லாம் மத்திய அரசிடமிருந்து போராடிப் பெற்று வந்த சரித்திரத்தை நாடு மறந்துவிடவில்லை. சேலம் இரும்பாலைத் திட்டம், தேசியக் கொடியை ஏற்றுவதற்குரிய உரிமையை முதலமைச்சர் பெற்றிருப்பது, டால்மியாபுரம் என்ற பெயர்ப்பலகையை கல்லக்குடி என்று மாற்றியது, நாடு வறட்சியில் சிக்கியிருந்தபோது—திரு. சுப்பிரமணியம் போன்ற பெரிய, பெரிய காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தும்கூட—மத்திய அரசிடமிருந்து 18 கோடி ரூபாயை போராடி வாதாடிப் பெற்றது, ஆகிய பெருமைக்குரிய சாதனைகளைச் செய்த நிலை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் உரியதாகும். சிறிய செல்வாக்கை வைத்துக்கொண்டே இது போன்ற காரியங்களைச் சாதிக்க முடிந்ததென்றால், திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னால் வந்த திரு. சரண்சிங் ஆட்சிக் காலத்திலும் நீங்கள் செய்ததென்ன? திரு. சரண்சிங் அமைச்சரவை என்றால் அது உங்கள் அரசு. இரண்டு அண்ணா தி. மு. க. அமைச்சர்கள் அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார்கள். இருந்தும்கூட—தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குரிய முயற்சிகளைச் செய்ய முடிந்ததா?

சென்னை நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துரித விரைவுப் போக்குவரத்துக்காக பாதாள இரயில் திட்டத்திற்காக அன்றைய தினம் தமிழகம் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது.

(பிற்பகல் 4-30)

அந்த சந்தர்ப்பத்திலே மத்திய சர்க்காரிலே இவர்களுடைய அரசு நடை பெற்றுக்கொண்டிருந்தபோது மிக எளிதிலே, சுலபத்திலே இந்தத் திட்டத்தை நாம் பெற்றிருக்க முடியும். ஆனால் அந்தத் திட்டத்தைக் குறித்து முடிவு என்ன வாயிற்று? 'நான் அதை இல்லை என்று சொல்லிவிட்டேன். மார்ச் மாதத் தோடு, அதை க்ளோஸ் பண்ணிவிட்டேன்' என்ற பதிலைத்தான் திரு. சரண் சிங் அவர்களிடமிருந்து கேட்க முடிந்ததே தவிர்த்து, வேறு நல்ல பதிலை நம்மாலே பெற்றுக்கொள்ள முடியவில்லை. இன்றையதினம் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தத் திட்டத்திற்கு மீண்டும் ...ங்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்

கிறது. டாக்டர் கலாநிதி, திரு. செல்வராஜ், திரு. பி. ஆர். தண்டபாணி, திரு. முரசொலி மாறன் போன்ற எம்.பி.க்கள் எல்லாம் அந்தத் திட்டத்திற்காகவும், இன்னும் பல உரிமைகளுக்காகவும் இன்றைய தினம் மத்திய சர்க்காரிலே வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே அந்தத் திட்டம் வெற்றி பெறுகின்ற அளவுக்கு ஆளும்கட்சியினரும் சேர்ந்து வாதாட வேண்டும். அல்லது ஆளுங்கட்சியினர் குரல் கொடுக்கும்போது, எங்கள் கட்சியினரும் சேர்ந்து குரல் கொடுக்கிறோம். எப்படியாவது தமிழகத்திலே நல்ல நிலவரங்கள் உருவாவதற்கு இது பயன்படட்டும் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இங்கே பல்கலைக் கழகங்கள் பல உருவாக்கப் போவதாக நிதிநிலை அறிக்கையிலேயும், ஆளுநர் அவர்கள் உரையிலேயும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது வரவேற்கப்படுகின்ற ஒன்று. புதுப்புதுப் பல்கலைக் கழகங்கள் உருவாகப்போவதில் நான் உண்மையிலேயே பூரிப்பு அடைகிறேன். தமிழுக்கென ஒரு பல்கலைக் கழகம் வருவதில் பரவசம் அடைகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் இந்த அரசுக்கு நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய பல்கலைக் கழகங்களை உருவாக்குகின்ற இதே சந்தர்ப்பத்திலே, இருக்கின்ற பல்கலைக் கழகங்களுக்கு கொஞ்சம் உயிரூட்டி இயங்குகின்ற அளவுக்கு வழிவகைகள் செய்ய வேண்டும் என்பது தான் என் பணிவன்பான வேண்டுகோள். ஏன் அப்படிப்பட்ட நிலவரம் என்று கேட்பார்கள். சமீபத்திலே ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டத்தை கேரள அரசு, கேரள பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது அங்கீகரிக்க முடியாது என்று சொல்லிவிட்டதாக ஒரு செய்தி. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் அதன் தரம் குறைந்து விட்டது என்பதுதான். அதைத் தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதைப் பொறுத்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது? அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்று கூறுகின்றபோது, அந்த பல்கலைக் கழகம் பல சிறந்த பேரறிஞர்களை உருவாக்கியது என்று ஆளுகின்ற கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் தெரியும். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட அங்கேதான் கற்றார்கள். . . . மன்னிக்க வேண்டும். அங்கேதான் டாக்டர் பட்டம் பெற்றார்கள். நம் எதிரிலே வீற்றிருக்கின்றவர்கள் கூட அங்கேதான் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் சமாளித்து விட்டார்கள்.



**திரு. நீலநாராயணன் :** அவ்வளவுதூரம் போகத் தேவையில்லை. நம் எதிரேயே வீற்றிருக்கின்ற, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், நம்முடைய அன்புக்கும், பாராட்டுக்கும் உரிய நிதியமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்திலே உருவாக்கப்பட்டவர்தான். எங்கள் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் கூட அங்கே உருவானவர்தான். இன்னும் எத்தனையோ பேர்கள் அங்கே உருவானவர்கள் இருக்கிறார்கள். எதிரே உள்ள மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கூட அங்கே உருவானவர் தான். அப்படிப்பட்ட பல்கலைக்கழகம் இன்றையதினம் தரம் இழந்துவிட்டது என்று பக்கத்திலே இருக்கின்ற ஒரு மாநிலம் சொல்கின்றது என்றால், நாம் அது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம்? உண்மையிலேயே அந்தப் பிரச்சினையைப் பற்றி அரசு எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விசித்திரமான ஒரு சூழ்நிலை. **'நலிந்தோர் நலன்'** என்ற தலைப்பின்கீழ் பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த அரசு ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும், பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கருவுற்ற தாய்மார்களுக்கு மருத்துவ வசதிகளும், இதர வசதிகளும் செய்து கொடுக்கப் போவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். விவசாயிகள்பற்றி இந்த அரசு போட்ட கணக்கை நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டினேன். அதைப் போலவே இதையும் இந்த அரசினுடைய பரிசீலனைக்கு வைக்கிறேன். இன்றைக்கு எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? எத்தனை குழந்தைகள் பெற்ற தாய்மார்களுக்கு அரசு இந்த வசதிகளைச் செய்து கொடுக்கப்போகின்றது? இல்லை, எல்லோருக்குமே கொடுக்கப்போகிறதா என்று கேட்கிறேன். ஏனென்றால், கருத்தடை எப்படித் தேவை என்று கூறுகிறோம்? குடும்ப நலத் திட்டம் பற்றி அங்கங்கே பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்களே, அதற்கும் இதற்கும் முரண்பாடு ஏற்படாதா என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இந்தத் திட்டத்திலே விளக்கம் இல்லை. இதற்கும் ஒரு வழி கண்டாக வேண்டாமா? இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வரும்போது, சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேனே அல்லாமல் வேறு அல்ல.

அதுபோலவே மிக முக்கியமான ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் என்பது மற்றவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதாக இருக்கிறதே தவிர வேறல்ல. முதியோர்களுக்கு உதவித் தொகை, ஆதரவற்ற கைம்பெண்களுக்கு உதவித் தொகை

என்று கொடுக்கிறார்கள். கண்ணொளியற்றோர்க்கு உதவித் தொகை என்ற திட்டத்தைத் தான் கொஞ்சம் விவசாயிகளுக்கும் விரிவாக்கியிருக்கிறார்கள். அதுதான் ஓய்வூதியமா? இது என்ன ஓய்வூதியம்? அதைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் ஏமாந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். ஓய்வூதியம் கொடுக்கிறோம், உதவித் தொகை கொடுக்கிறோம் என்று வாக்காளர்களுக்குச் சொன்னதற்காக இப்படி ஒரு வார்த்தையைச் சொல்கிறார்களா என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொல்கிறேன். வாக்காளர்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கலாம். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே அவைகள் வார்த்தைகளாக வந்துவிட்டால் மட்டும் போதுமா? ஓய்வூதியம் என்றால் என்ன, அதுதரும் நிலைமைகள் என்ன என்பதைப்பற்றியெல்லாம் அரசு விரிவாக இந்த அறிக்கையின் மூலமாக எடுத்து வைக்கத் தவறி விட்டார்கள் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டதாரிகளுக்கு எதுவுமில்லை என்று கருத்து சொல்லியிருக்கிறார்கள். குடும்பத்திலே ஒருவருக்கு வேலை என்று சொன்னார்கள், அதுவும் இல்லை. வேலையற்று இருப்பவர்களுக்கு ஒரு ரூபாய் ஒரு நாளைக்கு என்று சொன்னார்கள். அதுவும் இதில் இடம்பெறவில்லை என்று பலபேர் இன்றைய தினம் குறைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக இந்த நிதி நிலையைப் பார்க்கின்றபோது, அது ஒரு கானல் நீராகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. தூரத்திலே பார்த்தால், அது நீர்போலத் தெரிகிறது. கிட்டே போய்ப் பார்த்தால், அங்கு நீர் இல்லை. வெறும் சூன்யம் இந்த அறிக்கையைப் படிக்கின்றபோது, படிக்க இனிமையாகத்தான் இருக்கிறது. பரவசமூட்டுவதாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் உள்ளே புகுந்து ஆராய்ந்து பார்த்தால், அது எப்படித் தெரிகிறது என்றால், ஒரு அத்திப் பழத்தைப் புட்டுப்பார்த்தால், அது அத்தனையும் சொத்தை என்று சொல் வார்களே, அதுபோலத்தான் இருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை என்ற கருத்தைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**5. சட்டமன்ற மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை.**

**மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் தளர்த்தப்படுதல் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.



மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் தளர்த்தப்படுதல் குறித்து.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

இவ்வாண்டு, பருவமழை ஓரளவு, நல்ல நிலையில் உள்ளதால் ஏற்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு ஏற்கனவே அமுலில் இருந்து வந்த மின்வெட்டு 30—6—1980 அன்று சில பயனீட்டாளர்களுக்கு தளர்த்தப்பட்டன. அப்பொழுது மீண்டும் 10—7—1980 அன்று ஆய்வு செய்வதாக திட்டமிடப்பட்டது. எனினும், இப்பொழுது நிலைமை மேலும் சீரடைந்து வருவதால் 7—7—1980 லிருந்து மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் கீழ்கண்டவாறு தளர்த்தப்படுகின்றன.

1. இப்பொழுது கிராமப்புற இணைப்புகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் பகலில் 6 மணி நேரம் அல்லது இரவில் 8 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. இனி கிராமப்புறங்களில் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சக்தி கிடைக்கும் வகையில் இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் பகல்நேர மின்சாரம் மாதத்தில் 15 நாட்கள் காலையிலும் 15 நாட்கள் மாலையிலும் வழங்கப்படும்.

2. உயர் அழுத்தத் தொழில்களில் தொடர்ந்து இயங்கும் தொழில் களுக்கு முப்பது சதவிதம் மின்வெட்டும், இதரத் தொழில்களுக்கு அறுபது சதவித மின்வெட்டும் மற்ற உயர் அழுத்த இணைப்புகளுக்கு முப்பது சதவீத மின்வெட்டும் ஏற்கனவே இருந்து வந்தன. இனி அனைத்து உயர் அழுத்தத் தொழில்களுக்கும் மற்ற உயர் அழுத்த இணைப்புகளுக்கும் மின் தேவையில் இருபது சதவித வெட்டு என்றும், மின் சக்தியில் வெட்டு இல்லை என்றும் நிர்மாணிக்கப்படுகிறது. உயர் அழுத்த மின்சாரம் பெற்று வரும் மத்திய, மாநில அரசு அலுவலகங்களுக்கு மின்வெட்டு அறவே நீக்கப்படுகிறது. ஏற்கனவே விலக்கு அளிக்கப்பட்ட இணைப்புகள் தொடர்ந்து இச்சலுகை யைப் பெறும்.

3. புதிய மின் இணைப்பு கேட்டு கிடைக்கப் பெறாமல் உள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் விரைவில் மின்சக்தி கிடைக்கும் வகையில் புதிய மின் இணைப்புகளுக்கான தடை அறவே நீக்கப்படுகிறது.

4. நியான் விளக்குகள், விளம்பர, அலங்கார விளக்குகளுக்கு இருந்து வந்த தடையும், தெரு விளக்குகளுக்கு இருந்து வந்த தடையும் அறவே நீக்கப்படுகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் மின்சார பயனீட்டாளர்கள் மகிழ் வுறுவர் என நம்புகிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் அவையின் அலுவல் குறித்து, பின்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 5—7—1980 (சனிக்கிழமை) | 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம். |
| 6—7—1980 (ஞாயிற்றுகிழமை) | விடுமுறை |
| 7—7—1980 (திங்கட்கிழமை) முதல் 9—7—1980 (புதன்கிழமை) வரை | 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம். |
| 10—7—1980 (வியாழக்கிழமை) | 1980–81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் அவர்களின் பதிலுரை. |
| 11—7—1980 (வெள்ளிக்கிழமை) முதல் 20—7—1980 (ஞாயிற்றுக்கிழமை) வரை | கூட்டம் இல்லை |
| 21—7—1980 திங்கட் கிழமை) & 22—7—1980 (செவ்வாய்க்கிழமை) | கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |

மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் அறிவிக்கப்படும். மேலவை வழக்கம்போல் மாலை 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.



4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

(பிற்பகல் 4-40)

* டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நிதி அமைச்சரவர்கள் வெகு அழகாக நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதன் முதலாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலுள்ள நிலைமைகளை நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடிய வரையில் வரி போட வேண்டாமென்று முயற்சி செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் ஜனங்கள் கஷ்டப்படும்போது மேற்கொண்டு வரி போட்டால், அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். வரி இல்லாமல் இருப்பது நாட்டுக்கு நல்லது. அத்தோடு அரசுக்கும் நல்லது, கட்சிக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லதுதான். கூடியவரையில் நிதியமைச்சரவர்கள் வரியைக் குறைக்க முயற்சி பண்ணியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். வாழ்த்துக் கூறுகின்ற இந்த நேரத்தில் சில அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பெருவாரியான வாக்குகளைப் பெற்று, உத்வேகத்துடன் ஆட்சிக்கு இன்றையதினம் வந்திருக்கிறார்கள். எனவே இந்த ஆட்சியினர் நல்லது செய்வார்கள் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த வருடத் திட்டத்திலும், வரும் ஆண்டுகளிலும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுக்கு அதிகமான வருமானம் கிடைக்கவில்லை. மேலும் வரியும் போடவில்லை. பொதுவாக அரசால் நிதி திரட்ட முடியவில்லை என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள் ? மேலும் அந்த அறிக்கையில் மத்திய அரசிடமிருந்து அதிகமாக நிதி வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதைவிட நமக்குக் குறைத்திருக்கிறது என்று புள்ளி விவரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். அது போதாது. இங்குள்ள மந்திரிகள் அங்கே போய் கேட்க வேண்டும். நான் கவர்னர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது கூடக் குறிப்பிட்டேன். டெல்லியில், கேபினட் ராங்கில் ஒரு மந்திரி இருக்க வேண்டும், மாதத்தில் 20 நாட்கள் அவர் அங்கே தங்கியிருக்க வேண்டுமென்று சொன்னேன். பாராளுமன்றம் டெல்லியில் கூடுவதற்கு முன்னதாக உறுப்பினர்களை யெல்லாம் வரவழைத்து, இந்த இந்த விஷயங்களில் பிரச்சினை இருக்கிறது, அவற்றைப்பற்றிப் பேச வேண்டுமென்று அவர்களிடம் சொல்ல வேண்டும். பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [1980 ஜூலை 4

மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடிக்கடி சந்திப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எனவே அவர்கள் அங்கே பேசுகிறார்கள். அதைக் கேட்கும் நிதியமைச்சர், தொழிலமைச்சர் ஆகியோர் தங்கள் செக்ரட்டரிகளைக் கூப்பிட்டு 'என்ன இது, மிகத் தேர்ந்தவாக இருக்கிறது' என்று பேசி, அவர்கள் 200 கோடி ரூபாய் கேட்கும்போது, 100 கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். நான் அந்தச் சபையில் 30 வருஷங்கள் சொன்னேன், இந்தச் சபையில் 6 வருஷங்கள் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். மீண்டும் நான் அதையே சொல்ல சந்தர்ப்பம் அளிக்காமல், ஏற்பாடுகளைச் செய்வார்களென்று நம்புகிறேன். அதற்கான அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. வாக்காளர்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள், அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்பது நம்முடைய கடமை என்பது தெரியாதவர்களல்ல. பாராளுமன்றக் கூட்டம் 60 நாள் நடைபெறுகிறது என்றால், முதலிலே கூப்பிடுவது மட்டுமல்லாமல், மீண்டும் கூப்பிட்டு அவர்களைக் கேட்க வேண்டும். அங்கே மந்திரியாக இருப்பவர் வாரத்திற்கு ஒரு முறை அவர்களைச் சந்திக்க வேண்டும். அங்கே தமிழ் நாடு கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது. அங்கே கூட்டங்களைக் கூட்டலாம். மேலும் டெல்லியில் ஒரு செக்ரடேரியட் இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு ஜாயின்ட் செக்ரட்டரி, ஒரு டெபுடி செக்ரட்டரி, 4, 5 அண்டர் செக்ரட்டரிகள், மற்றும் அலுவலர்கள் அங்கே இருக்க வேண்டும். தமிழ் நாடு பற்றிய எல்லா விவரங்களையும், ஸ்டாடிஸ்டிக்ஸையும் உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும். சென்ற வருஷம் மெமோரியல் லெக்சரில் பேசும்போது சொன்னார்கள். டெல்லியிலிருந்து $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் நிதியுதவி வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆரம்பமாக அதைத் தந்திருக்கலாம். $2\frac{1}{2}$ லட்சமல்ல 10 லட்சம் ரூபாய் செலவழித்தால்கூட நல்லதுதான் டெல்லியில் அதிகாரிகள் ஒரு வருடம் இருக்க முடியாதென்றால், 6 மாதங்கள், 3 மாதங்கள் என்று இருக்கலாம். ஒவ்வொரு துறையிலிருந்து ஒரு அதிகாரியை அனுப்பினால், அங்கேயிருக்கும் மந்திரிக்கு உபயோககரமாக இருக்கும். அங்கேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உபயோககரமாக இருக்கும். அங்கே தி.மு.க., அண்ணா தி.மு.க, கம்யூனிஸ்ட் என்றெல்லாம் சொல்ல மாட்டார்கள். தமிழ் நாடு என்றுதான் சொல்லுவார்கள். தமிழ் நாட்டிற்கு உதவி வேண்டுமென்றுதான் சொல்லுவார்கள். சென்னை நகருக்கு கிருஷ்ணா நீர் வேண்டும். இப்போது அந்தத் திட்டத்திற்கு 40 கோடி ரூபாய் போதாது, 200 கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். கூவம் ஆற்றை சுத்தம் பண்ண வேண்டுமென்று சொல்லுவார்கள். மதுரைக்குப் பக்கத்திலுள்ள ஜி. ஆர். பிராஜக்ட் பற்றிச் சொல்லுவார்கள். காமராஜர் அவர்கள் காலத்திலே, 'இந்தப் ப்ராஜக்டுக்குப் பூரா செலவையும் நான் பண்ணுகிறேன்' என்று சொன்னார்கள். கேரள



1980 ஜூலை 4] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

மாநிலத்திற்கு மின்சாரம் தேவையில்லை. அந்தப் பிராஜக்டில் 23 ஸ்கீம்கள் இருக்கின்றன. அதில் 6, 7 தான் நடந்திருக்கிறது. மீதியிருக்கும் ஸ்கீம்களையும் ஒத்துக்கொள்வார்கள். அதற்காக டெல்லியில் சண்டை போட வேண்டும். இப்போது அந்தத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் நிறைய வேண்டும். அந்தத் திட்டம் 10 வருடங்களில் முடியலாம். 5 வருடங்களில் காவ்வாயியானது முடித்தால் நல்லது. ஸ்கீம் போடவே இரண்டு வருடங்களாகும். இதை நான் பல முறை சொல்லியிருக்கிறேன். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆளியார் பிராஜக்ட் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எங்கே நெல் விளைந்தாலும் பரவாயில்லை. எந்த இடத்தில் விவசாயத்தை அதிகப்படுத்த திட்டமிட்டிருந்தாலும், அதை முழு மனதோடு ஆதரிக்கிறோம்.

அடுத்து, விவசாயத்திற்கும், தொழில்களுக்கும் 'பவர்' மிக முக்கியமானது என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கு பம்ப்செட்டுகள் தேவைப்படுகின்றன. அதற்கு சேல்ஸ் டாக்ஸைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் சேல்ஸ் டாக்ஸைப் பூராவாக எடுக்க வேண்டும். சில பொருள்களுக்கு சேல்ஸ் டாக்ஸைக் குறைத்திருக்கிறார்கள். மேலும் அதைக் குறைக்க வேண்டும் குறைக்க வேண்டுமென்றுதான் நான் சொல்லுவேன். அரசு முடிந்தமட்டில் அவற்றைக் குறைக்க வேண்டும். இப்போது லக்சுரி கூட்ஸ்க்குக் குறைத்திருக்கிறார்கள். அதேபோல எசன்ஷியல் கமாடிடீசுக்கும் சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று சொல்ல வேண்டும். அவர்கள் கொடுத்துள்ள லிஸ்டில் எத்தனையோ இல்லாமல் இருக்கின்றன. அவற்றைச் சொல்ல வேண்டுமென்றால் நேரம் போதாது.

அடுத்து, 'இரிகேஷன்' பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதில் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. நீர்ப் பாசனத்தைப் பொறுத்த வரையில், சின்னச் சின்ன பிராஜக்டுகள் போட்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அரசு பெரிய பிராஜக்டுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கங்கா-காவிரி இணைப்பை நான்காகப் பிரிக்க வேண்டுமென்ற பிரச்சினை இருக்கிறது. விந்திய மலைக்குக் கீழே பிரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விந்திய மலையைத் துளை செய்து தண்ணீர் கொண்டுவருவதா அல்லது பம்ப் பண்ணிக் கொண்டுவருவதா என்ற பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. ராஜமந்திரிக்குக் கீழே அது 10 வருடங்களாக இருந்துகொண்டிருக்கிறது. சென்னை கோதாவரி, கிருஷ்ணா வாட்டர் வர ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சென்னை நகரத்திற்கு என்று சொல்லும்போது, அது சின்னத் திட்டம். கிருஷ்ணாவில்

ஒரு நாளைக்கு வரும் தண்ணீர் இந்த ஊருக்கு ஒரு வருடத்திற்குப் போதும். எம். எம். டி. ஏ.க்கு உட்பட்ட, தாம்பரம்—பூந்தமல்லி—மணலி ஆகிய பகுதிகள் உட்பட 450 சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட சென்னைப் பெரு நகருக்கு இன்றைக்கல்ல, 50 வருடங்களுக்குப் பிறகு தண்ணீர் நிறைய வேண்டியிருக்கும். தண்ணீரை பாதாள ஸ்டீல் பைப் மூலம் கொண்டுவர 40 கோடி அல்லது 50 கோடி ரூபாய் தேவைப்படும். அதை டிபெஞ்சர் இஷ்யூ பண்ணி, பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில் இப்போது தமிழ் நாடு அரசு நிதி நிலைமை நல்ல முறையில் இருக்கிறது. அப்படிப்பட்ட அபிப்பிராயம் ஷேர் மார்க்கெட்டில் இருக்கிறது. எனவே, அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மதுரைக்குப் பக்கத்திலுள்ள ஜி. ஆர். திட்டத்தையும் அமுல் செய்யவேண்டும். அதன்மூலம் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். மதுரைக்குப் பெரியார் திட்டம் வந்துவிட்டது. அதனால் நிரந்தரமாகத் தண்ணீர் நிறைய இருக்கிறதென்று நினைக்க வேண்டாம். வீணாகச் சமுத்திரத்தில் விழும் தண்ணீரை நல்ல முறையில் உபயோகப்படுத்த வேண்டும். சென்ட்ரல் கவர்ன்மென்டிடம் இதைச் சொன்னால், யாரும் முடியாது என்று சொல்ல முடியாது. உலக வங்கி ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி ரூபாய் என்று தருவார்கள். உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் எலக்டிரிசிட்டி ஜெனரேஷனுக்காக உலக வங்கி தருகிறது. நாமும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் தெர்மல் பிளான்ட்ஸ் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அது விட்டுப்போய்விட்டதோ என்று நினைக்கிறேன். பைக்காரா திட்டத்தை ஆரம்பிக்கும்போதே, சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தெர்மல் பிளான்ட்ஸ் வேண்டுமென்று சொன்னார்கள்.

(பிற்பகல் 4-50)

தெர்மல் பிளான்ட் மிகவும் தேவை. விவசாயத்துக்கு, இன்டஸ்ட்ரிக்கு எல்லாம் பவர் வேண்டியிருக்கிறது. தெர்மல் பிளான்ட் சுலபமாக நமக்குக் கிடைக்கிறது. நம் நாட்டிலேயே அதற்குத் தேவையான இயந்திரங்கள் எல்லாம் கிடைக்கின்றன. வெளி நாடுகளிலிருந்து நாம் வரவழைக்க வேண்டிய தேவையில்லை. மெட்ராஸில் இருக்கிற பேசின் பிரிட்ஜில் மட்டும் தெர்மல் பிளான்ட்டை அதிகமாக்கியிருக்கிறார்கள். அது போதாது. எல்லா டவுன்களிலும், எல்லா தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸிலும் தெர்மல் பிளான்ட்டுகளை ஏற்படுத்த வேண்டும். ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸுக்கு கரண்ட் மிக மிகத் தேவை. விவசாயிகளுக்கு 14 பைசாவுக்கு கரண்ட் கொடுக்கிறோம். அதை



நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் வீடுகளுக்கு 37½ பைசா என்றும் 67½ பைசா என்றும் வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். மோட்டார் வைத்திருந்தால் 37½ பைசா என்றும், மோட்டார் வைத்திருக்காவிட்டால் 67½ பைசா என்றும் சொல்லுகிறார்கள். எல்லோரும் மோட்டார் வைத்திருக்க முடியுமா? ஆகவே எல்லா வீடுகளுக்கும் 37½ பைசா என்று அறிவிக்க வேண்டும்.

அடுத்து, எஜுகேஷன் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய பட்ஜெட் 800 கோடி ரூபாய். இவ்வளவு எஜுகேஷனுக்கு என்று அதில் சொல்லப்படவில்லை. பி. யு. சியையும், பிளஸ் டூவையும் நான் 'அப்போஸ்' பண்ணியவன். ஆனாலும் இப்போது இது நடந்து முடிந்துவிட்ட காரியம். அதனால் நான் எல்லா ஊரிலும் பிளஸ் டூ தான் வேண்டுமென்று இப்போது சொல்லுகிறேன். இப்போது அப்போஸ் பண்ணி புண்ணியமில்லை. இப்போதே ஏன் 2,300 பள்ளிகளையும் பிளஸ் டூ பள்ளிகள் ஆக்கக் கூடாது? இந்த ஆண்டு 600 பள்ளிக்கூடங்களில் பிளஸ் டூ வகுப்புகள் கொண்டு வருவதாகச் சொல்லுகிறார்கள். எல்லா இடங்களிலும் பிளஸ் டூ வகுப்புகள் இல்லாததால், பெண் பிள்ளைகள் 2 அல்லது 3 மைல் நடந்து போய் படிக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு தூரம் பெண் பிள்ளைகள் நடந்துபோய் படிக்க முடியுமா? கார் வைத்திருப்பவர்கள்தான் அவ்வளவு தூரத்திற்கு காரில் கொண்டு போய்விட்டு படிப்பிக்க முடியும். இதனால் கார் இல்லாத எத்தனை வீடுகளிலுள்ளவர்கள் சிரமப்படுவார்கள்? இதுபற்றி கல்வித் துறை அதிகாரிகளிடம், அதாவது டி. இ. ஓ., சி. இ. ஓ. போன்றவர்களிடம், புள்ளிவிவரம் கேட்க வேண்டும். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இன்னும் இருக்கிற 1,500 பள்ளிக்கூடங்களிலும் இந்த ஆண்டிலேயே பிளஸ் டூ வகுப்புகள் கொண்டு வந்துவிட வேண்டும். லேபரட்டரி போன்ற வசதிகள் கொஞ்சம் கொஞ்சமாக வரட்டும்.

அடுத்து, 'கோ-எஜுகேஷன்' வேண்டாமென்றுதான் சொல்லுகிறார்கள். உலகம் பூராவும் 'கோ-எஜுகேஷன்' ஹைஸ்கூல்களில் இருக்க வேண்டாமென்றுதான் சொல்லுகிறார்கள். அப்படி இல்லையென்றால் எல்லோரும் ஏன் கான்வென்டுக்குப் போகிறார்கள்? அங்கேதான் 'கோ-எஜுகேஷன்' கிடையாதே. இப்போதே பெண்ணும் பையனும் ஒருவரையொருவர் பார்ப்பதற்குத்தான் காலேஜுக்குப் போகிறார்கள். அப்படி இருக்கும்போது, ஹைஸ்கூல்களாவது நன்றாக இருக்கட்டுமே. 'கோ-எஜுகேஷன்' ஹைஸ்கூல்களுக்கு

பிளஸ் டு மூலம் வருவதால், இது ரொம்ப இடைஞ்சலாக இருக்கிறது. பிளஸ் டுவில் 'கோ-எஜுகேஷன்' வேண்டாம். இதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிவர்த்திக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னையில் இன்னும் அதிகமான டிரான்ஸ்போர்ட் வசதிகள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பாதாள ரெயில் எல்லாம் இந்தக் காலத்தில் நடைமுறையில் சாத்தியமில்லை. ஸ்பீட் போட்டை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இரண்டு கோடி ரூபாய் செலவழித்து கூவத்திலுள்ள தண்ணீரைப் பம்ப் பண்ணி, அங்கிருக்கும் தண்ணீரை அகற்றி, சுத்தமான தண்ணீரை மறுபடியும் விட்டு, அங்குள்ள நாற்றத்தைப் போக்கி ஸ்பீட் போட் விடலாம். மாண்புமிகு ஹெல்த் மினிஸ்டர் அவையில் இருந்திருந்தால், நான் பேசுவதைக் கேட்டு கவனித்திருப்பார். கூவத்திலிருந்து வரும் நாற்றம் மிக அதிகமாக இருக்கிறது. அமைச்சர்கள் காரில் வரும்போது, கண்ணாடியால் மூடிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே நாற்றம் தெரியாது. அமைச்சர்கள் எல்லாம் கூட அந்த வழியாகத்தான் வருகிறார்கள். பொதுவாக இந்த கூவம் கெனால் மிகவும் நாற்றமாக, அசுத்தமாக இருக்கிறது. இது அமைக்கப்பட்டு நூற்று சொச்சம் வருஷம்தான் ஆகிறது. 200 மைல் வடக்கேயிருந்து பாண்டிச்சேரி வரை 100 மைல் நீளத்திற்குப் போகிறது. முன்பெல்லாம் பிக்னிக் போக வேண்டுமென்றால், இதில்தான் போவார்கள். அப்போது நாற்றம் இல்லை. இப்போது டிரெயினேஜ் வேறு வந்திருக்கிறது. இந்த நிலையிலும் இதில் நாற்றம் அதிகமாக இருக்கிறது. அப்படி அப்படியே ஓப்பனாக அசுத்தத்தை எல்லாம் கூவத்தில் விடுகிறார்கள். இப்போது கூவத்தில் இருக்கிற வாட்டரை எல்லாம் பம்ப் பண்ணி அகற்றி, வேறு தண்ணீரை விட்டால் நிச்சயம் ஸ்பீட் போட் கூவத்தில் போகும். இரண்டு அல்லது 3 அடி தண்ணீர் விட்டால் போதும். அதில் கூட போட் எல்லாம் போகும். ஏழு அல்லது எட்டு பாலங்கள் கட்ட வேண்டியிருக்கும். அதற்கு 1 அல்லது 1½ கோடி ரூபாய் ஆகும். ஸ்பீட் போட் விடுவதன் மூலம் இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற பஸ் ஆக்ஸிடென்டுகளையும் தவிர்க்கலாம், டிரான்ஸ்போர்ட்டுக்கும் வசதியாயிருக்கும். எல்லா இடங்களிலும் இப்போதெல்லாம் கவர்ன்மென்ட் பஸ்களுக்கு ஆக்ஸிடென்ட் ஏற்படுகிறது. மற்ற பஸ்களுக்கும் அடி பட்டத்தான் செய்கிறது.

THIRU G. SWAMINATHAN: May I get a clarification from the hon. Member? When the Cooum Scheme seems to have failed already, does he think that by pumping sea water inside the Cooum, we will be able to run boats in the Cooum river?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கூவத்தில் வரும் நாற்றத்தைப் போக்க திட்டம் வகுத்து வேலை செய்யப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்றையதினம் அநேகமாக இந்த நாற்றம் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU G. SWAMINATHAN : The date "31st April 1981" is not too far.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** Too far அல்லது Too short என்பது பிரச்சினையல்ல. அதுபற்றிப் பரவாயில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் நல்ல செய்தி சொன்னதற்காக என் சார்பிலும் அவையின் சார்பிலும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். எப்படியும் அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். அவர்களுக்கு இந்த ஊர் நிலைமை பூராவும் என்னை விட அதிகமாகத் தெரியும். ஹெல்த் மினிஸ்டர் கூட இப்போது அவைக்கு வந்து விட்டார். எப்படியாவது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் எல்லாம் இதில் கவனத்தைச் செலுத்தி கூவத்திலிருந்து நாற்றம் வராமல் செய்ய வேண்டும். நல்லமாதிரி கூவத்தில் தண்ணீர் வர திரு. தியாகராஜ செட்டியார் ஒரு கோடி ரூபாயில் ஒரு திட்டம் போட்டார். இப்போது 1 கோடியில் முடியாது. அவர் திட்டம் போட்டு 10 வருடங்கள் ஆகிறது. இப்போது 20 கோடி ரூபாய் வரை ஆகலாம். இதற்குத் தேவைப்படும் பணத்தை டெல்லியிலிருந்து பெறக் கூடாது. வோர்ல்ட் பாங்க் பணத்தைத் தான் கேட்க வேண்டும். இப்போது ரிசர்வ் வங்கியில் பணம் ஏராளம் இருக்கிறது. மற்ற பாங்குகள் கூட ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் கேட்பது கிடையாது. சைபர் போட்டுக்கொண்டே போகலாம். அவ்வளவு பணம் ரிசர்வ் வங்கியில் இருக்கிறது.

அடுத்து, தக்காவிக் கடனை எடுத்துவிட்டார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். மற்றும் பல விவரங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையே நானும் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. அனிமல் ஹஸ்பன்டரி பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். கால்நடைப் பண்ணையை விஸ்தரிக்கவில்லை. இடம் விஸ்தாரமாக இருக்கிறது. கறவை மாடுகள் வில்லேஜுகளில் இருக்கின்றன. ஆனால் அவற்றை நிர்வகிக்க அங்கே சரியான ஆள் இல்லை. முன்பு பள்ளிக்கூடங்களில் அதுபற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள். இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். இப்போது அவற்றை கோழிப் பண்ணையாக மாற்றிவிட்டார்கள். இப்போது அதற்கு ஜூனியர் பி.வி.எஸ்ஸி. (Junior B.V.Sc.) என்று பெயர் வைக்கலாம். இப்போது அதில் தேர்ச்சி பெற்றவர்கள் 10 அல்லது 15 பேர் தான்

இருக்கிறார்கள். அவர்களே வாத்தியார்களாக இருக்கலாம். ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை போன்ற இடங்களில் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உபயோகப்படுத்த வேண்டும். கீ வில்லேஜ் ஸ்கீம் மிக மிக நல்லது. அது ஒன்றும் இல்லாத ஒரு குறை இப்போது இருக்கிறது. அதையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

கடைசியாக, நான் சொல்ல விரும்புவது இண்டஸ்ட்ரீஸ் பற்றியதாகும். இண்டஸ்ட்ரீஸ் லைசென்ஸ் விஷயத்தில் ரொம்ப மெதுவாக இருக்கிறது, இந்த மந்திரிசபை அதனை அதிகமாக கவனிக்க வேண்டுமென்று சொன்னதற்கு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் பேப்பரில் பார்த்தேன். இவ்வளவு லைசென்ஸ் சாங்க்ஷன் ஆகியிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இவ்வளவு வரவேண்டியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் துரிதமாக வரவேண்டும். அப்படி தொழிற்சாலைகள் வருமானால், எவ்வளவோ ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். டவுனில் இருப்பவர்களின் பிள்ளைகள் எல்லாம் வேலைக்குப் போக உபயோகமாக இருக்கும்.

அடுத்து, பாலிடெக்னிக் மிகவும் முக்கியம். பாலிடெக்னிக் இரண்டு விதமாக இருக்கிறது. அன்று முதலமைச்சர் அவர்கள் பாலிடெக்னிக் பற்றிக் குறித்துக் கொண்டார்கள். அப்போது நிதி அமைச்சரும் இல்லை; கல்வி அமைச்சரும் இல்லை. முதலமைச்சர் அவர்கள் குறித்துக் கொண்டதாக நான் நினைத்துக்கொண்டேன். டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் ரொம்ப கெட்டிக்காரர். உடனே பண்ணி விடுவார். சென்ற ஆண்டு 10 சதவிகிதம் அதிகமாக்கி 18 பேர்களைச் சேர்த்துக் கொள்வதாகச் சொன்னார். இப்போதும் அதே பத்து சதவிகிதம்தான் அதிகமாக்குவதாகச் சொல்கிறார். ப்ளஸ் 2 ரிசல்ட் இப்போது தான் வந்திருக்கிறது. ஆனால் இன்னும் மார்க் ஷீட் வரவில்லை. பிள்ளைகள் அப்ளிகேஷன் போட முடியாது. ஏழையாக இருக்கிறவர்கள் எஞ்சினியரிங் காலேஜுக்கு அப்ளிகேஷன் போட நினைக்கக் கூடும். அதற்கு டைம் ஆகிவிட்டது; இனிமேல் அப்ளிகேஷன் போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்ளிகேஷன் போட இன்னும் பத்து நாட்கள் தரவேண்டும். மார்க் ஷீட் வந்த பிறகு பத்து நாட்கள் இருந்தால் தான், ஏழைப் பையன்கள் அப்ளிகேஷன் போட முடியும். ஏழைப் பையன்கள் இரண்டிற்கும் அப்ளிகேஷன் போட முடியாது. இரண்டிற்கும் நானூறு ரூபாய் கொடுக்க அவர்கள் வசதியில்லாதவர்கள் என்பது உறுப்பினர்களுக்கெல்லாம்



தெரியும். எனவே அந்த நேரத்தை நீடித்து இந்த மாதக் கடைசி வரை என்று போட வேண்டும். சௌகரியம் இல்லை என்று இப்போது சொல்கிறார்கள். பாலிடெக்னிக்கில் சேருபவர்களுக்கு உடனே வேலை கிடைக்கிறது. அவர்களுக்கு இடம் அதிகரிக்கப்பட வேண்டும். 150 என்பதை 350 என்று ஆக்காவிட்டாலும், 250 என்று செய்யுங்கள். புது பாலிடெக்னிக்குகளை அடுத்த ஆண்டு அதிகமாக ஆரம்பியுங்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு பாலிடெக்னிக் இருக்க வேண்டும். ஒவ்வொரு யூனியனிலும் பாலிடெக்னிக் இருக்க வேண்டும். வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் இதை ஒழுங்காக நடத்துகிறார்கள். அவர்கள் தனியாக டிரஸ்ட் போன்ற ஏற்பாட்டைச் செய்து இரண்டாயிரத்துச் சொச்சம் பேர் படிக்கிறார்கள். ஆண்டுதோறும் 600 பேர்கள் பாஸ் பண்ணி வெளியே போகிறார்கள். அந்தக் காலத்தில் அவர்களுக்கு 30 ரூபாய் கிடைக்கும். இப்போது 350 ரூபாய் சம்பளம் கிடைக்கும். மூன்றாண்டுகள் படித்துவிட்டு வெளியே போனால் அப்ளிகேஷன் போடாமலேயே வேலை கிடைக்கும். பாலிடெக்னிக்கில் ஒரே பரீட்சை தான். ஜூனியர் பாலிடெக்னிக் படித்துவிட்டு பிறகு சீனியர் பாலிடெக்னிக்கில் சேர்ந்து மூன்றாண்டுகள் படித்து வொர்க்ஷாப்பில் வேலைக்குச் சேர்ந்தால், 600 ரூபாய் சம்பளம் வாங்க முடியும். பிறகு ஏ.எம்.ஐ.ஈ. பாஸ் பண்ண நினைப்பவர்கள் அதையும் செய்யலாம், எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்துவிட்டு மூன்றாண்டுகள் படித்தால் உடனே எல்.எம்.ஈ. கொடுத்துவிடுவார்கள். இதற்கு ரொம்ப கிராக்கி, தனியாகச் செய்பவர்கள் அதிகமாகச் செய்ய முடியாது. ஆயிரம் பேருக்கு இடம் இருந்தால், இருபதாயிரம் பேர் 'அப்ளிகேஷன்' போடுகிறார்கள். எனவே ஜூனியர் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டும். இது சுலபமாக முடியும். முடியாத விஷயம் அல்ல.

அடுத்து, டெக்ஸ்டைல் டெக்னாலஜி எல்லா ஊர்களிலும் ஏற்படுத்த வேண்டும். நான்கு ஊர்களில் ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மில் இருக்கிற இடத்திற்குப் பக்கத்தில் இதைச் செய்ய வேண்டும். மில் இல்லாத இடத்தில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி வைத்தால், பழைய மெஷின்களை வைத்துக்கொண்டுதான் சொல்லிக் கொடுப்பார்கள். அது ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கஷ்டமாக இருக்கும். எனவே மில்களுக்கு அருகே வைத்தால், அடிக்கடி புது மெஷின்களை வாங்குவார்கள்; மாணவர்களும் அதனைக் கற்றுக்கொள்ள உதவியாக இருக்கும். எந்தெந்த பாலிடெக்னிக்கில் செய்ய முடியுமோ அங்கே செய்ய வேண்டும். இந்த ஆண்டே செய்யலாம். ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்தால் கூட சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் சொல்லிக் கொடுத்து அல்லது 'சம்மர் வகேஷனை' சேர்த்துச் சொல்லிக்

கொடுத்தால் செய்து விடலாம். மற்ற அமைச்சர்கள் சொன்ன திட்டங்களையெல்லாம் சேர்த்துத் தான் நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே நிதியமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும், புரட்சித் தலைவர் அவர்கள் இங்கு இல்லை—இருந்தாலும் அவர்கள் 'அப்ரூவ்' செய்த பட்ஜெட்டாகத் தான் இது இருக்கும்—எல்லோரையும் பாராட்டுகிறேன்.

கிட்டத்தட்ட கவர்னர் உரையில் சொன்னதை விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். சிலர் விவரம் இல்லை என்று இப்போது சொன்னார்கள். அதாவது இன்னும் சில விவரம் தேவை என்று சொன்னார்கள். எல்லாம் சொல்வதாக இருந்தால், இப்போது 42 பக்கம் இருப்பது 420 பக்கமாக இருந்திருக்கும். 42 பக்கங்களைப் படிக்கவே ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆயிற்று. நான்கூட நேற்று படித்தால் மறந்து விடும் என்று தான் இதனைப் படித்தேன். குறிப்பு கூட இங்கே வந்து தான் குறித்தேன். எனவே பசுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN : Now, some Policy Notes are coming up here also.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** இந்த அவையில் டிமாண்ட் பை டிமாண்ட் விவாதத்திற்கு வராது. கீழ்ச்சபையில் அப்படி டிமாண்ட் பை டிமாண்ட் வரும். இங்கே வராது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இங்கேயும் இப்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** இங்கேயும் கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்திற்கு வர இருப்பதாகச் சொல்கிறார்கள். ரொம்பவும் சந்தோஷம். புரோசீஜரை மாற்றியதைப்பற்றி சந்தோஷம். அதற்கு ஏற்பாடு செய்ததற்காக தலைவர் அவர்களுக்கு பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் அவையில் உள்ள அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்கள், நிதி அமைச்சர் அவர்கள் பொறுமையாக அங்கேயும் கேட்டு, இங்கேயும் இருப்பதற்கு பாராட்ட வேண்டும். ஏதாவது நான் பேச விட்டுப் போயிருந்தால் டிமாண்டில் விவாதம் வரும்போது, பேசிக்கொள்கிறேன் என்று தெரிவித்து மீண்டும் ஒருமுறை அமைச்சரவையைப் பாராட்டி அமைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உபரி 15.39 கோடி ரூபாய் என்றும், இறுதியிலே உபரி 33 லட்சம் ரூபாய் என்றும்



குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒரு சிறப்பு இருக்கிறது. பொதுவாக யார் நிதி அமைச்சர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் மக்களுடைய பையிலிருந்து பணத்தை எடுப்பதைத் தான் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது நிதிப் பொறுப்பினை ஏற்றுள்ள அமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்களுடைய பைகளிலே பணத்தைப் போடக் கூடிய அளவிற்கு ஒரு முன்னேற்றமான திட்டத்தைத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக நாட்டினுடைய—மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்கும், புதிய பணிகளை மேற்கொள்வதற்கும் சிறப்பான திட்டங்களுக்காக ஏராளமான நிதி தேவைப்படும் என்ற நிலையில் புதிய வரிகளைப் போடாமல் தவிர்த்திருப்பது ஒரு சிறப்பான அம்சம். மேலும் பல சலுகைகளை வழங்கியிருப்பது சிறப்பாக இருக்கிறது.

மேலும் நம் மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற சைக்கிள்கள் பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்போது விதிக்கப்படுகின்ற 4 சதவிகித விற்பனை வரியை ஒரு சதவிகிதம் என்று குறைத்திருப்பது இந்த சைக்கிள் விற்பனை, உற்பத்தி பிற மாநிலங்களோடு போட்டியிட, சிறப்பாக அண்டையிலுள்ள கர்நாடக மாநிலத்தோடு போட்டியிட, வழி செய்து அதன்மூலம் நம் மாநிலத்திற்கு நன்மையைப் பெருக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. மாநிலத்தில் உள்ள மக்களைப் பொறுத்தவரையில், சாதாரணமாக உள்ள மக்களுக்கு ஒரு வாகனமாக அமைந்திருக்கக் கூடிய சைக்கிளுக்கு 6 விழுக்காடு வரியாக இருந்ததை 3 விழுக்காடாக ஆக்கியிருப்பது ஒரு சிறப்பு அம்சம். பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றியிருப்பதும், குறிப்பாக கைத்தொழிலாக, குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகின்ற அரிக்கன் விளக்கு போன்ற மூன்று விதமான பொருள்களுக்கு முழுமையாக வரி விலக்கு கொடுத்திருப்பதும் பாராட்டுக்குரிய அம்சமாகும். அதேசமயத்தில் நலிந்த மக்களுக்கு, நம்முடைய மாநிலத்தில் உள்ள மக்களுக்கு அதுவும் முதியோர், கண்ணொளியற்றோர், அனாதைகள், விதவைகள் போன்றவர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவும் திட்டம் சிறப்பாக அமைந்திருக்கிறது.

(பிற்பகல் 5-10)

அதோடு, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு உதவியாக வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதும் பாராட்டிற்குரியதாகும். இதற்கும் மேலாக, பட்டினியால் சாகக் கூடிய நிலையில் இருப்பவர்கள் கிராம வளர்ச்சி அலுவலரிடம் சென்று தம்

நிலையை எடுத்துக்கூறி, தமது பெயரைப் பதிவு செய்து கொண்டு ரூ. 100 உதவி பெறுவதற்கும், வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றவும் வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதற்காகவும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறத்தக்க நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவி அளிப்பது என்பதும் சிறந்த திட்டமாகும்.

நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களைக் கைகொடுத்துத் தூக்கத் தக்க வகையில் ஏராளமான நிதியொதுக்கீடு செய்திருப்பதும் பாராட்டுக்குரியதாக இருந்தாலும், இந்த நிதியொதுக்கீட்டின் நோக்கம் நிறைவேறிட, இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியானாலும், உணவுப் பொருள்களானாலும், உடைகளானாலும் அவைகளனைத்தும் அந்தந்த மக்களுக்கு, ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டிய காலத்தில், கால தாமதம் எதுமில்லாமல், இழப்பு ஏதும் ஏற்படாதவாறு சென்று சேர்ந்திட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தக்க கண்காணிப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் வேளாண்மை வளர்ச்சியைப் பொறுத்தே அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்பதை நாமெல்லாம் நன்கு அறிவோம். அந்த வகையில் இந்த ஆண்டு 5.28 லட்சம் டன் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் வகையில் முன்னேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். எவ்வளவுதான் நிலம் சிறப்பாக இருந்தாலும், நீர் வளம் அமைந்திருந்தாலும், உர வசதி இருந்தாலும், நல்ல விதைகள் வழங்கப்படாவிட்டால், விளைவு சரியாக இருக்காது என்பதை உணர்ந்து அதனடிப்படையில் நெல், பருத்தி எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க நல்ல தரமான விதைகள் தயாரிக்க அதிகமான நிதி ஒதுக்கியிருப்பதும், சிறப்பு விதைப் பண்ணைகளை அமைத்திருப்பதும் பாராட்டிற்குரியனவாகும்.

அதோடு 54 லட்சம் ரூபாய் செலவில் தென்னை உற்பத்தியை அதிகரிக்க என்று எட்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைத்து அவைகளின் மூலம் 31 லட்சம் நாற்றுக்களை உற்பத்தி செய்து மாநிலத்தில் பல பகுதிகளுக்கும் வழங்க இருப்பது மிகவும் வரவேற்கத் தக்க அம்சமாகும். எடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது அகில இந்திய அடிப்படையில் நகர்ப்புறங்களில் எவ்வளவு விவசாயிகள் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள் என்றால், 41.32 விழுக்காடு என்றும், நகர்புறங்



களல்லாத கிராமப்புறங்களில் வாழக் கூடிய விவசாயிகள் 54.09 விழுக்காடு அளவுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் , என்றும் தெரிய வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் நகர்ப் புறங்களில் வாழ்கிற விவசாயிகளில் 52 விழுக்காடு அளவுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், 63 விழுக்காடு அளவுக்கு விவசாயிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே அரசு வெகு அக்கறையோடும், மிகுந்த இரக்கச் சிந்தனையோடும் விவசாயிகளின் பிரச்சினைகளை அணுக வேண்டியிருக்கிறது. சமீபத்தில்கூட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தப் போவதாகச் செய்திகளிலே பார்த்தோம். இந்த விவசாயிகளின் பிரச்சினையை மிகவும் கனிவுடன் அரசு அணுகி, 1979 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 40 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களின் கடனை ரத்து செய்ததையும், அண்மையில் விவசாயிகள் பெற்ற தக்காவிக் கடன் வகையில் சுமார் 16 கோடி ரூபாய் அளவுக்குக் கடனை ரத்து செய்ததையும், அதோடு மட்டுமல்லாமல் கூட்டுறவுக் கடன்களில் சுமார் 42 கோடி ரூபாய் அளவுக்கு ரத்து செய்ததையும் ஆக மொத்தம் ஏறக்குறைய 58 அல்லது 60 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் கடன் தொகையை ரத்து செய்திருப்பதையும் பார்க்கும்போது, இது ஒரு வரவேற்கத் தக்க அம்சம் என்பதைச் சொல்லியாக வேண்டும். மகாராட்டிர மாநிலத்தில் சிறு விவசாயிகளின் கடன் சுமார் 49 கோடி ரூபாய் அளவுக்கு ரத்து செய்யப் பட்டிருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அந்த அரசு இவ்வாறு 49 கோடி ரூபாய் கடனை ரத்து செய்ததன் காரணமாக சுமார் 8 லட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள் என்றும் அந்தச் செய்தியில் பார்த்தேன். அதுமட்டுமல்ல, அங்கேயுள்ள நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிச் சுமை அவ்வளவையும் மத்திய அரசிடமிருந்து பெற்றாக வேண்டும் என்று மத்திய அரசின் நிதியமைச்சர் அவர்களையும் ரிசர்வ் பேங்க் அதிகாரிகளையும் சந்தித்து இந்த நிதியை ஈடுகட்டும் முயற்சியை மேற்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நமது மாநில முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் டெல்லியை வற்புறுத்த வேண்டும் என்றும், டெல்லிக்குச் சென்று அவர்களையெல்லாம் சந்தித்து, வாதாடி இந்த 60 கோடி ரூபாயையும் தமிழகத்திற்குப் பெற்றாக வேண்டும் என்றும் பணிவோடு என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் பிரச்சினை என்பது இன்று நேற்றல்ல, தொடர்ந்து இருந்து வரும் ஒன்றாகும். வருங்காலத்திலும் அது தொடர்ந்து இருக்கும். விவசாயிகள் இவ்வாறு கடன் பிரச்சினைகளுக்கும் மற்ற பிரச்சினைகளுக்கும்,

தொல்லைகளுக்கும் ஆளாகிறபோது, பேரணி போன்றவைகளை நடத்திடும் சூழ்நிலை உருவாகி ஒரு சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும் விவசாயிகள் பிரச்சினையில் நிரந்தரமான பரிகாரம் தேடியாக வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு ஆண்டும் கொடுத்த கடன்களை ரத்து செய்யும் நிலை ஏற்படும். விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதோடு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் அதிகமான இழப்பு ஏற்படாமல், வட்டி, வரி போன்ற இனங்களில் எந்த அளவுக்குச் சலுகைகளை வழங்க முடியுமோ அந்த அளவுக்கு அரசு அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதிகளைப் பொறுத்தவரை, பல்வேறு புதிய திட்டங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம், சாத்தனூர், பாம்பாறு குண்டாறு வேம்பக்கோட்டை போன்ற பல்வேறு திட்டங்கள் திட்டப்பட் டிருந்தாலும் ஒரு கருத்தை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக் கிறேன். சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, தமிழகம் அண்டை மாநிலமான கேரளத்தோடு பேச்சு வார்த்தை நடத்து வதாகவும், அங்கேயுள்ள வீணாகும் தண்ணீரைத் தமிழகத்திற்குப் பெறுவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சொல்லப்பட்டது. கேரள மாநிலத்தில் உள்ள பல ஆறுகள் மேற்குக் கடலில் சென்று வீணாவதைத் தடுத்து அவற்றின் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது என்று அப்போது அமைச் சரவையிலும் முடிவு செய்யப்பட்டு அது இந்த மன்றத்திலும் அறிவிக்கப்பட்டது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய 4 மாதங்களில் கேரளத்தில் மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகும் ஆறுகளில் மழை காரணமாகத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி, அதில் 85 விழுக்காடு வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. அந்தப் பகுதிகள் செங்குத்தாக இருப்பதாலும், ஆறுகளின் அகலம் குறைவாக இருப்பதாலும், நிலப் பரப்பு அங்கே அதிகமாக இல்லாத காரணத் தாலும், அங்கெல்லாம் அணைகளைக் கட்டி அந்தத் தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்த முடியாத நிலையில் கேரளம் இருந்து வருகிறது. அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பினால், நல்ல பலன் கிடைக்கும் என்று அந்த மாநிலத்தில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ஒருவர் கருத்து தெரிவித்திருக்கிறார். அவ்வாறு மலைகளைக் குடைந்து தண்ணீர் கொண்டு வந்தால், அதன் மூலம் தமிழகத்தில் 54 லட்சம் ஏக்கர் நிலத்தில் புதிதாகப் பயிரிட முடியும். 54 லட்சம் ஏக்கர் என்னும்போது, அதன் மூலம் கோவை, முகவை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் ஏராளமான நீரைப் பெற முடியும். அது மட்டுமல்ல, கேரள மாநிலத்திற்குத் தேவையான உணவுப் பொருளையும் தமிழகம் கொடுக்க முடியும். மலைகளைக்





குடைந்து தண்ணீரைக் கொண்டு வரும்போது, தமிழகத்தின் பகுதிகளில் ஏராளமான அணைக்கட்டுகளைக் கட்டி அதன் மூலம் மின் நிலையங்களை அமைக்கும் வாய்ப்பு இருப்பதால், அரசு அதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்களும், பாசனத் துறைச் செயலாளர் களும் டெல்லியில் கூடி ஒரு மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள். அந்த மாநாட்டில் அகில இந்திய அடிப்படையில் எவ்வாறு பாசனத் திட்டங்களைச் சிறப்பாக அமைக்கலாம், அணைக்கட்டுகளை எவ்வாறு கட்டலாம், நீர் மின் நிலையங்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவுகளை மேற்கொண்டு, அதற்கு சுமார் 18,000 கோடி ரூபாய் பணம் தேவைப்படும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தப் பணத்தை எவ்வாறு பெறுவது என்பது பற்றியும் அவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அதற்குச் சில வல்லுநர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை உருப்படியாகச் செயல்படுத்த வேண்டுமென்றால், இந்தியாவி லுள்ள அனைத்து நதி நீர் வளத்தையும் ஒன்றாக இணைத்தாக வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்கள். அகில இந்திய அடிப்படையில் அதைச் செயல்படுத்த முடியாது என்று சொன்னாலும், தென் மாநிலங்களில் உள்ள வர்கள் கூடிக் கலந்து ஆலோசித்து இதற்கான வழிவகைகளைக் காணலாம். குறைந்த பட்சம் அண்டையில் உள்ள கேரள மாநிலத்தோடாவது நாம் பேச்சு வார்த்தை நடத்தி கேரளத்தில் வீணாகப்போகும் நீரைத் தமிழகத்திற்குப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் அடிப்படையில் சென்ற ஆண்டேகூட நமது மாநிலத்தில் அதிகமான உதவி ஏழை எளிய மக்களுக்கு வழங்கப் பட்டது. இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு தனது நிதிநிலை அறிக்கை யிலே ரூபாய் 340 கோடி பணத்தை ஒதுக்கியிருப்பதாகவும், ஒவ்வொரு வீட்டி லும் வயது வந்த ஒருவருக்காவது வேலை கிடைக்கச் செய்ய திட்டமிருப்ப தாகவும் அறிகிறோம். தமிழகத்திலும் அந்த முறையில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசு ஒதுக்கியுள்ள ரூ. 340 கோடியில் எவ்வளவு அதிகமாக தமிழகத்திற்கு நாம் வாங்க முடியுமோ அந்த அளவுக்கு நமது பங்கைப் பெறுவதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1980 ஜூலை 4

மின் உற்பத்திக்காக வரும் ஆண்டில் 155.76 கோடி ரூபாய் செலவிட இருப்பதாகவும் அதில் அரசு நிதியிலிருந்து ரூ. 75 கோடி அளிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப் பட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும். மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நமது மாநிலம் மட்டுமல்ல, அநேகமாக எல்லா மாநிலங்களிலும் பற்றாக்குறை இருந்து வருகிறது. இந்த நிலையில் ஒரு புதிய திருப்பம் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இனி நாம் அணு மின் நிலையங்களைத் தான் நம்ப வேண்டியிருக்கிறது என்ற நிலையில் இருக்கிறோம். அமெரிக்காவின் ஜனாதிபதி கார்ட்டர் இந்த வகையில் என்ன கருத்து சொல்லியிருக்கிறார் என்றால், அணு மின் நிலையங்களை அகற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். காரணம் அவற்றின் ரேடியேஷன் எஃபெக்ட் மனித வர்க்கத்திற்கே ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழகத்தைப் பொறுத்த வரையில் கல்பாக்கம் அணு மின் நிலையம் பல ஆண்டுகளாக முடிக்கப்படாத நிலையில் இருப்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது.

(பிற்பகல் 5-20)

அதே சமயத்தில் நம்முடைய மாநிலம் கடல் நீரிலிருந்து நீரின் வெப்பத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சாரம் தயாரிக்க ஆய்வு நடத்தி வருவது வரவேற்கத்தக்கதாகும். இதைப்பற்றி சென்ற முறைகூட பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். ஃபிரான்ஸ் நாட்டிலே இந்தத் திட்டம் வெற்றி பெற்றதாக பத்திரிகையிலே பார்த்தோம். ஏறத்தாழ ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையோரத்தைப் பெற்றுள்ள தமிழகத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றினால், நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற பல மாநிலங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுக்கக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே இத்திட்டம் "பரிசீலனையில் இருக்கிறது" என்ற நிலைமை இல்லாமல் உடனடியாக இத்திட்டத்தைச் செய்து முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போடக் கூடிய பல திட்டங்களை நிறைவேற்றுவதில் நம்முடைய மாநிலத்தில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், நிர்வாகச் சிக்கல்கள், நிர்வாக இடர்பாடுகள் என்று கருதுகிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில், விரைவிலே ஒரு முடிவுக்கு வர சில அதிகாரிகள் அஞ்சுவதாகக் கேள்விப்படுகிறேன். திடமான முடிவு எடுத்த பிறகு அது தவறு என்ற நிலை உருவாகும்போது, அந்த முடிவை எடுத்த அதிகாரியினுடைய ஓய்வூதியத்தை நிறுத்திவிடக் கூடிய நிலை அத்துறையில் இருப்பதால், பல அதிகாரிகள் முடி-



1980 ஜூலை 4] [திரு. பா. ரா. தாமஸ்]

வெடுக்க அஞ்சுகிறார்கள். ஆகவே ஓய்வூதியத்தைத் தடை செய்யாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கேற்ப சட்ட திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில், பல மாநிலங்களில் போதுமான அளவு உற்பத்தியாகவில்லையென்று கூறிக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட குறைவு ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றால், மின்சாரத் துறை அதிகாரிகள், அதிலும் குறிப்பாக தீர்மானம் எடுக்க வேண்டிய அதிகாரிகள் தவறு செய்தால், அவர்கள் மீது வேண்டுமானால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம், ஆனால் ஓய்வூதியத்தைத் தடை செய்யக் கூடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். ஓய்வூதியத்தைத் தடை செய்வதால் பல ஆண்டுகள் பணியாற்றிய அதிகாரிகளுடைய நிலை மிகவும் கேவலத்திற்குரியதாகவும், வேதனைப்படக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய ஓய்வூதியம் பாதிக்கப்படாமல் இருந்தால், நிச்சயமாக அந்த அதிகாரிகள் சிறந்த முறையில் முடிவெடுத்து, செயல்படுத்தி வெற்றி பெற முடியுமென்று நான் கருதுகிறேன்.

மேல்நிலைக் கல்வியைப் பொறுத்த வரையில், 1,242 பள்ளிகள் இந்த ஆண்டு செயல்பட ஆரம்பிக்கும் என்பதும், நடப்பாண்டில் 150 பள்ளிகளில் மேல்நிலைப் பிரிவுகளைத் துவக்க அனுமதி அளித்திருப்பதும், அறிவியல் கருவிகளை வழங்குவதற்காகவும், நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் தருவதற்காகவும் 3.3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

முதல் வகுப்பில் சேர்ந்த 100 மாணவர்களில் ஐந்தாம் வகுப்புவரை படிக்காமல் இடையில் நின்றுவிட்டவர்களின் எண்ணிக்கை 51 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காட்டிற்குக் குறைந்திருக்கிறதென்றால், முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை தேர்வில் நிறுத்தக் கூடாது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டமும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பதற்காக கல்வியமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆகவே பள்ளியிலிருந்து நிற்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 18 விழுக்காடு அதிகரித்திருக்கிறது. அப்படியென்றால் அதற்கேற்ப பள்ளிக்கூடங்கள், சாதனங்கள், வசதிகள், ஆசிரியர்களின் எண்ணிக்கை, கட்டிடங்கள் ஆகியவைகளையும் அதிகரிக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2,800 ஆசிரியர் பணியிடங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 60, 70 மாணவர்கள் என்றிருந்தால், கல்வியின் தரம் பாதிக்கப்படும் என்பதால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பணியிடங்களை

அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் 18 விழுக்காடு மாணவர்கள் பள்ளியிலே கல்வி கற்க வாய்ப்பு அளிக்கும்போது, அதற்கேற்ப ஆசிரியர் பணியிடங்களையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முறைசாராக் கல்வியைப் பொறுத்த வரையிலே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கூடுதலாக இரண்டு கல்வி மையங்களையும், உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் மொத்தம் 600 பள்ளிகளில் பெற்றோர் சங்கங்கள் வாயிலாக 600 மையங்களையும் நடத்த நிதி ஒதுக்கீடு செய்திருப்பது நல்லது. கிராமப்புறங்களில் சென்று பார்க்கும்போது, அவர்கள் எவ்வளவு ஆர்வத்தோடு கற்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவே இந்தத் திட்டத்தை அதிகமாக ஊக்குவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தொழிற் கல்வியைப் பொறுத்த வரையில், படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போவதால், பாலிடெக்னிக்குகளிலும், என்ஜினியரிங் கல்லூரிகளிலும் இட நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே இட வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளின் பொருட்டு இதே அரசு கலைக்கப்படுவதற்கு முன்னால் ஒரு நபர் குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரை இன்று வரை வந்து சேராததால், ஆசிரியர் பெருமக்களும், அலுவலர்களும் வேதனையும், வருத்தமும் படுகிறார்கள். நிதிநிலை அறிக்கையிலாவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதைப்பற்றிச் சுட்டிக்காட்டுவார்கள் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் ஒன்றையும் காணோம். ஆகவே இது குறித்து விரைவிலே ஏதாவதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் சார்பிலும், அலுவலர்கள் சார்பிலும் வேண்டிக்கொள்கிறேன்.

கிராமப் புறத்திலே பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படியும், கிராம ஈட்டுப் படியும், நகரத்தில் உள்ளவர்களுக்கு வழங்கும் அளவிற்கு வழங்கப்படவில்லை. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் பல உறுப்பினர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கிராம ஊக்கப் படி ரூ. 10 ஐ எல்லோருக்கும் வழங்கினார்கள். அதற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறத்தில் ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோர் வாழ சரியான வீடுகள் இல்லை. ஆகவே அவர்களுக்கு ஏன் வீட்டு வாடகைப் படி வழங்கக் கூடாது? ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சில மூலை முடுக்குகளில் எல்லாம், வசதியில்லாத ஊர்களில் எல்லாம் வாழ்கிறார்கள். வசதி பெற்ற சிலர் நகர்ப்புறத்



திலேயே இருந்துகொண்டு வீட்டு வாடகைப் படியை வாங்கிக்கொள்கிறார்கள் ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு பங்கு கிராம ஈட்டுப் படியைக் கொடுத்தால், நகர்புறத்தில் உள்ள மக்கள் கிராமப்புறத்திற்கு வருவார்கள். கிராமப்புறத்திலேயே அவர்கள் தொடர்ந்து பணியாற்றும் நிலை ஏற்படும். அதனால் கல்வியின் தரமும் மேலும் உயரும். கிராம ஈட்டுப்படி 10 ரூபாய் என்பதை விட்டுவிட்டு நகர் புறத்தில் உள்ளவர்களுக்கு வழங்குவதைப் போலவே கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அகவிலைப்படியை மத்திய அரசினுடைய அளவிற்கு மாநில அரசு அளிக்காமல் இருப்பது வேதனைக்குரியது. இனிமேலாவது அறிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

தனியார் பள்ளிகளில் உள்ள குற்றேவலர்களின் பணி இன்னும் வரன்முறை படுத்தப்படாமல் இருக்கிறது. 'ஏ' பிரிவிலும், 'பி' பிரிவிலும் உள்ள குற்றேவலர்கள் டைம் ஸ்கேலில் வந்துவிட்டார்கள். ஆனால் தனியார் பள்ளியில் பணியாற்றும் வாட்ச்மென், ஸ்வீப்பர், வாட்டர்மென் போன்ற குற்றேவலர்களுடைய அடிப்படை ஊதியம் 18 ரூபாய் என்ற அளவிலேயே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். "பதவி உயர்வு" என்ற வாசகம் கொடுக்காத காரணத்தாலே எஃப். ஆர். 22-பி அமல்படுத்தப்படாமல், ஊதிய உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். இவ்விதியை அமல்படுத்தி அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு அரசு மானியம் 40 விழுக்காடு என்றும் பள்ளி நிர்வாகம் 60 விழுக்காடு என்றும் இருக்கிறது. இதிலே பெருந்தொல்லைகள் இருக்கின்றன. தனியார் பள்ளி ஆசிரியர்கள் நன்கொடை வசூலிக்க வேண்டும். நிர்வாகம் நன்கொடை வசூலிக்க வேண்டும். ஆனால் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி நன்கொடை வசூலிக்கக் கூடாதென்று கல்வியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே நிதி திரட்டுவதில் பெருந்தொல்லைகள் இருப்பதால், குறைந்தது 50 விழுக்காடு அரசு மானியம் வழங்க வேண்டும். தொழில் கல்வி துவக்கப்படும் போது, 50 சதவீதம் மானியத்தை அரசு வழங்குவதைப் போல, மேல்நிலைக் கல்விப் பள்ளிக்கு வழங்கும் அரசு மானியத்தை 50 சதவீதமாக மாற்றியமைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1980 ஜூலை 4

அடுத்து, அறிவியல் கருவிகளின் தேவை அதிகமாகிவிட்டது. நமக்குத் தேவைப்படும் அறிவியல் கருவிகளை பிற மாநிலங்களிலிருந்துதான் தருவிக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயே இவற்றை உற்பத்தி செய்யும் முறையை ஏற்படுத்தவில்லை. சிட்கோ நிறுவனம் நம்முடைய மாநிலத்திலேயே அறிவியல் கருவிகளை உற்பத்தி செய்தால், நிச்சயமாக தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். அப்படிச் செய்தால், ஏராளமான மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகளை நேரிடையாகக் கொடுக்கலாம் என்ற கருத்தைக் கூறி, சிட்கோ நிறுவனம் இந்த முயற்சியில் ஈடுபட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் பி.டி. பயிற்சி பெற்ற இன்டக்டெட் ஆசிரியர்கள் கடந்த இரண்டாண்டு காலமாக 25 ரூபாயைப் பெற்றுக்கொண்டு நல்ல தேர்வு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. பாராட்டு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், மாதம் 50 ரூபாய் அளிக்கப்படும் என்றும் அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் வரை பணியாற்றியவர்கள் அவர்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், சென்ற முறை, அவர்களுக்குச் சிறப்பான பயிற்சி கொடுத்து, சான்றிதழ் கொடுத்து "தகுதியற்றவர்கள்" (அன்குவாலிஃபைட்) என்ற பதத்தை நீக்கிவிடுவோம் என்று சொன்னார்கள், ஆனால் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

உயர்நிலைப் பள்ளிகளில் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு மாற்றத்தைச் செய்ய வேண்டும். அது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் ஆதரவு இல்லாது நடைபெறாது. எட்டாம் வகுப்பு பாடத்திட்டத்தின் தரம் மிகவும் உயர்வாக இருக்கிறது. எட்டாவது வகுப்பை இப்போது உயர்நிலைப் பள்ளியிலே இணைக்கவில்லை. அங்கு பி.டி. பட்டம் பெற்ற, மேற்படிப்பு படித்த பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணி தரப்பட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இந்த எட்டாம் வகுப்பு பாடத்திட்டம் சிறப்பாகச் செயல்படும் ஒரு நல்ல திட்டமாக இருக்க வேண்டும். 8, 9, 10 என்ற மூன்று வகுப்புகளையும் உயர்நிலைப் பள்ளியிலே இணைக்க வேண்டும். 6, 7 வகுப்புகளை நடுநிலையில் இணைக்க வேண்டும். எட்டாம் வகுப்பை ஒன்பதாம் பத்தாம் வகுப்புகளோடு இணைக்கவேண்டும்.



1980 ஜூலை 4] [திரு. பா. ரா. தாமஸ்]

முக்கியமாக கல்வியினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்றால். இந்த எட்டாம் வகுப்பை உயர்நிலைப் பள்ளியிலே இணைத்தால், அதற்கு வேண்டிய பணியிடங்களுக்கு நிதித் துறை ஒப்புதல் அளித்தால், முக்கியமாக, எட்டாம் வகுப்பு அடிப்படைக் கல்வி சிறப்பாக அமையும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பணிப் பாதுகாப்புபற்றிச் சொல்ல விரும்புகிறேன். பணிப் பாதுகாப்பைப் பொறுத்த வரையிலே, நம்முடைய மாநிலத்திலேயே அரசு 25 விழுக்காடு பணத்தை ஒரு ஆண்டுக்கு ஒதுக்குகின்ற நிலை இருந்தும்கூட, பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணிப் பாதுகாப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. பாலிடெக்னிக்குகள் என்று எடுத்துக்கொண்டால், ஏறக்குறைய 19 தனியார் பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. எத்தனையோ சோதனையான கட்டத்தை சென்ற ஆண்டு நாம் பார்த்தோம். பல பாலிடெக்னிக்குகளிலே ஆசிரியர் பணியிலிருந்து வெளியேற்றப்பட்டு, உள்ளே விடப்படாமல் 2, 3 மாதங்கள் வெளியே நிற்கும் நிலை ஏற்பட்டது. அதிலே தனியார் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த அளவிலே, சட்டத்திலே புதிதாக பாதுகாப்புச் சட்டத்தினைக் கொண்டுவர வேண்டும். தனியார் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த அளவிலே அது சிறுபான்மையினர் பள்ளிகளாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையினர் பள்ளிகளாக இருந்தாலும் சரி, பாதுகாப்புச் சட்டத்தின்படி அங்கே வைக்கப்படாவிட்டால் ஆசிரியர்கள் முழுமையாக, வரிப்பணத்திலிருந்து பெறுகின்ற ஊதியத்தைப் பெறும்போது மிக அவதிக்குள்ளாகிறார்கள். அண்மையிலேகூட சிவகாசிக்கு அருகிலேயுள்ள வேளம்பாடி பள்ளியிலே எங்களுடைய தமிழ்நாடு பட்டதாரிகள் கழகத்திற்குப் பொறுப்பாளராகவுள்ள திரு. காசி என்பவர் இரவு நேரத்தில் சரியாக மேற்பார்வை செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அவரைப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். அவருக்கு முன்னுரிமை கொடுத்து முதல் ஆசிரியராக இருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும்கூட, அவருக்கு அச்சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அவருக்கு இந்தச் சலுகை மறுக்கப்பட்டு, அவர் அந்தப் பணியை மட்டும் ஆற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர் 'சலுகை கொடுத்தால் அந்தப் பணியை ஆற்றுகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான நிலைமைகளையெல்லாம் நாம் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக அரசுத் துறையிலேயிருக்கின்ற கல்வித் துறை இந்தப் பணி பாதுகாப்புப் பிரச்சினையை அணுகும்போது உள்ள முறை மாற வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணி நீக்கப்

பிரச்சினைக்குத் தீர்வு காண அரசை அணுகும்போது, அதிகாரிகள் அதை கவனிக்காமல் விட்டுவிடுகிறார்கள். முக்கியமாக ஆசிரியர்களுக்கு இனி பணி நீக்கம் இருக்காது. அநியாயமாக அவர்கள் பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன். என் கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தினை வெளியிடுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு நான் என் பேச்சைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை தமிழாய்ந்த தலைமகன்களில் ஒருவராக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் தயாரித்து இங்கே அளித்திருக்கிறார்கள். வள்ளுவரிலே தொடங்கி அண்ணாவிலே முடிக்கின்றவகையிலே அந்த அறிக்கையைத் தயாரித்தளித்திருக்கிறார்கள். தமிழ் மணம் கமழ்கிறது. அந்த வகையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும்-காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற குறளிலேயே தொடங்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில்

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற குறளினையும் நான் எண்ணிப்பார்க்கின்ற நேரத்திலே, இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய வரிகள் இல்லை, உபரி நிதிநிலை, விவசாயக் கடனிலே ஏறக்குறைய 60 கோடி ரூபாய்க்குக் கடன் ரத்து, மிதிவண்டி விற்பனை வரியினை 6 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைப்பு, மின்சார உற்பத்திக்கு முதலிடம், 1,500 பேர்கள் கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், 1800 புது பேருந்துகள், 150 மேல்நிலைப் பள்ளிகள் புதிய பாலிடெக்னிக்குகள் இவ்வாறு பல்வேறு நலன்களையெல்லாம், செய்ய வேண்டியவைகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாம் முன்னொருகாலத்தில் கல்வியமைச்சராக இருந்தார்கள் என்பதையே மறந்துவிட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கை



யிலே எல்லாவற்றுக்கும் தம்மாலானதைச் செய்திருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கே காவலனாக இருந்த அவர்கள் ஆசிரியர்கள் சமுதாயத்தை மறந்துவிட்டார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது, அது பற்றி

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற குறளை இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதை வருத்தத்தோடுதான் சொல்கிறேன். அரசு அலுவலர்கள் நலன் என்ற ஒரு தலைப்புக்கூட வந்திருக்கிறது. ஆனால் 2½ இலட்சம் ஆசிரியப் பெருமக்களுக்கென ஒரு தலைப்பு இல்லை. தலைப்பு இல்லாதது மட்டுமல்ல, அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புதிதாக எதுவும் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே சென்னையிலே வீடுகட்ட நிதி வழங்கப்பட்டு வந்தது. இதேபோல் மாவட்டத் தலைநகரங்களிலேயும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வீடு கட்டும் திட்டம்கூட இந்த ஆசிரியப் பெருமக்களுக்கு இல்லையே என்பதை எண்ணிப் பார்த்து, அதையாவது செயல்படுத்தியிருக்கலாம் என்று நான் சொல்வதுகூட நியாயமானது என்று அமைச்சர் அவர்கள் உள்ளுணர்விலே உணர்வார்கள் என்று நம்புகிறேன். ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது ? 2,800 ஆசிரியர்களுக்குப் புதிய வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டிலே முப்பத்தைந்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். சென்ற ஆண்டுகூட ஏழாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால் இன்று 2,800 ஆசிரியர்களுக்குத் தான் புதிய வேலை வாய்ப்பு என்பது கடலிலே கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது 2,800 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அதுகூட புதிதாக அவர்கள் வேலைக்கு வரப்போகிறார்களே தவிர பழையவர்களுக்கு எதுவுமில்லை. நிதிநிலை அறிக்கையென்று வருகின்றபோதெல்லாம், கடந்த காலத்தில், ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் ஏதேனும் ஒரு வகையில் அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு என்று ஏதேனும் சிறுதொகையாவது ஒதுக்கித் தந்திருக்கின்றதைப் பார்க்கலாம். ஆனால் சென்ற முறையும் அது புறக்கணிக்கப்பட்டு, இந்த முறையும் அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இது அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை அரசு பொருட்படுத்துவதாக, மதிப்பதாக இல்லை என்று பலர் நினைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அகவிலை உயர்வைப்பற்றி எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு அகவிலைப்படி அளித்த பின்னாலே மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகள் வைத்து

கூக்குரல் எழுப்பி, மெமொராண்டம் வைத்து, பேட்டி கண்டு பேசி, அதற்குப் பிறகும் எதுவும் நடைபெறவில்லையென்று சொன்னால், எதிர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்து, போராடியதற்குப் பின்னாலே 4 மாதம் கழித்து ஏதாவது செய்வார்கள். அதுவும் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் தரமாட்டார்கள். அகவிலைப் படியில் 1—4—1979-ல் தரவேண்டிய அரியர்ஸ் வேறு இருக்கிறது. 1—5—1980-ல் அகவிலைப்படிக்கு 360-க்கு வாழ்க்கைப் புள்ளி உயர்ந்துவிட்ட நிலைமையிலே இருக்கிறது. இப்போது அதைத் தரவேண்டிய நிலை. அதைத் தந்திருந்தால், தருவதாக அறிவித்திருந்தால், இன்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சமுதாயம் பெருமைப்பட்டிருக்கும், அதைப் பாராட்டியிருக்கும்.

இந்த நிலையிலே மற்றொன்றையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களாக அவர்களை ஆக்குவதற்கு ஏறத்தாழ 19 கோடி ரூபாய் செலவாகும் என்று நான் விசாரித்த அளவிலே எனக்குத் தெரிந்த ஒன்றாக இருக்கிறது. ஆனால் அதற்கான ஒதுக்கம் எதுவும் இந்த அறிக்கையில் செய்யப்படவில்லை. அது மட்டுமல்ல. ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கொள்கை இதிலே நிறைவேற்றப்படவில்லை என்பதைப் பார்க்கிறபோது, இது தட்டிக்கழிப்பதாக இருக்குமோ அல்லது தேர்தலுக்காகச் செய்யப்பட்ட விளம்பரமாக இருக்குமோ என்ற ஐயப்பாடு எழ இடம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவன் ஆவேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்று கூறியுள்ளதால், அதை மீண்டும் நிதிநிலை அறிக்கையில் கூறி, 'கூறியது கூறல்' என்ற குற்றத்திற்கு ஆளாக வேண்டாமென்றுதான் அது விடப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கையை அரசு ஏற்றுக்கொள்கிறது. இப்போது அதற்கான செலவை திட்டவட்டமாகக் கணக்கிடுவதற்கில்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள் என்பது திட்டவட்டமான, தெளிவான ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது அரசு கிட்டத்தட்ட 100-க்கு 90 பங்கு செலவை ஏற்றுக்கொண்டிருக்கிறது. மீதமுள்ள 10 பங்கை நாமே ஏற்றுக்கொள்வதா அல்லது ஊராட்சி ஒன்றியங்களே செலவிடுவதா, அந்த ஆயத்த அடிப்படை-



களை நாம் எடுத்துக்கொள்வதா, அவர்களிடமே விட்டுவிடுவதா, எந்தெந்தப் பொறுப்புக்களை அவர்களிடம் விடுவது என்பதைப்பற்றியெல்லாம் முடிவெடுக்க வேண்டும். அந்த ஆசிரியர்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்றாலும், பள்ளிக் கட்டிடங்கள், இடவசதிகள், மற்ற நிர்வாகப் பொறுப்புக்கள் ஆகியவற்றையெல்லாம் அவர்களிடம் விட்டுவிடுவதா அல்லது அரசு எடுத்துக் கொள்வதா என்ற பிரச்சினைகள் இருப்பதால், அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர்கள், அரசு ஊழியர்களைப்பற்றி கவனிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவ்வப்போது அரசு கவனித்துக்கொள்கிறது. சில ஆண்டவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை திருவிழா நடக்கும். ஆனால் சில ஆண்டவர்களுக்கு மாதந்தோறும் திருவிழாக்கள் நடைபெறும். அதுபோன்று நாம் அவ்வப்போது, தேவைப்படும்போது, அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் கவனிக்கிறோம். மற்றவர்களைப் பார்க்கின்றபோது, ஆண்டுக்கு ஒருமுறைதான், நிதிநிலை அறிக்கையில்தான் கவனிக்கப்படுகின்றார்கள். ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், தேவை என்று கவலைப்படும்போது, கவனிக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே அவர்கள் கவனிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் விளக்கம் அளித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள், அலுவலாளர்கள் அவ்வப்போது கவனிக்கப்படுவார்கள் என்று நிதியமைச்சரவர்கள் உறுதிமொழி தந்துள்ளதால், தரப்பட வேண்டிய அகவிலைப்படி உயர்வுபற்றி பதிலுரையில் அறிவிப்பார்களென்று நம்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் கூறியதை, இதிலேயும் கூறி, 'கூறியது கூறல்' என்ற குற்றத்திற்கு ஆளாக வேண்டாமென்பதால், அதைப்பற்றிக் கூறவில்லை என்று நிதியமைச்சரவர்கள் உறுதிமொழி தந்துள்ளதால் தரப்பட வேண்டிய கோவைப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை மீண்டும் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டு, அதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்களே ! ஏன் அதைப்போல் நிதி அமைச்சரவர்கள் மற்றொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் உதவிப் பணம் தருவது பற்றி இந்த உரையில் இல்லையே என்று நிருபர்கள் கேட்டபோது, ஆளுநர் அவர்கள் உரையிலே அதைச் சொல்லிவிட்டதால் இதில் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கி

றார்கள். எனவே இந்த அறிக்கையில் சொன்னாலும் அல்லது சொல்லாவிட்டாலும், அது உண்டு என்று இங்கே எடுத்துக் கூறியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாக்கப்படுவார்களென்பது குறித்து இங்கே உறுதிமொழி இல்லை. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் எல்லாப் பள்ளிகளையும் அரசு ஏற்க வேண்டும், எல்லா ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை எல்லா இயக்கத்தினரும் வைத்திருக்கிறார்கள். அதைப் படிப்படியாகச் செய்வதற்கு, இதை முன்னோடியாகச் செய்திருப்பதாகக் கருதி, இதை வரவேற்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வெள்ள நிவாரணக் கடன் இல்லை, மிதி வண்டி வாங்கக் கடன் இல்லை, பணிப் பாதுகாப்பு இல்லை. இதையெல்லாம் நம்முடைய நிதியமைச்சரவர்கள் கருத்திலே கொண்டு செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது, உண்மையிலேயே மிகப் பெரிய நாவலைப் படிப்பதுபோல இருந்தது. மிகச் சுவையாக இருந்தது. மிகக் கவர்ச்சியாக இருந்தது. இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, இந்த நாட்டிலே மிகச் சீக்கிரமாக, புரட்சிகரமாக எல்லாத் திட்டங்களும் நிறைவேற வகை செய்யப்பட்டிருப்பதாக நினைத்து, ஓஹோ; என்று பாராட்டும் நிலைமை ஏற்படும். ஆனால் ஆசிரியர் என்ற நிலையில்—ஆசு, இரியர், குற்றத்தை நீக்குபவர் என்ற நிலையில்—நான் தெளிவாக, நுணுக்கமாகப் பார்த்த வகையிலே, நான் சொல்லுகின்ற கருத்துக்களையும் கேட்பார்களென்ற நம்பிக்கையிலே அவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வழங்கப்பட வேண்டியது உணவு, உடை, உறைவிடம் ஆகியவையாகும். இதை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். அரசு அதைச் செய்வதற்கு திட்டங்களை வகுக்க வேண்டும். அதற்காக நிரந்தரமான திட்டங்களை வகுத்து அதன்மூலம் வேலையில்லாதவர்களுக்கு வாய்ப்பளித்து, நலிவுற்ற குடிமக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட வேண்டும்.



(மாற்றுத் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் தலைமை)

பண்டைக் காலத்திலே, நம் நாட்டிலே ராஜாக்கள், மன்னர்கள் அரசு செய்து கொண்டிருந்த காலத்திலே கோவில்களைக் கட்டுவார்கள். அப்படி கோவில்களைக் கட்ட அடிமைகளைக் கூலி ஆட்களாகப் பயன்படுத்துவார்கள். பசி அதிகமென்றால் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். அன்னச் சத்திரம் கட்டுவார்கள். கட்டுவதற்கு வேட்டியும், உண்ண உணவும் வழங்கி, அவர்களைக் காலம் காலத்திற்கு அடிமைகளாக வைத்திருப்பார்கள். அவர்களை முன்னேற விடமாட்டார்கள். முன்னேறினால் தன் பதவிக்கு ஆபத்து எனக் கருதி அவர்கள் அந்தக் காலத்திலே அப்படிச் செய்து வந்ததைப்போல, இன்றைய தினம்கூட நிதிநிலை அறிக்கையிலே என்ன அறிவிப்புகள் தரப்பட்டிருக்கின்றனவென்றால், வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி, மாதத்திற்கு 25 ரூபாய், ஓராண்டிற்கு இரு முறை ஆடைகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது எப்படியிருக்கிறதென்றால் அவர்கள் அப்படியே நிரந்தரமாக வறுமையிலேயே இருக்க வேண்டும், அவர்களுக்கு இந்தத் தொகையை—ஆடையை—உணவை—மட்டும் தரவேண்டுமென்பதுபோல இருக்கிறது. அவர்களை வாழ்விக்கின்ற வகையில் புதிய திட்டங்களையும், புதிய தொழிற்சாலைகளையும் உருவாக்குவது குறித்து நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படவில்லை. அவர்களை வாழ்விக்க புதிய திட்டங்கள் எதுவுமில்லை. நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை முன்னேறச் செய்ய திட்டங்களில்லை. ஆனால் அப்படி இருக்கின்றவர்களுக்கு 25 ரூபாய்தான் பணம் தருகிறேன், வருடத்திற்கு இரு முறை ஆடை தருகிறேன் என்றால், நாம் பண்டைய ராஜாக்கள் காலத்திலே இருக்கிறோமா அல்லது 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருக்கிறோமா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைத்தான் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு தலைவரவர்களே, பண்டைக்கால அரசர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். தமிழ் நாட்டிலே எந்த அரசர்கள் காலத்திலே அன்னச்சத்திரம் வைத்திருந்தார்கள், ஆண்டிகளைப்போல, நிரந்தர அடிமைகளைப்போல வைத்திருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். தமிழக அரசர்களைப்பற்றிப் பெருமையாகப் பேசுகின்ற நேரத்தில், அவர்களைக் கேவலப்படுத்துகிற வகையில் சொல்லுகிறார்கள். அவர் ஆசிரியர் என்பதால் கேட்கிறேன், என்னை மாணவனாகக் கருதிக்கொண்டு அவர் பதில் சொல்ல வேண்டும். எந்தத் தமிழ் அரசர் நிரந்தர அடிமைகளாக வைத்திருந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எந்தவிதமான முன்னேற்றத் திட்டங்களும் இல்லாத பண்டைக்காலத்திலே கோவில்கள் கட்டுவதன் மூலமாகவும், குளங்கள் வெட்டுவதன் மூலமாகவும் பெரும்பாலோருக்கு பண்டைக்கால மன்னர்கள் உணவு அளித்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். சிங்களத்திலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து, இங்கே அவர்களை வைத்து கோவில்களைக் கட்டினார்கள் என்பதை அவர்கள் படித்திருப்பார்கள். அந்த முறையில்தான் நான் அதைக் குறிப்பிடுகிறேன். குறிப்பிட்டு ஒருவரைச் சொல்லி, யாருடைய பகைமையையும் தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை. ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாவலர் அவர்களை ஆசிரியராக நான் கொண்டிருந்ததாகச் சென்ற கூட்டத்தில் பேசினேன். அவரைப் பார்த்தால் அவரது அழகு தமிழ் நினைவிற்கு வரும். அவர் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். 'வன்மையில்லையோர் வறுமையின்மையால்' என்று, யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுக்க வரம் தா என்று ஆண்டவனிடம் கேட்டால் என்ன பொருள்? என்னை என்றும் பணக்காரனாக வைத்திரு, மற்றவர்களைப் பிச்சைக்காரர்களாக வைத்திரு என்று அர்த்தம். எனவே, புதிய திட்டங்களை உருவாக்கி, அவர்களுக்குப் புதிய வாழ்வளிக்க அரசு முயற்சிக்க வேண்டும். நிரந்தரமாக அவர்கள் இப்படியே இருக்கவேண்டுமென்று எண்ணக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. 60 வயதிற்கு மேலே விவசாயத் தொழிலாளியால் வேலை செய்ய முடியாது என்று சொல்லும்போது, இயல்பாகவே, 'முதியோர்' என்பதன்கீழ் அவர் வந்துவிடுகிறார். அதன்கீழ் அவருக்கு உதவித்தொகை அளிக்கலாம். ஆனால், இங்கே புதிதாகச் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது எப்படி புதுமையாகும்? வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி வாங்குவதற்காக அவர்கள் எங்கே போவார்கள்? கைம்பெண்கள், கண்ணொளி இழந்தோர் எங்கே போவார்கள்? அதற்காக 5 அல்லது 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிடலாம். அதை விட்டுவிட்டு, இப்படிச் செய்வது, விளம்பரமாகத்தான் இருக்கிறது.





பட்டினியால் சாகப் போகிறேன் என்று வட்டார வளர்ச்சி அதிகாரியிடம் சொல்லி, 100 ரூபாய் தாருங்கள் என்று கேட்க வேண்டும். அவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்? உணவுக்கு வேலை என்ற திட்டத்தின்கீழ் வராதவர்களுக்கும் கையெழுத்து வாங்கிக்கொண்டு பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த நிலையில், இப்போது என்ன செய்வார்களென்றால், 100 ரூபாயில் 50 ரூபாயை எடுத்துக்கொண்டு, 50 ரூபாய்தான் கொடுக்கும் நிலைமைகள் இருக்கும். எனவே 'கன்ஸ்டிராக்டிவ்'—ஆக, அடுத்தவர்கள் குறை சொல்ல முடியாத அளவிற்கு, அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலையிலேகூட பத்திரிகையிலே ஒன்றைப் படித்தேன். விவசாயிகள் கடன் 60 கோடி ரூபாய் அளவிற்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. நான் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன், இன்றைக்கும் விவசாயம் செய்கிறேன். விவசாயக் குடும்பங்கள் பெற்ற தக்காவிக் கடன், கூட்டுறவுக் கடன்கள 60 கோடி ரூபாய் அளவிற்கு ரத்து செய்யப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அறிக்கையிலே பார்த்தால், 'இந்த இழப்பை ஈடு கட்ட மத்திய அரசின் நிதி உதவியைக் கோரியுள்ளோம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிதியமைச்சரவர்கள் நிருபர்களிடம் பேசும்போது, 'ஒரு வாரத்தில் எழுத உள்ளோம்' என்று சொல்லுகிறார்கள். அப்படி பத்திரிகையில் இருக்கிறது. எது உண்மை? எனவே, அங்கேயிருந்து உதவி வந்து, அதற்குப் பின்னாலே எப்போது செய்ய இருக்கிறார்கள்; இப்போது செய்ய முடியாதா, செய்ய வாய்ப்பு இல்லையா; செய்ய வாய்ப்பு இல்லாதபோது, வாய்ப்பு இருப்பதுபோல அறிவிப்பு வந்திருக்கிறதே; அது ஏன்? கூட்டுறவுக் கடன்கள் இந்த ஆண்டு வழங்கப்படுமா, வழங்கப்படாதா என்பது போன்ற விவரங்கள் சந்தேகமாக இருக்கின்றன. மேலும் இந்தக் கடன்களை ரத்து செய்திருந்தாலும், அதிலே ஒரு வாசகம் இருக்கிறது. சரியாகக் கடன் திருப்பியவர்களுக்கு மேலும் கடன் வழங்க நிதி ஒதுக்கம் என்று சொன்னால், கட்ட முடியாமல் இருந்தவர்கள் கடனை ரத்து செய்ததற்குப் பின்னாலே கடன் வாங்க முடியுமா, கட்டாததால் அவர்களுக்குக் கடன் கிடையாதா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இதையெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் விளக்குவார்களென்று நம்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொற்கொல்லர்களுக்குச் சங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் மலிவு விலையில் தாலி தர இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஒரு ஆசிரியன். நான் மலிவுப் பதிப்புப்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 ஜூலை 4

புத்தகங்களைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன், பார்த்திருக்கிறேன். மலிவுப் பதிப்பு என்றால், பேப்பர் எல்லாம் பாலிஷ்டாக இருக்காது. அட்டைக்கு உள்ளே இருக்கும் தாளெல்லாம் மிக மிக மட்டமான நிலையில் இருக்கும். மலிவு விலை என்றால் மிக 'சீப்'பாக இருக்கும். அதுபோல மலிவு விலை தாலி என்றால் கவரிங் தாலியா, உண்மையிலேயே அதில் தங்கம் இருக்குமா என்பதற்கெல்லாம் அதில் விளக்கம் இல்லை. தாலிப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக அரசியல் வட்டாரத்தில் தேர்தலின்போது சொல்லப்பட்டது. எனவே, மலிவு விலைத் தாலியைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக்க வேண்டும்.

400 புதிய பள்ளிகள் கட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதிபெறச் சொல்லியிருப்பதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். அதே சமயத்தில் கடற்கரைப் பகுதிகளான நாகப்பட்டினம், வேதாரண்யம், தலைஞாயிறு, அதிராம்பட்டினம், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளில் எல்லாம் ஆண்டுக் காண்டு புயல் வீசுகிறது. அங்கேயெல்லாம் ஷெல்டர்கள் இல்லை. ஒன்றிரண்டு தான் இப்போது இருக்கிறது. புயல் வரும்போதெல்லாம் மக்களைப் பாது காப்பாக பள்ளிகளிலே கொண்டுவந்து தங்க வைக்கிறார்கள். அந்த இடங் களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கி புயல் நேரங்களில் அதைப் பயன்படுத்தக் கூடிய வகையில் நல்ல முறையில் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்காகக் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

1,500 மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் இணைப்புச் சாலைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இருக்கின்ற இடம் தலைஞாயிறு. அங்கே ஏகராஜபுரம் என்ற ஊரிலிருந்து சடயங்கோட்டகம் என்ற ஊருக்கு ஒரு ரோடு போகிறது. 17 ஆண்டுகளாக யாரும் அதைத் திரும்பிப் பார்க்கவில்லை. இப்போது அந்த ரோடு வயலாக இருக்கிறது. மழை பெய்ததும் நெல் பயிரிட்டு அறுவடை செய்யலாம். அந்த அளவுக்கு அந்தப் பகுதி ரோடாகக் காட்சியளிக்கவில்லை, வயலாகக் காட்சியளிக்கிறது. அதைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும், மற்ற இடங்களிலும் பிரச்சினையை எழுப்பியபோது, அது ஹைவேஸ் ரோடா, பி. டபிள்யூ. ரோடா, பஞ்சாயத்து யூனியன் ரோடா பஞ்சாயத்து ரோடா என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். அதுதொடர்பாக உண்ணாவிரதம் கூட போராட்டக்காரர்கள் இருந்தார்கள். அந்த ரோடு இன்னும் சீர் செய்யப்படவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழையாற்றங்கரை, குன்றாரான்வெளி போன்ற ஊர் களுக்கும் ரோடு வசதி செய்து தரவேண்டும்.



1980 ஜூலை 4] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அடுத்து, 1,800 புதிய பேருந்துகள் விடுவதைப் பாராட்டுகிறேன். முன்பு வேதாரண்யத்திற்கு சென்னையிலிருந்து ஒரு துரிதப் பேருந்து போய வந்தது. பிறகு மதுரை வரை அதை விரிவாக்கினார்கள். மக்கள் வருகை குறைவு என்று கருதி பிறகு அதையும் நிறுத்திவிட்டார்கள். வேதாரணியம் போய வரும்போது நிறைய மக்கள் போய்வந்தார்கள். நிறைவான வருவாயும் தந்தது. நல்லமுறையில் வேதாரண்யத்திற்கு ஓடிக்கொண்டிருந்த துரிதப் பேருந்தை நிறுத்திவிட்டார்கள். ஆதலால் திருத்துறைப்பூண்டி மற்றும் வேதாரண்யத்திற்கு சென்னையிலிருந்து துரிதப் பேருந்து விடுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நாகை, ஆமூர், ஆவூர், திருவாரூர் ஆகிய ஊர்களுக்கு நகரப் பேருந்து வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை விடுத்திருக்கிறோம். அதையும் விடுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடி தண்ணீர் வசதிபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். குடி தண்ணீர் திட்டத்தை 6 பிரிவாகப் பிரித்து இந்த இந்தப் பகுதிக்கு இதை இதைச் செய்ய இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இத் திட்டத்தின் முதல் மூன்று பகுதிக்குள் தலை ஞாயிறு, வண்டல், குன்றாரான்வெளி, பழையாற்றங்கரை இவைகள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. அங்கே தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அதனால், அந்த ஊருக்கு யாரும் வேலைக்கு வர மறுக்கிறார்கள். ஆகையால் அங்கு குடி தண்ணீர் அளிப்பதற்கான ஏற்பாட்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாவேன்.

அடுத்து, மத்திய அரசைப் பொறுத்தவரை, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 1951-56 ஆம் ஆண்டு மத்திய அரசு நமது மாநிலத் துக்கு வழங்கிய திட்ட நிதி உதவி 10.8 சதவிகிதம். ஆனால் 1974-78 ஆம் ஆண்டு மத்திய அரசு நமது மாநிலத்திற்கு வழங்கிய திட்ட நிதி உதவி 4.1 சதவிகிதம். 10.8 சதவிகிதம் திட்ட நிதி உதவி வழங்கிய மத்திய அரசு இப்போது அதை 4.1 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என மத்திய அரசுக்கு வேண்டுகோளை இப்போது விடுத்திருக்கிறார்கள்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 ஜூலை 4

இப்படி அவர்கள் திட்ட நிதி உதவியைக் குறைத்துக் கொண்டே வருவதற்கான காரண காரியங்களை ஆராய்ந்து, குறைக்கக் கூடாது என்று வாதாடுவதற்கு, ஆட்சிக் கட்டிலில் இருப்பவர்கள் மட்டுமல்ல, அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்பார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையேற்று, அந்தத் தொகையை பத்திய அரசு உயர்த்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான காரியங்களில் உடனே ஈடுபட வேண்டும். என்னுடைய தரப்பில் உள்ள ஆசிரியர்கள்கூட இந்தக் காரியத்தில் அவர்களோடு தோளோடு தோள் கொடுக்க வருவார்கள் என்கின்ற நல்லெண்ணத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாவேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நான் பேசிக்கொண்டே போகலாம் ஆனாலும் காலம் சென்று கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் ஒரு கருத்தினை இங்கே சொன்னார். உயர்நிலைப் பள்ளியோடு 8-வது வகுப்பைச் சேர்த்து விடுங்கள், தரம் உயரும். அங்கேயுள்ள தரம் தொடக்கப்பள்ளிகளில் இல்லை என்பது போல் சொன்னார்கள். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராக பட்டதாரிதான் இருக்க வேண்டும், தமிழ் ஆசிரியர்தான் இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். புதிதாகக் காலியாகின்ற இடங்களுக்கெல்லாம் அப்படிப்பட்டவர்களைத் தான் நியமிக்கிறார்கள். எட்டாவது வகுப்பை உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றினால், 6, 7 போன்ற வகுப்புகள் இருக்கின்ற நடுநிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் நிச்சயமாக வேலை இழப்புக்கு ஆளாவார்கள். கல்வியின் தரம் மாறவும் வாய்ப்பு இல்லை. உயர்நிலைப் பள்ளிக்கு 8-வது வகுப்பை உயர்த்திச் செல்வதால் மட்டும் கல்வியின் தரம் உயர்ந்து விடாது. அந்த அடிப்படையில் அது தேவையில்லை. ஆகவே 8-வது வகுப்பு நடுநிலைப் பள்ளியில்தான் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் இந்த அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட கொள்கையின் அடிப்படையில் அறிவித்தது. சென்ற ஆண்டே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இளநிலை ஆசிரியர்களில் 2,500 பேரை ஆண்டுக்கு இரு முறையாக இடைநிலை ஆசிரியர்களாக ஆக்கி விடுவோம் என்று சொன்னார்கள்.



1980 ஜூலை 4]

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மேல்நிலைப் பள்ளி தொடர்பாக தனியார் தீர்மானத்தை முன்மொழிந்து பேசும்போது, கல்வியின் தரத்தை முன்னிட்டு 8 ஆம் வகுப்பை உயர் தகுதி படைத்தவர்கள் போதிக்க வேண்டுமென்று வற்புறுத்திய போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை வரவேற்ற தோடு, அந்த அடிப்படையில் உயர் தகுதி பெற்ற ஆசிரியர்களை கல்வித் தகுதியினுடைய அடிப்படையில் நியமிப்பதுபற்றிப் பரிசீலிப்பதாக பதிலளித் தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் 8 ஆம் வகுப்புகளை உயர்நிலைப் பள்ளியோடு இணைத்து உயர் தகுதி பெற்ற ஆசிரியர்களை அங்கு நியமிப்பதுபற்றி அறிவித்தார்கள். இதன்மூலம் இடைநிலை ஆசிரியர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையிழப்புக்கு ஆளாகமாட்டார்கள். அதற்கேற்ற வகையில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தைக் குறைத்தும் அப்படிப்பட்ட வகையிலும் அவர்களைப் பயன்படுத்தலாம் என்கின்ற வகையிலும் கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த முறையில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்தி வரவேற்றுப் பேசினார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு செய்வதும் கல்வியின் வளர்ச்சிக்காகத்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கல்வியின் தரம் உயர வேண்டும், வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகத் தான் நானும் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்காக, கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்காக, நானும் என்னுடைய— எங்கள் இயக்கத்தினுடைய கருத்தை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்கிறபடி செய்தால்தான், கல்வியின் தரம் வளரும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்போது என்ன சொன்னார்கள் என்றால், ஆண்டுக்கு இருமுறை இளநிலை ஆசிரியர்களுக்கு 5 மாதம் பயிற்சி கொடுப் போம் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை விரைவிலே செயல் படுத்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் 5 மாதம் பயிற்சி என்பது இப்போது 7 மாதம் 10 நாளாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவரவர்களே, தங்களைப்பற்றி உறுப்பினர்கள் பேசும்போது, கருத்து சொல்லக்கூடாது. சபைத் தலைவரைப்பற்றிப் பேசக்கூடாது என்பது மரபு. நீங்கள் தலைவர் இருக்கையில்

அமர்ந்துகொண்டிருக்கும்போது, உங்கள் கருத்துபற்றி உறுப்பினர் பேசும் போது, நீங்கள் அதற்கு பதில் சொல்ல முடியாத நிலையைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கிறது.

மாற்றுத்தலைவர் திரு. பா. ரா. தாமஸ் : அதற்காகத்தான் பரிகாரம் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6.00)

(மாற்றுத் தலைவர் திருமதி தாரா செரியன் தலைமை)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் மாற்றுத் தலைவராக உட்கார்ந்திருப்பதால், அவர் பேசிய கருத்துக்களை மறுக்கக் கூடாது என்று விதிமுறை இருக்கிறதா? அப்படி இருந்தால், இதன்மூலம் அந்த விதிமுறைகளை நான் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டால், நான் அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு., பா. ரா. தாமஸ் : மாற்றுத் தலைவரவர்களே, நான் எட்டாம் வகுப்பினை 9, 10 வகுப்புக்களோடு இணைத்து அதை ஒரு பிரிவாக மாற்ற வேண்டுமென்று சொன்னபோது, இடைநிலை ஆசிரியர்களுக்கு எவ்விதப் பணி இழப்பும் ஏற்பட வேண்டுமென்ற கருத்தையோ அல்லது ஏற்படும் என்ற கருத்தையோ நான் கூறவில்லை. நிச்சயமாக இவ்வாறு ஒரு மாற்றம் ஏற்படும்போது, அத்தகைய இழப்பு ஏற்படாது. காரணம் உறுப்பினர் அவர்களே பேசும்போது குறிப்பிட்டார்கள். பி.டி. ஆசிரியர்கள் 9, 10-ல் பணியாற்றுபவர்களுக்கு அதிகமான பாட வேலை இல்லாவிட்டால், எட்டாம் வகுப்பிலே வந்து பாடம் போதிக்கலாம் என்று அரசு ஆணை இருக்கிறது. அதேமுறையில் சில பாடங்கள் நிச்சயமாக கணிதமோ, அறிவியலோ, ஆங்கிலமோ போதிக்க வேண்டுமென்றால், உறுப்பினர் அவர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்கள் சமுதாயமே அந்த நல்ல கருத்தை ஏற்றுக்கொள்வார்கள். அதே சமயத்தில் ஆசிரியர் இனத்திற்கு விரோதமாக இழப்பு ஏற்படும் வகையில் இருந்தால், அதனை மறு பரிசீலனை செய்யுமாறு உறுப்பினர் அவர்களே அரசிடம் வேண்டிக்கொள்ளலாம் என்றும் கூறிக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, வரும்முன் காப்பதுதான் அறிவுடைமையாகும். எனவேதான் வரும்முன் அப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பினேன்.





இளநிலை ஆசிரியர்கள் மொத்தம் 71,802 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது போட்டிருக்கிற திட்டப்படி, ஒரு ஆண்டுக்கு 2,500 பேர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க முடியும். இதே அளவில் போனால், அனைவரையும் இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க முப்பதாண்டுகள் ஆகும். முப்பதாண்டு காலத்தில், இருக்கிற ஆசிரியர்களில் பலர் இறந்து விடுவார்கள். பலர் சர்வீசை விட்டே போய் விடுவார்கள். எனவே அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க முடியாமல் போய் விடும். அவர்கள் எல்லாம் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள். ஆங்கில போதனை மட்டும் தான் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எனவே ஒரு குறுகிய காலத்தில், மூன்றாண்டுகள் என்றோ ஐந்தாண்டுகள் என்றோ—இந்த ஆட்சியாளர்கள் இருக்கிற காலத்திற்குள், அதற்கு மேலேயும் நீங்களே இருக்கலாம், அதைப்பற்றியல்ல, பிரச்சினை—அந்த ஒரு குறுகிய கால கட்டத்திற்குள் அவர்கள் இடைநிலை ஆசிரியர் பதவி பெறுகின்ற வாய்ப்பினை அரசினர் தேடித் தர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள், புலவர் படித்தால், பி.ஏ. படித்தால், எம்.ஏ; பி.லிட். படித்தால், அவர்களுக்கு ஊக்க ஊதியம் இல்லை. இடைநிலை ஆசிரியர்கள் ஊக்க ஊதியம் பெறக் கூடாதா? தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம். தகுதியை உயர்த்திக் கொண்டால் தானே தரம் உயரும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் படிப்பதற்கு ஏற்றவாறு 'இன்சென்டிவ்', மற்றவர்களுக்குத் தருவதைப்போல், இவர்களுக்கும் தரக் கூடாதா? ஆகவே அப்படிப்பட்ட முறையிலே இதையெல்லாம் கல்வியாளராக இருக்கக் கூடிய நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சிந்திப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு அதிகமாகச் செலவாகாது. மிகக் குறைந்த செலவு தான் ஆகக்கூடும்.

அரசு ஆணை 1400-ன்படி பணி மூப்பு உள்ளவர்கள், பணி குறைந்தவர்களை விட குறைவாக ஊதியம் பெறக் கூடாது என்று இருக்கிறது. அதைச் சரி செய்வதைத் துறையின் தலைவர் செய்ய வேண்டுமென்று இருக்கின்ற காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக் கூடிய ஆசிரியர்கள் பிரச்சினைகளை டி.ஆர்.டி. அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. அதை அவர்கள் அனுப்பவும் இல்லை; அதனைப் பெறவும் இல்லை. அந்த ஆணை வந்து நீண்ட காலம், அதாவது ஆண்டுக் கணக்காக ஆகிறது. பணிக்காலம் அதிகம் உடையவர்கள் பணிக்காலம் குறைவாக உள்ளவர்களை விட ஊதியம்

குறைவாகப் பெற்று வருகிறார்கள். இதை மாற்றியமைக்க முழு அதிகாரத்தையும் ஒன்றிய ஆணையர்களுக்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அடிப்படை விதி 22-பி.யின் பிரகாரம் சம்பளம் வாங்கவில்லை என்று சொன்னால், பணி விதிமுறை அதற்காக வகுக்கப்பட்டதா ? அதற்குப் பின்னால் என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை.

VICE-CHAIRMAN (Thirumathi TARA CHERIAN) : May I ask the hon. Member kindly to finish within two minutes ? The hon. Member has taken more than thirty minutes.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ரூபாய் 25 மட்டுமே பெற்றுக்கொண்டு ஊதிய உயர்வு பெறாமல் அவர்கள் இருக்கிறார்கள். அதைக் குறித்து இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இயக்குனர்கள் 400 பேர்களை நியமிக்க எண் 1551, கல்வி, நாள் 24—8—1979 என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையை இதுவரை அமுல் படுத்தாத காரணத்தாலேயே, தகுதி பெற்றவர்கள் ஊதியம் பெறாமல் தவிக்கிறார்கள். அதனைப் போக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் சீனியர் மெக்கானிக்குகள், பொறியியல் ஆசிரியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 25 ரூபாய் சிறப்பூதியம் வழங்க பிறப்பிக்கப்பட்ட ஆணை அமுல்படுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அதனையும் அமுல்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக மாற்றுவதற்கு அரசு விரும்பினாலும் கூட, அரசிலே இருக்கிற அமைச்சர்கள் விரும்பினாலும் கூட, அதற்கு முன்னாலே தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களுக்குரிய தகுதியைப் பெற்றிருந்தும் கூட, அவர்கள் உயர்த்தப்படவில்லை. பல்வேறு நிலைமைகளை அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறார்கள். தமிழ் நாட்டிலே தமிழ் ஆசிரியர்களுக்கு இந்த நிலை இருக்கக் கூடாது. அனைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள்கூட பதவி இறக்கம் செய்யப்படும் இழிநிலை இன்னமும் உள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நேரமாகிவிட்டது. மற்ற பல பிரச்சினைகளை கல்விக் கொள்கைக்கக் குறிப்பிலே பேசிக்கொள்ளலாம் என்று கருதி ஒரேயொரு வேண்டுளை மட்டும் முன் வைக்க விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் மேலவைக்கு வந்திருக்கிறோம். என்னைப் போலப்பவர்கள் பலரும் பணியாற்றத்தான் வந்திருக்கிறோம். எல்லோரும் படித்தான். யாரும் கோபித்துக்கொள்ள வேண்டாம். நான் எதற்கச் சொல்கிறேன் என்றால், ஆசிரியர்களின் பிரச்சினைகளைப் பற்றிய த்துக்களை நாங்கள் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ரியர்கள் பிரச்சினை குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இங்கே ங்கள் தருகிறோம். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இங்கே எடுத்துக் ாள்ளப்படுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் சட்டமன்றப் பேரவையில் வைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அங்கே அவைகளுக்கு விடை ிக்கப்படுகின்றது. குறிப்பாக பாட நூல் நோட்டுப் புத்தகத் தட்டுப்பாடு ற்றி நான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் 18ஆம் தேதியே கொடுத்திருக் றேன். எனவே அந்தத் தீர்மானம் இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டிருந் ல், ஆசிரியப் பிரதிநிதிகள் ஆசிரியர்களுக்கான பணிகளை ஆற்றினார்கள் ன்று வெளியே இருப்பவர்கள் உணர முடியும். எனவே இங்கே எங்களை * * * ஆக்காதீர்கள். தயவுசெய்து சுறுசுறுப்பாகப் பணி ற்றக்கூடிய வாய்ப்பைத் தாருங்கள். விதிமுறைகளில் என்ன இருக்கிறதோ தன்படி செயலாற்ற வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டு, தலைவர் வர்களை அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென் ால் அப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் வலுவானதாக வெளியே இருப் வர்கள் கருதுகிறார்கள்.

பொதுவாக இந்த அறிக்கையில் மிகச் சிறப்பாக பல்வேறு பிரச்சினைகள் திலே கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தாலும் சில பிரச்சினைகளை இதிலே ிட்டுவிட்டார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதை எல்லாம் ாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் செய்வார்கள் என்ற ம்பிக்கை எனக்கு இருக்கிறது

VICE-CHAIRMAN (Thirumathi TARA CHERIAN): I expunge he word * * *

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதற்குப் பதிலாக " சுறுசுறுப்பு இல்லாதவர்களாக ஆக்காதீர்கள் " என்று மாற்றிக்கொள்ளலாம்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

அடுத்து, இங்கே தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் எல்லாம் ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வாழ்த்துகிறேன்; வணங்குகிறேன்; வரவேற்கிறேன்.

ஆனால் ஒன்று, காந்தி பெயரைச் சொல்லி எப்படி கள்ளுக்கடைக்குச் சென்று கொண்டிருக்கக் கூடாதோ, புத்தர் பெயரைச் சொல்லி எப்படி கசாப்புக்கடை நடத்தக் கூடாதோ, நபிகள் நாயகத்தின் பெயரைச் சொல்லி எப்படி உருவ வழிபாட்டினை ஏற்றுக் கொள்ளக் கூடாதோ, அதைப் போல தந்தை பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டு நாம் எல்லோருமே பகுத்தறிவுக் கொள்கைகளை அழிக்கக் கூடாது; என்னையும் சேர்த்துத் தான் இதனைச் சொல்லிக்கொள்கிறேன். அதைப் போலவே அண்ணா பெயரைச் சொல்லிக் கொண்டு, தமிழ், தமிழர், தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் கலாச்சாரங்கள் இதற்குப் பாதகமான செயலில் ஈடுபடக் கூடாது என்பதை எனக்கு உட்படச் சொல்லிக் கொண்டு அந்த முறையில் நாம் எல்லோரும் நடை போடுவோம் என்று சொல்லிக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து: மாற்றுத் தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையின் பேரில் சில கருத்துக்களை நான் பேசலாம் என்று கருதுகிறேன். இந்த அவைக்குப் புதியவன் என்ற முறையில், சில வார்த்தைகளை, இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற முக்கியமான அம்சங்கள் சிலவற்றைக் கூற நான் எண்ணி முன்வந்துள்ளேன்.

நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுடைய கடன் 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சாதாரண மக்களும் ஏழை விவசாயிகளும் பாராட்டாமல் இருக்க முடியாது. வரிச் சலுகைகள் ஏழை எளியவர்களுக்கு அதிகமான மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். மத்திய அரசு விவசாயிகள் கடன் நீக்கத்திற்கு எந்தவிதமான இடமும் கொடுக்காவிட்டாலும்கூட, ஒரு சைக்கிளுக்கு 25 முதல் 30 ரூபாய் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களும், ஏழை எளிய மக்களுக்குரிய வரிச் சலுகைகளும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. அது மட்டுமல்ல, புதிய வரிவிதிப்பு ஏதுமில்லாமல் சிறந்த முறையில் நிதிநிலை அறிக்கை தயாரித்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.



ஏழை எளிய ஹரிஜன மக்களுக்கு ஏறக்குறைய 30,000 குடியிருப்புகளைக் கட்டித் தருவதாக தமிழக அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. ஏழை எளிய ஹரிஜன மக்கள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு அரசு எந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதையெல்லாம் தமிழக அரசு நல்ல முறையில் உணர்ந்திருப்பதன் காரணமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்வதுடன், தமிழக அரசுக்கு எனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசு பல இனங்களில் பல்வேறு வரிகளைப் புதிதாகப் போட்டிருந்தாலும், தமிழக அரசு புதிதாக எந்த வரியும் போடாமல், உபரி பட்ஜெட்டாக இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறது என்பதற்காகவும நான் அதனைப் பாராட்ட விரும்புகிறேன்.

நான் இந்த அவைக்குப் புதிய உறுப்பினன் என்ற காரணத்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகமான விளக்கங்களையோ கருத்துக்களையோ சொல்ல சாத்தியமில்லை என்ற காரணத்தால், இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்): அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. அவை மீண்டும் நாளை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.10)

[1930 ஜூலை 5

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விஷயத்திற்குள் போகாமல் அது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானவிதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அயோத்தியாபட்டினம், மல்லசமுத்திரம், வாழப்பாடி, திருச்செங்கோடு, ராசிபுரம், மகுடஞ்சாவடி, நாகை கீழ்வேளூர், செம்பனார்கோவில், காஞ்சிபுரம், வேம்பக்கோட்டை, தேவகோட்டை, கோபி ஆகிய. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொற்பொழிவை ஆற்றுகிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** . . . ஆகிய இடங்களில் போராட்டம் நடத்துகிறார்கள். அதைத் தவிர்க்க என்னென்ன ஆலோசனைகளை வழங்கலாம் என்பதைப்பற்றி இந்த அவை சற்று விரிவாக ஆய இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவசர முக்கியத்துவத்தைப் பொறுத்த ஒரு கருத்தை எடுத்துச் சொல்வதுதான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் நோக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படி விதி சொல்லுகிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அப்படி விதி சொல்லுகிறது. ஆகவே அதை தயவு செய்து எல்லோரும் பயன்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, மக்கள் கணக்கெடுப்புப் பணியில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளவில்லையென்று ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் இரண்டு காரணங்களைச் சொல்கிறார்கள். தேர்தலின்போது வாக்குச் சாவடிப் பணிகளில் அவர்களைப் பயன்படுத்தவில்லை என்பது ஒரு காரணம். இன்னொன்று, ஊதியம் குறைவாக இருக்கிறது என்பது. ஊதியத்தைப் பொறுத்த வரையில், நாம் செலவழிக்கிற பணத்தில் பெரும்பகுதியை மத்திய அரசு கொடுக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஊதியம் குறைவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்வதால், இது வரை கொடுத்த ஊதியத்தைவிட அதிக ஊதியம் தருவதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிற



1980 ஜூலை 5] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதிக ஊதியம் கொடுக்கப்படவிருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் அதை ஏற்றுக்கொண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியிலே கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுத் தேர்தல் பணிகளுக்கு அதிகமாக ஊதியம் தருகிறார்கள் என்றும், அப்பணியில் தங்களை ஈடுபடுத்தவில்லை என்றும் ஆசிரியர்கள் சொல்லுவதாக இங்கே சொன்னார்கள். சென்ற ஆண்டு நடந்த தேர்தல் கணக்குகள் எனக்கு இன்னும் வரவில்லை. ஆனால் இப்போது நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிய விவரங்கள் எனக்கு வந்திருக்கின்றன. பொதுவாக பொதுத் தேர்தலை தேர்தல் தலைமை அதிகாரிதான் நடத்துகிறார். மாநில அரசு இல்லாத காலத்தில், குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் தேர்தல் நடைபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தத் தேர்தலில் எவ்வளவு பேர்களைப் பயன்படுத்தினார்கள், எவ்வளவு பேர்களைப் பயன்படுத்தவில்லை என்று கேட்டால், விவரங்கள் உடனடியாக வரவில்லை. ஒன்றிரண்டு வந்திருக்கின்றன. அந்த விவரங்கள் நாங்கள் சொல்லுவதற்குச் சாதகமாக வந்திருக்கின்றன.

கோபிசெட்டிப்பாளையத்தில் தேர்தல் பணிக்காக மொத்தம் 496 பேரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஆசிரியர்கள் 256 பேர்கள். மற்றவர்கள் 250 பேர்கள். அதைப் போலவே தென்காசி தொகுதியிலே தேர்தல் பணிக்காக 515 பேர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதில் 266 பேர்கள் ஆசிரியர்கள், மற்றவர்கள் 249 பேர்கள். இதே மாதிரி பல இடங்களில் அதிகமான ஆசிரியர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. முதன் முதலாக எனக்கு வந்த கணக்கு இது. இதை தொலைபேசியின் மூலமாகக் கேட்டேன். இந்தக் கணக்கு ஆசிரியர்களுக்குப் பாதகமாக இல்லை. மற்ற இடங்களிலும் ஆசிரியர்களைப் பயன்படுத்தவில்லையென்று சொல்ல முடியாது. எல்லா இடங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார்கள். நான் எந்தத் தொகுதியில் போட்டியிட்டேனோ அதே தொகுதியில் நான் தேர்தல் வேலையைப் பார்க்கிறபோது, எல்லா இடங்களிலும் ஆசிரியர்கள் இருந்தார்கள். பெரும்பாலானவர்களைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டுப் போய்க்கொண்டே இருந்தேன். ஆகவே ஆசிரியர்கள் இல்லையென்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் ?

## இணைப்பு.

[3 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

கால்நடைப் பராமரிப்புத்துறையில் உள்ள கால்நடை ஆய்வாளர்கள் 5—5—1980 முதல், தங்கள் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி வேலை நிறுத்தத்தை மேற்கொண்டார்கள். அதுபோது தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி (President's Rule) நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆளுநரின் ஆலோசகர், திரு. ஐ. ஜே. நாயுடு அவர்கள், இச் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டு, சில சலுகைகளை அறிவித்தார்கள். அதற்கிணங்க, கால்நடை ஆய்வாளர்களுக்கு தடுப்பூசிச் சான்றிதழ் (Vaccination Certificate) வழங்கும் உரிமை, வழங்கி, 21—5—1980, அன்று, ஆணை வெளியிடப்பட்டது. இதற்கிணங்க, தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர்கள் சங்கம் தனது போராட்டத்தினைக் கைவிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மேலும் சில கோரிக்கைகளை முன் வைத்தும், தமிழ்நாடு கால்நடை மருத்துவர்கள் சங்கம், 24—6—1980 முதல் போராட்டத்தைத் தொடங்கியது. கால்நடை மருத்துவ மனைகள், மருந்தகங்கள் முதலியவற்றின் சாவிகள் கால்நடை மருத்துவர்கள் பொறுப்பில் இருந்ததால், அவை பூட்டிக் கிடந்தன. பொதுமக்களுக்கு இதனால் ஏற்பட்ட இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, இம் மருந்தகப் பூட்டுகளை உடைத்து முதுநிலை கால்நடை ஆய்வாளர்கள் வசம் பொறுப்பை ஒப்படைக்க, மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அரசு உத்தரவிட்டது.

சம்பந்தப்பட்ட சங்கப் பிரதிநிதிகளுடன் சமூக நல அமைச்சர் அவர்கள் 19—6—1980-ல் நடத்திய பேச்சு வார்த்தையில் 'தமிழ்நாடு கால்நடை மருத்துவ மன்றம் (Tamil Nadu Veterinary Council) அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை விரைவில் நிறைவேற்றுவதாக உறுதி அளித்தார். இதன் தொடர்பாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ சங்கம், தங்கள் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தது. தற்போது எல்லா கால்நடை மருத்துவ நிலையங்களும் இயங்கத் தொடங்கி விட்டன; போராட்டத்தில் ஈடுபட்ட கால்நடை மருத்துவர்களும் வேலையில் சேர்ந்து விட்டார்கள். நிலைமை சுமுகமாக உள்ளது.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 1980 ஜூலை 5

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளாமை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள், ஆசிரியர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியில் கலந்துகொள்ளாமை பற்றியும், தேர்தல் பணிகளில் அவர்களைப் பயன்படுத்த உறுதிமொழி தர வேண்டுமென்பது பற்றியும் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணி மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி என் பதை ஆசிரியர்கள் உணர்கிறார்கள் என்றாலும், இப்பணிக்காக அளிக்கப்படும் சிறப்பூதியம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்தப் பணி அளிக்கப்படுகிறது. தேர்தல் காலத்தில் வாக்குச் சாவடி பணி அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. அதற்கு அளிக்கப்படும் சிறப் பூதியம் அதிகமாக இருக்கிறது. குறைந்த ஊதியம் பெறக்கூடிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி மட்டும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. நிறைந்த ஊதியம் பெறக்கூடிய தேர்தல் வாக்குச் சாவடி பணிகள் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வகையிலேயும், 1979 ஆம் ஆண்டில் அவர்கள் ஆற்றிய பணிக்குரிய சிறப்பூதியம் இதுவரை வழங்கப்படாததை எதிர்த்தும், ஆசிரியர்களைவிட குறைந்த ஊதியம் பெறுபவர்களை அவர்களுடைய மேற்பார்வையாளராக நியமித்திருப் பதை எதிர்த்தும் நிறைந்த ஊதியம் தரும் பணியைத் தங்களுக்குத் தரவில்லை என்பதை எதிர்த்தும் வருங்காலத்திலாவது தேர்தல் வாக்குச் சாவடிப் பணியை ஆசிரியர்களுக்கும் தர வேண்டும் என்பதை வலியுறுத்தியும், சேலம் மாவட்டத் தில்: . . .

[1980 ஜூலை 5

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர்கள் நேர்மையாக நடப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய நேர்மையை மேலும் உறுதிப்படுத்த நான் கும்பிடு போட்டேன். ஆசிரியர்களை எல்லா இடங்களிலும் பரவலாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களில் வேண்டிய அளவுக்கு அவர்களைப் பயன்படுத்தவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நடந்து முடிந்தது எப்படியிருந்தாலும், எதிர் காலத்தில் எல்லா அரசு அதிகாரிகளும் இதிலே பங்கேற்கிற வகையில் செய்வதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் எல்லாம் எதிர் காலத்தில் அரசு ஊழியர்களாக ஆக இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஜனத்தொகை கணக்கெடுக்கும் பணியிலே ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டு, இதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

## (2) பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேருவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன், திரு. பா. ரா. தாமஸ் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களில் அட்மிஷன் நெருக்கடி ஏற்பட்டிருப்பது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்ப முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள பாலிடெக்னிக்குகளில் இந்த ஆண்டு அரசு கூடுதலான இடங்களை உயர்த்தாததால், மாணவர்கள் அட்மிஷன் பெறுவதற்காக பல்வேறு கடினமான முயற்சிகளில் ஈடுபட நேர்ந்தது. மிகவும் முன்னேறிய சமுதாய மாணவர்கள் இடம் பெறுகிற வகையிலும், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இடம் பெற முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் சமுதாயத்தில் கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியிருக்கிற பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து படிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், அந்த ஒரு குறைபாட்டை நீக்கி,



80 ஜூலை 5] [திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன்]

ற்பட்ட சமுதாயத்தினருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பாலிடெக்னிக் களில் எவ்வாறு அதிக இடங்களைக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி ரிவாக விவாதிக்க மேலவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் புலர்களே, பாலிடெக்னிக்குகளில் சேருவதற்கான மாணவர்களின் விண்ணப் ங்கள் ஆண்டுதோறும் மிகவும் அதிகரித்து வருவது உண்மையே. இதைக் ருத்திற்கொண்டு, அரசு இவ்வாண்டு முதல் இதுவரை 120 சேர்ப்பு எண்ணிக் கையாகக் கொண்ட 9 பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கையை 180 ஆக அதிகரித்து உள்ளது. இதன் மூலம் கூடுதலாக 540 இடங்கள் உருவாக்கப் பட்டுள்ளது.

இது மட்டுமின்றி, இதர பாலிடெக்னிக்குகளில் ஏற்பளிக்கப்பட்ட சேர்ப்பு எண்ணிக்கையைவிட 10 சதவிகித இடங்களில் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதன் மூலம், மேலும் 340 இடங்கள் அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சென்ற ஆண்டிலிருந்து ஒரு புதிய அரசினர் பாலிடெக்னிக் கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு, தஞ்சாவூரில் ஒரு தனியார் மகளிர் பாலிடெக்னிக் தொடங்கப்பட்டுள்ளது. குமாரபாளையத்தில் ஒரு தனியார் நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு ஏற்பளித்துள்ளது. கோயம்புத்தூரில் ஒரு தனியார் மகளிர் பாலிடெக்னிக் நிறுவும் கருத்துரு அரசாணைகள் பிறப்பிக்கப்படும் தருவாயில் உள்ளது. இவ்வாறு புதிதாகத் தொடங்கப்பட்ட பாலிடெக்னிக்குகளின் மூலம் சேர்ப்பு எண்ணிக்கையில் 190 இடங்கள் அதிகமாகிறது. இது தவிர, சிறப்பு தொழில் நுட்பப் பயிலகங்களின் சேர்ப்பு எண்ணிக்கையில் 10 சதவிகிதம் இடங்கள் அதிகரிப்பதின் மூலம், 37 இடங்கள் கூடுதலாக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடம் படித்துத் தேறிய மாணவர்கள் பாலிடெக்னிக்குகளின் இரண்டாம் ஆண்டு படிப்பில் சேர 510 இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை 1608 இடங்கள் நடப்புக் கல்வியாண்டில் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் ஒன்று நினைவு கூர வேண்டியுள்ளது. பாலிடெக்னிக்குகளில் நுழைவு அனுமதி கோரும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்குவது என்பது இயலாத ஒன்றாகும். ஏனெனில், தொழில் நுட்ப வல்லுநர்களில் வருங்கால மனித சக்தி தேவையைக் கருத்திற்கொண்டும், தொழில்

## பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேருவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி குறித்து

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 5

நுட்ப வல்லுநர்களின் தற்போதைய வேலை வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டும், பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளமையால், இவைகளை மனத்திற்கொண்டு பாலிடெக்னிக்குகளில் சேர விழையும் மாணவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறுகிற போது, பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிக இடங்கள் பெற முடியாமல் இருக்கின்றது என்று சொன்னார்கள். அவர்களுக்கு இந்த ஆண்டு முதல் 50 சதவிகிதம் விகிதாசாரப்படி ஒதுக்கப்பட வேண்டுமென்ற முறை பின்பற்றப்படவிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்குகிற இடங்கள் நிச்சயமாகக் கிடைக்கும். அது தவிர, பாலிடெக்னிக்கிலே சேர விரும்புகிற மாணவர்களுக்கு மேலும் வாய்ப்பளிக்க நாம் இப்போதுகூட (Part-time Diploma Course) என்று பாலிடெக்னிக்கிலே வைத்திருக்கிறோம். அது 3, 4 ஆண்டுகள் படிக்கவேண்டியிருக்கிறது. அதை மேலும் பல பாலி டெக்னிக்குகளுக்கு விரிவுபடுத்த அரசு ஆலோசனை செய்து வருகிறது. நாம் அதிக மாணவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்ற ஆர்வத்தில் எடுக்கின்ற நடவடிக்கைகள் அதன் தரத்தைக் குறைக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத் தான் நாம் பாதுகாப்பாக சில நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மேலும் அடுத்த ஆண்டு புதிய பாலிடெக்னிக்குகள் திறக்க வாய்ப்புகளையும் நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அது தவிர இப்போது புதிதாக ஆரம்பிக்கப் பட்டு நடத்துகின்ற மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வி பயிலுகின்ற வாய்ப்புகள் மாணவர்களுக்கு நிறைய உண்டு. மாணவர்களுக்கு அதிக வாய்ப் புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கின்றபோது, அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள், இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப நல்ல நடவடிக்கைகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதுகுறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவை இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி என் அனுமதி மறுக்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திருவாளர்கள் க. இராமமூர்த்தி அவர்களும், சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கி றார்கள். அது திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும்.





### 2. தகவல் கோரல்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 'ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சாதாரணமாக வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு வருவார்கள். ஆனால் இன்றையதினம் பச்சைச் சட்டை போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். வெளியே நடக்கின்ற விவசாயப் பேரணிக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று அறிய விரும் புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படி ஒரு சம்பந்தமும் இல்லை.

### 3. கவன ஈர்ப்பு.

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் ஆசிரியர்கள் சங்கம் ஊராட்சி ஒன்றியத்தின் முன் ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட மாறுதல்களை எதிர்த்து நடத்திய உண்ணாவிரதம் குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத் தின் ஆசிரியர்கள் சங்கம், அவ்வூராட்சி ஒன்றியத்தின் முன் 21—6—1980 முதல், ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட 61 நியாயமில்லாத மாறுதல்களை எதிர்த்து நடத்திய உண்ணாவிரதத்தைக் குறித்தும் அதனால் பொது மக்களும், மாணவர்களும் இக்கட்டான நிலைக்குட்பட்டதைக் குறித்தும் ".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்கள் பொது மாறுதல்களுக் கான முன்மொழிவுகளை ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் போதுமானது. பெரிய அறிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அறிக்கை@ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 58—59 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் ஆசிரியர்கள் சங்கம் ஊராட்சி ஒன்றியத்தின் முன் ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட மாறுதல்களை எதிர்த்து நடத்திய உண்ணாவிரதம் குறித்து

[1980 ஜூலை 5

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்ற புகார்கள் இனிமேலாவது வராமல் இருக்க விதிமுறைகள் அமைத்து, நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்காமல் ஆசிரியர்களை மாற்றம் செய்யும் முறையில் அரசு தக்க ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து அரசு கவனிக்கும்.

## 4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றிய பாராட்டுக்கள் மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு ஏராளமாக வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. எதிர்பாராத இடங்களிலேயிருந்துகூட மறைமுகமாகவும், நேராகவும் பாராட்டுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தக் காலங்கடந்த சமயத்தில் நானும் என்னுடைய பாராட்டுதல்களை உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அறிக்கையைப் பாராட்டுவதற்கு முக்கிய காரணம் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நம்முடைய நாட்டிலே திருவள்ளுவப் பெருந்தகை இந்த நாட்டை ஒரு புதிய வழியிலே செலுத்த நினைத்தார்கள். அறநெறி முறையிலே வாழ்ந்து அதன்மூலம் பொருளீட்டி அதனைக் கொண்டே இன்பம் துய்த்து உயர முடியும், மனிதன் விடுதலை பெற முடியும், உயர்வு அடைய முடியும், உயர்ந்த வாழ்வு பெற முடியும் என்று அவர் கனவு கண்டார். பல பேர்கள் அதனை அமுலாக்க முயன்றிருக்கலாம். ஆனால் நாவலருடைய இந்த முயற்சி அந்த வள்ளுவரின் கனவை நனவாக்குவதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது என்று சொல்லிக்கொள்கிறேன். எளியவருக்கு உதவி கொடுத்து அவர்களை மனிதர்களாக்க, அவர்களை உயர்த்துவதற்காக இப்படிப்பட்ட முயற்சிகளையெல்லாம் எடுத்திருக்கிறார்கள். நான் அந்த விஷயத்தைப் பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. பல தடவைகள் பல பேர் இதைப் பாராட்டிப் பாராட்டிப் பேசியுள்ளார்கள்.

விவசாயப் பொருங்குடி மக்களுக்கு மிகத் தாராளமாக எதிர்பாராத வகையிலே, பொருளாதார நிபுணர்கள் எல்லாம் வியக்கத்தக்க அளவுக்கு 58 கோடியிலிருந்து 60 கோடி ரூபாய் அளவுக்கு கடன் ரத்து செய்திருக்கிறார்கள். அதுவும் நம அரசினுடைய வருவாயிலிருந்து கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.



1980 ஜூலை 5] [திரு. கே. அருணாசலம்]

அதைவிட பெரிய காரியம் இருக்கிறது. விவசாயிகள் நிறைய பேர்கள் கிராமப்புறத்திலே இருக்கிறார்கள். இப்போது மனிதனுடைய போக்கு எப்படி இருக்கிறது என்றால், விவசாயித்திலேகூட இயந்திர முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். அதனாலே கிராமப்புறங்களிலே மக்களே குறைந்து, நகர்ப்புறங்களில் இருக்கச் செய்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது அமெரிக்கா போன்ற நாடுகளிலே 8 சதவிகிதம் பேர்கள்தான் கிராமப்புறங்களிலே இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் நகர்ப்புறங்களிலே இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். தொழில்களும் இயந்திரமயமாக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் மனிதனாக இருக்க முடியாமல் தனித்து இயங்க முடியவில்லை என்ற நிலை வந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். நாடோடியாகி பண்பாடு குலைந்து, குடும்ப வாழ்க்கையும் சிதைந்து போகின்ற நிலைமைகளை நாம் காண்கிறோம். இன்னும் நாம் பார்க்கிறோம். மனிதர்கள் ஹிப்பிகளாக மாறி அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய அளவுக்கு சாப்பாட்டிற்கு வசதியிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு மன நிம்மதியில்லை என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். இந்த நிலைமையை மனதில் கொண்டுதான் "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தையொட்டித்தான் நம் நாட்டின் பண்பாடு கிராமங்களிலேதான் இருக்கின்றது என்று கூறுகிறேன். கிராம வாழ்க்கையை ஒளியுறச் செய்ய வேண்டும். நகரங்களிலே நான்கு தலைமுறைகள் வாழ்ந்தால் போதும், அவர்கள் பேடிகளாக ஆகிவிடுவார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் மனமும் உடலும் அந்த அளவுக்கு மாறிவிடுகிறது. இதை உணர்ந்தே வருகிறோம். வருகின்ற சந்ததியினர்கள் வீரியம் குறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்று சமூக இயல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இங்கே கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் நல்வாழ்வு வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதற்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே விசேஷமாக ஒன்று கூறியிருக்கிறார்கள். அதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதவித் தொகை பெறுவோர் உணவுப் பொரு

(பிற்பகல் 4-20)

ளாகவும், உடையாகவும், பணமாகவும் அரசின் உதவியைப் பெறுவார்கள் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. 100 ரூபாய் கொடுப்பதை 125 ரூபாய் என்று கொடுத்தால் போதாதா? 1,25 கோடி ரூபாய் கொடுக்கிறவர்கள் இந்த உதவியையும் பணமாகவே கொடுத்திருக்கலாம். ஆனால்

பணமே பிரதானம், பணம் ஒன்றுதான் எல்லாம் செய்யும், பணம் பாதாளம் மட்டும் பாயும் என்ற நிலையை மாற்ற வேண்டுமென்று கருதி, பணத்தோடு உணவுப் பொருள்களையும், உடையையும் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பணத்திற்கு மதிப்பு இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் உடைக்கும், உணவிற்கும் இருக்கும் மதிப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதித்தான் இப்படிச்செய்திருக்கிறார்கள். இதிலே பல நன்மைகள் உண்டு. பணவீக்கம் இருக்கும் போது கூட 25 ரூபாய் கூடக் கொடுத்திருந்தால், ஒரு மூட்டை அரிசியை வியாபாரிகளிடம் அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுத்து விநியோகம் செய்யச் சொல்லியிருந்தால், அந்த ஏழைகள் ஒரு கிலோ அரிசி பெறுவார்களா ? கால் கிலோவாவது பெறுவார்களென்று சொல்ல முடியாது. ஆனால் இப்போது கிடைக்கும் அரிசியை சமைத்துக் கொள்வார்கள். கொடுக்கும் பணத்தைக் கொண்டு எஞ்சிய பொருள்களை வாங்குவார்கள். இது பாராட்டத்தக்கது. மேலும் விவசாயிகளிடத்திலிருந்து ஓரளவிற்கு விவசாயப் பொருள்களை வரியாக பெற்று, அதை அந்தந்த வட்டாரத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு விவசாயப் பொருள்களாகவும், உணவுப் பொருள்களாவும், உடையாகவும் கொடுக்கும் முறை வந்தால், பண வீக்கத்தைத் தடுத்துவிடலாமென்று கருதுகிறேன். மேலும் விவசாயத்தை வளர்ப்பதற்காக வேறு பல முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பானது கால்நடைகளைப் பற்றியது. கால்நடை வளத்தை உண்டு பண்ணுவதற்காக காங்கேய ரக மாடுகள், ஓங்கோல் ரக மாடுகள் இவைகளை அதிகமாக வளர்த்து, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவை விரும்புகிறது. ஆனால் அரசின் இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னாலும், நல்ல தரமான மாடுகள் சாரி சாரியாக அண்டை மாநிலங்களிலுள்ள கசாப்புக் கடைகளுக்குச் செல்வதைப் பார்க்கும்போது, நம்முடைய மனம் கவலைப்படுகிறது. இதனைத் தடுக்கவும் ஆவன செய்ய வேண்டும். இப்போது இருக்கிற அரசு முன்னாலே இருந்தபோது, யோசித்துப் பார்த்து, இதற்கு ஆவன செய்ய ஒரு சட்டமுன் வடிவைக் கொண்டு வந்திருந்தது. காலம் கடந்து போனதால் அந்தச் சட்டமுன்வடிவு சட்டமாகாமல் போய்விட்டது. மறுபடியும் அவசர உணர்வோடு, அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் மாடுகளைத் தடை செய்ய, ஆவன செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், இப்போது செய்யும் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராகிவிடும். எனவே இதில் அரசு மிக விழிப்போடு இருந்து அண்டை மாநிலங்களுக்கு நல்ல மாடுகள் ஓட்டிச் செல்வதைத் தடை செய்ய வேண்டும். அவர்கள் நல்ல மாடுகளையெல்லாம் அதிகப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். எனவே அவற்றையெல்லாம் கவனித்து, அதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, வேளாண்மைத் துறையை மேம்படுத்துவதற்காக பல ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவப் போவதாக வாக்களித்துள்ளார்கள். திட்டத்திலே அதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. அதிகமாகத் தென்னை மரங்களைப் பயிரிடப் போகிறார்கள். தென்னையைப்பற்றி நம் எல்லோருக்கும் தெரியும். காணி நிலம் வேண்டும், அதில் 10, 15 தென்னை மரங்கள் வேண்டுமென்று பாரதி சொன்னார். நெல்லைவிட தென்னை நல்ல உணவு என்று ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கிறார்கள். தாய்ப் பாலில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றனவோ அந்த அளவிற்கு தேங்காயில் சத்துக்கள் இருக்கின்றன, எனவே அதை உண்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அண்டை மாநிலங்களில், பொட்டலாக இருந்த இடங்களிலெல்லாம் தென்னை மரங்கள் வைத்து வளர்க்கப்படுகின்றன. நம்முடைய மாநிலத்திலும் அந்த முயற்சி நடந்திருக்கிறது. இன்னும் அதிகமாக முயற்சி செய்து, அதை வளர்க்க வேண்டும். அரசின் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே போன்று மனிதனுக்கு உறுதுணையாக இருக்கும் பனை மரங்களைப் பற்றி விவசாயத்துறை கவனிக்கவில்லை. அது தன்னுடைய வேலை இல்லையென்று விவசாயத் துறையினர் நினைக்கிறார்கள். பனை மரம் மக்களுடைய வாழ்க்கைக்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கிற தென்பதைப் பார்க்க வேண்டும். சர்க்கரைக்குத் திண்டாடும் இந்தக் காலத்தில் கருப்பட்டி 10 கோடி ரூபாய் அளவிற்கு அனாயாசமாக உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. மோசமான நிலங்களில் பனை மரம் வளர்கிறது. அந்தப் பனை மரத்தைக் குட்டையாக வளர்த்து, அதிலிருந்து சீக்கிரம் பனங்காய்கள் காய்க்க ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். அதற்கு விவசாயப் பல்கலைக் கழகமோ, ஆராய்ச்சிக் கழகங்களோ இதுவரை எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஏதோ 'பாம்-கர் பெடரேஷன்' கொஞ்சம் செய்து வருகிறது. அது போதாது. சர்க்கரைக்காகப் பல ஆலைகளை அமைத்து, அதிலிருந்து சர்க்கரையை உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் பனை மரத்திலிருந்து பதநீரை எடுத்துப் பயன்படுத்துவதில்லை. ஒரு லட்சம் பேர் இன்றைக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏதோ அந்த மரத்தில் ஏறும்பொழுது, அவர்கள் தவறி விழுந்தால், அவர்களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது போதாது. அந்தத் தொழிலையே மதிப்புடைய தொழிலாக கவுரவமான தொழிலாக மாற்றியமைக்க ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். அப்ரோப்ரியேட் டெக்னாலஜி பற்றிப் பேசுகிறார்கள், ரிசர்ச் டெவலப்மென்ட் பற்றிப் பேசுகிறார்கள். அதிக வாய்ப்பு உடையவர்களுக்குத்தான் நம்முடைய ஆராய்ச்சிகள் பயன்படுவதாக இருக்கின்றன. அதை மாற்ற வேண்டும். ஏழை எளியவர்களுக்காக ஆராய்ச்சிகள் நடக்கும்

படியாகச் செய்ய வேண்டும். இன்றைக்கு கதர் கிராமக் கைத் தொழில்
வாரியம் என்று இருக்கிறது. அதற்குப் பணம் கொடுக்கிறார்கள், ஆதரவு
கொடுக்கிறார்கள். அவர்கள் இந்த ஆதரவை வைத்துக்கொண்டு மட்டும்
இந்த வேலையைச் செய்துவிட முடியாது. பனையைப்பற்றி விவசாய
நிபுணர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் குறுகிய காலத்தில்
பனை மரத்தை உண்டாக்க, குட்டையான பனை மரம் உண்டாக்க, நல்ல
பழம் தரும் பனைமரம் உண்டாக்க தேவையான ஆராய்ச்சிகளைச் செய்ய
வேண்டும். இப்போதே நம்முடைய நாட்டிலிருந்து நுங்குப் பொருள்கள்
டப்பாவில் அடைக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.
இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நார்ப் பொருள்கள் தூத்துக்குடியிலிருந்து
ஏற்றுமதியாகின்றன. இது பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடாததைப்
பெரிய குறையாக நான் நினைக்கிறேன். குமரி, நெல்லை, இராமநாதபுரம்,
மதுரை மாவட்டங்களிலுள்ள பின் தங்கிய குடிமக்களுக்கு—டிரவுட்-ப்ரோன்
ஏரியாவில் உள்ள மக்களுக்கு—மத்திய அரசு கொடுக்கிற உதவியையும்
கொண்டு, நம்முடைய மாநில அரசு இன்னும் அக்கறை செலுத்தி, அதிகமாக
உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு நாட்டுக்குத் தொழில் வளம் இன்றியமையாதது. விவசாயம்
வளர வேண்டுமானாலும், தொழில் வளம் வேண்டும். பெரும் தொழில்களும்
வேண்டும். பல தொழில்களை, சிறு அளவுப் பயிற்சியோடு கிராமப்புறங்
களிலே அதிகமாகச் செய்ய முடியும். அந்தமாதிரித் தொழில்களையெல்லாம்
கிராமங்களில் ஏற்படுத்தாமல், பெரும் பணத்தை உபயோகப்படுத்தி நகரங்
களிலே ஏற்படுத்துவது நம்முடைய பணத்தை வீணாக்குவதாகுமென்று
நினைக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். தீப்பெட்டித்
தொழிலை விம்கோ நிறுவனம் செய்து வந்தது. அதை ஓரளவிற்குக் கட்டுப்
படுத்தி, அந்தத் தொழிலைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி,
சிவகாசியில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். இப்போது பல கிராமங்
களிலே அந்தத் தொழில் நடைபெறுகிறது. அண்மையிலே குடியாத்தத்திற்குப்
பக்கத்தில் 150 இடங்களுக்கு மேலே தீப்பெட்டி தயாரிக்கும் தொழில் நடக்
கிறது. அவர்கள் தங்களுடைய வீடுகளிலே இருந்துகொண்டே அந்த
வேலையைச் செய்கிறார்கள். அதனால் குடும்ப நலம் சிதறாமல் இருக்கிறது.
ஆனால் பெரும் தொழில்களை ஆரம்பிக்கும்போது, ஓர் ஊரிலிருந்து வேறோர்
ஊருக்குப் போகிறார்கள். கணவன் ஒரு ஊரில், மனைவி ஒரு ஊரில்,
குழந்தைகள் ஒரு ஊரில் என்று இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்
தைப் படைக்க நீங்கள் விரும்ப மாட்டீர்களென்று நினைக்கிறேன். இப்படிப்
பட்ட தொழில்கள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் பெரும் தொழி



லதிபர்களிடம் விடாமல், சிறு தொழில்களாக, குடிசைத் தொழில்களாக
நடத்த வேண்டும். காந்தியடிகள் ஒன்று சொன்னார்கள். இங்கிருந்து
டெல்லிக்குப் போக வேண்டுமானால், கட்டை வண்டிகளை வரிசையாக
நிறுத்தினால், ஆகாயவிமானத்தில் போவதைப்போல் 3 மணி நேரத்தில்
போக முடியாது, ஆனால் ஒவ்வொரு வீட்டிலேயும் ஒரு கதிர் என்று ஒரு
லட்சம் கதிர்களை வைத்தால், மில்லிலே எந்த அளவிற்கு ஒரு லட்சம் கதிர்
கள் உற்பத்தி செய்யுமோ அந்த அளவிற்கு உற்பத்தி செய்ய முடியுமென்று
சொன்னார்கள். காந்தி பழைய காலத்து ஆள் என்று இப்போது சொல்லு
கிறார்கள். இந்தச் சமுதாயத்தின் பண்பாட்டைக் காக்க வேண்டும், அதே
நோக்தில் விஞ்ஞானம் வளர்ந்து வந்துள்ள காலத்திலே மற்ற நாடுகளோடு
தோள் நின்று வாழ வேண்டுமென்று, காந்தியடிகள் பல நிலைகளிலே போதனை

(பிற்பகல் 4-30)

செய்தார்கள். அந்தக் காலத்திலே காங்கிரஸ் மகா சபையின் அனுமதி பெற்று
நூற்போர் சங்கம் ஒன்றை காந்திஜி ஆரம்பித்தார், அந்தச் சங்கம்
பரவலாக வேலை செய்து வருகிறது. அதைப்பற்றி காந்திஜி சொல்லும்போது,
அது ஒரு மையர் பார்ம் ஆஃப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்று
சொன்னார். அதில் நூற்பவர் இருக்க மாட்டார். ஒரு ராஜகோபாலாச்சாரி
இருப்பார். ஒரு வணிகத் துறைப்பற்றித் தெரிந்தவர் இருப்பார், ஒரு சட்டம்
பற்றித் தெரிந்தவர் இருப்பார், தொண்டு ஆர்வம் கொண்டவர் இருப்பார் என்று
காந்திஜி மிக அருமையாகச் சொன்னார். தொண்டுள்ளம் கொண்டவர்கள்
அதில் இருந்துகொண்டு மற்றவர்களுக்கு உதவிகள் செய்வார்கள் என்று
சொன்னார். அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நம்முடைய தமிழ்
நாட்டிலே இன்றையதினம் கொஞ்சம்தான் இருக்கின்றன. அவற்றை
கூட்டுறவு ரெஜிஸ்டிரார் இப்போது பதிவு செய்து ஏற்றுக் கொள்ள மாட்டார்.
காரணம் இன்றையதினம் சட்டம் அப்படி இருக்கிறது. கூட்டுறவுத் துறை
யிலே இப்படி ஒரு சங்கத்தைப் பதிவு செய்யுங்கள். அது மிகவும் நல்லது.
அப்படி இந்த அரசு செய்தால், உலகத்திற்கே நாம் வழி காட்டியவர்கள்
ஆவோம். பொதுவாக நம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றை நான் சொல்ல
ஆசைப்படுகிறேன். மனிதன் எப்போது பார்த்தாலும் ஊக்க ஊதியம்
கொடுத்தால் தான், வேலை செய்வான் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதே
சமயத்தில் சமுதாயத்திலே ஒருசில நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதை
யும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் கைமாறு கருதாது கடப்பாடு
உணர்வுடன் வேலை செய்பவர்கள். அப்படிப்பட்டவர்களும் சமுதாயத்தில்
அவசியம் தான். அவர்களும் சேர்ந்தால் தான் இந்த சமுதாயத்தை
முன்னேற்ற முடியும். ஆகவே இதிலே நம்முடைய அரசு கவனம் செலுத்த
வேண்டும்.

அடுத்து, கதர் கிராமத் தொழில் வாரியம் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவோம் என்றும், தாலி கூட அவர்கள் மூலம் தான் செய்து கொடுப்போம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது நல்லது தான். இத்தகைய புதிய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றவர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்படுகின்றன. அண்ணா சாலையில் அண்ணா சிலைக்கு முன்னால் இருக்கக்கூடிய கதர் கிராமத் தொழில் அங்காடியை 150 இளைஞர்கள் சேர்ந்து நடத்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய வருவாயையெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டு, குறைந்த ஊதியத்தில், சரியான விலையில் பொருள்களைக் கொடுக்கிறார்கள். லாபம் வந்தால், அந்தத் தொழிலிலேயே லாபத்தை ஈடுபடுத்துவது என்ற முறையில் ஒரு முன் மாதிரியாக புதுமுறையில் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி 50 சங்கங்கள் தான் நம் மாநிலத்தில் இருக்கின்றன. அதன் எண்ணிக்கையை 350 ஆக ஆக்க வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு புது முறைக் கூட்டுறவுச் சங்கம் என்கிற முறையில் அவற்றை ஏற்படுத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அது புது மாதிரியாக இருக்கும்.

மருத்துவ அமைச்சர் அவர்கள் அவையிலிருந்து போய்விட்டார்கள். இருப்பினும் மருத்துவத் துறைபற்றி என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் நிதிநிலை அறிக்கையிலே மருத்துவத்திற்காகவும் நல்ல கணிசமான தொகையை ஒதுக்கியிருக்கிறோம். முற்போக்கான நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. 11 லட்சம் குழந்தைகளுக்கு பி.சி.ஜி. அதாவது தடுப்பு ஊசி போடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் இந்தத் தடுப்பு ஊசியை எவ்வளவோ எதிர்த்தார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த உலகத்திலுள்ள பெரிய விஞ்ஞானிகள் எல்லாம் எதிர்த்திருக்கிறார்கள். மேலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கூட மருந்து என்ற தலைப்பில் 10 குறள் எழுதியிருக்கிறார். அதில்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்று சொல்லியிருக்கிறார். 11 லட்சம் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடும்போது, அவர்களுடைய உடம்பு தாக்குப் பிடிக்குமா என்பதையும் யோசிக்க வேண்டும். பொதுவாக மருந்தைக் குறைவாக உபயோகப்படுத்த வேண்டும். இப்போதே 4 ஆயிரத்திற்கும் அதிகமான நோய்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு புகழ்பெற்ற மருத்துவ மேதை



இதுபற்றி ஒரு பெரிய அடிப்படைக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் இதுபற்றிய ஒரு கணக்கையும் எடுத்தார். அந்தக் கணக்குப்படி மருந்தினால் வருகின்ற நோய்கள் 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவை என்று உலகத்திற்கு ஒரு சிவப்பு விளக்கை அவர் காட்டியிருக்கிறார். மருந்து சாப்பிடுபவர்களுக்கு ஜாக்கிரதை என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். கான்சர் கூட வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த உலக வாழ்க்கையில் நிலையில்லா வாழ்க்கை. உலகம் நிலையில்லை. அப்படிப்பட்ட தத்துவத்திலே சென்றுகொண்டிருக்கிறார்கள். வள்ளுவர் வழியிலே சென்று மருந்துகளே வேண்டாம் என்பது தான் மிக நல்ல முறை. இந்தவித வாழ்க்கையை எல்லாத் துறைகளிலும் இருந்துகொண்டு நாம் செயல்படுத்த வேண்டும். மருத்துவத் துறையிலேயே இன்றையதினம் "பிரிவென்டிவ் மெடிசன்" என்று ஒரு பிரிவை வைத்திருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அரசு இயற்கை மருத்துவத்திற்கு ஆதரவு கொடுத்தது. அதற்கான அனுமதியையும் கொடுத்தது. ஆனால் அதை அப்படியே விட்டுவிட்டார்கள். யாருக்கு இஷ்டமோ அவர்கள் அதைச் செய்யட்டும் என்ற முறையில் அதை அப்படியே விட்டுவிட்டார்கள். அரசு அதோடு மட்டும் நின்று விடக்கூடாது. அனுமதி கொடுத்துவிட்டால் மட்டும் போதாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருவள்ளுவர்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்று எழுதியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிப் பேசினார் ஆனால் யாரும் அருந்துகிறதையும் போற்றுகிறதில்லை, அருந்துகிற வகையையும் போற்றுகிறதில்லை, முறையையும் போற்றுகிறதில்லை. ஆகவே மருந்துண்ணல் தேவைப்படுகிறது. மருந்து உண்ணுகின்ற காரணத்தால் தான், இந்திய மனிதனின் சராசரி வயது 27 என்று இருந்தது இப்போது 54 ஆக உயர்ந்திருக்கிறது. உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி, "அற்றது போற்றி" உண்பது நல்லது தான். ஆனால் நூற்றுக்கு 95 பேர் அதைக் கடைப் பிடிப்பதில்லை. அதனால் தான் மருந்து தேவைப்படுகிறது.

திரு. கே. அருணாசலம் : வள்ளுவர் "மருந்து" என்ற தலைப்பில் மட்டும் இதுபற்றிச் சொல்லவில்லை. கடைசியிலும் 4 வகை மருந்து பற்றியும், மருத்துவர்கள் பற்றியும் எழுதியிருக்கிறார். ஆகவே அரசும் கொஞ்சம் கருணை கொண்டு மருந்தைக் குறைவாக உபயோகப்படுத்துவது பற்றியும், இயற்கை மருத்துவத்திற்கும், சித்த மருத்துவத்திற்கும் ஆதரவு தருவது

[திரு. கே. அருணாசலம்] [1980 ஜூலை

பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். சித்த மருத்துவத்தையும், இயற்கை மருத்துவத்தையும் மேற்கொள்வதன் மூலம் மருந்து உபயோகிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னும் ஒன்றே ஒன்றைப்பற்றி மட்டும் ஒருசில கருத்துக்கள் சொல்லி அமைகிறேன். அதிகமாகப் பேச விரும்பவில்லை. கல்வியைப் பற்றி எல்லோரும் பேசினார்கள், பேசுகிறார்கள். எனக்கும் கல்வியைப்பற்றி ஒருசில கருத்துக்கள் சொல்ல ஆசை. கல்வி மானியத்தின்போது நான் கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன் என்றாலும், ஒன்றே ஒன்றைப்பற்றி மட்டும் தான் இப்போது சொல்ல ஆசைப்படுகிறேன். கல்வித் துறையிலே மிகச் சிறந்த பணிகளை யெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். இப்போது எல்லோருக்கும், கல்வி கற்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கெல்லாம் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு ஊரிலேயும் பள்ளிகளை ஏற்படுத்தி கல்வியைச் சொல்லிக்கொடுக்கும் முறை இருக்கிறது. பிற்பட்டோருக்கு 50 சத விகிதம் இடங்கள் ஒதுக்கீடு என்கிற ஒரு நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். எட்டாவது வகுப்பு, 12-வது வகுப்பு வரை—இப்படி எல்லாம் கல்வியைக் கற்றுக் கொடுத்த பிறகுகூட, அவர்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் தனியாக பாலிடெக்னிக் போன்றவற்றில் சேர்ந்து வேலை முறைகளைக் கற்கின்ற நிலையைத் தான் நாம் பார்க்கிறோம். இதற்கு மாற்று வழியைக் கண்டுபிடிக்கும் வரை என்ன செய்வது ? இப்போது "முறைசாரா கல்வி" முறை அமுலுக்கு வந்திருக்கிறது. வேலையையும் செய்வார்கள். எஞ்சிய நேரத்தில் முறைசாரா கல்வியை வந்து படிப்பார்கள். அது உற்சாகமாக இருக்கிறது என்ற முறையில் அதை விரிவாக்கப் போகிறார்கள். நான் முறைசாரா கல்வி முறையை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, மற்றவற்றில் செலவிடும் பணம் எல்லாவற்றையும் எடுத்து இந்தக் கல்விக்காகச் செலவிட்டால் மிகவும் நல்லது. அதுதான் உண்மையான கல்வி என்று எனக்குத் தோன்றுகிறது.

வயது வந்தவர்களுக்கெல்லாம் கல்வி என்பது பற்றியும் இப்போது பேசப் படுகிறது. நம்முடைய மாநிலத்திலேயும் அதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். ஆனால் அது வெற்றிபெறவில்லை. மத்திய அரசு "தாலியங்கி" நிறுவனங்கள் எல்லாம் அதைச் செய்ய வேண்டுமென்று சொன்னது. ஆனால் நம் மாநிலத்தில் அது ஒருமாதிரி தவக்கத்தில் தான் இருக்கிறது. இனிமேல் அதை விரிவாக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். அப்படி விரிவாக்கும் போது, அவை பள்ளிக்கூடங்களாக இருக்காது. கல்வி மையங்களாக இருக்கும். அதில் ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் ஊக்குனர்கள்



1980 ஜூலை 5] [திரு. கே. அருணாசலம்]

தான் இருப்பார்கள். புரட்சிகரமான முதல்வர் அவர்களின் தலைமையிலுள்ள இந்த அரசு பெரிய புரட்சிகரமான திட்டத்தை அவசியம் நிறைவேற்ற வேண்டும். பதினைந்து, இருபது ஆண்டுகளில் கற்கிற அறிவு மாத்திரம் போதாது. அந்த அறிவைக் கொண்டு இந்த 20 ஆம் நூற்றாண்டில் வாழ முடியாது. வேகமாக அறிவு வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஜனத்தொகை மட்டுமல்ல, அதை விட பன்மடங்கு அதிகமாக அறிவு வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. பத்து, பதினைந்து வயதிலேயே, கசக்கி, பிழிந்து எல்லா அறிவையும் மாணவர்களுக்குப் புகுத்தி அவர்களை நாம் அறிவாளிகளாக உருவாக்கிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க கிராமக் கல்வி மையங்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கே ஊக்குனர்கள் இருப்பார்கள். மக்கள் தாமே கற்பார்கள். ஆனால் சொல்லிக் கொடுப்பவர்கள் இருக்க மாட்டார்கள். ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள். ஆசிரியர்கள் இடையாது என்பதற்காக நண்பர்கள் இங்கே கோபித்துக் கொள்ளக்கூடாது. இப்போதுள்ள பள்ளிக் கூடங்கள் எல்லாம் நடக்கும்; கல்லூரிகள் எல்லாம் நடக்கும். அதற்காக ஏகதேசமாக இருநூறு கோடி ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இடையாது பயன் இல்லை என்று தெரிந்த பிறகு, இதையே முழுவதும் நம்பிக் கொண்டிருக்காமல்—புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டுமென்றுதான் சொல்கிறேன், நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் ரிசர்ச், ஸ்டேட் இன்ஸ்டிட்யூட் ஆப் ரிசர்ச் இரண்டு டிரயினிங்—இவர்கள் எல்லாம் கூட தேசையையே திரும்பத் திரும்ப சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்—இப்போதுதான் சில புதிய வழிகளைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். அதற்குப் பெயர் முறைசாராக் கல்வி என்று சொல்கின்றனர். தம்முடைய அரசு அதில் இன்னும் அக்கறை எடுத்துக் கொண்டு அதிகமாகச் செய்ய வேண்டும், இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். விடைபெறுகிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையினை நிதியமைச்சர் அவர்கள் மன்றத்திலே வைத்ததும், ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருக்கின்ற செய்தித் தாள்கள் தமிழக மக்களுக்கு புரட்சிகரமான திட்டத்தை வழங்கியிருப்பதாக ஒரு நாள் விளம்பரப்படுத்திக் கொள்ளத்தான் இது பயன்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையினை முழுமையாகப்

[1980 ஜூலை 5

படித்துப் பார்க்கின்ற நேரத்தில், நடைமுறையில் ஏற்கனவே இருந்து வந்த திட்டங்களை அறிவித்தும், இடையிலே மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு காடு தழுவிய அளவிலே வழங்கிய சில திட்டங்களை மையமாக வைத்து அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்களே தவிர, இந்த ஆட்சியாளர்கள் தேர்தல் நேரத்திலே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி அதன்மூலம் ஆதரவினைப் பெறக் கூடிய வகையிலே இந்த நிதி நிலை அறிக்கை இல்லை என்பதை நான் இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புதிய வரிகள் விதிக்கப்படவில்லையே தவிர, தமிழகத்திலே இருக்கின்ற நான்கரை கோடி மக்களுடைய வறுமையைப் போக்கும் வகையில் தமிழகத்திலே இருக்கின்ற படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தரக்கூடிய வகையிலும், தொழிலாளர்கள் நிம்மதியைப் பெறக் கூடிய வகையிலும் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 ஜனவரி மாதம் ஆளுநர் அவர்கள் கூட்டவையில் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை மீண்டும் திருப்பிப் படித்து, ஏற்கெனவே ஜனவரி மாதம் ஆளும் கட்சித் தரப்பிலே சொன்னவைகளைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெறச் செய்திருக்கிறார்களே தவிர, தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றும் இடம் பெறவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே நூற்பாலைகள் 39 தனியார் துறையிலே தொடங்கப்படுவதாகவும், அதன்மூலம் 19,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். தனியார் அத்தகைய நூற்பாலைகள் தொடங்க அனுமதி பெற்று, நிதி ஆதாரத்தைப் பெற்று, அதை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, இந்த ஆண்டு அந்த வேலை முடிந்து 19,000 பேர்கள் வேலையில் சேருகின்ற நிலைமை இருக்கிறதா ? மேலும் இது தனியார் எடுக்கும் முயற்சியாகத்தான் இருக்கிறது. இந்த மாநில அரசாங்கம் தானே ஒரு 19,000 பேர்களுக்கு அல்லது 20,000 பேர்களுக்கு கூட்டுத்துறையிலே தொழிற்சாலைகளை, நூற்பாலைகளை உருவாக்கி, வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், ஆட்சியில் இருப்பவர்களுக்கு அது பெருமை தரும் ; இந்த மாநிலத்தில் மக்கள் நம்பி வாக்களித்தார்களே அவர்களுடைய மனமும் நிம்மதி பெறும். அதற்கு நேர்மாறாக தனியார் தொடங்குகின்ற நூற்பாலைகளைச் சுட்டிக்காட்டி பெருமை அடித்துக் கொள்வதில் எந்தவிதமான பயனும் இல்லை.



30 ஜூலை 5] [திரு. சேர். ஆறுமுகம்]

பெரிய தொழிற்சாலைகள் தமிழகத்திலே உருவாக்கப்பட்டால் தான், அதன் லம் தொழிற்கல்வி பெற்ற சில படித்த வாலிபர்கள் வேலை வாய்ப்பைப் ற முடியும். அரசாங்கத்திலே வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களை குத்துக் கொடுப்பதன் மூலம் நாம் வேலை வாய்ப்பைத் தர முடியும். ஆனால் ந்த இரண்டு காரியத்திலும் அமைச்சரவை ஈடுபடாமல், அதை எண்ணியும் ார்க்காமல், நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைத் தயார் சய்திருப்பதைப் பார்க்கும்போது, நம்மையெல்லாம் பெருத்த ஏமாற்றத்திற்கு வர் ஆளாக்கியிருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே படித்த ாலிபர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் வேலை உத்தரவாதம் இல்லை. அரசாங்கத் தரப்பிலே தொழில்கள் தொடங்கப்பட்டு அங்கே வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று நம்பி வாக்களித்த பெருமக்கள் திருப்திப்படும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை இல்லை. அதோடு தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை சேலம் இரும்புத் தொழிற்சாலை ஆகும். இதற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவியதன் காரணத்தால், அவர்களின் அனுமதியின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இது. ஆனால் நம்முடைய மாநில அரசாங்கம் இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலையை வேகமாக நிறைவேற்ற எடுத்துக்கொண்ட முயற்சி என்ன என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

1969 ஆம் ஆண்டு அல்லது 1970 என்று நினைக்கிறேன். அப்போது இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு, கால்கோள் விழா நடைபெற்று, பிறகு தொடர்ந்து கழக ஆட்சி இருக்கின்ற வரை அங்கே வேலைகள் நடைபெற்று, அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று தனியாக அதற்காக வேலை தேடித் தரும் அலுவலகம் தொடங்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு அடையாள கார்டும் வழங்கப்பட்டு, அதனைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தந்து காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் போதிய அளவிற்கு நிதி ஒதுக்காத காரணத்தால், மிகவும் சாதாரண முறையில் மோசமான நிலையில் பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது மத்திய அரசாங்கம் வழங்கக் கூடிய நிதி அங்கே பணியாற்றக் கூடிய அலுவலர்களுக்குச் சம்பளம் செலவு செய்யக் கூடிய வகையில் தான் இருக்கிறதே தவிர, அந்தத் தொழிற்சாலை வளரக் கூடிய வகையில் நிதி கிடைக்கவில்லை. இதற்கு நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு, அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, நிதியைப் பெற்று அந்தத் தொழிற்சாலையை விரைவு படுத்த வேலை நடைபெற்றிருக்குமானால், இன்றையதினம் அந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கக் கூடிய கட்டத்தில் இருந்திருக்க

[திரு. சோ. ஆறுமுகம்] [1980 ஜூலை 5

வேண்டும். 1980-81-க்குள் உற்பத்தி தொடங்கும் என்று முதலில் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலைகளைப் பார்த்தால், இன்னும் பத்தாண்டுகள் சென்றால்கூட, அங்கே இருக்கும் கஞ்சமலையில் இருக்கும் கல்லை எடுத்து அதை இரும்பாகக் காய்ச்சி உருக்கும் காரியங்கள் நடைபெறாது என்று அச்சப்படக் கூடிய அளவில் தான் அங்கே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் இந்த மண்ணின் மைந்தர்களுக்கு அங்கே வேலை வாய்ப்பு தரப்படுகிறதா என்பதை மாநில அரசாங்கம் கவனிக்க வேண்டும். இதிலே ஒன்றும் அரசியல் உள்நோக்கம் இல்லை. ஆனால் அங்கே இருக்கின்ற பெரிய அதிகாரிகள் அந்தப் பகுதியிலே உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வழங்குவதில்லை. மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் என்னதான் சுட்டிக்காட்டியிருந்தாலும், சாதாரணமாக ஒரு தொலைபேசி ஆப்பரேட்டர் என்ற பணி கூட அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு, குறிப்பாக அந்த மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு, இன்னும் சொல்ல வேண்டுமானால் தமிழகத்தில் இருப்பவர்களுக்கு, தரப்படுவதில்லை.

(பிற்பகல் 4-50)

ஆனால், அதற்கு நேர்மாறாக, தமிழகம் அல்லாத பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான் அங்கே அதிகமான வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்டு, அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் புறக்கணிக்கப்படுகிற நிலைமை இருந்து வருகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மண்ணின் மைந்தர்களைப் பொறுத்தவரையில், இங்குள்ள அரசு அவர்களுக்காக என்று புதிதாகத் தொழில் தொடங்காவிட்டாலும், அவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்யாவிட்டாலும், ஏற்கெனவே தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்களிலாவது நமது மாநில மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்யும் வகையில் நமது மாநில அரசு நேரடியாகத் தலையிட்டு கவனிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தனியார் தொடங்கி நடத்தி வந்த பல தொழிற்சாலைகள் ஏற்கெனவே மூடப்பட்டிருந்தன. அதில் ஒன்று சேலம் சவுத் இந்தியன் கிளாஸ் பேக்டரி என்ற நிறுவனம். சுமார் 500 முதல் 1,000 பேர் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலை கடந்த 5, 6 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை மாநில அரசே மேற்கொண்டு, மீண்டும் அதற்கு நிதியுதவி செய்து, தொழிற்சாலையை நடத்துவதன் மூலம், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும்



லை 5] [திரு. சோ. ஆறுமுகம்]

ருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுமார் 6 மாத காலத்திற்கு
அந்தத் தொழிற்சாலையைத் திறந்து, அதற்குப் புத்துயிர் தருகிறோம்
சொல்லி, அதற்காக ஒரு விழாவையே நடத்தினார்கள். விழா நடந்
பிர, அந்தத் தொழிற்சாலை செயல்படுவதற்கு இன்னும் எந்தவிதமான
ும் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அந்தத் தொழிற்
ல் பணி ஏதும் தொடங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில்
ாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தத் தொழிற்
ஏற்கெனவே தனியார் ஒருவரால் நடத்தப்பட்டு வந்தது. அந்தத்
ல் நட்டம் ஏற்பட்டதாலோ, அந்தத் தொழிற்சாலையைச் சரியாக
ததாலோ, மூடப்பட வேண்டிய அவசியத்தை உருவாக்கிய அந்தத்
ரயே இப்போது மீண்டும் அதன் மானேஜிங் டைரெக்டராகப்
ருக்கிறார்கள். யார் அந்தத் தொழிற்சாலை மூடப்படுவதற்குக்
ாக இருந்தாரோ அவரிடமே இன்றையதினம் அந்தத் தொழிற்
ய நிர்வகிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரண
தாவது அந்தத் தொழிற்சாலையைத் திரும்பவும் தொடங்க அரசாங்
ிருந்து அனுமதி கிடைத்து விழா நடத்தியதன் காரணமாக, வங்கி
நந்து கடன் வசதி அவருக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப்
தயும், விழா நடத்த அரசு அனுமதித்த அந்தத் தொகையையும்
பப்படுத்திக்கொள்ள இதன் மூலம் அவருக்கு ஒரு வாய்ப்பு ஏற்
தவிர, இன்னும் அந்தத் தொழிற்சாலையில் பணி ஏதும் தொடங்கப்
லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இதனால் அந்தப் பகுதி
தொழிலாள நண்பர்கள் மிகுந்த ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்
என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ங்கம் ஒரு தொழிற்சாலையை மீண்டும் திறப்பது என்று முடிவு செய்து
க ஒரு விழாவையும் நடத்திவிட்ட பிறகு, அத்தொழிற்சாலை செயல்
இருப்பது என்பது சரியல்ல. எனவேதான், இந்த ஆட்சியாளர்கள்
த் தொழில்களைத் தொடங்காவிட்டாலும், அவர்கள் விழா நடத்திய
லையாவது நடத்தி, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை
ப அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

த்து, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பிரச்சினையில், அவர்
அளிக்கப்பட்ட தக்காவிக் கடனில்—அதாவது ரூ. 21 கோடியில்—
காடியைத் தள்ளுபடி செய்ய முடியாது என்றும், மீதியுள்ள 16 கோடி
மட்டும் ரத்து செய்யப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்

பட்டிருக்கிறது. தக்காவிக் கடனில் அடங்கிய ரூ. 5 கோடி கடன் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளை வெட்டவும், மற்றும் விவசாயத்திற்கான டிராக்டர்களை வாங்கவும் பெறப்பட்ட கடனாகும்.

அதுமட்டுமல்ல, 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு, தக்காவிக் கடன்கள் அல்லாத கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய இருப்பதாகவும் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தாலும், 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக நிலம் உள்ளவர்கள்தான் கிணறுகளை ஆழப்படுத்தவும், கிணறுகளை வெட்டவும் கடன் வாங்கியிருப்பார்கள். ஆகவே தக்காவிக் கடனை ரத்து செய்யப்போகிறோம் என்கிறபோது, அது முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டுமே தவிர, அதில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பிரித்து, ஒரு சாராருக்கு இல்லை என்று சொல்லுகிற நிலைமை இருக்கக்கூடாது. எனவே தக்காவிக் கடனில் குறிப்பிட்ட 5 கோடி ரூபாயையும் சேர்த்தே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய விவசாயிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய கூட்டுறவுக் கடன் மொத்தம் ரூ. 80 கோடியாகும். அதற்குரிய வட்டி ரூ. 15 கோடியையும் சேர்த்தால், மொத்தக் கடன் தொகை ரூ. 95 கோடியாகும். இதில் ரூ. 42 கோடியை மட்டும் இந்த அரசு ரத்து செய்ய இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீடு இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே எங்கேயும் காணப்படவில்லை. எனவே இதை ஒரு விளம்பரத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெறச் செய்திருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு எழுகிறது. எனவே நிதிநிலை அறிக்கையில் இதற்கான நிதியை ஏன் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் இந்த 42 கோடி ரூபாயுடன் 16 கோடி ரூபாயைச் சேர்த்தால் மொத்தம் 58 கோடி ரூபாய்தான் ஆகும். ஆனால் என்ன காரணத்தாலோ இந்த ஆட்சியாளர்கள் இதைச் சரிவரக் கணக்கிடாமல் நிதிநிலை அறிக்கையில் ரூ. 58 கோடி அல்லது ரூ. 60 கோடி ரத்து செய்யப்பட இருக்கிறது என்று 'ரவுண்டு ஆஃப்' செய்து ஒரு வகையில் அழகாக இருக்கட்டும் என்று எண்ணினார்களோ என்னவோ—சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் இது வெறும் விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுக் கடன் பெற்றவர்களில்,



பெரிய விவசாயிகள் எவ்வளவு, சிறிய விவசாயிகள் எவ்வளவு என்ற புள்ளி விவரத்தை, அதாவது 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர் அதிகமாக வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கை, சாதாரணமாகத் தொலைபேசி மூலமாகக் கூட கேட்டுப் பெற்றுவிட முடியும். அப்படிப்பட்ட நிலையில் இந்த நோக்கையைச் சரியாகக் கணக்கிடாமல் ரூ. 58 கோடியோடு இந்த ஆட்சியாளர்கள் ஒரு 2 கோடி ரூபாயைச் சேர்த்து 58 அல்லது 60 கோடி ரூபாய்க் கடனை ரத்து செய்ய இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தால், இது ஏதோ ஏமாற்றுகிற காரியத்தைப்போல் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல. கூட்டுறவுக் கடன் பெற்றவர்களில் கூட்டுப்பட்டாதாரர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பார்த்தால், ஒரு குடும்பத்தில் 20 ஏக்கர் நிலம் இருக்கும். ஒருவர் பெயரில் அது இருக்கும். அவருக்கு 4 பிள்ளைகள் இருப்பார்கள். அவர்கள் 4 பேரும் பாகம் பிரித்துக்கொண்டு, தனித் தனியாக விவசாயம் செய்தாலும், அந்த நிலம் முழுவதையும் தங்களின் தகப்பனார் பெயரிலேயே வைத்திருப்பார்கள். அவர்களில் ஒருவர்கூட தங்களின் பெயருக்குப் பட்டாவை மாற்றிக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் கூட்டுறவுக் கடன் வாங்கும்போது, மற்ற 3 பேர் வாங்காவிட்டாலும், ஒரு பிள்ளை மட்டும் இந்த 20 ஏக்கர் நிலத்திற்கும் மொத்தமாகச் சேர்த்து சான்றிதழ் வாங்கி, மதிப்பை உயர்த்திக் கடனைப் பெற்றுவிடுவார்கள். உள்ளபடியே மற்ற மூவரும் கடன் வாங்கியிருக்க மாட்டார்கள். அப்படி இருக்கும்போது, சிறு விவசாயிகள் என்று கணக்கிட்டு, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்போது, கூட்டுப்பட்டாதாரர்களின் நிலைமையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தகப்பனார் பெயரில் பட்டா இருந்தாலும், தாயார் பெயரில் பட்டா இருந்தாலும், அந்தச் சொத்துக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்ற கணக்கையும் எடுத்து, அதன் அடிப்படையில் 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கும் கடனை ரத்து செய்தால்தான், "5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நன்மை" என்று சொல்வதில் பொருள் இருக்கும், அவர்களுக்கும் பயன் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைவிட மிகப் பெரிய பிரச்சினை விவசாயிகளின் பிரச்சினை. அவர்கள் தமிழகத்தில் 9 அம்சக் கோரிக்கை என்ற பெயரில் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்று அவர்கள் பம்புசெட்டுகளுக்கு உபயோகித்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதாகும். விவசாயத்திற்காக அவர்கள் உபயோகித்த மின்சாரத்திற்காக சில இடங்களில் ஒவ்வொருவர் ரூ. 15,000 அல்லது ரூ. 20,000 வரை பாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த மின் கட்டணத்தை அவர்கள் இன்னும் கட்டவில்லை. இன்னும் சில

[திரு. சோ. ஆறுமுகம்] [1980 ஜுலை 5

இடங்களில் மின்சார பம்புசெட்டுகளுக்கான மின் கட்டணம் மட்டுமல்ல, விவசாயத்தோடு, கிராமங்களில் ரைஸ் மில் வைத்துக்கொண்டு தொழில் செய்பவர்கள் மின் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கிறார்கள். இது தமிழகத்தில் இன்றைக்குத் தீராத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு மட்டுமல்ல, மின் வாரியத்திற்கும் அரசாங்கத்திற்கும் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.

கூட்டுறவுக் கடன்களிலும், தக்காவிக் கடன்களிலும், விவசாயிகளைப் பாகுபடுத்தி, பெரிய விவசாயி, சிறு விவசாயி என்று பிரித்து, இப்போது தக்காவிக் கடனில் 5 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய மாட்டோம் என்று அரசு நிதிநிலை அறிக்கையில் கூறியிருந்தாலும், பின்னாலே தள்ளுபடி செய்தாலும் செய்யலாம். காரணம் இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீர வேண்டுமென்றால், இந்தக் கடன்களோடு மின்கட்டணத்தையும் தள்ளுபடி செய்தாக வேண்டும். இப்போது அப்படிப்பட்ட யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதை திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். நிதிநிலை அறிக்கையில் தள்ளுபடி செய்ய மாட்டோம் என்று சொல்வதுபோல் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின் கட்டணத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் என்ன கொள்கையை வகுக்க இருக்கிறதோ என்று அரசாங்கத்தில் பணியாற்றுகிறவர்கள், இன்றையதினம் மின் கட்டணத்தை வசூலிப்பதில் எந்த முயற்சியும் எடுக்காமல் இருக்கிறார்கள். இதன் காரணமாகப் பெரிய நெருக்கடியே ஏற்படலாம். எனவேதான் இந்த மின் கட்டண பாக்கியையும் அரசாங்கம் ரத்து செய்யப் போகிறதா இல்லையா என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உழவு மாடுகளுக்கான இன்சூரன்ஸ் திட்டம் நல்லதுதான். உழவு மாடு களுக்கும் கறவை மாடுகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகள் தங்கள் மாடுகளை இன்சூர் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னால், இதற்கான பிரிமியத்தை அரசாங்கத்தின் நிதியிலிருந்து கட்ட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களிலிருக்கும் ஏழை எளிய விவசாயிகளே அதைக் கட்டிக் கொள்ள வேண்டும் அல்லது அவர்களே எல்.ஐ.சி. மற்ற நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு தங்கள் மாடுகளை இன்சூர் செய்து கொள்ள வேண்டும் என்று இந்தச் சுமையை விவசாயிகளிடம் தள்ளிவிடக்கூடாது. அந்த மாடுகளுக்கான இன்சூரன்ஸ் தொகையை, அதற்குரிய பிரிமியத்தை—அரசாங்க நிதியிலிருந்தே கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1980 ஜுலை 5] [திரு. சோ. ஆறுமுகம்]

(பிற்பகல் 5-00)

மேட்டூர் அணைக்குக் கீழ் பகுதியில் செக்டேம் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் நீண்டகாலமாக எடுக்கப்பட்டு, இப்போது மத்திய சர்க்காரினுடைய அனுமதிக்குக் காத்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதை விரைவுபடுத்தி மின் உற்பத்தியைச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதனால் பாதிக்கப்படுகிற அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் உத்தரவாதத்தை அரசாங்கம் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே பத்து அம்சத் திட்டம் என்று குறிப்பிட்டு, அதிலும் சிறப்புத் திட்டம் என்று ஒரு திட்டம் ஆளும் கட்சியின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேலை கிடைக்காத காரணத்தால், வேலை இல்லாத ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுப்போம் என்று சொல்லிவிட்டு, அப்படி அவர்களுக்கெல்லாம் ஒரு ரூபாய் தருகிற திட்டத்தை மேற்கொள்ளாமல் ஏமாற்றிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே இலவச அரிசி வழங்கும் திட்டம். வாரம் ஒன்றுக்கு ஐந்து கிலோ அரிசி வாங்குபவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகக் கொடுக்கப்படும் என்று தேர்தல் நேரத்திலே, தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டதொரு கொள்கையை வகுத்துச் செயல்படாமல், பென்ஷன் பெற்றுக்கொண்டு கிராமத்தில் இருப்பவர்களுக்குத்தான் தரப்போகிறோம் என்று இப்போது சொல்லுவதை தமிழகத்திலே உள்ள மக்கள் வரவேற்பார்கள் என்று நினைக்கவேண்டாம். தேர்தல் நேரத்தில் சொன்னதைதான் அவர்கள் நம்பினார்கள். ஐந்து கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி இலவசமாகக் கொடுக்கப்படும் என்பதையும், ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் இலவசமாகக் கொடுக்கப்படும் என்பதையும்தான் அவர்கள் நம்பினார்கள். இதை நம்பித்தான் அவர்கள் வாக்குகளைப் போட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வீட்டுக்கு ஒருவர் வேலை பெற்றிட இரட்டை இலைக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று மிகப் பெரிய விளம்பரத்தை போஸ்டர்களாக அச்சடித்து ஒட்டியிருந்தார்கள். அதை நான் கூடப் பார்த்தேன். மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. அப்படி வீட்டுக்கு ஒருவர் வேலைபெற அரசு வழிவகை செய்தால்,

[திரு. சோ. ஆறுமுகம்] [1980 ஜூலை 5

திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படி வேலை கொடுக்க எந்தவிதமான உத்தரவாதமும் இந்த நிதிநிலை அறிக்கையிலே தரப்படவில்லை. "வருகிற ஐந்தாண்டுக் காலத்தில் அரசுத் துறையின் மூலமும், கூட்டுறவுத் துறையின் மூலமும் 50 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிவிட்டோம். அதற்காக இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம்" என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாவதொரு திட்டத்தைக் கூறியிருக்கிறார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்திலே ஒரு பிரச்சாரத்தைச் செய்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைத்தால், மக்காச் சோளம்தான் கிடைக்கும் என்று விளம்பரப்படுத்தினார்கள். நாங்கள் மக்காச் சோளம் போடுகிறோமா இல்லையா என்பது வேறு. அப்போதிருந்த விலைவாசியைச் சுட்டிக்காட்டி விலைவாசி ஏறிவிட்டது என்று சொன்னார்கள். இப்போது அரிசி விலை. . .

(திரு. சி. இராமலிங்கம் இருக்கையிலிருந்து எழுந்தார்)

THIRU S. ARUMUGAM : I am not yielding.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் மக்காச் சோளம் என்று சொல்லுகிறார்கள். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பரவாயில்லை. உறுப்பினர் பின்னால் பேசும்போது அதுபற்றிச் சொல்லலாம்.

திரு. சோ. ஆறுமுகம் : பாராளுமன்றத் தேர்தலின்போது இருந்த விலையை, சட்டமன்றத் தேர்தலின்போது இருந்த விலையோடு ஒப்பிட்டு அன்றைக்குப் பேசப்பட்டது. சட்டமன்றத் தேர்தலின்போது 210 ரூபாயாக இருந்த அரிசியின் விலை இப்போது 260 ரூபாயாக ஆகியிருக்கிறது. ராகியின் விலை கிலோ ஒன்றுக்கு 50 பைசா கூடுதலாகியிருக்கிறது. கடலை எண்ணெயின் விலை லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் கூடுதலாகியிருக்கிறது. புளியின் விலை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் மூன்றரை ரூபாய் கூடுதலாகியிருக்கிறது. சர்க்கரையின் விலை ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் உயர்ந்திருக்கிறது. அன்றைக்கு தக்காளியின் விலை கிலோ இரண்டு ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 7 ரூபாயாக ஆகியிருக்கிறது. வெங்காயத்தின் விலை கூட உயர்ந்திருக்கிறது. பருப்பு வகைகளின் விலையும் உயர்ந்திருக்கிறது. இப்படி விலைவாசிகள் ஏறிக்கொண்டே போவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட முயற்சிகளில் அரசு ஈடுபடவில்லை.



5] [திரு. சோ. ஆறுமுகம்]

ந்க் கொள்கையில் அரசு எந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்
என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லியாக வேண்டும். 25
டினால் பர்மிட் வழங்கப்படுமென்று சொல்லிவிட்டார்கள். பல
ர்மிட்டைப் பெற்று, அதன் மூலம் உயர்தர மதுக்களை வாங்கி
யில் விற்கும் வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். யார் யார் அப்படி
ர் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அது அரசாங்கத்தின்
வந்திருக்கும். முன்பு மதுவிலக்கை எடுத்துவிட்ட பின்பு
ம், நகரங்களிலும் ஒதுக்குப்புறங்களில் கள்ளுக் கடைகளும்
டைகளும் வைத்திருப்பார்கள். இரண்டு, மூன்று பர்லாங்
ருக்கும். அங்கே சென்று குடித்துவிட்டு வந்து விடுவார்கள்.
றையதினம் மதுவிலக்கு அமுலில் இருக்கும்போது, ஒவ்வொரு
ன்று, நான்கு இடங்களில் சாராயக் கடைகள் வைத்து விற்பனை
. குக்கிராமங்களிலும் கூட இரண்டு, மூன்று இடங்களில்
ற முறையில் விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.
ாமத்திலே இருக்கிற மக்கள் துன்பத்திற்கும், வேதனைக்கும்
சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அரசினுடைய கொள்கை
தைத் தெரிவிக்க வேண்டும். "அப்படித் தான் கிராமங்களில்
இடங்களிலே விற்பார்கள். நகரத்திலேயும் வீதிகளில் விற்பார்கள்,
ங்களின் பக்கத்திலும், மருத்துவமனையின் பக்கத்திலும் வைத்து
நாங்கள் கேட்கமாட்டோம்" என்றாவது சொல்லிவிட வேண்டும்.
கும் என்பதுதான் கொள்கையா, அல்லது மதுவிலக்கைத் தீவிரப்
ாரிடத்திலே வேறு முறை ஏதாவது இருக்கிறதா என்பதைத்
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

க இந்த நிதிநிலை அறிக்கை நாட்டு மக்களுடைய எண்ணத்திற்
பவில்லை, பாராட்டக் கூடிய வகையிலே அமைய வில்லை, பொது
வகின்ற அறிக்கையாக, விளம்பரத்திற்காகத் தயாரிக்கப்பட்ட
அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அமைகிறேன்.

ப்பியார் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த
றிக்கையின் மீது பேசுகிற சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்த
ர் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே
விற்கு என்னை உருவாக்கி இங்கே அனுப்பி வைத்த என்னுடைய
ம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத்
காள்கிறேன்.

[திரு. ஜேப்பியார்] [1980 ஜூலை 5

நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவருக்கு உரிய இடத்திலிருந்துதான் பேசுகிறாரா? அங்கே அவருடைய பெயர் போடப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். (இருக்கை மாற்றப்பட்டதாக சில உறுப்பினர்கள் கூறினார்கள்.)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இருக்கையை மாற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. யார் மாற்றினார்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் நிற்கும் இடம் சரிதானா?

**திரு. ஜேப்பியார் :** என்னுடைய பெயர் கொண்ட அட்டை இங்கே இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சரி, பரவாயில்லை, அட்டையை பிறகு மாற்றிக்கொள்ளலாம். அட்டையை அங்கிருந்து எடுக்கவில்லை போலும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அட்டை இருப்பது இடமாகாது. இடம் எங்கே போடப்பட்டிருக்கிறதோ அங்கேயிருந்துதான் பேச வேண்டும். அட்டையை வேறு யாராவது கூட மாற்றியிருக்கலாம். அவருக்கென்று ஒதுக்கிய இடம் எதுவென்பது செயலாளருக்கும், தலைவருக்கும் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பின்பக்கம் திரு. வள்ளி முத்துவுக்குப் பக்கத்தில் பிளாக் எண் 2-ல் போடப்பட்டிருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சு என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பேச அனுமதிக்கலாம்.

THIRU G. SWAMINATHAN : It is against the rule for an hon. Member to speak from any other place.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் பேச அனுமதிக்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** தலைவர் அவர்களே, பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. மாணிக்கம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அனுமதித்தது தலைவர்தான்.



1980 ஜூலை 5]

[பிற்பகல் 5-10]

**திரு. ஜேப்பியார் :** இங்கே பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே வரியிலே பேசிவிட்டு அமர்ந்திருக்கலாம். நிதிநிலை அறிக்கையின் மீது நிமிடக் கணக்கில் பேசி, சீக்கிரம் முடியுங்கள் என்று சொன்னாலும் முடிக்காமல், அதற்கு மேலும் பேசிவிட்டு, கடைசியாகப் பேசுகிறபோது, இதிலே ஒன்றுமில்லை, ஏமாற்று வேலை என்று மிகச் சாதாரணமாகச் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையை அலசிப் பார்த்துப் பேசுகிறபோது, அது குறித்த கருத்துக்களையும் அல்லது அரசாங்கம் செய்ய வேண்டிய காரியங்களையும் எடுத்துரைத்தால், அந்தக் கருத்துக்கள் எவ்வளவு வலிவாக இருக்கும் என்பதை எங்களைப் போன்றவர்கள் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும். எதிர்க்க வேண்டுமென்ற ஒரே எண்ணம்தான் இங்கே பேசுகின்ற எதிர்க் கட்சிகளுக்கு இருக்கின்றதே தவிர, இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அவைகளை நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கின்றார்கள், இதிலே சில குறைபாடுகள் இருக்கலாம் என்று பேசுகின்ற பேச்சை இந்த சபைக்கு வந்ததிலே இருந்து என்னாலே கேட்க முடியவில்லை. பேசுகின்ற அத்தனை பேர்களும் அரசைக் குறை சொல்லலாமா அல்லது தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டிலே ஏதாவது இருக்கிறதா என்றுதான் கேட்டுப் பேசியிருக்கிறார்கள். இங்கே சபையிலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள், அதுவும் குறிப்பாக தமிழகத்திலே ஆண்டு முடித்து அமர்ந்திருக்கின்ற கட்சிகளின் உறுப்பினர்கள் இன்றைக்கு பெருத்த பரபரப்போடு சில நிகழ்ச்சிகளை இங்கே கூறியிருக்கிறார்கள். ஆண்டிருந்தவர்கள், அனுபவங்களைப் பெற்றிருப்பவர்கள் என்றுதான் இங்கே என்னைப் போன்று புதிதாக வந்திருக்கின்ற நண்பர்கள் நினைக்கக்கூடும். இவர்கள் ஆண்டது எப்படி, எந்த அடிப்படையிலே ஆண்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் எனக்கு இப்போதுதான், இந்த சபைக்கு வந்த பிறகுதான் தெரிந்திருக்கிறது. அதிலே குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு அங்கத்தினர் சேலம் ஆறுமுகம் பேசுகிறபோது, '1969 லே சேலத்திலே இரும்பாலை தொடங்கப்பட்டது, அதற்காக தங்கத்தினாலே செய்யப்பட்ட மாங்கனிகளும் தரப்பட்டன, ஆனால் அந்தத் திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை' என்று கேட்கின்ற கேள்வி கொஞ்சம் வியப்பாக இருக்கிறது, எங்களைப் போன்றவர்களுக்கு வியப்பாக இருக்கிறது. 1969 லே ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கு 1976 வரைக்கும் என்ன நிலைமை? குறிப்பாக இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற மைய அரசு எந்த அரசு? இன்றைக்கு இங்கே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் ஆதரிக்கின்ற, தேர்தல் உடன்பாட்டை வைத்துக்கொண்டுள்ள கட்சி, இன்று மத்தியிலே ஆண்டு கொண்

டிருக்கிறது. ஆக "எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் மாநிலத்திலே நல்ல ஒரு நிலைமையை உருவாக்கித் தருவோம். மத்தியிலே நாங்கள் ஆதரிக்கின்ற கட்சியும், மாநிலத்திலே இவர்களுடைய கட்சியும் ஆளுமானால், மைய அரசு எந்தவிதமான சந்தேகமும் இன்றி எல்லாவிதமான நன்மைகளையும் செய்ய முன்வந்துவிடுவார்கள். அது ஒரு அட்சய பாத்திரம். ஆகவே எங்களுக்கு வாக்களிக்கவேண்டும்" என்று எத்தனையோ முறைகள் கேட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 16 எம்.பி.க்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் மத்திய அரசோடு இணைந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அரசாங்கப் பதவியிலே அங்கே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் ஆட்சி நடக்கிறபோது, சேலம் இரும்பாலைத் திட்டத்திற்கு, 16 எம்.பி.க்களைக் கொண்ட கட்சியினர், தமிழகத்திலேயிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட பெருவாரியான கட்சிக்குச் சொந்தக்காரர்கள், மத்திய அரசோடு இணைந்து பணியாற்றக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றவர்கள், இந்தப் பிரச்சினையைப்பற்றி அங்கே பேசினார்களா என்றால், இதுவரைக் கும் சபையிலே வாய் திறக்கவில்லை, பேசவில்லை. அங்கே மௌனமாக இருந்துவிட்டு, மைய அரசில் எந்தவிதமான கேள்வியும் கேட்காமல் இருந்து விட்டு, இங்கே இருக்கின்ற அரசாங்கத்தை "இந்த அரசு செய்யவில்லை, செய்யக்கூடாதா" என்று எங்களிடம் கேட்பது வேடிக்கையான, விந்தை யான ஒன்றாக இருக்கிறது. இங்கே பேசுவதில் அரசியல் நோக்கம் இருக் கிறது. அங்கே பேசிவிட்டால் ஒருவேளை ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம். ஆக, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் அங்கே குரல் கொடுப்பதற்கு இல்லை. தமிழ் நாட்டினுடைய நிதிநிலையைப் பற்றி, தமிழ் நாட்டினுடைய எண்ணங்களைப்பற்றி, குறை கூறி, இங்கே ஆளுவது வேறு கட்சியாக இருந் தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டது தமிழகம் என்பதை மறந்துவிட்டு, அங்கேயே ஐக்கியமாகி அவர்கள் எடுக்கின்ற முடிவுகளுக்கெல்லாம் தலையாட்டிவிட்டு, இங்கே ஆளுகின்ற கட்சிக்கு ஆட்டம் காட்டலாம் என்று நினைப்பது, என்னைப் பொறுத்தவரையில், அரசியலிலே ஒரு ஏமாற்று வித்தை என்பதைத் தான் நான் இங்கே தெள்ளத்தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு என்பது மாநில அரசை வழி நடத்துகின்ற அரசு என்று நான் கருதுகிறேன். மத்திய அரசு இன்றைக்கு தமிழ் நாட்டிற்கு என்ன செய்கிறது என்று மக்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னொன்றைக் குறிப்பிட்டார்கள்: "பணம் இங்கே வருகிறது. அந்தப் பணத்தைச் செலவு செய்ய முடியவில்லை. அது திரும்பிப் போகிறது" என்று தேர்தல் காலங் களிலே சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர்கள், எதிர்க் கட்சியாக இருந்தவர்கள், அவர்கள் எல்லாம் தேர்தல்





காலங்களிலே சொன்னார்கள். "மாநில அரசுக்கு வரவழைத்த பணமெல்லாம், மத்திய அரசாலே ஒதுக்கப்பட்ட பணமெல்லாம் இங்கே செலவழிக்கப்பட முடியாமல், இவர்களுடைய கையாலாகாத்தனத்தால், அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டு, அந்தப் பணமெல்லாம் திருப்பிவிடப்பட்டது" என்றெல்லாம் தேர்தல் காலத்திலே மிகத் தெளிவாகப் பேசினார்கள். பேசியவர்களுக்கு ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்திய அரசிலிருந்து மாநில அரசாங்கத்துக்குத் தருகின்ற பணம் எந்த நேரத்திலே தரப்படு கின்றது? நம்முடைய அரசில் ஏப்ரலிலிருந்து ஏப்ரல் ஒரு ஆண்டு என்று கணக்கிடுகிறோம். ஆனால் மத்திய அரசு நமக்குக் கொடுக்கின்ற பணத்தை நவம்பர்-டிசம்பர் மாதங்களில் தருகிறார்கள். நவம்பர்-டிசம்பரிலே ஒதுக்கப் படுகின்ற பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்யச் சொல்கிறார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு, 2, 3 மாத காலத்திலே எந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆண்டிருக் கிறார்கள், 7 ஆண்டுக் காலம் ஆண்டு அனுபவம் பெற்றிருக்கிறார்கள், இந்த நாட்டினுடைய வரவு செலவுகளையெல்லாம் அவர்கள் கண்காணித்திருக்கிறார் கள். க்ளுக்குத் தெரிந்திருக்கும். எத்தனையோ முறைகள் மத்திய அரசி லிருந்து பணம் வந்து, அந்தந்த இலாக்காக்களுக்குச் செலவிடப்படாமல் வேறு இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும். அந்தப் பணத்தை எடுத்து அதன் மூலம் தமிழ் நாட்டில் ஒரு கட்சி உதயமாகி அது ஒரு பெரும் பிரச்சினையான வரலாறும் கேட்பவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும், தெள்ளத் தெளிவாகப் புரிந்திருந்தும், மக்களை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக, மக்களுடைய கவனத்தை வேறு திசையிலே மாற்ற வேண்டுமென்பதற்காகப் பேசுகிறார்கள். மக்கள் எல்லாம் ஏமாந்துவிட்டார்கள் என்று எண்ணி எவ்வளவு பேச்சு ? எவ்வளவு போஸ்டர்கள் ? எவ்வளவோ பேசினார்கள். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அரிசி தருவோம்" என்று சொன்னார்கள். மிகத் தெளிவாக மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். தாலிக்குத் தங்கம் என்று சொன்னார்கள். ஊரெல்லாம் இன்றைக்கு சந்தி சிரித்துக்கொண்டிருக்கிறது. தாலிக்குத் தங்கம் என்று போஸ்டர் அடித்திருக்கிறார்கள். போஸ்டர்கள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றன. அது எத்தனை கிலோ எடை என்றுகூட மக்களுக்குச் சொல்லாமலிருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிந்த விஷயம் இது என்று சொல்கிறார்கள். நாட்டிற்கு மிக சிறு பிள்ளைத்தனமாகச் சொல்லியிருக்கி றார்கள். நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியெல்லாம் பேசியிருக்கிறார்கள். இன்னும் ஒன்றைச் சொல்லலாமென்றால், மத்திய அரசாங்கம் என்பது மாநில அரசாங்கங்களைக் கைப்பொம்மையாக நினைத்து,

நினைத்த நேரங்களிலே அதை ஆட்டிப்படைக்கலாம் என்று நினைக்கிறார்கள். அந்தத் தன்மைகள் மாற்றப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாநில சுயாட்சி பற்றி 1971 ஆம் ஆண்டு வானம் பிளக்கின்ற அளவுக்குப் பேசினார்கள். “இன்றைக்கு ஆளும் கட்சியாக நாங்கள் வந்திருந்தால் அந்தக் கொள்கையை இன்னும் திட்டவட்டமாகச் சொல்லியிருப்போம்” என்கிறார்கள். அதைப்பற்றி யாரும் பேசவில்லை. அன்று நிறையப் பேசினார்கள், “அதுதான் எங்களுடைய கொள்கை. அதுதான் உயிர் மூச்சு. எங்களுடைய உயிர் மூச்சே மாநில சுயாட்சிதான். மத்தியிலே கூட்டாட்சி” என்று சொன்னார்கள். அது ஏகபோகமாக அவர்களுக்கே சொந்தம் என்ற வகையிலே அந்த வார்த்தை ஜாலங்களை, தாங்களாகவே வைத்துக்கொண்டு பேசினார்கள். 1971-லேயிருந்து வேகமான பேச்சு. “மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி” எங்களுடைய மாநிலத்திலே சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்று சொன்னார்கள். மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்தியிலே கூட்டாட்சி என்னவாயிற்று? மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி இங்கே பேசியவர்கள், திட்டவட்டமாக விவரம் தெரிந்தவர்கள் என்று கருதக்கூடியவர்கள் என்ன சொல்கிறார்கள்? அவர்களுடைய கன்னிப் பேச்சானாலும் சரி, மற்ற பேச்சானாலும் சரி, இவர்களுடைய உயிர் மூச்சான அந்தக் கொள்கை என்னவாயிற்று? அந்த மாநில சுயாட்சி பற்றி இந்த மேலவையிலே பேசாமல் இருப்பதற்கு நான் பெரிதும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் உண்மையான கொள்கையைக் குழி தோண்டி புதைத்துவிட்டார்கள். அந்தக் கொள்கையில் இவர்களுக்கு இன்னும் சொந்தம் இல்லை என்பதை இவர்களுடைய பேச்சிலேயிருந்து தெரிந்துகொண்டேன்.

தலைவர் அவர்களே, நான் திடீரென்று பேச ஆரம்பித்ததனால், நான், சில குறிப்புகளைக்கூட கொண்டு வர மறந்துவிட்டேன். என்னுடைய கன்னிப் பேச்சை இத்துடன் முடிக்கிறேன். நான் அடிக்கடி பேசும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று கூறி, இன்று இங்கு பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே. நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையிலே, பல்வேறு கட்சிகளும் செய்தித் தாள்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய, தமிழக அரசினுடைய இந்த நிதி நிலை அறிக்கையினை பல்வேறு வகைகளில் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், சொல்லவேண்டிய கருத்துக்களை, அறிவுரைகளை





க்க முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கின்றன. இங்கே எதிர்க் கட்சி ரிசையிலே அமர்ந்திருக்கின்ற பல்வேறு கட்சிப் பிரதிநிதிகள்கூட ரவேற்றும், இன்னின்ன அம்சங்கள் இந்த அறிக்கையில் சேர்ந்திருந்தால் து சிறந்த பட்ஜெட்டாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். பலர் க்கபூர்வமான ரீதியில் பல ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனை ளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதை இங்கேயுள்ள மன்ற றுப்பினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். இந்த அறிக்கையிலே வரிச் மை குறைக்கப்பட்டிருக்கிறது. ஏழை மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் ந்த பளுவையும் உண்டாக்காது என்பதால், இந்த நிதிநிலை அறிக்கையை ான் மனதாரப் பாராட்டுகிறேன். ஏழைகளின் காவலனாக இருக்கும் ாண்புமிகு நாவலர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டித்தந்ததற்கு என் னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்கு சுமார் 60 கோடி ரூபாய் அளவுக்கு, கடன் சுமையை ரத்து செய்திருப்பது குறித்து பாராட்டாத அரசியல் கட்சிகளோ, பத்திரிகைகளோ இல்லை. அது குறித்து வேறுவித ாக இன்னும் என்ன செய்திருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் கள் செய்த பணியைப் பாராட்டியிருக்கிறார்கள். இதையொட்டி ஆசிரியர் ளின் பிரதிநிதியாக இங்கே அமர்ந்திருக்கின்ற நான் ஒன்று சொல்கிறேன். எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. அது நியாயமான சந்தேகமாகக்கூட இருக்கலாம் அல்லது யூகமாகக்கூட இருக்கலாம். 5 ஏக்கர் நிலமுள்ள விவசாயிகளுக்கும் அதற்குக் குறைவான நிலமுள்ள விவசாயிகளுக்கும் கடன் சுமையை ரத்து செய்திருக்கின்ற இந்த நிகழ்ச்சியை, நல்ல செயலை அனைவரும் பாராட்டுகின்ற இந்த நேரத்தில் என்னுடைய மனதிலே ஓர் உணர்வு ஏற்படுகின்றது. 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் எந்த அளவுக்கு வருமானத்தைப் பெறுகிறார்களோ அதே அளவுக்கு வருமானத்தைப் பெறுகின்ற நடுத்தர மக்கள், ஏழையெளியவர்கள், சமுதாயத்திலே அடித்தட்டிலே இருப்பவர்கள், வேறு எந்த சொத்தும் சுகமும் இல்லாதவர்கள் பட்டிருக்கின்ற கடனை ரத்து செய்வார்களா? அப்படி எதிர்காலத்தில் ஒரு கோரிக்கை வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்குமா, அதைப்பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்யுமா என்ற கோரிக்கையும் எழுகிறது. எதிர்காலத்தில் அப்படிப்பட்ட

(பிற்பகல் 5-20)

கோரிக்கைகள் வரலாம். அப்படி ஒரு கோரிக்கை வந்தால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழைஎளிய மக்கள் அப்படிப்பட்ட கோரிக்கையை வைத்தால் எந்தவிதமான சொத்து சுகங்களையும் அனுபவிக்காத ஏழை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1980 ஜூலை 5

மக்கள் தங்களைக் கடன் சுமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அந்த நேரத்தில் அது குறித்து தமிழக அரசு அனுதாபத்தோடும், பரிவுடனும் பரிசீலிக்குமென்று நம்புகிறேன்.

1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைபற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். 'டாக்ஸ் ஃப்ரீ பட்ஜெட்' என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்கள். பட்ஜெட்டிலேயுள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டி எழுதியுள்ள அதே நேரத்திலே, முக்கியமான ஒரு அம்சத்தை இறுதியாகக் குறிப்பிட்டு, முடித்திருக்கிறார்கள். பட்ஜெட்டிலே, நடுத்தர வருமானம் உள்ளவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சீரான முறையில் விநியோகம் செய்ய எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை, அது ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்ற ரீதியில் கருத்து சொல்லி முடித்திருக்கிறார்கள். எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியுள்ள வாசகத்தைச் சொல்கிறேன்.

"But the Budget makes no mention of how the Government proposes to streamline the public distribution system to ensure equitable and uninterrupted supply of essential commodities to middle and lower income brackets at fair prices. This is disappointing"

என்று சொல்லியிருக்கிறார்கள். மிகவும் நியாயமான ஒரு கருத்தை எக்ஸ்பிரஸ் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. அந்தக் கருத்தை நான் ஆதரிக்கும் நேரத்தில், அத்தியாவசியப் பொருள்களை ஏழை மக்களுக்கும், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நியாயமான முறையில், சீரான முறையில், ஒழுங்கான முறையில், விநியோகம் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்குமென்று நம்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை)

அடுத்து, பட்ஜெட் விவாதத்திலே பங்குகொண்டு பேசும்போது சிலர் நிதி ஆதாரம்பற்றி நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். நிதி பற்றிச் சொல்லும்போது, மத்திய அரசிடமிருந்து பெற்ற நிதி பற்றியும், பெறப்போகிற நிதி பற்றியும் பேசினார்கள். அதே நேரத்தில் அரசு சார்பில்லாத நிறுவனங்களுடைய நிதி உதவியையும் நம்முடைய அரசு முழுமையான அளவிற்குப் பெற்று, பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆயுள் காப்பீட்டுக் கழகம், உலக வங்கி, ரிசர்வ் வங்கி போன்ற நிதி வளம் உடைய அமைப்புகளிடமிருந்து முழு அளவிற்கு நிதி உதவி தமிழகம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆயுள் சொல்லுவதற்குக் காரணம்



'80 ஜூலை 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் அறிஞர் ருவரிடம் பேச எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது, அவர் ஒரு கருத்தைச் சான்னார். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் ஏராளமான அளவிற்குப் பணம் ருக்கிறது, அந்தக் கழகம் திட்டங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்றது, ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில், அவர்களுடைய திட்டங்ளுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவியைத் தக்க முறையில் இன்னும் திகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். வர் அந்த நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ள மிக க்கியமான நபர் என்பதால், நான் இதைச் சொல்கிறேன். எனவே ஆயுள் ாப்பீட்டுக் கழகத்திடமிருந்து தமிழகம் இன்னும் அதிகமான அளவிற்கு நிதி பற்று, தமிழகத்தின் பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு அதைப் பயன் டுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நிதி நிலை அறிக்கையிலே மின் உற்பத்திக்கு முக்கியத் வம் கொடுத்து, அதற்கான பண ஒதுக்கீடு செய்யப்பட்டு, நல்ல பல திட்டங் ளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி சில கருத்துக்களைச் சால்ல விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்திலே கல்வராயன் மலை ன்று இருக்கிறது. அந்த மலையிலிருந்து மூன்று முக்கியமான நதிகள் புறப் ட்டு, கீழே வருகின்றன. கீழே சமவெளிக்கு வருகின்றன. அதில் கோமுகி, ணிமுத்தாறு என்பவை மிக முக்கியமான நதிகளாகும். இந்த நதிகளைப் யன்படுத்தி 'மினி ஹைட்ரோ எலக்டிரிக் சிஸ்டம்' அமைக்கலாமென்று புணர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அவர்கள் மினி ஹைட்ரோ எலக்ட்ரிக் ிஸ்டம் அமைக்க வாய்ப்பு உண்டு என்று கருத்து தெரிவித்துள்ளதால், அந்தக் கருத்துக்குச் செயல் வடிவம் கொடுக்க தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசுக்குத் தக்க பரிந்துரைகளை அனுப்பியிருப்பதாகச் செய்திகள் வந்திருக் கின்றன. இரண்டாவதாக, மின்சாரத்தை உற்பத்தி செய்ய கடல் அலையை பயன்படுத்தலாமென்றும், அப்படி ஒரு மின் சக்தி உற்பத்தி நிலையம் ஏற் படுத்த வேண்டுமென்றால், அதற்கு மிகப் பொருத்தமான இடம் கடலூர் என்றும் மத்திய விசைத் துறை அமைச்சரவர்கள் கருத்து தெரிவித்திருக்கி றார்கள். கடலூரில் ஒரு மின்சார உற்பத்தி நிலையத்தை அமைக்க மத்திய அமைச்சரே கருத்து தெரிவித்துள்ளதால், கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் சக்தி மிகவும் குறைவாக இருக்கும் இந்தக் காலத்திலே, வேறு பல சக்திகளையும் பயன்படுத்த வேண்டுமென்று சிந்தித்துச் செயல்படும் இந்தக் காலத்திலே, சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யலாமென்று பல இடங்களிலே பேசுகிறார்கள். இந்த ரீதியில் எனக்குத் தெரிந்தவரையில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் துறையிலே இதற்கென்று தனிப் பிரிவு ஏற்படுத்தி, எந்தெந்தக் காரியங்களுக்கு அதைப் பயன்படுத்தலாம், எந்தெந்தக் காரியங்களுக்கு அது நடைமுறையில் ஒத்துவரும் என்று ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். தமிழக அரசுக்கு அது தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது. ஆனால் அந்த ஆராய்ச்சி அங்கு நடைபெறுவது எனக்குத் தெரியும். நான் சம்பந்தப்பட்ட பேராசிரியரிடம் பேசியிருக்கிறேன். இதுவரை செய்த ஆராய்ச்சிக்கு நல்ல முடிவு கிடைத்திருக்கிறது. இன்னும் நல்ல முடிவுகள் வருமென்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் செய்யப்படும் ஆராய்ச்சியின் முடிவுகளை ஆக்கரீதியான காரியங்களுக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டங்களைத் தீட்டி, அதை விரிவுபடுத்தி, அதைப் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவது குறித்து நல்ல முடிவுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதிகள்பற்றி நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் அரசினுடைய முயற்சிகளை வரவேற்கும் நேரத்தில், வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். சில மாதங்களுக்கு முன்பு கடலூரில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட கருத்தரங்கிலே சென்னையிலிருந்து பாசனத் துறையைச் சேர்ந்த நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கலந்துகொண்டார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் விவசாயிகள் வந்து, ஆக்க ரீதியாக, நடைமுறைக்கு உகந்ததாக நல்ல திட்டங்களை, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிய கருத்துக்களை யோசனைகளாகச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள்கூட தன்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் எந்தெந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு உகந்தது என்பதைப் பரிந்துரைக்கும் வகையில் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அங்கே வந்த தலைமைப் பொறியாளர் அவர்கள், அதே இடத்திலே, 'இந்தத் திட்டங்களை நாங்கள் செயல்படுத்த முடியாது' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்கள். இந்தத் திட்டங்களைப்பற்றிப் பரிசீலனை செய்து முடிவெடுக்கிறோமென்று சொல்லியிருந்தால், விவசாயிகளுக்கு அது ஆறுதலாக இருந்திருக்கும். ஆனால் மேடையிலேயே, இந்தத் திட்டங்களை நடத்த முடியாது, இவை சாத்தியக்கூறானவையல்ல என்று சொல்லிவிட்டு வரும்போது, அங்கே





யுள்ள விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு அது ஏமாற்றம் கொடுக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எதற்காக இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது, அதற்கான நோக்கமென்ன என்று பார்க்க வேண்டும். நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கான யோசனைகள் சொல்ல அது நடத்தப்படுகிறது. அங்கே நல்ல யோசனைகள் சொல்லப்படும்போது, அது நிராகரிக்கப்படுகிறதென்றால், அதனால் எந்த அளவுக்கு மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கருத்தரங்குகளில் பல யோசனை சொல்லுவார்கள், கருத்துக்கள் சொல்லுவார்கள். அது குறித்து மேல் மட்டத்தில் விவாதித்து, ஒருசில திட்டங்களைப் பரிசீலித்து, "இவற்றைச் செயல்படுத்துகிறோம், மற்றவற்றைச் செயல்படுத்த முடியாது, அதற்கான காரணங்கள் இவை" என்று எடுத்துச் சொன்னால், மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

(பிற்பகல் 5.30)

சாலைத்திட்டம்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக கோஸ்டல் ரோடு என்ற திட்டம் சொல்லப்பட்டது. அது சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடற்கரை ஓரமாக சாலை போடுகின்ற திட்டம். அது இராமேஸ்வரம் வழியாகச் செல்லும். இந்தக் கடற்கரை சாலைத் திட்டம் முன்பே துவங்கப்பட்டது. ஆனால் இன்னும் நிறைவேற்றப் படவில்லை. இந்த சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் பயணம் செய்கின்ற தூரத்தை நாம் வெகுவாகக் குறைக்க முடியும். அது மட்டுமல்லாமல், பல மாவட்டங்கள் அதன் மூலம் பயன் பெறும். தென்னாற்காடு மாவட்டத்தில் அதைச் செயல்படுத்தவில்லை. அதனால் இத்திட்டம் துண்டிப்பாக இருக்கிறது. இந்தத் துண்டிப்பின் காரணமாக சென்னையிலிருந்து இராமேஸ்வரம்-கன்னியாகுமரி சாலைத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இது மிக மிக முக்கியமான ஓர் அம்சம். இந்தத் திட்டத்தில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, மிக மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், சிதம்பரம் முட்லூர் என்ற இரு ஊர்களையும் இணைக்கும் விதத்தில் வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற திட்டமாகும். இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம் 18 கிலோமீட்டர் தூரத்தை மிச்சப்படுத்தலாம். பெட்ரோல் செலவு, டீசல் செலவு கணிசமாகக் குறையும். அது மட்டுமல்ல, கோடிக்கணக்கில் பணம் மிச்சப்படுத்தலாம். இதை நிறைவேற்ற 50 இலட்சம் ரூபாய் செலவாகும். 50 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டம் தயார் செய்து இதனால் என்ன ஆதாயம் கிடைக்கிறது என்கின்ற விவரங்களையெல்லாம் தொகுத்து, அதுசம்பந்தமான அறிக்கையை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1980 ஜூலை 5

அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அரசு அவசியம் அந்த அறிக்கையைப் பரிசீலித்து சிதம்பரம்-முட்லூர் ஆகிய ஊர்களை இணைக்கின்ற அந்தப் பாலத்தை விரைவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் திட்டம்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். வீராணம் திட்டம்பற்றி நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அது நிறுத்தப்பட்டது என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. அதுசம்பந்தமான குழாய்களை தென்னாற்காடு மாவட்டத்தில் சாட்சியங்களாக விழுப்புரத்திலிருந்து சேத்தியாத்தோப்புக்குச் செல்லும் சாலையின் இரு மருங்கிலும் நாம் இன்றைக்கும் காணலாம். ஒரு குழாய் செய்ய 8 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் நூற்றுக்கணக்கான நீர்க் குழாய்கள் செய்யப்பட்டு சாலை ஓரங்களில் தண்ணீர் பாய்ச்ச வசதியாக, புதைக்கப்பட்டன. இன்னும் அவை அப்படியே காட்சிப் பொருளாகத்தான் இருக்கின்றன. இன்னும் சில இடங்களில் சாலை ஓரங்களில் மேலேயே அந்த நீர்க் குழாய்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டுவிட்டன. பல இடங்களில் புதைக்கப்பட்டுவிட்டன. மீண்டும் அவற்றைத் தோண்டி எடுக்க வேண்டுமென்றால், அதிகப் பொருள் இழப்பு ஏற்படும். தென்னாற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் மிக மிக மோசமான அளவுக்கு, தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களுடைய ஊரிலேயே கூட தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. அங்குள்ள தண்ணீர் செந்நீராக, சிவப்பாக இருக்கிறது. அங்குள்ள மக்கள் நல்ல குடிநீர் இல்லாத காரணத்தால் மிகவும் அவதிப்படுகிறார்கள். அங்கு ஏற்கெனவே பல இடங்களில் நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட நீர்க் குழாய்களும் இருக்கின்றன. ஆகவே அந்த நீர்க் குழாய்களையும், நீரேற்று நிலையங்களையும் பயன்படுத்தி அந்த மாவட்டத்திற்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக அரசு ஈடுபட வேண்டுமென்ற கருத்தை மிகவும் பணிவுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவை விரைவில் எடுக்க வேண்டும்.

அடுத்து, வீட்டு வசதியைப் பொறுத்தவரை, நான் அரசுக்கு மிகவும் பணிவுடன் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் ஆரம்பப்பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. ஆசிரியர்கள் கிராமங்களில் சென்று தங்கினால், மாணவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவும், பள்ளி நேரம் போக மிஞ்சியிருக்கின்ற நேரங்களில் மாணவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும், பயனுள்ள வகையில் நேரத்தைச் செலவு செய்யவும் வாய்ப்பாக இருக்கும். அதற்கு முதல் வேலை



1980 ஜூலை 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

யாக ஆசிரியர்களுக்கு கிராமங்களிலேயே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். கிராமப்புற ஆசிரியர்களுக்கான வீடு கட்டும் திட்டம் என்ற பெயரிலே வீட்டு வசதி வாரியத்திலேயே ஒரு பிரிவை ஏற்படுத்தி இயங்கச் செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அமைப்பதுபற்றி அரசு நிச்சயம் பரிசீலிக்க வேண்டும். நான் ஆசிரியர்களுக்காக மட்டும் இதனைக் கேட்கவில்லை. 24 மணி நேரமும் ஆசிரியர்கள் கிராமங்களில் தங்கினால் தான், கல்விப் பயன் அதிகமாக இருக்கும், (Educational Value) அதிகமாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான் கேட்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோருக்கு 50 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருப்பது பற்றி ஒரு சந்தேகம் எனக்கு இருக்கிறது. அரசின் முழு மானியம் பெற்று இயங்குகின்ற தனியார் கல்லூரிகளிலும், தனியார் பள்ளிக்கூடங்களிலும் கூட இந்த 50 சதவிகிதம் முறையைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அதற்கான ஆணை இன்னும் அவர்களைச் சென்று அடையவில்லை. பிற்பட்டோருக்கு அட்மிஷன்களில் மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பிலும் இந்த 50 சதவிகித முறை பயன்படும் வகையில், அதற்கான ஆணை விரைவில் அவர்களைச் சென்றடைய வேண்டும்.

அடுத்து, குழந்தைகள் முன்னேற்றத்தைப்பற்றி இங்கே ஏதாவது நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று மிக ஆவலோடு பார்த்தேன். உடல் நலனைப் பற்றித்தான் சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் பாராட்டுகிறேன். மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். என்னைப் பொறுத்தவரை, இந்த விஷயத்தில் ஒரு ஆசை. சோவியத் ரஷ்யாவில் இருப்பது போல் குழந்தைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய சொத்து என்ற அடிப்படையில், குழந்தைகளுக்கான கல்விச் செலவு, மற்ற செலவுகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்கால சமுதாயம், வருங்கால சமுதாயம் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்பதற்காக ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே கல்விச் செலவு உட்பட, பராமரிப்புச் செலவு உட்பட, அனைத்தையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்கிற புரட்சிகரமான திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யலாம். இது என்னுடைய நீண்டநாள் ஆசை. தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சியினரும் இந்தத் திட்டத்தை வரவேற்பார்கள். பெருந் தலைவர் திரு. காமராசர் அவர்கள் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சாலையோரத்தில், வீதியோரத்தில், தெரு ஓரத்தில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த குழந்தைகளும் கல்வியறிவு பெற வேண்டுமென்று பெருந்

தலைவர் திரு. காமராசர் அவர்கள் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். **ஆகவே** அவர்கள் காரில் சென்று கொண்டிருக்கும்போது, எங்காவது சிறுவர்கள் சாலை ஓரத்தில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்தால், **உடனே காரை** நிறுத்துவார்கள். அந்தச் சிறுவர்களை அழைத்து, "**என் பள்ளிக்கூடம்** போகவில்லை?" என்று கேட்பார்கள். அந்தக் குழந்தைகளும் **வீட்டிலுள்ள** கஷ்டங்களைச் சொல்லுவார்கள். பெருந்தலைவர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போதெல்லாம் அடிக்கடி நடந்த காரியங்கள் இவை. **அப்போதே** பெருந்தலைவர் அவர்கள் இதற்கு ஒரு வழி காண வேண்டுமென்று **யோசித்**தார்கள். ஆகவேதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனாலும், இன்னும்கூட ஆடு, மாடு மேய்க்கின்ற சிறுவர்களை சாலை ஓரத்தில், தெரு ஓரத்தில் நாம் காண்கிறோம். கிராமப் புறங்களிலே, சாலையோரங்களிலே இன்னும் கூட பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் கல்வியைப் பெறாமல், பள்ளிக்கூடத்திற்குப் போகாமல், தங்களுடைய எதிர்கால வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்கள் கண்ட கனவு இன்னும் நனவாகவில்லை. இந்தக் காரியத்தில் அரசு சிந்தனை செய்யவேண்டும்.

அடுத்து, குழந்தைகளுக்கென ஒரு டிஸ்னி லான்டை தமிழகத்திலே உருவாக்க வேண்டும். குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக அமைக்கப்பட்ட இடம் தான் டிஸ்னி லான்ட். தமிழகத்தில் குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக ஒரு அருமையான இடத்தை அமைக்க வேண்டும். அது தமிழகத்திலே மையமான இடத்திலே அமைய வேண்டும். அதற்காக நல்ல நிதி வசதியை ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

அடுத்து, பட்டம் பெற்றவர்களுக்கு பட்ஜெட்டிலே மாத **உதவித் தொகை** பற்றிச் சொல்லப்படாவிட்டாலும் கூட, தனிப்பட்ட வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் **சொன்னதாக** பத்திரிகையில் செய்தி வந்ததைப் பார்த்தேன். 50 லட்சம் ரூபாய் **தான்** ஒதுக்கியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்தது. பட்டம் பெற்றவர்கள் 95 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். 1 இலட்சம் என்று நாம் வைத்துக்கொண்டாலும், மாதம் 50 ரூபாய் என்று பார்த்தால், மாதத்திற்கு 50 லட்சம் ரூபாய் வருகிறது. ஒரு மாதத்திற்கு 50 லட்சம் ரூபாய் என்றால் ஒரு வருடத்திற்கு 6 கோடி ரூபாய் வருகிறது. 50 லட்சம் ரூபாய் **ஒதுக்கப்பட்டிருக்கிறது** என்றால், இன்னும் கூடுதலாக 5½ கோடி ரூபாய் வேண்டும். அதைப்பற்றி ஏன் சிந்தனை செய்யவில்லை? நியாயமான சந்தேகம். அதை அரசு **தெளிவு**



படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகளுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 95 ஆயிரம் என்று சொன்னேன். ஆனால், தமிழகத்திலே வேலையில்லாமல் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்திருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை **ஏப்ரல் மாத** நிலவரப்படி 10 லட்சத்து 10 ஆயிரம் பேர் என்று மத்திய தொழில் **அமைச்சர்**

(பிற்பகல் 5-40)

நாடாளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார். இந்த பத்து லட்சத்து **பத்தாயிரம்** பேர்களில் கிட்டத்தட்ட 95,000 பேர்கள் பட்டதாரிகள், மற்றவர்கள் பட்டதாரி அல்லாதவர்கள். அவர்களும் படித்தவர்கள். பொதுவாக நாம் பத்து லட்சம் என்று வைத்துக்கொள்ளலாம். இந்தியாவின் மொத்தக் கணக்கைப் பார்க்கும் போது, நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் கொடுத்த கணக்குப்படி, இந்தியாவில் ஒன்றரை கோடி பேர் இன்று படித்துவிட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் இருக்கிறார்கள். அதில் தமிழகத்தில் மட்டும் பத்து லட்சம் பேர்—ரவுண்டாகச் சொல்கிறேன்—இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒரு தெளிவான திட்டம் பட்ஜெட்டில் இடம் பெறாதது குறித்து உள்ளபடியே நான் வருந்துகிறேன். படித்தவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தைப்பற்றி நாம் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். இவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் இருந்தால், இவர்கள் எல்லாம் வேலையற்று நடுத்தெருக்களில் சுற்றிக் கொண்டிருந்தால், பிறகு இவர்கள்தான் சமுதாயத்திற்கு மிகப் பெரிய எதிரிகளாக 'anti-social elements என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட 'elements' ஆக மாறக்கூடியவர்கள். தங்களுடைய சிந்தனைகளை வேறு திசையில் திருப்பக் கூடியவர்களாக ஆகிவிடுவார்கள். அது சமுதாயத்திற்குத் தீமையை விளைவிக்கக் கூடிய காரியமாக மாறும் என்பதால், படித்து வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நல்ல ஆக்கபூர்வமான திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்.

கல்வியைப் பொறுத்தவரையில், கல்வி மானியக் கோரிக்கை வருகின்ற போது, நாம் விரிவாகப் பேச இருக்கிறோம். ஆனால், இங்கே நிதித் துறையைச் சேர்ந்தவர்கள்—மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்—அதைவிட நிதித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் விவாதத்தை முன்னிட்டு வந்திருக்கலாம். அதற்காகச் சொல்ல விரும்புகிறேன். கல்விக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றால், தயவுசெய்து தயங்காதீர்கள். கல்வியிலே இலாப நஷ்டக் கணக்கு பார்க்கக் கூடாது. அதிலிருந்து 'ரிட்டர்ன்' எவ்வளவு வருகிறது என்று பார்க்கக் கூடாது. 'ரிட்டர்ன்' வருவது என்பது உண்மை.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அது வேறு வழிகளில் வருகிறது. மெட்டீரியலாக கண்ணுக்குத் தெரிந்து வருகிறதா என்ற கணக்கைப் பார்க்கக் கூடாது Alfred Marshal, என்ற பெரிய பெரிய பொருளாதார மேதை is a national investment ' அதாவது கல்வி என்பது தேசிய முதலீடு என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தேசிய முதலீட்டிற்கு பணத்தை ஒதுக்கும்போது, இலாபம் நாளைக்கு வருமா, தொழிற்சாலையைப் போல உடனே பலன் தருமா என்று தயவுசெய்து பார்க்கக்கூடாது என்று நிதித்துறை அதிகாரிகளை மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். எனவே கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யும் போது, ' broad mind ' என்று சொல்வார்களே, அந்த வகையில் இதில் ' ரிட்டர்ன் ' வர சில காலம் ஆகலாம், அந்த இலாபம் பல்வேறு உருவங்களில் வரலாம், பல்வேறு திட்டங்கள் மூலம் வரலாம் என்பதை மனதில் கொண்டு காரியமாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் புறங்களில் ' நர்சரி ' பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய நீண்ட காலக் கோரிக்கை. நகரங்களில் உள்ளவர்களுக்கு அப்படிப்பட்ட நர்சரி—மாண்டிசோரி—கிண்டர்கார்டன் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் அப்படிப்பட்ட பள்ளிகள் இல்லாததால், அரசாங்கமே முன்வந்து அவைகளைத் தொடங்க வேண்டும். மக்கள்தொகையில் 80 சதவிகித மக்கள் கிராமப்புறங்களில்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், அப்படிப்பட்ட திட்டங்களுக்கு நிதி உதவி செய்து கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் அரசைப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒருசில கருத்துக்களை மட்டும் கூறிவிட்டு முடிக்க இருக்கிறேன். நேற்று உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். எட்டாம் வகுப்பின் தரத்தை உயர்த்த, புதிய பாடத் திட்டம் வந்திருக்கின்ற கண்ணோட்டத்தில், எட்டாம் வகுப்பை உயர்வகுப்புடன் இணைத்து, பட்டம் பெற்றவர்கள் பாடம் போதிக்கும் நிலை உருவாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மேல்நிலைப் பள்ளித் திட்டம் வந்த பிறகு, 11 ஆம் வகுப்பை ஏற்கெனவே இருந்த பி.டி. ஆசிரியர்கள் எடுத்துக் கொண்டார்கள், இப்போது 11 ஆம் வகுப்பை போஸ்ட்-கிராஜுவேட் படித்தவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதை நான் எதிர்க்கவில்லை. அது கல்வியின் தரத்திற்காகச் செய்யப்படுகிறது. கிட்டத்தட்ட 3,000-க்கு மேற்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். கல்வியின் தரத்தைப் பார்க்கும்போது, மற்ற விஷயங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, கல்வியின் தரத்தை மையமாக வைத்துச் செயல்பட வேண்டும். இதில் கருத்துவேறுபாடு இருக்கக் கூடாது. இடைநிலை ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், பட்டம் படித்து வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புக் கொடுக்க இதை அமுல்படுத்துவது நல்ல கருத்தாக இருக்கும். இதை நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த வகையில் அரசு மீண்டும் அதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது, ஒன்றை அரசு இரண்டு ஆண்டுகளாக மறந்து விடுகிறது. நம்முடைய ' ஸ்டாச்சூட்டரி ரூல் ' என்ன சொல்கிறது ? நூறு ஆசிரியர்களை புதிதாக நியமித்தால், ஒரு ஆசிரியர் அல்லாத அலுவலரைப் போட வேண்டுமென்று சொல்கிறது. 100 : 1 என்ற விகிதத்தில் அலுவலர் கொடுக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்த விதி பயன்படுத்தப்படவில்லை. அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த விதியைப் பயன்படுத்தி, 100 ஆசிரியருக்கு ஒரு அலுவலர் என்றால், சென்ற ஆண்டு 13,000 ஆசிரியர்களைப் போட்டார்கள் ; இந்த ஆண்டு 3,000 பேர் என்றால் மொத்தம் 16,000 ஆசிரியர்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கும்போது, 160 பேர்கள் ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் போடப்பட வேண்டும். அவர்கள் நியமிக்கப் படவில்லை. அதனால் அலுவலகங்களில் நிறைய காரியங்கள் தடைப்பட்டு, தேங்கிப் போய், ஆசிரியர்கள் குறைப்பட்டு, பிரச்சினைகள் அதிகமாக இருந்து வருகின்றன. அரசு அந்த ஒரு கொள்கையையும் செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பையனுக்கு ' ட்யூஷன் பீஸ் ' மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் வருகிறது. இதனால் ஒரு பள்ளியில் ஒரு அலுவலர் வீதம் ஜூனியர் அசிஸ்டெண்ட் கேடரில் மேல்நிலைப் பள்ளிகளில் போடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக் கல்லூரியைப்பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கோரிக்கை. தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்க்கும்போது, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் 80 சதவீதம் ஒதுக்கீடு இருப்பதாக எனக்குத் தெரிய வருகிறது. இது உண்மையா என்பதை நான் உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை. தர்மபுரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட முறை இருக்குமானால், அதே ஒதுக்கீடு

முறையை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு' அட்மிஷனில் 80 சதவிகிதம் இடம் ஒதுக்கீடு செய்வதுபற்றி அரசு முடிவு செய்ய வேண்டும். காரணம், பல பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் பாலிடெக்னிக்கில் இடம் பெற முடியாமல் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டி போட்டு இடத்தை வாங்கிக்கொண்டு, சில மாவட்டங்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியிருக்கிறது. எனவே தர்மபுரியில் இருக்கும் நிலை மற்ற இடங்களுக்கும் விரிவு படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். எங்களுக்காக நாங்கள் கோரிக்கை வைக்கிறோம் என்று தயவுசெய்து யாரும் நினைத்துவிடக் கூடாது. ஆனால், ஒரு அரசின் அணுகு முறை எப்படி இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்ல விரும்பு கிறேன். 1979 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது, அப்போ திருந்த நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில சலுகை களை அறிவித்தார்கள். அதில் ஒன்று தொலைபேசி இணைப்புச் செலவை அரசாங்கம் ஏற்கும் என்பதாகும். இப்போது ஒரு ஜீ.ஓ. வந்திருக்கிறது. என்ன தெரியுமா? தொலைபேசி இணைப்புச் செலவை மட்டும் அரசாங்கம் ஏற்கும். அதாவது 150 ரூபாய் இன்ஸ்டலேஷன் பீஸ் மட்டும். டெலிபோன் வைக்க ஆயிரம் ரூபாய் டெபாசிட்டு கட்டுவதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. இதிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களை எந்த அளவிற்கு பரிவோடு இங்கே இருப்பவர்கள் அணுகுகிறார்கள் என்ற உண்மையை நான் இந்த மன்றத்தில் அம்பலப்படுத்தத்தான் இதைச் சொல்கிறேன். ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு, அதை 24 தவணைகளில் திரும்பக் கொடுக்கலாம் என்றால், 150 ரூபாய் மட்டும்தான் இலவசமா? இது என்ன? அப்போதிருந்த நிதி அமைச்சர் சொன்ன அறிவிப்பின் உள்நோக்கம் என்ன? 150 ரூபாய் கொடுப்பதுதான் அறிவிப்பா? டெபாசிட் தொகை கட்டினால் தானே கனெக்ஷன் கிடைக்கும்? டெபாசிட் கட்டாமல் எப்படி டெலிபோன் வரும்?. தயவுசெய்து இதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும். 150 ரூபாயுமே கொடுக்க வேண்டாமே? நாங்களே போட்டுக் கொள்வோமே? எதற்காகக் கொடுக்க வேண்டும்? இதற்காகவா நாங்கள் கோரிக்கை வைத்தோம்? இது நியாயமே இல்லை. அவசரப்பட்டு ஏதோ உள்நோக்கத்தோடு இது செய்யப்பட்டிருக்கிறது.

தினப்படியை உயர்த்தி, அப்போது இருந்த நிதி அமைச்சர் 1979 ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் அது அமுலுக்கு வரும் என்று சொன்னார். ஆனால் அரசு ஆணை என்ன? 1979 ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அது





அமுலுக்கு வரவில்லை. பிறகு மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்தோ, ஜூன் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தோதான் அது அமுலுக்கு வருவதாக ஆணை. காரணம் என்ன? மே மாதம் முதல் இது அமுலுக்கு வரும் என்றால், அதற்குள் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்து விடும். அரியர்ஸ் கொடுக்க வேண்டிய நிலை இருக்காது. அதைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி செய்திருக்கிறார்கள். இதெல்லாம் சட்டமன்றத்திற்குக் கொடுக்கக் கூடிய அவமரியாதையைப் போல இருக்கிறது. அவ்வளவு தான் நான் சொல்வேன். அறிவிப்பு ஒன்று, ஆணை ஒன்றாக இருக்கிறது. யார் மாற்றி அமைக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இன்னொன்று, ஹாஸ்டல் ஃபோனைப்பற்றிச் சொல்ல வேண்டும். ஹாஸ்டலில் இருக்கின்ற உறுப்பினர்கள் பொறுமைத் தன்மையை வளர்த்துக் கொள்ள ஹாஸ்டல் ஃபோனில் முயற்சி செய்தால் போதும். சகிப்புத் தன்மை தானாக வந்துவிடும். நிதி அமைச்சர் அவர்கள் ஹாஸ்டல் நிர்வாகத்தில் அதிக ஆர்வம் காட்டி, அதனைச் சீரான வகையில் அமைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். எனவே இதனைக் கண்காணித்து, அது ஒழுங்காகச் செயல்பட, சரி செய்ய வேண்டுமென்று இந்த நோக்கில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

மாண்புமிகு புதிய நிதியமைச்சர் அவர்களிடத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் ஒரு புதிய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலும் ஒரு அலுவலகத்தை அமைத்துக் கொள்ளத் தேவையான வாடகைப்படியை அரசு அவர்களுக்கு வழங்க வேண்டும். அது மட்டுமல்ல, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஒரு டைப்பிஸ்டையோ அல்லது நேர்முக உதவியாளர் ஒருவரையோ வைத்துக் கொள்ள வசதியாக அத்தகைய பதவியை ஏற்படுத்தி, அதன் மூலம் பொது மக்களிடம் நல்ல முறையில் தொடர்பு கொள்ளவும், சட்டமன்ற உறுப்பினர் களின் வேலைப் பளுவைக் குறைக்கவும் அல்லது அவர்களின் பணியை எளிதாக்கச் செய்யவும் உதவி செய்ய வேண்டும். அந்தப் பதவிகளுக்கான செலவையும் அரசே ஏற்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை ஆகிய இரு அவைகளின் உறுப்பினர் களுக்காகவும் நான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல, தற்போது ரயிலில் பயணம் செய்வதற்காக ரூ. 2,000-க்கு ரெயில் கூப்பன்கள் வழங்கப்படுகின்றன. அதைத் தயவுசெய்து ரூ. 3,000 அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்று அவைகளுக்கான அறிவிப்பை, எங்கள் மனம் மகிழத்தக்க வகையில்

அறிவிப்பார்கள் என்று எண்ணி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நாவலர் அவர்கள் ஏழை மக்களின் காவலராக இருந்து நல்ல முறையில் அமைத்திருப்பதற்காக, மாண்புமிகு நாவலர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, என்னுடைய கருத்தைக்கூற வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Vice-Chairman, I am very happy to speak on this Budget with a sign of relief because this has been a surplus budget. Economists say that deficit financing indicates unsound economy. This Budget being a surplus Budget, it has given us a sound economy. But, at the same time, as I am connected with a number of social welfare institutions and having contact with a number of social welfare institutions, I would like to place here certain difficulties due to financial instability. So far as Education is concerned, the Hon. the Finance Minister has stated in his Budget speech that the Panchayat Schools would be given building grants. I find that somewhere in the Budget it is mentioned that building grants will be given to non-panchayat areas also. Hence, I would like to place before this House the problems of voluntary organisations which run primary schools. We were given maintenance grant calculated at the rate of 12 per cent of the total salary of teachers for the year. Then it was reduced to 6 per cent. Now it is only 4 per cent. The reduction is made on the plea that the salary—pay and Dearness Allowance—of teachers has increased. These primary schools have no facilities to collect amenity fees. Only those who are enterprising are able to put up pucca buildings. Most of the schools are, therefore, run only under thatched roofing. It is very dangerous and every other day we hear about thatched roof buildings catching fire.

There is another problem and that is with regard to obtaining satbility certificate for every school. The Inspecting authorities send notices that if the stability certificates are not given, grants for the teachers' salaries would not be released. Hence, I would request that some provision may be made for giving grants to primary schools without delay. We always talk of the High Schools and the Higher Secondary Schools but the primary schools get only very meagre grants towards their building schemes.

Sir, time and again, I have made a frequent plea, both in this House and also outside in women's meetings, that physical self-defence methods should be taught to the women. I am happy that



he provision under 'Youth Welfare' has been doubled. But I do not see any provision for teaching self-defence methods like Karate', 'Ju-jutsu' and 'Kung-fu' especially to women, under the physical education programme. It is not going to pose a great financial difficulty for Government, if they introduce the teaching of these self-defence methods in the syllabus for Physical Education Teachers. There are only a handful of Physical Education Training Colleges in the State. Government are going to spend only about Rs. 600 or Rs. 800 per teacher and it is not going to cost them very much. On the other hand, if provision is made for the instructors in the Physical Education Colleges to teach self-defence methods to the women-teachers, it will have a very salutary effect. Everyday, we hear sad incidents like the ones at Bhagpat and Belchi or other incidents where women were raped or where their honour was put at stake. But we are not doing anything useful to prevent these. Therefore, I want a provision to be made in the Physical Education programme to enable our women to learn the self-defence methods sufficiently. The other day we saw a programme in the television on the Japanese 'Karate' experts who were here. When one of them was asked about the safety of women in Japan, he said that women could walk safely at midnight in Japan. When somebody asked him the reason for that, he said that those women were fully equipped with self-defence methods. We already have laws on rape and similar offences and we think in terms of having deterrent punishments for such offences. But, I feel that, instead of thinking in such terms, if the women could be given training in self-defence methods, they would be able to solve this very terrible problem that is facing our country. We understand that a comprehensive law is going to be brought up by the Central Government in this regard. If that law comes to our Legislature, I hope that all the Members of both the Houses would definitely support it. I suggest that there should be a clause in that law by which a woman, if she kills a man in self-defence, shall not be thrown into prison. Recently, a famous Tamil woman-writer has started writing a serialised novel in a magazine. In that, she has given the description of two women who were rotting in prison because they killed their opponents in self-defence. I know that I may not get any strong support when I say this. But I would like to say that there are some Asian countries where women have the right to kill their opponents if the women's honour is at stake. I feel that if such a clause is there in the law which is going to come up before Parliament, the rape cases would be reduced. There won't be any occasion for killing.

Sir, under the funds for 'Education', I do not find any provision towards grants to orphanages run by voluntary organisations. I have said this very many times in the past and I have become almost sick of saying this. The voluntary organisations running the orphanages are given a grant of only Rs. 14 per child and this grant also is released only after 1-1|2 years. I hope that steps would be taken to increase the grant to Rs. 20 per child so that the voluntary organisations could run the institutions successfully and efficiently.

Sir, the Hon. the Minister for Harijan Welfare is not here. However, I would like to bring to his notice, through you, that a number of Government Hostels for Women are being run by the Harijan Welfare Department. One such Hostel was being run at Adyar until recently. It was opened many years ago by Thiru Kakkan who was Minister. At that time, he took an assurance from me to the effect that all the girls admitted in that Hostel would later be admitted to the Avvai Home Schools as day students. So, for all the last 20 years we have been admitting these girls in the Avvai Home Schools. Suddenly, the land lord of the hostel building gave a notice and they had to shift the hostel to Triplicane. But still the girls are coming to the Avvai Home Schools for admission. I feel that there is a need for these Government hostels to have their own buildings.

*(பிற்பகல் 6-00)*

I want to mention another problem. The schools re-open in June and the Government hostels are opened only in July. During these two months, the girls suffer a lot. Many of them come and stand at our doors asking for admission in our Home hostel. We are already over-burdened with the meagre grant of Rs. 14 per inmate and it becomes a great strain to take those girls also. Still we try to oblige them. I feel that if these hostels are opened at the time the schools reopen, it will be of much help to the students, especially girls who attend schools or colleges.

Another problem that faces us is that the voluntary organisations cannot avail themselves of loan facilities for putting up buildings. I find that there are a number of loans given to the Housing Society. If loan is given to the voluntary organisations by the State Government to put up class-rooms or hostels, it will be of great help to us. Even the Government of India loan to build hostels could not be utilised. We find that a loan was taken in 1974-75 and again another loan in 1978-79. But there are a number of institutions who are willing to put up buildings with the help of loans. They cannot take loans from banks because banks charge interest at 17 or 18 per cent. If loan is given by the Government, I think many of these institutions will be benefited. We hear a lot about the rise in price of vegetables and housewives go on complaining that the price has gone up and all that. I have made a plea here a number of times before. Why not we revive the Grow More Vegetable Campaign at the State level, District level and Village level? These campaigns will have a salutary effect and many of the housewives will engage themselves in growing more vegetables. This is not going to cost the Government very much because these members are not given any Travelling Allowance or Dearness Allowance. Only the Director of Agriculture will have to spend a little money over a cup of coffee or tea whenever the meeting is held. This will have a very lasting effect. We had this Committee before and we found that everybody was so enthusiastic, particularly because prizes were awarded to the Schools, individuals and housewives. I hope this Committee and campaign will be revived. With these words, I thank you, Mr. Vice-Chairman, for giving me this opportunity to speak on the Budget.





*திரு. ப. மாணிக்கம் :* மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை எட்டு மாதங்களுக்குரியதென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதே அரசு இந்த ஆண்டுத் துவக்கத்திலே ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கக் காலம் நிர்ணயம் செய்த நேரத்தில், அரசு வெளியேற்றப்பட்டது. எனவே எந்தச் சூழ்நிலையில் அது வெளியேற்றப் பட்டது, எப்படி மக்களுடைய ஆதரவோடு மீண்டும் பொறுப்பேற்று வந்திருக்கிறது என்கிற அரசியல் பின்னணி முத்திரையும், இந்த ஆட்சி மீண்டும் அமையக் கூடாது என்று விரும்புகிற சக்திகள் நடத்திய கிளர்ச்சிகளின் பலனாக அதனுடைய முத்திரையும் சேர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையிலே பொதிந்திருக்கிறதென்பதை முதலிலே குறிப்பிட விரும்பு கிறேன். எனவே காலத்தின் நிர்ப்பந்தம் அல்லது சூழ்நிலையின் பாதிப்பு இந்த அறிக்கையிலே இருப்பதால், சில குறைபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த நிதிநிலை அறிக்கையின் வலிவான அம்சம் நிவாரண நடவடிக்கைகளாகும். விவசாயிகளுக்குத் தர உத்தேசிக்கப்பட்டிருக்கிற கடன் நிவாரணம், விவசாயத் தொழிலாளிகளுக்குத் தர உத்தேசிக்கப்பட்டிருக்கிற பென்ஷன்—அது நடைமுறையில் பென்ஷன் என்று இல்லாமல் இயலாதவர்களுக்குத்

தாப்படக்கூடிய உதவியாக அமைந்திருக்கிறது—ஆகியவைகள் நலிவுற்றவர்களுக்குக் கொடுக்கும் நிவாரணமாக அமைந்திருக்கின்றன. இந்த நிவாரணம் வலிவாக இருந்தபோதிலும், விவசாயத் துறையில் கவனிக்கப்பட வேண்டிய சில குறைபாடுகளும் இருக்கின்றன. இந்தக் குறைபாடு மாநில அரசினுடைய கொள்கையால் மட்டுமல்ல, மத்திய அரசினுடைய கொள்கையாலும் ஏற்பட்டிருக்கிறது. பணவீக்கச் சக்திகள் தலைதூக்கி நிற்கும் நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. குறிப்பாக உரத்தின் விலை, டீசல் விலை ஆகியவைகள் உயர்ந்திருக்கிற நேரத்தில், விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். இதனால் உற்பத்திச் செலவு கூடும். உற்பத்திச் செலவு கூடினால் உற்பத்தி செய்த விளைபொருள்களான நெல்லுக்கும், கரும்புக்கும், கடலைக்கும் சரியான விலை கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டால், மீண்டும் தமிழகத்தில் விவசாயத் துறையைப் பொறுத்த வரையில், அமைதியற்ற நிலை உருவாகலாம் என்று அஞ்சுகிறேன். விவசாயத் துறையைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் கொள்கைகளை சரியான முறையில் வகுக்க மாநில அரசு வலியுறுத்த வேண்டும். இதிலே இந்த அவையும், பேரவையும் கூட அரசோடு துணையாக நிற்குமென்று கருதுகிறேன். குறிப்பாக நெல்லுக்கு இந்த ஆண்டு விவசாய விளை பொருள்களுக்குரிய கமிஷன் நிர்ணயித்திருப்பது ரூ. 100. சென்ற ஆண்டு அப்போதிருந்த உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, நம்முடைய மாநில அரசு ரூ. 125-ஐ நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டிருந்தது. இப்போது உர விலை உயர்வு, டீசல் விலை உயர்வு ஆகியவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், நிச்சயமாக அந்த ரூ. 125-க்கும் மேலே போக வேண்டும். எனவே தமிழ்நாட்டில் மிக அதிகமாக உற்பத்தியாகக் கூடிய நெல்லுக்கும், அதற்கடுத்து இருக்கக் கூடிய பருத்திக்கும், நிலக்கடலைக்கும் விலை வீழ்ச்சியடையக் கூடிய ஆபத்தும், கட்டுப்படி ஆகக் கூடிய விலை கிடைக்காத ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கும் முறையிலே தகுந்த முயற்சிகளை நம்முடைய மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பார்வையில்லாத ஒரு குறை இந்த நிதிநிலை அறிக்கையிலே தென்படுகிறது. ஆகவே இதைத்தான் முதல் அம்சமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

இரண்டாவதாக, பாசன வசதிகளைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழ்நாட்டில் சுமார் எட்டு இலட்சத்திற்கு மேல் ஒன்பது இலட்சத்தை எட்டக்கூடிய அளவிற்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்தக்கூடிய மின்சார பம்பு செட்டுகள் இருக்கின்றன. நிலத்தடி நீர் போதிய அளவு சேகரிக்கப்பட வேண்டுமென்றால், நீர் பிடிப்புக் குளங்களையும், குட்டைகளையும் பாதுகாக்க வேண்டும். 'பெர்குலேஷன் பாண்ட்' என்று சொல்லப்படும் கசிவு நீர்





குட்டைகளை யார் நிர்வகிப்பது என்ற விஷயத்தில் இன்னும் அரசு இலாக்காக்குள்ளே தாவா இருப்பதாகத் தெரிகிறது. கசிவு நீர் குட்டைகள் மிகச் சிறிய அம்சமாகத் தோன்றலாம். நம்முடைய மாநில நீர் வளத்தைத் தேக்கி வைக்க, பாதுகாக்க அதுதான் மிக முக்கிய அம்சமாக விளங்குகிறது. இந்த ஆண்டாவது அதை நிர்வகிக்க வேண்டியது பஞ்சாயத்தா அல்லது வருவாய்த் துறையா என்ற பிரச்சினையில் தீர்வு காண வேண்டும். வருவாய்த் துறையிடம் இருப்பதுதான் சரியாக இருக்கும். பஞ்சாயத்திடம் கொடுத்தால், நிதி இல்லை என்பதால் நிராகரிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகவே வருவாய்த் துறையிடம் இருப்பதுதான் நல்லது.

விவசாயத் துறையில் உற்பத்தியாகக்கூடிய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க நம்முடைய அரசு கடினமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக விளைபொருள்களுக்கு உற்பத்திச் செலவு என்ன ஆகிறது என்பதை மத்திய அரசிடமும், அனைத்திந்திய விளைபொருள்கள் கமிஷனிடமும் எடுத்துக்கூறி வாதாடி வெற்றி பெறுவதில் கவனமாக இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மற்றொரு முக்கியமான பிரச்சினை, நெசவாளர்கள் பிரச்சினை. நெசவுத் துறையில் பல இடங்களில் புதிய உற்பத்தி நடைபெறவில்லை. பல பிரைமரி சொசைட்டிகளுக்கு வர வேண்டிய பாக்கியும், மாநில தலைமைச் சங்கத்தின் மூலமாகக் கிடைக்க வேண்டிய தொகையும் கிடைக்காமல் இருக்கின்றன. ஆகவே உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே புதிய உற்பத்திக்கான வசதிகள் இல்லாத நிலைமையில் இருக்கின்றன. இதற்கு மேலும் பல கோடி ரூபாய் பெருமானமுள்ள ஸ்டாக் இருக்கின்றது. அதை விற்பனை செய்வதற்கும், புதிய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நம்முடைய அரசு திட்டமிட வேண்டும். அப்படிப்பட்ட கொள்கையை இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்க முடியவில்லை. ஒருகால் அவ்வப்போது, இப்படிப்பட்ட நெருக்கடி தோன்றும்போது கவனிக்கலாம் என்று அரசு விட்டுவிட்டதோ என்று அஞ்சுகிறேன். நம்முடைய மாநிலத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக நபர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் நெசவுத் தொழில்.

(பிற்பகல் 6-10)

மற்றொரு முக்கியமான விஷயம், தலைமையான விஷயம் விவசாயத்தைப் பற்றியது. எல்லாவற்றிலும் தலைமையானது ஏழ்மை நிலை. அதில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல்வேறு பிரச்சினைகளும் அடங்கியிருக்கின்றன. நம் நாட்டில் 4½ கோடி மக்கள், தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று

[திரு. ப. மாணிக்கம்] [1980 ஜூலை 5

சொல்கின்றார்கள். இதில் 53 சதம் பேர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக உள்ள புள்ளிவிவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்திலே உள்ளது போல், இம்மாதிரி பட்ஜெட் விவாதத்திற்கு முன்னதாக இதுபோன்ற புள்ளிவிவரங்களைக் கொடுக்கச் செய்ய வேண்டும். அது கிடைப்பதற்கு முன்னதாகவே அறிக்கைகளை முன்கூட்டி சமர்ப்பித்து விடுகிறார்கள். இங்கே ஓராண்டு கழித்துத்தான் விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. வரக்கூடிய ஆண்டிலாவது முன்கூட்டியே புள்ளிவிவரங்களைத் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கூறிக் கொள்கிறேன். அறிக்கையில் நம்முடைய ஏழ்மையைக் குறைக்கக்கூடிய அம்சம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. வளர்ச்சி என்ற அம்சத்திலே இந்த பட்ஜெட் பலஹீனமாகவே இருக்கிறது. முன்னாலே வந்த பட்ஜெட்டிலேகூட நாம் நிவாரணம் தான் கொடுத்தோம். வளர்ச்சி என்ற துறையிலே நம்முடைய கவனம் குறைவாகவே இருக்கிறது. அது தொடர்கிறது என்பதுதான் இந்த ஆண்டு அறிக்கையிலேயும் காணப்படுகிறது. வரக்கூடிய ஆண்டிலாவது வளர்ச்சித் திட்டங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக இதில் மாநில அரசு கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால், தமிழ் நாடு மேன்மேலும் வளர்ச்சியிலும் முதலீட்டிலும் பின்தங்கி நிற்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கும், மத்திய அரசிடம் நாம் வலியுறுத்துவதற்கும், நாடாளுமன்றத்தில் நம்முடைய நிலையைச் சொல்லவும், நம்முடைய நியாயம் எடுபடுவதற்கும் என்ன செய்யவேண்டுமென்று பார்க்க வேண்டும். நேற்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, அங்கே அமைச்சர் அந்தஸ்தில் ஒருவர் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அது மட்டும் போதுமா ? அங்கத்தினர்களுடைய முழு ஆதரவையும் நாம் இங்கே திரட்ட வேண்டும். நான் இந்த அவையில் அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாமா என்று அஞ்சுகிறேன். இருப்பினும் தமிழ்நாட்டில் ஒரு மக்கள் இயக்கமாக இருந்து இந்தப் பிரச்சினைகள் எடுக்கப்பட்டால் நல்லது. நாம் நம் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய அளவுக்கு மூலதனம் கிடைக்காது என்றுதான் அஞ்சுகிறேன். ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகக்கூட நிதிக்கமிஷன் வந்த போது, எல்லாத் தரப்பினருடனும் கலந்து பேசி அந்த நிதிக் குழுவிடம், பிளானிங் கமிஷனிடம் தேவைகளைச் சொல்லியிருக்க வேண்டும். இனியாவது எல்லாத் தரப்பினரையும் திரட்டி ஒருமுகமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். சென்ற முறை நிதிக் கமிஷன் வந்தது, சென்றது. ஆனால் என்ன கருத்துக்களைத் தந்தோம் என்பதுகூடத் தெரியாமல் போய்விட்டது. நம் மக்களுடைய தேவைகளை நாம் ஒருமுகமாகத் தெரிவிக்க வேண்டும்.



1980 ஜூலை 5] [திரு. ப. மாணிக்கம்]

அம்மாதிரி திட்டக் கமிஷன் இங்கு வரும்போது, அந்தக் கமிஷனிடம் நம்முடைய நிலையை ஆர்வத்தோடு பல தரப்பினர் கருத்துக்களைத் திரட்டி, ஆராய்ந்து அறிந்து, நம் தேவைகளை அறிவிக்க வேண்டும். அதற்குத் தகுந்த முயற்சிகளை இந்தக் கூட்டத் தொடரிலேயே எடுப்பது மிக மிக அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சி என்ற விஷயத்திற்கு வருகிறேன். இதிலே முதலிடம் வகிக்கக்கூடியது மின்சார வளர்ச்சி. மின்சார வளர்ச்சிக்குக் கணிசமான நிதி ஒதுக்கீடு வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே உள்ள கல்பாக்கம் அனல் மின் திட்டம் தாமதப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி அனல் மின் திட்டமும் தாமதமாகிறது. நிலக்கரி கிடைப்பதிலும் தாமதமிருக்கிறது. இம்மாதிரி பலஹீனங்களைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின்சார வளர்ச்சிபற்றி இந்த அறிக்கையிலே ஒரு புதிய திட்டத்திற்கு மத்திய அரசிடம் உதவி கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொழில் வளர்ச்சிக்கும் உதவி தேவைப்படுகிறது. தொழில் வளர்ச்சி தேவையான அளவு செய்யப்படும் என்று சொல்லும்போது, பணி அடிப்படையிலே செய்யப்படும் என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த விவரப்படி, இதில் அதிகச் செலவு செய்ய இருக்கிறோமே தவிர, இதில் வரும் பலன் எந்த அளவுக்கு இருக்கும் என்று கூற முடியாது என்று சொல்கிறார்கள். அதற்கு மாறாக நான் ஒன்று சொல்கிறேன். தமிழ்நாட்டில் சூரிய வெப்பம் அதிகமாகக் கிடைக்கிறது. அந்த விஷயத்திலே நாம் ஏன் அதிக கவனம் செலுத்தக் கூடாது ? அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியிலே கூட ஆராய்ந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், குஜராத் மாநிலத்தில், மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் இந்த சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து தொழிற்சாலைகளுக்கு, தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். இம்மாதிரி நம் நாட்டு விஞ்ஞான வசதிகளைப் பயன் படுத்திக்கொண்டு, நமக்கு அருகாமையிலேயே கிடைக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் பயன்படுத்தி, 'சோலார் எனர்ஜி' சூரிய வெப்பத்தி லிருந்து மின்சாரம் கிடைக்கச்செய்ய அதிக கவனம் செலுத்துவதற்கு மாநில அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இதிலே மத்திய அரசு உதவி எவ்வளவு கிடைக்கிறது என்று நம்மால் சொல்ல முடியவில்லை. ஆக இப்படி எந்த அளவுக்கு உதவி கிடைக்கும் என்ற நிலையில், நாம் சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வோம், பெரிய அளவிலே மின்சாரம் நம்முடைய மாநிலத்திலேயே கிடைப்பதற்கு வேண்டிய

விஞ்ஞான உதவிகளும் கிடைக்கும் என்ற அளவில், அந்த வகையிலே முயற்சிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியிலே நிதி ஒதுக்கீடு என்று வரும்போது, ஆண்டுத் திட்டத்திலே ஓரளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்ததை விட ஓரளவுக்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நமக்குள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதிலேயும், மூலதனத்தைத் திரட்டுவதிலும் இன்னும் சில விஷயங்களிலும் நமக்குத் தயக்கம் இருப்பதாகத் தான் தெரிகிறது. ஏப்ரல் மாதத்தில் என்று நினைக்கிறேன், தமிழ் நாட்டிலுள்ள சில நிபுணர்களை, தொழில் துறையிலுள்ள வல்லுநர்களைக் கூட்டி வைத்து விவாதித்தபோது, ‘நம்முடைய தமிழகத்தில் கனிவளங்கள் சிறப்பாக இருக்கின்றன, அவைகளைப் பயன்படுத்தலாம், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்த சந்தர்ப்பம் இருக்கிறது’ என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தொழில் துறையிலேயும், அந்தத் துறையிலே உள்ள மற்ற நிபுணர்களையும் வல்லுநர்களையும் கலந்தாலோசித்து, அவர்கள் கருத்தறிந்து, இருக்கின்ற சிறப்புகளை, வசதிகளைப் பயன்படுத்தி, தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தையும் திரட்டி, நம் யுக்திகளையும் கையாண்டு, அரசு அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு முதலீடுகள் செய்கின்ற, உதவி செய்கின்ற அமைப்புகள்கூட இருக்கின்றன என்றும் சொல்கின்றார்கள். ஆகவே தொழில் வளர்ச்சிக்காக, நிபுணர்களையும், அந்தத் துறையில் அனுபவம் உள்ளவர்களையும், விஷயம் தெரிந்தவர்களையும் அரசு நாட வேண்டும். இதை நம் மாநில அரசு மனம் விட்டுச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு நாம் சிறப்பாகக் கவனம் செலுத்தினால்தான், நல்ல பலன் கிடைக்கும்.

குறிப்பாக வரவு-செலவுத் திட்டக் கொள்கையில் எவ்வளவு வரவு, எவ்வளவு செலவு என்பது மட்டுமல்லாமல், வளர்ச்சித் திட்டங்களுக்கு என்றும் நம்முடைய திட்டம் அமைய வேண்டும். அதற்கான முன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்தக் கருத்துக்களைச் சொல்கிறேன்.

ஆளுநர் உரையில் Ocean Thermal Energy Conversion டெக்னாலஜி என்று சொல்லப்பட்டது. அதற்கு என்ன ஏற்பாடு இந்த ஆண்டு செய்யப்பட்டிருக்கிறது என்று காணோம். நம்முடைய மாநிலத்தில் அப்படிப் பட்ட திறமை அதிகமாகவே இருக்கிறது. அதை எந்த அளவுக்குப் பயன் படுத்தப் போகிறோம் என்பதற்கான ஏற்பாடுகள் எதையும் குறிப்பிட





காணோம். ஒருகால் இந்த ஆண்டு நிதி வசதி போதவில்லை என்பதற்காக அது ஒத்திப்போடப்பட்டிருக்கிறது என்றால், அடுத்த ஆண்டாவது எடுத்துக் கொள்ளப்படுமா என்பதும் தெரியவில்லை. இந்தத் துறையில் கவனம் செலுத்தாததால், அப்படிப்பட்ட தொழில் நுணுக்கத் துறையிலே உள்ள வல்லுநர்களை நாம் சரிவரப் பயன்படுத்தவில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன என்று தெரிகிறது.

அடுத்து, மதுவிலக்குபற்றி ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னதாக இருந்த கடினமான கொள்கை சரளமான கொள்கையாக மாற்றப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய கொள்கைதான். ஆனாலும் இந்தத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்றால், சமூகம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைவிட காவல் துறை எப்படிப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். இந்தத் துறையில், நாம் வேறு விவரங்களுக்குப் போகாவிட்டாலும், ஒரு காவல் நிலையத்திற்கு ஒரு மாதம் வருமானம் என்ன என்பதைப் பார்க்கும்போது, ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு காவல் நிலையத்திற்கு வருமானம் 65 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இது தென்னாற்காடு மாவட்டத்திலே, ஒரு வறண்ட பகுதியிலே செஞ்சிக்குப் பக்கத்திலே உள்ள இடம். ஊர் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அது அங்குள்ளவர்களுக்கு நியாயம் வழங்குவதாக ஆகாது. ரூபாய் 65 ஆயிரம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால் நம்முடைய காவல் துறை எந்த அளவுக்கு செல்லரித்துப் போயிருக்கிறது என்பதைப் பார்க்கலாம். இதை மாற்றக்கூடிய முறையிலே, நடைமுறைகளை மாற்றி, மதுவிலக்கு விதியை மாற்றி, மக்கள் டெம்பரரி பெர்மிட் வாங்க ரூ. 25 என்று இருப்பதை ரூ. 10 என்று ஆக்கலாம். வயது வரம்பு 25-க்கு மேல் என்பது சரிதான். இன்னும் சரளமாக இருக்கக் கூடிய விதிமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்

(பிற்பகல் 6-20)

என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு எதிராகத் தொடுக்கக்கூடிய தாக்கல்கள் தான் உண்மையாக இருக்க வேண்டும். அதுதான் நம்முடைய காவல் துறையைச் சீரழித்து வருகிறது. மீண்டும் அதை ஏன் நினைவு படுத்துகிறேன் என்றால், காவல் துறையிலே பல முரண்பாடுகள் தோன்ற இது முக்கியமான காரணமாக இருக்கிறது. காவல் துறை அதனுடைய கடமை யிலிருந்து தவற முக்கியமான காரணமாக அது இருக்கிறது. எனவே அந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, நிர்வாகச் சீரமைப்பு, அதன் விதிகள் ஆகிய

இருக்கின்றன. ஆனால் 'அமுதம்' என்ற பெயருக்கும், அங்கு நடப்பதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. இன்றைக்கு விறகுகூட அத்தியாவசியப் பண்டமாக மாறிவிட்டது. எனவே இவைகளை விநியோகிக்க அமுதத்தைச் சீர்படுத்தலாமா அல்லது அத்தியாவசியப் பண்டங்களை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தி விற்கலாமென்பதை யோசிக்க வேண்டும். ஏனென்றால் ஜனங்களுக்கு பல இடங்களிலே மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகியவை கிடைக்கவில்லை. இவைகள் கிடைக்க உத்தரவாதமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது குறித்து அரசு என்ன செய்யவிருக்கிறது என்பதை நிதியமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையிலே நிச்சயமாகத் தெரிவிப்பார்களென்று நம்பி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் திங்கட்கிழமை (7—7—1980) மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-28)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

37. Notification issued with G.O. Ms. No 95, Home, dated the 12th January 1980 in regard to amendments to the Tamil Nadu Traffic Rules, 1938. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

38. Fifth Annual Report of the Tamil Nadu Ceramics Limited for the year 1978-79 (English and Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*B. Reports, Notifications and Other Papers.*

Nil.



இணைப்பு.

(7 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

-80 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்கள் பொது மாறுதல்களுக்கான
மொழிவுகளை ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தர்மபுரி
க் கல்வி அலுவலரின் ஒப்புதல் பெற்று மாறுதல்களுக்கான
களைப் பிறப்பித்துள்ளார். இம்மாறுதல்களால் பாதிக்கப்பட்டதாகக்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த பொறுப்பாளர்களும்,
டு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொறுப்பாளர்களும், மறு
களுக்கான வகை செய்யும் வேறு ஒரு பட்டியலைத் தயாரித்து,
ஒப்புதலுக்கு மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்ப வேண்டுமென
கரை ஊராட்சி ஒன்றிய ஆணையரை நிர்ப்பந்தம் செய்ததின் பேரில்
ரும் அப்பட்டியலை மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஒப்புதலுக்காக
பிருந்தார். அப்பட்டியல் மாவட்டக் கல்வி அலுவலரால் அங்கீகரிக்கப்
லை. இதற்கிடையில் இம்மாறுதல் பட்டியலை அங்கீகரிக்கக் கூடாது
த்தங்கரை தொடக்கப் பள்ளி ஆசிரியர் முன்னேற்றக் கூட்டணியினர்
ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்டக் கல்வி அலுவலர்க்கும் தந்தி
பிருந்தனர்.

லையில் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி ஊத்தங்கரை வட்டாரக்
ர், ஆணையாளர் பிறப்பித்துள்ள முதல் ஆணையினை ரத்து செய்ய
ம் அல்லது தர்மபுரி மாவட்டக் கல்வி அலுவலரால் மாறுதல்களுக்கான
வது முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும்
ல் 21—6—1980 தேதி முதல் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியினர்
கைகளை வலியுறுத்தி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
ண்ணாவிரதம் இருக்கப்போவதாக 14—6—1980-ம் தேதியில்
[illegible]டு 21—6—1980-ம் தேதியில் உண்ணாவிரதம் இருக்கத்
கினர். அதன் பின்னர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
பாளர்களும், ஆசிரியர் கூட்டணி பொறுப்பாளர்களும் தர்மபுரி
வளர்ச்சி அலுவலரைச் சந்தித்து இதுகுறித்து விவாதித்தனர்.
ாளரால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் மாறுதல்களில் தனி நபர்கள்
ும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தங்களது கோரிக்கை மனுக்களை
கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பிவிட்டு அதன்
கோட்ட வளர்ச்சி அலுவலர்க்கு அனுப்பினால் அவைகளைப்
து மாறுதல் உத்தரவில் குறைபாடுகள் ஏதும் காணப்பட்டால் அவை
க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆசிரியர்களிடம் தர்மபுரி
வளர்ச்சி அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. மேலும் கோட்ட

விஷயங்களிலே எந்த அளவிற்குச் சீர்திருத்தங்களைச் செய்யலாமென்பதைப் பற்றி அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மேலும் அதில் காலந்தாழ்த்தாமல் நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் சாலை விபத்துக்கள் பற்றியதாகும். சாலை விபத்துக்கள்பற்றி நான் குறிப்பிடும்போது, நேற்று நடந்த ஒரு கோரமான விபத்தை வைத்து மட்டும் நான் சொல்லவில்லை. தொடர்ச்சியாக கடந்த சில மாதங்களிலே சாலை விபத்துக்கள் அதிகமாக நடந்திருக்கின்றன. என்னுடைய கட்சியைச் சேர்ந்த ஒருவா, கோவை நகரை ஒட்டி சாலை விபத்திற்குள்ளானார். நீண்ட கால அரசியல் அனுபவம் உடையவர் அவர். ஒரு கட்சியினுடைய பிரமுகர் சாலை விபத்தில் சாகிறார் என்பதல்ல. சாதாரண ஏழை எளிய மக்களும் பெருமளவிற்கு இதனால் பாதிக்கப் படுகிறார்கள். இது மிக முக்கியமானது. குறிப்பாக லாரிப் போக்குவரத்தில் ஸ்பீட் கன்ட்ரோல் என்பது இடையாது. இது போன்ற தவறுகளுக்குக் கடுமையான தண்டனை இருக்க வேண்டும். ஓட்டுநரின் லைசன்சைக்கூட பறிமுதல் செய்யலாம். 15 ஆண்டுகளுக்கு முன்னதாக விபத்துக்கள் ஏராளமாக நடந்து, உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதால், பல இடங்களில் கிராம மக்கள் கலவரம் செய்தார்கள். அதற்குப் பிறகு இரவிலே 11 மணிக்கு மேல், விடியற்காலை 4 மணி வரை லாரிகளை ஓட்டக்கூடாதென்று நிபந்தனை விதித்தார்கள். பின்பு லாரி சொந்தக்காரர்கள் அரசிடம் முறையிட்டு, அதைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இப்போதுள்ள நிலைமையிலே, போக்குவரத்து அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட 10, 15 மடங்குக்குமேல் போக்குவரத்து அதிகரித்திருக்கிறது. லாரி விபத்தால் யார் எந்த நேரத்தில் சாவார்கள் என்பது தெரியவில்லை. மிக அருமையான உயிர். அரசியல்வாதிகள் சாகிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. அதற்காக நான் கவலைப்படுகிறேன் என்பதல்ல. சிறந்த விஞ்ஞானி சாகலாம், குடும்பத்திலுள்ள ஒரே குழந்தை சாகலாம். எனவே இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க காலந்தாழ்த்தாமல் விதிமுறைகளைச் செய்ய உடனடி முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், சென்னை நகரில் இன்னும் விபத்துக்கள் அதிகரிக்கும். சென்னை நகரில் சமீபத்தில் ஏராளமான விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அம்மாதிரி விபத்துக்களைத் தடுக்கக் காவல் துறையை மட்டும் நம்பியிராமல், அதோடு சம்பந்தப்பட்ட இதர துறைகளையும் கலந்தாலோசித்து துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்படித் தகாத முறையில் வண்டிகளை ஓட்டும் ஓட்டுநர்களின் லைசன்சை ரத்து செய்யலாம். அப்படிப்பட்ட அச்சம் அவர்களுக்கு ஏற்படுமானால், அவர்களுக்கு அடக்கம் வரும்.





அடுத்து, சிறை சீர்திருத்தம்பற்றி ஏற்கெனவே பலமுறை பேசியிருக்கிறோம். சிறை சீர்திருத்தக் கமிஷன் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது தெரியவில்லை. குறிப்பாக சிறை சீர்திருத்தம் என்று சொல்லும்போது, சிறை வாழ்விற்குப் பின்னாலே புனர்வாழ்வு தரும் 'ப்ரொபேஷன் டிபார்ட்மென்ட்' சிறை இலாகாவோடு சேர்ந்திருப்பது நல்லதல்ல. ஏற்கெனவே நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் அவற்றைப் பிரிக்க வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறது. எந்த இலாக்காவிலே அதைச் சேர்ப்பது என்பதிலே சிக்கல் இருக்கலாம். சமூக நல இலாகாவோடா அல்லது நீதித் துறையோடா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதைப்பற்றியும் அரசு விவாதித்து, தக்க முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சிறை சீர்திருத்தமென்று பல முறை பேசியும், காரியத்தில் எந்த மாற்றமும் இல்லாத நிலை ஏற்படும். குறிப்பாக குற்றவாளிகளைத் திருத்துவது என்பதுதான் இந்தக் காலக் கோட்பாடாகவும், கண்ணோட்டமாகவும் இருக்கிறது. எனவே அதை நடைமுறைப்படுத்த, இந்த இரண்டு துறைகளையும் ஒரே இலாகாவில் வைப்பது, குறிப்பாக சிறைச் சாலையோடு சேர்த்து வைப்பது நல்லதல்ல. அது குற்றவாளிகளைத் திருத்துவதற்குப் பதிலாக, அவர்களைத் தண்டிக்கும் மனோபாவத்தைத்தான் ஏற்படுத்தும். எனவே இந்த இரண்டு துறைகளையும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இரண்டு அம்சங்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று அரசு ஊழியர்களைப் பற்றியதாகும். நிதிநிலை அறிக்கையில் பலருக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது, தங்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை, குறிப்பாக ஒரு தவணை பஞ்சப்படி உயர்வு தரப்பட வேண்டும், அதுகூடத் தரப்படவில்லை, அதற்கான அறிவிப்புகள் ஏதுமில்லை என்று அரசு ஊழியர்கள் கூறுகிறார்கள். எனவே நிதியமைச்சரவர்கள் பல கருத்துக்களைக் கேட்டு, அவற்றுக்கு இறுதியாகப் பதில் கூறும்போது, அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சி தரும் அளவிற்கு ஓர் அறிவிப்பைத் தருவார்களென்று நம்புகிறேன். சாதாரண பழமொழி ஒன்று சொல்லுவார்கள் Governments are run by clerkஎன்று. எனவே அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டால், நிர்வாகம் சீராக நடைபெற உதவியாக இருக்கும்.

கடைசியாக, அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் பற்றி ஓரிரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்களை ஒழுங்காக விநியோகம் செய்ய அரசு முக்கியமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது 'அமுதம்' என்ற பெயரில் பல இடங்களில் கடைகள்

[1980 ஜூலை 5

வளர்ச்சி அலுவலர் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி செயலாளருக்கு மேற்கண்ட தகவலினை அனுப்பியுள்ளார். அதன் பேரில் ஆசிரியர்கள் 24—6—1980-ம் தேதி காலை முதல் போராட்டத்தை ஒத்தி வைத்துள்ளனர்.

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த நிர்வாகிகள் தர்மபுரி கோட்ட வளர்ச்சி அலுவலரை மீண்டும் 24—6—1980-ம் தேதியில் சந்தித்து 22 பேர்களது கோரிக்கை மனுக்களின் நகல்களை கொடுத்துள்ளனர். கோட்ட வளர்ச்சி அலுவலர் அம்மனுக்களைப் பரிசிலித்து தகுதிக்கேற்ப முடிவு செய்ய ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

### திங்கட்கிழமை, 1980 ஜூலை 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**திண்டிவனம் அருகே எரிவாயு சிலிண்டர் அடங்கிய லாரி விபத்துக்குள்ளாகி 2—7—1980 அன்று 14 பேர் மரணமடைந்தது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் க. இராமமூர்த்தி, ரா. லெட்சுமிகாந்தன், ஆ. நல்லசிவன் ஆகியோர் திண்டிவனத்திற்கு அருகே —7—1980 அன்று காலை விஷவாயு நிறைந்த கலங்களை (குளோரின் காஸ் லிண்டர்ஸ்) ஏற்றிச் சென்ற லாரி ஒன்று குடை சாய்ந்ததன் விளைவாக லாரியில் பயணம் செய்த பெண்கள் உள்ளிட்ட பதினான்கு பேர்கள் உயிரிழக்க நேரிட்ட நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதி யின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சம்பவம் ஆம் தேதி அன்று காலையில் நடைபெற்றது என்றாலும்கூட, இதனுடைய அதே முக்கியத்துவம் அல்லது தொடர்பாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் பற்றிய அவசரத் தீர்வுகளின் தேவையோ இன்னமும் குறைந்தபாடில்லை என்பதை நான் முதற்கண் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். வெறும் 14 பேர் இறந்தது என்பது அல்ல. குளோரின் காஸ் சிலிண்டர்களை அந்த லாரியில் ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அதுவும் சாதாரண லாரியில் குளோரின் காஸ் சிலிண்டர்களை ஏற்றிச் சென்றிருக் கிறார்கள். சட்ட அனுமதியோடு அப்படி அவர்கள் செய்யவில்லை என் பதோடு மட்டுமல்ல, இதுபோன்ற அபாயகரமான வாயுக்களை ஏற்றிச் செல்லு கின்றபோது, குறிப்பிட்ட முன் ஜாக்கிரதையோடு, குறிப்பிட்ட பாதுகாப்பு

களுடன் அவை சென்றாக வேண்டும். இதை எந்தச் சூழ்நிலையில் ஏற்றி அனுப்பலாம் என்பதற்கான சட்ட விதி முறைகள் தெளிவாக இருக்கின்றன. ஆனால் இவற்றுக்குப் புறம்பாக இதை கோத்தாரி நிறுவனத்திலிருந்து மேட்டூர் கெமிக்கல் நிறுவனத்திற்கு லாரி மூலம் அனுப்பியிருக்கிறார்கள். தொடர்ந்து தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் மேலும் இதுபோல் ரோடு மூலம் லாரிகளில் வாயுவை அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் போதுமான பாதுகாப்பு என்றுகூட சொல்லமாட்டேன், சட்டப்படி தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகள்கூட இல்லாமல் அந்த லாரி சென்றிருக்கிறது. 14 பேர் தாம்பரத்திலிருந்து ஏறிச் சென்றிருக்கிறார்கள். நடைமுறையில் இல்லாத. சட்டத்திற்குப் புறம்பாக ஏற்றிச் சென்றார்கள். இந்தச் சம்பவம் ஏதாவது நகரத்திற்கு நடுவிலே ஏற்பட்டிருந்தால், நூற்றுக்கணக்கானவர்கள் இறக்கக் காரணமாகக்கூட இருந்திருக்கலாம். இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். வேலு என்கிற சப்-இன்ஸ்பெக்டர், மற்றும் மோகன், அப்துல் ஜப்பார் ஆகிய இரண்டு போலீசார் விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றப் போனவர்கள். அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒருவருக்கு கண் போகக்கூடிய நிலை. அங்கிருந்து தப்பி ஓடிய ஒருவர் இரண்டு நாட்களுக்கு முன்பு இறந்திருக்கிறார். அந்த அளவு ஓடினாலும் விடமாட்டேன் என்கிற வகையில் விஷத் தன்மையுள்ள விஷ வாயுவை சாதாரண லாரியில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். இதுவரையில் மதராஸ் கோத்தாரி நிறுவனத்தின் மீதோ அல்லது மேட்டூர் மைகா நிறுவனத்தின் மீதோ சட்டபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு சட்டத்தில் இடமில்லையா ? இல்லை, சட்டம் செயல்படவில்லையா ? ஏதாவது கலப்படம் செய்வார்களானால், சொந்தக்காரர்கள்மீது, வியாபாரிகள்மீது 14 பேர் இறக்கக் காரணமாக இருந்தவர்கள்மீது இதற்குள்ளாக தீவிரமாக நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆகவே இதுபற்றி விவாதிக்க ......

**திரு. க. இராமமூர்த்தி :** கலப்படத்தைப் போலவே 14 பேர் மருத்துவ மனையில் தவறான மருந்தை உட்கொண்டு இறந்திருந்தால், இதற்குள்ளாக என்னென்ன நடவடிக்கை எடுத்திருப்பார்கள் . மிகப் பெரிய தொழிற்சாலையை நடத்திக்கொண்டிருப்பவர்களுடைய தவறான செயல் காரணமாக, நடவடிக்கை காரணமாக இப்படிப்பட்ட பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது. சாவு ஏற்பட காரணமாக இருந்திருக்கிறார்கள். இன்னும் பல சாவுகள் ஏற்படக்கூடிய அபாயகரமான நிலையில் பல லாரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றக்கூடிய தீயணைப்பு நிலைய ஆம்புலன்ஸ் அங்கே ஆறு மாதமாக ரிப்பேராக இருக்கிறது. உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க முடியவில்லை. இதுபோன்ற நிலைமைகளுக்கு எல்லாம் தொழிற்சாலை நடத்திக்கொண்டிருப்பவர்கள் காரணமாயிருக்கின்றார்கள் என்பதோடு மட்டுமல்ல, சட்டமும் அவர்களுக்குச் சாதகமாக இயங்காமல் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள்மீது துரிதமாக நடவடிக்கை எடுப்பதன் மூலமும், சட்டத்தை இயங்கச் செய்வதன் மூலமும்தான் வருங்காலத்தில் மேலும் நூற்றுக்கணக்கான சாவுகளைத் தடுக்க முடியும். எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் குறிப்பிட்ட நெடுஞ்சாலை மிகவும் புகழ்பெற்ற நெடுஞ்சாலை. சென்னை-திண்டுக்கல் நெடுஞ்சாலை. மிகவும் அகலமான இந்த நெடுஞ்சாலையில் விபத்துக்கள் நடைபெறுவதுண்டு. லாரி வாகனம் அல்லது எந்த வாகனமாக இருந்தாலும், அடிக்கடி பல விபத்துக்கள் நடந்திருக்கின்றன. அந்த விபத்துக்களுக்கெல்லாம் ஒரு 'கிளைமாக்ஸ்' (Climax) போல் இப்போது இந்த விபத்து நடந்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, விபத்துக்களைக் குறைப்பதற்கு நாம் தகுந்த முயற்சிகளைச் செய்யவில்லையோ என்கிற சந்தேகம் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பேருந்துகளில் நாம் செல்லும்போது, எதிரில் லாரி குறுக்கிட்டால், இடையில் சென்றுகொண்டிருக்கும் நாம் மிகவும் அச்சப்படும்படியான சூழ்நிலையில் சென்றுகொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட விபத்துக்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. இந்தமாதிரி விபத்துக்களைத் தடுப்பதற்கு, அடுக்கடுக்காக அடிக்கடி ஏற்படுகின்ற மிகப் பெரிய விபத்துக்களைத் தடுப்பதற்கு, உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுமாதிரி இனிமேல் விபத்துக்களே ஏற்படாமலிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது குறித்தும், திட்டவட்டமான முடிவு எடுப்பது பற்றியும் கட்டாயம் விவாதிக்க வேண்டிய அவசியமிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த விபத்திலே இரண்டு முக்கியமான கொள்கைப் பிரச்சினைகள் உள்ளன. ஆகவே இரண்டையும்பற்றி இங்கே கட்டாயம் விவாதிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தமாதிரி லாரிகளில் பாசஞ்சர்ஸ் செல்கிறார்கள். லாரியை ஓட்டுபவர்களும் அவர்களை அனுமதிக்கிறார்கள். அப்படிச் செல்வது தடை செய்யப்பட்டிருப்ப

தாக சட்டத்தில் இருக்கிறது. பொதுவாக போலீஸ் ஸ்டேஷன்கள் ரோடு மேலேயே இருக்கின்றன. லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு போவது அவர்களுக்குத் தெரியும். தெரிந்தும் அவ்வாறு போவதை அவர்கள் அனுமதிக்கிறார்கள். அதுவும் ஒரு வரைமுறை இல்லாமல் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது குளோரின் வாயு நிறைந்த லாரியிலேயே ஜனங்களை ஏற்றிக்கொண்டு செல்ல அனுமதித்திருக்கிறார்கள். அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக ஏற்றிச் செல்ல அனுமதித்திருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட விபத்தைப் பொறுத்தவரையில், லாரி கண்டக்டர், ஓட்டுநர் உட்பட லாரியின் முன்னால் ஒன்பது பேர் ஆட்கார்ந்து இருந்திருக்கிறார்கள். எட்டு பேர் குளோரின் வாயு சிலிண்டரஸ்க்கு அருகே உட்கார்ந்து இருந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இப்போதெல்லாம் லாரியில் பயணம் செய்கிறார்கள். ரோடு மேலேயே போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அப்படி பயணிகளை லாரிகளில் ஏற்றிச் செல்லக்கூடாது என்று சட்டமும் இருக்கின்றது. அப்படி இருந்தும் தொடர்ந்து அனுமதிக்கிறார்கள். பல ஆண்டுகளாக இப்படி காஸ் சிலிண்டர்களை லாரிகளில் கொண்டு போவது என்பது நடைபெற்று வரும் ஒன்று சாலை அதிலும் தொழில் வளர்ச்சி வேகமாக நடந்து வரும் இக்காலத்தில் தொழிற்சாலைகளுக்கு இதுபோல் கொண்டுபோக வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஆனால் அவ்வாறு கொண்டு போகும்போது. இதுமாதிரி சாவுகள் ஏற்படாமலிருக்க, உயிருக்கும் உடைமைக்கும் சேதங்கள் ஏற்படாமலிருக்கத் தகுந்த பாதுபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது மிக மிக அவசியமாகும். இந்த மாதிரி சாமான்களை ஏற்றிக்கொண்டு போகும்போது, சட்டத்திற்குப் புறம்பாகப் பயணிகளையும் ஏற்றிக்கொண்டு செல்லாமலிருப்பதற்கான வழிவகைகளை ஆராயவும், குளோரின் வாயு போன்ற விஷ வாயுக்களை ஏற்றிச் செல்லும்போது எப்படியெல்லாம் பாதுகாப்பாகக் கொண்டு செல்வது என்பது பற்றியும் ஆராய்ந்து, விவாதித்து, தீர்வு காணவும் வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவரவர்களே, 1—7—1980 அன்று இரவு டி.எம்.டி. 2354 ( T.M.T. ) என்ற லாரி ஒன்று 880 கிலோ எடையுள்ள குளோரின் வாயு நிறைந்த ஆறு கலங்களை (சிலிண்டர்ஸ்) மதராஸ் கோத்தாரி தொழிற்கூடத்திலிருந்து மேட்டூர் மைகா தொழிலகத்திற்கு ஏற்றிக்கொண்டு சென்றது. லாரி ஓட்டுநர், தாம்பரத்தில் சேலம் மாவட்டத்திற்குச் செல்லும் பதினைந்து பிரயாணிகளையும் அந்த லாரியில் ஏற்றிக்கொண்டார். நள்ளிரவு சுமார் 12 மணிக்கு திண்டிவனத்திலிருந்து





11 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கோனேரிக்குப்பம் என்ற கிராமத்தின் அருகில் அந்த லாரி சென்றபோது, அதன் வலது முன் சக்கரத்தின் டயர் வெடித்ததால் தீப்பற்றிக் கொண்டது. குளோரின் வாயு நிறைந்த ஆறு கலங்களும் லாரியிலிருந்து தரையில் உருண்டன. அவற்றுள் ஒரு கலத்திலிருந்து

(பிற்பகல் 4-10)

குளோரின் வாயு வெளிவந்து கொண்டிருந்தது. இவ்விபத்தின் விளைவாகவும், குளோரின் வாயுவின் தாக்குதலாலும் லாரி ஓட்டுனர் உட்பட 14 பேர் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்டனர். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த மூவரில் க்ளீனரும் ஒருவர் ஆவார். இந்த விபத்திற்கு உள்ளாகி இறந்த 14 பேர்களில் எட்டு பேர்களின் சடலங்கள் அடையாளம் காட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; மற்ற ஆறு பேர்களின் சடலங்கள் அடையாளம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அடையாளம் தெரியாத ஆறு பேர்களின் சடலங்களும் உரிய அவகாசம் அளித்த பின்னர், 4—7—1980 அன்று அடக்கம் செய்யப்பட்டுவிட்டன. அதற்குப் பிறகு இந்த விபத்துக்கு ஆளான குடும்பங்களின் வாரிசுகளுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான அவர்களிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தென்னாற்காடு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறந்தவர்களைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரிகள் இறந்தவர்கள் குளோரின் வாயுவை சுவாசித்ததாலும், மற்றும் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுமே அவர்களின் இறப்புக்குக் காரணம் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த இயக்கூர்தி ஆய்வாளர், அவ்வாகனத்தின் முன்பக்க வலது புற டயர் வெடித்ததே இவ்விபத்திற்குக் காரணம் எனச் சான்றிதழ் வழங்கியுள்ளனர். விபத்துக்குள்ளான வாகனத்தை ஓட்டியவர், மோட்டார் வாகன விதி 261, 262யை மீறி 15 பேர்களை ஏற்றிச் சென்றாலும், அவர் இறந்துவிட்டதால் வழக்குத் தொடரவில்லை. விபத்துக்குள்ளான லாரியின் உரிமையாளர்மீது மோட்டார் வாகன விதி 112-ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காயம் அடைந்தவர்கள் திண்டிவனத்தில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் உட்பிரிவு பிணியாளர்களாகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இதன் தொடர்பாக ஒலக்கூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. இதனால்

[திரு. கா. இராசா முகமது] [1980 ஜூலை 7

எந்தவிதமான பதட்ட நிலைமையும் இல்லையாதலால், இந்தப் பொருள் பற்றி விவாதிக்க இந்த அவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற கருத்தினைத் தெரியபடுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பொருள் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி மறுபடியும் எழுந்திருந்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் மரபுப்படி இதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதா இல்லையா என்பதுதான் பிரச்சினை. அமைச்சர் பதில் கொடுத்த பிறகு, விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் சொல்லிவிட்ட பிறகு, உறுப்பினர் விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால், இதற்குப் பெயர் ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை. அதற்கு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கலாம்.

(திரு. க. இராமமூர்த்தி மறுபடியும் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் நல்ல விவரங்களைப் பெற முடியும். ஆனால் அதற்கு மாட்டேன் என்று கூறி, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். விவாதிப்பதற்காக அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்ன பிறகு, விளக்கம் கேட்டால், என்ன பொருள் ? ஒத்திவைப்புத் தீர்மானத்தை கவன ஈர்ப்பாக மாற்றினால் கோபிப்பார்கள் என்று அப்படியே ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டேன். இப்போது அனுமதித்தால் பிறகு மற்றவர்களுக்கும் நான் அனுமதி தரவேண்டும் அல்லவா ?

* **திரு. க. இராமமூர்த்தி :** உங்களுடைய கவனத்திற்காகச் சொன்னேனே தவிர விளக்கம் என்பதற்காகச் சொல்லவில்லை. *இத்தகைய லாரி போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுதான் அவசரப் பொது முக்கியத்துவமான பிரச்சினை. அது இன்னும் தீர்வில்லை.



1980 ஜூலை 7]

## 2. அறிவிப்பு.

### அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 175-ன்படி 1980-81 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :—

1. திரு. ம. சங்கரலிங்கம் (தலைவர்)
2. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்
3. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
4. திரு. பி. முனுசாமி
5. திரு. ஜே. எம். மியாகான்
6. திரு. ப. மாணிக்கம்
7. திரு. ஆ. நல்லசிவன்

## 3. கவன ஈர்ப்பு.

### மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காததினால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தமிழ்நாட்டில் ஜூன் முதல் வாரத்தில் எல்லாப் பள்ளிகளும் திறந்தும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குரிய பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் முதலியன சரிவர கிடைக்காததினால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதுபற்றி விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விவர அறிக்கையில் இந்தப் புத்தகங்கள் தாரப்படுவதற்கு உரிய வழிமுறை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு மலி

@ 256—257 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வான விலையில் தாக்கூடிய காகிதம் 8,000 டன்னிலிருந்து 6,000 டன்னாகக் குறைக்கப்பட்டதால், கொஞ்சம் பற்றாக்குறை இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, பல பகுதிகளில் மாணவர்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் அதே நோட்டுப் புத்தகங்கள் கூட்டுறவு விற்பனை நிலையங்களிலிருந்து மற்ற கடைகளுக்கு வந்து, அங்கே கூடுதல் விலை கொடுத்தால், உடனே கிடைக்கின்றன. பற்றாக்குறை என்றால், கூடுதல் விலை கொடுத்தாலும், கிடைக்காமல் இருக்க வேண்டும். எனவே இது பற்றாக்குறை அல்ல; கூடுதல் விலைக்குக் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. இதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் கூட்டுறவுக் கடைகள் மூலம் தரவேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதிலே உள்ள குறைபாடுகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்குமானால், அதை விசாரித்து தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. ம. சங்காலிங்கம் :** தலைவர் அவர்களே, அடுத்து வருகின்ற கல்வி ஆண்டிலிருந்து—ஒவ்வொரு பள்ளிக்கும் எவ்வளவு புத்தகம் தேவை என்ற கணக்கை இந்தக் கல்வி ஆண்டு இறுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னால் எடுத்து, அதற்காக நேரடியாகப் பணத்தைக் கட்டச் சொல்லி அனுப்பலாம். ஏனென்றால் ஒவ்வொரு பள்ளியிலும் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான அளவிற்கு காகிதம் கிடைக்காததுதான் மிக முக்கியமான காரணம். ஆகவே தான் நோட்டுப் புத்தகங்களை போதுமான அளவிற்குத் தயார் செய்து விற்க முடியாமல் இருக்கின்றது. நமக்குத் தேவை 6,000 டன் என்றால், பேப்பர் கிடைப்பது 3,000 டன் அல்லது 4,000 டன் தான். 'எமெர்ஜென்சி' இருந்த காலத்தில் நமக்கு நல்ல ஒத்துழைப்பு தந்த பேப்பர் மில்காரர்கள் இப்போது அந்த அளவிற்கு ஒத்துழைப்பு தராததால், நாம் கட்டாயப்படுத்தி வாங்க முடியவில்லை. போதுமான அளவிற்குக் காகிதம் கிடைத்தால், இந்தக் குறைபாடு நிச்சயமாக இருக்காது. இருக்கின்ற குறைபாடுகளைக் களைய நாம் முயற்சி எடுத்துக்கொள்வோம். அதற்காக அடுத்த ஆண்டு வரை நாம் தாமதிக்க வேண்டிய அவசியமில்லை.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த நோட்டுப் புத்தகம் தயாரிப்பது என்பது எப்போதும் பிப்ரவரி திங்கள் முதல் ஜூலை திங்கள் முடிய நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் மின்சார வெட்டு அதிகமாக இருக்கின்றது. எனவே வேறு சில நிறுவனங்களுக்கு ஏற்கனவே விலக்கு தந்திருப்பதைப் போல, இந்த நோட்டுப் புத்தகங்கள், பாட நூல்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மின்சார வெட்டைத் தவிர்த்து நிரந்தரமாக மின்சாரம் கிடைக்க ஆணை பிறப்பித்தால், இதனைத் தவிர்க்க முடியும். அப்படி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதை குறிப்பிட்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் என்று மட்டும் வைத்துக் கொண்டிருப்பதில்லை. மூன்று மாதத்திற்கொரு முறை காகிதம் வரவர நோட்டுப் புத்தகங்களைத் தயாரிப்பவர்களுக்கு நாம் தந்து, அதை வாங்கி பிறகு நாம் விநியோகம் செய்ய வைத்துக் கொள்கிறோம். ஆண்டு முழுவதும் தொழில் நடக்கும் வகையில் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பள்ளி கூட்டு இணையங்கள் மூலமாகவும், பல கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலமாகவும் நோட்டுப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்கு வந்திருக்கின்ற செய்திப்படி, அப்படி பள்ளி கூட்டு இணையங்களுக்கு புத்தகங்கள் ஒழுங்காக விநியோகம் செய்யப்படுவதில்லை. சில்லறை வியாபாரிகளுக்கு அதிகமாக விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே தான் அவர்கள் அதிகமாக லாபம் வைத்து விற்கிறார்கள் என்று புகார் இருக்கிறது. இந்த அம்சத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகள் மூலமாகத் தான் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறையோடு இருக்கிறது. பள்ளிகள் கூட்டுறவுக் கடை வைத்து சரிவர இயங்கச் செய்வதில் பல்வேறு பள்ளிகள் சரியான ஒத்துழைப்புத் தருவதில்லை என்று சில சங்கடங்களைச் சொல்கிறார்கள். நோட்டுப் புத்தகங்களை முன்கூட்டியே வாங்கி வைக்க மூலதனம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் காரணமாக பள்ளிகளில் இருக்கின்ற கூட்டுறவுக் கடைகள் சரியாக இயங்க முடியாமல் இருக்கின்றன. அவைகள் நல்ல முறையில் இயங்குமானால், நிலைமை சரியாகிவிடும்.

[1980 ஜூலை 7

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியும் 50 ரூபாய் பணம் கட்டி உரிமம் பெற்றிருக்கிறது. சில நகரங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பொறுப்பாளர்கள் அந்த நோட்டுப் புத்தகங்களை யெல்லாம் மொத்தமாக ஏதாவது ஒரு பள்ளியின் பெயரை எழுதி கணக்கை வைத்துவிட்டு, அந்தப் பள்ளிகளுக்குப் போய்ச் சேர வேண்டிய நோட்டுப் புத்தகங்களைக் கொடுப்பதில்லை. இதை உடனடியாகத் தடுத்தால், நிச்சயமாக பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் கிடைக்க வழிவகை ஏற்படும். எனவே பள்ளிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தச் சங்கங்கள் நோட்டுப் புத்தகங்களை வழங்க வேண்டும் என்ற நிலையில் அமைச்சர் ஆணை பிறப்பிப்பாரா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நோட்டுப் புத்தகங்கள் கூட்டுறவுக் கடைகளுக்குத் தரப் படாமல் வேறு இடங்களுக்குப் போகின்றன என்ற உண்மையை அல்லது ஒரு செய்தியை உறுப்பினர் தெரிவித்தார். அதோடு ஏதாவது ஒரு சங்கத்தின் பெயரைச் சொல்லி அல்லது ஒரு இடத்தில் நடைபெற்றது என்பதையாவது குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்ததாக நாங்கள் கருதுவோம். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், ஒரு நபரையாவது பிடித்து நடவடிக்கை எடுத்தால் மற்றவர்கள் ஒழுங்கிற்கு வருவார்கள். மற்றப்படி பள்ளிகளில் இருக்கும் கூட்டுறவுக் கடைகளுக்குத் தர வேண்டும் என்பதில் தான் அரசு மிகவும் அக்கறையாக இருக்கிறது.

(திரு. பா. ரா. தாமஸ் மீண்டும் எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் இரண்டிற்கு அதிகப்படாத விளக்கங்களைக் கேட்க அனுமதிக்கலாம் என்று தான் இருக்கிறது. ஏற்கனவே நான்கு கேள்விகள் அனுமதிக்கப்பட்டு விட்டன. இது கேள்வி நேரம் இல்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. பா. ரா. தாமஸ் :** கல்வியமைச்சர் அவர்கள் அது குறித்து விளக்கம் கேட்ட காரணத்தால்தான், நான் இரண்டாவது துணைக் கேள்வி போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அம்மாதிரி ஒவ்வொரு உறுப்பினரும் விளக்கம் அளிக்க வேண்டும் என்று எழுந்தால், அனுமதிக்க வேண்டி வந்து விடும் அல்லவா ?



**4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.**

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, இந்த அவையில் நடை பெறும் விவாதத்தில் நான் முதல் தடவையாகக் கலந்து கொண்டு பேசுகிற காரணத்தால், அதிக காலம் கடந்து விட்டிருந்தாலும் கூட, இந்த அமைச் சரவைக்கு நான் என்னுடைய வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில், மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர்களை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன். அது மட்டுமல்ல. இந்த அமைச்சரவை எடுத்துக்கொள்ளும் எல்லா நல்ல முயற்சிகளுக்கும் தீட்டுகிற எல்லா நல்ல திட்டங்களுக்கும் ஆசிரியர், பட்டதாரிகள் முற்போக்குக் கட்சியின் சார்பாக எங்களின் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருவோம் என்ற வாக்குறுதியையும் தர விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்த்தபோது, 1967 ஆம் ஆண்டில் காலம் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன் முறையாகப் பதவிப் பொறுப்பேற்றபோது கூறிய கூற்றுதான் என்னுடைய நினைவுக்கு வந்தது. அப்போது அண்ணா அவர்கள் "வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்" என்றார்கள். அப்போது அதை என்னைப் போன்ற சாதாரணப் பொதுமக்கள் நடைமுறைச் சாத்தியமுள்ளதாக நம்பவில்லை. நாங்கள் என்ன நினைத்தோம் என்றால், அண்ணா அவர்கள் தமக்கே உரித்தான பாணியில் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று கூறுவதைப்போல் இதையும் குறிப்பிடுகிறாரே தவிர, இது நடைமுறை சாத்தியமானது என்றோ, இது நடக்கக்கூடியது என்றோ நினைக்கவில்லை. ஆனால் இன்றையதினம் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், உண்மையிலேயே இது நடைமுறை சாத்தியமானது என்பதை உணர முடிகிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்தவிதமான புதிய வரியையும் போடாமல், மறைந்த இராஜாஜி அவர்கள் காமதேனு என்று குறிப்பிட்ட விற்பனை வரியிலும், பல பொருள்களின் மீதான வரியைக் குறைத்து, சில பொருள்களின் மீதான வரியை முற்றிலுமாக ரத்து செய்து, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பல நல்ல

திட்டங்களையும் அறிவித்து, பல்வேறு நிவாரணப் பணிகளையும் செயல்படுத்துவதாகக் கூறி, நலிந்தோர்களுக்கு உதவியும் அறிவித்து, இத்தனைக்கும் நிதி ஒதுக்கீடு செய்த பிறகு ரூ. 15.39 கோடி ரூபாயை உபரியாகக் காட்டியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே வியக்கத் தக்கதாகும். இதை என்னால் நம்பக்கூட முடியவில்லை. கணக்கில் ஏதாவது தவறு இருக்குமோ என்று நானும் முடிந்தவரை கூட்டிக் கழித்துப் பார்த்தேன். ஆனால் என்னால் தவறு எதும் கண்டுபிடிக்க முடியவில்லை. அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் எல்லாம் சரியாக இருக்கும் என்றுதான் நான் நம்ப வேண்டியிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்டுதலுக்குரிய பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் அமைச்சர்களின் பின்னாலே அவர்களைப் பாராட்டிப் பேசும் திறமை மிக்க உறுப்பினர்கள் பலர் இருப்பதால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மிகக் குறைந்த நேரத்தில், நான் அத்தகைய பாராட்டுதல்களில் ஈடுபடாமல் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள சில குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லி, அதோடு என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி, சிலவற்றில் என்னுடைய ஆலோசனைகளையும் கூற விரும்புகிறேன்.

சென்ற சனிக்கிழமை பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் " Deficit financing is bad economy இந்த நிதிநிலை அறிக்கை உபரி பட்ஜெட்டாக இருக்கிறது, ஆகவே இதைப் பாராட்டுகிறேன் " என்று குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில் Deficit financing is bad economy என்றோ, சர்ப்ளஸ் பட்ஜெட் வந்தது நல்லது என்றோ அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளை எழுப்ப விரும்பவில்லை. என்றாலும் இன்று தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் சர்ப்ளஸ் பட்ஜெட் என்பது அவசியம்தானா என்று மட்டும் கேட்க விரும்புகிறேன். " It is not a luxury that we can ill-afford. என்று கேட்க விரும்புகிறேன்.

பல திட்டங்களுக்காக இந்த அரசு மத்திய அரசை அணுகி நிதி உதவி கோரியிருக்கிறது. அப்படி மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்போவதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் நாம் நிதி உதவி கோரும்போது, நமது மாநிலத்தில் ஒரு சர்ப்ளஸ் பட்ஜெட் தேவைதானா என்றுதான் கேட்க விரும்புகிறேன். நமது வரவு-செலவு அறிக்கையில் ரூ. 15 கோடி உபரியாக வைத்துக் கொண்டு அவர்களிடம் நிதி உதவிக்குப் போனால், அவர்கள் என்ன சொல்லுவார்கள்? " மற்ற



மாநிலத்தில் பற்றாக்குறை பட்ஜெட் போட்டு அவர்களெல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்களோ 15 கோடி ரூபாய்க்கு உபரி பட்ஜெட் போட்டிருக்கிறீர்கள். இந்த நிலையில் எதற்காக உங்களுக்கு நாங்கள் உதவி செய்ய வேண்டும் " என்று மத்திய அரசு கேட்கக்கூடும். பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்குத்தான் நாங்கள் நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று கூறிவிடலாம். நம்முடைய மாநிலத்தில் இன்னும் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கின்றன. எனவே உபரியாக உள்ள இந்த ரூ. 15 கோடியை உடனடியாகச் செலவு செய்து, எந்த வகையிலும் உபரியில்லாமல் ஒரு 'பேலன்ஸ்டு பட்ஜெட்டாக' இதை அமைத்தால், மிகவும் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1979 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் மீது இந்த அவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு நான் பேசும்போது, மேற்கு வங்கத்தை மேற்கோள் காட்டி, அங்கே படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அதை நம் மாநிலத்திலும் அமுல்படுத்த வேண்டும் என்று அப்போது கேட்டுக் கொண்டேன். அந்தத் திட்டத்தைத் தற்போது நமது அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு ஏதோ ஓரளவு அதை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கையும் அளித்திருக்கிறது. இதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இது ஒரு இடைக்கால நிவாரணமாகத்தான் இருக்க முடியும், நிரந்தரமான பரிகாரமாக இருக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். நிரந்தரமான பரிகாரம் எப்படிக் காண முடியும் என்றால், வேலையில்லாமல் திண்டாடும் அனைவருக்கும் வேலை கொடுக்கும் வாய்ப்பை உருவாக்குவதன் மூலமாகத்தான் செய்ய முடியும். இந்த வகையில் இரண்டு முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இவை இரண்டும் எல்லோருக்கும் தெரிந்தவைதான்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமென்றால், நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளை அதிகமாக ஏற்படுத்தி, இங்கே தொழில் வளத்தைப் பெருக்குவதுதான். அதன் மூலம் மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், தொழில் அதிபர்கள் என்ன கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில், ஒரு 10 நாளைக்கு முன்னால் மதுரை—இராமநாதபுரம் மாவட்ட வர்த்தக சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசிய பல தொழில் அதிபர்கள் " இந்த அரசாங்கம் தொழில் அதிபர்களுக்கு ஆதரவு

கொடுப்பதில்லை" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட குறிப்பிட்டார்கள். லேலண்ட் நிறுவனம் தமிழகத்தில் புதிதாக ஒரு பிரிவை ஏற்படுத்துவதாக இருந்தார்கள். ஆனால் இடையில், அண்டை மாநிலம் ஒன்று குறுக்கிட்டு, நமது மாநிலம் அவர்களுக்கு அளிக்க இருந்த சலுகையைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான சலுகைகளைக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்த காரணத்தால், அந்தத் தொழிற்சாலை இன்றையதினம் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றுவிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட குறிப்பிட்டார்கள். இது மிகவும் வேதனைக்குரிய செய்தியாகும். இப்படி ஒரு மாநிலம் அதிகமான அளவுக்குச் சலுகை கொடுக்க முன்வரும்போது, நமது மாநில அரசு போட்டி போட்டுக்கொண்டு அதைவிட அதிகமான சலுகைகளைத் தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் இனிமேலாவது அண்டை மாநிலத்திற்குப் போய்விடாமல் நமது மாநில அரசு தடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் இள வயதுடைய ஒருவர் நமக்குத் தொழிலமைச்சராக வந்திருப்பது நல்ல வாய்ப்பு என்று கருதுகிறேன். அவர் இப்போது அவையில் இல்லை. இளம் வயதுடையவர் அவர். தீவிரமான செயல்திறன் மிக்கவர். துணிவும் அறிவும் ஆற்றலும் மிக்கவர். பேரவையின் துணைத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். அவர் இன்றையதினம் நமது மாநிலத்தின் தொழில் அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிறார். அவர் இதில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு வெகு சீக்கிரத்தில் நமது தமிழகத்தில் நிறைய தொழில் வளம் பெருகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கூட சொல்லியிருக்கிறார். இதுவரை 96 தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்க உரிமம் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் 'ரோட்டீன் கோர்சில்' எழுதி, அவர்களிடமிருந்து பதில் பெற்று, அதற்குப் பிறகு தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது என்பது இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் பொருத்தமானதல்ல. அதற்கு மாறாக மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களே டெல்லிக்கு நேரில் சென்று அனுமதி கோரி வாங்கி வர வேண்டும். தற்போது பேரவைத் தலைவராக இருக்கும் மாண்புமிகு திரு. இராஜாராம் அவர்கள் டெல்லியில் முன்பு தமிழக அரசின் பிரதிநிதியாக இருந்து செயல்பட்டார்கள். அப்படி அமைச்சருடைய அந்தஸ்தில் ஒருவரை அங்கே அனுப்பி இருக்கச் செய்து, இப்படிப்பட்ட உரிமங்கள் உடனடியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல. தொழிலதிபர்கள் பலரும் இன்னொரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். "இங்கே நாம் தொழிற்சாலைகளைத் தொடங்குவதைக் காட்டிலும், அண்டையிலுள்ள கருநாடகத்திலோ, ஆந்திர மாநிலத்திலோ ஆரம்பித்தால் நமக்கு மிகுந்த லாபம் கிடைக்கும். அங்குள்ள அரசுகள் பல'சலுகைகளையும் உதவிகளையும் செய்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார்கள். இந்தக் கருத்தின் அடிப்படையில் பல தொழிலதிபர்கள் இன்றையதினம் தங்களின் புதிய தொழிற்சாலைகளை கருநாடகத்திலும், ஆந்திர மாநிலத்திலும் துவக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டத்திலேயே அதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். மேலும் தொழில் அதிபர்கள் அரசாங்கத்தை வந்து அணுகும்வரை காத்துக் கொண்டிருக்காமல், தொழில் அமைச்சர் அவர்கள் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி ஆவன செய்ய வேண்டும். ஒரு அதிகாரியை விட்டு, எங்கெங்கே என்னென்ன தொழிற்சாலைகளைத் தொடங்கலாம், அதற்கு எங்கெங்கே வாய்ப்புகள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைச் சேகரித்து, தொழில் அதிபர்களை எல்லாம் வரச் சொல்லி, அவர்களுக்கெல்லாம் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஊட்டி, தமிழகத்தில் உள்ள அனைத்து தொழில் அதிபர்களும் தமிழகத்திலேயே தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். முடிந்தால் வெளிமாநிலத்தில் உள்ள டாட்டா, பிர்லா போன்றவர்களையும் அழைத்து தமிழகத்தில் தொழிற்சாலை அமைக்க கேட்க வேண்டும். இந்த விஷயத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் கவனம் செலுத்தி, ஓராண்டு காலத்திற்குள் தொழில் வளத்தைப் பெருக்கியாக வேண்டும்.

(பிற்பகல் 4.30)

தொழில் முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழகம் இந்தியாவில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது. இப்போது 16 வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்த நிலையை மாற்றி மீண்டும் மூன்றாவது இடத்தை அல்லது முதல் இடத்தைப் பிடிக்கக் கூடிய அளவிற்கு தொழில் அமைச்சர் அவர்கள் செயல்பட வேண்டும். அப்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். உண்மையாகவே பொருளாதாரமும் முன்னேறும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, சர்ச்சைக்குரிய ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். பலர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற சமயத்தில் நம்முடைய அரசு அலுவலர்களுடைய ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தியிருக்கிறது. இது மிகவும் தவறு என்பது என்னுடைய கருத்து. அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியதன் காரண

மாக, படித்துப் பட்டம் பெற்ற வாலிபர்கள் வேலை வாய்ப்புப் பெறும் வாய்ப்பு 3 ஆண்டுகளுக்குக் கிடைக்காமல் போகிறது. ஆகவே நிச்சயமாக இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னதாக மாவட்ட நீதிபதிகளுக்கு (டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ்) மாத்திரம் ஓய்வு பெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியபோது, சப்-ஜட்ஜ்களும், டிஸ்ட்ரிக்ட் முன்சிப்புகளும், "எங்களுக்கும் ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்த வேண்டும்; அல்லது அவர்களுடைய ஓய்வுபெறும் வயதை 55 ஆகக் குறைக்க வேண்டும்" என்று கேட்டுக் கிளர்ச்சி செய்தார்கள். அப்போதிருந்த அரசு அதை ஏற்றுக்கொண்டது. அப்போது அண்ணா அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மாவட்ட நீதிபதிகளுடைய வயதை 55 ஆகக் குறைத்தார்கள். அதைப் போலவே அரசு ஊழியர்களுடைய ஓய்வு பெறும் வயதையும் 55 ஆக மீண்டும் குறைக்க வேண்டும். இப்படிக் குறைத்தால் நிச்சயமாக இதற்கு எதிர்ப்பு கிளம்பும்; அதை அரசாங்கம் சமாளிக்க வேண்டியிருக்கும். இதைச் சமாளிக்க நான் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

58 வயதில் ஓய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கு, அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் எட்டில் மூன்று ஓய்வூதியமாகக் கொடுக்கப்படுகிறது இப்போது. ஓய்வு பெறும் வயதை 55 ஆகக் குறைத்துவிட்டு 55 முதல் 60 ஆண்டுகள் வரை அவர்களுக்கு அளிக்கப்படும் எட்டில் மூன்று பங்கு ஓய்வூதியத்திற்குப் பதிலாக எட்டில் ஐந்து பங்காக உயர்த்திக் கொடுக்கலாம். அப்போது அவர்கள் திருப்தி அடைவார்கள். 58 வயது வரையிலும் கட்டாயம் வேலை செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய அவாவாக இருக்காது. தகுந்த ஓய்வூதியம் கிடைக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கமாக இருக்கும். ஆகவே எட்டில் ஆறு பங்கையோ அல்லது ஐந்து பங்கையோ ஓய்வூதியமாகக் கொடுத்தால் நிச்சயமாக அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று நம்புகிறேன். இந்த அடிப்படையிலே அலுவலர்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி ஓய்வுபெறும் வயதை மீண்டும் 55 ஆகக் குறைத்தால் நிச்சயமாக பட்டம் பெற்ற வாலிபர்கள் வேலை வாய்ப்புப் பெற வசதியாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மின்சார உற்பத்தியின் முக்கியத்துவத்தை அறிந்து அதைப் பற்றிய நிறைய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான சக்தி, மின்சக்தி, ஆகவே அதை துரிதமாக, அதிகமாக விரிவுபடுத்த வேண்டு



மென்பதிலே சந்தேகமில்லை. அதை ஒப்புக்கொண்டுதான் நிதியமைச்சர் அவர்களும் அதைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தூத்துக்குடியில் இரண்டாவது இயந்திரம் ஏற்படுத்த இருப்பது, ஓஷன் தெர்மல் எனர்ஜி கன்வாஷன் ஆகிய இரண்டு திட்டங்களைத் தவிர மற்ற எல்லாத் திட்டங்களும் நீர்மின் நிலையங்கள்தான். நீர்மின் நிலையங்களை இந்த அளவிற்கு நம்பியிருப்பது பெரும் ஆபத்தானது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், பருவக் காற்றில் நமக்கு நம்பிக்கையில்லை. அடிக்கடி பருவ மழை பொய்த்து விடுகிறது. அல்லது மிக அதிகமான மழை பெய்து வெள்ளம் அடித்து பயிர்களை அழிக்கிறது. இப்போதுகூட மேட்டூரின் கீழ்ப் பகுதியில் வெள்ளம் அடித்துச் சென்றிருப்பதாகப் பத்திரிகையில் படிக்கிறோம். ஆகவே நீர்மின் நிலையத்தைப் பூரணமாக நம்பியிருப்பது உசிதமில்லை என்று சொல்லி அனல் மின் நிலையங்களை ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் அனல் மின் நிலையம் இருந்தது. முன்பிருந்த தி.மு.க. அரசாங்கம் அதைப் பிரித்து எடுப்பதிலே ஊழல் செய்து விட்டது என்று சர்க்காரியா கமிஷன் முன்பாக இப்போது ஆளும் கட்சியாக இருப்பவர்கள் முன்பு குற்றம் சாட்டினார்கள். ஊழல் இருந்ததா, இல்லையா என்பதைப்பற்றி நான் கிளப்பவில்லை. அந்தக் குற்றச்சாட்டில் ஒரு பகுதி, பிரித்ததே தவறு என்பது. அப்படிப் பிரித்தது தவறு என்று சொன்னவர்கள் இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஏன் அதை அவர்கள் மீண்டும் பொருத்தக் கூடாது? அங்கே இட வசதி இருக்கிறது, கட்டிட வசதியிருக்கிறது, நீர் வசதி இருக்கிறது, இயந்திரம் வைப்பதற்காக துத்தநாகக் கூடம் கூட இருக்கிறது. இயந்திரம் மாத்திரம்தான் வாங்கிப் பொருத்தப்பட வேண்டும். நவீன இயந்திரமாக இருந்தால், வெகு நல்ல முறையிலே பலன் அளிக்கும் என்பதிலே சந்தேகமில்லை. முன்பு செயல்பட்டுக் கொண்டிருந்த அனல் மின் நிலையத்தின் திறன் 30 மெகாவாட்டாக இருந்தது. இப்போது நவீன இயந்திரத்தைப் பொருத்தினால் 100 அல்லது 50 மெகாவாட்டாக அதை உயர்த்த முடியும். இப்படிச் செய்தால், மின்சாரத் தட்டுப்பாடு இருக்கும் காலத்தில், அது மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லி, சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை மீண்டும் செயல்பட வைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்தக் குறை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளாக இந்த அவையில் பல்லவியாகப் பாடி மீண்டும் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறேன். மதுரையிலே ஒரு நீதிமன்றப் பிரிவை அமைக்க வேண்டும் என்பதுதான் அது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பாடுவதாகத் தெரியவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் மீண்டும் சுவையாகப் பாடியதாகச் சொல்கிறார். அப்படி என்ன பாடினார் ?

**திரு. த. சந்தோஷம் :** சுவையாகப் பாடுவதாக நான் நினைக்கவில்லை. ஒரே விஷயத்தை எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன். 12 ஆண்டுகளாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. மாதவன் காலத்திலேயே இதை எழுப்பினேன். அப்போது என்னைத் தனியாகக் கூப்பிட்டு, " இராமநாதபுரம் சப்-கோர்ட்டை ஸ்ரீவில்லிபுத்தூருக்குக் கொண்டு போக நினைத்தால், அதை இடைஞ்சல் பண்ணும் வகையில் நீங்கள் இந்தக் கோரிக்கையை வைக்கிறீர்களே " என்று கேட்டார். பிறகு ஐகோர்ட் பெஞ்சை மதுரைக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறீர்களே, சுப்ரீம் கோர்ட்டை தமிழ் நாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று நீங்கள் கேட்டால் என்ன ?" என்று கேட்டார். உடனே நான், " இந்தியாவின் வட கோடியில் சுப்ரீம் கோர்ட் செயல்பட்டு வருகிறது. அநேகம் பேருக்கு அதைப் பார்க்கக் கூட வாய்ப்பில்லை. வழக்குத் தொடரக் கூட கஷ்டமாக இருக்கிறது. அதையும் பிரிக்க வேண்டும். ஆனால் அது மத்திய அரசின் பொறுப்பு. இங்கே செய்ய முடியாது. ஆனால் ஐகோர்ட் பெஞ்சைப் பிரித்து மதுரையில் அமைப்பது மாநில அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே இதைச் செய்ய வேண்டும் என்று சொன்னேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் நிச்சயமாக அதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். " இதிலே, இனிஷியல் ஹர்டில்ஸ் (Initial Hurdles) இருக்கின்றன. அதில் தீர்வு காண முயற்சி செய்கிறேன். பிறகு நிச்சயமாக வெகு சீக்கிரத்தில் மதுரையில் ஐகோர்ட் பெஞ்சை அமைப்பேன் " என்று வாக்குறுதி அளித்தார்கள். அதன் பிறகு சட்ட அமைச்சராக திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் வந்தார்கள். அவர்களிடமும் இந்தக் கோரிக்கையை வைத்தேன்.

" I wish to assure the Hon. Member that the Government is in no way behind him in his anxiety to establish a High Court Branch at Madurai."



என்று அவர் சொன்னார். என்னைக் காட்டிலும் ஆர்வம் அதிகமாகப் பெற்றிருப்பதாகக் கூறி வெகு சீக்கிரத்திலேயே நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இப்போது தீவிரமாகச் செயல்படக்கூடிய, இளம் வயதுள்ள வழக்கறிஞர் திரு. பொன்னையன் அவர்கள் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவருடைய காலத்திலாவது இதைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒருவேளை கட்டிடம் கட்ட மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகும் என்றாலும் கூட, இந்த ஆண்டிலேயே கேம்ப் கோர்ட்டையாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சமயத்தில் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி மதுரை வக்கீல்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இப்படி பல ஆண்டுகாலமாகக் கேட்டுக்கொண்டிருந்தும் இன்னும் அமல்படுத்தப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. ஆகவே இந்த ஆண்டிலேயே மதுரையில் ஒரு கேம்ப் கோர்ட்டாக அமைப்போம் என்ற வாக்குறுதியை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொடுத்தால், நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

அடுத்து, சட்டத் துறையிலே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். நான் சட்டக் கல்லூரியிலே படிக்கும்போது, காம்போசிட் மெட்ராஸ் ஸ்டேட், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே ஒரு சட்டக் கல்லூரி இருந்தது. ஆனால் இப்போது தமிழ் நாட்டிற்கு மாத்திரம், பாண்டிச்சேரியைச் சேர்க்காமல்கூட, 5 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 5 சட்டக் கல்லூரிகளும் தனிப்பட்ட பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. சென்னை சட்டக் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்திலும், அண்ணாமலை சட்டக் கல்லூரி அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும், மதுரை சட்டக் கல்லூரி மதுரை யூனிவர்சிடியிலும், அதுபோல் திருச்சியிலும் செயல்படுகிறது, கோவையிலும் செயல்படுகின்றது. இப்படி ஒவ்வொரு சட்டக் கல்லூரியும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தில் இருந்துகொண்டு செயல்படும்போது, தனித்தனியாகச் செயல்படும்போது, அதிலே எவ்வளவு சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி நான் நினைக்கிறேன். ' மதுரை போர்ட் ஆஃப் ஸ்டடீஸ் இன் லா 'வில் நான் இதைப் பார்த்தேன். மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே சிலபஸ் வேறு மாதிரியாக இருக்கிறது. அவர்களுக்கு முதல் ஆண்டில் வேறு மாதிரி சப்ஜெக்ட்டாக இருக்கிறது. அவர்கள் எடுத்துக்கொண்டு படிக்கும் டெக்ஸ்ட் புக்ஸ், ஆதாரமான புத்தகங்கள் எல்லாம் வேறு மாதிரியாக இருக்கின்றன. ' ஜாயின்ட் சிட்டிங்ஸ் ஆஃப் போர்ட்ஸ் ஆஃப் ஸ்டடீஸ் இன் லா ' நடக்கும்போது, ஆய்ந்து அதிலே

ஓரளவுக்கு ஒழுங்குபடுத்த முயற்சி செய்தோம். அந்த முயற்சி செய்தும்கூட, அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இப்போதும் சென்னை சட்டக் கல்லூரியில் படிப்பவர்கள் முதல் ஆண்டில் வேறு புத்தகம் தான் படிக்கிறார்கள். மற்ற இடங்களில் படிக்கின்றவர்கள் வேறு புத்தகம் படிக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு விதமான மாறுதல்கள் இருக்கின்றன. எல்லாக் கல்லூரிகளையும் ஒன்றாகச் செயல்படச் செய்ய வேண்டும். அக்ரிகல்சுரல் யூனிவர்சிடியைப் போல செய்ய வேண்டும். அதில் எல்லாவற்றையும் சேர்த்த யூனிவர்சிடியாக வைத்திருக்கிறார்கள். அதுபோல இந்த ஐந்து சட்டக் கல்லூரிகளையும் சேர்த்ததாக பல்கலைக் கழகம் இருக்க வேண்டும். அதாவது 'யூனிவர்சிடி ஃபோர் லீகல் ஸ்டடீஸ்', சட்டப் பல்கலைக் கழகம் என்று ஏற்படுத்தினால், அநேக சிக்கல் தீர்ந்துவிடும். சட்டக் கல்லூரிகளும் உண்மையாகவே நன்றாக நடக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே அங்கத்தினர்கள் கடிதம் எழுதலாமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** யாரும் கடிதம் எழுதுவதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கடிதம் எழுதவில்லை, குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நான் பேசுவதை கவனிக்காமல், வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதற்காக என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது வகுப்பு குற்றவியல் நடுவர்களை, செகண்ட் கிளாஸ் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் தேர்ந்தெடுப்பது பற்றி ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நீதி, நிர்வாகம் இந்த இரண்டு இலாக்காக்களும் பிரிக்கப்பட்ட சமயத்திலே சட்டத் துறையிலே வழக்கறிஞர்கள், இரண்டு ஆண்டுகளாகப் பணி புரிந்த வழக்கறிஞர்களிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்தது. வக்கீல்களாகப் பணியாற்றியவர்களுக்குத்தான் சட்டத் துறையிலே வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. அப்போதுதான் சட்டத் துறையிலே உள்ள பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு ஓரளவுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் ஓரளவுக்குத் தனித்து இயங்குவார்கள். அவர்களுக்குப் போதிய அனுபவம் இருக்கும்



என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த முறையை யார் மாற்றினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது இரண்டாம் வகுப்பு குற்றவியல் சப்-மாஜிஸ்ட்ரேட்டாக டிப்பார்ட்மெண்ட் கிளார்க்காக இருந்தவர்கள்கூட வருகிறார்கள். ஓரிசா யூனிவர்சிடி போன்ற யூனிவர்சிடியில் பி. எல். படித்தவர்கள்கூட வந்து விடுகிறார்கள். அப்படி வந்திருக்கும் மாஜிஸ்ட்ரேட்டுகளில் பலர் சாட்சிகளை எப்படி விசாரிப்பது, ஜட்ஜ்மெண்ட் எப்படி எழுதுவது என்பதெல்லாம் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் குமாஸ்தாக்களைக் கேட்டுச் செய்கிறார்கள். நாம் குமாஸ்தாக்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் எப்போதும் நீதியுடன், நடுநிலையாக எதையும் செய்வார்கள் என்று நம்புவதற்கில்லை. அப்படித்தான் குமாஸ்தாக்கள் விலையும் போய்விடுகிறது. அவர்கள் அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்களைக் கேட்டு செய்கிறார்கள். அவர்களை உதவி செய்யும்படி கேட்கிறார்கள். இது மிகவும் தவிர்க்க முடியாத நிலையாக இருக்கிறது. இதிலே நல்லவர்களும் இருக்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்கிறேன் என்று நினைத்துவிடக் கூடாது. புரமோஷனில் வந்த இரண்டாம் வகுப்பு குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டுகளில் நல்லவர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் காரணமாக அடிப்படை நோக்கமே நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுவும் குறிப்பாக 5 சட்டக் கல்லூரிகள் வந்து விட்டன. ஒரு ஆண்டில் 1,500 வழக்கறிஞர்கள் புதிது புதிதாக வந்திருக்கிறார்கள். அங்கு உட்காரவே இடமில்லை. மியூசிகல் சேர் மாதிரி, உட்கார்ந்திருப்பவர்கள் எப்போது இடத்தை விட்டு எழுவார்கள் என்று பார்த்து, அந்த இடத்தில் உட்காரவேண்டிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. வக்கீல்கள் மத்தியிலே இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஏற்கெனவே குமாஸ்தாக்களாக வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கொடுப்பது என்பது நியாயமானது அல்ல. இந்த முறையை மாற்ற வேண்டும். இரண்டு ஆண்டுகளாவது வக்கீல்களாகப் பணி புரிந்தவர்கள், செகண்ட் கிளாஸ் சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மதுவிலக்குப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஸ்திரமான கருத்தைக் கொண்டவர்கள்தான். இதை நான் அறிவேன். அவருடைய கருத்துக்கு நான் முழு மரியாதையைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். மதுவிலக்குத் திட்டம் அமுல் படுத்தப்பட்டிருக்கிறது. அது 1978 அக்டோபர்

(திரு. த. சந்தோஷம்) [1980 ஜூலை 7

மாதத்திலே என்று நினைக்கிறேன். தவறுதலாக இருந்தால், மன்னித்துக் கொள்ள வேண்டும். ஒரு அவசரச் சட்டம் வந்திருக்கிறது. கடினமான சட்டம். குடித்திருந்தால், 4 (1) ஜே-யின்படி குறைந்தபட்ச சிறை தண்டனை மூன்று மாதம், சாராயம் வைத்திருந்தால், 4 (1) (ஜே) (ஏ)-யின்படி ஆறு மாதம் சிறைத் தண்டனை, ரூ. 500 அபராதம்—இப்படிப்பட்ட கடுமையான தண்டனைகள் இருக்கின்றன. அதற்கு ஏராளமானவர்கள் சிறைக்குச் சென்றார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் என்ன நினைத்ததோ, 1979 ஆம் ஆண்டிலே என்று நினைக்கிறேன். திடீரென்று தளர்த்தி விட்டார்கள். குடித்தவர்கள் மேல் இப்போது வழக்குப் போடுவதில்லை. ஏற்கனவே வழக்குப் போட்டதைக்கூட மேலே நடத்த வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ரூ 25 கொடுத்தால், பெர்மிட் கொடுப்பது என்று ஆகிவிட்டது. இப்போது இருக்கும் நிலைமை மதுவிலக்கை ரத்து செய்ததாகவும் இல்லை, செய்யாததாகவும் இல்லை. இப்போது இரண்டும் கெட்ட நிலையாக இருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்தினால், இளைஞர்கள் கெட்டுப் போகமாட்டார்கள். பல குடும்பங்கள் நன்மையடையும் என்றால் நல்லது. அதை அமல் நடத்த முயற்சி எடுத்தோம். ஆனால் அதை நடத்த முடியவில்லை. தோல்வி கண்ட பிறகுதான் தளர்த்தியிருக்கிறார்கள். தோல்வி கண்ட பிறகு, ஏன் அதைப் பூரணமாக எடுத்துவிடக்கூடாது? அரசுக்கு 200 கோடி ரூபாய் வரும். அதை நல்ல திட்டங்களுக்குச் செலவழிக்கலாம். மதுவிலக்கை பெங்களூரிலே பூரணமாக ரத்து செய்துவிட்டார்கள். அங்கே இரண்டு கடைகளுக்கு ஒரு கடை மது அருந்துகிற கடையாகத்தான் ஆகியிருக்கின்றன. அங்கே இருக்கிறபோது சென்னையிலே மட்டும் என்ன வந்துவிட்டது? இந்த இரண்டுக்கும் மத்தியிலே பூரண மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய தீமைகளும், மதுவிலக்கு இல்லாததனால் ஏற்படக்கூடிய தீமைகளுக்கும் இடையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு முறைகளினால் எந்த விதமான நன்மையும் இல்லை. இதிலே அரசாங்கம் உறுதியான முடிவு எடுத்து, பூரண மதுவிலக்கை சரியான முறையில் அமுல் நடத்த முடியவில்லை என்றால், இதிலே உள்ள தோல்வியை ஏற்றுக்கொள்வதிலே எந்த விதமான கௌரவப் பிரச்சினையும் இல்லை என்று நினைக்கிறேன். இங்கே பெங்களூரைப் போல இருக்கட்டும். இரண்டும் கெட்டான் நிலையிலே இருக்க வேண்டாம். சிலர் 25 ரூபாய் கொடுத்து பெர்மிட் வாங்கிக் குடிக்கிறார்கள். சிலர் வாங்காமலேயே குடிக்கிறார்கள். இதிலே அரசு கவனம் செலுத்தி, இதற்கு என்று ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, சரியான முறையில் மதுவிலக்கை அமுல் நடத்த முடியாவிட்டால், மதுவிலக்கைப் பூரணமாக ரத்து செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில்



1980 ஜூலை 7] (திரு. த. சந்தோஷம்)

பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி, எனக்கு இங்கு பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*** திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவிக்க விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் என் வணக்கத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இந்த அவைக்கு என்னை அனுப்பி நாட்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற ஒரு வாய்ப்பை நல்கிய, என்னை அரசியலில் ஆளாக்கிய, அண்ணன் கலைஞர் அவர்களுக்கும் நான் என் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சினைத் துவக்க இருக்கிறேன். துவக்குவதற்கு முன்னால், மன்றத்தினுடைய தலைவர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவைப்பற்றி பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தேன். எத்தனையோ முறை நான் அவர் வீட்டிற்குச் சென்று அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்திருக்கிறேன். அந்தச் செய்தியைப் படித்துவிட்டு, இந்த அவையிலே இப்போது பேச வந்திருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்த ஆண்டும் இந்த அவையின் சார்பிலேயும், நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் அவர்களுக்கு உளமார பாராட்டுதல்களை உரித்தாக்குகிறேன்.

என்னுடைய முதல் பேச்சின்போது, எங்கே முதலமைச்சரவர்கள் வராமல் போய்விடுவார்களோ என்ற அச்சம் அல்லது நினைப்பு என்னுடைய மனதில் எழுந்ததென்று சொல்ல மாட்டேன். நிச்சயமாக அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இரண்டு, மூன்று நாட்களாக அவர்கள் அவைக்கு வரவில்லை. அப்படி அவர் வராததால், என்னுடைய பேச்சை அவர் கேட்க முடியாமல் போய்விடுமோ என்ற நினைப்பு இல்லாவிட்டாலும், அவருடைய பழைய தம்பி என்ற முறையில், இன்றையதினம் அவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்க வந்துள்ளமைக்காக என்னுடைய நன்றியை அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவைக்கு நான் புதியவன் என்றாலும், இந்த நாட்டுக்கும், சென்னை மாநகரத்திற்கும் நான் புதியவன்

அல்ல என்பதை இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் அறிவார்களென்று கருதுகிறேன். நம்முடைய நிதியமைச்சர், நடமாடும் பல்கலைக் கழகம், நாவலர் அவர்கள் 8 மாதங்களுக்கான நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொன்றாக ஊன்றிப் படித்துப் பார்த்தால், நிச்சயமாக அது நாட்டு மக்களை ஏமாற்றும் நிதிநிலை அறிக்கையாகத்தான் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, இதில் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் எதுவுமில்லை என்பதை நிதியமைச்சரவர்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒட்டுமொத்தமாக ஒன்றுமே இல்லை என்று சொல்லுகிறீர்களே, நியாயம்தானா, எதிர்க் கட்சி என்றால் இப்படித்தானா என்று முதல்வரவர்கள் நினைக்கக் கூடும்.

நான் முதன்முதலில் விவசாயிகள் பிரச்சினையைப் பற்றிக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். என்ன, நீ விவசாயியா என்று கேட்க வேண்டாம். ஏனென்று சொன்னால், விவசாயி சேற்றில் கை வைத்தால்தான் நாம் அனைவரும் சோற்றில் கை வைக்க முடியும். சோறா சாதமா என்ற வாக்குவாதத்தை நான் தலைவரவர்களிடம் விட்டுவிடுகிறேன். தமிழ் இலக்கியத்திற்குள் நான் புக விரும்பவில்லை. சோறா, சாதமா என்பது நீண்ட காலமாக விவாதத்தில் இருக்கிறது. எனவே சோறா, சாதமா என்று கேட்டு என்னை இடைமறிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை தமிழ் அறிஞர்களிடம் விட்டு விடுகிறேன். இன்றைக்கு விவசாயிகளின் கடனில் 60 கோடி ரூபாய் தள்ளியிருக்கிறார்கள் என்று சொல்லும் அதே நேரத்தில், எந்தெந்த முறையில் தள்ளியிருக்கிறார்கள், அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்த்தால், அது தெளிவாக இல்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு ஏக்கர் நிலம், 5 ஏக்கர் உள்ளடக்கிய நிலங்கள், அதற்கு அப்பாற்பட்டு வைத்திருக்கிற நிலச் சொந்தக்காரர்கள் அனைவருக்கும் மழை பெய்யும் நேரங்களில், அதனால் நிலங்கள் பாதிக்கப்படும் நேரங்களில், பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அளவிற்குப் பாதிப்பு ஏற்படுகிறதென்றால், அவர்களுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 5,000 ரூபாய், 10,000 ரூபாய் அளவிற்குப் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகையால் வெள்ளத்தால் பாதிக்கப்படும் விவசாயிகள் ஒரே சீராகத்தான் இருப்பார்கள். எனவே அவர்களைப் பாகுபடுத்தி, விளையாட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் விவசாயிகள் ஏர் ஓட்டினால்தான் மந்திரிகள் கார் ஓட்ட முடியும், நாமும் கார் ஓட்ட முடியும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, தொழில் வளர்ச்சி பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் துறைபற்றி நான் கோடிட்டுக் காட்டத்தான் விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்று சொன்னார்கள். "நானும் தம்பி கருணாநிதியும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்த மிகப் பெரும் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தோம். கருணாநிதி சுற்றிச் சுற்றி வந்தான். இந்தத் தொழிற்சாலைக்குத்தான் போக வேண்டுமா என்று கேட்டார்கள். ஆமாம் என்று சொல்லிவிட்டு நானும், கருணாநிதியும்—கருணாநிதி என்று சொல்ல வாய் தடுமாறுகிறது—கலைஞரும் சென்றது ஒரு செருப்புத் தொழிற்சாலை. அதைச் சுற்றிப் பார்த்து விட்டு கடைசியில் கலைஞர் எனக்கு ஒரு செருப்பு வாங்கிக் கொடுத்தார்" என்று சொன்னார்கள். பிறகு நாட்டின் வாட்டம் போக்க இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் போதுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் தந்திருக்கிற அட்டவணையில் பார்க்கும்போது, தேங்காய் மட்டை தொழிற்சாலை, பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில், தீப்பெட்டித் தொழிற்சாலை, பீங்கான் தொழிற்சாலை போன்ற சிறு சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தத்தான் அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இருக்கின்ற நிதியில் ஓரளவிற்கு நிதி ஒதுக்கி, 5 ஆண்டுகளுக்குத் திட்டமிட்டு, பெரிய கனரகத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால்தான் நல்லது. அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் நிதிநிலை அறிக்கையில் இல்லை. 5 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் இப்போதைய ஆட்சி வருமானால் அல்லது வேறு எந்த ஆட்சி வந்தாலும், நாட்டு மக்களின் நலன் காக்கும் வகையில் தொழில் துறையில் ஆக்கம் செலுத்துகின்ற அளவிற்கு, இந்த அரசு அக்கறை காட்டவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. நிதியமைச்சரவர்கள், மாண்புமிகு நாவலர் அவர்கள் சென்னையை விட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்தலில் நின்ற காரணத்தாலோ என்னவோ, தெரியாது. 1962 ஆம் ஆண்டு முதல் 1972 ஆம் ஆண்டு வரை சென்னையிலே அவருக்காக உழைத்த வர்களில் நானும் ஒருவன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறை யிலே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். சென்னை நகர் மேம்பாடு அடைய, அதிலும் குறிப்பாக உலக அரங்கில் சென்னை நகரம் சிறந்த நகரமாக விளங்க திட்டங்கள் ஏதுமில்லை. நான் வெளிநாடு எதுவும் போகவில்லை. பத்திரிகையைப் படித்திருக்கிறேன். நிதியமைச்சரவர்கள் வெளிநாடு சென்று வந்தவர்கள். சென்னை நகரை சிங்கப்பூர் நகரம்போல் அழகான நகரமாக்கிட வேண்டுமென்ற அக்கறை நான் கொண்டுள்ளதுபோல், அரசும் அக்கறை

கொண்டு, சென்னை நகரை அழகு நகரமாக ஆக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகருக்கு நிதி ஒதுக்கம் எவ்வளவு என்று பார்த்தால், 20 லட்சம் ரூபாய்தான். தனியாக சாலைகள் போடுவதற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். நான் நிதியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், சென்னையிலே கட்சிப் பாகுபாடு இல்லாமல் பணிகளைச் செய்ய வேண்டும். 'நெக் டு நெக்' என்று சொல்லுவார்களே, அந்த முறையிலே சென்னையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வாக்குகள் மிகச் சொற்ப வித்தியாசத்தில்தான் இருந்தன. எனவே சென்னை நகரத்தை மேம்பாடடையச் செய்ய அதிக நிதி ஒதுக்க வேண்டும். குறிப்பாக, வடிகால், குடிநீர் என்பதைத் தனியாகப் பிரிக்க வேண்டும். சென்னை கார்ப்பரேஷன் பற்றி தமிழக முதலமைச்சரவர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதுபற்றி நானும் அவரோடு தனிப்பட்ட முறையில் பேசியிருக்கிறேன் என்ற முறையில்—அவர் என்னோடு சேர்ந்து வாக்குகள் கேட்டபோது—அவர் என்ன மனதில் வைத்திருக்கிறார் என்பதை அறிந்த சீத்தாபதி தான் பேசுகிறேன். எனவே, சென்னை வாழ் மக்களுக்கு நலப் பணிகளை இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரில் தெரு விளக்குகள் அணைந்து, எந்த அளவிற்கு அதனால் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதை முதலமைச்சரவர்கள் என்னோடு—நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னோடு—இரவில் வந்தால் சென்னை நகரைச் சுற்றிக் காண்பிப்பேன். என்னோடு வர அவர் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் என்னோடு வருவார்களானால், சென்னை நகரம் எந்த அளவிற்கு இருக்கிறதென்பதைக் காண்பிப்பேன். அதிகாரிகள் போடுகின்ற பாதைகள் இரண்டு விதமாகப் போட்டு, ஆட்சியினரின் மகிழ்ச்சிக்கு ஆளாகிறார்கள். ஆனால் மேடும் பள்ளமுமாக சாலைகள் இருக்கின்றன. அதில் சென்னை நகர மக்கள் நடமாட முடியாதென்று நான் சொல்ல மாட்டேன். அவர்கள் அதிலே தட்டுத் தடுமாறிக் கொண்டு நடக்கும் நிலை இருக்கிறது. எனவே, அந்த நிலைகளை எல்லாம் மாற்றி, சென்னை நகரை அழகுறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழை எளியவர்களுக்கு இலவச உணவு என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஏழை எளிய மக்கள் மதுரை மாவட்டத்தில்தான் இருக்கிறார்களா? நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள 5 மாவட்டங்களில்தான் இருக்கிறார்களா? மற்ற



மாவட்டங்களில் இல்லையா? சென்னையில் இல்லையா? திருவல்லிக்கேணி தொகுதியில் கூவம் நதிக்கரையில் நிதியமைச்சரவர்கள் பார்த்திருக்க மாட்டார்களா? அந்த மக்கள் எந்த அளவிற்குத் துன்பப்படுகிறார்கள் என்பதை நிதியமைச்சரவர்கள் உணருவார்கள். என்ன காரணமோ தெரியவில்லை, இங்கேயெல்லாம் ஏழை மக்கள் இல்லை என்று கருதி, வெளி மாவட்டங்களில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறார்கள். இந்த நேரத்தில் சென்னையையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-00)

அதே நேரத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்கு கீழே என்றால், அது எந்த அளவு என்பதை நான் அறிய விரும்புகிறேன். காரணம் வறுமைக் கோட்டுக்குக் கீழே என்றால் என்ன என்பதுபற்றிப் பாண்டிச்சேரியில் அறிவித்திருக்கிறார்கள். ஓராண்டுக்கு 1,500 ரூபாய்க்குக் கீழே வருமானம் பெறுகிறவர்கள் எல்லோரும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று புதுவை மாநிலத்தில் அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசும் எவ்வளவு வருமான வரம்புக்குக் கீழே உள்ளவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்பதை அறிவிக்க வேண்டும்.

கர்ப்பிணிகளுக்கு 150 ரூபாய்க்குச் சத்துணவு என்றும் வேறு பல சலுகைகள் தரப்படுவது பற்றியும் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சென்னையைச் சுற்றிச் சுற்றி வருகிறவன். சென்னையைப்பற்றி நன்றாக அறிந்தவன். சென்னையில் கர்ப்பிணிகள் இல்லையா? சென்னை மாநகரில் பல பின்தங்கிய இடங்கள் இல்லையா? சென்னை நகரிலுள்ள பின்தங்கிய பகுதிகளிலுள்ள ஏழையெளிய மக்கள், கர்ப்பிணிப் பெண்கள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே இந்த மாதிரி திட்டங்களை சென்னையிலும் அமுல்படுத்த வேண்டுமென்று நான் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இந்த அவையில் அவருடைய கன்னிப் பேச்சின்போது திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சிக் கொள்கையை கைவிட்டு விட்டதாகத் தெரிவித்தார். மாநில சுயாட்சிக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் விட்டுவிடவில்லை. அது உரிய நேரத்தில் அதுபற்றி அறிவிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில்

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கை என்ற தத்துவத்தையும், லட்சியத்தையும் தந்து, அதை அனுபவிக்கும்படி எங்களையும் அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தையும், உங்களையும் அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் உருவாக்கினார் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதன் மூலம் பெருமைப்படுகிறேன். மாநில சுயாட்சியைப் பொறுத்தவரை, அதை அடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பின்தங்கும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அவர்கள் கால அளவில் பின்னால் அறிவிக்க வேண்டிய செய்தி அது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, மாநில சுயாட்சிக்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும், குறிப்பாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்றோ அல்லது அதிகாரங்கள் குறைக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டு அதை எதிர்த்தோ போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டாலும், எத்தகைய வலிமையான மத்திய சர்க்காராக இருந்தாலும், இதற்காக போராட்டம் என்று அறிவித்துவிட்டால், நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களும்தான் போவோம். தலைவர்கள் வேறு விதமாக இருக்கிறார்கள். தொண்டர்கள், கீழேயுள்ள தொண்டர்கள் எங்கேயோ போகிறார்கள். திரு. ஜேப்பியார் போன்றவர்களும், சீத்தாபதி போன்றவர்களும்தான் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் வாடும் துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. நான் கொள்கை வழியில் உள்ளவர்களுக்குப் பதில் சொல்வதில் என்றைக்கும் பெருமைப்படுகிறேன். என்னைப் பொறுத்தவரை, பதவிக்காக இடையில் வந்து அமர்ந்திருப்பதைவிட கொள்கை ரீதியாக உறுதியாக வலுவாக என்றைக்கும் இருப்பதை பெருமையாகக் கருதுகிறேன் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்தியில் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஒருவரும் பேசவில்லையென்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்கு ஒன்றை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டினுடைய மாநில சுயாட்சிக்காக நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் திரு. தண்டபாணி 17—6—1980 அன்று நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார். 18—6—1980 அன்று திரு. வை. கோபால்சாமி கழக உறுப்பினர் எம். பி., தூத்துக்குடி துறைமுகங்கள்பற்றி அண்ணா சொன்னதைப் பற்றிப் பேசியிருக்கிறார். அதுவும் இங்கே அரசு அமைந்த பிறகு பேசியிருக்கிறார். அதுபோல் டாக்டர் கலாநிதி போன்றவர்கள் மாநிலங்களுக்கான தேவை பற்றியும் ஒத்துழைப்பு பற்றியும் 19—6—1980 அன்று பேசியிருக்கிறார்கள் என்பதையும் திரு. ஜேப்பியார் போன்றவர்களுக்கு இந்த



சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு நான் மாண்புமிகு தலைவரவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் அவைக்குப் புதியவன். 6 ஆண்டுக் காலம் இந்த அவையில் பணியாற்ற வேண்டிய நிலையில், கடமையில் இருக்கிறேன். இப்போது இந்த அவையில் இருக்கிறேன். 28—6—1980 அன்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, பிற்பகல் 5.45 மணிக்கு இந்த அவைக்கு உள்ளே நுழைந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு தன்னுடைய பதிலை எல்லாம் விளக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது எம். டி. சீட்டிற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பரிந்துரை செய்தார் என்கிற செய்தியையெல்லாம் அறிவித்துக் கொண்டிருந்தார். அப்போது கூட குறுக்கிடலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், நான் உள்ளே நுழைந்த நேரத்திலேயே குறுக்கிடா என்ற எண்ணம் யாரிடமும் வரக்கூடாது என்று அமைதியாக இருந்தேன். பொழுது விடிந்து காலை பத்திரிகையைப் பார்த்தால் ஒரு செய்தி வந்திருக்கிறது. ஒரு அரிசனத் தலைவருடைய மனைவியை ஒரு கட்சித் தலைவரிடத்திலே ஒப்படைத்துவிட்டு அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார். அவரை தாரமாக்கிக் கொண்டார் ஒரு கொள்கைக்குச் சொந்தக்காரர் என்று பத்திரிகையில் முதலமைச்சர் பேசியதாக பத்திரிகையில் செய்தி வந்தது. நான் மாண்புமிகு தலைவரிடமிருந்து அறிய விரும்புகிறேன், தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலே உறுப்பினராக இல்லாத வெளியிலுள்ள ஒருவரைப்பற்றி, இந்த அவையிலே பதிலளிக்க வாய்ப்பு இல்லாத ஒருவரைப்பற்றி இங்கே யாரும் பேசக் கூடாது என்பது விதி. எனக்கு விதிப் புத்தகம் தரப்படவில்லை. ஆனால் விதியில் அப்படி இருப்பதாக நான் தெரிந்துகொண்டேன். இந்த அவையில் உறுப்பினராக இல்லாத ஒரு தனி மனிதனுடைய ஆசை அபிலாஷையை இந்த அவையிலே தெரிவிப்பது இந்த அவைக்கு உகந்ததுதானா, இந்த அவையிலே உறுப்பினராக இல்லாத ஒருவரைப்பற்றி, பதிலளிக்க வாய்ப்பு இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவது தேவைதானா? வருங்காலத்தில் நானும் இந்த முன் உதாரணத்தைப் பின்பற்றிப் பேசலாம் அல்லவா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பெயரைக் குறிப்பிட்டிருந்தால்தான் அந்தப் பிரச்சினை. இங்கே பதில் சொல்ல முடியாதவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடக்கூடாது என்பது விதி.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், நாட்டினுடைய முதலமைச்சர் கூறியிருக்கிறார். நாட்டு மக்கள் அது யார் என்று யூகித்து சந்தேகப்படுகிறார்கள். யார் பேசியது? நாட்டினுடைய முதலமைச்சர். இன்னார் செய்தார் என்றாவது அறிவிக்க வேண்டும். நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் ஒன்றைச் சொல்லும்போது தெளிவாக திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். ஏனென்றால் அவருடைய வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் எல்லாமே சட்டங்கள். அவர் வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் மக்களின் சாதக பாதகங்களை உருவாக்கக் கூடியவை. அப்படி பெயர் குறிப்பிடாமல் வார்த்தைக்கு வார்த்தை அலங்காரமாகச் சொல்வதானால் நான்கூட சொல்லலாம். 20 ஆண்டுகளுக்கு முன்பு நடிகர் ஒருவர் வந்தார். அவரிடம் நடிப்பதற்காக கணவனும் மனைவியும் வந்தார்கள். அவரிடம் நடிக்க ஒப்படைத்தவரை அவர் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார் என்று நான்கூட சொல்லலாம். எல்லோரும் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக சேர்ந்து பணியாற்றுவோம் என்று நான் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு தலைவரவர்களே, நான் தவறாகப் பேசியிருந்தால் தயவுசெய்து மன்னித்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலே பேசலாம். கன்னிப் பேச்சு. தலையிட விரும்பவில்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** கன்னிப் பேச்சு என்பதால் தான் நான் அடக்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லாவிட்டால் . . . .

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** இல்லாவிட்டால் வார்த்தைகள் வேகமாகவும், கடுமையாகவும் இருக்கும். அப்படி இருந்தாலும் வேறு விதமாக இருக்காது. நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா போன்றவர்களும் எங்களுக்கெல்லாம் இந்த அவை தேவைதானா என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்த அவையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இது தண்டனை என்று நாங்கள் கண்ணொளியினாலே பேசிக்கொண்டிருக்கிறோம். இடம் மாறி இங்கு வந்து விட்டோம். பேரவையில் இருக்க வேண்டியவர்கள். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் உருவாக்காமலிருக்க நீங்கள் வழி காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவுக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.





**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, முதன்முதலாகப் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் குறைகள் இருப்பதை ஜனநாயக முறையில் சுட்டிக் காட்டுவது ஆட்சியில் இருப்பவர்களிடத்திலே உள்ள குறைகளைத் திருத்திக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பாகும். அரசினுடைய நிதிநிலை அறிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்வது எதிர்க் கட்சிகளினுடைய கடமையல்ல. அதில் இருக்கும் குறைகளைக் கூறும்போது ஆட்சியில் உள்ளவர்களும் வருத்தப்படக் கூடாது. அரசு ஒரு விளக்காகவும், எதிர்க்கட்சிகள் ஒரு தூண்டுகோலாகவும் இருக்க வேண்டும்.

(பிற்பகல் 5-10)

தூண்டுகோல் ஒழுங்காகத் தூண்டிவிடும் காரணமாக விளக்கு நல்ல வெளிச்சத்தைக் கொடுக்கும். அது போலவே தான் எதிர்க்கட்சிகள் குறைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் அரசு நன்றாகச் செயல்பட முடியும் என்பதைக் கூறி இந்த நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை முழுமையையும் அசலையும் வட்டியையும் ரத்து செய்வதென தமிழக அரசு எடுத்த முடிவை நான் பாராட்டுகிறேன். 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு கடன் ரத்து செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 5 ஏக்கருக்கு மேல் 15 ஏக்கருக்குள்ளாக வைத்திருப்பவர்களும் கடன் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வசதி படைத்தவர்களா? அவர்களுடைய விஷயத்தில் அரசு அப்படியே விட்டுவிடுவது நியாயமில்லை. அவர்களுடைய விஷயத்திலும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் 62.29 லட்சம் டன் அரிசி உற்பத்தி ஆகியிருக்கிறது. தமிழ் நாட்டில் நுகர்பொருள் வாணிப நிறுவனம் மத்திய அரசு நிர்ணயித்த கொள் முதல் விலைக்குக் கூடுதலான விலையில் நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கியிருக்கிறது. ஆனால் 62.29 லட்சம் டன் நெல் உற்பத்தியாகி இருக்கின்ற தமிழ் நாட்டில் 2 லட்சம் டன் நெல்லை நுகர் பொருள் வாணிப நிறுவனம் வாங்கியிருக்கிறது. இந்த அரசு விவசாயிகளுக்கு ஏதோ

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1980 ஜூலை 7

பெரிய நன்மைகளைச் செய்து விட்டது போல அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறது. மீதமுள்ள 60 லட்சம் டன் நெல்லை விவசாயிகள் நல்ல விலையில் விற்பதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

தமிழ் நாட்டில் 31 லட்சம் தென்னை நாற்றுகளின் உற்பத்தி உயர்ந்திருக்கிறது. அந்த நாற்றுகளில் அரிஜன காலனிகளில் ஒரு குடும்பத்திற்கு ஐந்து கன்றுகளாவது கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதன் காரணமாக அரிஜன விவசாயத் தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

பால் பண்ணைத் திட்டத்திற்கு உலக வங்கி போதுமான நிதி வசதி தந்தும், இன்று சென்னை மாநகரில் பால் பற்றாக்குறை இருந்து வருகிறது. குறிப்பாக விநியோகிக்கும் பால் குறித்த நேரத்தில் மக்களுக்குக் கிடைப்பதில்லை. தனியாரின் பழைய வாகனத்தைப் பயன்படுத்துகிற காரணத்தினால், அது பாதி வழியில் பழுதடைகிறது. இதனால் குறித்த நேரங்களில் பால் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இதனால் தனியாரின் பழைய வாகனங்களை நிறுத்திவிட்டு, அரசு நல்ல வாகனங்களைப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளை தமிழகத்தில் தொடங்குவதற்கு இசைவுக் கடிதங்கள், உரிமங்கள் அளிப்பதற்காக தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பி வரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. 1979 ஆம் ஆண்டில் 49 விண்ணப்பங்களை தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி திங்கள் முதல் ஜூன் திங்கள் வரை 67 விண்ணப்பங்களை தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பியுள்ளது. மொத்தம் 80 விண்ணப்பங்கள் மைய அரசு முடிவுக்காக நிலுவையில் உள்ளன. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதன் காரணமாக பண்டங்களின் உற்பத்தி பெருகி விலைவாசிகள் குறையும்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். தமிழக அரசின் பிரதிநிதி ஒருவர் டெல்லியில் இருந்துகொண்டு, 1979 ஆம் ஆண்டில் அனுப்பிய 49 விண்ணப்பங்களுக்காவது மத்திய அரசு அனுமதி பெற்றிருக்க வேண்டும். தமிழக அரசு பிரதிநிதி ஒருவர் இருந்தும், சரிவர கவனிக்கப்படவில்லை. இப்போது 96 விண்ணப்பங்கள் அங்கு நிலுவையில் இருப்பதால், இவற்றுக்கு உடனடியாக அனுமதி பெறுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் கொண்ட ஒரு குழுவை மத்திய அரசிடம் அனுப்பி, தொழில் அமைச்சரை சந்தித்து, உடனடியாக அனுமதி பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 7] [திரு. ஏ. ஜே. தாஸ்]

தேங்காய் நாரைப் பயன்படுத்தி பல்வேறு பொருட்களை செய்வதற்கான திட்டம் ஒன்று குமரியிலும், சேலத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் தென்னை அதிகமாகக் காணப்படுவதால் வட ஆற்காடு, தஞ்சை மாவட்டங்களிலே இதற்கான நிறுவனம் அமைக்கப்பட வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சிக்காக சென்னை கண்ணைப்பர் திடலில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதி கட்டுவதாக அடிக்கடி நாளிதழ்களில் வெளியிடப்பட்டு வருகிறது. அதுபோன்று ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

சென்னை நகரத்தில் இருக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் இன்னும் சரியான முறையில் ஆய்வுக் கூடங்கள் இல்லாமையால் பெற்றோர்கள் இதுபற்றி எடுத்துக் கூறி வருகிறார்கள்; இதை நன்கு கவனித்து மிக முக்கியமாக பள்ளிகளில் ஆய்வுக் கூடங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற பழமொழி உண்டு. கடுமையாக உழைத்து பல லட்சம் மாணவர்களை நாட்டிற்கு நல்ல பிரஜைகளாக உருவாக்கித் தந்த ஆசிரியர்களுக்கு, தலைமை ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் போதுமானதாக இல்லை. குறிப்பாக, 1970 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றவர்களுக்கு—உதாரணமாக ஒரு தலைமை ஆசிரியர் ரூபாய் நூறுதான் ஓய்வூதியமாகப் பெறுகின்ற அவல நிலைமையைப் பார்க்கின்றோம். இன்றைக்கு விலைவாசி உயர்ந்திருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு ஓய்வு பெற்றவர்களுக்கு என்ன ஊதியம் கிடைக்கின்றதோ அதே ஊதியத்தை 1970 ஆம் ஆண்டிலே ஓய்வு பெற்றவர்களும் வாங்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சி பெற்று பல ஆண்டுகள் முடிந்தும் அவர்களுக்கு இன்னும் வேலை கிடைப்பதில்லை. அப்படி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து அவர்கள் பெற்ற ஊதிய உதவியை, அவர்கள் பெற்ற பயிற்சி கால ஊதியத்தை வசூலிக்கும் ஒரு அவல நிலையைப் பார்க்கின்றோம். குறிப்பாக இன்றைக்கு வசதி படைத்தவர்களும் அதிகாரிகளும் தங்களுடைய பிள்ளைகள் கல்வி வளர்ச்சியில் முன்னேறுவதற்கு மும்மொழித் திட்டத்தை ஆதரிக்கிறார்கள்; மும்மொழி கற்பிக்கும் பள்ளிகளில் இன்று அதிகமாகச் சேர்க்கிறார்கள்.

ஆனால் சாதாரண வதியற்ற மக்கள் இருமொழித் திட்டத்தின் அடிப்படையில் உள்ள பள்ளிகளில் சேர்க்கிறார்கள். ஆகவே மும்மொழித் திட்டத்தை எல்லாப் பள்ளிகளிலும் கையாள வழிவகை செய்ய வேண்டும்.

குடிநீர் வாரியம் என்பது குறிப்பாக சென்னை நகரில் குடிநீர் வசதியை நல்ல முறையில் செயல்படுத்தவில்லை. குடிநீர் இணைப்பிற்காக முன்பெல்லாம் சென்னை மாநகராட்சியிடம் சென்றால், எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வந்தது. இன்று குடிநீர் வசதியைத் தேடிக்கொள்வது என்றால், மிகவும் சிரமமான நிலையைக் காண்கிறோம். இன்று கழிநீர் கால்வாய்களைச் சுத்தப் படுத்துவதற்கு எந்த அதிகாரியும் அக்கறை கொள்வதில்லை. பொது மக்களும் யாரிடம் சென்று குறைகளை எடுத்துச் சொல்வது என்று தெரியாமல் இருக் கிறார்கள். முன்பெல்லாம் மாநகராட்சி ஓவர்சியரிடம் இதுபற்றிப் புகார் செய்தால், உடனடியாகக் கவனிக்கப்படும். குடிநீர் கழிநீர் வாரியத்தையும் மீண்டும் நகராட்சியிடம் ஒப்படைப்பதுதான் நல்லது. சென்னை நகரத்தில், குறிப்பாக ஒரு வட்டத்திலே நான்கு முக்கிய வீதிகள் சுத்தமாக வைக்கப் பட்டு, மீதமுள்ள தெருக்கள் நகரமாக காட்சி அளிப்பதற்குப் பதில் நரகமாகக் காட்சி அளிக்கின்றன. இன்று மக்கள் மத்தியில் நகராட்சி இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பெரிய சந்தேகம். கொசுத் தொல்லை நகர மக்களுக்கு அன்றாடத் தொல்லையாகிவிட்டது. கொசுக்களை ஒழிக்க முடியாத ஒரு மாநகராட்சி தேவைதானா? மக்களுடைய வரிப்பணம் வீணா வதா? இரண்டு தினங்களுக்கு முன் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் "இந்த நகரத்தில் வாழும் மக்கள் வீரியம் இழந்து விடுகிறார்கள்" என்று குறிப்பிட் டார். இந்த நகர சுகாதாரக் கேட்டைப் பார்க்கும்போது, இது முற்றிலும் உண்மைதான். நகர மக்கள் வீரியம் இழந்து மாறிவிடுவார்கள் போல் தோன்று கிறது. உடனடியாக மாநகராட்சி மன்றத் தேர்தலை நடத்திட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

படித்த பட்டதாரிகளுக்கு மாதா மாதம் ரூபாய் 50 உதவித் தொகை கொடுப் பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை வரவேற் கிறேன். படித்த பட்டதாரிகளுக்கு ரூபாய் 50 கொடுக்கும்பொழுது, அதற் கான வேலைகளைக் கொடுத்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பட்டதாரிகளின் அட்டவணைகளை எடுத்து தனியார் துறைகளில் 10 சத வீதம் பேர்களுக்கு வேலை கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். படிக்காத வேலை இல்லாதவர்களுக்கு என்ன திட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ வசதிகளை மாநில அளவில் பரவலாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இன்றைக்கு நகரத்தில் உள்ள பெரிய மருத்துவ மனைகளைப் பார்க்கும்பொழுது, நோயாளிகளின் நோய்களைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் இல்லாததையும், படுக்க வசதியற்று கிழிந்த பாய்களை தரைகளில் போட்டுப் படுத்திருக்கும் நிலையையும் காண்கிறோம். அது மட்டுமல்லாமல், உடனடி பரிசோதனை செய்வதிலும் காலதாமதம் செய்து விடுகிறார்கள். அவர் களுக்கான உணவு வகைகளையும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. இந்த நிலைகளை வேறெங்கும் சென்று கவனிக்க தேவை கிடையாது. பிரத்யேக கவனிப்பு அறைகள் தவிர, மற்ற எல்லா மருத்துவப் பிரிவுகளிலும் கண்கா ணிப்பு சரிவர கிடையாது. இதற்கு அங்கத்தினர்கள் சென்னை அரசாங்கப் பெரிய மருத்துவமனைகளில் சென்று அவல நிலையைக் காணலாம். மருத்துவ மனைகளில் டைரக்டர்கள், தலைவர்கள் என்ற பட்டங்கள் தொங்க விடப்பட் டிருக்கிறதே தவிர, அவர்களால் அரசாங்க மருத்துவ மனைகளுக்குப் பிரயோ ஜனம் ஒன்றுமில்லை. பொதுமக்களுடைய நன்மைகளைக் கருதும் நாம், இந்த மருத்துவமனை விவகாரங்களில் அக்கறை கொள்ள வேண்டும். தவிர சுகாதார இலாகாவிற்கு ஒதுக்கிய நிதி போதுமானதாகத் தெரியவில்லை. ஆகவே சுகாதார இலாகாவிற்குப் போதுமான நிதியை ஒதுக்கும்படி நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் செயல்படும் பணிகள் சரிவரச் செயல்படவில்லை. இப்பணிகளுக்காக பெருநகர் குடிநீர் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு 11.2 கோடி ரூபாய் கடனாக வழங்கப்படும் என்று இந்த அறிக்கை கூறுகிறது. இவ்வாறு பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பல திட்டங்கள் தீட்டப்பட்டும், சென்னை நகரிலும், சைதை, கோடம்பாக்கம், விருகம்பாக்கம், அரும்பாக்கம் மற்றும் பல இடங்களிலும் தாய்மார்கள் குடிநீர் கிடைக்காமல் அல்லல் படு

(பிற்பகல் 5-20)

வதைப் பார்க்கிறோம். பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டும், அதிகாரிகள் நிதியைச் சரியான முறையில் பயன்படுத்தவில்லை. பணிகளையும் சுறுசுறுப் பாக கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1980 ஜூலை 7

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கும் நிதி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இதைக் கூடுதலாக்க வேண்டும். எல்லா சமுதாயத்தினருடன் வாழும்படி வசதிகள் செய்து தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் காவல் துறை செயல்படுகிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. இதை அமைச்சரவை மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பட்டப் பகலில் கொலை, பட்டப் பகலில் கொள்ளை, பட்டப் பகலில் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள், பெண்கள் வீதிகளில் உலாவவே அஞ்சுகிறார்கள் என்று பத்திரிகைகளில் தினம் தினம் பார்க்கிற அவல நிலை இருக்கிறது. எங்கே பார்த்தாலும் குடித்துவிட்டு கலாட்டா செய்கிறார்கள். மக்கள் நல்ல முறையில் சென்று தங்கள் வீடுகளை அடைய முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, பஸ்களில் செல்லும்போது ஜேப் படிக்காரர்கள். சாதாரணத் தொழிலாளிகள் வைத்திருக்கும் ரூபாய் 10, 20-ஐ சம்பளம் வாங்கிக் கொண்டு செல்லும் தொகையை ஜேப்படி செய்யும் நிலைமை இருந்து வருகிறது. எனவே போலீஸ் இலாக்கா தன்னுடைய காரியங்களை மிகவும் கவனத்தோடு செயல்படுத்த வேண்டும். எங்கே பார்த்தாலும் கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. வீதிக்கு நான்கு கள்ளச் சாராயக் கடைகள் இருக்கின்றன. போலீஸ் நிலையங்களின் அருகிலேயே கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. கள்ளச் சாராயம் விற்பதில் நகரத்தில் ஒரு குழப்பமே உருவாகியிருக்கிறது. கள்ளச் சாராயம் விற்கும் வியாபாரிகளிடையே கோஷ்டிச் சண்டைகள். இதெல்லாம் அரசினுடைய கவனத்திற்குப் பலமுறை கொண்டுவரப்பட்டிருந்தும் இதுவரை கடுமையான நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லை.

அரசின் மதுவிலக்குக் கொள்கை தெளிவுபடுத்தப்பட வேண்டும். அரசின் மதுவிலக்குக் கொள்கை சரியான முறையில் இல்லாத காரணத்தால், சென்னை நகரத்தில் எங்கே பார்த்தாலும் கள்ளச் சாராயம், எங்கே பார்த்தாலும் கொள்ளை, கொலை என்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு காவல் நிலைய அதிகாரிக்கு ரூபாய் ஐந்து லட்சம் வருமானம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு காவல் நிலையத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது என்றால் இங்கே சட்டம் ஒழுங்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர முடியும். காவல் துறை அதிகாரிகள் அதிகமான பணத்தை கள்ளச் சாராயம் விற்பவர்களிடமிருந்து பெறுகிற காரணத்தால், நாட்டு மக்கள் கொடுக்கும் புகார்களை கவனிப்பதில்லை. போலீஸ் அதிகாரிகள் என்பவர்கள் எங்கே பார்த்தாலும்



1980 ஜூலை 7] (திரு. ஏ. ஜே. தாஸ்)

பெரிய ஹோட்டல்களில்—ஸ்டார் ஹோட்டல்கள் என்று சொல்லப்படுபவைகளில்—தங்கிக் கொண்டு சென்னையில் உள்ள பொது மக்கள் புகார் கொண்டு போனால், அந்தப் புகார்களைப்பற்றி கவனிப்பதே இல்லை. காவல் நிலையங்களில் ஆளே இல்லை என்ற நிலையைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் காரணம் அரசாங்கத்தின் மதுவிலக்குக் கொள்கையில் ஒரு சரியான முடிவு எடுக்கப்படாததாகும். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாமல் இருந்தாலும், நிதியமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனித்து போலீஸ் துறையினர் தங்கள் காரியங்களைச் செவ்வனே செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு, மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இம்மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற நிலையை உருவாக்கித் தந்த, என்னுடைய மரியாதைக்கும், மதிப்பிற்குமுரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் இங்கே ஆற்ற வந்திருக்கும் பணி—தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்தக் கொள்கைகள் இந்த நாட்டில் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகப் போராடினார்களோ அந்தக் கொள்கைகளை நிலை நிறுத்துவதற்காக, நான் பாடுபட வேண்டுமென்றால் பாடுபடவும், போராடுகிற நிலை ஏற்படுமானால் போராடுவதற்கும் தயாரான நிலையில் நான் இந்த அவையில் என்னுடைய உறுதிமொழியை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இங்கே இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை அவருக்கே உரிய கம்பீரமான குரலில் இந்த மன்றத்தில் படித்த நேரத்தில் எனக்கு ஏற்பட்ட உணர்வுகளெல்லாம் என்னவென்று இங்கே குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு நாவலர் அவர்கள் எப்படி நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திற்குத் தரப் போகிறாரோ என்ற கவலையோடு இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிலையில் மிக அருமையான, மிகச் சிறப்பான, பாராட்டுதலுக்குரிய ஒரு நிதிநிலை அறிக்கையை அவர் தந்திருக்கிறார் என்பதை நான் பல்வேறு ஆதாரங்களைத் தேடிக்காட்டி, ஆகவே இது பாராட்டுக்குரியது என்று சொல்வதைவிட ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் காட்டினால் போதும் என்று கருதுகிறேன். அதாவது நான் சுட்டிக்காட்ட

[திரு. எஸ். ஆர். இராதா] [1980 ஜூலை 7

விரும்புகிற ஒரே ஒரு ஆதாரம் சட்டப் பேரவையிலும் சரி, இங்கே மேலவையிலும் சரி, எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பேச்சிலிருந்து இந்த நிதிநிலை அறிக்கை எந்த அளவுக்குப் பாராட்டுக்குரியது என்பதை இங்குள்ள அனைவரும் நன்றாக அறிந்திருப்பார்கள் என்பதுதான்.

பொதுவாக நிதிநிலை அறிக்கை அவை முன்னாலே வைக்கப்படும்போது, எதிர்க் கட்சி உறுப்பினர்களின் கடுமையான விமரிசனத்திற்கு அது ஆளாக்கப்படுவதையும், பல்வேறு உறுப்பினர்கள் அதன்மீது மிக வேகமாகக் கருத்துக்களைக் கூறும் நிலையையும், கடந்த மூன்று ஆண்டுகளாக அல்ல, ஏறத்தாழ கடந்த 10 ஆண்டுகளாக நான் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைமீதான விவாதம் மாறுபட்டிருக்கிறது. விவாதத்தில் கலந்துகொண்டு இதைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பேசுகிற உறுப்பினர்கள்கூட முதலில் நான் இதை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன், இதில் பல நல்லவைகள் இருக்கின்றன என்று சொல்லிவிட்டுத்தான் தங்களின் பேச்சைத் தொடங்குகிற நிலைமையைப் பார்க்கிறேன். இதைக் காணுகிற எங்களுக்கேகூட வேகம் தணிகிறது. வேகமாக எதிர்க்க வேண்டும் என்று ஆரம்பிப்பவர்கள்கூட "இதில் எல்லாம் இல்லை என்றாலும்கூட பரவாயில்லை, சிலவற்றை நாங்கள் காண்கிறோம்" என்று சொல்லும்போது எதிர்க் கட்சிகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை வந்துவிட்டதே என்று எனக்கேகூட பரிதாபமாக இருக்கிறது. இதற்காக நான் வருத்தப்பட்டதும் உண்டு.

அப்படியும் சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வேகமாகப் பேசினார்கள். அவர்கள் ஏன் அப்படிப் பேசினார்கள் என்பது எனக்குத் தெரியும். எங்கேயோ இருக்கிற ஒரு மனிதரின் உள்ளத்தை மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையை விமர்சிக்கின்றபோது "இது வழ வழ, கொழ கொழ" என்றிருக்கிறது என்று பேசினார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆரம்பகாலம் முதல் இருந்தவன் என்பதால், இது யாரை மகிழ்விக்கச் சொல்லப்பட்ட வார்த்தைகள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு சொல்வதனால் அவருக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி என்னவென்றால் "ஒரு அறையில் சில நிமிஷ நேரம் சபாஷ் பட்டம்" கிடைத்திருக்கும். இதைத் தவிர வேறொன்றுமில்லை.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் யாருக்கும் பிடி கொடுக்காமல் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எதிர்க் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை



1980 ஜூலை 7] [திரு. எஸ். ஆர். இராதா]

அவர் இங்கே அவையில் படிக்கும்போது, கடந்த பிப்ரவரி மாதத்தில்—அப்போ நான் சட்டமன்றப் பேரவையில் இருந்தபோது—ஒரு குரல் முழங்கியது என் நினைவுக்கு வந்தது. "அடுத்த நிதிநிலை அறிக்கையையும் நான்தான் வாசிப்பேன்" என்று கூறிய குரலை நான் இன்றைக்கும் மறக்கவில்லை. ஆனால் கால வித்தியாசம் காரணமாக அவர் இன்றையதினம் நிதிநிலை அறிக்கையைப் பத்திரிகையில் பார்த்து வாசித்துக் கொண்டிருக்கிறாரே தவிர, அவர் இந்த அவையில் வந்து வாசிக்க முடியாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் அரசியல் துரோகமாகும். அரசியலில் துரோகம் செய்பவர்களுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்பது இப்போது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

முன்னாள் நிதியமைச்சர் திரு. மனோகரன் அவர்கள் சட்டப் பேரவையில அப்போது குறிப்பிட்டார்கள். "நான்தான் அடுத்த நிதிநிலை அறிக்கையை வாசிப்பேன்" என்றார். அப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தேர்தலில் தோல்வியடைந்து இந்த ஆட்சி நீடிக்குமா நீடிக்காதா என்ற கேள்விக்குறி எழுப்பப்பட்டது. அப்போது அவர் சட்டப் பேரவையில் மிகவும் தைரியத்தோடு சொன்னார். "அடுத்த நிதிநிலை அறிக்கையை நான்தான் வாசிப்பேன். இதிலே யாருக்கும் சந்தேகமே வேண்டாம்" என்று சொன்னார்.

(பிற்பகல் 5-30)

அப்படி அவர் சொன்ன நேரத்தில் அர்த்தம் புரியவில்லை இடம் மாறியதற்குப் பின்னால் அவருடைய நண்பரைப் பார்த்து "இப்படிச் சொல்லிவிட்டு அங்கே போய்விட்டாரே, ஏன்?" என்று கேட்டேன். "நீங்கள்தான் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். எங்கே போனாலும் நிதிநிலை அறிக்கையை வாசிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமே தவிர, வேறல்ல" என்றார். அவருக்கு நிதிநிலை அறிக்கையை வாசிக்க வேண்டுமென்று ஆசைதான். ஆனால் இடம் மாறியதன் விளைவாக, நிதிநிலை அறிக்கையை பத்திரிகையிலே படிக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டு விட்டது. நாவலர் அவர்கள் மிகத் தெளிவாக பல்வேறு திட்டங்களை அறிவித்து, இருக்கின்ற திட்டங்களுக்குப் புதிய உருவகம் கொடுத்து, பல்வேறு கொள்கைகளை அறிவித்து. அந்தக் கொள்கைகளுக்கெல்லாம் வழிவகை செய்து அருமையான நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் ஆவேசத்தோடு பேசுகிறார் என்று நினைக்கிறேன். அவர் சொன்னதில் என்ன தவறு என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய கருத்து என்னவென்பதைப் பற்றி அவர் பேசினார். அது என்னுடைய கருத்து அல்ல என்று நான் சொல்கிறேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி, இல்லையென்று சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டார். பிறகு என்ன?

திரு. க. இராமமூர்த்தி : பிறகு மடா வைத்துப் பேசியதை தாங்கள் கேட்டிருப்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிக் கேட்கவில்லை.

திரு. என். ஆர். இராதா : தமிழ் நாட்டுத் தேர்தலைப் பொறுத்த வரையில், யார் முதலமைச்சர் என்ற கேள்வி பெரிய கேள்வியாக எழுந்து அதற்குத் தமிழ்நாட்டு பதில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்.தான் என்பதாகும்.

(பிற்பகல் 5-40)

இதை எந்தெந்தக் கட்சியிலே என்னென்ன நிலையிலே விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள், யார் யாருடைய நிலையிலே எப்படியெப்படி மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன, யார் யார் எப்படியெப்படி மாறுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நான் அதிகமாக விமர்சிக்க விரும்பவில்லை. அதற்குக் காரணம், பேரவையினுடைய மாபுகழ் பாதுகாக்கப்படும் முறையில் இந்தப் பிரச்சினையைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டாம் என்பதுதான். இருந்தாலும் மிகப் பெரிய உண்மை என்னவென்றால், தமிழ் நாட்டில் அடுத்த முதலமைச்சர் கருணாநிதி என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னதை தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை "நாங்கள் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறோம்" என்று சொல்கின்ற அளவுக்கு அவர்கள் இன்னும் வரவில்லையே என்பதிலே நான் மிகக் கவலைப்படுகிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பைத் தந்துவிட்டார்கள். ஆனால் அந்தத் தீர்ப்பை வைத்துக்கொண்டு இங்கே மிக வேடிக்கையாகப் பேசினார்கள். "92 லட்சம் ஓட்டுகள், 82 லட்சம் ஓட்டுக்கள் என்று கிடைத்திருக்கின்றன அந்த வித்தியாசமான 10 லட்சம் ஓட்டுக்கள் மாறியிருந்தால், என்னவாகி



யிருக்கும் தெரியுமா? இடம் மாறி நாங்களே நாற்காலியிலே போய், யாரையும் கேட்காமலேயே உட்கார்ந்துவிடுவோம்" என்ற அளவுக்கு ஆசைகளை வெளியிட்டார்கள். 92 லட்சம் வோட்டுகள் அ. தி. மு. க விற்கு, 82 லட்சம் வோட்டுக்கள் எதிர்க்கட்சி அணிக்கு. 10 லட்சம்தானே வித்தியாசம். அவர் இன்னும் கொஞ்சம் கற்பனையை வேகமாக ஓட்டியிருந்தால், இந்த 92 லட்சத்திற்கு 5 லட்சம் வாங்கி இவர்கள் 87 லட்சத்திற்கு வந்திருந்தால், இன்று இரண்டு திருவுளச் சீட்டிலாவது வந்து உட்கார்ந்து இடம் மாறியிருக்கலாம். ஆகவே நாற்காலியில் உட்கார வேண்டுமென்பதிலே எவ்வளவு ஆசையிருக்கிறது என்ற பல பேருடைய நிலையை இது தெளிவாகக் காட்டிக்கொண்டிருக்கிறது. நான் இதில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நாட்டு மக்களுடைய வாக்குகளுடைய மரியாதையைத் தெரிந்துகொள்ள வேண்டும். 92 லட்சம் பேர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் மாறியிருக்கிறார்கள் என்று சொன்னால், வாக்களித்தவர்கள் எந்த நிலையிலே எந்த உணர்வோடு வாக்களித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குக் காரணம் எல்லாம் சொன்னார்கள். உள்ளபடியே நான் ஒன்றைப் பெருமையாகக் கருதிச் சொல்லியிருக்கிறேன். தமிழ் நாட்டில் திராவிட இயக்கத்தைச் சார்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றிருக்கிறார் என்பதிலே என்னைப் போன்றவர்கள் மிகுந்த பெருமை அடைகிறார்கள். ஏனென்றால் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கத்திற்கு வந்து ஒரே ஒரு முறைதான் வெற்றி தேடித் தந்தார்கள். அண்ணா அவர்கள் மறைந்தார்கள் முதலமைச்சராக இருக்க முடிந்தது ஒரு முறைதான். கருணாநிதி அவர்கள் ஒரு முறைதான் தேர்தல் வெற்றி பெற முடிந்தது. என்றாலும் சில வாய்ப்புகள் நிலைமைகள் காரணமாக இரண்டு முறைகள் அவர் முதலமைச்சராக இருந்தார்கள். அவரால் தேர்தலிலே ஒரு முறைதான் வெற்றி பெற முடிந்தது. ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையிலே, இரண்டு முறை பலமான எதிர்ப்பைச் சந்தித்து திராவிடர் இயக்கத்திற்கு ஒரு பெருமை தேடித் தருகிற வகையிலே, இரண்டு முறைகள் இங்கே முதலமைச்சராக உட்கார்ந்திருக்கிறார். அது திராவிட இயக்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற மிகப் பெரிய பெருமை. ஆனால் அந்தப் பெருமை எப்படிப்பட்ட நிலையில் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், முதலமைச்சராக இருந்துகொண்டு அவர் தேர்தல் நடத்தியிருந்தால், தேர்தல் முடிந்ததற்குப் பின்னால், என்னென்ன குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருப்பார்களோ, என்னால் அதை கற்பனையாகக்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. தேர்தல் நடைபெறுகிற நேரத்திலே நாங்கள் எதிர்க் கட்சியாக, ... அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட நிலையிலேயிருக்கும் எதிர்க்கட்சி

நாட்டிலே இன்றைக்குத் தேர்தலைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையும் ஏன் நிதிநிலை அறிக்கையிலே வரவில்லையென்று கேட்கிறார்கள். "தேர்தல் நேரத்தில் அரிசியைத் தருவேன் என்று சொன்னார்களே, ஆனால் ஏன் அவற்றை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை?" என்று கேட்கிறார்கள். ஒரு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள அத்தனை திட்டங்களையும் முதலாண்டு நிதிநிலை அறிக்கையிலே முழுமையாகக் கொடுத்துவிட முடியாது என்பது எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் தெரியும். தேர்தல் அறிக்கை என்பது, ஐந்தாண்டுக் காலம் ஆள அனுமதி கொடுத்தால், அந்த ஐந்தாண்டுக் காலத்தில் இதை இதைச் செய்வோம் என்று சொல்லுகிற அறிக்கைதான் அந்தந்தக் கட்சியினுடைய திறமைக்கேற்ப, அவர்களுடைய நிலைக்கேற்ப தேர்தல் நேரத்திலே அறிக்கையைக் கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டில் நடைபெற்ற தேர்தலில் எல்லாக் கட்சியினரும் அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னுடைய அறிக்கையில் பல்வேறு திட்டங்களைச் சொல்லியிருக்கிறது. அதில், வருகின்ற ஐந்தாண்டு காலத்தில் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை அறிவித்திருக்கிறோம். ஆனால் தமிழ் நாட்டிலே நடைபெற்ற தேர்தல், நிதிநிலை அறிக்கையை ஒரு பிரச்சினையாக வைத்து நடைபெற்றதா என்பதை எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். நடைபெற்ற தேர்தலில் எந்தெந்தக் கட்சி என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தது என்பதல்ல அடிப்படைப் பிரச்சினை. தமிழ் நாட்டில் யார் அடுத்த முதலமைச்சர் என்பதற்காக நடைபெற்ற தேர்தலே தவிர, ஆட்சிக்கு வந்தால் அரிசி கொடுப்பார்கள், தாலி கொடுப்பார்கள் என்பதற்காக நடந்ததல்ல. இவர்கள் வந்தால் வீட்டைக் கட்டிக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்து வாக்களிக்கவில்லை. தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பேர் கவனமும், "யார் அடுத்த முதலமைச்சர்" என்ற கேள்வியில்தான் இருந்தது. அதை நிச்சயமாக எந்த எதிர்க் கட்சியும் மறுக்கமாட்டார்கள், மறைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுவதற்கு முன்னாலேயே, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தேர்தல் நேரத்தில், "அடுத்த முதலமைச்சர் எம். ஜி. ஆர். தான்" என்று மக்களுக்குச் சொன்னார்கள். பிறகு அதையே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சொன்னது. பிறகு அதைப் போலவே கூட்டணியில் இருந்த அத்தனை கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னார்கள். ஆனால் இதற்கு எதிராக, தமிழ் நாட்டில் யார் முதலமைச்சர் என்ற கேள்வி



கூட்டணியில் கிளப்பப்பட்டு அது ஒரு பெரிய பிரச்சினையாக மாறி, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள், "நாங்கள் கருணாநிதியைத்தான் அடுத்த முதலமைச்சராக அறிவிக்கிறோம், அதை ஒத்துக்கொண்டால்தான் உடன்பாடே வரும்" என்று சொல்லப்பட்டதற்குப் பின்னாலே, அதுவே பிரச்சினையாகி "இப்போது யார் முதலமைச்சர் என்று பேசக்கூடாது, தேர்தல் முடிந்தவுடன் யார் யார் உள்ளே வருகிறார்கள் என்று பார்த்து பின்னாலே முடிவு செய்யலாம்" என்று பல பேர் சொல்ல, "அப்படியானால் முடியாது, யார் தலைவர் என்று முன்னாலே முடிவு செய்தால்தான் கூட்டணி" என்று சொல்லப்பட்டு, கடைசியில் மிகுந்த கஷ்டமான நிலையில் மிகுந்த பரிதாபத்தோடு "தமிழ்நாட்டில் கருணாநிதிதான் முதலமைச்சர்" என்று காங்கிரஸ்காரர்கள் முழுமனதோடு அல்லாமல் ஒரு அரைகுறை மனதோடு வேறு வழியில்லாமல் ஒத்துக்கொண்டதற்குப் பிறகு அவர்கள் தேர்தலில் பிரச்சாரம் செய்தார்கள். அந்த முடிவுதான் தமிழ் நாட்டுத் தேர்தலில் முக்கிய பிரச்சினையாக இருந்ததே தவிர "அரிசி போவார்கள்", "தாலி கொடுப்பார்கள்", "வீடு கட்டிக் கொடுப்பார்கள்" என்ற பிரச்சினைகள் அல்ல, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் மிகத் தெளிவாகத் தங்கள் முடிவைச் சொன்னார்கள். எங்களுக்கு அடுத்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தான் என்று சொன்னார்கள். இதை ஒத்துக்கொண்டு நாங்கள் உள்ளபடியே தோற்றுவிட்டோம் என்று சொல்லுகிற மனோபாவம் எந்த எதிர்க் கட்சிக்காவது இருக்கிறதா என்றால், இல்லை. காங்கிரசிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள், "நாங்கள் கருணாநிதிதான் அடுத்த முதலமைச்சர் என்று சொன்னதாலேதான் தோற்றோம்" என்று வெளியே, சொல்லிக்கொண்டிருந்தாலும், அதை பகிரங்கமாக அவர்களாலே சொல்ல முடியவில்லை. காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நேசம் . . . .

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சிலே குறுக்கிட வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை. தவறான கருத்து வெளியே ஏற்படுகிற அளவுக்கு, இந்த அவையில் இருக்கிற உறுப்பினரைப் பற்றி, அவர் சொல்லாததை, இப்படிச் சொல்லியிருக்கக்கூடும் என்ற கற்பனையாக வெளிப்படுத்துவது ஏற்றதல்ல. சபையின் மரபல்ல. ஒழுங்கல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டுமென்று நான் எழவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு இது கன்னிப் பேச்சு. இருந்தாலும் அவர் சட்டமன்றப் பேரவையிலே நிரம்பப் பேசியிருக்கிறார்கள். ஒரு சபையிலே, எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய உறுப்பினர் பேசிய பேச்சுக்கு நோக்கம் கற்பித்துப் பேசுவது முறைதானா என்று தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் பேசியதை, "ஒருவரைத் திருப்திபடுத்துவதற்காகப் பேசினார்" என்று நோக்கம் கற்பித்துப் பேசுவது சரிதான் என்று தீர்ப்பளித்தால், அது மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் நெடிய அனுபவம் பெற்றிருக்கிறார்கள். குறை சொல்லவும், விமர்சனம் செய்யவும்தான் உறுப்பினர்கள் இந்த அவைக்கு வருகிறார்கள். பாராளுமன்ற முறைக்கு மாறாக வார்த்தைகளில் முறைகேடு இருந்தால், நான் தீர்ப்புக் கொடுக்க முடியும். கருத்து வேற்றுமைகளுக்கு நான் தீர்ப்புக் கொடுக்க முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் சொல்லாத ஒன்றை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்களுக்குத்தான் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இது ஒரு உரிமைப் பிரச்சினையாக வருகிறது. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உரிமைப் பிரச்சினையை சுலபமாகத் தள்ளிவிட வேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தாங்கள் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை தாங்கள் சொல்லவில்லை என்று சொல்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா என்ன சொல்லுகிறார் என்பது முதலில் தெரிய வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் சொல்லாததை, நான் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்ன கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா ஏற்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்பதைக் கேட்டுத்தான் உரிமைப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்ய முடியும்.



**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதிலே இவ்வளவு வேகம் காட்டுவார் என்று நான் நினைக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார். அதை விட்டுவிட்டு மேலே பேசலாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** சொல்லவில்லை என்றால், அதை நான் வற்புறுத்தத் தயாராக இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இது சபையின் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியதாகும். உறுப்பினர் சொல்லாததை சொன்னதாகச் சொல்லிவிட்டு, பிறகு அவர் சொல்லவில்லையென்றால் நான் ஒத்துக்கொள்கிறேன் என்று சொல்வது தவறு. தலைவர் அவர்கள் இதற்கு அனுமதி தரக்கூடாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு பேர் பேசியதும் குறிப்பிலே இருக்கும். இதனால் ஆபத்து ஒன்றும் ஏற்படாது.

**திரு. க. இராமமூர்த்தி :** நாங்களும் அப்படிப் பேசுவோம். அப்படிப் பேசுவது எங்களுக்குத் தெரியாது என்பதல்ல, முடியாதது என்பதல்ல.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அந்தக் கருத்தை மறுப்பதனால், நான் அதை வற்புறுத்தவில்லை. இன்னும் அவருடைய நிலையை மாற்றிக்கொள்ளவில்லை என்பதை உள்ளபடியே இன்றைக்கு உணர்கிறேன். என்றாலும் ஏதோ நோக்கம் கற்பித்துப் பேசவேண்டும் என்பதல்ல. அவரை பிரச்சினைக்குரிய நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது என்னுடைய ஆசையல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னை பிரச்சினைக்குரியதாக ஆக்குவது என்பதல்ல. இது பல பேர் முயன்று தோற்றுப்போன விவகாரம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த மாதிரி முறையே சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பின்னாலே பேசப் போகிறார்கள். அவர் பேசும்போது பதில் சொல்லலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் சொல்லாத ஒன்றை வைத்து பிரச்சினையாக்கிப் பேசுவது முறைதானா? என்னை உட்கார வைத்து விட்டு யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசலாமா?

யாக இருந்தோம். அந்த நேரத்திலே தமிழ் நாட்டிலே ஆளுநர் ஆட்சி நடந்தது. அதுவும் 3½ மாதம்தான் ஆளுநர் ஆட்சி நடந்தது. நிதிநிலை அறிக்கையிலே இங்கே தெளிவாக நிதியமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். "நான் 8 மாதத்திற்குரிய வரவு செலவுக் கணக்கைத்தான் கொடுத்திருக்கிறேன். நான்கு மாதங்களை அவர்கள் வாங்கிச் சாப்பிட்டார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த 3½ மாதங்கள் தமிழ்நாட்டில் எப்படிப்பட்ட ஆட்சி நடைபெற்றது என்பதை நினைத்துப் பார்த்தால், எனக்கே கூட அச்சமாக இருக்கிறது. 3½ மாத காலத்திலே எவ்வளவு காரியங்கள் நடந்தன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நான் எல்லாவற்றிலும் ஆதாரங்களைச் சொல்ல ஆசைப்படவில்லை. நான் தலைவரவர்களுக்கு ஒரே ஒரு ஆதாரத்தைச் சொன்னேன். நம்முடைய சட்டமன்ற விடுதியிலே பார்த்தால் தெரியும். ஆளுநர் ஆட்சியிலே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே என்ன நடைபெற்றது, யார் அந்த விடுதியிலே உள்ள அத்தனை அறைகளையும் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு, நான் சாதாரண பாஷையிலே "பழைய பெருச்சாளி" என்று சொன்னால் கோபப்படுவார்கள். நான் அப்படிச் சொல்லக்கூடாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் மிகப் பெரிய அளவுக்குப் பார்த்தால், 3½ மாத காலத்திலே எதோ ஒரு ஆட்சியே வந்ததுபோல பிரமை ஏற்பட்டு, எங்கே பார்த்தாலும் பழைய பாணியிலே கருப்பு சிவப்பு சட்டை போட்டு, அதோடு சேர்ந்து போகிற கதர் சட்டையும் போட்டு, வருகிற நேரத்தில் எதோ இவர்களே ஆட்சிக்கு வந்துவிட்டார்களோ, ஆளுவதற்கு அனுமதியே கிடைத்துவிட்டதோ என்று எண்ணுகின்ற அளவுக்கு இந்த 3½ மாத காலம் தமிழ்நாட்டிலே ஒரு ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். தமிழ்நாட்டின் வரலாற்றிலே அது இருண்ட காலம்தான் என்று சொல்வேன். இதைச் சொல்லக் காரணம் என்ன? அந்த 3½ மாத காலமாக என்னென்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்ல நான் ஆசைப்படவில்லை. அவைகளை விவரமாகச் சொல்ல வேண்டுமென்றால், இனவாரியாகச் சொல்வேன். எத்தனையோ அக்கிரமங்கள் நடைபெற்றன. இன்றைக்கு எதிர்க்கட்சியான பின்னரும்கூட யார் யாரோ என்னென்னவோ சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய திரு. தாஸ் அவர்கள் கொஞ்ச நேரம் படித்துவிட்டுப் பேச ஆரம்பித்த நேரத்திலே சொன்னார்கள். "பார்த்தீர்களா இன்றைக்கு. எங்கே பார்த்தாலும் சொலை, எங்கே பார்த்தாலும் கொள்ளை, எங்கே பார்த்தாலும் கற்பழிப்பு, வெளியிலே நடமாட முடியவில்லை, நானே மிக அபத்தோடு வந்திருக்கிறேன்" என்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் எதிர்க்கட்சியாக



ஆகிவிட்டார்கள். 3½ மாதத்திற்கு முன்னாலே பார்த்தால், இரவு இரண்டு மணிக்கு சென்னை நகரத்திலே யார் வேண்டுமானாலும் போகலாம், யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் அன்றைக்கு இருந்த நிலை காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினர் தவிர, வேறு யாரும் போக முடியாது என்று இருந்தது. ஆனால் இன்றைய நிலை அதுவல்ல. இன்றைக்குள்ள நிலை யார் வேண்டுமானாலும் போகலாம், யார் வேண்டுமானாலும் வரலாம். அன்றைக்கு 3½ மாத கால ஆட்சியிலே நடைபெற்ற காரியங்கள் சாதாரண காரியங்கள் அல்ல. அந்தக் காரியங்கள் அவர்களுக்கு, பல பேர்களுக்குத் தெரியுமா என்றால், நிச்சயமாக அவர்களுக்குத் தெரியாது. நான் அத்தனையையும் சொன்னால், அத்தனை பேர்களும் கோபப்படுவார்கள். 3½ மாத காலம் இருந்ததைக்கூட அவர்களாலே பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்று சொல்வார்கள். அதனால் ஆரம்பத்திலேயே கோபத்தைக் கிளர வேண்டாமென்பதால் நான் அதை விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதுதான் நல்ல முறை.

**திரு. எஸ். ஆர். இராதா:** மேலவைத் தலைவர் அவர்களும் அதுதான் நல்ல முறை என்று சொல்வதானாலே, நானும் அந்த முறையை இப்போது பின்பற்றுகிறேன். அவ்வளவுதான். ஆட்சியைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய ஆட்சி எவ்வளவு தூய்மையாக நடக்க வேண்டும் என்பதைக் காட்டினார். அவர் தமிழ்நாட்டு மக்களிடத்திலே வைத்த மரியாதை இன்றைக்கு அவருக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. ஆகவேதான் நிதிநிலை அறிக்கையை இங்கே வாசிக்க முடிகிறது. அந்த அளவுக்கு நான் பெருமைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணாவினுடைய படத்தைப் பார்க்க முடிகிறது. அண்ணாவினுடைய படத்தை நிமிர்ந்து நின்று பார்க்க முடிகிறது. சமாதிக்குப் போகின்ற நேரத்திலே துணிந்து சமாதிக்குப் போவோம் என்ற அளவுக்கு இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைக் கேட்கிறேன். அவர்கள்கூட இன்றைக்கு எப்படி இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் இன்று இரண்டு பிரிவினராக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு பிரிவு வேகமாகப் போக வேண்டும், எதிர்க்க வேண்டும் என்பது. அது அ.தி.மு.க.வை அழித்தாக வேண்டுமென்று இருக்கிறது. இன்னொரு பிரிவு அ.தி.மு.க.வை அனுசரித்து திராவிடர் ஆட்சியில் ஒற்றுமையைக் காட்ட வேண்டுமென்று இருக்கிறது. அதனுடைய வெளியீடுகள்தான் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதிலே பேராசிரியர் அவர்கள் ஒரு அழகான உதாரணத்தைச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் முதன் முதலில்

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொல்கின்ற நேரத்தில், இரட்டைக் குழல் துப்பாக்கி என்று சொன்னார்கள். இன்றைக்கு பேராசிரியர் அவர்கள் ஒரு அருமையான உதாரணம் சொன்னார்கள். அ.தி.மு.க. தி.மு.க. என்ற இரண்டும், இரண்டு இருப்புப் பாதைகளைப் போன்றது. அதிலே தமிழ்நாடு என்னும் அரசு ஒழுங்காகப் போய்க்கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இருப்புப் பாதையிலே எத்தனையோ பேர் 'பிஷ் பிளேட்டு'க்களைக் கழற்றி விடுகிறார்கள். ஏமாந்த நேரத்திலே எப்படியெல்லாம் கழற்றலாம் என்று பார்க்கிறார்கள். யார் யார் எப்படியெப்படி இருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். அதிலேயெல்லாம் ஏதாவது லாபம் கிடைக்காதா என்று இருப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். காரணம் என்னவென்றால் இந்த நேரத்திலே சிலர் எஜமான விசுவாசத்தோடு செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சில பேர்கள் வெளியீடுகளைச் சொல்கின்றார்கள். அப்படிச் சொல்கின்ற நேரத்திலே அந்த நண்பர்களுக்கு நாம் பாராட்டுச் சொல்ல வேண்டும். அதனால்தான் முன்னாலே பேசிய திரு. சித்தாபதி அவர்கள் பேச ஆரம்பித்த நேரத்திலே உண்மைகளை வெளியிட ஆரம்பித்தார்கள். நான் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டுமென்று நிச்சயமாக நினைக்கவில்லை. திராவிடர் இயக்க உணர்வுள்ள நண்பர்களுக்குச் சொல்வேன். பெரியார் சொன்னதுபோல, திராவிடக் கொள்கைப் பற்றோடு இருப்பவர்கள், இந்த இருப்புப் பாதையை ஒழுங்காகக் காப்பாற்ற வேண்டும். சில பேர் 'பிஷ் பிளேட்டு'களை எப்படிக் கழற்றுவது என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சில பேர் கத்தியையே தூக்கிக்கொண்டு வீட்டுக்கே போகலாமா என்றுகூட இருக்கிறார்கள். நான் அந்த நண்பர்களுக்குச் சொல்வேன், இருப்புப் பாதையிலே இரவு நேரத்திலே திருட்டு நடக்கிறது. இருப்புப் பாதையிலே இப்படிப்பட்ட திருட்டுக்கள் நடக்குமானால், தமிழ்நாடு அரசு ரயில் தடம் புரளுமானால், திராவிடர் இயக்கம் அழிந்துவிடும் என்று சொன்னால், திராவிடர் அரசு அகற்றப்பட்டுவிடும் என்று சொன்னால், உள்ளபடியே சொல்கிறேன், நான் பேரவையிலேகூட சொன்னேன், பின்னாலேயிருந்து யாரையோ உட்கார வைப்பதற்காக இந்த இயக்கத்தை அண்ணா ஆரம்பிக்கவில்லை என்று, அணி சேர்ந்தது ஏதோ சந்தர்ப்ப வசத்தால் என்று சொல்கிறேன். ஆனால் கொள்கைகளை விட்டுக் கொடுத்துவிட்டு யாரையாவது உட்கார வைத்துவிட்டுப் போகலாம் என்று நினைத்தால், அண்ணாவினுடைய நிலையிலே நாம் எண்ணிப் பார்த்தால், காலம் முழுவதும் தமிழ்நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே நிச்சயமாகச் சொல்வேன்.



(பிற்பகல் 5-50)

அப்படிச் சொல்கிற நேரத்தில் ஒன்று எனக்கு நினைவிற்கு வருகிறது. திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் திடீரென்று சில பேர்களுக்குப் பீறிட்டெழுந்து, இனம் பிரித்துக் காட்ட ஆரம்பித்து, தமிழன் என்று பேச ஆரம்பித்து, "நாங்கள்தான் தமிழுக்குச் சொந்தக்காரர்கள், மற்றவர்களெல்லாம் தமிழுக்கு வேறுபட்டவர்கள்" என்று சொல்லும்போது, நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும் அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறுகிறோம். எங்களுக்கு இருக்கிற நிலைமை அது. திராவிடர் என்று சொல்லும்போது நானும், அவரும் தெம்பாக இருக்கிறோம். ஆனால் தமிழன் என்று சொல்லும்போது, நம்மைப் பிரிக்கிறார்கள் போலிருக்கிறது, ஏதோ சதி நடக்கிறதுபோல் இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அது வேறு, இது வேறா? திராவிடர் என்பது வேறு, தமிழன் என்பது வேறா?

திரு. எஸ். ஆர். இராதா: தமிழர்கள் திராவிடர்கள் என்று விளக்கம் சொல்லலாம். நீண்ட நாட்கள் நாங்கள் போராடியவர்கள் (சிரிப்பு) என்றாலும், அந்தத் தமிழ் உணர்ச்சி இன்றைக்கு வந்ததுபோல் காட்டி, ஜாதிகளின் பெயர்களைச் சொல்லி, ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பார்ப்பனர்களுக்கு இடம் கிடைத்து விட்டது, தமிழ்ச் சமுதாயம் புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லும்போது, எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. அதை திராவிடர் இயக்கத்திலே இருக்கிற நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். அவர்கள் நினைவிலே வைத்திருப்பார்கள். குத்தூசி குருசாமி என்று இருந்தார். குத்தூசி குருசாமி என்று அவர் பெயரைச் சொல்லுவதற்குக் காரணம், அவர் பெயரைப் பல பேர்கள் புறக்கணித்திருக்கிறார்கள். அவர் விடுதலைப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளும், 'பல சரக்கு' என்ற பெயரில் வெளியிட்ட செய்திகளும் தமிழ்நாட்டையே அதிசயிக்க வைத்தன. தமிழ்நாட்டிலே புரட்சி உண்டாக்குகிற அளவிற்கு அவர்களின் எழுத்துக்கள் அமையும். அப்படி அவர்கள் ஒரு காலத்தில் எழுதினார்கள். அவர் மிக அழகாகச் சொன்னார். பார்ப்பன ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்பது மட்டும் திராவிடர் கழகத்தின் கொள்கையல்ல என்று சொல்லிவிட்டு மேலும் சொன்னார். இருபது ஆண்டுக் காலத்திற்கு மேல் தமிழகத்தின் தலைமைச் செயலகத்தில் இருக்கும் 'முதலியார்' ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டுமென்பது திராவிடர்

இருந்தாலும், அதை ஒழிக்க வேண்டுமென்று எழுதியவர் அவர். பல ஆண்டு களுக்குப் பின்னாலே குத்தூசி குருசாமி யார் என்று அறிந்தபோது, அவர் முதலியார் என்று கேள்விப்பட்டேன். முதலியார் இனத்தைச் சேர்ந்தவராக இருந்துகொண்டும், அவர் அப்படி எழுதினார். அந்த உணர்வு திராவிடர் கழகத்திற்கு இருக்க வேண்டும். இன்றைக்கு எந்த ஜாதியையாவது காட்டி நாம் தப்பித்துக்கொள்ளலாமென்று கருதுவார்களானால், அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தந்தை பெரியாருடைய கையிலே இருந்த தடிக்கு இன்றைக்கு உயிர் இருக்குமானால், பல பேர்களுடைய மண்டையை அது உடைத்திருக்கும். அதற்கு உயிரில்லை என்பதால், தைரியமாக தமிழன் என்று பேசும் பேச்சு என்னைப் போன்றவர்களைக் கோபப்பட வைக்கிறது, வேதப்பட வைக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி யிருக்கிறார்கள். இந்தியாவில் யார் வாழ வேண்டுமென்று சொன்னால், தமிழ் நாட்டில் இருக்கிற திராவிடர்கள்தானே தவிர இந்தியாவிற்கு வந்த ஆரியர்களல்ல, அவர்களை ஓட்ட வேண்டுமென்ற குரல் எழுப்பப்பட்டால், இந்தியாவில் யாரும் இருக்க முடியாது என்று சொன்னார்கள். அந்த உணர்வு யாருக்காவது வருகிறதா? யாருக்காவது வர முடிகிறதா? அதைச் சொல்கிற தைரியம் யாருக்காவது இருக்கிறதா என்றால் இல்லை. இடம் கிடைக்க வேண்டும், இடம் பிடிக்க வேண்டுமென்று தமிழன் என்று இனம் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நான் சொல்வேன், அந்த உணர்வு பல பேர்களுக்கு இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தைப் பொறுத்தவரையில், எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவரவர் களைப் பொறுத்தவரையில், தெளிவாக இருக்கிறோம். மத்திய அரசை எதிர்ப்பீர்களா அல்லது ஆதரிப்பீர்களா என்று கேட்கிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "உங்களுக்கு வேண்டிய சர்க்கார் இருக்கும்போது கேட்கக் கூடாதா? அவர்களைக் கொஞ்சம் தாஜா செய்யக்கூடாதா?" என்று கேட் டார். அவருக்கு பதில் சொல்ல வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. எங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே என்ன உறவு இருக்கிறதென்று நாட்டுக்குத் தெரியும். இன்றைக்குப் பேச வேண்டியவர்கள் யார்? நிதி நிலை அறிக்கையிலே மத்திய அரசு எந்த வகையிலே ஓர வஞ்சனை செய் திருக்கிறது என்பதை நிதியமைச்சரவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, யாருக்கு வேகம் வர வேண்டும்? மாண்புமிகு உறுப் பினர்கள் திரு. தாஸ், திரு. இராமமூர்த்தி போன்றவர்களிடம் வேகத்தை எதிர் பார்க்க முடியுமா? இப்படி நிதியமைச்சரவர்கள் எழுதலாமா, மத்திய அரசைக்



குறை சொல்வது தவறு, 4½ சதவிகிதம் உதவி வராமல் போனாலும் சரி, மத்திய அரசை எதிர்த்துப் பேசுவதா என்று பேச வேண்டியவர்கள் அவர்கள். ஆனால் எதிர்த்துப் பேச வேண்டியவர்கள் யார்? அவர்களிடத்திலிருந்து ஒரு வார்த்தை வருகிறதா? மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு மாநில சுயாட்சிபற்றிப் பேசுகிறார். நாங்கள் இயக்கத்தை ஆரம்பிக்கிற காலத்தில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று ஆரம்பித்தோம். எங்களுடைய தோழர்கள் டெல்லியில் பேசினார்களென்ற தகவல் வந்திருக்கிறது. உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன், வெட்கப்படு கிறேன். நான் எதிர்க் கட்சியில் இருந்தால், நிதியமைச்சரவர்கள் இப்படிப் பட்ட அறிக்கையைத் தந்திருந்தால், "நிதியமைச்சரவர்கள் போராடுவதற்குத் தயாரா? கனக விஜயன் அங்கே இருக்கிறான், அவர்கள் தலையிலே கல்லை வைத்துக்கொண்டு வரலாம்" என்று கூறுவேன். கலிங்கத்துப் பரணியில். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கலிங்கத்துப் பரணியில் அல்ல, சிலப் பதிகாரத்தில்.

**திரு. எஸ். ஆர். இராதா :** சிலப்பதிகாரத்தில் பாடியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சிலப்பதிகாரமும் வரவில்லை, கலிங்கத்துப் பரணியும் வரவில்லை. ஏதோ பரணி பாடுகிறார்கள். பரணி பாடுகிறவர் என்ன நிலையில் இருக்கிறார் என்று நினைத்துப் பார்த்தால், வருத்தமாக இருக் கிறது. மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்றால், நாங்கள் தயாராக இருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசை வணங்கி, கை கூப்பி, அவர்களை எஜமானர்கள் நிலையில் வைத்து, வாழ வேண்டுமென்ற நிலையில் இல்லை. அதை வற்புறுத்த வேண்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் தான். நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, எவ்வளவு வயிற்றெரிச்ச லாக இருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு சர்க்கார் நடைபெறுகிறதா என்ற நிலை இருக்கிறது. அவ்வளவு ஓரவஞ்சனை செய்கிறார்கள். அண்ணா அவர்கள் 'வட நாட்டு சர்க்கார்' என்று எதிர்த்து எழுதினார்கள். அந்த உணர்வுகள் இப்போது ஏன் வரவில்லை? நம்மைக் காப்பாற்றிக்கொண்டால் போதுமென்ற நிலையில் இருக்கிறார்களே தவிர, அரசியல் ரீதியாக அந்த உணர்வு அவர்களுக்கு வரவே வராது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, நானும் குறுக்கிட வேண்டாமென்று தான் நினைத்தேன். அவர்கள் பேசுகின்ற கருத்துக்களிலே எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லை. ஆனால் அவர்கள் நாங்கள் பேசுகின்ற

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை 7

பேச்சுக்களை உன்னிப்பாகக் கவனிக்கிறார்களா என்பது தான் எனக்கு ஏற்படும் சந்தேகம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் மாநில சுயாட்சிபற்றிச் சொன்னவுடனே, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள், "அதற்காக நாங்கள் போராடத் தயார்" என்று தெரிவித்தார். அதைப் போலவே ஆளுநர் உரையின் மீது பேசும்போது, நிதி ஒதுக்கும்போது மத்திய அரசு தமிழக அரசைப் புறக்கணிக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டி, தெளிவாகச் சொன்னோம். மத்திய அரசிடமிருந்து நிதி பெற தமிழக அரசு எத்தகைய போராட்டம் நடத்தினாலும், அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு தருவோம் என்றும், தமிழக வளர்ச்சிக்காகக் கொடுக்கின்ற குரலோடு எங்களுடைய குரலும் சேர்ந்து ஒலிக்குமென்றும் சொல்லியிருக்கிறோம். அதையெல்லாம் கேட்காமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்வது நியாயமல்ல. இப்போதும் தெளிவாகச் சொல்கிறேன், யாருக்கும் நாங்கள் பயப்படவில்லை, யார் தயவுக்கும் காத்திருக்கவில்லை, யார் நல்லது செய்தாலும் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு தெளிவுரை வழங்கியதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அவர் தமது கருத்துக்களை இன்னும் கொஞ்சம் வேகமாகத் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்தேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது 'சப்' என்று போய் விட்டதோ !

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் அவருடைய நிலையை நினைத்துப் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் சொன்னது போன்று வேறு ஏதோ காரணங்கள் இருக்குமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் அவரிடத்தில் நான் எதிர்பார்க்கும் குரல் வேறு. பேசுவதை நான் கவனிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒவ்வொரு வார்த்தையையும் கவனிக்கிறேன். யார் சொல்லி யாருக்காகப் பேசுகிறார்கள், யார் இந்தப் பேச்சைக் கவனித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தில், ஆரம்ப காலத்திலே இருந்த ஒருவன் நான். அந்த நிலை எனக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி பேசுவதாக இருந்தால், என்ன பேசியிருக்க வேண்டும் தெரியுமா? திரு. ஜேப்பியார் போராடு வதற்குத் தயார் என்றால் வருகிறோமென்று அவரிடம் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் . . .



1980 ஜூலை 7]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியைப்பற்றிச் சொல்வதைப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்போது பேச்சை முடிக்கிற உத்தேசமில்லைபோல் இருக்கிறது. .

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடிக்கலாமென்று கருதுகிறேன். எதிர்க் கட்சிக்கு எவ்வளவு உயிர்ப் பிடிப்பு இருக்கிறதென்பதைக் காட்டுமளவிற்கு அவருடைய கருத்து அமைய வேண்டும். அந்தக் கொள்கைதான் எங்களை வாழவைத்த கொள்கை. அந்தக் கொள்கையால்தான் என்னைப் போன்றவர்கள் திராவிடர் கழகத்திற்குக் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். வட நாடு, தென்னாடு, திராவிடநாடு திராவிட ருக்கு என்று சொன்னதால்தான், திராவிட நாட்டைத் தனியாக வாங்கப் போகிறோமென்று இந்த இயக்கத்திற்கு தைரியமாக வந்தவர்கள் நாங்கள்.

(பிற்பகல் 6.00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி இன்றைக்குமா என்று கேட்கிறார். இன்றைக்கு அவருக்கு நம்பிக்கை இல்லாததால், நானும் விட்டிருக்கிறேன். அவருக்கு அந்த நம்பிக்கை வருகின்ற காலத்தில், நான் நிச்சயமாக விட மாட்டேன் என்பதையும், அவரையும் போராட்டத்தில் அழைத்துக் கொள்வேன் என்பதையும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* **திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு உறுப்பினர் இங்கே மாநில சுயாட்சி பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். மாநில சுயாட்சியை உறுப்பினர் வற்புறுத்து கிறாரா அல்லது மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை வற்புறுத்துகிறாரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் என்னிடத்தில் விளக்கம் கேட்டிருக்கக்கூடாது. இன்றைக்கு பதவியிலே இல்லா விட்டாலும் கூட, அவர் அந்த இயக்கத்திலே ஒரு காலத்திலே தீவிரமாக இருந்தவர்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** திரு. நீலநாராயணன் கழகத்தின் அமைப்புச் செயலாளர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதாவுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சில பேர் அதைப் பதவியாகக் கருதுவது இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் என்னைப் பார்த்து, "மாநில சுயாட்சியை வற்புறுத்துகிறீர்களா, இல்லை அதிக அதிகாரத்தை வற்புறுத்துகிறீர்களா?" என்று கேட்டிருக்கக் கூடாது. காரணம் இரண்டு கட்சிகளுக்கும் உள்ள கொள்கைபற்றி அவருக்கு மிக நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இருந்தும் திரு. இராதா சொல்ல மாட்டாரா என்கிற எண்ணத்தில் தான் கேட்கிறார்.

திரு. நீலநாராயணன் : ஆளும் கட்சியின் தலைவர், நமது முதலமைச்சர், நாட்டுக்கு மாநில சுயாட்சி தேவை என்பதை விட மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்கிற பொருள்படத் தான் பேசியிருக்கிறார். அதை மனதில் வைத்துத்தான் இதனைக் கேட்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இயக்கத்திற்கென்று கொள்கைகள் இருக்கின்றன. இயக்கத்திற்கென தயாரிக்கப்பட்டிருக்கிற விதிமுறைகள் இருக்கின்றன. நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் விரும்பினால், நானே அவருக்குத் தருகிறேன். அப்படித் தந்தால், அவர் படித்துப் பார்த்தால், அவருக்குச் சந்தேகம் வராது. ஒரே நோக்கத்திற்காகப் போகிற இருப்புப் பாதை என்று பேராசிரியர் அன்பழகன் சொன்னார். சேராது என்பது திரு. இராமமூர்த்தி அவர்களின் எண்ணம். ஆனால் சேரப் போகிற நேரத்தில் சேர்கிறதா இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த இருப்புப் பாதை ஒழுங்காகக் காப்பாற்றப்பட வேண்டும். சில பேர் "பிஷ் பிளேட்டு"-களைக் கழற்ற நினைக்கிறார்கள். அப்படி "பிஷ் பிளேட்டு"-களை இடையில் கழற்றுகிறவர்களைத் தடுக்க வேண்டும். மாண்புமிகு தலைவரவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவர்கள் மணி அடித்து என்னை உட்கார வைக்கும் நிலை வருவதை விட, நான் பேசிக்கொண்டிருக்கும் அரசியல் விவகாரத்திற்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டு, நிதிநிலை அறிக்கை மீது பேச முற்படுகிறேன்.

மாண்புமிகு தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது பக்கம் வரை நான் வந்திருக்கிறேன். இப்போது நாவலர் தந்துள்ள நிதிநிலை அறிக்கையில் இரண்டாவது பக்கத்திலிருந்து 40-50-வது பக்கத்திற்கு நான் தாண்ட வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். காரணம் நேரமில்லை. ஆனால்



ஒன்றை நான் இந்த நேரத்தில் திட்டவட்டமாகச் சொல்வேன். பல்வேறு நல்லபல திட்டங்களை நாவலர் அவர்கள் சிறப்பாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற என்னைப் போன்ற இளைஞர்களுக்கெல்லாம் ஒரு நல்ல தெம்பு தருகிற வகையில் இன்றைக்கு அவர்கள் பல்வேறு சிறப்பான திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்று கைத்தறி நெசவாளர்களுக்காக வீடு கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாய் மானியமாகத் தருவதாகும். மற்றவர்களுக்கு வீடு கட்ட என்று சொல்வதை விட கைத்தறி நெசவாளர்களுக்கு என்று சொல்லியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. காரணம் நெசவாளர்களுக்கு அவர்களுடைய தொழிலுக்கு மிக அடிப்படையானது வீடு. வீட்டில் வைத்துத் தான் அவர்கள் தொழிலை நடத்த முடியும். பத்து இலட்சம் ரூபாய் மானியம் என்று அறிவித்திருக்கும் அறிவிப்பானது பல ஆண்டுக் காலமாக வீடு கட்ட முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு வீடு கட்ட ஏற்பாடு செய்யும் வகையில் தகுந்த வழிவகைகளை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் காண்பார்கள் என்கிற நிறைந்த நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு டிசைன் சென்டர் என்று அறிவித்திருக்கிறார்கள். அதிகமான நாளை கைத்தறி நெசவாளர்கள் நான் தந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் பட்டு நெய்துகொண்டிருந்த நிலை போய், இன்றைக்கு டெரி காட்டன், இன்னும் இதுபோன்ற பலவிதமான நவீன ரகங்களை அளிக்கின்ற அளவிலே கைத்தறி நெசவுத் தொழிலில் வெகுவாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. "டிசைன் சென்டர்" என்று சொல்லுகிற நோக்கத்தில் நவீனமான ரகங்களைத் தந்தால் தான் அதற்கான முன்னேற்றம் ஏற்படும். அந்த வகையில் பட்டுத் தறி இன்றைக்கு தமிழ் நாட்டில் காஞ்சிபுரத்திலும், ஆரணியிலும், தஞ்சையிலும் இன்னும் பல இடங்களிலும் இருக்கின்றது. அவர்களுக்கு ஒரு நல்ல டிசைன் சென்டர் அமைத்துத் தருவது அவசியமாகும். என்னைப் பொறுத்தவரை, குறிப்பாக அமைக்கப் போகின்ற டிசைன் சென்டரை கும்பகோணத்தில் வைக்க வேண்டும். என்னுடைய தொகுதிக்காகக் கேட்கிறேன் என்று இந்த இடத்தில் யாரும் சொல்லக் கூடாது. யாரும் கேட்கவும் மாட்டார்கள். என்றாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனையில், கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, 48 ஆம் பக்கத்திலே வரிசை எண் 79-ல் வணிகர் நலன் பற்றி ஆராய்ந்து, தக்க பரிந்துரைகளை அரசுக்குத் தருவதற்காக வணிகர் நலக் குழு ஒன்றை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இது மிக மிக அருமையான திட்டம். சில வணிகர்கள் அரசியல் வாதிகளாக இருக்கிறார்கள். அதுவும் சந்தர்ப்ப அரசியல்வாதிகளாக இருக்கிறார்கள். வணிகத்தைப் போல் அரசியலையும் சேர்த்து நடத்தி வருகிறார்கள். தேர்தல் முடிவு வரும்வரை சும்மா இருப்பார்கள். எந்த அணி ஜெயிக்கிறதோ உடனே அந்த அணிக்குப் போய் விடுகிறார்கள். "நீங்கள் ஜெயிப்பீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம், முன்னாடியே சொல்லலாம் என்று தான் இருந்தோம், நெருக்கடி அதனால் சொல்லவில்லை" என்றெல்லாம் சொல்லி, ஜெயிக்கிற அணிக்குப் போய்விடுகிறார்கள். அதனால் இந்தக் குழுவை அமைக்கிற நேரத்தில் அரசியல் கலப்படம் இல்லாத, அரசியல்வாதிகளாக இல்லாத வணிகர்களை மட்டும் குழுவில் போட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொற்கொல்லர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் மலிவு விலையில் தாலிகள் தயாரிப்பது என்கிற திட்டம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். மலிவு விலையில் இதுவரையில் நூல் பதிப்புகள் தான் வந்ததை நான் பார்த்திருக் கிறேன். மலிவு விலையில் தாலி என்றால், அதில் தங்கம் இருக்குமா, கவரிங்கா என்றெல்லாம் விமர்சித்தார். விளக்கமும் கேட்டிருக்கிறார். தாலி தருவோம் என்று அறிவித்தோம். அதை அமுல்படுத்துங்கள் என்று கேட்டார்கள். இப்போது அதையும் அறிவித்ததற்குப் பின்னால் தாலியில் தங்கம் இருக்குமா, கவரிங்கா என்று கேட்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படியெல்லாம் பேசியாவது ஓட்டுக்களைப் பெற முடியாதா என்கிற எண்ணத்தில் பேசுகிறார்கள். ஆனால் நான் ஒன்றை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்வேன். தேர்தல் நேரத்தில் ஜனதா கட்சித் தலைவர் ஒருவர் பேசியதை நான் இந்த சந்தர்ப்பத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் என்ன சொன்னார்? "தப்பித் தவறி கூட கருணாநிதி கையால் தாலி வாங்காதீர்கள். வாங்கினால் நிலைமை மோசமாகி விடும்" என்று சொன்னார். எப்படி உங்களால் தர முடியும் என்று ஒருவர் கேட்டார். கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் தருகிறோம் என்று நாங்கள் சொன்ன பிறகு, ஒருவர் "நாங்கள் பாண்டிச்சேரியில் கொடுத்து விட்டோம்" என்று பெருமையோடு சொன்னார். பாண்டிச்சேரிக்கே அந்தத் தகுதி இருக்கும் என்றால், சென்னையிலே இருக்கிற எங்களுக்கு,





தீர்மானத்தோடு இருக்கிற எங்களுக்கு இருக்காதா? எங்களால் செய்ய முடியாது என்று எதிர்பார்க்கிறார்களா? தர வேண்டும் என்று கேட்கலாம், எவ்வளவு என்று கேட்கலாம், எப்போது என்று கேட்கலாம், எதிர்காலத்தில் தீட்ட வேண்டிய நல்வாழ்வுத் திட்டங்களைச் சொல்லி வற்புறுத்தலாம். அப்படிச் செய்வதெல்லாம் ஆளும் கட்சிக்குத் துணையாக இருக்கும். சுயமரியாதை எண்ணம் கொண்டவர்களாக இருந்தால், என்ன சொல்லி யிருக்க வேண்டும்? தாலி தருவதாக இருந்தால் அரசாங்க நிதியிலிருந்து கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு இலவசமாகத் தாலி தாருங்கள் என்று எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் சொல்லியிருந்தால், பாராட்டியிருக்கலாம். கொடுக்கப்படும் தாலி 500 ரூபாய் மதிப்பிற்கு இருக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால், பாராட்டியிருக்கலாம். விதவையைத் திருமணம் செய்பவர்களுக்கு இலவசமாகத் தாலி தாருங்கள் என்று சொல்லி யிருந்தால், பாராட்டியிருக்கலாம் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்ய தாலி செய்து கொடுங்கள் என்று கேட்டிருந்தால், பாராட்டி யிருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் கேட்க மாட்டார்கள். நாங்கள் பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறோம். அவற்றை நிறைவேற்றுவதாகவும் அறிவித்திருக்கிறோம். தாலியைப் பொறுத்தவரை, கூட்டுறவுச் சங்கம் மூலம் அதைக் கொடுக்க இருக்கிறோம். தாலியை யார் கட்டுவது, எந்த இடத்தில் கட்டுவது என்றெல்லாம் பிரச்சினைகளை எழுப்புகிற நேரத்தில், பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இன்றைக்கு தாலியை பெரிய அரசியல் பிரச்சினையாக ஆக்கி என்னென்ன பேசுகிறார்கள், எழுதுகிறார்கள் என்பதனால் தான் நான் இதைச் சொல்கிறேன். ஆனால் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்களைப் பொறுத்தவரை, அவற்றை அவர்கள் நிறைவேற்றாமல் பின்வாங்கப் போவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-10)

திட்டங்களைப் பொறுத்தவரையில், சொன்னதை விடுகின்ற நிலையில் எங்களுடைய புரட்சித் தலைவர் நிச்சயமாக இருக்கமாட்டார். எதைச் சொல்கிறாரோ அதைச் செய்வார். சொன்னதைச் செய்ய வேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள் நாங்கள். அதைத் தான் நண்பர் திரு. சித்தாபதி அவர்கள் இங்கே மிகுந்த நம்பிக்கையோடு சொன்னார். "அவரை நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார். "யார் சந்தேகப்பட்டாலும் கவலையில்லை; நீங்கள் நிச்சயமாகச் செய்வீர்கள்" என்று அவர் சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டக்

கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாடு அவரை நம்புகிறது. தமிழ் நாட்டில் இருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கு அவரை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை நட்சத்திரத்தின் ஒளி விளக்காக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்று, என்னுடைய பாராட்டினைத் தெரிவித்து, மேலவைத் தலைவர் அவர்கள் மணி அடிப்பதற்குள் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் புதிய வரிகள் எதுவும் விதிக்காமல் உபரி நிதிநிலை அறிக்கையை அளித்தமைக்கு என்னுடைய உளமார்ந்த வரவேற்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் பொருளாதார நிலைமை, பண வீக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும், வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதை மனதிலிருத்தி இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தமைக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்

இன்று உலகை ஆட்டிப்படைக்கும் பிரச்சினை சக்தி தரும் எரிபொருள் பெட்ரோலியப் பொருட்கள் விலை ஏகத் தாறுமாறாகக் கூடியிருப்பதுதான். உலகில் உற்பத்தியாகும் பெட்ரோலியப் பொருட்களில் ஒரு சதவீதத்தைத் தான் நம் நாடு உபயோகிக்கிறது. என்றும் நம் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 40 சதவிகிதம் இதன் இறக்குமதிச் செலவிற்கு ஆகிவிடுகிறது. பெட்ரோலுக்கு விதிக்கப்படும் சுங்க வரி, இதர வரிகள் பெட்ரோல் விலையில் பாதிக்குமேல் இருக்கின்றன. மத்திய அரசுக்கு மிகப் பெரிய வருமானம் தரும் இவ்வரியைக் குறைப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகவே நாம் இதற்கு மாற்றாக மின்சக்தி உற்பத்தியை, நிலக்கரி உற்பத்தியை, எரிபொருளாகப் பயன்படும் காடுகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எரிபொருள்களை சிக்கனமாக உபயோகிப்பதற்கும், மாற்று ஏற்பாடாக புதிய கண்டுபிடிப்புகளுக்கும் ஆய்வும் அபிவிருத்தியும் செய்ய வேண்டும்.



இந்த அரசு மின்சார உற்பத்திக்கு முதலிடம் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். இது வேளாண்மையும் தொழிலும் பெருக உதவியாக இருக்கும். ஒகனேக்கல்லில் நீர் மின்சார உற்பத்தித் திட்டம் ஏன் இதில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நாடெங்கும் பயன்படுத்தப்படும் முக்கிய எரிபொருளாகிய விறகு உற்பத்திக்கு கிராமங்கள்தோறும் காடு வளர்க்கப்பட வேண்டும். சூரிய சக்தியைப் பயன்படுத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கழிவுப் பொருளான வெல்லப் பாகிலிருந்து (மொலாசஸ்) எரி சாராயம் உற்பத்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மெக்சிகோவில் இதை பெட்ரோலுக்குப் பதிலாக உபயோகிக் கிறார்கள். பெட்ரோல், டீசல் எதுவுமில்லாமல், வெறும் காற்றினால் மட்டும் ஓடக்கூடிய புதுமாதிரியான மோட்டார் சைக்கிளை ஜப்பான் நாட்டு நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருப்பதாக ஒரு வாரப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதில் கவனம் செலுத்தி நமது நாட்டிலும் அது மாதிரி வாகனம் வந்தால், பல லட்சம் மக்கள் பயனடைவார்கள்.

வேளாண்மைத் துறையில் நெல், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகியவற்றிற்கான தரமான விதைகளை உற்பத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் முயற்சிகளை வரவேற்கிறேன். தமிழகம் பயறு வகை களிலும் எண்ணெய் வித்துக்களிலும் பற்றாக்குறையாக இருக்கிறது. நெல் அறுவடை செய்த வயல்களில் மறு போகமாக தஞ்சை மாவட்டத்தில், தென் ஆற்காடு மாவட்டத்தில் பயறு, எண்ணெய் வித்துக்கள், பயிரிட்டு உற்பத்தி செய்கிறார்கள். அதுபோல் மற்ற மாவட்டங்களில் உள்ள வயல்களிலும் பயறு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய விவசாய இலாகா ஊக்கமளிக்க வேண்டும். தென்னை உற்பத்திக்கு நாற்றுப்பண்ணைகள் அமைக்க இருப்பதை வரவேற்கிறேன். தென்னை தேக நலனுக்கு உகந்த இனிய பானமான இளநீரைத் தருகிறது. தேங்காய் ஆகாரம் ஆகிறது. எண்ணெய் உற்பத்தி செய்ய உதவுகிறது. இதற்கு மேலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தென் மாவட்டங்களில் கற்பக விருட்சம் என போற்றப்படும் பனை உற்பத்திக்கும், குறுகிய காலத்தில் பலன் தரத்தக்க வித்துகளைப் பெற ஆராய்ச்சியும் மேற்கொள்ள வேண்டும். விவசாய வளர்ச்சிக்கான திட்டங்களை ஊக்குவித்து உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். உரத்தின் விலை கூடியிருக்கிறது. மத்திய அரசு உரங்கள் மீதான சுங்க தீர்வைகளை ரத்து செய்திருக்கிறது. அது போன்று மாநில அரசு அவற்றின்மீதான விற்பனை வரியை ரத்து செய்து விவசாயிகளுக்கு உரம் குறைந்த விலையில் கிடைக்க

வாய்ப்பளிக்குமாறு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அரசு சுவிடன் நாட்டு உதவியுடன் மக்களின் எரிபொருள் தேவைக்காகத் தரிசு நிலங்களிலும் குன்றுகளிலும் சாலைகள், ஆறுகள், கால்வாய்கள் இவற்றின் ஓரங்களிலும் மரங்கள் வளர்க்க முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். இது சுற்றுப்புற சுகாதாரத்திற்கும், மழை வளத்திற்கும் ஏற்றது. இதைப் போர்க்காலத்து வேகத்துடன் நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதித் திட்டங்களில் நெல்லை மாவட்டத்தில் நம்பி ஆற்றில், மூவாற்றங்கரை அணைக்கட்டுத் திட்டத்தை நீண்ட நெடுநாட்களுக்கு முன்பே ஆய்வு செய்தும், இதுகாறும் இத்திட்டத்தினை மேற்கொள்ளவில்லை. கொடுமுடி ஆற்றுத் திட்டம் உறங்குகிறது. அதைச் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரைக் கிழக்கே திருப்பி மேற்கு இராமநாதபுரம், நெல்லை, கோவை மாவட்டங்களுக்குப் பாசன வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்கள் கிராமப்புறங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும். கூடுதல் வேலைவாய்ப்பளிக்க பயன்படும் பட்டு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். 80 சதவீத மக்கள் கிராமத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்—கரூர் பாதையில் உள்ள குஜிலியம்பாறையில் சிமிண்டு ஆலை ஆரம்பிக்க வேண்டுகிறேன். அதற்கான கனிவளம் அங்கே இருக்கிறது.

சாலைப் போக்குவரத்து பெருகி வருகிறது. சாலை விபத்துக்களும் பெருகி வருகின்றன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் சாலைப் போக்குவரத்திற்கு முக்கியத்துவம் அளித்து, துரித போக்குவரத்து நெடுஞ் சாலைகளைச் சீரிய முறையில் விரிவாக அமைத்தனர். இதனைப் பல ஆண்டுகளுக்கு முன்பே மதிப்பிற்குரிய சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் எடுத்துரைத்தார். மேலை நாடுகளுக்கு ஒப்ப, பெரிய பஸ்கள், லாரிகள் பெருகியிருக்கின்றன. அவற்றை மேற்கொள்ளும் நல்ல சாலைகள் இல்லை. சாலைகளின் இரு பக்கங்களிலும், லாரிகளை நிறுத்திக் கொள்கிறார்கள். அதுவும் வாகனங்கள் சாலை ஓரத்தில் நிறுத்தப்படுவதில்லை. குறிப்பாக, சோதனைச் சாவடி அருகிலும், பெட்ரோல் பங்க் அருகிலும், சிற்றுண்டிச் சாலை அருகிலும் இப்படி நிறுத்திவிடுகிறார்கள். சோதனைச் சாவடி அருகில் பல விபத்துக்கள் நடந்திருக்கின்றன. சாலை விதிகள் கண்டிப்பாக





அமுல்படுத்தப்பட வேண்டும். வாகனங்களை ஓட்டும் உரிமம் பெறுபவர்கள் தேர்வு எழுத வேண்டும். மேலை நாடுகளில் இம்முறை இருக்கிறது. நமது மக்களும், சாலை விதிகளை மதித்து நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

புதிய சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள நத்தத்திலிருந்து திருச்சி மாவட்டத்தில் உள்ள மருங்காபுரி வழியாகத் துவரங்குறிச்சிக்கு ஒரு நல்ல இணைப்புச் சாலை போட்டால், திருச்சி-மதுரை தொலைவு ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் குறைகிறது. ஏனைய பாதைகளில் நெருக்கடி குறைய இது ஏதுவாக இருக்கும்.

திட்டக் கமிஷனின் பரிசீலனையில் உள்ள கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல வழி இருப்புப் பாதையை இனியும் சுணங்காமல் மேற்கொண்டு நிதியுதவி செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன். மதிப்பிற்குரிய சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் பரிசீலனை செய்து பரிந்துரை செய்த சேது சமுத்திரத் திட்டம் கைவிடப்பட்டது வருந்தத்தக்கது. இலங்கையைச் சுற்றாமல் கப்பல்கள் இவ்வழி சென்றால் எரிபொருள் மிச்சமும், நேர மிச்சமும் கிடைக்கும். உலக வங்கியின் பண உதவி பெற்றாவது இதை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன்.

பக்கிங்ஹாம் கால்வாய் தெற்கே மரக்காணம் வழியாகக் கடலோரம் வழியாகத் தஞ்சை மாவட்டம் வேதாரண்யம்வரை இருந்தது தூர்ந்துபோய் விட்டது. அக்கால்வாயை மறுபடியும் தூர் எடுத்துச் சீர்படுத்தினால், வேதாரண்யத்திலிருந்து உப்பு மற்றும் விறகு முதலியவை எரிபொருள் தேவையில்லாத படகுப் போக்குவரத்தின் மூலமாகச் சிக்கனமான முறையில் அனுப்பப்பட ஏதுவாக இருக்கும். அரசின் பரிசீலனைக்கு இதைச் சமர்ப்பிக்கிறேன்.

சைக்கிள்களுக்கு விற்பனை வரியைக் குறைத்திருப்பதையும், அரிக்கன் விளக்குக்கும், மண்ணெண்ணெய் அடுப்புக்கும் விற்பனை வரியை அறவே நீக்கியிருப்பதையும் வரவேற்கிறேன். பல பண்டங்களின்மீது ஒருமுனை விற்பனை வரியாக மாற்றியிருப்பதை வரவேற்கையில் வரிவிகிதத்தைக் குறைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லாமலேயே வணிக வரி வருவாய் பெருகியிருக்கிறது. அரசுக்கு விற்பனை வரியை வசூலித்துக் கொடுக்கும் ஊதியம் பெறாத சேவகர்களாகிய வணிகர்களுக்கு, கூடுதல் வணிகம் செய்து கூடுதல் வரி ஈட்டிக் கொடுத்தால் தண்டிப்பதுபோன்ற கூடுதல் விற்பனை வரி இந்த நிதிநிலை அறிக்கையில்

நீக்கப்பட்டதாக அறிவிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. கூடுதல் விற்பனை வரியை அறவே நீக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

வணிகர் நலக்குழு அமைக்க அரசு முன்வந்துள்ளதை நான் வரவேற்கிறேன். வணிகத்தில் ஏறத்தாழ 12 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குச் சட்டமன்ற மேல் சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் ஒரு வகுப்பிற்கு 30 மாணவர்களுக்கு மேல் சேர்க்கப் படக்கூடாது என்று அரசு ஆணையிட வேண்டும். அப்போதுதான் ஆசிரியர் நேர்முகக் கவனிப்பில் மாணவர்கள் தரமான அடிப்படைக் கல்வி பயில முடியும். அதனால் கூடுதல் வகுப்புகள் ஏற்படுத்த வேண்டிய நிலை வந்தால், கூடுதல் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இயலும். வகுப்பறைகள் போதாது எனக் கணக்கிட்டால், ஷிப்ட் முறையை ஏற்படுத்தலாம். அதுபோல் உயர்நிலைப் பள்ளிகளில் வகுப்பிற்கு 50 மாணவர்களுக்கு மேல் சேர்க்கப்படக் கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் அலுவலகங்களுக்கு வேலை தேடி அலையாமல் சுயமாகத் தொழில் செய்ய வகை அளிக்கும் தொழில் பள்ளிகளும், பாலிடெக்னிக் பள்ளிகளும், மாவட்டந்தோறும் ஆரபபிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்களில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் அமைக்க மத்திய அரசு 75 சதவீதம் மானியம் அளிக்கிறது. மாநில அரசும் உதவுகிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த நற்பணியை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு அரசு ஊக்கமளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கலைத் துறையில் உள்ளவர்களை இந்த அரசு கௌரவித்து விருதுகள் அளித்து பாராட்டி வருகிறது. அகில உலக இசைக் கழகத்தில் 7 நீதிபதிகள் கொண்ட குழு தமிழகத்தைச் சார்ந்த திரு. லால்குடி ஜெயராமன் அவர்களுடைய வயலின் இசையே மிகச் சிறந்தது, முதன்மையானது என ஒரு மனதாகத் தெரிவு செய்திருக்கிறது. இதனையடுத்து பல வெளி நாடுகளில்



அவரை அழைத்து கௌரவித்திருக்கிறார்கள். நமது கர்நாடக இசைக்கு உலக அரங்கு அளித்த மாபெரும் மரியாதை இது. இந்த மாபெரும் மேதையை இந்த அரசு கௌரவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-20)

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு.

**(1) தூத்துக்குடி-இராமேஸ்வரம் கடலோரப் பகுதிகளில் அந்நிய கப்பல்கள், படகுகள் சட்டவிரோதமாக நடமாடுதல் குறித்து.**

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "தூத்துக்குடி-இராமேஸ்வரம் கடலோரப் பகுதிகளில் அந்நிய கப்பல்கள், படகுகள் சட்டவிரோதமாக நடமாடுதல் குறித்தும், 30—6—1980-ல் பிடிபட்ட "தாய்வான்" நாட்டுப் படகுகள் காரணமாக அப்பகுதி மீனவருக்கு ஏற்பட்ட இழப்பு நட்டம் குறித்தும்" என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய அறிக்கை@ ஒன்று இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தாய்வான் நாட்டுக் கப்பல்கள் இதுபோன்ற செயலில் இதற்கு முன்பும் ஈடுபட்டு பிடிபட்டதாகத் தகவல்கள் இருக்கின்றன. இந்தக் கப்பல்கள் மீன் பிடிப்பதற்காக மட்டும் வருகின்றனவா, அல்லது இந்திய அரசுக்கு எதிராக ஒற்றர் வேலையில் ஈடுபட வருகின்றனவா என்பதை அரசு விசாரித்து அறிந்ததா, பிடிபட்ட கப்பல்களில் இருந்த நபர்கள் மீது வேறு குற்றங்களுக்காக சட்டரீதியான விசாரணையை நடத்தியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@ 332 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## இணைப்பு.

[199—200 ஆம் பாத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நோட்டுப் புத்தகங்கள் தயார் செய்து விற்பதற்காக தமிழ் நாட்டிற்கு மைய அரசு வழங்கும் மலிவு விலைக் காகிதத்தை தமிழ்நாட்டு பாட நூல் நிறுவனத்திற்கு வழங்கி, மேற்படி நிறுவனம் மூலமாக நோட்டுப் புத்தகங்களை தயார் செய்து, விற்பனைக்கு விநியோகம் செய்ய 1979 செப்டம்பர் மாதம் அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, காகிதங்களை நோட்டுப் புத்தகங்களாகத் தயாரித்து கூட்டுறவுச் சங்கங்கள், பள்ளி/கல்லூரிகள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகப் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகப் பள்ளி, கல்லூரி மாணவர்களின் மொத்தத் தேவைக்கு ஆண்டொன்றுக்கு குறைந்தது 8,000 டன் மலிவு விலைக் காகிதம் தேவைப்படும். ஆனால், கிடைக்கப்பெறும் மலிவு விலைக் காகிதத்தின் அளவிற்கேற்ப, மைய அரசு சுமார் 6,000 டன் காகிதம் ஒரு ஆண்டிற்கு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது.

காகித ஆலைகளிலிருந்து காகிதங்கள் வரப்பெறுவது சற்று தாமதம் ஆகிறது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 1—10—1979-க்குப்பின் சுமார் 3,000 டன் காகிதத்தை நோட்டுப் புத்தகங்களாகத் தயாரித்து தமிழகம் முழுவதும் விநியோகம் செய்துள்ளது. இதுவரை ரூபாய் இரண்டு கோடி மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பள்ளி/கல்லூரி மாணவர்களின் நோட்டுப் புத்தகத் தேவை முழுவதையும் மலிவு விலை காகிதத்தால் தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்கள் மூலமாக பூர்த்தி செய்வது இயலாததாகும். இருப்பினும், மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் உரிய விலையில் எல்லோருக்கும் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் செய்து வருகிறது.

சலுகை விலைக் காகிதத்தின் விலை 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ரூ. 2,750-லிருந்து ரூ. 3,000-ஆக மைய அரசால் உயர்த்தப்பட்டது. காகித விலை உயர்வு, குறிப்பேடுகள் தயாரிக்க தேவையான மூலப் பொருள்களின் விலை உயர்வு, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நோட்டுப் புத்தகங்களின் விலையை 16—4—1980 முதல் அதிகப்படுத்த மைய அரசு தீர்மானித்து, சில வகை நோட்டுப் புத்தகங்களின் விலையை 5 பைசா முதல் 20 பைசா வரை உயர்த்தியுள்ளது.



மைய அரசின் முடிவின்படி, அரசாணை நிலை எண் 778, கல்வி, நாள் 28—4—1980-ல் தமிழகத்திலும் நோட்டுப் புத்தகங்களின் விலையை உயர்த்த ஆணையிடப்பட்டது.

பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடையதாகும். 1980-81 ஆம் ஆண்டிற்கான பாடப் புத்தகங்கள் மொத்த வியாபாரிகளுக்கு 26—12—1979 முதல் அனுப்பப்பட்டு வருகின்றன. புதிதாக வெளியிடப்பட்ட அல்லது மாற்றப்பட்ட புத்தகங்கள், மொத்த வியாபாரிகட்கு 1980 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் அனுப்பப்பட்டு வருகிறது. இவ்வாண்டு வெளியிட்ட பாடப் புத்தகங்கள் எண்ணிக்கை 2.70 கோடி. புத்தகங்களின் மதிப்பு ரூ. 5.39 கோடி ஆகும்.

பள்ளிப் பாட புத்தகங்கள், 50 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாக பல கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலமாகவும், பள்ளி கூட்டு இணையங்கள் மூலமாகவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுவதும் விற்கப்படுகின்றன. பாடநூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்கு கிடைக்க தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வகை செய்துள்ளது. சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் சரியான நேரத்தில் கிடைக்க விற்பனை நிலையம் ஒன்றினை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை அண்ணா சாலையில் நிறுவியுள்ளது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் கப்பல்களைப் பிடித்து சோதனை போட்டு அதிலிருந்து எடுத்த பொருள்களிலிருந்து பொதுவாக அவை மீன் பிடிக்கும் கப்பல்கள்தான் எனத் தெரிய வருகிறது. அடிக்கடி தாய்வான் நாட்டுப் படகுகளும், ஜப்பான் நாட்டுப் படகுகளும், மற்ற நாட்டுப் படகுகளும் நம்முடைய நாட்டு வங்கக் கடலில் வந்து மீன் பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாட்டினுடைய கடற்கரை ஒரு குறிப்பிட்ட தூரம் வரை இருக்கிறது என்ற நியதி இருக்கிறது. அந்த எல்லையை மீறி இந்திய எல்லைக்குள் வந்ததால்தான், அந்தக் கப்பல்களை நாம் பிடிக்க வேண்டிய அவசியம் வந்தது. நம்முடைய காவல் துறையினர் கண்காணிப்பாக இருந்து அது பற்றிய நிலைமைகளை அறிந்ததற்குப் பிறகு, இந்திய அரசினுடைய கப்பற் படையும் போறுப் பேற்றுக்கொண்டு, அவற்றைப் பிடிக்க முயற்சி செய்தபோது, ஆறு கப்பல்களில் ஐந்து கப்பல்கள் தப்பியோடிவிட்டன. ஒரே ஒரு படகு மட்டும் பிடிக்கப்பட்டது. அதிலிருந்து ஏராளமான மீன்கள் எடுக்கப்பட்டு, இங்கே பதனிடப்பட்டு ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றன. அதிலுள்ள கருவிகளையும், மற்ற பொருள்களையும் பார்க்கும்போது, அவர்கள் மீன் பிடிக்க வந்தவர்களாகத்தான் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி வேறு வகையில் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால், மத்திய சர்க்காரின் கடற் படையினரும், ஒற்றர்களும் ஆராய்ந்திருப்பார்கள். கடற்கரைப் பகுதிகளில் நம்முடைய காவல் துறையினர் உஷாராக இருக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்திகளை மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** தாய்வான் நாட்டுக் கப்பல்கள் வந்ததன் காரணமாக நம்முடைய நாட்டு மீனவர்களின் பல விலையுயர்ந்த வலைகள் அறுக்கப்பட்டிருக்கின்றன. மீன்கள் கூட கொள்ளை போயிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அந்த வகையிலே நட்டம் அடைந்த இந்திய மீனவர்களுக்கு, தமிழகத்து மீனவர்களுக்கு அவர்களுடைய இழப்பை தாய்வான் நாட்டுப் படகுச் சொந்தக்காரர்கள் அல்லது அந்த நாடு ஈடுசெய்யும் வகையில் முயற்சி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மீனவர்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறியும்படி மீன் துறையினர் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், மற்றவைகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்த பிறகு, பிடிக்கப்பட்ட படகுகளிலிருந்து





கைப்பற்றப்பட்ட பொருள்களை விற்றதில் வந்த பொருளைப் பயன்படுத்தி அவர்களுடைய இழப்பை ஈடு செய்ய முடியும். ஆகவே, ஆராய்ந்த பின்னாலே மீனவர்களுக்கு எந்தத் தொல்லையும் ஏற்படுத்தாத வகையில் எப்படி நடவடிக்கை எடுக்க இயலுமோ அதை எடுக்க இயலும்.

### (2) எழும்பூர், திருவல்லிக்கேணி அரசாங்க மகப்பேறு மருத்துவ மனைகளில் பிறந்த குழந்தைகள் களவாடப்பட்டது குறித்து.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"எழும்பூர், திருவல்லிக்கேணி அரசாங்க மகப்பேறு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகள் களவாடப்பட்டது குறித்தும், அதனால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்."

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி நல்ல பெயரை மக்களிடத்திலே எடுத்து வருகிறார். குழந்தைகள் காணாமல் போன விஷயத்திலும் சிறந்த நடவடிக்கைகள் எடுத்து இனிமேல் இது போன்ற தவறுகள் நடைபெறாத வகையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். திரு. கோவிந்தராஜன், இளஞ்சியம் தம்பதிகளின் குழந்தையைத் திரும்பப் பெற்றுத் தந்திருக்கிறார். அதைப் போலவே மற்றொரு குழந்தையையும் சீக்கிரம் பெற்றுத் தர ஏற்பாடு செய்வாரா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கஸ்தூரிபாய் மருத்துவ மனையில் காணாமல் போன குழந்தை மீட்கப்பட்டுவிட்டது. அதற்குரிய போலீஸ் நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்ததன் காரணமாக, 29 ஆம் தேதியன்று ஐந்தரை மணிக்கு ஆணியால் சுற்றப்பட்டு அந்தக் குழந்தை மருத்துவமனைக்கருகிலே வைக்கப்பட்

---

@ 333 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

டிருந்தது. நாங்கள் ஏற்கெனவே திட்டவட்டமான அறிவிப்பு கொடுத்ததனாலும், போலீஸ் தீவிரமாக நடவடிக்கை எடுத்ததனாலும், பயத்தின் காரணமாக அந்தக் குழந்தையை அவர்களாகவே அங்கே கொண்டு வந்து வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதே மாதிரியாக நாம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியின் காரணமாக மற்ற குழந்தைகளையும் கண்டுபிடிப்பதில் வெற்றி பெறும் சூழ்நிலை இருக்கிறது. இன்னும் இரண்டு குழந்தைகள் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**2. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.—** தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, இது வரை 3 நாட்களாக இந்த விவாதம் நடந்திருக்கிறதென்றாலும், ஒவ்வொரு நாளிலும் 4 பேர், 5 பேருக்கு அதிகமாகப் பேச முடியாத நிலை இருந்து வந்திருக்கிறது. இன்று 8 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள், நாளைக்கும் பேச பல பேர் பெயரைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே நேரத்தைக் கையாளுவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாம் நம்முடைய மாநில அரசினுடைய நிதிநிலை அறிக்கையைப் பரிசிலனை செய்தாலும்கூட, சமஷ்டி அமைப்பிலே நாம் ஒரு அங்கமாக இருப்பதால், மைய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் அதனுடைய செயல் அழுத்தங்கள் மாநிலப் பொருளாதாரத்தின் மீது செலுத்திக் கொண்டேயிருப்பதால், மத்திய அரசின் பொருளாதாரத்தின் பின்னணியில் மாநில அரசின் பொருளாதாரத்தைப் பரிசிலனை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய மாநில அரசு என்ன திட்டங்களைத் தீட்டினாலும், அவற்றை நிறைவேற்றுவது மத்திய-மாநில அரசு உறவுகளைப் பொறுத்திருக்கிறது. மத்திய-மாநில அரசு உறவுகளோ நாளுக்கு நாள் சீரழிந்து வருகின்றன. நம்முடைய அரசியல் சாசனத்தின்படி, மாநிலங்களுக்குத் தரப்பட்டிருக்கிற அதிகாரம் மிகவும் குறைவு. ஆகவே அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டுமென்ற ஒரு எக்கம் நாடு முழுவதிலும் வேகமாக ஒரு பக்கம் பரவி வருகிறபோது, இன்னொரு பக்கத்திலே மைய அரசின் காபினெட் மந்திரிகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய பொறுப்பில் இருக்கிற இலாக்காவின் அதிகாரங்கள் மாநில அரசில் இருப்பதைப் போல



நினைத்துக் கொண்டு அதையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் அறிக்கையை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கல்வியைப் பற்றியும், விவசாயத்தைப் பற்றியும் ஏற்கெனவே அறிக்கையை விட்டிருக்கிறார்கள். மின்சாரத் துறையையும் மத்திய அரசின் கீழ் கொண்டு போக வேண்டுமென்று சொல்கிறார்கள். காடுகள் கூட மாநில அரசின் கீழ் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். சட்டம், ஒழுங்கு பொறுப்பு கூட மாநிலத்தில் இருக்கக் கூடாது என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். இப்படி ஒவ்வொரு காபினெட் மந்திரியும் தங்கள் பொறுப்பில் இருக்கிற இலாக்காக்கள் மாநிலத்தில் இருப்பதைப் போலவும், அவற்றை எடுக்க வேண்டுமென்றும் பேச ஆரம்பித்துவிட்டிருக்கிறார்கள். இலாக்கா அதிகாரத்தை எடுத்துக்கொண்டு யூனிடரி பார்ம் ஆப் கவர்ன்மென்ட் (Unitary form of Government) ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலையில் மைய-மாநில அரசு உறவு முக்கியமான பாத்திரம் வகிப்பதால் மைய-மாநில அரசுகள் உறவு சம்பந்தமாக மாநிலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆறாவது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதற்குப் பின்பு, ஆளுநர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆளுநர் ஆட்சிக் காலத்திலே இந்த அவைக்கு நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நான் வரவேற்கிறேன், வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

இந்த அவையிலே அவர்கள் இருப்பதற்குரிய தகுதியைப்பற்றியோ, அவர்களுடைய அரசியல் சார்பு பற்றியோ நான் எந்தப் பிரச்சினையையும் எழுப்பவில்லை. அவர்களிடம் எனக்கு மரியாதை உண்டு. ஆனால் அவர்களுடைய நியமன விஷயத்தில் பிரச்சினை இருக்கிறது. மாநில அரசு, மத்திய அரசு உறவுப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத்தான் நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பேரவையை ஒரு பக்கம் கலைத்தாகி விட்டது. அப்போது மேலவை செயல்படாமல் விடப்பட்டிருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் ஆளுநர் அவர்கள் நான்கு உறுப்பினர்களை அவைக்கு நியமித்திருக்கிறார்கள். மேலவை செயல்படாமல் இருக்கும்போது, அவர் நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதில் சட்டப் பிரச்சினையும் தார்மீகப் பிரச்சினையும்

அடங்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, சட்டப் பிரச்சினைபற்றி ஆராய வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். இதிலுள்ள தார்மீக, ஜனநாயகப் பிரச்சினையைப் பற்றித்தான் நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது ஒரு மாநில அரசு அவை. இந்த மாநில அரசினுடைய சார்பிலே கவுன்சிலுக்கு உறுப்பினர்களை நியமிக்க வேண்டிய அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்குத்தான் இருக்கிறது என்பது அரசியல் சாசனத்தில் சொல்லியிருக்கும் விதியாகும். மாநில அரசு கலைக்கப்பட்டிருக்கும்போது, மத்திய அரசின் பிரதிநிதியாக ஆளுநர் அவர்கள் இருக்கும்போது, அத்தகைய நியமனங்கள் தார்மீக ரீதியிலே எப்படி சரி என்ற பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். அதிலே மத்திய அரசினுடைய போக்கு டபுள் ஸ்டான்டார்டு ஆக இருக்கின்றது, இரண்டு விதமான அணுகுமுறையாக இருக்கிறது. 1980-லேயே ராஜ்ய சபை தேர்தல் நடந்திருக்குமானால், சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்திருப்பார்கள். மத்திய அரசு ஜனவரியில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டதனால், பழைய மாநில அரசுகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடாது, புதிய மாநிலச் சட்டசபைகள் மூலம் தான் ராஜ்ய சபைக்கு உறுப்பினர்கள் வரவேண்டும் என்று சொன்னார்கள். நான் சொல்வது அந்த ஆயாராம் கயாராம் விவகாரங்களைவிட இது பரவாயில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் 'ஆயா ராம், கயா ராம்' என்று சொல்கின்றார்கள். அப்படி என்றால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இதைப்பற்றி முன்னமேயே ஒரு தடவை சொல்லியிருக்கிறேன். திரும்பவும் சொல்கிறேன். அது அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டது. அதாவது வேறு கட்சியிலே இருந்து இந்தக் கட்சிக்கு வருவது. அவர்களுக்கு ஆயாராம்கள் என்று சொல்வது. அதுபோலவே இந்தக் கட்சிக்கு வந்தவர்கள், அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை என்றால், வேறு கட்சிக்குப் போவது. இவர்களை கயாராம்கள் என்று சொல்வது. இந்த நிலை அரசியலில் வட இந்தியாவில்தான் இருந்தது. தமிழ் நாட்டிலும் வடக்கில் எப்படி நடக்கிறதோ அப்படி வந்திருக்கிறது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழிலே அதற்கு வார்த்தைகள் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** சரியான வார்த்தைகள் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கெட்டுப்போவதற்கு தமிழிலே வார்த்தைகள் கிடைப்பது கஷ்டம்தான்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அத்தகைய ஆயாராம்கள், கயாராம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலாவது பரவாயில்லை என்று நினைக்கிறேன். ஆனால் மாநில அரசு, தமிழ் நாட்டில் இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இதைப் பற்றிக் கேட்க ஏன் மறுக்கிறது? 4, 5 தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் வரப் போகின்ற நிலை இருந்தது. அந்தந்த மாநிலங்களில் மீண்டும் தேர்தலில் வெற்றிபெற்று வந்தாலும், தங்களுக்கு மெஜாரிட்டி இருப்பது சந்தேகம் என்ற நிலை இருந்தது. அந்தத் தேர்தலுக்கு முன்னாலேயே ஆளுநர் அவர்கள் மூலம் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவது என்பது இரட்டைவிதமான போக்கு இந்தப் போக்கில்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு தார்மீகப் பிரச்சினைதான். இதிலே அவசரம் ஏன் என்று தெரியவில்லை. நம் கவுன்சிலில் 63 பேர்களுக்கு 22 பேர்கள் இல்லாமல் இருக்கின்ற நிலையிலே அப்படி நியமித்திருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு பேர்களை வைத்துக் கொண்டு, இந்தக் கவுன்சில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இப்படி இருக்கும் போது, 4 பேர்களை நியமிக்க என்ன அவசியம் ஏற்பட்டது? இதில் மத்திய அரசு மாநில அரசின் உரிமைகளில் தலையிடுகிறது என்பதுதான் என் கருத்து. இப்படி இந்த தார்மீகப் பிரச்சினை சீராக இருப்பதையும் மனதில் கொண்டு, சட்டப் பிரச்சினை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றியும் ஆராய வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதில் சட்டப் பிரச்சினை எந்த அளவுக்கு இருக்கிறது, மத்திய அரசின் தலையீட்டை எப்படி எப்படிக் கட்டுப் படுத்துவது என்பதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்பதைப் பற்றி ஆராய வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையின்மீது நான் பேசும்போது, இந்த அறிக்கையிலே முதன்முதலாக உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதாவது 'இன்றைய நிலையில் இந்தியா முழுவதும் நிலவுகின்ற பொருளாதார நிலை தமிழகத்தையும் பாதித்திருக்கிறது. தாழ்ந்துவிட்டிருக்கிறது. பணவீக்க சக்திகள் தலைதூக்கி நிற்கின்றன. நம்முடைய தமிழகத்தின் பொருளாதாரம் அகில இந்தியப் பொருளாதாரத்தோடு

பிணைந்து இருக்கிறது. அகில இந்தியப் பொருளாதாரம் நம்மைப் பாதிக்கும்" என்பதை முதன்முதலாக ஒரு மாநில அரசு இப்போதுதான் பட்ஜெட்டிலே கூறியிருக்கிறது என்று நினைக்கிறேன். இதற்கு முன்னாலேயும் இந்த ஆளுங் கட்சி ஆட்சியிலே இருந்தது. இப்போது திரும்பி வந்ததும் முதல் தடவையாகச் சொல்கிறது. இப்படிச் சொல்லும்போது, இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் படுகிறது என்றால், மத்திய அரசுக்குப் பொருளாதார நெருக்கடி இருக்கிறது, பணவீக்கம் இருக்கிறது, அதனால் தமிழ்நாடு பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆக மத்திய அரசின் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மத்திய அரசின் பண வீக்கத்தின் காரணமாகவும், தமிழ் நாடு மிகுந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றபோது, அதைப் பற்றி நம்முடைய மாநில அரசு தயங்கித்தயங்கிச் சொல்லும்போது, எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஏன் அதைப்பற்றி உறுதியாகச் சொல்லவில்லை. அடுத்த வாக்கியத்திலே விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், வளர்ச்சியை ஊக்குவிக்கவும் முயற்சிக்கிறது. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசு நினைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநில அரசு இதையெல்லாம் சரிப்படுத்த விரும்புகிறது? அப்படியானால் என்ன பொருள்? ஏற்கெனவே கோளாறு இருக்கிறது என்று தான் பொருள். இந்தக் கோளாறு ஏற்படுவதற்கு மத்திய அரசுதான் காரணம் என்ற வார்த்தையை ஏன் சொல்லக்கூடாது? அப்படிச் சொல்வதனால் என்ன விளைவு ஏற்பட்டுவிடும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நம் நாட்டிலே உள்ள பொருளாதார நெருக்கடி பற்றியும், பண வீக்கச் சக்திகளைப்பற்றியும் பொருளாதாரத் துறையிலே உள்ள பண்டிதர்கள், பண்டிதர்கள் பாஷையிலே என்ன பேசுகிறார்கள்? அதெல்லாம் பாமர மக்களுக்கு எப்படித் தெரியும்? ஏன் இதைப்பற்றி நான் சொல்கிறேன் என்றால், நம நாட்டிலே பண்டங்களின் விலைகள் ஏறிக்கொண்டே இருக்கின்றன. இதற்கு மாநிலங்கள்தான் காரணம் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பண்டிதர்கள் பாஷைகூட பழைய வார்த்தைகள் தான். இப்போது சொல்கின்றவர்கள்தான் மக்களுக்குப் புரிகிற மாதிரி சொல்கின்றார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தப் பொருளாதாரப் பதங்களைச் சாதாரண மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் பண்டங்களின் விலையுயர்வுக்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று நினைக்கிறார்கள். பொருளாதார



நெருக்கடி, பண வீக்க சக்தி என்ற வார்த்தைகளைச் சொல்லும்போது, புரிந்துகொள்ள முடியாது. அதைப்பற்றி நாம் விளக்கமாகச் சொல்ல வேண்டும். இந்த அரசு சொல்லாமல் விட்டதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து நிதி வரவேண்டியிருக்கிறது. இப்போது என்ன நிலைமை? இப்போது நிலைமை எப்படி இருக்கிறது? மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு 6 மாதங்கள் ஆகியிருக்கின்றன. எகனாமிக் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி அதனுடைய ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்திருக்கிறது. அது என்ன என்றால் தொழில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதுதான். தமிழ் நாட்டில் தொழில் அபிவிருத்தி முக்கியமாக ஏற்படவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதில் நியாயம் இருக்கிறது. அதற்கு என்ன நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது? மேல் அன்யூடிலைஸ்ட் கெபாசிடி இருக்கிறது. நம் நாட்டினுடைய மக்களின் உற்பத்தி செய்வதில் ஈடுபட முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதாவது உற்பத்தி செய்யும் கெபாசிடி எப்படி இருக்கிறது? 50 சதவிகிதத்தினர் அன்யூடிலைஸ்ட் கெபாசிடி உள்ளவர்களாக இருக்கிறார்கள். இது திட்டமிட்டே செய்யப்படுகிறது. தொழிலதிபர்கள் உற்பத்தியைச் செய்யாமல் விட்டதால், பற்றாக்குறை ஏற்படுகிறது. அப்படி நிலைமையை ஏற்படுத்தி இருப்பதால், விலைகள் அதிகமாகிவிட்டன. நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் கஷ்டப் படுகிறார்கள். இந்த அறிக்கையிலே அன்யூடிலைஸ்ட் கெபாசிடி 50 சதம் வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசியைப் பற்றிச் சொல்லும்போது, ஒரு வருடத்திலே ஹோல்சேல் பிரைசிலே மட்டும் 20 சத விகிதம் ஏறியிருக்கிறது.

**THIRU G. SWAMINATHAN :** When mandays are lost, then, naturally, it becomes unutilised capacity.

அங்கத்தினர் அவர்கள் 'அன்யூடிலைஸ்ட் கெபாசிடி' என்று சொல்லியிருக்கிறார்களே, அதைப்பற்றிச் சொல்கிறேன். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்வதற்கு முதலாளிகள் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால், அந்த 'அன்யூடிலைஸ்ட் கெபாசிடி' வந்திருக்கிறதா? அப்படி வந்திருக்கலாம் என்று குறிப்பிட்டிருப்பார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அதை 'அன்யூடிலைஸ்ட்' என்று சொல்லமாட்டார்கள். 'மேன் டேஸ் லாஸ்ட்' என்றுதான் போட்டிருப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு பேர்களும் வார்த்தைகள் பற்றி மாறிமாறிப் பேசுகிறார்கள். அவர்கள் இருவருக்கும் புரிகிற பாஷையிலேயே பேசிக்கொள்கிறார்கள் என்று சொல்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 50 சதவீதத்திற்குமேல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு, அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற மாதிரி, வேலை நிறுத்தம்தான் காரணம் என்று சொல்ல முடியாது. முதலாளிகள் உபயோகப்படுத்தாத நிலையைத்தான் 'அன்யூடிலைஸ்ட் கெபாசிடி' என்று சொல்ல வேண்டும். இது பொருளாதாரத்தில் உள்ள விஷயம். இந்த விஷயம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. ஏன் என்னை அவர்கள் சோதனை பண்ணுகிறார் என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, பல பேர்கள் ரெஜிஸ்டர் செய்தும் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள், படிக்காதவர்கள் எவ்வளவோ பேர்கள் பதிவு செய்து கொண்டிருக்கின்றார்கள். பாதி பேர்களுக்குமேல் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். நம் நாட்டிலே வறுமை இருந்து கொண்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசும் மாநில அரசும் திட்டமிட வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இந்த அவையிலே அதைப்பற்றிப் பேசினால் மட்டும் போதாது. பண வீக்கத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு பட்ஜெட் போட்டிருக்கிறது. 1,417 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுந்திருக்கிறது. ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வரிச்சுமையைக் குறைத்து நல்ல பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். அதற்காக சபாஷ் பட்டம் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் உண்மையான

(பிற்பகல் 4-20)

நிலை என்னவென்றால், நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்பே, 2 வாரங்களுக்கு முன்பே வரிகள் போடப்பட்டிருக்கின்றன. பெட்ரோல், டீசல் மேல் 2,000 கோடி ரூபாய், உரத்திற்கு 662 கோடி ரூபாய், ரெயில்வே பட்ஜெட்டில் 300 கோடி ரூபாய் அளவிற்குப் போடப்பட்டிருக்கின்றன. அது தவிர 'ஸ்டேன்டர்ட் கிளாத்' விலையை ஏற்றிவிட்டார்கள். சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கும் துணியின் விலையை உயர்த்தி விட்டார்கள். எல்லாம் சேர்த்து 3,100 கோடி ரூபாய் அளவிற்கு விலை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் எட்டு மாத பட்ஜெட்டில் 223 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்



கிறார்கள். பொதுவாக எல்லோரும் 223 கோடி ரூபாய்க்கு வரி என்றுதான் பேசுகிறார்கள். ஆனால் ஒரு வருஷத்திற்குக் கணக்குப் பார்த்தால், 445 கோடி ரூபாய் அளவிற்குப் போட்டிருக்கிறார்கள். அதுகூட இன்று மறைக்கப்படுகிறது. இப்படி, கிட்டத்தட்ட 3,500 கோடி ரூபாய் அளவிற்கு வரி போட்டாகிவிட்டது, இந்த பட்ஜெட்டில். ஆனால் மத்திய நிதியமைச்சருக்கு என்ன பெயர்? வரிச்சுமை போடாத மந்திரி என்று பெயர். இப்படி எதிர்மறை பிரச்சாரம் செய்யும் சக்திகள் நம்முடைய நாட்டிலே இருக்கின்றன. ஒரு பக்கத்திலே ஜனங்களிடமிருந்து வாங்கும் வரிப்பணம் மூலமாக அவர்கள் வாங்கும் சக்தி உறிஞ்சப்படுகிறது. துண்டு விழும் பட்ஜெட்டில் என்ன செய்யப்போகிறார்கள் ? வெளி நாடுகளிலிருந்து உதவி கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். அது கிடைக்க இருக்கிறதா ? உலக வங்கி, இன்டர் நேஷனல் மானிட்டரி பன்ட் போன்ற நிறுவனங்கள் போன ஆண்டு கொடுத்ததில் பாதிதான் கொடுப்போமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் 1400 கோடி ரூபாய் கொடுக்கப் போவதில்லை. இந்திய அரசு பொலிட்டிகல் லோன் வாங்கினார்கள். அதற்கு 6 சதவிகிதம்தான் வட்டி. 10 வருடங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். 11 ஆம் வருடத்திலிருந்து தவணை தந்தால் போதும். அப்படி அரசியல் நோக்கோடு லோன் கொடுத்தார்கள். அதற்கு அரசியல் நிபந்தனைகளைப் போட்டார்கள். அப்படியெல்லாம் லோன் வழங்கினார்கள். இப்போது அப்படிப்பட்ட லோன் கிடைக்காத நிலை இருக்கிறது. கமர்ஷியல் மார்க்கெட்டில் லோன் வாங்க வேண்டிய அளவிற்கு இருக்கிறது. அமெரிக்காவிடமிருந்து 15 சதவிகிதம் வட்டியில் வாங்கும் நிலைமை இருக்கிறது. 6 சதவிகிதம் வட்டியில் கிடைக்கும் கடன் தொகைக்கு, அதற்கான வட்டியையே கொடுக்க முடியாத அரசு கடன் கொடுத்த நாடுகளிடம் பிச்சை எடுக்கிறது. தவணையை ஒத்திப் போடுங்கள் என்று கேட்கிறது. உலக வங்கி 15 சதவிகிதம் வட்டியில் கடன் வாங்கிக்கொள் என்று சொல்லும்போது, 1,500 கோடி ரூபாய் அளவிற்கு நோட் அடிக்கப் போகிறார்கள். போன நிதி ஆண்டு, 1980 மார்ச்சில் கணக்கு எடுக்கும்போது, 2,100 கோடி ரூபாய் அளவிற்கு நோட்டார்கள். இந்த ஆண்டு 1,300 கோடி ரூபாய் என்று மக்களிடம் சொன்னார்னார்கள். இந்த ஆண்டு 1,400 கோடி ரூபாய் என்று சொல்லுகிறார்கள் ஆனால் 3,000 கோடி அளவிற்கு அடிக்கப் போகிறார்களென்று பொருளாதார நிபுணர்கள் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆக ஒரு ஆண்டில் ஜனங்கள் மீது 6,100 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சுமையைச் சுமத்துகிறார்கள். அதாவது, 3,100 கோடி ரூபாய் வரியும் 3,000 கோடி ரூபாய் நோட்டும் அச்சடிக்கிறார்கள்.

இப்படி 6,100 கோடி ரூபாய் அளவிற்கு வரிச்சுமையை ஏற்றும் இந்த பட்ஜெட் எவ்வளவு உறுதியோ அப்படி திரு. வெங்கட்ராமன் அவர்கள் பட்ஜெட் மூலமாக விலைவாசி உயரும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இங்கே மாநில பட்ஜெட் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மத்திய அரசு பட்ஜெட்டில் மிச்சம் இல்லாததால், மாநில அரசுக்கு ஒன்றுமில்லை என்று நிதிநிலை அறிக்கையில் எழுதியிருக்கிறார்கள். முதல் திட்டத்தில் 10.8 சதவிகிதம் அளவிற்குக் கிடைத்த மத்திய அரசின் உதவி, ஐந்தாவது திட்டத்தில் 4.1 சதவிகிதம் அளவிற்குக் குறைந்திருக்கிறது என்பதை தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காமல் புஸ்தகத்தில் எழுதினால் எப்படி? அதற்காகச் சொல்கிறேன்: இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஆபத்தானதொரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதைச் சமாளிக்கும் சக்தி அல்லது சீர்படுத்தும் சக்தி அரசுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. கடந்த 34 வருடங்களில் 31 வருடங்கள் இப்போது இருக்கும் கட்சிதான் ஆண்டிருக்கிறது. அந்தக் கட்சியின் கொள்கைதான் இந்திய நாட்டை இந்த அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட அரசுக்கு ஜன பலம் இருக்கிறதா என்றால் இல்லை. பார்லிமென்ட் தேர்தலுக்கு வாங்கிய வாக்குகளைவிட 9-லிருந்து 11 சதவிகிதம் குறைத்து ஒவ்வொரு மாநிலத்திலும் வாங்கியிருக்கிறார்கள், ராஜஸ்தான் மாநிலம் தவிர. உறுப்பினர்கள் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். இந்தியாவில் ஒன்பது மாநிலங்களிலும் மொத்த ஓட்டுகளில் 23 சதவிகிதத்திற்கு மேலே வாங்கவில்லை. 16-லிருந்து 23 சதவிகிதம் வரைதான் வாங்கியிருக்கிறார்கள். ஒன்பது மாநிலங்களில் இருக்கிற மொத்த ஓட்டுகளில் கால்வாசி ஆதரவுகூட பெறாத நிலையில் மத்திய அரசு இருக்கிறது. அதனிடம் சரியான பொருளாதாரக் கொள்கை இல்லை. அதன் தற்போதைய பொருளாதாரக் கொள்கை காரணமாக விலைவாசி ஏறுகிறது. இதனால் நம்முடைய மாநில அரசு 'விலைவாசி ஏறுவதற்கு நாங்கள் பொறுப்பல்ல, மத்திய அரசின் கொள்கைதான் பொறுப்பு' என்று சொல்லாமல் போனால், தங்கத்தின் விலை, வெங்காயத்தின் விலையைக்காட்டி வாக்குகள் பெற்றதுபோல்தான் நடக்கும். நீங்கள்தான் மக்களுக்குப் பக்கத்தில் இருக்கிறீர்கள். அவர்கள் ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறார்கள். இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லாமல், தவறான பிரச்சாரங்கள் நடந்தால், அதை மக்கள் நம்புவார்கள். அப்படிப் பட்ட ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விலைவாசி உயர்வு பற்றி



இப்போது எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். எனவே அது குறித்து அடிப்படையான மாற்றம் செய்வதற்கு முன்னாலே 10 அத்தியாவசியப் பொருள்களை• ஏகபோகமாக அரசு கொள்முதல் செய்து, கூட்டுறவு சொசைட்டிகள் மூலமும், ரீடெயிலர்ஸ் மூலமும் மக்களுக்குக் கொடுத்தால் தான், ஓரளவிற்கு விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியுமென்று எல்லோரும் சொல்கிறார்கள். ஹோல்சேல் வியாபாரத்தைத் தேசிய மயமாக்க வேண்டும். அதற்கு மத்திய அரசிடம் கொள்கை இருக்கிறதா? அது மட்டுமல்ல. அந்த வர்க்கத்திற்கு பேங்குகள் கடன் வசதி அளிக்கக்கூடாது. அந்த வர்க்கத்திற்குக் கடன் கொடுக்கும் பணம் உற்பத்திக்காகப் பயன்படுவதில்லை. ஏற்கெனவே உற்பத்தியான பொருள்களை வாங்கி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் சென்று, கொள்ளை லாபம் அடிக்கத்தான் பயன்படுகிறது. எனவே அவர்களுக்கு பேங்க் லோன் கொடுக்காதே என்று அரசு உத்தரவு போடுமா? போடாது. அவர்களுக்குத்தான் பேங்குகளில் அதிகமாகக் கடன் கொடுக்கிறார்கள். போட்டிப் பொருளாதாரம் இந்த நாட்டிலே இருக்கிறது. 20 ஆயிரம் கோடி, 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருக்குமென்று சொல்லுகிறார்கள். வரிக்கு டிமிக்கி கொடுப்பவர்கள் பற்றிக் கண்டுபிடிக்க நம்முடைய நாட்டிலே இருக்கிறவர்களால் முடியாமல் இங்கிலாந்திலிருந்து 'கல்டார்' என்ற நிபுணரைக் கூட்டி வந்தார்கள். அவர் 18,000 கோடி ரூபாய் அளவிற்குக் கள்ளப் பணம் புரள்கிறது என்று சொன்னார். அது இப்போது 28 அல்லது 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும். வெள்ளை மார்க்கெட்டைவிட அது அதிகமாக இருக்கிறது. இந்த அரசு அதைக் கட்டுப்படுத்துமா என்றால், செய்ய முடியவில்லை. திரும்பத் திரும்ப இடதுசாரி இயக்கங்கள், நோட்டுப் புழக்கத்தை வாபஸ் வாங்குவதன் மூலம் கள்ளப் பணத்தை 'செக்' பண்ணலாமென்று சொல்லும்போதும், யாரும் கேட்கவில்லை. காங்கிரஸ் அரசும் அதைச் செய்யவில்லை. நான் கூறுவதெல்லாம் தமிழக அரசு இந்த உண்மையை தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்பதுதான். எங்களுடைய கட்சி ஆட்சி செய்யும் மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் தெருவிலே போய்ச் சொல்கிறார்கள். எங்களுக்கு உள்ள அதிகாரத்தை வைத்து முடிந்ததைச் செய்கிறோம், நாங்கள் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் மாநில அரசுக்கு நிதி வசதிகள் குறைவாக இருக்கின்றன, அப்படிச் சட்டங்கள் நாட்டிலே இருக்கின்றன, அவற்றைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று சட்ட சபையில் சொல்லவில்லை, பார்லிமென்ட்டில் சொல்லவில்லை, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசவில்லை, தெருத் தெருவாகச் சென்று பேசுகிறார்

கள் மக்களிடத்திலே. இங்கே ஆளும் கட்சியினரும் அப்படி மக்களிடத்திலே தெருவிலே பேச வேண்டும். சட்டசபையிலே பேசிப் பிரயோசனமில்லை. தெருவிலே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியினர் புள்ளி விவரத்தோடு பேச வேண்டும். தெருவில் பிரச்சாரம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பழி இந்த அரசு மீதுதான் வரும்.

(பிற்பகல் 4.30)

ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் ஜனங்கள் ஆளும்கட்சியினர் பக்கம் இருக்கிறார்கள். ஜனங்களுக்கு ஐந்து ஆண்டுகள் சேவை செய்யப் போகிறது ஆளும் கட்சி. அதற்குத் தேவையான பணம் மாநிலத்திற்குக் கிடையாது. எல்லா அதிகாரங்களும், தேவையான பணங்களும் மத்திய அரசிடம்தான் குவிந்து கிடக்கின்றன. உதாரணத்திற்கு வேண்டுமானால் நான் ஒன்றை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இல்லையென்று ஏற்கெனவே சொன்னேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். எக்சைஸ் டியூட்டி என்றால் 60 சதவிகிதம் மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுக்கிறது. எக்சைஸ் டியூட்டி என்று சொல்லிவிட்டால், வருமானத்தில் 60 சதவிகிதம் அவர்கள் மாநிலங்களுக்குத் தர வேண்டும். அதற்காக வேண்டி மாநிலங்களுக்கு 60 சதவிகிதம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக சர்சார்ஜ் என்று போட்டு வரியை வசூலிக்கிறார்கள். அப்படிப் போட்டால், அவர்கள் சர்சார்ஜ் மூலம் வரக்கூடிய வருமானத்தை மாநிலங்களுக்குத் தர வேண்டியதில்லை. ஆகவே எக்சைஸ் வரியைக் குறைவாக வைத்துக்கொண்டு சர்சார்ஜ் வரியை மிக அதிகமாக வாங்குகிறார்கள். இப்படி சர்சார்ஜ் வரி மூலம் அவர்களுக்கு வரக்கூடிய வருவாய் 198 கோடி ரூபாய். இதில் ஒரு பைசாவைக் கூட அவர்கள் மாநிலங்களுக்குத் தருவது கிடையாது. இப்படி மாநிலங்களுக்கு வர வேண்டிய வருவாயைத் தடுக்கிறார்கள். அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது போல் இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிதாக சுகர் பேக்டரீஸ் துவங்குவதாக இருந்தாலும் சரி, இல்லை விஸ்தரிப்பதாக இருந்தாலும் சரி, எக்சைஸ் வரியில் கன்செஷன் தர வேண்டுமென்று மத்திய அரசு முன்பு சொல்லியிருந்தது. இப்போது மத்திய அரசு அந்தக் கன்செஷனை வாபஸ் வாங்கிக் கொண்டது. இன்றைக்கு ஓபன் மார்க்கெட்டில் சுகர் கிலோ எட்டு ரூபாய்க்கு விற்கிறது.



மென்பதற்காக எக்சைஸ் டியூட்டியில் கன்செஷன் அளிக்கப்பட்டிருந்தது. அந்த கன்செஷனைத்தான் மத்திய அரசு இப்போது வாபஸ் பெற்றிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், எந்த வரியாக இருந்தாலும் சரி, எல்லா விதமான வரிகளிலும் 75 சதவிகிதம் வரியை மத்திய அரசு மாநில அரசுகளுக்குத் தர வேண்டும். அதை ஏன் பட்ஜெட்டிலே வற்புறுத்திப் போடுவதற்கு நம்முடைய அரசு தயங்க வேண்டுமென்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பட்ஜெட்டிலே அதைக் கோடிட்டுக் காட்டி 75 சதவிகிதம் வேண்டுமென்று கேட்டிருக்க வேண்டும். அடிக்க கை ஓங்குகிறார்கள். ஆனால் அடிக்க மாட்டேன் என்கிறார்கள். நான் ஆளை அடிக்கச் சொல்லவில்லை. இந்த விஷயத்தில் சற்று தீவிரமாகச் செயல்படுங்கள் என்றுதான் இந்த அரசை நான் கேட்கிறேன். இன்றைக்கு கிட்டத்தட்ட எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம்தான் உள்ளன. இதை யாரும் மறுக்க முடியாது. மத்திய அரசிடமிருந்து நம்முடைய அரசு விவரங்களைக் கேட்க வேண்டும். ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும். எல்லா வருமானத்திலும் 75 சதவிகிதம் வருமானம் வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்க வேண்டும். மானோபலிஸ்டுகளை எல்லாம் கொழுக்க விட்டுவிட்டு சாதாரண ஏழை எளிய மக்களிடமிருந்து வரிகளை வசூலிப்பது சரியல்ல. ஏனென்றால் 1952 ஆம் ஆண்டு 82 கோடி ரூபாயாக இருந்த எக்சைஸ் டியூட்டி இன்றைய தினம், 2,000 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதிலிருந்து 60 சதவிகிதம்தான் மாநிலத்திற்குக் கொடுக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்டு சர்சார்ஜ் ஆக வருகின்ற வருமானம் முழுவதையும் மத்திய அரசே எடுத்துக் கொள்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் மாறவேண்டும். அடிப்படை மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இந்த அடிப்படை மாற்றம் ஏற்பட்டாலொழிய, விலைவாசி உயர்வைத் தடுக்க முடியாது. இந்த உண்மைகளையெல்லாம் இந்த அரசு மக்களிடம் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆளும் கட்சியினர் இப்போது வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருக்கலாம். பெரும்பான்மையான மக்கள் அவர்களை ஆதரித்திருக்கலாம். ஆனால் இன்னும் 4 மாதத்திற்குப் பிறகு மத்திய அரசின் மோசமான பொருளாதாரக் கொள்கை காரணமாக விலைவாசி ஏறிக்கொண்டே போனால், நமது மாநில மக்கள் மாநில அரசைத்தான் குறை சொல்வார்கள். நமது அரசைத்தான் பார்ப்பார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்களின் மத்திய அரசைப் பார்க்க மாட்டார்கள். இப்படி ஒரு பக்கத்தில் மத்திய அரசிடம் அதிகாரக் குவியல் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. மாநில அரசிடம் இருக்கிற குறைந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு நாம் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

அடுத்து, நம்முடைய அரசினுடைய விவசாயக் கடன் நிவாரண மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். 5 ஏக்கர் நிலத்திற்குக் கீழே உள்ளவர்களுக்குக் கடன் தள்ளுபடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லியிருப்பதை 'நஞ்சை நிலம்' என்று குறிப்பிட்டிருக்கலாம். புஞ்சை நிலம் என்று சொன்னால், அதில் 2 ஏக்கர் குறைந்து விடும். ஆகவே 5 ஏக்கருக்குக் கீழே நஞ்சை நிலம் உள்ளவர்களுக்குத் தள்ளுபடி என்று திட்டவட்டமாக அரசு சொல்ல வேண்டும். 5 முதல் 10 ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு ஒரு சலுகையும் இல்லை என்று இருக்க வேண்டாம். அவர்களுக்கும் ஒரு சிறு சலுகை கொடுக்கலாம். அதாவது அவர்களுக்கு முதலைத் தள்ளுபடி செய்ய வேண்டாம். வட்டி மட்டும் தள்ளுபடி என்று சொல்லி விடலாம். அவர்களுக்கு நிவாரணம் பெற வேண்டிய பகுதி விட்டுப் போவதால், இந்த நிவாரணத்தை அவர்களுக்கு அவசியம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, டிராக்டர்களைப் பொறுத்தவரை, ஒன்றிரண்டு உண்மைகளை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டிராக்டர் வாங்க பணத்தை வாங்கிவிட்டு, பெண்களுக்குக் கல்யாணத்தை ஜாம் ஜாம் என்று நடத்தியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து வரவேண்டிய பணம் முழுவதையும் கறாராக வசூல் செய்ய வேண்டும். பணம் வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தர மாட்டார்கள். மத்திய அரசு தந்தால் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் இந்த அரசு பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கவில்லை. பட்ஜெட்டில் புரொவைட் பண்ணிவிட்டாலும் சப்ளிமென்டரி பட்ஜெட்டில் கூட புரொவைட் பண்ணலாம். இந்த வருடத்திற்கு உள்ள அலாட்மென்ட் 60 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 60 கோடி ரூபாய் வராது என்று நினைக்கிறேன். ஆனாலும் மத்திய அரசிடம் கேட்கலாம். அவர்கள் தராவிட்டால் இந்த அரசு அதற்கான நிதியை புரொவைட் பண்ண வேண்டும். நமக்கு முன்னாலேயே இன்னொரு மாநிலம் அவர்களிடம் நிதி வேண்டுமென்று போயிருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு நிதியை கொடுக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்ப்போம். கேட்க வேண்டியது நம்முடைய கடமை. அவர்கள் தராவிட்டால், நம்முடைய பட்ஜெட்டில் புரொவைட் பண்ணலாம்.

அடுத்து, ஓய்வூதியம் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 60 வயதிற்கு மேலுள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்க இருக்கிறார்கள். 60 வயதிற்கு மேலுள்ள விவசாயத் தொழிலாளர்



கள் வேலை செய்ய முடியாவிட்டால், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இருக்கிறார்கள். 60 வயதிற்கு மேல் அனாதையாக இருப்பவர்களுக்கு என்று ஏன் போடுகிறார்கள்? 60 வயது வரை ஒரு விவசாயி கஷ்டப்பட்டுப் பாடுபட்டால் போதாதா. அதற்குப் பிறகு அவனுக்குத் தெம்பு இருக்குமா? அனாதையா என்று கேட்கிறார்கள். அது தேவையில்லை என்பது என் கருத்து. தைரியமாக, திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். 60 வயதிற்கு மேலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் உண்டு என்று சொல்ல வேண்டும்.

அடுத்து, மதுவிலக்குபற்றி ஒரு திட்டவட்டமான கொள்கைக்கு வர வேண்டும். 150 கோடி ரூபாய் வருமானத்தை விரயமாக்கக் கூடாது. அப்படி வரக்கூடிய வருமானத்தை விரயமாக்கி ஏதாவது பயனுண்டா என்றால், இல்லை என்றுதான் சொல்வேன். காரணம் அவன் தவறான கள்ளச் சாராயத்தைக் குடித்துவிட்டு உயிரை விடுகிறான். அவனுக்கும் நன்மை இல்லை. அரசுக்கும் நன்மை இல்லை. இதில் ஒரு திட்டவட்டமான கொள்கைக்கு அரசு வந்தால், நிதி வேண்டுமென்று மத்திய அரசிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை. விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்வதற்காக 60 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்கிறோம் அல்லவா, அதற்கும் நாம் மத்திய அரசிடம் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது. அதுபோல உடம்பு தெம்பு இருக்கிறதா, அனாதையா, விவசாயத் தொழிலாளியா என்றெல்லாம் பார்க்க வேண்டிய அவசியமும் இருக்காது. அவர்களுக்குத் தேவையான நிதியையும் நாம் இதிலிருந்து பெற முடியும். இதில் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்தால், இதிலிருந்து மக்களுக்குப் பெரிய நிவாரணம் அளிக்கப் போதுமான பணம் நமக்குக் கிடைக்கும். சரித்திரத்திலேயே செய்ய முடியாத ஒரு காரியம் இது. பிரச்சாரத்தின் மூலமும், போலீஸ் அதிகாரத்தின் மூலமும், சட்டத்தின் மூலமும் இந்தச் சமுதாயத்தை மதுப் பிரச்சினையிலிருந்து திருத்த முடியாது. மதுவிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது என்று தெரிந்த பிறகும், 150 கோடி ரூபாய் இழப்பு வருகிறது என்று தெரிந்த பிறகும், இதிலே இன்னும் ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுக்காமல் இருப்பது சரிதானா? ஆகவே அருள்கூர்ந்து மதுவிலக்கைக் கைவிட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, அண்ணாமலை யூனிவர்சிட்டி பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அண்ணாமலை யூனிவர்சிட்டியை தயவுசெய்து 'டேக் ஓவர்' பண்ணுங்கள். அண்ணாமலை யூனிவர்சிட்டி ஸ்டான்டர்டை கேரளா யூனிவர்சிட்டி ஏற்றுக்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்

கூட அந்தப் பல்கலைக் கழகம் பற்றிக் குறிப்பிட்டார். அந்த யூனிவர்சிட்டியில் உள்ள ஆசிரியர்கள் ஒரு நோட்டீஸ் வெளியிட்டிருக்கிறார்கள். கல்லூரியில் வேலை செய்கின்ற ஆசிரியர்களை, குறிப்பாக 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களைக்கூட இன்னும் நிரந்தரம் செய்யவில்லை. அவர்கள் தான் கல்லூரிக்கு வழிகாட்டிகள். பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்களுடைய நிலையே இந்தமாதிரி இருக்கிறது. இந்த அரசு டியூட்டர்களுக்கும் டெமான்ஸ்ட்டிரேட்டர்களுக்கும் 3 வருட சர்வீஸ் முடிந்திருந்தால், அசிஸ்டென்ட் புரபஸர் பதவி தரவேண்டுமென்று உத்தரவு போட்டு, 2 ஆண்டு ஆகிறது. இன்னும் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் உள்ளவர்கள் அதை அமுல்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல, புரமோஷன் கூட சீனியாரிட்டி அடிப்படையில் தரப்படுவதில்லை. இஷ்டப்படி கொடுக்கிறார்கள். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்கிறார்கள். அதிலும் பிரச்சினை இருக்கிறது. அதை யாராவது படித்துப் பார்த்தால், அதில் ஒரு பெரிய கோரிக்கை இருக்கிறது என்றோ, பிரச்சினை இருக்கிறது என்றோ சொல்ல மாட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இவற்றையெல்லாம் கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்தின்போது உறுப்பினர் பேசலாமே.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரு யோசனைக்காகத்தான் சொல்கிறேன்.

(பிற்பகல் 4-40)

இதைப்பற்றி அப்போது ஒருமுறை யோசிக்க வேண்டாம் என்றுதான் இப்போதே சொல்லிவிடுகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை இன்னும் தனியாரிடம் விட்டு வைப்பது சரியல்ல. இப்போது கோவையிலும் திருச்சியிலும் புதிதாகப் பல்கலைக் கழகங்கள் துவங்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் தமிழ்நாட்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை மட்டும் இன்னும் தனியாரிடமே விட்டு வைத்து அவர்கள் அதை வியாபாரம்போல் நடத்துகிறார்களோ என்ற வகையில் சந்தேகப்படுகிற நிலை இருக்கக் கூடாது; அதை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்து, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கருத்தை நான் ஏற்கெனவே நடைபெற்ற கூட்டத் தொடரிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். டிரக் கன்ட்ரோலை தனியாகப் பிரிக்க வேண்டும் என்று அப்போதே கேட்டேன். இப்போது இருக்கும் மருத்துவத் துறை டைரக்டரிடமே அதை விட்டுவைக்கக்கூடாது என்று நான்





மட்டுமல்ல, மத்திய அரசிலிருந்து வந்த ஏராளமான கமிஷன் ரிப்போர்ட்டுகள் கூறியிருக்கின்றன. ஏனென்றால் மருந்து எழுதிக் கொடுக்கிற டாக்டர் மருந்துகளை சரியாக விநியோகம் செய்கிறார்களா என்று கண்காணிக்க முடியாது, கண்காணிக்கக்கூடாது என்று அந்தக் கமிஷனின் ரிப்போர்ட்டுகள் கூறியிருக்கின்றன. மருந்து விநியோகத்தில் டாக்டர்கள் நிரம்ப ஏமாற்றுகிறார்கள். எனவே இந்தத் துறை தனியாக இருக்க வேண்டும். இப்படி 3, 4 கமிஷன்கள் சொல்லியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் பங்கு பெற்றிருந்த எஸ்டிமேட் கமிட்டியிலேகூட இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். நான் இதைப்பற்றி சென்ற கூட்டத் தொடரில் பேசும்போது, அப்போதிருந்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றுவதாகச் சொன்னார். வாக்குறுதியே கொடுத்தார். இப்போது புதிதாக அந்தத் துறைக்கு அமைச்சர் வந்திருக்கிறார். அவர் அந்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஒரு படியாவது எடுத்து வைத்திருக்கிறாரா என்றும் எனக்குத் தெரியவில்லை.

அதோடு மதுரையில் உள்ள மெடிகல் காலேஜில் டி.பார்ம். படிக்கும் மாணவர்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். காரணம் 1979-80 ஆம் ஆண்டு—அகடமிக் இயருக்கு—பள்ளிக்கூட மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கேட்கப்பட்டு, இந்தக் கோர்ஸை ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் என்ன நடந்தது என்றால், இந்த கோர்ஸ் 1979 செப்டம்பரில்தான் தொடங்கப்பட்டது. மதுரையிலிருந்து அது திருச்சிக்கு மாற்றப்பட்டது. இப்போது மார்ச்சு மாதத்தில் வெகேஷன் விட்டு விட்டார்கள். மூன்று வருஷத்தில் படிக்க வேண்டுமென்ற நிலையை இப்போது ஏற்படுத்திவிட்டார்கள். அது 2 வருஷத்தில் படிக்க வேண்டிய படிப்பு. ஆனால் 1979 செப்டம்பரில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் 3 வருஷம் படித்தாக வேண்டும் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதிலும் ஒரு புதிய சிக்கல் என்னவென்றால் புதிதாக தொடங்கப்பட்ட ஹையர் செகண்டரி வகுப்புகள் படித்த—பிளஸ் 2 படிப்பு படித்த மாணவர்கள் ஒரு வருஷம் படித்தாலே அவர்கள் டி. பார்ம். பெற்றுவிடுவார்கள். இதன் காரணமாக என்ன ஏற்படுகிறது? 3 வருஷப் படிப்பு படிக்கிற மாணவர்கள் ஒரு வருஷம் ஜூனியராகி விடுகிறார்கள். ஒரு வருஷம் பின்னாலே வந்து சேர்ந்த ஹையர் செகண்டரி மாணவர்கள் ஒரு வருஷம் சீனியராகி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக 100 மாணவர்கள் 24 ஆம்

தேதி முதல் வேலைநிறுத்தம் மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கூடிப் பேசி ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல யோசனையைச் சொல்ல விரும்பு கிறேன். முதல் வருஷப் படிப்பு பரிட்சை இருக்கிறதே அதை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடத்திவிடுங்கள். அடுத்து வரும் நவம்பர் மாதத்தில் தொடங்கி 1981 ஜூன் மாதத்தில்—அதாவது 7 மாத காலத்தில்—2-வது வருஷப் படிப்பு பரிட்சையை முடித்துவிடுங்கள். ஒரே அகடமிக் இயரில் 2 வருஷப் படிப்பையும் முடித்துவிடுங்கள். இதற்கு புதிதாக வாத்தியார்கள் தேவையில்லை. எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு இனி 4½ ஆண்டுகள்தான், 5 ஆண்டு தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த முதலாண்டு ஆசிரியர்கள் எல்லாம் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை உபயோகப்படுத்தி இந்த மாணவர்களுக்கு ஒரே வருஷத்தில் 2 வருஷ கோர்சையும் முடிக்க முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்).

அடுத்து, கால்நடை மருத்துவத்துறைபற்றியும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் 3,000 லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் இருக் கிறார்கள். இன்னொரு பக்கம் 1,500 கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார் கள். இந்த இரண்டு வர்க்கத்தினரும் அரசாங்கத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து நான் ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தமிழ் நாட்டில் உள்ள 374 பஞ்சாயத்து யூனியன்களிலும் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக—எக்ஸ் டன்ஷன் ஆபீசர்களாக—லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களையே நியமித்து, அந்த இடங்களைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டி சொல்லியிருக்கிறது. இந்த எக்ஸ்டென்ஷன் வேலைக்கு லைவ்ஸ்டாக் இன்ஸ் பெக்டர்களே போதும் என்று அந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு கால்நடை மருத்துவர்கள்—சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன்ஸ்—தங்களுக்குச் சரியான வேலை கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, தங்களை அந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டும் என்று போராடி வருகிறார் கள். அப்படி இதுவரை 110 அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன. தற்போது 115 காலியிடங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர் களையே அந்தப் பதவிக்கு நியமிப்பதாக ஒரு மந்திரியும் கால்நடை மருத்துவர்



களை—சிவில் அசிஸ்டென்ட் சர்ஜன்களை—நியமிப்பதாக இன்னொரு மந்திரியும் வாக்குறுதி கொடுத்து, அதில் பெரிய கோளாறு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 3,000 லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களும், 1,500 சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன்களும் மோதிக் கொள்கிற அளவுக்கு இந்த நாட்டு அரசியல் காரணமாக இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளை நிருவகிக்க தயவு செய்து அரசாங்கம் மக்கள் கமிட்டிகளைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்போது அங்கே என்ன முறையில் காரியம் நடை பெறுகிறது என்றால், அந்தக் கடைகளுக்கு பொருள்களை அலாட் செய்த உடனே அவர்கள் சரக்கை எடுக்க மாட்டேன் என்கிறார்கள். சரக்கை விநியோகம் செய்வதற்கு இன்னும் 5, 10 நாட்கள் இருக்கும்போதுதான், அந்தக் கடைக்காரர்கள் போய் சரக்கை எடுத்து வருகிறார்கள். அந்தக் கடை களில் சரக்கு வாங்க வேண்டியவர்கள் அங்கே போய் கேட்கும்போது, அந்தச் சமயத்தில் சாமான் கிடைக்காத காரணத்தால், வேறு எங்காவது சென்று வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இதன் காரணமாக ஒரு கடைக்கு 100 மூட்டை வந்தால் 20 மூட்டைதான் இறுதியில் விநியோகம் செய்யப்படு கிறது. எஞ்சியிருக்கும் 80 மூட்டைகளும் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படு கிறது என்று பகிரங்கமாகவே பேசப்படுகிறது. எனவே, இந்த நிலைமையைத் தடுக்க, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளுக்கு மக்கள் கமிட்டிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், குரோம் லெதர் பேக்டரியைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லவேண்டும். அந்தத் தொழிற்சாலை நூற்றுக்கணக்கான பேருக்கு வேலை கொடுக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் இருக்கும் மெஷின்கள் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாடர்ன் மெசினரி, நிறைய லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் மெசின்கள். ஆனால் அங்கே என்ன விவகாரம் நடந்துவிட்டது என்றால், ஒரு 8 கோடி ரூபாய்க்கான ஆர்டருக்கு ஆசைப்பட்டு அந்த நிருவாகத்தினர் ஒரே வருஷத்தில் 13 கோடி ரூபாய்க்கு தங்களின் பொருள் களை ஏற்றுமதி செய்தார்கள். இதன் விளைவாகத் தரத்தைக் குறைத்து ஏற்றுமதி செய்துவிட்டார்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் அதை அனைத்தை யுமே ரிஜெக்ட் செய்து விட்டார்கள். அந்தச் சரக்கையெல்லாம் எப்படி எடுப்பது என்று தெரியாமல் மானேஜ்மெண்ட்டில் திணறிக் கொண்டிருக்கிறார் கள். எனவே மாநில அரசு மத்திய அரசிடம் சொல்லி 'டேக்-ஓவர்' செய்யச்

சொல்ல வேண்டும். அப்படி அரசாங்கமே அதை ஏற்று நடத்தினால், அதிகமான லாபம் கிடைக்கும். எல்லாம் புது மாதிரியான மிஷின்கள். எனவே அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன. இருந்தாலும் சீக்கிரமாக முடித்துக்கொள்கிறேன். இறுதியாகத் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் திராவிட முன்னேற்ற கழகத்தை இந்தியாவில் ஜனநாயக அமைப்பின் ஒரு பகுதியாகத்தான் கருதுகிறோம். அது எந்த வகையிலும் நாட்டில் சர்வாதிகார சக்திக்கு, சர்வாதிகார இயக்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல் இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஆனால் துரதிருஷ்டவசமாக எப்படியோ இப்போது ஒரு சேர்க்கை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் கடந்த தேர்தலில் அவர்கள் தோற்றதற்கு உண்மையான காரணம் என்ன என்பதைப் பார்ப்பதற்குப் பதில் வேறு பாதையில் போனால் அதன் காரணமாக தமிழ் நாட்டிற்கும், தமிழ் நாட்டில் உள்ள மக்களுக்கும்தான் நஷ்டம் ஏற்படும். இந்தியாவில் 8 மாநிலங்கள் மீண்டும் சர்வாதிகாரத்தின் கைக்குக் கிடைத்திருக்கும்போது, 9-வது மாநிலமான தமிழ் நாடு மாநிலம் மட்டும்தான் சர்வாதிகார அலை வீச்சுக்கு எதிராக, மக்கள் அலை வீச்சுக்குச் சாதகமாக தன் தீர்ப்பை அளித்திருக்கிறது. இன்றைய தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று குரல் கொடுக்கும் மாநிலமாக தமிழ் நாடு அமைந்திருக்கிறது. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் தோல்விக்கு யார் காரணம் என்று ஆராயும்போது, பார்ப்பனர்கள்தான் காரணம் என்று மீண்டுமொருமுறை தவறு செய்வது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : தி. மு. க. வின் தோல்விக்குக் காரணம் பார்ப்பனர்கள் என்று எப்போதும் எங்கள் கட்சி கூறவில்லை என்பதைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இப்படிப் பட்ட கருத்தைச் சொல்லி எங்கள் கழகத்தின் மீது பார்ப்பனர் சமுதாயத்திற்கு வெறுப்பைத் தேடித்தரும் வேலைகளில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : அப்படிச் சொன்னால், நான் அதை வரவேற்கிறேன். ஆனால் 4, 5 நாட்களுக்கு முன்னால் "எங்கள் கட்சியிலேயே பார்ப்பன ஆதிக்கம்" என்று எழுதியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





திரு. ஆர். டி. சீத்தாபதி : பார்ப்பனர் ஆதிக்கம் என்று சொல்லவில்லை. இங்கே பேசப்படும் கருத்துக்கள் நாட்டு மக்களுக்குத் தவறாகப் போய்ச் சேரக்கூடாது என்றுதான் இதைச் சொல்ல விரும்புகிறேன். பார்ப்பனர் ஆதிக்கம் என்று நாங்கள் சொல்லவில்லை. எங்கள் கட்சியிலும் பார்ப்பனர்கள் கழகத்தின் பொறுப்பில் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன் : இரண்டு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள், அதுதான் சிக்கலை உருவாக்குகிறது. ஒரு பக்கத்தில் எங்கள் கட்சியில் பிராமணர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குப் பதவிப் பொறுப்புகளும் இருக்கின்றன என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கத்திலே சி. பி. ஐ. என்பது பிராமணர்கள் அல்லாதவர் இயக்கம். ஆனால் சி. பி. எம். என்பது பிராமணர்கள் இயக்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. அண்ணாதுரை அவர்கள் பிராமணர்கள் எதிர்ப்பைப் பேசி தமிழ் நாட்டு அரசில் கணிசமான செல்வாக்கை இழக்க வேண்டி ஏற்பட்டதைப்போல், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வி காரணமாக அந்தப் பாதையில் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சி. பி. ஐ. பற்றியும், சி.பி.எம். பற்றியும் எங்கள் கட்சித் தலைவர் 'பிராமணர், பிராமணர் அல்லாதார்' என்பதற்காகக் குறிப்பிடவில்லை. பிற்படுத்தப்பட்ட சமுதாயம் புறக்கணிக்கப்பட்டபோது, அது குறித்து அரசாங்கம் ஒரு உத்தரவு வெளியிட்டபோது, அந்தச் சமுதாயம் அழிக்கப்பட இருந்தபோது, அதற்காகக் குரல் கொடுத்தது சி. பி. ஐ. என்றும், குரல் கொடுக்காமல் இருந்தது சி. பி. எம். என்றும் குறிப்பிட்டாரே தவிர, அவர் எங்கேயும் ஜாதியைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : அதைத்தான் நான் சொல்லுகிறேன். அந்தச் சமயத்தில் சி. பி. ஐ. குரல் கொடுத்ததற்குக் காரணம் அங்கே இருப்பவர்கள் பிராமணர் அல்லாதவர்கள் என்றும், சி. பி. எம். குரல் கொடுக்காததற்குக் காரணம் அங்கே இருப்பவர்கள் பிராமணர்கள் என்றும் அவர்களெல்லாம் 'அட்வான்ஸ்டு கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் என்றும் எழுதினார். இதையெல்லாம் தமிழ் நாட்டில் இருப்பவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று கருதுவது சரியல்ல. நான் இதைச் சொல்லுவதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நன்மைக்காகத்தான். நானே ஒரு அப்பிராமணன். இருந்தாலும் நான் பிராமணர்களுக்காக வாதாடுகிறேன். தி. மு. க. வினர் இப்படிப் பேசுவதாலும் எழுதுவதாலும் பிராமணர்கள் கெட்டுப் போய்விடப் போவதில்லை. அவர்கள் கட்சிதான் கெட்டுப் போய்விடும். எனவே தேர்தல்

நல்லசிவன் அவர்கள் சொன்னதைப் போலத் தெருவிலே பேசப் போகிறோமா என்பது ஆளும் கட்சிக்காரர்கள் செய்துகொள்ள வேண்டிய முடிவு. அதைப் பற்றி நான் சொல்லத் தயாராக இல்லை.

நாம் எத்தனையோ திட்டங்களைப் போட்டும், அத்தனை திட்டங்களும் வெற்றி பெறாமல் தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு திட்டத்தை என்ன காரணங்களுக்காகப் போடுகிறார்கள் என்பதைப் பற்றி விளக்குவதற்காக "அப்ஜெக்டிவ்ஸ்" என்று எழுதி வைக்கிறார்கள். கடந்த 5 ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அந்த "அப்ஜெக்டிவ்ஸ்" என்னவென்று பார்த்தால், ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே வைத்திருந்த கொள்கை, "இந்த நாட்டிலே இருக்கிற பொருளாதாரச் சீரழிவை நிறுத்துவதற்காக" என்று எழுதப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கிறபோது, அவர்களுடைய கொள்கை "Rapid increase in the national income to raise the standard of living of the people." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தைப் போடுகிறபோது, அவர்களுடைய அப்ஜெக்டிவ் "To increase the national income by 5 per cent" என்று இருந்தது. நான்காவது திட்டத்தைப் போடுகிறபோது "Economic growth with stability and social justice" என்று சொன்னார்கள். ஐந்தாவது திட்டத்தைப் போடுகிற போது "Removal of poverty" என்று போட்டார்கள் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் டில்லியிலே பேசுகிறபோது, ஆறாவது திட்டத்தின் குறிக்கோளைப்பற்றிச் சொன்னார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன சொன்னார்களோ அதையே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள் என்று சொன்னார்கள். அதாவது "இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஐந்து சதவிகிதம் உயர்த்துவதற்காக" ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிற கோட்பாடு சரியாக இல்லை என்பது கண்கூடு.

பொதுவாக, "பெர்ஸ்பெக்டிவ் பிளானிங்" (Perspective Planning) என்ற அளவிலே இருக்கிற பல நாடுகள் வெற்றி பெறாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இந்தியாவில் மட்டுமல்ல, பாகிஸ்தானிலும் இந்த மாதிரித் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். பர்மா நாட்டிலும் போட்டிருக்கிறார்கள். இந்தோனேசியாவிலும் திட்டம் போட்டிருக்கிறார்கள். கானடா நாட்டிலும் திட்டம் போட்டிருக்கிறார்கள். எந்தெந்த நாடுகளில் இந்த மாதிரியான திட்டங்கள் போடப்பட்டனவோ அந்த நாடுகள் எல்லாம்





நிச்சயமாக இதில் வெற்றி பெறவில்லை. ஒரு சில நாடுகள் மட்டும் வெற்றி பெற்றிருக்கின்றன. அதற்காக திட்டம் போட வேண்டாமென்று நான் சொல்லவில்லை. சிங்கப்பூர் நாட்டிலே திட்டம் இருக்கிறது. ஜப்பானிய நாட்டிலே திட்டம் இருக்கிறது. யுகோஸ்லோவியா நாட்டில் திட்டம் இருக்கிறது. அமெரிக்க நாட்டிலே திட்டம் இருக்கிறது. பிரிட்டன் நாட்டில் திட்டம் இருக்கிறது. ஃபிரான்ஸ் நாட்டிலே திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்த நாடுகளில் எல்லாம் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆகவே திட்டத்தை எப்படிப் போடுவது என்பதிலேதான் பெரிய மாறுபாடு இருக்கிறது. சிங்கப்பூர் நாட்டுத் திட்டம் வெற்றியடைந்தது என்றால், அதற்குக் காரணம், அந்த நாட்டினுடைய முதல் திட்டத்திலிருந்து கடைசி திட்டம் வரையிலும் அவர்கள் வைத்திருக்கிற குறிக்கோள், "எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது" என்பதாகும். ஜப்பான் திட்டத்திலும், எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பது ஒன்றுதான் குறிக்கோள். எந்தெந்த திட்டங்களில் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பது என்று குறிக்கோள் வைத்திருக்கிறார்களோ அந்தத் திட்டங்கள் எல்லாம் வெற்றியடைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே மாநிலத் திட்டமாக இருந்தாலும் சரி, மத்திய திட்டமாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற குறிக்கோள் உடைய திட்டமாக இருந்தால், நிச்சயமாக நாமும் வெற்றி பெற முடியும்; தேசிய பொருளாதாரத்தையும் வளப்படுத்த முடியும். அண்மையிலே சென்னைக்கு வந்திருந்த டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டத்தைப் போடலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

யுகோஸ்லோவியா திட்டத்தைப் பார்த்தால், ஒரே குறிக்கோளை வைத்து திட்டத்தைத் தயாரிக்கிறார்கள். ஆனால் ருஷ்ய மாடல், இந்திய மாடல் திட்டத்தைப் பார்த்தால், ஒவ்வொன்றுக்கும் ஒரு குறியீடு வைத்து திட்டத்தைத் தயாரிக்கிறார்கள். ஒவ்வொரு குறியீடு வைத்துத் திட்டத்தைப் போடுவதன் காரணமாகத்தான் திட்டம் வெற்றி அடையாமல் போய்விடுகிறது. ஐந்தாண்டுக் காலத்திற்குத் திட்டம் போடுகிறோம் என்றால், அதில் பின்னால் வரக்கூடிய பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு போட வேண்டும். திட்டத்தை முடிவு செய்யும்போது, மின்சாரம் சரியாக வராவிட்டால் என்ன செய்வது, மின்சாரத்தைத் தயாரிக்க வராவிட்டால் என்ன செய்வது, அசாமில் பிரச்சினைகள் ஏற்பட்டு அங்கிருந்து எண்ணெய் வராவிட்டால் என்ன செய்வது, வெளிநாட்டிலிருந்து வரும் பெட்ரோலியம் பொருள்களின் விலை அதிகமாகிவிட்டால் என்ன செய்வது, உள்நாட்டில் தேசியமயமாக்கப்பட்ட

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1980 ஜூலை 8

பிறகு சில பொருள்கள் கிடைக்காமல் போனால் என்ன செய்வது போன்ற பல்வேறு விஷயங்களையும் கருத்தில் கொண்டு திட்டத்தை முடிவு செய்ய வேண்டும். அப்படி நாம் திட்டத்தைப் போடுவதில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டுவிட்ட பிறகு, அதற்கு அடுத்த ஆண்டு அல்லது 6 மாதங்கள் கழித்து ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டு அது அகில இந்தியப் பிரச்சினையாக உருவாகி திட்டம் வெற்றி அடையாமல் போகவும் அது காரணமாக அமைகிறது. மத்திய அரசினுடைய திட்டங்களும் டீட்டெய்ல்ட் திட்டமாக இல்லாமல், டி-சென்ட்ரலைசேஷன் முறையில், மாநில அளவில் அதிகத் திட்டங்களைப் போடவேண்டும்.

(பிற்பகல் 5-00)

மாநில திட்டக் கமிஷன் என்று வைத்திருக்கிறார்கள். மத்தியிலே ஒரு திட்டக் கமிஷன் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்ன திட்டம் வேண்டுமென்று அவர்கள் வரையறுக்கிறார்கள். "பெர்ஸ்பெக்டிவ் பிளானிங்" என்று ஒன்று போட்டிருக்கிறோம். 1971-லே இருந்து 1984-ம் வருடம் வரைக்கும் ஒரு பெர்ஸ்பெக்டிவ் பிளான் போட்டிருக்கிறோம். ஆனால் திட்டத்தை எடுத்துக் கொண்டு மத்திய அரசாங்கத்திற்குச் சென்றால் நிலைமை எப்படி இருக்கிறது? திட்டத்தைப்பற்றி அவர்கள் என்ன சொல்கின்றார்களோ அதைத் தான் நாம் கேட்க வேண்டியிருக்கிறதே தவிர, மாநில அளவிலே திட்டங்களைப் போட வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், நாட்டினுடைய திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமென்றால், திட்டம் ஒரு பரவலான திட்டமாக இருக்க வேண்டும். மாநிலம் போடுகின்ற திட்டத்திற்கு மத்திய அரசு ஒத்துழைப்பு தந்து ஆதரவு தருவதாக இருந்தால் தான், ஒவ்வொரு மாநிலமும் ஓரளவுக்கு மத்திய அரசினுடைய கைடன்ஸ் பெற்று தங்களுடைய நிலைமைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு விதமான திட்டம் தீட்டி அதை நிறைவேற்ற முடியும். அப்படி நிறைவேற்றுவதன் மூலம்தான் மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும். அப்போதுதான் ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமான திட்டத்தைப் போட முடியும். தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில், விவசாயத்தைப் பொறுத்துத் திட்டமிடலாம். அதேமாதிரி இன்னொரு மாநிலத்தில் உள்ளவர்கள் இன்டஸ்ட்ரீஸ் வளர்ச்சிக்கு என்று அதிகமாக ஒதுக்கீடு செய்யலாம். ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமான ஒதுக்கீடுகள் செய்வதன் மூலமாக, இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சி நல்லவிதமாக அமையும். அதை நம்முடைய அரசு, மத்திய அரசிடம் எடுத்துச் சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று என்னுடைய கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன்.



1980 ஜூலை 8] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அடுத்தபடி, பிளான் பன்ட்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசிலிருந்து வருகின்ற பணம் குறைந்து கொண்டே வருகிறது என்ற ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஏன் குறைந்துகொண்டே வருகிறது என்று பார்க்கின்றபோது, காட்கில் பார்முலா என்ற ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டு, எவ்விதமான திட்டங்களுக்கு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள். இது ஏதோ நிதிக் கமிஷன் போல் எந்த ஒரு வரைமுறையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் வரைமுறையெல்லாம்,

90 per cent on the basis of population, 10 per cent on the basis of per capita income, 10 per cent on the basis of tax efforts, **10 per cent on the basis of major power and irrigation projects and** 10 per cent on the basis of any specialities in that particular State . . . .

என்றெல்லாம் காட்கில் பார்முலா வைத்திருக்கிறார்கள். இந்த காட்கில் பார்முலா இருக்கின்ற வரையிலே அவர்கள் முடிவு செய்கின்றபடிதான் நம் மத்திய அரசு கொடுக்குமே தவிர வேறல்ல. அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அரசு ஏதாவது செய்ய முடியுமா என்று முயற்சிக்க வேண்டும்.

என்னுடைய ஞாபகம் சென்ற முறை என். டி. சி. கூட்டப்பட்டபோது இதைப்பற்றிய பிரச்சினை ஏற்பட்டு, மாநிலங்கள் இதைப்பற்றிப் பேச வேண்டும், அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும் என்ற கருத்தும் பேசப்பட்டது. அதற்கு சப்-கமிட்டீஸ் போட்டார்கள் என்று கருதுகிறேன். அது பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாநிலங்கள் பேசவேண்டுமென்று சொன்னால், மாநிலங்கள் பேசுவதற்கான வாய்ப்பு மத்தியிலே இல்லை என்ற நிலைமைதான் இப்போது இருந்து வருகிறது. மாநில அரசு பேசவேண்டுமென்றால், என். டி. சி. என்று இருக்கிறது. நேஷனல் டெவலெப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போகிறார்கள். அது எப்போதாவது 2, 3 மாதத்திற்கு ஒருமுறை நடக்கிறது. கூட்டம் கூடிப் பேசுவதே ஏதாவது ஒரு நாள், இரண்டு நாட்கள்தான். தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெறுவதில்லை. அப்புறம் கவர்னர்ஸ் கான்பரன்ஸ் என்று ஒரு மகாநாடு கூட்டுகிறார்கள். மாநிலங்களில் இருக்கின்ற ஆளுநர்கள் அங்கே கூடுகிறார்கள். அடுத்து சீப் செக்ரட்டரீஸ் கான்பரன்ஸ் நடக்கிறது. அதுவும் எப்போதாவது ஒரு சமயம் மகாநாடாக நடக்கிறது. எஜுகேஷன் கான்பரன்ஸ் என்று

தோல்விக்கு உண்மையான சமுதாய, பொருளாதார அரசியல் அடிப்படையில் காரணங்கள் ஆராய்வதற்குப் பதில் யார்மீதுள்ள கோபத்திலோ இவ்வாறு ஒரு பிரிவினரைக் காரணம் காட்டுவது சரியல்ல என்று சொல்லிக் கொண்டு, அது தமிழ் நாட்டின் ஜனநாயகம் வலுப்பெற உதவியாக இருக்காது என்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், மாநிலப் பொருளாதாரச் சங்கடங்களுக்கு மத்திய அரசு எப்படிப் பொறுப்பாகிறது என்பதைப் பற்றித் தெளிவுபட இங்கே எடுத்துச் சொன்னார்கள். நானும் அந்தக் கருத்தையொட்டித்தான் என்னுடைய பேச்சை ஆரம்பிக்கலாம் என்று நினைத்தேன். இந்தப் பிரச்சினைபற்றி அவர் நீண்ட நேரம் விளக்கியிருப்பதால், நான் ஓரிரு வார்த்தைகளில் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

மத்திய அரசினுடைய திட்டங்களின் காரணமாக கடந்த 30 ஆண்டுக் காலமாக இந்தியப் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். ஒரு சிறிய புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால், இது தெளிவாகத் தெரியும். 1952 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரை இந்த நாட்டினுடைய பொருளாதார உற்பத்தி (கிராஸ் நேஷனல் புராடெக்ட்) எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று பார்த்தால் 1.5 சதவிகிதம்தான் வளர்ந்திருக்கிறது. 1965 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரையில் இந்த வளர்ச்சி எந்த அளவுக்கு இருக்கிறதென்று பார்த்தால், 0.5 சதவீதம்தான் வளர்ந்திருக்கிறது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம்.

1979—80 ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலையைப்பற்றிப் பேசும்போது திரு. வெங்கட்ராமன் அவர்கள், இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் மிகவும் சங்கடமான நிலைமையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இந்திய நாட்டினுடைய 'கிராஸ் நேஷனல் புராடக்ட்' ஒவ்வொரு ஆண்டிலும் 3 சதவீதம் குறைந்து விட்டது என்றும், இந்திய நாட்டில் விவசாய வளர்ச்சி ஒவ்வொரு ஆண்டுக்கும் 10 பாயின்ட் குறைந்திருக்கிறது என்றும் இந்திய நாட்டில் தொழில் உற்பத்தி ஒரு சதவீதம் குறைந்திருக்கிறது என்றும் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலே மட்டும் 20 சதவீத அளவிற்கு இந்த நாட்டில் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதை திரு. வெங்கட்ராமன் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி—திரு. வெங்கட்ராமன் அவர்கள்



தன்னுடைய அறிக்கையிலே, எதிர்காலத்திலே இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்று சொல்லியிருந்தாலும்கூட—இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் பொருளாதாரம் சீரழிந்து போகுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தியப் பொருளாதாரம் சீரழிந்திருக்கிறது என்பதை அவரையும் என்னையும் போலவே எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். இந்தியப் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா அல்லது கீழே போயிருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த இரண்டாண்டுக்குள்ளாக அது கீழே போய்விட்டது என்று தெரிவித்தார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளைத் தவிர, கடந்த 30 ஆண்டுகளில் மத்திய அரசில் இருந்தது காங்கிரஸ் கட்சிதான். நாட்டில் உள்ள ஏழ்மை நிலை ஆண்டுக்காண்டு, திட்டத்திற்குத் திட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துப் பார்த்தால், அது திட்டத்திற்குத் திட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்கும்போது பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் போய்க் கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். விலைவாசியைப் பார்க்கிறபோது, அது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவதைப் பார்க்கிறோம்.

என்னுடைய நண்பர் திரு. பிலுமோடி அவர்கள் பாராளுமன்றத்தில் கேட்ட ஒரு கேள்வியை நினைவுபடுத்த விரும்புகிறேன். வறுமை எல்லைக் கோட்டிற்கும் கீழே எத்தனை சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள் என்ற பேச்சு வந்தபோது, முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 10 சதவீதம் இருந்தார்கள் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 20 சதவீதம் பேர் இருந்தார்கள் என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 30 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே போய்விட்டார்கள் என்றும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 40 சதவீதம் பேர் என்றும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 50 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வருகிறார்கள் என்றும் சொன்னபோது, " இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் வேண்டும், நாட்டிலுள்ள எல்லோரும் வறுமைக் கோட்டிற்குக் கீழே போவதற்கு ? " என்ற கேள்வியைக் கேட்டார். அந்த முறையிலே இந்தியாவின் பொருளாதார நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத்தில் விலைவாசி உயர்ந்து ஓரளவு சீரழிவு ஏற்பட்டால், அதற்கு முக்கிய காரணம் மத்திய அரசினுடைய திட்டங்கள்தான் என்பதை நாம் உறுதியாகச் சொல்லலாம். இதை நாம் சட்டமன்றத்திலே பேசப் போகிறோமா, பாராளுமன்றத்திலே பேசப் போகிறோமோ, அல்லது திரு.

எப்போதாவது ஒரு மகாநாடு போடுகிறார்கள். பொதுவாக தொடர்ந்து மாநில-மத்திய உறவுகளைப் பற்றியோ, மத்திய-மாநிலப் பிரச்சினைகளைப் பற்றியோ பேச வாய்ப்புகள் உண்டாக வேண்டும். மாநில அளவிலே பேச, நம்முடைய அரசியல் சட்டத்திலே சொன்னதுபோல், இண்டர்-ஸ்டேட் கவுன்சில் ஏற்படுத்தியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலே கூட ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறோம். இந்தக் கருத்தை நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, இதற்கு முன்னாலே வங்க மாநிலத்திலே சொல்லியிருக்கிறார்கள், கேரளா மாநிலத்திலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலமும் மீண்டும் அதைப் பற்றிப் பேசி அதற்கு முடிவு செய்வதற்கு ஒரு வழிவகை காட்ட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பண ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரையிலே, முன்னால் இருந்த மாநில அரசு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட, அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பெர்மனென்ட் பைனான்ஸ் கமிஷன், இந்தியன் லோன்ஸ் கவுன்சில் போன்ற அமைப்புகளை வைத்தால்தான், மாநிலத்திற்கு மத்திய அரசிலிருந்து வரவேண்டிய பணம் ஒழுங்கான முறையில் வரும். அதுதான் ஒழுங்கான ஒதுக்கீடுகளாக இருக்க முடியும். அப்படி இல்லாவிட்டால் அது தோராயமான ஒதுக்கீடுகளாகத்தான் இருக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடி, சென்ட்ரல் செக்டார் புராஜெக்டைப் பொறுத்தவரையிலே மத்திய அரசாங்கம் ஆரம்பிக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களைப் பொறுத்த அளவிலே, நம்முடைய மாநிலத்தின் பங்கு குறைந்துகொண்டே போகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் ஒன்று அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பொதுத் துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையிலே, எந்த மாநிலத்திலே எந்தப் பொதுத் துறை நிறுவனத்தை ஆரம்பிப்பது என்பதற்கு ஏதாவது ஒரு கிரைட்டீரியன் அல்லது அடிப்படை அம்சம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. மத்திய அரசு எந்த மாநிலத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ அங்கே ஆரம்பிக்கிறார்கள். எந்த மாநில அரசுக்கு மத்திய அரசிடத்திலே ஓரளவுக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அந்த மாநிலங்களில் தொழில்களை ஆரம்பிக்கின்றார்களே தவிர, அதற்கு என்று அடிப்படையான ஏற்பாடு அல்லது கிரைட்டீரியா இல்லை. அதை நம்முடைய மாநில அரசு எடுத்துச்சொல்லி, மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுகின்றபோது, அதற்கு ஏதாவது ஒரு அடிப்படையான ஏற்பாடு கிரைட்டீரியா இருக்க வேண்டுமென்ற கருத்தை



வலியுறுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இன்னொன்று மத்தியத் துறையிலே பெரிய நிறுவனங்கள் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன. உதாரணமாக நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், திருச்சியில் பி. எச். எல். (BHEL) போன்ற பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்களுக்கும் மாநில அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவை மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்களாக நடந்து கொண்டிருக்கின்றன. மாநில அரசிலிருந்து அதற்கு இயக்குநராக ஒருவர் அல்லது இருவர் இருக்க வேண்டும் அல்லது மாநில அரசு ஷேர் ஹோல்டராக இல்லாமல் இருக்கின்ற அளவுக்குத்தான் பார்க்கிறோம். ஆகவே இதுபோல மத்தியத் துறை நிறுவனங்கள் வருகிறபோது, மாநிலங்களுக்குத் தொடர்பு இருக்கின்ற அளவுக்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்தால், மாநிலங்களும் அதிலே பங்கேற்றுக் கொள்ள முடியும். அதிலே அக்கறை காட்ட வசதி ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று இண்டஸ்ட்ரியல் லைசென்ஸ் பற்றிச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய நம்முடைய அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 85, 100 உரிமங்களுக்கான மனுக்கள் மத்திய அரசிலே தேங்கியிருக்கின்றன என்று சொன்னார்கள். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது 80, 85 உரிமங்களுக்கான மனுக்கள் தேங்கியிருக்கின்றன என்று சொன்னார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் முத்தையா செட்டியார் அவர்கள் பேசுகின்றபோது, உரிமங்களுக்கான மனுக்களை அனுப்பிவிட்டு நாம் இங்கே சும்மா இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அமைச்சர்கள் அவைகளைப் பெற தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் என் கருத்தைச் சொல்கிறேன். ரூ. 5 கோடி மூலதனத்துக்கு மேலே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றால் மத்திய அரசிலேதான் உரிமங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் அல்லது 100 கோடி ரூபாய்க்குக் கீழே மதிப்புள்ள தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதற்கு மாநில அரசாங்கமே உரிமங்கள் கொடுத்தால் என்ன? இந்த முறையைக் கொண்டு வருவதற்கு மாநிலங்களிடமும் மத்திய அரசிடமும் நாம் கலந்துபேச வேண்டும். அதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைப்பற்றி மாநில அரசு மத்திய அரசோடு பேச வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசினுடைய ஒரு தோராயமான கிரைட்டீரியா அல்லது ஒரு அமைப்போடு மாநில அரசே அந்த லைசென்சுகளைக் கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சொல்லவில்லை. அவர்களுக்கு அட்மினிஸ்டிரேஷன்தான் முழுவதுமாகத் தெரியும். எனவே, மேனேஜ்மெண்ட் டெக்னிக் தெரிந்தவர்களாகப் போட்டால், அந்த நிறுவனங்கள் லாபத்தோடு நடக்கக் காரணமாக அமையும்.

அடுத்து, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்யும் மாற்றம்—டிரான்ஸ்பர்—பற்றிக் கூற விரும்புகிறேன். கல்வித் துறை, காவல் துறை அல்லது எந்தத் துறையாக இருந்தாலும், இடம் மாற்றுதலைப் பொறுத்த வரையில், ஓராண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறுதல் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறது. யார் அதைச் செய்கிறார்கள் என்றால், கல்வித் துறையைப் பொறுத்தவரையில், சி.ஈ.ஓ., அவருக்கு மேலே டைரக்டர் செய்கிறார். காவல் துறையிலே எஸ்.பி. செய்கிறார், அவருக்கு மேல் டி.ஐ.ஜி. மாறுதல்களை செய்கிறார். இந்த மாறுதல்களைப் பொறுத்தவரையில், பல துறைகளிலே பல தவறுகள் ஏற்படுவதைப் பார்க்கிறேன். சுகாதாரத் துறையாக இருந்தாலும், காவல் துறையாக இருந்தாலும், மற்ற எந்தத் துறையாக இருந்தாலும், தவறுகள் ஏற்படுகின்றன. காவல் துறையைப் பொறுத்தவரையில், பல இடங்கள் வருமானம் வரும் இடங்களென்று சொல்லுகிறார்கள். பல இடங்களை வருமானம் வராத இடங்களென்று சொல்லுகிறார்கள். அதே போன்று டாக்டர்கள் நல்லமுறையில் பிராக்டீஸ் செய்யக்கூடிய இடங்கள் எவை என்று அவர்களுக்குத் தெரியும், மோசமான இடங்களும் அவர்களுக்குத் தெரியும். ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், தண்ணீர் இல்லாத காடாக, வீட்டு வசதி இல்லாத இடங்களாக பல இடங்கள் இருக்கின்றன. அதிகாரிகள் அவர்களுடைய இஷ்டப்படி போடுகிறார்கள். அப்படிச் செய்யும் உரிமை அதிகாரிகள் மட்டத்தில் இருக்கிறது. அந்த நிலைமைகள் மாற வேண்டும். இப்படித் தவறான முறையில் மாற்றுவதால் கரப்ஷன் வருவதற்கு வழி ஏற்படுகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கு வங்க அரசில் இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்தார்கள். இப்படி மாறுதல்கள் செய்வது சரியற்றதாக இருக்குமானால், அதை அமைச்சரவர்களிடத்தில் சொல்லி, அதற்காக ஒரு கமிட்டி போட்டு, சரியாக மாறுதல் செய்திருக்கிறார்களா என்பதைப் பார்க்க வழிமுறை செய்திருக்கிறார்கள். அது குறித்து நம்முடைய அரசும் யோசனை செய்யலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் உலகத் தமிழ் மாநாடு நடத்த இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களுக்கு, அவர் எழுதிய சிறந்த நூல்களுக்காக டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்டது. அதேபோன்று திரு. சி. அ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்-



கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரும், மேலவைக் கொறடாவாகவும் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜனார்த்தனம் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். டாக்டர் பட்டம் வாங்குவதற்கு பல்கலைக் கழகத்தில் ஒரு 'கேய்ட்' வைத்திருக்கிறார்கள். படித்துப் பட்டம் பெற்றவர்கள் மூன்று ஆண்டுகளில் 300 பக்கங்கள் எழுதிக் கொடுக்க வேண்டும். அதை ஒரு கமிட்டி பார்த்து, டாக்டர் பட்டம் அவர்களுக்குக் கொடுக்கலாமென்று தீர்மானித்து, பிறகு டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள். வெளியில் இருக்கிறவர்கள் கெய்டில் சொல்லியுள்ளவாறு நான்கு ஆண்டுகளில் 300 பக்கங்கள் எழுதிக் கொடுத்தால், பல்கலைக் கழகம் அதை வைத்து டாக்டர் பட்டம் கொடுக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் மிகப் பெரியவர்கள், தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்கள். திரு. எஸ். தண்டபாணிப் பிள்ளை, திரு. வெள்ளை வாரணர், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. ஆ. சா. ஞானசம்பந்தம் போன்ற தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 300 பக்கம் என்ன, 3,000 பக்கங்கள் உள்ள பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் டாக்டர் பட்டம் வாங்க வேண்டுமென்றால், கெய்டைப் படித்துவிட்டு, நான்கு ஆண்டுகளில் 300 பக்கம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்பதை மாற்றி, இவர்கள் ஏற்கெனவே எழுதியுள்ள புத்தகங்களை ஆராய ஒரு கமிட்டி போட்டு, அவர்கள் டாக்டர் பட்டம் பெற தகுதியுடையவர்கள் என்று நினைத்தால், அடுத்து தமிழ் மாநாடு நடக்கும்போது சிலருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தலாம். முன்பு அப்படிச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களுக்கும், திரு. சி.அ.பெ. விசுவநாதம் அவர்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்க அரசாங்கமே பல்கலைக் கழகத்திடம் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறது. அப்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. இதற்கு முன்னாலே டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருக்கும்போது, வாசு செல்வராயப் பிள்ளை அவர்கள் திருமுறைபற்றி நூல்கள் எழுதியுள்ளதால், அவருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினரைப் பொறுத்தவரையில், 30 சதவிகிதம் ரிசர்வேஷன் இருந்தது. அது சரியானதல்ல என்று முடிவு செய்து, எக்கனாமிக் கிரைட்டீரியா என்ற அளவிலே 9,000 ரூபாய் அளவிற்கு மேல் வருமானம் இருந்தால், அவர்களை 'பேக்வேர்ட் கிளாஸ்' என்று கருத வேண்டாமென்று முன்பு முடிவு செய்தார்கள்.

(பிற்பகல் 5-30)

அதற்குப் பின்னால் 9 ஆயிரம் ரூபாய் என்று இருக்க வேண்டாம் 12 ஆயிரம்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1980 ஜூலை 8

அடுத்தபடியாக, விவசாயக் கடன்களைப்பற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட 42 கோடி ரூபாய் அளவிலே கூட்டுறவுக் கடனையும் ரூபாய் 16 கோடி அளவிலே தக்காவிக் கடனையும் அரசு மொத்தமாகத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். கூட்டுறவுக் கடனையும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அப்படி கிட்டத்தட்ட 58 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்ததற்கு அரசைப் பாராட்டுகிறேன். இந்த சமயத்திலே 16 கோடி ரூபாய் தக்காவிக் கடன் பற்றி எனக்குத் தெரிந்ததைத் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே மட்டும் 10 ஆண்டுகளாக பலராலே கொடுக்கப்படாத கடனாகத்தான் அது இருக்கிறது. அப்படி கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்கு இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் புத்தகங்களிலே இருந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சில சந்தர்ப்பங்களிலே, இந்த மாதிரி கடன் இருப்பதாக அவர்களுக்கே தெரியாத நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. அது புத்தகத்திலே இருக்கின்ற கடனாக இருந்தாலும் கூட, அதைத் தள்ளுபடி செய்த அளவிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இந்த 48 கோடி கடன் தள்ளுபடி என்பது புயலால், வெள்ளத்தால் அல்லது மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ளவர்களுக்குத் தள்ளுபடி என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஒரே இடத்திலே ஒரே தாலுக்காவிலே ஒரு கிராமத்திலே இருப்பவர்களுக்குத் தள்ளுபடி நடக்கிறது. ஆனால் அடுத்த கிராமத்திலே இருப்பவர்களுக்குத் தள்ளுபடி இல்லை என்ற நிலை இருக்கிறது. இப்படி ரூ. 48 கோடிக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனாலும் இதிலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கடன்களை தள்ளுபடி செய்ததினாலேயே நம்முடைய விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. காரணம், விவசாயிகளாக இருப்பவர்களுக்கு எந்தவிதமான லாபமும் இல்லாத நிலைமைகள்தான் இருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளாக அப்படிப்பட்ட நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நெல்லுக்கு விலை மாநில அரசோ மத்திய அரசோ சரியான முறையிலே கொடுக்கவில்லை. அதன் காரணமாக அன் எகனாமிக் என்ற நிலையிலேதான் அவர்களுடைய தொழில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அரசைப் பொறுத்த வரையில், நெல்லுக்கு அதிக விலை கொடுத்து, அந்த விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வளரக்கூடிய வழிமுறையைச் செய்தால் நல்லது. அவர்கள் ரூபாய் 130 வரையிலே நெல்லுக்கு விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்கு மாநில அரசு மத்திய அரசு சொன்னது என்ன? அவர்களுக்கு ரூபாய் 90 என்ற அளவிலேதான் விலையை வைத்தார்கள்,



1980 ஜூலை 8] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அப்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே கிட்டத்தட்ட இரண்டு லட்சம் டன் அளவுக்கு வாங்கினோம். அரசாங்கத்தினுடைய விலையிலேயே வாங்கினார்கள். அப்போதே அவர்களுக்கு ரூபாய் 10, ரூபாய் 20 என்ற அளவில் விலையிலேயே நஷ்டம் ஆகியது. என்றாலும் விவசாயிகளாலே விற்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் விற்க வேண்டிய நிலையிலே விற்றிருக்கிறார்கள். அப்படி நெல்லை விற்று நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கடனைக் கொடுக்கமாட்டோம் என்று சொல்கின்றார்கள். இந்த மாதிரி நிலைமையிலேயே நடந்துகொண்டு போனால் முழுமையாகக் கடனைக் கொடுக்க மாட்டோம் என்று அநேகமாக எல்லோரும் சொல்வார்கள். அதுபோலவே இப்போதும் சொல்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தைகூட கொடுக்க மாட்டோம் என்று சொல்கின்றார்கள். இந்த நிலைமைகள் நீடித்துக் கொண்டே போனால் எப்படியாகும்? நகரத்திலே இருப்பவர்களுக்கு யார் சப்சிடைஸ் செய்து குறைந்த விலையிலே நெல்லை, அரிசியைக் கொடுப்பது என்று பார்க்க வேண்டும். அதை நம் ஊரிலே இருக்கக்கூடிய விவசாயிதான் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நியாயமான விலை என்ற அடிப்படையிலே பார்க்கின்றபோது, கிராமத்திலே உள்ளவர்களுக்கு ஓரளவுக்குப் பணம் கிடைப்பதற்கும், நகரங்களில் உள்ளவர்கள் வாங்கிச் சாப்பிடவும் ஒரு நியாயமான விலையை வைத்திருக்கிறார்கள். நகரத்திலே இருக்கக் கூடியவர்கள் வாங்கிச் சாப்பிட வேண்டுமென்றால், குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கின்றார்கள். கிராமத்திலே உள்ளவர்கள் விலை கொஞ்சம் அதிகமாக இருக்கவேண்டும் என்கிறார்கள். நகரத்திலே இருப்பவர்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய அளவுக்கு விலையை நிர்ணயித்தால், அதனால் வரக்கூடிய நஷ்டம் யாருக்கு என்று பார்க்க வேண்டும். அந்த நஷ்டம் கிராமத்திலே இருக்கக்கூடிய விவசாயிக்குத்தான் வருகிறது. இப்படிப்பட்ட நிலையிலேயே 'Agriculturists are subsidising the urban population' என்ற அளவிலேதான் நம்முடைய உணவுக் கொள்கை இதுநாள் வரையிலே இருந்து கொண்டிருக்கிறது. முதல் : முதலிலே மதிப்பிற்குரிய திரு. அண்ணா அவர்கள் இதிலே மாறுதல் செய்து, நெல்லுக்கு வேண்டிய விலையைக் கொடுத்துவிட்டு, அர்பன் ஏரியா என்று சொல்லக்கூடிய நகர்ப்புறங்களிலே இருக்கும் ஏழை மக்களுக்கு அரசாங்கமே சப்சிடைஸ் செய்கின்ற அளவில், ஒரு ரூபாய் என்று வைத்து சப்சிடைஸ் செய்து அவர்களுக்குக் கொடுத்தார்கள். அரசாங்கம்தான் அதற்கு சப்சிடைஸ் செய்ய வேண்டுமே தவிர, கிராமப்புறத்திலே இருப்பவர்களை சப்சிடைஸ் செய்யச் சொன்னால் நிச்சயமாக அதனாலே பலன் ஏதும் ஏற்படாது என்ற கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் தலைமை).

(பிற்பகல் 5-10)

ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமையிலே அரசாங்கம் எவ்வளவு சிறு தொழிற் கூடங்களை ஆரம்பித்தாலும், மத்திய அரசு பொது நிறுவனங்களை ஆரம்பித்தாலும், தனியார்கள் நிறுவனங்களை ஆரம்பித்தாலும் 10 ஆயிரம், 20 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும். இன்றைக்கு விவசாயத்திலே ஈடுபட்டுள்ள 73 சதவிகிதத்தினரில் 40 சதவிகிதத்தினருக்கு வேலையில்லை. தமிழகத்தில் கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்கள் இருக்கிறார்கள். அதில் 70 சதவிகிதம் பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலே உண்மையிலேயே விவசாயத்தில் முழுவதாக ஈடுபடக் கூடியவர்கள் கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி என்று வைத்துக்கொண்டாலும், கிட்டத்தட்ட 1½ கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்குள்ளாக இன்னும் 1½ கோடி பேர்கள் அதிகமாகி விடுவார்கள். நகரங்களுக்கு அவர்களைக் கொண்டு வந்து, சிறு தொழில்களிலும், பெருந் தொழில்களிலும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்வது இயலாத காரியம். இப்போதிருக்கும் 'பேர்காபிடா' வருமானத்தை இரண்டு பங்காக்க இன்னும் 60 வருடங்களாகுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே இதற்கு ஒரே முடிவு என்னவென்றால் விவசாயத்திலேயே வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஜப்பானில் 'பேர் காபிடா ஈல்ட்' நம் நாட்டைவிட அதிகமாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு இங்கே ஏழு பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால், ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 49 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்டைப்போல ஏழு பங்குக்குமேல் அங்கே வேலை வாய்ப்பு இருக்கிறது. இன்னும் நான்கு மடங்கு, ஐந்து மடங்கு வேலை வாய்ப்பு விவசாயத்தில் ஏற்படுத்தினால்தான் கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு அங்கேயே வேலை கொடுக்க முடியும். அப்போதுதான் அவர்களை நகருக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்காது. அதற்கான திட்டங்களை அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பப்ளிக் செக்டார் அன்டர்டேக்கிங்ஸ் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நேற்றையதினம் நம்முடைய அவையில் உறுப்பினர்களுக்கு ஓர் அறிக்கை கொடுத்தார்கள். அந்த விசித்திரமான அறிக்கையை நான் பார்த்தேன். அது தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின்



அறிக்கையாகும். அது நேற்றையதினம் கொடுக்கப்பட்டது. அந்த நிறுவனத்திற்குப் போட்டிருக்கிற முதல் 1 கோடியே 40 லட்சம் ரூபாயாகும். 1977-78-லே அந்த நிறுவனத்திற்கு இழப்பு எவ்வளவு என்று பார்த்தால், 44 லட்சத்து 16 ஆயிரம் ரூபாயாகும். 1978-79-ல் 30 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் இழப்பு என்று அந்த அறிக்கையில் போட்டிருக்கிறார்கள். இந்த நிறுவனம் ஆரம்பித்து எவ்வளவு வருஷம் ஆகிறது என்பது தெரியவில்லை. அந்த அறிக்கையில் 'ஐந்தாவது ஆண்டு அறிக்கை' என்று போட்டிருப்பதால், ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். இப்படி வருஷத்திற்கு இழப்பு 44 லட்சம், 30 லட்சம் ரூபாய் என்று சொன்னால் ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அதில் வேடிக்கையான ஒன்றைப் பார்த்தேன். இயந்திரச் செங்கற் சூளை, கிருமிநாசினி என்று போட்டு, விவரம் கொடுத்திருக்கிறார்கள். அதில் உற்பத்தி எவ்வளவு, விற்பனை எவ்வளவு என்று பார்த்தால், உற்பத்தி 7.75 லட்சம் ரூபாய், விற்பனை 9.77 லட்சம் ரூபாய் என்று இருக்கிறது. போன ஆண்டு செய்ததை இந்த ஆண்டு விற்றிருக்கிறார்கள். மொத்த நஷ்டம் எவ்வளவு என்றால் 12 லட்சம் ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். அதிலே இயக்குநர்கள் ஐந்து பேர்கள் விலகி, ஐந்து பேர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள். நிர்வாக இயக்குநர் போன ஆண்டு இருந்தவரா அல்லது இந்த ஆண்டு வந்தவரா என்பது தெரியவில்லை. பொது நிறுவனங்களில் இப்படிப்பட்ட குழப்பமான நிலைமைகள் இருக்கின்றன. பொதுத் துறை நிறுவனங்களில் லாப நஷ்டம் கணக்குப் பார்க்கக்கூடாது, பொது மக்களுக்குச் சேவை செய்வதற்காக இந்த நிறுவனங்களை ஆரம்பித்திருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். பொதுவாக பஸ் ரூட்டுகளை எடுத்துக்கொண்டு, ஏன் நஷ்டம் வருகிறதென்று கேட்டால், நகரத்தில் ஓடுகிறது, அதனால் நஷ்டம்தான் வருமென்று சொல்லுகிறார்கள். பிறகு கிராமங்களில் ஓடினாலும் நஷ்டம் வருகிறதே என்று கேட்டால், பஸ்கள் ஓடாத இடங்களில் ஓட்டுகிறோம், அதனால் நஷ்டம் வருகிறது என்று கூறுகிறார்கள். எனவே பொதுத் துறையைப் பொறுத்தவரையில், இரண்டு, மூன்று வகையாகப் பிரித்து, லாபமாக நடக்க வேண்டுமா, நஷ்டமாக நடக்க வேண்டுமா என்று பிரித்து, அரசாங்கம் அதற்கான கொள்கைக் குறிப்பைக் கொடுக்க வேண்டும். தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் அறிக்கையைப் பார்க்கும் போது, இரண்டு ஆண்டுகளில் ஐந்து நிர்வாக இயக்குநர்கள் மாறியிருக்கிறார்கள். நிர்வாக இயக்குநர் ஒரு தொழிலில் ஐந்து ஆண்டுகள் இருந்தால் தான், உருப்படியாக வேலை செய்ய முடியும். அந்த நிறுவனங்களிலே உள்ள நிர்வாக இயக்குநர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இல்லாமல், எம்.பி.ஏ. படித்தவர்களாக இருந்தால் நல்லது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நான் குறை

பிரச்சினைகள், சர்ச்சைகள் வந்தன. அதற்குப் பிறகு அதையெல்லாம் மாற்றி தேர்தலுக்கு முன்னாலேயே 50 சதவிகிதம் பிற்பட்டோருக்கு என்றும் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோருக்கு என்றும் ஆக்கினார்கள். மொத்தத்தில் 68 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். 49 சதவிகிதம் என்று இருந்ததை, எக்கனாமிக் கிரைட்டீரியா வேண்டுமென்று சொன்ன அரசே திடீரென்று 68 சதவிகிதம் என்று மாற்ற வேண்டிய அவசியம் என்ன? பேக்வார்ட் க்ளாஸ் பிரச்சினையைப் பொறுத்தவரை, சட்டநாதன் குழு 1971 ஆம் ஆண்டிலே போடப்பட்டது. 1912 ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டிலே பிராமணர்கள் அதிகமாக வேலை பார்க்கிறார்கள் என்று கண்டு பிடித்தார்கள். 1922 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் கொண்டு வந்து இவ்வளவு பேர் கிறிஸ்தவர்கள், இவ்வளவு பேர் முஸ்லிம்கள், இவ்வளவு பேர் பிராமணர்கள், இவ்வளவு பேர் பிராமணர் அல்லாதவர்கள் இருக்கலாம் என்று கொண்டுவந்தார்கள். 1950 ஆம் ஆண்டிலே மாறுதல் ஏற்பட்டது. கான்ஸ்டிட்யூஷன் பிரிவுப்படி, நலிந்தவர்கள் என்கிற அடிப்படையில் ஒரு நிலைமையை ஏற்படுத்தினார்கள். என்னுடைய கருத்தெல்லாம் இப்போது பேக்வேர்ட்டு, பார்வார்ட் என்றெல்லாம் லிஸ்ட் வைத்திருக்கிறார்களே அந்த லிஸ்ட் எப்படி வந்தது என்பதுதான். பழைய லிஸ்டில் கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் பேக்வார்டில் இருந்தார்கள். இப்போது கிறிஸ்தவர்கள் இல்லை. முகமதியர்களில் ஒரு பகுதியினர் தான் பேக்வார்ட் ஆக இருக்கிறார்கள். 1925 ஆம் ஆண்டிலே எம்.இ.ஆர். என்று ஒரு லிஸ்டை கல்வித் துறையில் வைத்திருந்தார்கள். இன்னின்னாருக்கு கன்சேஷன் கொடுக்கலாம் என்பதற்கு அவர்கள் ஒரு லிஸ்ட் வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு வேலைவாய்ப்பு கமிஷனில் இன்னின்னாருக்கு வேலைவாய்ப்புகளில் கன்சேஷன் கொடுக்கலாம் என்று ஒரு லிஸ்ட் வைத்திருந்தார்கள். அதைத் தவிர ஷெட்யூல்ட் காஸ்ட் நலம் சம்பந்தப்பட்ட டிப்பார்ட்மெண்டில் ஒரு லிஸ்ட் வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு அவற்றையெல்லாம் வைத்து 'பேக்வார்ட் க்ளாஸ் லிஸ்ட்' என்று ஒன்றைத் தயாரித்தார்கள். அதற்குப் பிறகு வண்ணான்களாக இருந்தவர்கள் எல்லாம் 'மோஸ்ட் பேக்வார்ட்' ஆக்கப்பட வேண்டுமென்று இங்கே கூட உறுப்பினராக இருந்த திரு. எத்திராஜுலு அவர்கள் திரு. காமராஜ் அவர்களிடம் லிஸ்ட் கொண்டு வந்து கொடுத்தார்கள் திரு. காமராஜ் அவர்கள் இவர்களை மட்டும் தான் மோஸ்ட் பேக்வார்டில் சேர்க்க வேண்டுமா, இன்னும் வேண்டுமா, கொண்டு வாருங்கள் என்று கேட்டார். அதன்படி அப்போது 22 சமுதாயத்தினரை மோஸ்ட் பேக்வார்ட் சமுதாயத்தினராகக் கொண்டு வந்தார்கள். பேக்வார்ட் லிஸ்டில் இல்லாதவர் களைத்தான் 'மோஸ்ட் பேக்வார்ட்' ஆக்கினார்கள் [illegible]



முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, பார்வார்டில் இருந்த கவுண்டர்களை திடீரென்று பேக்வார்ட் ஆக ஆக்கினார்கள். அதுபோல் சோழிய வெள்ளாளர் என்ற ஜாதியை, திரு. கி. அ. பெ. விசுவநாதன் ஜாதியைச் சேர்ந்தவர்களை யெல்லாம் பேக்வார்ட் ஆக ஆக்கினார்கள். பார்வார்ட் ஆக இருந்தவர்கள் எப்படி திடீரென்று பேக்வார்ட் ஆக ஆனார்கள்? அதுபோல் பேக்வார்ட் லிஸ்டில் இல்லாதவர்கள் எப்படி திடீரென்று மோஸ்ட் பேக்வார்ட் லிஸ்டுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்? இன்னின்னார் பேக்வார்ட், மோஸ்ட் பேக்வார்ட், பார்வார்ட் என்று எப்படித் தீர்மானிப்பது? ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால், 49 சதவிகித முறையை உடனே கொண்டு வாருங்கள் அல்லது எக்கனாமிக் கிரைட்டீரியா கொண்டு வாருங்கள். அப்படியும் இல்லை யென்றால், பழைய நிலைமைக்குக் கொண்டு வாருங்கள். யார் பார்வார்ட், யார் பேக்வார்ட், யார் மோஸ்ட் பேக்வார்ட் என்பதற்குக் கட்டாயம் விளக்கம் வேண்டும். நான் இருக்கிறேன். நான் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவன். என்னை 'பார்வார்ட்' என்று எப்படி நிர்ணயிப்பது? நரிக்குறவர்கள் எல்லாம் 'மோஸ்ட் பேக்வார்ட்' ஆக ஏற்கெனவே இருந்தார்கள். அப்புறம் திடீரென்று இசை வெள்ளாளர்களை எப்படி 'மோஸ்ட் பேக்வார்ட்' ஆக ஆக்கினார்கள்? நான் யாரையும் குறிப்பிடவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1925 ஆம் ஆண்டிலே ஒரு லிஸ்டைக் கொண்டு வந்தார்கள். 1971 ஆம் ஆண்டிலே ஒரு கமிஷன் போட்டு அதுகொடுத்த லிஸ்டை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். இப்போது இருக்கிற நடைமுறையால் பலருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு 'சயின்டிபிக் அப்புரோச்' என்கிற அடிப்படையில் 1980-81 ஆம் ஆண்டிலே இன்னொரு பேக்வார்ட் க்ளாஸ் கமிஷன் போட்டு 'எக்கனாமிக் கிரைட்டீரியா' வைத்து அதன் அடிப்படையில் இன்னொரு பார்வார்ட், பேக்வார்ட் லிஸ்ட் தயாரிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்.

**மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்):** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்னும் ஐந்து பேர் பேச இருக்கிறார்கள். இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையை கடைப்பிடித்து சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாற்றுத் தலைவாவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே நிதியமைச்சராக வீற்றிருந்து படித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள குறிப்புகளையும், இருக்க வேண்டியவைகளையும் பற்றி இந்த உரையிலே எடுத்துச் சொல்வதை

என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். ஒரு வரி விதிப்பே இல்லாத நிதிநிலை அறிக்கையை இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஒருவேளை முதன் முதலாக நிதியமைச்சர் அவர்களால் இங்கே படிக்கப்படுகின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிற காரணத்தால், விமர்சனங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்கிற எண்ணத்தில் அப்படிச் செய்திருக்கக் கூடும். முதன் முதலாக அவர்கள் இங்கே படித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே ஏழை விவசாயிகள் நீண்டகாலமாகச் செலுத்த முடியாமல், தடுமாறிக் கொண்டிருந்த கடன் தொகையான 58 கோடி ரூபாயை ரத்து செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லும்போது, " மஹாராஷ்டிரா அரசாங்கம் நிதி வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. நடுவண் அரசு அவர்களுக்கு என்ன தர இருக்கிறதோ அதை நமக்கும் தந்தாக வேண்டும் " என்று குறிப்பிட்டார்கள். நான் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசும்போது, கடைசியாக இதை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன். உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திகள் வதந்திகளாகிவிடக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் நல்லமுறையில் அதை இப்போது அவர்களே முன்வந்து செய்திருக்கிறார்கள். அதற்காக நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரை, இன்னும் பல கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். தக்காவிக் கடன் பற்றியும் நடந்த பேரணியில் அவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்வேன். அந்த விவசாயிகளுடைய பிரதிநிதிகளையும், விவசாயிகளுடைய தலைவர்களையும் அழைத்துப் பேசி நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டு முடிவுக்கு வாருங்கள். இந்த சந்தர்ப்பத்தில் 58 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்து ஒரு நல்ல முன்னேற்றத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு இருந்த வருமானமான ரூ. 924 கோடி இந்த ஆண்டு ரூ. 982 கோடியாக உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது, இந்த வருமானம் குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக ஆயத் தீர்வை 6 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டை விட 3 கோடி ரூபாய் உயரும் என உள்ளது. மதுவிலக்கு தளர்த்தப்பட்டுள்ளதாலும், பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாலும், குறைந்தது 13 கோடி ரூபாய் உயருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆகவே அதிக வருமானம் கிடைக்கலாம் என நாம் எதிர்பார்க்கலாம். இதுபோன்று வேறு வகையான சில



ருமானங்களும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு 2 கோடியாக இருந்த வருமானத்தை இந்த ஆண்டு 69 கோடி என்று குறைத்து மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாகவே 3 கோடி ரூபாய் குறைத்துக் கணக்கிடப்படுவதற்கான காரணங்கள் இல்லை. அதற்கு இடமும் இல்லை. ஒவ்வொரு வருடமும் விற்பனை வரி உயருவது போல் வாகன வரியும் உயருவது என்பது கண்கூடாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. விற்பனை வரி மூலம் வழக்கம்போல் கூடுதலாக வருமானம் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் எப்போதும் போல் தொடர்ந்து இப்போதும் வணிகர்களால் விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுகிறது. மிக சரியான நடவடிக்கை மூலம் அதை ஏய்ப்பு செய்யாமல் தடுப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதற்கு என்னுடைய ஒரு நல்ல யோசனையையும் இந்த சந்தர்ப்பத்தில் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்திலே அரசுத் தலைமைச் செயலாக இருந்த திரு. இராயப்பா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரி ஏய்ப்பு செய்பவர்களை மிகத் திறமையாகக் கண்டுபிடித்தார்கள். அவர்களைப் போன்ற திறமையுள்ள அதிகாரிகள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுடைய நல்ல ஆலோசனைகளை எடுத்துக்கொண்டு இந்த வரி ஏய்ப்பவர்களைக் கண்டு பிடித்து வரி ஏய்ப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வேன். அப்படிச் செய்தால், நம்முடைய வருமானம் பெருகும். வருமானம் பெருகினால், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நாம் செயல்படுத்த வசதியாக இருக்கும்.

அடுத்து, சைக்கிள் மீது வரி விதிப்பு குறைந்திருக்கிறது. குறிப்பாக ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் நான் இதை வரவேற்கிறேன். ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் இதை வரவேற்கிறார்கள். சீப்பு, எழுதுபொருள், இரும்பு வாளி, மெழுகுவர்த்தி, நோட்டுப் புத்தகங்கள் ஆகிய பொருள்களுக்கு பலமுனை விற்பனை வரி அகற்றப்பட்டு ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது 4 சதவிகிதம் என்று இருந்த விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றி 8 சதவிகித வரியாக மாற்றியிருக்கிறார்கள். இந்த வரி வாங்குபவர்கள் தலையில் தான் சுமத்தப் படுகிறது. ஆகவே முன்பு இருந்தது போல், ஒருமுனை விற்பனை வரிக்கும் 4 சதவிகிதம் தான் என்று ஆக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்தியிலே சில நேரத்தில் வரி போடுகிறார்கள். பிறகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். அதன்பேரில் அமைச்சர்கள் மீண்டும் வரியைக் குறைத்துக் கொள்கிறார்கள். இங்கேயும் நம்முடைய மாண்புமிகு

நிதியமைச்சர் அவர்கள் நம்முடைய பட்ஜெட் டெபிசிட் பட்ஜெட்டா இல்லாமல் இருப்பதால், தயவுசெய்து ஒருமுனை விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் முடிவெடுத்து அவர்களுடைய பதிலுரையில் அறிவிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்கென 266 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ஒதுக்கியதை விட 16 கோடி ரூபாய் அதிகம். கல்வியைப் பொறுத்த வரை, அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற ஆசிரியர்கள் போதிய அளவில் நியமனம் செய்யப்படவில்லை, 2,800 பணியிடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. இதில் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆயிரம் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பள்ளிகளிலே இடைநிலை ஆசிரிய பணியிடங்கள் ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளன. நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி தலைமை ஆசிரியர்களை நியமிக்க 200 பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 200 பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன செகண்டரி பள்ளிகளில் 200 பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. உடற்பயிற்சி இயக்குநர்களுக்கென 200 பணியிடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. இதுவரை கைத்தறி ஆசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றி 100 ரூபாய் ஊதியம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்காக இப்போது 200 பணியிடங்கள் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

(பிற்பகல் 5-30)

ஆனால் வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் இது 10 சதவீதம்கூட இல்லை என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இன்னும் அதில் அதிக வேலைவாய்ப்புக்கான இடங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பள்ளிகளில் அறிவியல் சாதனங்கள் மற்றும் நூலகங்களுக்காகப் போதிய தொகை ஒதுக்கப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம். இப்போது ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நீண்ட காலம் கல்வியமைச்சராகப் பொறுப்பேற்று, அத்துறையின் நிதிக்காக பலரிடத்திலே கேட்டுக்கொண்டிருந்த நிலையில் இருந்தார்கள். இப்போது கேட்டுக்கொண்டிருந்த அந்த இடத்தி லிருந்து, கொடுக்கக்கூடிய இடத்திலே வந்து அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையின் தேவைகளைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே





அவருக்கு நான் ஒன்றும் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. எனினும் இதற்கான நிதி ஒதுக்கீடு அதிகமாக்கப்பட வேண்டும் என்று மட்டும் இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தொடக்கப் பள்ளிகளுக்கும் நூலகங்களுக்காகப் பணம் ஒதுக்கப் படவில்லை. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 5.5 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அகவிலைப்படி அளிப்பதுபற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. நாட்டில் விலைவாசி மிகவும் உயர்ந்துகொண்டே யிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அகவிலைப்படியை உயர்த்துவதன் அவசியத்தைப்பற்றி மிகவும் தெளிவாகச் சொன்னார்கள். தற்போது விலைவாசி 362 புள்ளியை எட்டிவிட்டது. 360 புள்ளிக்கே இன்னொரு அகவிலைப்படி உயர்வை அரசு அலுவலர்களுக்குத் தந்திருக்க வேண்டும். உண்மையிலேயே அரசு ஊழியர்களும், ஆசிரியப் பெருமக்களும் விலைவாசிப் புள்ளிக்கு ஏற்ப அகவிலைப்படி உயர்வு அளிக்கப் படும் என்றுதான் எதிர்பார்த்தார்கள். இந்த நிலையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தற்போது நிதிநிலை அறிக்கையில் எந்த அறிவிப்பையும் செய்யாவிட்டாலும்—இந்த நிதிநிலை அறிக்கை உபரியாக, பற்றாக்குறை இல்லாத ஒன்றாக இருப்பதால்—ஒரு 10, 12 கோடி ரூபாயை அகவிலைப்படி உயர்வுக்காக வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த அரசு அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் நாட்டம் காட்டப்பட்டிருந்தாலும், அதைப் போக்குவதற்கான வழிவகைகள் குறிப்பிடப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஜனநாயக நாடுகளில் வேலையில்லாப் பிரச்சினை என்பதை அவ்வளவு சீக்கிரமாகத் தீர்க்க முடியாது. காரணம் சமுதாய அமைப்பு முறைகள். இது இன்றையதினம் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாகும். உலகத்தின் எந்த ஒரு ஜனநாயக நாட்டின் வரலாற்றிலும் இதைப் பார்க்கலாம். சோஷலிச நாடுகளில் நிலைமைகள் வேறு. ஆனால் ஜனநாயக அமைப்புகள் உள்ள நாடுகளில் இந்தப் பிரச்சினை சீக்கிரமாகத் தீர்க்கப்பட்டதாக வரலாறே இல்லை. அமெரிக்க நாட்டிலேயே இன்னும் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இது உலக உண்மை. எனவே இந்த நிலையில் தமிழ் நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசு வழிகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக வரிவிதிப்பு இல்லாமல் ஏற்கெனவே இருக்கக்கூடிய வகையிலேயே இந்த நிதிநிலை இருக்கிறது. எனினும், தொழில் வளர்ச்சி மூலம் நாட்டில் முன்னேற்றத்தை உருவாக்க இன்னும் நல்ல திட்டங்களும் கூடுதலான திட்டங்களும் தேவை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற் துறையைப் பொறுத்த வரையில், அதற்கென்று தனியான அமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும். அந்த அமைச்சருக்கு வேறு இலாக்காவினுடைய பணிச்சுமை இருக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் ஆலோசனையாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் பல அமைச்சர்களை நியமிக்கும் போது, அவருக்கு அந்தப் பணி மட்டுமே கொடுக்கப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்து, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் புதிய சிந்தனையின் அடிப்படையில் ஒருவரைத் தலைவராக நியமித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஒரு டிசிப்ளின்டு ஃபோர்சைச் சேர்ந்த, ஒழுக்கக் கட்டுப்பாட்டில் தலை சிறந்து இருக்கக்கூடிய இந்தியப் பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய ஒரு பெரிய அதிகாரியை அந்தப் பதவிக்கு நியமித்திருக்கிறார்கள். இதைப் போலவே இலாக்காக்களின் செயலாளர்களை அவ்வப்போது மாவட்டங்களுக்கு மாற்றி, அங்கே அவர்கள் செயல்பட வழிவகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் துறைச் செயலாளர்களாக இருப்பவர்கள் பொதுமக்களின் பிரச்சினைகளை நன்கு அறிய முடியும். உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் மாவட்டம் தாளவாடிப் பகுதியில் இதுவரை ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவன்ஸ் கொடுத்து வந்தார்கள். தாளவாடிக்குச் சென்றவர்களுக்கு அந்த இடத்தைப்பற்றித் தெரிந்திருக்கும். எப்போது பார்த்தாலும் அதை கருநாடக மாநிலத்தோடு இணைக்க வேண்டுமென்று பிரச்சினையைக் கிளப்பிக் கொண்டிருக்கும் வட்டல் நாகராஜ் மூலமாக அந்தப் பகுதியைப்பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும். யானைகள் மக்களை அழித்துவிட்டன என்று அந்தப் பகுதியைப்பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கலாம். அந்தப் பகுதி என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. நான் அடிக்கடி அங்கே ஆசிரியர்களையும் ஊழியர்களையும் அழைத்துச் சென்று கூட்டம் நடத்தியிருக்கிறேன். அங்கே உள்ள தலைமலை, திம்பம் போன்ற பகுதிகளுக்கு பஸ் வசதியே கிடையாது. ஏறத்தாழ 60 மைல்வரை ஆசிரியர்கள் 'கேர்' பொருள்களைத் தலையிலேயே சுமந்து எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பகுதியில் ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பொருள் வாங்க வேண்டுமென்றாலும், சத்தியமங்கலம் வந்தால்தான் வாங்க முடியும்.



அங்கே சென்றால், சாப்பிடுவதற்கு ஒரு ஓட்டல் கூட கிடையாது. எந்த அதிகாரி சென்றாலும், மலையிலிருந்து உடனே கீழே இறங்கிவிடுவார்கள். காரணம் அங்கே எந்த வசதியும் கிடையாது. இருந்தாலும் விலைவாசி அங்கே மிக அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இரண்டாவது ஊதியக் குழு அந்தப் பகுதிக்கு 'ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவன்ஸ்' தரக்கூடாது என்று அந்தப் பகுதியைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்ளாமலேயே எழுதிவிட்டது. மூன்றாவது ஊதியக் குழுவும் அதை அப்படியே எழுதிவிட்டது. இப்போது அதன் காரணமாக 'ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவன்ஸ்' வழங்கப்படாமல் இருக்கிறது. அங்கே மைனாரிட்டிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு எந்தவிதமான பலனும் தமிழக அரசிலிருந்து கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அங்கே ஏற்கெனவே கொடுத்து வந்த ஸ்பெஷல் காம்பன் சேட்டரி அலவன்சையும் இப்போது நிறுத்திவிட்டார்கள். 'ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவன்ஸ்' என்று ஏற்கெனவே 20 சதவிகிதம் அதிக ஊதியம் கொடுத்து வந்தது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இதை மீண்டும் கொடுக்க ஆணையிட வேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கே வசிப்பவர்களின் எண்ணிக்கைகூட அதிகமாக இல்லை. சொற்ப எண்ணிக்கையிலேயே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அங்கே இருக்கிறார்கள். தவறு செய்கிற அதிகாரிகளையும், தங்களுக்கு வேண்டாதவர்களையும் தாளவாடிக்கு மாற்றுவது வழக்கம். அப்படி மாற்றப்படும் அதிகாரிகளுக்கு குவார்ட்டர்ஸ் உண்டு. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் இல்லை. பட்டப் பகலிலேயே காட்டெருமைகளும் யானைகளும் தாளவாடியில் ஊர்வலம் வரும். இப்போது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு 'ஸ்பெஷல் காம்பன்சேட்டரி அலவனஸ்' தர வேண்டும் என்று சிபாரிசு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார். தற்சமயம் அது நிதிச் செயலாளர் முன் இருக்கிறது. எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு 'காம்பன்சேட்டரி அலவன்ஸ்' வழங்க வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வல்வில் ஓரி ஆண்ட கொல்லிமலைப் பகுதியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த மலையடிவாரத்தில் அறப்பளீசுவரர் திருக்கோயில்—மிகப் பழமையான, சிறப்பான கோயில்—ஒன்று இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. சென்ற ஆண்டு அந்தப் பள்ளியில் மற்ற

எல்லாப் பள்ளிகளையும்விட மிக அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் தேர்ச்சியுற்று இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் அதை ஒரு ரெசிடென்ஷியல் ஸ்கூலாக நடத்தி மாணவர்களை அங்கேயே ஹாஸ்டலில் தங்க வைத்துச் சொல்லிக் கொடுக்கிற நிலை இருக்கிறது. 16 நாடுகள் உள்ள அந்தக் கொல்லிமலையில் ஒரே ஒரு பள்ளிதான் இருக்கிறது. வேறு எந்த இடத்திலும் ஒரு நடுநிலைப் பள்ளிக்கூடம் கூட கிடையாது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் இப்போது அங்கே நடுநிலைப் பள்ளிக்கூடம் தேவை என்று கோரி, சென்னை நோக்கி வருகிற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு மருத்துவமனையோ, கால்நடை மருத்துவமனையோ எதுவும் கிடையாது. அங்கேயுள்ள அரியூர் நாட்டை ஒட்டி ஒரு பகுதி அரிபால்கர் கல் என்று வழங்கப்படுகிறது. புதிதாக ரோடு போட்டபோது, அந்தப் பகுதிக்கு அரிபாஸ்கர் கல் என்று வைத்துவிட்டார்கள். பல ரோடுகள் சந்திக்கிற இடம் அது. இப்போது அங்கே ஒரு பிரைமரி ஹெல்த் சென்ட்டரும், ஒரு கால்நடை மருத்துவமனையும், ஒரு நடுநிலைப் பள்ளியும் தேவை. பின்னாலே அதை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வாய்ப்பு உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sir, our newspapers are flashing, under different captions, appeals to our industrialists to come forward and help in the adoption of villages. There is much talk about having a consortium approach for the adoption of villages. Dr. M. S. Swaminathan for whom I have the greatest regard and respect once told me, when he was the Director-General of the Indian Council of Agricultural Research,

(Thiru J. M. Miakhan) [1980 ஜூலை 8

diseases like diabetes, mental disorder, blood-pressure, etc. But we ourselves are not bestowing enough attention on these systems. As a matter of fact, there are very many standard medicines in these systems. Many other standard medicines can also be introduced, after experimenting them properly. These medicines can be produced locally and it will give work to more people. The people who are actually engaged in the production of these medicines are poor people. These herbs are easily available throughout our country. Many machines need not be imported for manufacturing drugs from these herbs and the medicines can be manufactured cheaply. Of course, there are many good medicines in the system of allopathy also and I am not finding fault with the allopathic medicines. But the cost of medicines would be cheaper in the systems of Siddha, Ayurvedha and Unani. Therefore, the Government should encourage these systems in the interest of the people of this State.

Sir, I would now like to say a few words about drinking water-supply. In places like Pallavapuram, we have been assured that we would be getting protected water-supply soon. Some pipe-lines have been laid and some giant pipes are there. But, actual water-supply has not yet been effected. As a matter of fact, at this moment, most of the wells in Pallavapuram Municipal area are dry. Only in very few wells, there is water. Even that water is muddy and is not fit for drinking. I request the Government to bestow some attention on providing drinking-water to these places so that the people may at least be free from diseases and other things.

Sir, I have only one more point to make regarding the Backward Classes. I have also given a call-attention notice in this regard. Formerly, the Muslim people who were speaking Tamil were classified as 'Labbais'. Later, Dr. Kalaignar included the 'Daknis' also in the list of Backward Classes. But, all Tamil-speaking Muslims are not recognized as Backward Classes. Only some of those Muslims are treated as 'Labbais' and they alone are given concessions due to the Backward Classes. In a recent G.O., dated 1st February 1980, they have given a different definition for 'Labbais' and they have said : "those whose spoken language is Tamil or Urdu". Even during the British days, the 'Labbais' were known as the Muslims whose mother-tongue was Tamil. I think that the *Status quo* should be retained. The people who are already in the list should not be taken out of the list and they should not be penalised.

Sir, with these words, I conclude my speech. Thank you.



1980 ஜூலை 8]

* திரு. ச. எஸ். வெங்கடேசன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எல்லாம் சோர்வுற்று, எப்போது வெளியே போகலாம் என்று இருக்கின்ற நேரத்திலே என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள். சாதாரணமாகவே நான் அதிக நேரம் பேசுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். இந்த மாதிரி நிலையிலே நிச்சயமாக அதிகமாகப் பேசமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகம் சோர்வு அடைவதற்கு முன்பே வெகு சீக்கிரத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதிலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய முதல் பட்ஜெட்டை மிகச் சிறப்பாகவும், எல்லாப் பிரிவினரும் வரவேற்கின்ற வகையிலும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையிலும் அளித்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. இந்த பட்ஜெட்டில் எந்த விதமான வரியையும் போடாமல், ஏற்கெனவே இருந்த வரிகளில் சில வரிகளை, குறிப்பாக ஏழை மக்களைப் பாதிக்கிற வரிகளை, நீக்கி பல கோடி ரூபாய்களுக்குச் சலுகைகளைக் கொடுத்து உபரி பட்ஜெட்டாக இந்த பட்ஜெட்டை அமைத்திருப்பது நிதியமைச்சர் அவர்களின் திறமையை நன்கு காட்டுகிறது.

(பிற்பகல் 6-40)

நிச்சயமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய கருத்துக்களை மனதில் கொண்டு இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த சிறந்த பட்ஜெட்டைக் கூட சிலபேர் குறை கூறிப் பேசியிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுடைய மனதிலே குறைகூறிப் பேசவேண்டுமென்ற எண்ணம் இருக்காது. எதிர்க் கட்சியிலே இருப்பதால், ஏதாவது குறை கூற வேண்டுமென்பதற்காகக் குறை கூறியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இங்கே தமிழ்நாட்டில்; முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மக்கள் இந்த பட்ஜெட் குறித்து திருப்தியடைந்தால் நானும் திருப்தியடைவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல பட்ஜெட் என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டும். எனக்குத் தெரிந்தவரையிலே, மக்களிடம் பேசியபோது, மக்கள் இந்த பட்ஜெட்டை வரவேற்று திருப்தியைத் தெரிவித்தார்கள். இங்கே பேசியவர்கள் தங்கள் கருத்துக்களை பல கோணத்திலிருந்து தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் அதிகமாக அரசியல் பற்றிப் பேசுவதில்லை. அதுபற்றியெல்லாம் இரண்டு பக்கங்களிலும் பலர் சிறப்பாகப் பேசுவார்கள். ஏற்கெனவே பேசியும் விட்டார்கள். என்னைப்

பொறுத்தவரையில், ஓய்வு பெற்ற நீதிபதி என்ற முறையிலும், ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர் என்ற முறையிலும் அவர்கள் சார்பிலே என் கருத்துக்களை யோசனைகளாகச் சொல்கிறேன். அவற்றை இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் இரண்டாவது குற்றவியல் நடுவர்கள் பற்றிச் சொன்னார்கள். அவர்களில் பலர் தற்காலிகமாக குமாஸ்தாக்களிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் நீதியும் குமாஸ்தாக்கள் நீதியாக இருக்கிறது. அப்படி நியமிக்கப்பெற்றவர்கள், தீர்ப்புகளைத் தாங்களாகவே கொடுப்பதில்லை. அங்குள்ள குமாஸ்தாக்களைக் கேட்கிறார்கள் அல்லது அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்களைக் கேட்டு தீர்ப்புக் கொடுக்கிற நிலைமையில் இருக்கின்றார்கள். எப்படி கேஸ்களை பைசல் செய்ய வேண்டுமென்றெல்லாம் கேட்கிறார்கள். நான் மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதியாக இருந்த காரணத்தினால், இரண்டாவது குற்றவியல் நடுவர்களை எல்லாம் கண்காணிக்கின்ற பணி எனக்கும் இருந்தது என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மராஜ் சந்தோஷம் சொல்வது அநேகமாக உண்மை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 8, 9, 10 வருடங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீக்கிவிடுவது நல்லது. அதற்கான விதிமுறைகளை அமைத்து நல்ல நிரந்தர மாஜிஸ்ட்ரேட்டுக்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சமயத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டிலேயிருந்து ஒரு ஸ்கீம் பெண்டிங்கில் இருக்கிறது. இன்டெக்ரேஷன் ஆஃப் சிவில் அண்ட் கிரிமினல் ஜுடிசியல் சர்வீஸ் என்பதுதான் அந்தத் திட்டம். அதன்படி எல்லோரையும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக மாற்றுவது என்று சொன்னார்கள். அனைவரையுமே முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் என்று சென்னையில் செய்திருக்கிறார்கள். சென்னையில் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் என்று இருக்கிறது. வெளியிலே இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்களையும், அதாவது தமிழ் நாட்டிலேயுள்ள எல்லோரையுமே முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமித்தல் நல்லது. இந்தத் திட்டம் 1976 ஆம் ஆண்டிலேயிருந்து பெண்டிங்காக இருக்கிறது. இதைச் சீர்படுத்தினால் நல்ல நிலை உண்டாகும் என்று நினைக்கிறேன்.



அடுத்தபடியாக, நீதிபதிகள், தங்களுக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கக் கூச்சப்படுவார்கள். நான் இங்கே இருப்பதனால், அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். ஓரிரு சலுகைகளையாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு சில பங்களாக்கள் கட்டுவதாக போன வருடம் சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. அவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்து சீக்கிரமே அவர்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்பதற்கான வழிவகைகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே எக்மோரில் உள்ள அந்தக் கோர்ட்டுகளைப் பார்த்தால், கோர்ட்டுகள் மாதிரியே இருக்காது. அதிலே தட்டியெல்லாம் வைத்து, மிகச் சாதாரணமாக வீடுபோல இருக்கிறது. அதைச் சீரமைத்து புதிய கோர்ட்டுக்கள் கட்ட வேண்டுமென்று திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களிலே மாவட்ட நீதிபதிகள் பங்களாக்களிலே, காம்பவுண்ட்டிலே பல ஏக்கர் நிலம் காலியான இடங்கள் இருக்கின்றன. அந்தக் காலி இடங்களிலே, கெஸ்ட் ஹவுஸ் கட்டலாம். மாநிலத்தின் மற்ற மாவட்டங்களிலிருந்து, வெளிமாநிலத்திலிருந்து வரும் நீதிபதிகள் தங்குவதற்கு நல்ல வசதி இருக்கும். ஏற்கெனவே சில இடங்களில் நீதிபதிகள் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையிலே அவர்களுடைய கண்ணியத்திற்கு ஏற்றாற்போல, அவர்கள் எங்கு வந்தாலும், தங்குவதற்கு வசதியாக இருக்க வேண்டும். மாவட்ட நீதிபதிகள் பங்களாக்கள் காம்பவுண்ட்டிலே 2, 3 சூட்கள் வைத்து, கெஸ்ட் ஹவுஸ் சீக்கிரமே கட்ட ஏற்பாடுகள் செய்தால், நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அவர்களுடைய சம்பளத்தைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. அதை அரசிடத்திலேயே விட்டுவிடுகிறேன். அவர்களுடைய கண்ணியத்திற்கு ஏற்ப சம்பளம் கொடுக்க வேண்டும். மற்றவர்கள் சம்பளத்தையெல்லாம் உயர்த்தியாகிவிட்டது. ஆனால் நீதிபதிகள் சம்பளத்தை உயர்த்தவில்லை. சாதாரண நிலையில் இருப்பவர்களுக்கெல்லாம் சம்பளம் உயர்த்திவிட்டார்கள். இவர்கள் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்தாலும், சம்பளத்தைப் பொறுத்தவரையில், தாழ்வாகத்தான் இருக்கின்றது. அந்தக் குறையையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வு பெற்ற அலுவலர்களைப்பற்றி நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நானும் ஓய்வு பெற்றவன்தான். நான் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவன். ஆகவே அவர்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பொதுவாக பென்சனரை யாருமே கவனிப்பதில்லை. அவர்களை யெல்லாம் அலட்சியப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். இங்கே நான் ஒருவன்தான் பென்சனர்களைப்பற்றிப் பேசுகிறேன் என்று நினைக்கிறேன்

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** நிறைய பேர்கள் அதைப்பற்றிப் பேசியிருக் கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இந்தத் தடவை பேசவில்லை. இதற்கு முன்னால் பேசியிருப்பார்கள். அதை மிகவும் கவனித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கொடுக்க வேண்டும். அரசாங்கத்திலே மற்ற பணி செய்தவர்களுக்குக் கொடுக்கின்ற போல, பென்ஷனர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குக் குறைத்துக் கொடுப்பது சரியானதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். உண்மையிலேயே பார்க்கப்போனால், பென்ஷனர்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்க வேண்டும். கம்யுடேஷன் என்று சொல்வார்கள். 10, 1 ஆண்டுகள் அவர்கள் வாங்கிய பணத்துக்குக் கணக்குப் போட்டு ஏற்கெனவே பிடித்தம் செய்வார்கள். அதைத் திருப்பிக் கொடுக்கமாட்டார்கள். கம்யு டேஷன் பணத்தை ரெஸ்டோர் பண்ணி ஒரிஜினல் பென்ஷன் தொகையை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமை ஆந்திராவிலே வந்திருக்கிறது. அதை நம் தமிழகத்திலும் நி அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து கவனத்தில் வைத்து ஆவன செய்யுமா கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது சம்பளக் கமிஷன் கூட கம்யூடேஷன் தொகையில் ஒரு பகுதியை ரெஸ்டோர் செய்ய சிபாரிசு செய்திருக்கிறது. அதையாவது ஏற்றுக்கொண்டு, பென்ஷனர்களுக்கு உதவ வேண்டும். ஓய்வு பெற்றவர்களை யாரும் கவனிக்காததனால், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இந்த நிலைமைகளை நிதி அமைச்சர் அவர்கள் மாற்றிக் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்களுடைய ஓய்வூதியம் கொடுக்கும்போதே, கூடவே ரூ. 20, 25 மாதந்தோறும் மருத்துவச் செலவுக்காக என்று சேர்த்துக் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது. அவர்கள்



ஏற்கெனவே வயதானவர்கள். அவர்கள் தள்ளாட்டத்திற்கும், தடுமாற்றத் திற்கும் உள்ளானவர்களாக இருப்பார்கள். சாதாரணமாகவே அவர்களுக்கு உடம்பு சரியில்லாமல்தான் இருக்கும். 55 வயதைத் தாண்டிய எல்லோருக்குமே உடம்பு நிச்சயமாக சரியாக இருக்காது. ஒருசிலர் உடல்நிலை வேண்டுமானால் நல்ல நிலையில் இருக்கலாம். மொத்தத்தில் பார்க்கும்போது, 55 வயதைத் தாண்டிவிட்டால் ஏதாவது குறை இருக்கத்தான் செய்யும்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** நமது லேபர் மினிஸ்டர் ரொம்ப நலமாகத் தான் இருக்கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** அவர்களுடைய பென்ஷன் தொகையோடு அந்த மெடிகல் ரீஇம்பெர்ஸ்மெண்ட் தொகையையும் சேர்த்து மாதந்தோறும் கொடுக்க நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் அதிக சோர்வுக்குள்ளாகாமல் இருக்க, என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாற்றுத் தலைவர் (திரு. பி. ஆர். தாமஸ்) :** அவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-50)

## இணைப்பு I

[259 ஆம் பக்கத்தில் இனம் 1 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

### அறிக்கை.

1—7—1980 ஆம் தேதியன்று "சக்தி" என்ற கடற்படைக் கப்பல் கேப்டன் திருப்பதி என்பவரால் ஆறு அந்நியநாட்டு மீன்பிடி கப்பல்களில் ஒன்றான 'யுன்ஷின்' என்ற கப்பலை தூத்துக்குடி துறைமுகத்திற்கருகில் மீன் பிடித்தபோது அதனை சூழ்ந்து பிடித்து அதிலிருந்து 18 அயல் நாட்டவர்களையும் கைப்பற்றினர். மேற்படி 18 பேரும் தாய்வான் நாட்டவர்கள் என்பதும் அவர்கள் ஆங்கிலம் தெரியாதவர்கள் என்பதும் தெரியவந்தது. இந்த மீன்பிடி கப்பல் 120 அடி நீளமுள்ளதும், மற்றும் அதில் நைலான் வலைகளும், மீனும் இருந்ததாகவும், டீஸல் இருப்பும் குளிர்பதன வசதி உள்ளதும் தெரியவந்தது. மேற்படி 18 அயல் நாட்டவர்களும் பாஸ்போர்ட் வைத்துள்ளனர். மேற்படி அயல் நாட்டவர்களுடன் மணப்பாடுக்கருகில் ஒரு சிறிய சண்டை நிகழ்ச்சிக்குப்பின் ஹெலிக்காப்டர் உதவியுடன் அக்கப்பலும் 18 அயல் நாட்டவர்களும் பிடிக்கப்பட்டனர். ஆனால் மற்ற ஐந்து அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்களும் தெற்கு திசையில் தப்பிச் சென்று விட்டன.

அக்கப்பலில் இருந்த சுமார் 30 டன் மீன்களில், 25 டன் மீன்கள் மீன் துறையால் 5—7—1980 வரை அப்புறப்படுத்தப்பட்டு, குளிர்பதன அறையில் வைக்கப்பட்டன. மீதமுள்ள மீன்களும் அக்கப்பலிலிருந்து அகற்றப்பட்டு வருகிறது. நான்கு டன் மீன்களை மீன்துறை மூன்று நபர்களுக்கு ஏலம்விட்டு அதன் விற்பனை மூலம் ரூ. 12,460 பெறப்பட்டது. மீதமுள்ள மீன்களை விரைவில் பகிரங்க ஏலத்தில் விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாறு அயல்நாட்டு மீன்பிடிக்கப்பல்கள் இந்திய மீன்பிடி எல்லைக்குள் மீன்பிடிப்பதை தடுக்கும்பொருட்டு மீன்துறைக்குச் சொந்தமான கலன்களுடன் மீன்துறை அதிகாரிகள் காவல்துறை அதிகாரிகளுடன் தூத்துக்குடி துறைமுகத்தில் தயார் நிலையில் உள்ளனர்.



## இணைப்பு II

[261 ஆம் பக்கத்தில் இனம் 1 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மருத்துவக் கல்வி இயக்குநர், மற்றும் காவல்துறை ஆணையாளரிடம் இருந்து வந்துள்ள அறிக்கைகளின்படி சென்னை நகரில் மருத்துவமனையிலிருந்து குழந்தைகள் காணாமல் போன இரண்டு சம்பவங்கள் குறித்து இந்த அவையின்முன் தெரிவிக்க விரும்புகிறேன்.

2. 14—6—1980 அன்று மாடம்பாக்கத்தை சார்ந்த வேதநாயகம் என்பவரின் மனைவி தில்லைநாயகி, வீட்டிலேயே பெற்றெடுத்த பெண் குழந்தையுடன், குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக எழும்பூர் அரசினர் மருத்துவமனையின் எப். 2 வார்டில் சேர்க்கப்பட்டார். 15—6—1980 மாலை 5 மணி அளவில் சுமார் 30 வயது உள்ள ஓர் கர்பிணி அன்னியப்பெண் இத்தாயிடம் வந்து நட்பு முறையில் பழகினார். பின்னர் அத்தாய் தன் குழந்தையை அந்த அன்னியப்பெண்ணின் பாதுகாப்பில் விட்டு கழிப்பிடத்திற்குச் சென்ற போது அந்த அன்னியப்பெண் குழந்தையை தூக்கிச்சென்று விட்டார். திரும்பி வந்த தாய் சுமார் 15 நிமிடம் காத்திருந்தும் தனது குழந்தை வரவில்லை என்ற நிலையில் அங்குள்ள செவிலியரிடம் அறிவித்தார். உடன் அங்கிருந்த மருத்துவ அலுவலரும் மற்றவர்களும் தேடிப்பார்த்துப் பயன் இல்லாது, பின்னர் காவல்துறைக்குப் புகார் கொடுக்கப்பட்டது.

3. 17—6—1980 அன்று காலை 10 மணி அளவில் இந்திரா நகரைச் சேர்ந்த கோவிந்தராசன் என்பவரின் மனைவி திருமதி இளஞ்சியம் என்பவர் அரசு கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டு அன்று மாலை 2-20 மணிக்கு ஆண் குழந்தையைப் பெற்றார். மாலை 4-20 மணிக்கு குழந்தையுடன் வார்டு எண் 25-க்கு மாற்றப்பட்டார். அன்று மாலை சுமார் 25 வயது மதிக்கத்தக்க கர்ப்பிணி அன்னியப் பெண் ஒருவர் இத்தாயிடம் நட்புமுறையில் பழகினார். அந்தத் அன்னியப்பெண் தன் கணவரும் திரு. கோவிந்தராசனும் நண்பர்கள் என்று கூறி, தன் கணவர் குழந்தையைக் காண கீழே காத்துக்கொண்டிருப்பதாக தெரிவித்து, அத்தாயின் அனுமதியுடன் குழந்தையை பெற்று சென்றுள்ளார். சுமார் 15 நிமிடம் பொறுத்து இருந்தும் தன் குழந்தை திருப்பிவராத நிலையில், அத்தாய் மருத்துவமனை அதிகாரிகளிடம் புகார் கொடுத்தார். அதிகாரிகள் உடனடியாக சுற்றுப்புறமெங்கும் தேடியும் குழந்தை கிடைக்காததால் காவல் துறைக்குப் புகார் செய்யப்பட்டது.

4. மருத்துவ கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து வந்துள்ள தகவலின்படி 29—6—1980 அன்று சுமார் மாலை 5-50 மணிக்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு பிறந்த ஒரு உயிருள்ள ஆண் குழந்தை ஒரு துணியில் சுற்றப்பட்டு அரசினர் கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையில் பேறுகால கட்டிடமும் செவிலியர் கண்காணிப்பாளர் அலுவலகமும் கூடுமிடத்தில் காணப்பட்டது. உடனடியாக குழந்தைபேறு வார்டுகளிலும் குழந்தைகள் வார்டுகளிலும் இருந்த குழந்தைகளைச் சரி பார்க்கப்பட்டது. பின்னர் கைவிடப் பட்ட குழந்தையை இம்மருத்துவமனையின் குழந்தைகள் வார்டில் அனுமதிக்கப்பட்டது. உடனடியாக உதவி நிலைய மருத்துவர் காவல் நிலையத்திற்கு தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டதின் பேரில் மூன்று காவலர்கள் மருத்துவமனைக்கு வந்து மேற்கொண்டு விசாரணை நடத்தினர். காணாமல்போன குழந்தையின் பெற்றோர்களின் இரத்தப்பிரிவும் கண்டெடுக்கப்பட்ட குழந்தையின் இரத்தப்பிரிவும் பரிசோதனை செய்யப் பட்டது. இந்த இரத்த பரிசோதனையில் அந்த பெற்றோர்களின் குழந்தை தான் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இடமிருக்கிறது. இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் திரு. கோவிந்தராஜன் திருமதி இளஞ்சியம் அவர்கள் எழும்பூர் நகர மாஜிஸ்ட்ரேட்டிற்கு மனு செய்ததின் பேரிலும், குற்றவியல் ஆய்வாளர் இந்தக் குழந்தையைப் பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிடலாம் என்று தெரிவித்ததின் பேரிலும் நிலைய மருத்துவ அலுவலர் அந்த குழந்தையை தக்க அடையாளம் பார்த்து குற்றவியல் பிரிவு ஆய்வாளர் முன்னிலையில் கொடுக்கும்படி மெட்ரோபாலிடன் மாஜிஸ்டிரேட், எழும்பூர் உத்திரவிட்டார். அதன்பிரகாரம் மருத்துவமனை கண்காணிப்பாளர் குழந்தையை பெற்றோர் களிடம் 4—7—1980 அன்று ஒப்படைத்துவிட்டார்.

5. இந்த இரண்டு சம்பவங்களிலும் அன்னியப் பெண்கள் தாய்மார்களிடம் நட்பு முறையில் பழகி அவர்கள் அறியாமலேயே குழந்தைகளை எடுத்துச் செல்லும் ஒரே முறையை கையாண்டுள்ளனர். இரண்டு சம்பவங்களும் மருத்துவ மனையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படும் நேரத்திலேயே நடைபெற்றுள்ளன. தாய்மார்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே குழந்தைகளை அன்னியர் வசம் ஒப்படைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. இனியும் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ள, மருத்துவ கல்வி இயக்குநர், பின்வரும் முறைகளை பின்பற்றும்படி மருத்துவமனை கண்காணிப்பாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார் :—



1. "குழந்தை திருடர்கள் ஜாக்கிரதை" என்ற அறிவிப்பு பலகை மருத்துவமனைகளில் தாய்மார்களுக்கு தெரியும் வகையில் வைக்கப்பட வேண்டும். அன்னியர்கள் வார்டுக்குள் வருவதை தடுக்கும் வகையில் அறிவிப்பு பலகை வைக்கப்படவேண்டும்.

2. நோயாளிகள் தங்களது உறவினர் அல்லது நண்பர் என்ற அடையாளம் காண்பித்தால் தவிர, மற்ற அன்னியர்களை வார்டுக்குள் அனுமதிக்கக்கூடாது.

3. குழந்தைகள் வெளியேறும் சமயம், தாய்மார்கள் உடன் இல்லாமல் இருந்தால், காவலாளிகள் குழந்தைகள் வெளியேற அனுமதிக்கக்கூடாது.

4. சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் நபர்களையும் வாகனங்களையும் குறித்து உடனடியாக அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மருந்தகங்களிலே நர்சுகளாகப் பணியாற்றக்கூடியவர்கள் பெண்கள். பார்மசிஸ்டுகளாகப் பணியாற்றக்கூடியவர்கள் ஆண்கள். அப்படி இரண்டு சாராரும் ஓரிடத்தில் பணியாற்றக்கூடிய நிலையில், நர்சுகளை மிரட்டக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டு, அவர்கள் அதற்காகப் போராடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு குறைவாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் மீண்டும் வாராமலிருக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நர்சுகள் அன்றாடம் மருந்துகளை வாங்கிக் கொடுக்க வேண்டும். எனவே அவர்களுக்கு வேலைப்பளு ஒழுங்காக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் மூன்று நாட்கள் மருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை மாற்றியமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே உறுப்பினர்களுக்குக் கொடுத்துள்ள அறிக்கையிலே தெளிவாகத் தெரிவித்திருப்பதுபோல, 2-4-1979-ல் பப்ளிக் ஹெல்த் ஜி.ஓ. 600-ல் உத்தரவு போட்டு, அதை அமல் நடத்த முடியாமல் போய்விட்டது. அதற்குப் பிறகு அட்வைசர்ஸ் ரெஜிமில் இரண்டு, மூன்று உத்தரவுகள் மாறி மாறிப் போடப்பட்டன. அதன் விளைவாக இரண்டு சாராருக்கும் சச்சரவு ஏற்பட்டு, தொடர்ந்து இந்தப் பிரச்சினை நீடித்து வந்தது. எனவே அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, எந்தெந்த மருத்துவமனைகளில் தினமும் மருந்துகளுக்கு அவர்கள் இன்டென்ட் போடுகிறார்களோ அந்த மருத்துவமனைகளில் அந்தப் பழக்கம் தொடர்ந்து நீடிக்கப்படும் என்றும், எங்கே வாரத்திற்கு ஒரு முறை இன்டென்ட் போடுகிறார்களோ அங்கே நர்சுகளுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்குமென்று கருதி மூன்று நாட்களுக்கு ஒருமுறை இன்டென்ட் போட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. தினமும் மருந்து கொடுக்க வேண்டுமென்றால், பார்மசிஸ்டுகள் ஜாஸ்தியாக வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நர்சுகள், பார்மசிஸ்டுகள் வேலைக்குப் பற்றாக்குறை இருக்கிறது. குறிப்பாக பார்மசிஸ்டுகளுக்குத் தீவிரப் பற்றாக்குறை—சிவியர் ஷார்ட்டேஜ்—இருக்கிறது. நிரந்தரமாக இந்தப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு லாங்-டேர்ம் ப்ரோக்ராம் வேண்டும். நர்சுகளின் எண்ணிக்கையையும், பார்மசிஸ்டுகளின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகளும் அரசாங்கத்தின் தீவிர கவனத்தில் இருப்பதால், இப்போது சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நன்றாக வேலை செய்வோமென்று வாக்குறுதி அளித்துச் சென்றிருக்கிறார்கள். இப்போது எந்த விதமான பிரச்சினையும் இல்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க லாங்-டேர்ம்



ப்ரோக்ராம் போட்டு ஆவன செய்வோமென்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்களும் திருப்தியடைவார்களென்று கருதுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** நல்வாழ்வுத் துறையின் 2—4—1979 நாளிட்ட அரசாணை எண் 600-ல் யாருக்கு என்ன உரிமை வழங்கப்பட்டிருந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அந்த அரசாணை நர்சுகளைக் கொஞ்சம் சிரமப்படுத்தும் அளவிற்கு இருந்தது. நர்சுகள் ஏற்கெனவே ஒரு நாளைக்கு ஒருமுறை மருந்து இன்டென்ட் போடக்கூடிய நிலைமையை மாற்றி, ஒரு வாரத்திற்கு ஒருமுறை இன்டென்ட் போடவேண்டுமென்று அந்த அரசாணையில் கூறப்பட்டிருந்தது. அதனால் அவர்களுடைய வேலைப்பளு அதிகமானதன் காரணமாக அவர்கள் அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே அந்த ஆணைக்கு நேர்மாறாக மற்றொரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையை பார்மசிஸ்டுகளால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இப்படி குழப்பம் ஏற்பட்டதால், இரண்டு சாராரையும் அழைத்துப் பேசி, இரு சாராருக்கும் திருப்தி ஏற்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

## 4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் 234 பேர்கள் உள்ள அவை, தன்னுடைய பொது விவாதத்தை முடித்துக்கொண்டு விட்டது. ஆனால் 41 பேர்கள் இருக்கிற அவை இன்னும் முடிக்கவில்லை. ஒரு நாளைக்கு விவாதத்தை நீட்டிக்கிறது. இன்னும் ஒன்பது உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் 15 நிமிடங்களுக்குள் தங்களுடைய பேச்சை முடித்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும்தான் பேசுவார்கள். மற்ற உறுப்பினர்கள் இன்றே பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் பேசுவார்கள். அவர் 'விப்' ஆக இருப்பதால், முதலில் பேசி, மற்றவர்களுக்கு வழி காட்டுவார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் "இயற்றலும் ஈட்டலும் காத்தலும்—காத்த வகுத்தலும் வல்ல அரசு" என்ற குறளோடு நிதிநிலை அறிக்கையைத் துவக்கியிருக்கிறார்கள். அதோடு நாடும்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1980 ஜூலை 9

நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறது. "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற குறளின் கருத்துக்கேற்ப புரட்சித் தலைவரிடம் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. "குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு" என்பதுபோல மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையில், இந்த உபரி பட்ஜெட், வரியில்லாத பட்ஜெட்டை டாக்டர் நாவலர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இது அவர் உள்ளத்தைக் காட்டுகிறதென்றுகூடச் சொல்லலாம். காரணம் 1962 மார்ச் மாதம் 17 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையிலே அவர் எதிர்க் கட்சியிலே இருந்தபோது, "மக்கள் வெறுக்கும் புதிய வரிகளைப் போடாமல் எப்படியும் சமாளிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் இன்று அவர் வழங்குகின்ற முதல் பட்ஜெட்டிலே வரியில்லாத நிலையைக் காண்கிற போது, அது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அதே நேரத்தில் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு மாநில அரசுக்கு இருக்கிற அதிகாரங்கள், இருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப எப்படி நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க முடியும், அது எப்படி அமையக்கூடும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே தெரிவித்த ஒரு கருத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணா அவர்கள், "வரவு செலவுத் திட்டத்தை இன்றைய அரசின் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக விளங்கும் வண்ணம் உருவாக்கும் போது, நமது கூட்டாட்சி அமைப்பில் எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்க வேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பின் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த 15 ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின்கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன" என்று கூறியிருக்கிறார்கள். அதனால் நமக்கு இருக்கிற நிலைமைகளை வைத்து இந்த அளவிற்குத்தான் செய்ய முடியுமென்பதைப் புரிந்துகொண்டு, நாம் பார்க்கிறபோது, இந்த பட்ஜெட் மக்களுக்கு நல்வாழ்வு வழங்கும் அளவிற்கும், இந்த அரசின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் அளவிற்கும் அமைந்திருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள் விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகின்றபோது, ஆட்சிக்கு வந்திருக்கிற அரசு வழங்கியிருக்கிற வாக்குறுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னென்ன வாக்குறுதிகள் தந்திருக்கிறார்கள்;



1980 ஜூலை 9] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அதை எந்த அளவிற்கு பட்ஜெட்டில் காட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதை எண்ணிப் பார்க்கிறபோது, ஒவ்வொரு அரசும் பொறுப்பு ஏற்கிறபோது மக்களுக்குத் தரும் வாக்குறுதிகள் ஒரு புறம் இருந்தாலும், அந்த எண்ணத்தை முழுவதுமாக வந்தவுடன் பிரதிபலித்துவிட முடியாது. திருமணமாகி மறுவீட்டுக்கு வந்த உடனே குழந்தைகள் எத்தனை

(பிற்பகல் 4-10)

என்று கேள்வி கேட்கக் கூடாது. நான்கு, ஐந்து ஆண்டுகள் கழித்துக் கேட்டால்தான், பொருத்தமாக இருக்கும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டால், அது பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர்கள் விரும்பினால் கேட்கலாம் அல்லவா ?

**திரு. க. இராமமூர்த்தி** : நான்கு, ஐந்து ஆண்டுகள் நீண்ட இடைவெளி, அப்படித்தான் அரசுமா ? (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : குறைக்கச் சொல்கிறார்களா ? (சிரிப்பு)

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : அடுத்து, வாக்குறுதிகள்பற்றிப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்கூட, "விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்கிறீர்களே, அதற்குப் பண ஒதுக்கீடு எங்கே ?" என்று கேட்டிருக்கிறார்கள். அப்போதுதான் பட்ஜெட் என்றால் என்ன என்பதுபற்றியும், அதுபற்றிய விவரங்களையும் ஆராய வேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. வரவு செலவுத் திட்டம் என்பதுபற்றிய ஒரு நூலை முன்னாள் துணைச் செயலாளர், நிதித் துறை, தமிழக அரசு அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டும். அதில் அவர், "சாதாரணமாக, ஒரு தனி மனிதன், தன் குடும்பச் செலவுகளைத் திட்டமிட்டுப் பார்ப்பதற்கும், அரசாங்கத்தின் விதிமுறைக்கும் அடிப்படையில் ஒரு வேற்றுமை உள்ளதாகச் சொல்லுவது வழக்கம். ஒரு தனி மனிதனோ அல்லது நிறுவனமோ, மேற்கொள்ள இருக்கும் செலவுகள் அனைத்தும், கிடைக்கக்கூடிய வருமானத்திற்குள் அடங்கி இருக்க வேண்டும் என்பது முறை. அதாவது எந்தச் செலவையும் செய்யுமுன், அதற்கு வேண்டிய பணத்திற்கு வகை செய்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, அரசாங்கம் முதலில் தான் செய்ய வேண்டிய செலவுகளை முன்திட்டப்படியோ, அல்லது அதனை விரிவாக்கியோ நிச்சயிக்கும் ; அதாவது தன்னுடைய பொறுப்புகள் எல்லாவற்றையும், கடமைகளையும் நிறைவேற்றத்

தேவையான செலவினங்களையும், அளவுகளையும் நிர்ணயம் செய்து கொள்ளும்; பிறகுதான், இதற்கு வேண்டிய பணத்தை, எந்தெந்த வகையில் திரட்டலாம் என்று ஆராயத் தொடங்கும்." என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இந்த அரசின் நோக்கம் எல்லாம் விவசாயிகளுக்குக் கடன் இல்லாத ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான். நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும், நம்மைவிட வேறு ஒரு பெரிய இடம் இருக்கிறது என்பதும், அங்கே நாம் நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. அதற்கு மற்றவர்களும் ஒத்துழைத்தால் நாம் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். வாக்குறுதிகள் என்று சொன்ன உடனேயே தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் எந்த அளவுக்கு வாக்குறுதிகள் தந்துள்ளன என்பதைப்பற்றி "இன்டஸ்டிரியல் எக்கனாமிஸ்ட்" என்ற ஏடு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் தந்திருக்கிறது என்பதை கீழ்க்கண்டவாறு அந்த ஏடு கூறுகிறது :—

"The D.M.K. promised to strive to get farmers better price for their produce and relief from mounting loan arrears. It promised to set up an Agricultural Development Board to draw up programmes to improve the condition of farmers and ensure their implementation; grants to the poor to buy gold for thali and retirement grant to Government servants."

இந்திரா காங்கிரஸ் கட்சியும் வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்றால், "மத்திய அரசு உதவி செய்யவில்லையென்றால் நாங்களே உதவி செய்வோம்; அதாவது மாநில அரசே தன்னுடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு உதவி செய்யும்" என்ற அளவுக்கு வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் பொறுப்புக்கு வந்திருந்தால், எந்த அளவுக்கு அவர்கள் சொல்லியவற்றை நிறைவேற்றியிருப்பார்கள் என்கிற சந்தேகம் இப்போது எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரை, இந்த அரசு எவ்வளவு கருணையோடு நடந்துகொண்டிருக்கிறது, அனுதாபத்தோடு நடந்து வருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரை, 43 பைசா ஒரு யூனிட்டுக்குச் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் நாம் விவசாயிகளுக்கு 14 பைசா என்றும், 12 பைசா என்றும் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தைத் தருகிறோம். மின்சார வாரியம் இன்றையதினம் 59 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நாலில் ஒரு பகுதியை நாம் விவசாயிகளுக்காக வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதுமட்டு





மல்ல, நல்ல ரக விதைகளை நாம் விவசாயிகளுக்காக விவசாயிகள் மூலம் உற்பத்தி செய்து தருகிறோம். மேலும் தகுந்த முறையில் பயிற்சி பெறுவதற்காக அவர்களுக்காக தாராபுரத்தில் ஒரு பயிற்சிப் பள்ளியையும் நடத்தி வருகிறோம். விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக இப்படி பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். மேலும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம், மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைக்குக் கூடுதலான விலையில், நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கியதன் மூலம் விவசாயிகளுக்கு உதவி புரிந்துள்ளது. சென்ற குறுவைப் பருவத்திலும், சம்பாப் பருவத்திலுமாக மொத்தம் இரண்டு இலட்சம் டன் நெல்லை இவ்வாறு கூடுதலான விலையில் இந்த நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது. விவசாயத் துறையில் பல நன்மைகளை நாம் மேற்கொண்டிருப்பது விவசாயிகளிடத்தில் இந்த அரசு கொண்டுள்ள நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல 58 கோடி ரூபாய் கடன் ரத்து செய்வதற்கும் வகை செய்திருக்கிறோம் என்றால், அதுவும் இந்த அரசின் நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், டீசல் விலையை எடுத்துக்கொண்டால்கூட, தமிழ் நாட்டைச் சுற்றியிருக்கிற மாநிலங்களில் உள்ள விலையைவிட தம் மாநிலத்தில் விவசாயிகளுக்கு நாம் 30 பைசா குறைவான விலைக்குக் கொடுக்கிறோம். அதேபோல பெட்ரோல் விலையை எடுத்துக்கொண்டால்கூட, 16 பைசா வித்தியாசம் இருக்கிறது. விவசாயிகளுடைய நன்மையைக் கருத்தில்கொண்டு, டீசலை அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், அதில்கூட வரி விதிப்பில் நல்ல ஒழுங்கு முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். கேரளா எல்லையில் ஆகட்டும், இல்லை பெங்களூர் எல்லையில் ஆகட்டும், அந்தப் பகுதிகளில் எல்லாம் விலைகளில் வித்தியாசம் இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது, இந்த அரசு விவசாயிகளுக்காக மறைமுகமாகவும்கூட எந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரை, இந்த அரசு மேற்கொண்டிருக்கும் நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்று வழிகளில் நாம் மின்சாரத்தைப் பெறுகிறோம். ஒன்றாவது அனல் மின் நிலையத்தின் மூலம் மின்சாரம் பெறுகிறோம். இரண்டாவது நீர் மின் திட்டங்கள் மூலம் மின்சாரம் பெறுகிறோம். மூன்றாவது-அண்டை மாநிலங்களிலிருந்து பணம் கொடுத்து மின்சாரத்தை வாங்குவதன் மூலம் நாம் மின்சாரத்தைப் பெறுகிறோம். அனல் மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலக்கரியை சிங்கரேணியிலிருந்து நாம் பெறுகிறோம். முன்பு வாங்கிய விலையைவிட இப்போது நிலக்கரிக்கு விலை கூடியிருக்கிறது. ஆகவே அனல் மின் நிலை

யங்களின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய இனிமேல் கூடுதல் செலவாகும். நீர் மின் நிலையங்களின் மூலம் மின்சாரத்தைப் பெருக்க வழியில்லாத அளவுக்கு கேரள அமைச்சர் ஒரு சொட்டு நீர்கூடத் தர முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைய தினம் நிலைமைகள் இருக்கின்றன. விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கலாம் என்று பார்த்தால்கூட, கேரளா முன்பு நமக்கு யூனிட் ஒன்றுக்கு 12.5 பைசாவுக்குத் தந்து வந்தது; இப்போது அவர்கள் யூனிட் ஒன்றுக்கு 28 பைசா வீதம் வேண்டுமென்று சொல்லி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் கருதித்தான் "ஓஷன் தெர்மல் எனர்ஜி கன்வெர்சன்" (Ocean Thermal Energy Conversion) முறையில் மின்சார உற்பத்திக்கு வழி செய்ய வேண்டுமென்று தமிழக அரசு இப்போது திட்டம் தீட்டியிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். இந்தத் திட்டம் வெற்றி பெறுமானால், தமிழகம் யாரையும் மின்சாரம் வேண்டி எதிர்பார்க்க வேண்டிய ஒரு மோசமான நிலை இருக்காது. அதுபோல் Power from the deep sea என்ற தலைப்பில் கருத்து தெரிவிக்கும்போது, கடலிலிருந்து மின்சாரம் எடுப்பதுபற்றி கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"The process is simple and the power to be had unlimited but it needed an energy crisis to goad the Amercian Scientists into action and discover that the idea was a feasible one."

குறிப்பிட்ட தமிழகத்தின் கடல் பகுதிகளில் கடலின் மேல் பகுதியில் இருக்கிற கொதிப்பும், கடலுக்கு அடியில் இருக்கிற நீரின் குளுமையும் நமக்கு மின்சாரம் எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கிறது. நாம் கடலிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற முயற்சி வெற்றி பெற்றால், நமக்கு இப்போது தேவைப்படுகின்ற உச்ச அளவு மின்சாரத்தைப் போல் நான்கு மடங்கு நாம் மின்சாரம் எடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவில் இத்தகைய நடவடிக்கை எடுத்தால், அவர்களும் உடனடியாக 20 ஆண்டுகளுக்குத் தேவையான மின்சாரத்தை எடுக்க முடியும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகமும் இனி இதில் தீவிரமாக கவனம் செலுத்தி மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சிபற்றி வழக்கமாகக் குறை சொல்லி வருகிறார்கள். இந்த அரசு ஆட்சிக் காலத்தில் தொழில் துறை வளரவில்லை என்றும், தொழில் அதிபர்கள் புதிய தொழில்களைத் தொடங்க அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கவில்லை என்றும் பேசி வருகிறார்கள். ஆகவே தொழில் வளர்ச்சியில் பின் தங்கியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.



மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள்கூட அதற்கு விளக்கம் சொன்னார்கள். தமிழகம் 13-வது இடம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அது யார் கண்டுபிடித்த இடம் என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இந்தக் குற்றச்சாட்டு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், பரவலாகச் சொல்லப்பட்டு வந்த குற்றச்சாட்டு. திரு. வெங்கட்ராமன் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தபோதும் இம்மாதிரிக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதற்கு அவர் ஒரு பதில் தந்தார். அவர் என்ன சொன்னார் என்றால், '1950 ஆம் ஆண்டு என்று எடுத்துக்கொண்டால், இந்தியாவில் தொழில்கள் இரண்டு இடங்களில்தான் இருந்தன. கல்கத்தாவிலும் பம்பாயிலும் மட்டும் தொழில்கள் இருந்தன. 1955 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் பம்பாய், கல்கத்தா என்று இருந்த நிலைமை மாறி, சென்னையிலும் ஓரளவு தொழில்கள் என்ற பெயர் வந்தது. 1960 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், எல்லா மாநிலங்களிலும் பரவலாகத் தொழில்கள் ஏற்பட்டன. சென்னையில் 10 சதவிகிதம் தொழில்கள் ஏற்பட்டன. பல மாநிலங்களில் தொழில்கள் பரவலாக வந்ததன் காரணமாக கல்கத்தாவில் 20 அல்லது 23 சதவிகிதம் குறைவு என்கிற நிலைமை ஏற்பட்டது. குறைவு என்று சொன்ன உடனேயே உண்மையிலேயே அங்கே இருந்த தொழில்கள் குறைவாகி விட்டன என்று அர்த்தமல்ல. அங்கே இருந்த எந்தத் தொழில்களும் குறையவில்லை. ஆனால் மற்ற இடங்களில் எல்லாம் பரவலாகத் தொழில்கள் வந்ததன் காரணத்தால், மொத்தத்தில் தொழில்கள்பற்றிய கணக்கை எடுத்துக்கொண்டு பார்த்ததில், அங்குள்ள தொழில்களின் வளர்ச்சி பெர்செண்டேஜ்படி குறைவு என்கிற கருத்தைத் தெரிவித்தார்கள். பல மாநிலங்களில் தொழில்கள் வளர்ந்த நிலை ஏற்பட்டுக்கொண்டிருப்பதால், அந்த வளர்ந்த நிலையைக் கணக்கிட்டுப் பார்த்தால், நாம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கி விட்டோம் என்பது அல்ல நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை பிரச்சினை. இங்கே தொழில்களை ஆரம்பிக்க முன்வரும் தொழில் அதிபர்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே எத்தகைய நோக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அரசுக்கு நிபந்தனை விதிக்கிறார்கள். 20 ஆண்டுகளுக்கு 13 ஆண்டுகளுக்கு வரியைக் கட்ட மாட்டோம் என்றும், அதற்கு அரசு சம்மதித்தால்தான், தொழிலைத் தொடங்குவோம் என்றும் நிபந்தனை விதிக்கிறார்கள். அரசுக்கு இப்படிப்பட்ட நிபந்தனைகளை தொழில் அதிபர்கள் விதித்தால், அது நியாயம் என்று சொல்லுகிறீர்களா? உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை மட்டும் தான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்சாரக் கட்டணத்தைக் கட்ட மாட்டோம் என்றும்,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1980 ஜூலை 9

ஒரு சிறு தொழில் அதிபர் 15 பேர்களை வைத்து ஒரு தொழிலை நடத்து கிறார். 15 தொழிலாளர்களை வைத்து தொழிலை நடத்தும் தொழிற்சாலையில் அதிக மின்சாரத்தை உபயோகப்படுத்திவிட்டார்கள் என்ற காரணத்திற்காக, ஆறு மாதம் அங்கு மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. ஆனால் பெரிய தொழில் அதிபர்களோ தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்பே அரசுக்கு வரி கட்ட மாட்டோம் என்றும், மின்சாரக் கட்டணத்தை 20 ஆண்டுகளுக்குக் கட்ட மாட்டோம் என்றும் அரசுக்கு நிபந்தனை விதிப்பது என்றால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இதையெல்லாம் பார்க்கும்போது, இந்த அரசு தொழில் வளர ஊக்கம் காட்டவில்லை, தொழில் அதிபர்களை ஊக்குவிக்கவில்லை என்றெல்லாம் சொல்லும் குற்றச்சாட்டுகளில் நியாயம் இல்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-20)

அதோடு, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள இந்த அரசு தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்க முன்வந்திருப்பதை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பலரும் ஆட்சியில் இருந்த போது இதை எண்ணியிருக்கக்கூடும். ஆனால் ஒருவேளை இந்தச் சமயம் அதற்குப் பொருத்தமான வேளையாக வந்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை, மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு தமிழுக்கு ஓர் உயர்ந்த இடத்தை உருவாக்க இருக்கிறது. தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாகிற போது, அங்கே பல ஆராய்ச்சிகள் நடத்த வாய்ப்பிருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழகத்திலே பழந்தமிழ் நாணயங்களைக் குறித்து ஆராய்ச்சி நடத்தலாம். தமிழ் நாட்டுச் செப்பேடுகள் என்ன செய்திகளைச் சொல்லுகின்றன என்பதை ஆராயலாம். கல்வெட்டுகள் என்னென்ன கதைகளைச் சொல்கின்றன என்பது குறித்து ஆராயலாம். தமிழ் நாட்டு அணிகலன்கள் கூறும் அழகுகளைப்பற்றி ஆராயலாம். திராவிட நாகரிகத்தைப்பற்றி ஆராயலாம். சங்க காலத்தில் தமிழகம் கடல்வழியாக உறவு கொண்டிருந்த நாடுகளைப்பற்றி ஆராயலாம். கடல்கொண்ட தமிழகத்தின் பகுதிகளையும், சங்க கால வாழ்க்கை நெறிகளையும் பழந்தமிழர்களின் வாணிகம் குறித்தும், பழந்தமிழர் அயல் நாடுகளோடு செய்துவந்த வாணிகம் குறித்தும், பழந்தமிழ் மக்களின் வளர்ச்சி குறித்தும் அன்றாட வாழ்க்கை முறைகள்பற்றியும் ஆராய்ச்சி செய்யலாம். இதற்கெல்லாம் அந்தப் பல்கலைக் கழகம் துணையாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே தமிழகத்தில் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றனவே, அங்கெல்லாம்கூட தமிழ்த் துறை இருக்கின்றதே, அப்படி இருக்கும்



1980 ஜூலை 9] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

போது எதற்காக தமிழுக்குத் தனிப் பல்கலைக் கழகம் என்று யாரும் கேட்டுவிட மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். புதிதாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் துவக்கப்படும்போது, இதற்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு கொண்டு வந்திருக்கும் பல்வேறு திட்டங்களைப்பற்றியும் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். வறுமைக் கோடு எங்கே ஆரம்பமாகிறது என்ற வினா இங்கே எழுப்பப்பட்டது. 'நேஷனல் சாம்பிள் சர்வே மூலம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு குறிப்பு வழங்கப்பட்டது அதில், 62 சதவீத மக்கள் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்ற விவரம் கொடுக்கப்பட்டது. 1969-70 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கின் அடிப்படையில் ரூபாய் 20 முதல் ரூபாய் 30 வரை வருமானம் உள்ளவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வருகிறார்கள் என்ற ஒரு கணக்கும் கொடுக்கப்பட்டது. பிறகு சமீபத்தில் அளிக்கப்பட்ட விவரத்தின் அடிப்படையில் பார்த்தால், ரூபாய் 65 முதல் ரூபாய் 75 வரை வருமானம் உள்ளவர்களாக இருப்பவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் முதியோர் உதவித் தொகை, கைம்பெண்கள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, கண்ணொளியற்றோர் உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை போன்ற உதவிகளைப் பெறுபவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் உதவிட இந்த அரசு நல்ல பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறபோது, இன்னொரு கருத்தையும் நாம் மறுப்பதற்கில்லை.

இதில் தமிழ் நாட்டில் உள்ள நிலைமை என்னவென்றால், தமிழ் நாட்டின் கிராமப்பகுதிகளில் வாழ்பவர்களில் 62 சதவீதத்தினரும், நகரப் பகுதிகளில் வாழ்பவர்களில் 52 சதவீதத்தினரும் குஜராத் மாநிலத்தைக் காட்டிலும் வறுமை நிலையில் இருக்கின்றனர். தமிழ் நாட்டில் நபர்வாரி வருமானம் குறைவு. பஞ்சாப் இதில் முதலிடம் வகிக்கிறது. அங்கே நபர்வாரி வருமானம் ரூபாய் 1,658. அடுத்து அரியானா மாநிலம். அதற்குப் பிறகு மகாராட்டிர மாநிலம், அதற்கு அடுத்து குஜராத், அதற்கடுத்து இமாசலப் பிரதேசம், பிறகு மேற்கு வங்கம், பிறகு கருநாடகம் என்று வந்து இறுதியாக கேரளம் குறைவான இடத்தைப் பெற்றிருக்கிறது. இதில் தமிழ் நாடு 9-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டின் நபர்வாரி வருமானம் ரூபாய் 997 தான்.

இதைக் கணக்கிட்டு, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு உதவிட வேண்டும் என்று அரசு எண்ணுகிறபோது, இதை ஒரு கட்சிக்குரிய பிரச்சினையாகவோ அல்லது இந்த ஆட்சிக் கட்டிலுக்கு வந்திருப்பவர்களின் பிரச்சினையாகவோ நாம் கருதிவிடக்கூடாது. இது அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய பிரச்சினை என்று நாம் கருத வேண்டும். அப்படிக் கருதுகிறபோதுதான் ஆண்டுத் திட்டங்களிலும், ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டதற்கான காரணத்தை நாம் அறிய முடியும். இப்படிப் புறக்கணிக்கப்பட்டதால்தான், தமிழ் நாடு நபர்வாரி வருமானத்தில் 9-வது இடத்தைப் பெற்றிருக்கிற நிலை ஏற்பட்டது. எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் தொழில் துறையில் தமிழ் நாடு எத்தனையாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற கணக்கைக் கேட்பதைக் காட்டிலும், தமிழ் நாடு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்க வேண்டும். அப்போதுதான் ஆண்டாண்டுக் காலமாக தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழகமும், தென்னகமும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்று கூறி வந்ததைப் புரிந்துகொள்ள முடியும். இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு வந்தால்தான், மத்திய அரசு தமிழ் நாட்டின் பக்கம் திரும்பும். அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம்தான் தமிழ் நாட்டின் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்களுக்குப் புதிய வாழ்வைத் தர முடியும், தமிழ்ச் சமுதாயம் புதிய வாழ்வைப் பெறுவதற்குத் துணையாக இருக்கும் என்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கை தமிழ்ச் சமுதாயத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய இனிப்புக் கனியாக, நல்ல மகிழ்ச்சி தரக்கூடிய சுவை மிகுந்த பட்ஜெட்டாக இருக்கிறது என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. முனுசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையில் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடத்தக்க சில சிறந்த அம்சங்கள் இருந்தாலும்கூட, நீண்டகாலத் திட்டங்களுக்கு இந்த அறிக்கையில் வழிவகை செய்யப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளின் கடனை ரத்து செய்வது வரவேற்கக்கூடிய அம்சமாக இருந்தாலும், இதைக் குறித்து ஒரு கருத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூ. 50 கோடி அளவுக்கு விவசாயிகளின் கடன் ரத்து செய்யப்பட இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்போலவே மராட்டிய மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் ஆட்சிகூட சுமார் 50 கோடி ரூபாயை விவசாயக்





கடனை ரத்து செய்திருக்கிறது. ஆனால் அதற்காக அந்த மாநிலம் மத்திய அரசை எந்த வகையிலும் மானியம் கோரி அணுகவில்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் சைக்கிள் மீது இருந்த 6 விழுக்காடு வரியை நீக்கி 3 விழுக்காடு வரியாகப் போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

முதியோருக்கான பென்ஷன் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். இந்த முதியோர் திட்டம் வரவேற்கக்கூடிய அம்சம்தான் என்றாலும், இது ஏற்கனவே காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது, அதிலும் குறிப்பாக மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கொண்டு வரப்பட்டது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விதவைகளுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும் உதவித் தொகை அளிக்கக்கூடிய திட்டத்தைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடியதுதான் என்றாலும், அந்தத் திட்டங்களும் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்துகொண்டிருந்தபோது கொண்டு வரப்பட்ட திட்டங்களாகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏழை மக்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக அளிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி வழங்குவது என்பது போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிலோ அரிசி என்பது 5 ஆழாக்கு அரிசிதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே வாரத்திற்கு 5 ஆழாக்கு அரிசி போதுமா என்பதை எண்ணிப் பார்த்து, வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது வாரத்திற்கு 1 கிலோ அரிசி என்று சொல்வதைவிட மாதத்திற்கு 10 கிலோ அரிசி என்றால் நிச்சயமாக அதற்கு மதிப்பிருக்கும் என்று இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், எத்தனையோ தற்காலிக நிவாரணத் திட்டங்கள்தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய, நீண்ட காலத் திட்டங்கள் எதும் அறிவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். ஒரு நாட்டின் வறுமையையும் வறட்சியையும் போக்க நீண்டகாலத் திட்டங்கள் தேவை. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இது அன்றாடத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்களைக் கொண்டிருக்கிறதே ஒழிய நீண்ட காலத் திட்டங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஏதோ அவசர கால நிவாரண பட்ஜெட்டைப்போல்தான் மக்கள் இதைக் கருதுகிறார்கள்.

" வயிற்றுக்கு சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதர்க்கெல்லாம் பயிற்றும் பல கல்வி தந்து.

இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" என்று பாரதியார் கூறியதை இங்கே நினைவு கூர்ந்து வறுமை ஒழிப்பு என்பது சமுதாய மாற்றத்திற்கு மிகவும் முதன்மையானது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

75 விழுக்காடு கிராமங்களைக் கொண்ட இந்த நாட்டில் முதலில் உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக வேண்டும். இந்தத் திட்டம் நீண்ட நெடுங்காலமாகப் பல கட்சிக்காரர்களாலும் வலியுறுத்தப்பட்டு வந்திருந்தாலும், இதைச் செயல்படுத்துவதைப்பற்றிச் சிந்திப்பவர்களைக் காணோம். இந்தத் திட்டத்தை சினிமா மூலம் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்து சட்ட மன்றத்தின் மூலமாகத்தான் சாதிக்க வேண்டும். இந்த அரசு இதைச் செய்யுமா ? செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மேற்கே பாயும் நதிகளைத் தமிழகத்திற்குத் திருப்பி இங்கே தண்ணீர் கொண்டுவர வேண்டும். இதைப்பற்றி பல சட்டமன்ற உறுப்பினர்களும் அண்மையில் பேசியிருக்கிறார்கள். இத்துறை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட இது சம்பந்தமாக நாங்கள் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்றும், நிச்சயமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்றைய தினம் வெளிவந்த பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால், கேரளத்திலிருந்து ஒரு சொட்டு தண்ணீர்கூட தமிழகத்திற்குத் தரமுடியாது என்று அங்கே உள்ள அமைச்சர் பேசியிருக்கிறார். அதை ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஆதரித்து, இது சம்பந்தமாக மத்திய அரசால் நியமிக்கப்பட இருக்கிற கமிட்டியை நிராகரிக்க வேண்டும் என்றும் பேசியிருக்கிறார். இதிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களின் உறவுபற்றி ஆளும் கட்சி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் பேசுகிற ஜனநாயகத்தைப்பற்றி இந்த அரசு கொஞ்சம்





சிந்திக்க வேண்டும். ஏனென்றால் மத்திய அரசோடு இந்த அரசு மோதுவதை அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே ஆட்சியாளர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்றும் அவர்களோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டாம் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில், இனி நீர் மின் உற்பத்தியை நம்பிப் பயனில்லை. எனவே தூத்துக்குடியில் உள்ள தெர்மல் ஸ்டேஷனை விரிவுபடுத்த வேண்டும் என்றும், அதைப் போலவே சென்னையிலுள்ள எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனை விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அங்கே அனுபவம் இல்லாத பொறியாளர்களை

(பிற்பகல் 4-30)

வைத்துக் கொண்டு தெர்மல் ஸ்டேஷன் நடத்தப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே நல்ல விவரம் தெரிந்த, அனுபவம் வாய்ந்த பொறியாளர்களை நியமித்து அந்த மின் நிலையத்தை நல்ல முறையிலே இயக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில், சோவியத் யூனியனை எடுத்துக்கொண்டால், அங்கே உள்ள குழந்தைகள் அனைவருக்கும் சத்துணவும், சிறந்த சுகாதார வசதிகளும் அளித்து மேலும் நர்சரிப் பள்ளிகளையும், கிண்டர் கார்டன் பள்ளிகளையும் தட்டுப்பாடின்றி நாடு முழுவதிலும் ஏற்படுத்தி கல்வியைப் போதிக்கிறார்கள். அங்கே தேச பக்தியையும், நல்லொழுக்கத்தையும், தோழமை உணர்வையும், நல்லுணர்ச்சிகளையும் இளஞ்சிறார்களின் இரத்தத்தில் பாட நூல்களின் வாயிலாகப் பாய்ச்சி விடுகிறார்கள். நாடு, இனம், மொழி பேதமின்றி அனைவரையும் நேசிக்க, நட்புறவு கொள்ள, இயற்கைக் காட்சிகள் நிறைந்த உல்லாச வாசஸ்தலங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நாடு விடுதலை அடைந்து 32 ஆண்டுகள் ஆகியும், பல்லாயிரக் கணக்கான குழந்தைகளுக்குக் கல்வியைக் கற்பிக்க நம்மால் முடியவில்லை.

இங்கே பெரிய தொழிற்சாலைகளை அமைக்க எந்தவிதத் திட்டமும் இல்லை. சிறிய தொழிற்சாலைகளையாவது நிறுவி அதன் மூலமாக நல்ல தொழில் திட்டங்களை நடத்த இந்த அரசு முன்வர வேண்டும். சிறிய தொழிற்சாலைகளை பல பேர் ஆரம்பிக்கிறார்கள். சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக அரசாங்கத்தின் மூலமாக மனுச் செய்து பெற்ற கச்சாப் பொருள்களை வெளிச் சந்தையில் கள்ள மார்க்கெட்டில் விற்று, தொழிற்சாலையை நடத்தாமல் இருக்கிறார்கள். இந்த மாதிரியான

நிலைமையைப் போக்கி உண்மையிலேயே தொழிற்சாலைகளைத் துவங் வேண்டும். இங்கே ஐ.டி.ஐ. படித்த பல மாணவர்கள் வேலை இல்லாம இருக்கிறார்கள். இப்படி வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் நேரத் தில், ஐ.டி.ஐ. படித்த மாணவர்கள் சிறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் இலவசக் கல்வித் திட்டம் வந்த பிறகு, வீதிக்கு வீதி தனியாரால் நடத்தப்படும் ஆங்கில நர்சரி பள்ளிகள் பெருகிவிட்டன. ஏழை குழந்தைகள் இதில் எப்படி படிக்க முடியும்? ஆகவே நகர சபைகளாலும் பஞ்சாயத்து யூனியன்களாலும் நடத்தப்படும் பள்ளிகளில் ஆங்கிலத்தை ஆரம்பப் பாடசாலையிலிருந்தே கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலம்புப் பயிற்சியைப்பற்றி நினைவூட்ட விரும்புகிறேன். பண்டை நாட் களில் முனிவர்கள் கூட சிலம்புப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று அறி கிறேன். தலைவர் அவர்கள் கூட அந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள் என்று அறிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதாவது இளைஞனாக இருந்த போது.

திரு. பி. முனுசாமி : இந்தப் பயிற்சி இப்போது மறைந்து விட்டது. சமூகவிரோத சக்திகளுக்குத்தான் இது பயன்படுகிறது. ஆகவே சிலம்புப் பயிற்சியையும், கராத்தே பயிற்சியையும் கற்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

administered State so far as traffic control is concerned. I have been driving my vehicle for 30 years and fortunately I have had no major or minor accidents touch-wood.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு, அதைப் பற்றி மேல் நாடுகளுக்குச் சென்று தெரிந்து கொண்டு வந்த திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் அதிலே பங்கு கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : I would only request the Government, if necessary in Madras City, to revive the system of Honorary Magistrates. I am not a claimant for the job. But I would gladly volunteer my services to the Government as an honest Honorary Magistrate. If the Government give me that position, I will see that traffic accidents are reduced within one month. But I may charge so many people that the Government will have to dismiss me from the post.

One word about Labour welfare. I want to mention this because my hon. Friend Thiru Nallasivan spoke about the exploitation of the labour class by the capitalists and the mentioned that everthing should be nationalised, etc. etc. I would like to tell the Hon. the Minister for Labour that the Provident Fund Scheme which is a Cenrally administered scheme, with the Regional Provident Fund Commissioner at Madras is one of tne worst administered schemes in the State. I would like to give him a specific case study because I am not in the habit of making a general complaint. My firm has been a subscriber to the Provident Fund Scheme from 1962. I have not defaulted even once. I have submitted all my accounts and I have not been prosecuted and there was no charge-sheet or anything. In August 1978, a labourer by name Vanna Udayar who had been in my service for 14 to 15 years died in service. He was a member of the Provident Fund Scheme, the Family Benefit Scheme and various other schemes. An application for withdrawal of the Provident Fund money was made by his widow, who had five children to support. Till date, the Provident Fund money has not been paid and the Family Pension of Rs. 50 which was due to the family of this employee has not also been paid for the reasons which I shall presently state. First, in one letter, the widow was asked to submit a Death Certificate. She submitted the Death Certificate. In the next letter, she was asked to prduce an Estate Duty Clearance Certificate. Sir, I am not joking and this is on record. This widow



1980 ஜூலை 9] [Thiru A. R. Damodaran]

of a labourer, with no property and with five dependent children was asked to produce an Estate Duty Clearance Certificate. So, she went to Thanjavur and saw the Estate Duty Controller. He said, " How am I to give you a Clearance Certificate ? You may be owning a palace in Ulundurpet ". By that time, three or four nonths had elapsed. Then, I had to use my gentle influence. Four months later, another letter came stating that the nomination made by the dead employee was not valid and that the widow should produce a Succession Certificate through Court, I am only bringing this to the notice of the Hon. the Minister for Labour. He has a representative of the Tamil Nadu Government on the Provident Fund Commissioner's Board. What are these people doing while attending the Board meetings ? He could not help the very labourers in respect of whom he is accusing us saying that we ill-treat them. Sir, this is not the only instance. The working of the department is a scandal. The Provident Fund amounts are not being returned to the employees. In respect of employees who have gone away from service after paying their contributions to the Provident Fund, bogus receipts are being forged to draw amounts from the Provident Fund Accounts. I am giving the full details which investigation revealed. I would like the Hon. Minister . . . .

Thiru G. VASANTHA PAI : Sir, I want to point out to the ion. Member Thiru Damodaran that it is not the Provident Fund Department alone which does it. The Life Insurance Corporation of India also does it. Because I get an annuity of Rs. 50 per month, every year they ask me to give a certificate to the effect that I am alive. Every year, they ask me to renew the certificate to the effect that I am alive.

* The Hon. Thiru S. RAGHAVANANDAM . Sir, may I remind he hon. Member Thiru Damodaran that the Provident Funds are being administered by the Central Government and that we have to say on that ? It is completely being administered at the regional level through the Regional Provident Fund Commissioner.

Thiru A. R. DAMODARAN : So, the dependants of labourers who die in Tamil Nadu have to approach the Central Government for relief. It is strange, Sir.

The Hon. Thiru S. RAGHAVANANDAM : This Government will take note of the observations made by the hon. Member and will pass on the observations to the Secretary, Labour who is the Chairman of the Regional Committee for necessary action.

Thiru A. R. DAMODARAN : That was my intention in bringing the matter to the notice of the Hon. Minister.

Sir, while more provision has been made for Family Planning and Family Welfare in the Budget, the emphasis on Family Planning will have to be considerably stepped up. I would only make a request to the Hon. the Chief Minister in this regard. There is no doubt that he has tremendous influence amongst the women-folk of Tamil Nadu. If there is any person whom they will listen to, it will be the Hon. the Chief Minister, I am not mentioning this as a joke. I attended a wedding reception where the Hon. Dr. Neduncheziian spoke on the Family Planning Scheme and the Hon. the Chief Minister spoke about the necessity for self-control in controlling families. I hope that he does not except all people in Tamil Nadu to exercise self-control in controlling their families. We require a very active Family Planning programme and, therefore, I would make a request to the Hon. the Chief Minister. Strangely enough, the symbol of his Party, viz., two leaves, is also the symbol of the Family Planning movement which reminds that one should have only two children. I hope that when he raises his hand and shows two fingers at the various meetings which he will address, he will also interpret it to the women-folk of our State to say that they should not have more than two children.

Thank you, Sir.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியிலே நின்று, என்னுடைய புரட்சித் தலைவர் அவர்களை மானசீகமாக வணங்கி வேண்டி, மூத்த அறிவுடையோர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த மேலவையில் எனக்குப் பேச வாய்ப்பினைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு நாவலர் அவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேச விழைகிறேன். புனித தலைவர் அவர்களுடைய புனித பாதத்தை மானசீகமாக வணங்கி என்னுடைய கன்னி உரையை நான் தொடங்குகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து தாக்கல் செய்திருந்தாலும்கூட, தமிழர் சமுதாயத்தினுடைய நீண்ட நாளைய குறைகளைத் தீர்ப்பதோடு, எதிர்கால வாழ்வுக்கும் ஏற்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.



அமெரிக்க நாட்டுச் சரித்திரத்திலே பக்கங்களைப் புரட்டுகிற காலத்திலே அமெரிக்க ஜனாதிபதி திரு. ஹூவர் குறுகிய காலத்திலே, அதாவது குறிப்பாக 30 மணி நேரத்தில், அமெரிக்க நாட்டில் உள்ள மக்களால் போற்றப்படுகின்ற அளவுக்கு ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ததாக அமெரிக்க வரலாறுகள் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். அதுபோலவே தமிழ்நாட்டு வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒரு ஜீவனான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்று தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கியிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைத் தமிழகத்திலே இருக்கின்ற பெருவாரியான மக்கள் வரவேற்கிறார்கள். மன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் வரவேற்றாலும்கூட, ஒருசிலர் அதிலேயும் ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சொல்லவேண்டும் என்றும், அதிலே குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் குற்றங்களை, குறைகளைச் சொல்லி, எப்படியாவது மக்களுடைய கவனத்தைத் திருப்ப வேண்டும் என்று பேரவையிலேயும், மேலவையிலேயும் பலவிதமான குற்றச்சாட்டுக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், அவர்களுடைய கருத்தோட்டத்தோடு பேசுகின்ற நோக்கில், இந்த நிதிநிலை அறிக்கையிலே காண்பதற்கு எதுவுமே இல்லை, மக்களுடைய வாழ்க்கைக்கு ஒரு உத்தரவாதம் தரக்கூடிய அளவிலே இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்று சொன்னார்கள். நான் இதைப்பற்றிச் சொல்வது, இங்கே இந்த நிதிநிலை அறிக்கையை அவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவரவில்லை. இந்த நாட்டிலே இருக்கின்ற பெருவாரியான மக்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற 41/2 கோடி மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்திருக்கின்றார்களே தவிர, அவர்களைப் போற்ற வேண்டும், பாராட்ட வேண்டும் என்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவரவில்லை என்பதை நான் முதலாவதாகச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு கானல்நீராக இருக்கிறது என்று இந்த அறிக்கையை விமர்சித்திருக்கிறார்கள். அத்திப் பழத்தைப் பிரித்துப்பார்த்தால், அதிலே சொத்தை என்றெல்லாம் சொல்லி, நிதிநிலை அறிக்கையை விமர்சனம் செய்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கை ஒரு ஜீவ நதி, குற்றால அருவி என்று சொல்ல வேண்டும். குற்றால அருவியிலே குளித்தால் நோய்கள் எல்லாம் தீரும் என்பார்கள். மனநோய் கூட தீர்வதாகச் சொல்கின்றார்கள். குற்றாலம் அருவியிலே குளித்தால் நோய்கள் தீரும், மன நோய் தீரும் என்பதுபோல, இந்த நிதி

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1980 ஜூலை 9

நிலை அறிக்கையினால், இந்த நாட்டிலுள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களின் பசியை, பிணியைப் போக்குகின்ற நிலை இருக்கின்றது. நிதி அமைச்சர் அவர்கள் அதைத் தீர்க்கின்ற மருத்துவனாக இருந்து இந்த அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால், அது மிகையாகாது என்று கூறிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

பசிப் பிணியைப் போக்குகிற மருந்தாக, $4\frac{1}{2}$ கோடி மக்களுடைய பசியைப் போக்கக்கூடிய முறையிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால் இதை 'கானல் நீர்' என்று சொல்கிறார்கள். அது அவர்களுக்குக் கானல் நீராகத்தான் தெரியும். காரணம் 7 ஆண்டுக் காலம் வறண்ட பாலைவனையே பார்த்தவர்களுக்கு ஜீவ நதியாக இருக்கக்கூடிய, குற்றால அருவியாக இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை கானல் நீராகத்தான் தெரியும். 'கானல் நீர்' என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பற்றிச் சொல்லாதது குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது, எங்களுடைய நெருபித்த தலைவர், ஒப்புயர்வற்ற தலைவர் என்று ஆரம்பித்து, அந்தத் தலைவர் பேரவையிலும் வெளியிலும் கப்பல் பேர ஊழல்பற்றிச் சொன்ன காரணத்தாலே, நிதிநிலை அறிக்கையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பற்றிச் சொல்லவில்லையோ என்று சொன்னார்கள். பேரவையிலும், மேலவையிலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எங்களுடைய தலைவர்மீது குற்றச்சாட்டு சொன்னார்கள். கப்பல்பேர ஊழல்பற்றிச் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்கிறபோது, எங்களுடைய புரட்சித் தலைவர் தெளிவாகச் சொன்னார்கள். சட்டப் பேரவையில் மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டுள்ள இடத்தில் சொன்னார்கள். "வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறேன். அதற்குண்டான ஆதாரங்கள் உங்கள் கையிலே இருக்குமானால், அதைக் கொண்டு வந்து அளியுங்கள், வழக்கு மன்றத்தில் தீர்ப்பு எனக்குப் பாதகமாக இருக்குமானால், நான் இந்தத் தமிழ் நாட்டின் எல்லைக் கோட்டிற்குள்ளே நுழையமாட்டேன். அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன்" என்று சொன்னார்கள். 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்' என்பதுபோல அந்த மான் பரம்பரையில் வந்த புரட்சித் தலைவர் அவர்கள் 'தமிழகத்தின் எல்லைக் கோட்டிற்குள் வர மாட்டேன், அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன்' என்று சொன்னார்கள். இந்த ஊழல் குற்றச்சாட்டைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினரவர்களைக்



1980 ஜூலை 9] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு ஊழல் குற்றச்சாட்டு எங்கள் தலைவன் மீது சொன்னார்கள். அதற்கு, 'ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், உயிரோடு இருக்கமாட்டேன்' என்று இந்த அவையிலும், சட்ட மன்றப் பேரவையிலும் பதில் சொன்னார்கள். இப்போது நான் கேட்கிறேன், தி.மு.க. தலைவர்மீது ஏராளமான குற்றச்சாட்டுகளை—நான் சொல்லவில்லை—ரத்தத்தின் ரத்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே; லட்சிய உறவு, கொள்கைப் பிடிப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அந்த லட்சிய உறவிற்கு அடிப்படையாக இருக்கும் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதற்காக விசாரணைக் கமிஷன் வைக்கப் பட்டது. அப்போது தான் ஆவலோடு ஒன்றை எதிர்பார்த்தேன். ஒரே ஒரு குற்றச்சாட்டை எங்கள் தலைவன்மீது மக்கள் மன்றத்தில் சொன்னார்கள். அது நிரூபிக்கப்படுமானால், தமிழ் நாட்டின் எல்லைக் கோட்டிற்குள் வர மாட்டேன், அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன் என்று எங்கள் தலைவர் சொன்னார். தி.மு.க தலைவர்மீது நாடே சொன்னது, விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. அந்தத் தலைவன் ஒரு கூட்டத்திலாவது என்மீது சுமத்தப் பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால்—எங்கள் தலைவர் சொன்னது போன்று சொல்லுவார் என்று எதிர்பார்த்தோம், ஆனால் கடைசி வரையில் சொல்லவில்லை, உயிரை விடுவேன் என்று சொல்ல வேண்டாம்—அரசியலை விட்டுப் போகிறேன் என்றுகூடச் சொல்லவில்லை. ஆனால் எங்கள் புனிதத் தலைவன் 'உயிரோடு இருக்க மாட்டேன்' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தலைவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் கடனில் 60 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அப்படித் தள்ளுபடி செய்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களையும், நிதிநிலை அறிக்கையையும் விமர்சனம் செய்கிறபோது, விவசாயிகளுக்கு அது போதவில்லை, முழுவதுமாகத் தள்ளுபடி செய்கிறோமென்று சொன்னீர்களே, ஏன் தள்ளுபடி செய்யவில்லை என்ற வாதத்தை எழுப்பினார்கள். எங்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்திருக்கிறது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற குறளுக்கிணங்க ஏர் பிடித்து உழுது, இந்த நாட்டு மக்களுக்கு வயிறார உணவு கொடுக்கும் விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு வந்தவுடன் நிவாரணமாக 60 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால் மாற்று முகாமில் இருக்கிறவர்கள், முழுவதும் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் அவர்களுக்கு என்ன செய்திருக்கிறார்களென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் விவசாயிகளுக்கு

எவ்வளவு நன்மைகள் புரிந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய 7 ஆண்டு வரலாற்றைப் புரட்டினால், ஒரேயொரு பைசா மின்சாரத்திற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டபோது, திருப்பூருக்குப் பக்கத்தில் 3 பேர்களைச் சுட்டார்கள். ஏழை விவசாயிகள் பயன்படுத்தும் பூச்சிக் கொல்லி மருந்தில் ஊழல் செய்திருக்கிறார்கள். வள்ளுவர், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' எனறு கூறுகிறார். ஆனால் இவர்கள் குறளையே மாற்றி, 'ஊழல் செய்பவர்களே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று புதிய குறளை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறளை உருவாக்கியவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் உருவாக்கிய நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு எதுவுமில்லை என்ற தத்துவத்தை எடுத்து வைக்கிறார்கள்.

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் கொள்கைக்காக உயிர் விடுவோம், லட்சியத்திற்காக உயிர் விடுவோம் என்று சொல்லி, போராட்டம் என்று வந்துவிட்டால், நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களும் சேர்ந்து ஜெயிலுக்குப் போவோமென்று சொன்னார்கள். எத்தனை முறை உயிரை விட்டிருக்கிறார்? எத்தனை முறை இலட்சியங்களை அடகு வைத்திருக்கிறார்? ஏதோ 10, 12 உயிர்களைப் பாக்கெட்டில் வைத்துள்ளது போலவும், ஒவ்வொரு முறையும் ஒரு உயிரை விடுவது போலவும் இருக்கிறது. அண்ணன் ஜேப்பியார் அவர்கள் மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று சொன்னார்கள். ஆனால் எதிர் முகாமில் இருக்கிறவர்கள் தேர்தலுக்கு முன்னாலே கூட்டணி ஆட்சி அமைப்போம், கொள்கை வழி நடப்போமென்று போஸ்டர்கள் போட்டார்கள். அது என்ன கூட்டணி ஆட்சி, கொள்கை வழி நடப்பது என்றால் எப்படி, எந்தக் கொள்கை வழி என்றெல்லாம் சொல்லவில்லை. எந்த அடிப்படை லட்சியத்தின்கீழ் நடக்கப் போகிறார்களென்று சொல்லவில்லை. ஆனால் மாநிலத்தில் சுயாட்சி, இரு மொழிக் கொள்கை இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டு, அண்ணா வழிதான் எங்கள் வழி என்று சொன்னவர்கள், கூட்டணி ஆட்சி அமைப்போம், கொள்கை வழி நடப்போமென்று சொல்லி, இன்று கொள்கையை இழந்திருக்கிறார்கள். இலட்சியத்தை அடகு வைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு உயிரை விட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இலட்சியத்தை அடகு வைத்து உயிரை விட்டிருக்கிறார்கள். இப்போது இந்த அரசின்மீது குற்றச்சாட்டு சொல்கிறார்கள், காலுக்குச் செருப்பில்லை, கால் வயிற்றுக் கூழும் இல்லை என்று, இரண்டரை ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டதா அது? மதிப்பிற்குரிய மாற்றுக் கட்சி உறுப்பினரவர்களின் கட்சி ஏழு ஆண்டுக்





காலம் தமிழகத்தை ஆண்டபோது, மக்கள் வறுமை என்றால் என்ன என்று அறிந்தார்கள். அரிசி 7½ ரூபாய், 8 ரூபாய் அளவிற்கு விற்றது. எனவே வறுமை என்ற உணர்வை உருவாக்கி வைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் என்று சொன்னால் மிகையாகாது. புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, எங்களுடைய இலட்சியம் உழைத்து உழைத்து, தன்னுடைய உழைப்பை மற்றவர்களுக்குத் தந்து காலுக்குச் செருப்பில்லாமல், கால் வயிற்றுக் கஞ்சியில்லாமல் இருக்கும் ஏழையினுடைய வாழ்விற்கு உத்தரவாதம், வயிறார உணவு என்பதுதான். அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நண்பனற்ற ஏழைக்கு நான் நண்பனாக இருப்பேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைத்தான் புரட்சித் தலைவரவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் வடித்துத் தந்திருக்கிறார்கள். சோறில்லை என்று வீதியோரத்தில் திரிகிறானே, அவனுக்கு வாழ்வு தரும் நண்பனாக இருப்பேன் என்ற அடிப்படையிலேதான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு கிலோ அரிசியும், ஒரு ரூபாயும் கொடுப்பது எப்படி இருக்கிறதென்பதற்கு முடிமன்னர்களைச் சாட்சிக்கு இழுத்து, அவர்கள் ஆட்சியில் குளம் வெட்டுவதற்கும், கோவில் கட்டுவதற்கும் பணம் கொடுத்து, அரிசி கொடுத்து, அவர்களை அடிமைகளாக வைத்திருந்ததுபோல் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 5-50)

நான் மொத்தப் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். முடிசூடா மூவேந்தர்கள் ஆட்சி தமிழகத்திலே இருந்த நேரத்தில் அவர்கள் அரிசி கொடுத்திருக்கலாம், பணம் கொடுத்திருக்கலாம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அம்மாதிரியெல்லாம் கொடுத்து அவர்களை அடிமைகளாக வைக்க விரும்பவில்லை. அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் நல்ல முறையில் வாழ வகை செய்து உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான், தொழில் அடிப்படையில் தொழிற்சாலைகளை நிறுவி, அவர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த நூறு ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நண்பர்களாகவும் இருப்போம், நண்பர்களற்ற ஏழைகளுக்கு நண்பர்களாகவும் இருப்போம் என்கிற தத்துவத்தை ஏற்று அந்த அடிப்படையில்தான் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நல்லதொரு நிதிநிலை

நிலை அறிக்கையினால், இந்த நாட்டிலுள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களின் பசியை, பிணியைப் போக்குகின்ற நிலை இருக்கின்றது. நிதி அமைச்சர் அவர்கள் அதைத் தீர்க்கின்ற மருத்துவனாக இருந்து இந்த அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால், அது மிகையாகாது என்று கூறிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

பசிப் பிணியைப் போக்குகிற மருந்தாக, $4\frac{1}{2}$ கோடி மக்களுடைய பசியைப் போக்கக்கூடிய முறையிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால் இதை 'கானல் நீர்' என்று சொல்கிறார்கள். அது அவர்களுக்குக் கானல் நீராகத்தான் தெரியும். காரணம் 7 ஆண்டுக் காலம் வறண்ட பாலைவனத்தையே பார்த்தவர்களுக்கு ஜீவ நதியாக இருக்கக்கூடிய, குற்றால அருவியாக இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை கானல் நீராகத்தான் தெரியும். 'கானல் நீர்' என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பற்றிச் சொல்லாதது குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது, எங்களுடைய [illegible] தலைவர், ஒப்புயர்வற்ற தலைவர் என்று ஆரம்பித்து, அந்தத் தலைவர் பேரவையிலும் வெளியிலும் கப்பல் பேர ஊழல்பற்றிச் சொன்ன காரணத்தாலே, நிதிநிலை அறிக்கையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பற்றிச் சொல்லவில்லையோ என்று சொன்னார்கள். பேரவையிலும், மேலவையிலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், அவரது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எங்களுடைய தலைவர்மீது குற்றச்சாட்டு சொன்னார்கள். கப்பல்பேர ஊழல்பற்றிச் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்கிறபோது, எங்களுடைய புரட்சித் தலைவர் தெளிவாகச் சொன்னார்கள். சட்டப் பேரவையில் மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டுள்ள இடத்தில் சொன்னார்கள். "வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறேன். அதற்குண்டான ஆதாரங்கள் உங்கள் கையிலே இருக்குமானால், அதைக் கொண்டு வந்து அளியுங்கள், வழக்கு மன்றத்தில் தீர்ப்பு எனக்குப் பாதகமாக இருக்குமானால், நான் இந்தத் தமிழ் நாட்டின் எல்லைக் கோட்டிற்குள்ளே நுழையமாட்டேன். அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன்" என்று சொன்னார்கள். 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்' என்பதுபோல அந்த மான் பரம்பரையில் வந்த புரட்சித் தலைவர் அவர்கள் 'தமிழகத்தின் எல்லைக் கோட்டிற்குள் வர மாட்டேன், அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன்' என்று சொன்னார்கள். இந்த ஊழல் குற்றச்சாட்டைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினரவர்களைக்



கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு ஊழல் குற்றச்சாட்டு எங்கள் தலைவன் மீது சொன்னார்கள். அதற்கு, 'ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், உயிரோடு இருக்கமாட்டேன்' என்று இந்த அவையிலும், சட்ட மன்றப் பேரவையிலும் பதில் சொன்னார்கள். இப்போது நான் கேட்கிறேன், தி.மு.க. தலைவர்மீது ஏராளமான குற்றச்சாட்டுகளை—நான் சொல்லவில்லை—ரத்தத்தின் ரத்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே; லட்சிய உறவு, கொள்கைப் பிடிப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அந்த லட்சிய உறவிற்கு அடிப்படையாக இருக்கும் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதற்காக விசாரணைக் கமிஷன் வைக்கப் பட்டது. அப்போது தான் ஆவலோடு ஒன்றை எதிர்பார்த்தேன். ஒரே ஒரு குற்றச்சாட்டை எங்கள் தலைவன்மீது மக்கள் மன்றத்தில் சொன்னார்கள். அது நிரூபிக்கப்படுமானால், தமிழ் நாட்டின் எல்லைக் கோட்டிற்குள் வர மாட்டேன், அதுவரை உயிரோடு இருக்க மாட்டேன் என்று எங்கள் தலைவர் சொன்னார். தி.மு.க தலைவர்மீது நாடே சொன்னது, விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. அந்தத் தலைவன் ஒரு கூட்டத்திலாவது என்மீது சுமத்தப் பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால்—எங்கள் தலைவர் சொன்னது போன்று சொல்லுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் கடைசி வரையில் சொல்லவில்லை, உயிரை விடுவேன் என்று சொல்ல வேண்டாம்—அரசியலை விட்டுப் போகிறேன் என்றுகூடச் சொல்லவில்லை. ஆனால் எங்கள் புனிதத் தலைவன் 'உயிரோடு இருக்க மாட்டேன்' என்று சொன் னார்கள். அப்படிப்பட்ட தலைவன்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் கடனில் 60 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அப்படித் தள்ளுபடி செய் திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களையும், நிதிநிலை அறிக்கையையும் விமர்சனம் செய்கிறபோது, விவசாயிகளுக்கு அது போத வில்லை, முழுவதுமாகத் தள்ளுபடி செய்கிறோமென்று சொன்னீர்களே, ஏன் தள்ளுபடி செய்யவில்லை என்ற வாதத்தை எழுப்பினார்கள். எங்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்திருக் கிறது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற குறளுக்கிணங்க ஏர் பிடித்து உழுது, இந்த நாட்டு மக்களுக்கு வயிறார உணவு கொடுக்கும் விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு வந்தவுடன் நிவாரணமாக 60 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக் கிறது. ஆனால் மாற்று முகாமில் இருக்கிறவர்கள், முழுவதும் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் அவர்களுக்கு என்ன செய்திருக் கிறார்களென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் விவசாயிகளுக்கு

அறிக்கையையும் இங்கே தந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

* **செல்வி ஏ. லீலாவதி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன் விவசாயப் பெருமக்களுக்கு இருந்த ரூபாய் 60 கோடி கடன் நிலுவைகளை ரத்து செய்து அவர்களுக்கு நிவாரணம் அளித்த தமிழக அரசின் துணிகரச் செயலை முதலில் நான் பாராட்டுகிறேன். விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்து எந்த அளவுக்கு அவர்கள் நல்வாழ்வில் அக்கறை காட்டிற்றோ அதே அளவு அக்கறையை பெண்கள் முன்னேற்றத்திலும் காட்ட வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே பெண்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென நான் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்கள் முன்னேறினால்தான் நம்முடைய நாடு முன்னேறும். குடும்பத்தில் பெண்கள் பொறுப்பாக, திறமையாக இருந்து குடும்பத்தை நடத்தவில்லையென்றால், அந்தக் குடும்பம் எவ்வாறு சீரழிந்து போகிறது என்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். அம்மாதிரி ஒரு நாட்டிலுள்ள எல்லாப் பெண்களும் பொறுப்பாக, திறமையாக எல்லா வகையிலும் தமிழ அரசும் அவர்களுக்காகப் பாடுபட்டால், இந்த நாடு நிச்சயமாக முன்னேறும் என்பது என்னுடைய எண்ணம். இந்தக் கருத்தை அவையிலுள்ள எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்றும் எண்ணுகிறேன். பெண்களுக்கு மிகப் பெரிய அளவில் கொடுமைகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு வேலைவாய்ப்பு இருந்தால், எங்காவது அவர்கள் வேலை பார்த்தால், இந்தக் கொடுமைகளுக்கு பெண்கள் நிச்சயமாக உள்ளாக மாட்டார்கள். அவர்களுக்கும் நாம் வேலை செய்கிறோம், சம்பாதிக்கிறோம் என்ற துணிச்சல் ஏற்படும். சம்பாதிப்பவர்கள் என்கிற காரணத்தால், அவர்களைக் கொடுமைப் படுத்தாமலும் இருப்பார்கள். ஆகவே முடிந்த வரையில் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பெண்களுக்கு வேலை வாய்ப்பு எந்தெந்தத் துறைகளில் குறைவாக உள்ளது, ஏன் குறைவாக உள்ளது, எவ்வாறு அதை நிவர்த்தி செய்ய முடியும் என்றெல்லாம் ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கென பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அடை





யாறில் ஒரு பெண்கள் பாலிடெக்னிக் இருக்கிறது. அங்கு பெண்களுக்கு அவர்கள் எந்த ஒரு வேலையும் கொடுக்கவில்லை. அவர்கள் பிரின்டிங் பிரஸ் வைத்து நடத்தக்கூட வாய்ப்பு இல்லை. ஐம்பது ஆண்டுகளாக அந்த பாலிடெக்னிக் நடந்து வருகிறது. ஒரு விழாகூட நடத்தினார்கள். ஆனால் பெண்களுக்கு அந்த இடத்தில் எந்த ஒரு வாய்ப்பும் அளிக்கவில்லை. எல்லாத் துறைகளிலும் பெண்கள் மேம்பட்டவர்கள் என்று காண்பிப்பதற்காக அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்க ஏற்கெனவே ஒரு குழு அமைத்திருப்பதுபற்றி செய்தித் தாளில் பார்த்தேன். அந்தக் குழு பெண்கள் அடங்கியது. அந்தக் குழு இதுவரை சாதித்தது யாது, ஆராய்ச்சிகள் யாது என்கிற விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. அந்தக் குழு ஏதாவது செய்துள்ளதா என்று அரசு ஆராய்ந்து பார்த்து, மீண்டும் அந்தக் குழுவுக்கு புத்துணர்வு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கு ஹாஸ்டல் வசதி போதுமான அளவு இல்லை. அன்றாடம் நாம் இந்த நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பெண்கள் கிராமங்களில் வேலைக்குச் செல்லும்போது ஹாஸ்டல் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஹாஸ்டலில் தங்கியிருக்கும் பெண்கள் 'நைட் டியூட்டி' முடித்து வந்தால், அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதில்லை. அவர்களுக்கு ஹாஸ்டலில் இடமும் இல்லை. இன்னும் சில கைம்பெண்கள் குழந்தைகளை வைத்துக்கொண்டு நான்கு குடித்தனங்கள் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு படுகின்ற அவஸ்தை சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. அம்மாதிரிப் பெண்களுக்கும் அதிகப்படியான ஹாஸ்டல் வசதியைச் செய்து கொடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பெண்களுக்கு அதிகமான ஹாஸ்டல் வசதி இருந்தால் தான், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலை இருக்கும். ஆகையால் 'நைட் ஷிப்ட்' வேலை செய்கின்ற பெண்களுக்கும், குழந்தைகளை வைத்திருக்கும் இளம் பெண்களுக்கும் ஹாஸ்டல் வசதியை அதிக அளவில் செய்து தர வேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் அந்த ஹாஸ்டல்களில் மிகக் கேவலமான முறையில் உணவு அருந்துகிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதியும் இல்லை, நல்ல உணவும் இல்லை. இன்றையதினம் எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாமல் ஏராளமான ஏழையெளிய பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை வேலையில் அமர்த்தி நல்லமாதிரி ஹாஸ்டல்களில் உணவு தயாரித்துக் கொடுக்

தால், ஏழையெளியவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தமாதிரியும் இருக்கும். ஹாஸ்டலில் உள்ள பெண்களும் நல்ல உணவு அருந்துகிற மாதிரியும் இருக்கும். ஆகவே, அதற்குரிய வழிவகைகளை ஹாஸ்டல்களில் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் பராமரிப்பு இல்லம்பற்றி ஒருசில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன். பெண்கள் எங்கெங்கு வேலை செய்கின்றார்களோ அந்த இடங்களில் எல்லாம் குழந்தைகள் பராமரிப்பு இல்லம் அமைக்கப்பட வேண்டும். இது பெண்கள் கேட்கின்ற ஒரு சலுகை அல்ல. இதைச் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை. அரசினுடைய சட்டத்திலேயேகூட தனியார் நிறுவனங்களில் பெண்கள் வேலை பார்த்தால், அங்கெல்லாம் இம்மாதிரியான குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் வைக்க வேண்டுமென்று இருந்தபோதிலும், அவர்கள் வைப்பதில்லை. அநேகமாக எல்லா அயல்நாடுகளிலும் நவீனமான வசதியான குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை வைத்திருக்கிறார்கள். வேலைக்குப் போகும் பெண்கள் குழந்தைகளை வைத்துக்கொண்டு படும்பாட்டைச் சொல்ல முடியாது. நம்பிக்கையான ஆட்கள் வேலைக்குக் கிடைப்பது இந்தக் காலத்தில் அரிதாக இருக்கிறது. வேலைக்குப் போகும் பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு குழந்தைகள் பராமரிப்பு இல்லம் என்று ஒன்று இருந்தால், இம்மாதிரியான துன்பங்களை அவர்கள் அனுபவிக்க மாட்டார்கள். எல்லாத் தொழிற்சாலைகளிலும் பெண்களுக்காக இம்மாதிரியான குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இருக்க வேண்டுமென்று சட்டம் இருந்தபோதிலும், அநேக தொழிற்சாலைகளில் குழந்தைகள் பராமரிப்பு இல்லம் இல்லாத நிலைதான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கவனித்து அந்தச் சட்டத்திற்குள் எல்லாத் தொழிற்சாலைகளையும் உள்ளடக்கி குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களை அமைக்க வேண்டுமென்று நான் தமிழக அரசை இத்தருணத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் எத்தகைய வேலைகளை குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள், எத்தகைய வேலைகளைக் கொடுக்க நிர்ப்பந்திக்கிறார்கள். எத்தனை வயதுக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள், பெண்களுக்கு எம்மாதிரியான வேலைகளைக் கொடுக்கிறார்கள், எவ்வளவு நேரம் வேலை செய்ய நிர்பந்தப்படுத்துகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு பெண் சிவகாசியில் ஒரு பட்டாசு தொழிற்சாலையில் வேலை பார்க்கிறாள். அவள் என்னிடம் ஒரு சோகக் கதையைச் சொன்னாள். காலையில் 7 மணிக்கு பெண்கள் வேலைக்குப் போகிறார்களாம். மாலை 6 மணி வரை அவர்கள் வேலை செய்துகொண்டிருக்க வேண்டுமாம். நன்றாகக் கையைக் கழுவித்தான் சாப்பிட வேண்டும். கை கழுவ அங்கு தண்ணீர்





இல்லை. அவளுடைய குழந்தையை அங்குள்ள ஒரு மரத்திலே தூளியில் கிடத்தித் தொங்க விட்டு விட்டு, பட்டாசு தயாரிக்கும் வேலை செய்கிறாள். அங்கு வேலை செய்கின்ற பெண்களுக்குத் தகுந்த கை உறையை அவர்கள் கம்பெனிகளில் கட்டாயம் அளிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்த வேண்டும். அந்தத் தாய் மேலும் கூறுகிறாள். அவளுடைய குழந்தை பசித்து பாலுக்காக அழுதிருக்கிறது. கை கழுவாமல் குழந்தையை உடனே எடுக்கக் கூடாது. ஆகவே அந்தப் பெண் குழந்தையை உடனே தன்னால் எடுக்க முடியாமல் 3, 4 மணி நேரம தண்ணீருக்காக வெளியே அலைந்து தண்ணீர் கொண்டு வந்து கையைக் கழுவி பிறகு குழந்தையின் பசியைப் போக்கியிருக்கிறாள். அவள் எவ்வளவு மன வேதனைப் பட்டிருப்பாள் என்பதை தயவுசெய்து அவையிலுள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். சிவகாசியில் இம்மாதிரி பெண்கள் அவதிப்படும் நிலையை தமிழக அரசு விரைவில் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பானு கார்மென்ட்ஸில் பணியாற்றிக் கொண்டிருந்த பெண்கள் குறளகத்துக்கு எதிரில் அமர்ந்துகொண்டிருக்கும் நிலையைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் நிலை மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. 18, 19 வயதுள்ள 200 பெண்கள் கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக வேலையிழந்து தவிக்கிறார்கள். அவர்கள் வேறு வழியில்லாமல் தெரு ஓரத்திலே கூடாரம் போட்டுக்கொண்டு வருவோர் போவோரிடம் பிச்சை வாங்கிக் கொண்டு வயிற்றைக் கழுவும் அவல நிலை, பரிதாபகரமான நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய கண் போவதற்கு முன்பே தமிழக அரசு அவர்களுக்கு உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் என்னுடைய மெய்டன் ஸ்பீச்சிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அரசு அவர்களுக்கு அருள்கூர்ந்து உதவி செய்ய வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழில்களை நடத்துபவர்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் வெறும் ஆணவமாக இருக்கிறார்கள். பானு கார்மென்ட்ஸ், இராதா சில்க் எம்போரியம், ராசி சில்க் இன்னும் இதுபோன்ற நிறுவனங்களை ஒரே நிர்வாகத்தார் நடத்தி வருகிறார்கள். மூதாதையர், பாட்டனார், பிள்ளை, பிள்ளையினுடைய மகன் இம்மாதிரியாக அவர்களுடைய குடும்பமே இந்தத் தொழிலை வைத்துக் கொண்டிருக்கிறது. ஏதாவது கேட்டால அவர்கள் தொழிலை மூடி விடுகிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் மூடவில்லை. அவர்கள் கான்ட்ராக்ட் வைத்துக்கொண்டு பெண்களைக் கஷ்டப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒரு பிரஸ்டிஜ் கொஸ்டீனாக அவர்கள் இதை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எப்படியும் இதில் தலையிட்டு அந்தப் பெண்களுக்கு

திவாரணம் அளித்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ட்ர கவர்ன்மென்ட் கொடுக்கின்ற லைசென்சை அவர்கள் எடுத்துவிட்டால், அந்த பெண்களுக்கு நிச்சயம் அவர்கள் வேலைவாய்ப்பைத் திரும்பவும் கொடு பார்கள். மிகவும் தீவிரமாக நடந்துகொள்ளும் அந்தக் கொள்ளைக்கூட்ட தார்களை நம்முடைய தமிழகத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று தா இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி தாரா செரியன் தலைமை.)

(பிற்பகல் 6-00)

அதோடு ஆடம்பரமான முறையில் திருமணங்கள் செய்வதைத் தடுக்கு வகையில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதெல்லாம் ஒரு கல்யாணம் என்றால், அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் வந்து சாப்பிடுகிறார்கள். முன்பெல்லாம் 'கெஸ்ட் கண்ட்ரோல் ஆர்டர்' என்று ஒன்று இருந்தது. அதன் காரணமாக திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் உணவு பரிமாறப்படும்போது எத்தனை இலைகள் போடப்படுகின்றன என்று வந்து பார்ப்பார்கள். இதன் காரணமாக தற்போது என்ன நிலை ஏற்படு கிறது என்றால், சாதாரண மக்களும்கூட ஆடம்பரமான முறையில் திருமணம் செய்யும் அவல நிலைக்கு வந்துவிடுகிறார்கள். தாங்கள் வாழ்நாள் முழுதும் உழைத்துச் சேமித்த பொருளையெல்லாம் கல்யாணத்திலேயே செலவழித்து விட்டு, ஆடம்பரமான வழிகளில் செலவு செய்துவிட்டு, அதற்குப் பிறகு மீதிக் காலம் முழுவதும் கடன்காரர்களாகவே வாழ்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஆடம்பரமான கல்யாணங்களைத் தடை செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டால், நாட்டின் பொருளாதார நிலைகூட சீர்படும் என்று கூற விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இம்மாதிரியான திருமணங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்லாமல் இருந்து அவற்றைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலதரப்பட்ட சமூகக் கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கு உதவும் வகையில் 'பெண்கள் வழிகாட்டும் ஸ்தாபனம்' ஒன்று அமைக்கப்பட வேண்டும். வக்கீல்கள், சமூக சேவை செய்வோர், நிபுணர்கள் மற்றும் சமுதாயத்தில் பெரும் அந்தஸ்தில் உள்ளவர்களைக் கொண்ட ஒரு வழிகாட்டி ஸ்தாபனத்தை அமைத்தால், அப்படிப்பட்ட பெண்கள் எந்தெந்த நிலையில் பணியாற்றலாம், எந்தெந்த வேலைக்குப் போகலாம், எப்படி எப்படியெல்லாம் அவர்கள் வாழலாம் என்று வழிகாட்ட முடியும். உதவி தேவைப்படும் பெண்களுக்கு



ஆலோசனை வழங்குவதற்கு உதவியாக இத்தகைய ஸ்தாபனம் செயல்படலாம். எனவே, அரசு இதுகுறித்து சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பள்ளிகளில் ஆசிரியர்கள் நடத்தப்படும் நிலைமை மிகவும் கேவலமாக இருக்கிறது. அநேக உயர்நிலைப் பள்ளிகளில்—அதிலும் குறிப்பாகப் பெண்கள் படிக்கும் பள்ளிகளுக்கு—சரியான கட்டிட வசதியில்லாமல் இருக்கிறது. குறிப்பாக குரோம்பேட்டையில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் மாணவிகள் செம்மண்ணில் உட்கார்ந்து பாடம் படிக்கும் நிலை இருக்கிறது. செம்மண்ணில் உட்காருவதன் காரணமாக அவர்கள் போட்டு வரும் யூனிபார்ம் ஒரே நாளில் அழுக்காகிவிடுகிறது. அடுத்த நாள் அதைச் சோப்பு போட்டு துவைக்கக்கூட வசதியில்லாத காரணத்தால், அங்கே படிக்கும் பல மாணவிகள் அழுக்குத் துணிகளோடு அடுத்த நாள் பள்ளிக்கு வருகிற அவல நிலையைக் காணுகிறோம். இந்த நிலைமையை மாற்றி அங்கெல்லாம் நல்ல கட்டிட வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பள்ளிகளில் குடிநீர் வசதி இல்லாமல் இருக்கிறது. மாணவிகள் உணவை உண்டபிறகு, தாங்கள் கொண்டு வந்திருக்கும் பாட்டில்களோடு வீடு வீடாக அலையும் கோலத்தைச் சென்னை நகரில் எங்கேயும் பார்க்கலாம். 2,000, 2,500 மாணவிகள் படிக்கும் மாநகராட்சிப் பள்ளிகளில்கூட இம்மாதிரியான அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதைப் போக்க எல்லாப் பள்ளிகளிலும் குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று அரசு திட்டவட்டமாகச் சட்டம் கொண்டு வர வேண்டும். பள்ளிகளில் குடிநீர் வசதி இருக்கிறதா என்று கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். தற்போது மாநகராட்சிப் பள்ளிகளில் பெரிய பெரிய பீப்பாய்களைக் கொண்டு வந்து போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தப் பீப்பாய்களில் தண்ணீரைக் கொண்டு வந்து நிரப்புவதற்கு எங்கே போவது?

அதுபோலவே பல பெண்கள் பள்ளிகளில் கழிவு அறைகள் இல்லாத நிலைமை இன்று காணப்படுகிறது. ஆயிரக் கணக்கான பெண்கள் படிக்கும் பள்ளிகளிலேகூட கழிவறைகள் இல்லை. நாடு விடுதலை அடைந்து இத்தனையாண்டுகள் ஆனபிறகும்கூட இந்த நிலைமை நீடிப்பது மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. சுத்தத்தைப்பற்றி நாம் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து என்ன பிரயோசனம்? கழிவு அறைகள் இல்லாத காரணத்தால், பெண்கள் பள்ளியின் ஒரு மூலைக்குச் சென்று அங்கெல்லாம்

அசுத்தம் செய்வதைப் பார்க்கிறோம். இந்த நிலையை அரசு உடனே போக்கியாக வேண்டும். பள்ளிகளில் மாணவர்களுக்குக் கழிவறை வசதிகளை செய்து தரப்பட வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, பள்ளிகளில் தற்போது பிளஸ் 2 வகுப்புகள் வந்துவிட்டன. 'ஷெவிலிஸ்ட்', 'டைப்ரைட்டிங்' போன்றவைகளையெல்லாம் அங்கே கற்றுக் கொடுக்கிறோம். ஆனால் அங்கெல்லாம் மெஷின்களும், டைப்ரைட்டிங் மெஷின்களும் இல்லாமல் இருக்கின்றன. இவைகள் இல்லாமல் மாணவர்களுக்கு எப்படி இந்தப் பாடங்களைப் போதிக்க முடியும்?

அதைப் போலவே சையன்ஸ் லேபரேட்டரி வைத்திருக்கிறோம். அத்தகைய விஞ்ஞானக் கூடங்களுக்கு அரசாங்கத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் கெமிக்கல்கள், டெஸ்ட் டியூப்கள் போன்ற பல பொருள்களும் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. ஆசிரியர்கள் அதைப் பார்க்கும் போது, அவைகளெல்லாம் 'கன்டெம்ன்டு ஆர்ட்டிகிள்ஸ்' ஆக இருக்கின்றன. இவைகளை வைத்துக்கொண்டு மாணவர்களுக்கு எப்படி 'எக்ஸ்பரிமெண்ட்' செய்து காட்ட முடியும் என்று ஆசிரியர்கள் கவலைப்படுகிறார்கள். நேற்றுகூட நான் ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கே உள்ள ஆசிரியர்கள் அந்தப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கெமிக்கல்களைக் காட்டி, இந்த கன்டெம்ன்டு ஆர்ட்டிகிள்களை எப்படிப் பயன்படுத்துவது என்று என்னைப் பார்த்துக் கேட்டார்கள். எனவே அரசு இதில் கவனம் செலுத்தி நல்ல பொருள்கள் பள்ளிகளுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்கள் அவைகளை வைத்துக்கொண்டு மாணவர்களுக்கு 'எக்ஸ்பரிமெண்ட்' செய்து காட்ட முடியும். எனவே நல்ல கெமிக்கல்களையும், அப்பேரடஸ்களையும் பள்ளிகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களைப் போலவே ஆசிரியர்களுக்கும் வீடுகட்டக் கடன் வசதி அளிக்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஹவுசிங் லோன் கொடுத்து அவர்களும் வீடு கட்டிக்கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசே வீடு கட்டி சுலபத் தவணையில் பணத்தை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். செங்கை மாவட்டத்தில் பள்ளிகளைச் சுற்றி நிறைய இட வசதி இருக்கிறது. அங்கெல்லாம் ஆசிரியர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆஸ்பத்திரிகள் கட்டும்போது அங்கேயே டாக்டர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கிறோம். இவ்வாறு டாக்டர்களுக்கு கட்டிக் கொடுப்பதைப்போல, ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கு அருகிலேயே குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்தால், அவர்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் வசிப்பார்கள். ஆசிரியர்களுக்கு ஏன் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தரக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். "அவர்கள் என்ன எப்போதுமே தாழ்வான நிலையிலேயே இருக்க வேண்டுமா? நல்ல நிலைக்கு வரக்கூடாதா?" என்று கேட்க விரும்புகிறேன். எனவே, இனிமேலாவது ஆசிரியர்களுக்கு பள்ளிகளை யொட்டி குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களின் மாறுதல்களைக் குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தவிதமான காரணமும் இல்லாமல், எந்தவிதமான 'கைடு-லைன்ஸ்'ம் இல்லாமல் 1 ஆண்டு, 2 ஆண்டு, 6 மாதம், 3 மாதம் மட்டுமே பணியாற்றிய ஆசிரியர்களையெல்லாம் திடீர் திடீர் என்று மாறுதல் செய்கிறார்கள். இந்தக் கொடுமையை, இந்த அவல நிலையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செங்கை மாவட்டத்தில் ஆசிரியர்கள் என்னுடைய தேர்தல் பணிக்காக வேலை செய்தார்கள் என்ற காரணத்திற்காக அங்கே உள்ள டி.ஈ.ஓ. திரு. பழனிவேலு அவர்கள் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை மாறுதல் செய்திருக்கிறார். பெண் ஆசிரியர்கள்கூட ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஓராண்டுக் காலம் கூட அந்த இடங்களிலே பணியாற்றி முடிக்கவில்லை. வந்து தன் குழந்தைகளுக்கு பள்ளிகளில் இடம் தேடி, வீடு பார்த்து வாழத் தொடங்கியிருக்கிறார்கள். பள்ளிகள் தொடங்குவது ஜூலை மாதத்தில். ஆனால் நேற்று பல ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். பள்ளிகள் திறந்து, அவர்களெல்லாம் அங்கேயே பணியாற்றலாம் என்ற மனநிறைவோடு இருக்கும்போது, இந்த பழனிவேலு என்பவர் வேண்டுமென்றே எந்தக் காரணமும் இல்லாமல் ஆசிரியர்களை மாறுதல் செய்திருக்கிறார். டைரெக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனை—திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்களை—நாங்கள் நேரில் போய் சந்தித்து கேட்டபோது, இந்த ஆண்டு எந்த விதமான மாற்றுதலும் ஆசிரியர்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இந்த டி.ஈ.ஓ., நேற்றையதினம் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை மாறுதல் செய்திருக்கிறார். இந்த மாற்றுதல்கள் அனைத்தும் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று

இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் இவ்வாறு மாறுதல் செய்யப்பட்டது குறித்து ஒரு குழு அமைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு—அதிலும் குறிப்பாக 5 முதல் 8 வகுப்பு வரை படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. இங்கே கொடுக்கப்படும் உணவு மிகவும் மோசமாக இருக்கிறது. அங்கே கோதுமையில் ஒருவகையான உணவு தயாரிக்கிறார்கள். குழந்தைகள் அந்த உணவை மிகுந்த ஆவலோடு சாப்பிட வேண்டும் என்று வந்து, அந்த உணவை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்ததும், உடனே அதைக் கீழே போட்டுவிட்டுப் போகும் அவல நிலையைப் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு மிகவும் மோசமான உணவை அந்தச் சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். மிகுந்த ஆவலோடு சாப்பிட வரும் அந்தக் குழந்தைகள் மோசமான உணவு காரணமாக மிகவும் வருத்தத்தோடு அதைக் கீழே கொட்டிவிட்டுப் பட்டினியாகச் செல்வதைப் பார்க்கும்போது, மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இந்த மாதிரியான உணவைக் கொடுப்பதைவிட கொடுக்காமல் இருப்பதே நல்லது. மாணவர்கள் சாப்பிடுவதற்கே சுவையில்லாமல் செய்வதன் மூலமாக ஏழைக் குழந்தைகள் இன்றையதினம் பட்டினியாகச் செல்கிறார்கள். இதைப்பற்றி நான் ஒரு காலத்தில் கேட்டபோது எனக்கு ஒரு மெமோ கொடுத்தார்களே தவிர, குழந்தைகளுக்கு நல்ல உணவு வழங்க எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.10)

ஆகவே, அரசு இதிலே தலையிட்டு அந்தக் குழந்தைகளுக்கு நல்ல உணவைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடக்கும் அட்டூழியங்கள் மிகவும் அதிகம். 20 ஆண்டுக் காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. 20 ஆண்டுக் காலமாகப் பணிபுரியும் ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்தும் அந்த அண்ணாமலை யூனிவர்சிட்டியை அரசு உடனடியாக எடுத்து, அந்த ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய ஒருவர் ஆசிரியர்கள் போராட்டத்திலே இறங்குவதால்தான், மாணவர்கள் இந்த மாதிரியான நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னார். ஆசிரியர்கள் சாதுவானவர்கள். அவர்கள் போராட்டத்தில் இறங்க வேண்டுமென்றால், கடைசி கட்டத்தில்தான் இறங்குவார்கள்



என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக எந்தப் போராட்டத்திலும் இறங்க ஆசைப்படாதவர்கள் ஆசிரியர்கள். அந்த அளவுக்கு கொடுமைகள் அவர்களுக்குச் செய்யப்படும்போதுதான் அவர்கள் போராட்ட நிலைக்கு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) : திரு. வீராசாமி அவர்கள்.

Hon. Chairman has mentioned the name of the hon. Member Thiru Veerasami to be called as the next speaker. I have no objection to allow Thiru Ramalingam to speak. May I now ask, with the permission of the House, Thiru Ramalingam to speak first ? Then Thiru Veerasami can speak.

* திரு. சி. இராமலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய ஆட்சியில் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நாவலர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றின் மீது பேசும் வாய்ப்பை அளித்தமைக்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களிடத்திலும், மாற்றுக் கட்சியைச் சார்ந்த சாதாரண குடிமக்களிடத்திலும் சென்று கலந்துரையாடி இந்த பட்ஜெட்டைப் பற்றிக் கேட்டபோது, "இந்த பட்ஜெட் எங்களுடைய வயிற்றுக்குப் பால் வார்த்தது மாதிரி இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் கூட, 'பொதுமக்கள் இதை ஏற்றுக்கொண்டால், நானும் ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவரைப் பின்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற அவருடைய தோழர்கள் தலைவரையும் மிஞ்சி ஏதோ பேசுகிறார்கள். இருந்தாலும் இந்த பட்ஜெட் பொதுமக்களுக்குப் பாலை வார்த்ததைப் போல இருக்கிறது என்ற வாக்கியத்தைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்க வேண்டுமென்ற நிலையில் புதிதாக 36 மில்களைக் கட்ட முன் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு நெசவாளர் சமுதாயம் புரட்சித் தலைவர் அவர்களையும், நாவலர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறார்கள்.

* திரு. ப. மாணிக்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, புதிய ஆலைகளைத் துவங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மலிவு விலையில் நூல் கொடுக்கத் திட்டம் இருப்பதாக நான் காணவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** கவர்னர் உரையிலே கூட சொல்லியிருக்கிறார்கள். அதிக மில்கள் கட்டப்பட்டு நூல் உற்பத்தி அதிகமாக வருகிறபோது, நூல் விலை குறையும். 36 மில்களைக் கட்டுகிற அளவிற்கு திட்டம் இருக்கிறது. தற்போதுள்ள 16 மில்களை விரிவுபடுத்துகிற அளவிற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, 36 மில்களும் எப்போது கட்டி முடிக்கப்படும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நிதியமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விளக்கமாக பதில் அளிப்பார்கள். நெசவாளர்களுக்கு நூல் வழங்கவும், அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய துணிகளை விற்கவும் 5 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக கவர்னர் உரையிலே கூட சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டு உற்பத்திக்காக இந்த ஆண்டு ஏறக்குறைய 200 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். பட்டு உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கலாம். பெங்களூரில் உற்பத்தியாகின்ற பட்டின் விலைக்கும் நம் ஊரில் உற்பத்தியாகின்ற பட்டின் விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. பெங்களூர் மார்க்கெட்டில் விற்கும் விலைக்குச் சமமாக நாமும் விற்க வேண்டுமென்றால், நம்முடைய பட்டு உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த ஏற்பாட்டைச் செய்திருப்பதற்காக நெசவாளர்களாகிய நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்.

வேலை வாய்ப்பைப்பற்றி பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் வெளியே இருக்கக் கூடிய படிக்காத ஏழையெளிய பொது மக்கள் சில கோரிக்கைகளை வைக்கிறார்கள். ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து சர்டிஃபிகேட் வாங்கினால்தான் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலே படிக்க வைக்க முடியாத நெசவாளிகள், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள், சாதாரண தினக் கூலிகள், விவசாயிகள் தங்களுடைய குழந்தைகளை சின்ன வயதிலேயே மெக்கானிக் ஷெட்டிலும், லாரி ஷெட்டிலும், தையல் கடையிலும், லேத் பட்டறையிலும், ஃபவுண்டரிகளிலும் வேலைக்கமர்த்தி அதன் மூலம் அவர்கள் அனுபவத்தைப் பெற்று சிறந்த தொழிலாளியாக விளங்குகிறார்கள். அவர்கள் படிப்படியாகக் கற்று



மோட்டார் மெக்கானிக்காகவும் வருகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு பையன் இருக்கிறான், அவன் ஒரு வண்டியினுடைய என்ஜின் ஓடுகிறபோது அதிலிருந்து வரும் சத்தத்தைக் கேட்டு அந்த என்ஜினில் என்ன கோளாறு இருக்கிறது என்பதை உடனே சொல்லிவிடுகிறான். அந்த அளவிற்கு அவனுக்குத் திறமை இருக்கிறது. இதை அவன் அனுபவத்தின் மூலமாகப் பெற்றிருக்கிறான். அந்த அளவிற்குத் திறமை உள்ளவர்களை மோட்டார் மெக்கானிக்குகளாகவும், கார் ஓட்டிகளாகவும் நியமிக்கலாம். அப்படிப்பட்ட படிக்காத ஆனால் அனுபவம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பது பொது மக்களுடைய கோரிக்கை. இன்றைக்கு எந்த வேலைக்குச் சென்றாலும், சர்டிஃபிகேட் இருக்கிறதா, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறாயா என்று கேட்கிறார்கள். கார் ஓட்டுபவர்கள் கூட எஸ். எஸ். எல். சி. வரையில் படித்திருக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அதை மாற்றி, தொழில் திறமை இருக்கிறதென்றால், அவர்களை நியமிக்கலாம். நான் கூட தறி நெய்பவன்தான். நான் உட்கார்ந்த இடத்திலேயே நேருவைப் போன்று தறியில் போட்டுவிடுவேன். மாங்காயைத் தறியில் போட்டுவிடுவேன். ஆனால் நான் பட்டப் படிப்பு படிக்கவில்லை. என்ஜினியரிங் படிப்பும் படிக்க வில்லை. அதே போல தச்சுத் தொழிலாளியும் பாரம்பரையாக மரத்தில் சிற்பங்களைச் செய்கிறான். படித்துவிட்டு வந்து சிற்பங்களைச் செய்யவில்லை. படிப்பு அறிவு இல்லாமலே செய்கிறான். ஆகவே அப்படிப்பட்டவர்களிடம் படித்ததற்கான சர்டிஃபிகேட் இருக்கிறதா என்று கேட்பது முறையல்ல. அந்த முறையைத் தள்ளி வைக்க வேண்டும். அனுபவம் உள்ளவர்களை டிரைவர்களாகப் போடலாம். ஐ. டி. ஐ. யில் தச்சுத் தொழில் போன்றவற்றைப் போதிப்பவர்களுக்கு 'சர்டிபிகேட்' தேவையில்லை. அனுபவரீதியாக உள்ளவர்களையே ஆசிரியர்களாக நியமிக்கலாம். இந்த ஏற்பாட்டை புரட்சித் தலைவர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையிலே நாங்கள் இருக்கிறோம். குப்பை கூட்டுபவர்கள் கூட எட்டாவது வரையில் படித்திருக்க வேண்டுமென்று முனிசிபாலிடியில் சொல்லுகிறார்கள். குப்பை கூட்டுபவர்களும், மலம் அள்ளுபவர்களும் எதற்காக சர்டிஃபிகேட்டைக் கொண்டுவர வேண்டும் ? இந்த முறையை மாற்றவேண்டும். இந்தக் கோரிக்கையை அவர்கள் நேரிடையாகவே புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையை ஓரளவு பின்பற்றினால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதிகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் அந்தமானுக்குச் சென்று வராவிட்டாலும் எனக்குத் தெரிந்தவர்கள், தமிழர்கள் எத்தனையோ பேர் எங்கள் பகுதியிலிருந்து, அதாவது அனகாபுத்தூர், சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளிலிருந்து சென்று அங்கே கடையை வைத்திருக்கிறார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரைச் சேர்ந்தவர்கள் அந்தமானில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன ?

திரு. சி. இராமலிங்கம் : நான் அன்றாடம் அவர்களிடம் பழகுகிறேன். அவர்களில் குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர் ஒருவர் சைதாப்பேட்டையிலிருந்து அந்தமானுக்குச் சென்றிருக்கிறார். திரு. மருதவாணன் என்ற தி.மு.க.-வைச் சேர்ந்தவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். அங்குள்ள வியாபாரிகளில் பலர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், மாண்புமிகு உறுப்பினருடைய ஊரைச் சேர்ந்தவர்கள் அதிகமானவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்களே. அதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா என்று கேட்டார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : நாங்கள் கைத்தறி நெசவாளர்கள். அங்கே உற்பத்தி செய்து அங்கே விற்பவர்கள். வெள்ளைக்காரன் காலத்திலே நாங்கள் நெய்த துணிகள் எல்லாம் சிங்கப்பூர், ஜாவா, மணிலா, மற்றும் கிழக்குத் திசை நாடுகளில், கடை வைத்து விற்கப்பட்டன. இன்றும் விற்கிறார்கள். என்னுடைய உறவினர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். அதைப் போலவே

(பிற்பகல் 6-20)

மேற்குத் திசை நாடுகளிலே சென்றால் 'சௌத் ஆப்பிரிக்கா', 'வெஸ்ட் ஆப்பிரிக்கா' போன்ற இடங்களுக்குச் சென்றால், இங்கிருந்து தயாரித்து அனுப்பிய பிளீடிங் மெட்ராஸ், மற்ற துணிகள் எல்லாம் அங்கே விற்பனை ஆவதைப் பார்க்கலாம். அங்கேயும் எங்களுடைய உறவினர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வியாபார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் பரவியிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.





அந்தமானிலே இருந்து, சிலோனிலே இருந்து அகதிகளாக இங்கே வருகிறார்கள். அவர்களை பல ஊர்களுக்கு அனுப்புகிறோம். அவர்களால் வேலை செய்ய முடியவில்லை. அந்தமானிலே அவர்கள் வாழ்வதற்கு பல பகுதிகளை மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கு மத்திய சர்க்கார் 16 ஆயிரம் ஏக்கரில் ரப்பர் மரங்கள், 20 ஆயிரம் ஏக்கரில் காடுகள் வளர்த்து வைத்திருக்கிறார்கள். ஸ்ரீலங்கா பகுதியிலே இருந்து வரக்கூடிய அகதிகளையெல்லாம் தமிழ் நாட்டிற்கு வரவழைக்காமல், நேரடியாகவே அந்தமானுக்கு அனுப்பினால், அந்த சர்க்கார் அவர்களைக் காப்பாற்றும். அங்கு வருகின்ற அகதிகளுக்கு 10 ஏக்கர் காடும், 5 ஏக்கர் ரப்பர் நிலமும் கொடுத்து 30 ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவி செய்கிறார்கள். அங்கு அவர்களை வாழவைக்கிறார்கள். அரசாங்கம் மூலமாக ஆட்களைக் கேட்டபோது, இங்கு திரு. பாங்கோ அவர்கள் அரசுக் காரியதரிசியாக இருந்தார்கள். அவர் அவர்களை ஒப்பந்தக் கூலிகளாக அனுப்பினார். தமிழகத்திலேயிருந்து அங்கே சென்றவுடனே, அவர்களால் சரியாக வேலை செய்ய முடியாத நிலைமைகள் ஏற்பட்டன. அங்கே அவர்களை அடிமைகளைப் போல நடத்துகின்ற நிலைமைகள் இருந்தன. அப்படி அவர்களை அங்கே நடத்துகிறார்கள். அங்கேயெல்லாம் தமிழர்கள் மைனாரிட்டியினராக இருக்கிறார்கள். வங்க தேசத்திலேயிருந்து வந்தவர்களும் அங்கே இருக்கிறார்கள். நமக்கு அங்கே மெஜாரிட்டி இல்லை. ஸ்ரீலங்காவிலிருந்து வருகின்ற அகதிகளை நாம் நேரடியாக அந்தமானுக்கு அனுப்பி, தமிழ் நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். மற்ற விஷயங்களைப் பொறுத்து, அடுத்த முறை எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, மனதிற்குப் படுவதை எடுத்துச் சொல்வேன் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்து உரையாற்றியதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்த நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களோடு நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்புப் பெற்றிருந்தவன் என்ற அடிப்படையிலே இந்த அறிக்கையிலே உள்ள சிலவற்றை முதலிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக திருச்சியிலேயும், கோவையிலேயும் புதிய பல்கலைக் கழகங்கள்

உருவாக்கப்பட இருக்கின்றன. தமிழ் நாட்டிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட இருக்கிறது. இதுபோன்ற அறிவிப்புகள், என்னைப் பொறுத்த வரையில், வரவேற்கக்கூடியவைகளாக அமைந்திருக்கின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி விவாதிப்பதற்கு முன்னால் நான் ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நான் பேசுகின்ற நேரத்திலே பொதுவாக ஊழலைப்பற்றிப் பேசவேண்டாம் என்று நினைத்தேன். பொதுவாக அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப்பற்றி மட்டும் விமர்சிக்கலாம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் ஏதோ வாதிக்கின்ற உரிமை ஆளும் கட்சியினருக்கு இருப்பதுபோலவும் மற்றவர்களுக்கு இல்லாதது போன்றும் ஆளும் கட்சியினர் கருதுகின்ற காரணத்தினாலே, அதைப்பற்றி நினைவுபடுத்துவது போன்று இங்கே எனக்கு முன்னாலே பேசிய புதிய உறுப்பினர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் எல்லாம் ஊழல்கள் புரிந்தார்கள் என்பது போலவும் ஆளும் கட்சியினர் உத்தமர்கள் என்பது போலவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் விவாதத்திற்குள்ளே போக விரும்பவில்லை. அவர்கள் கூறும்போது, கழகம் ஆட்சியில் இருந்தபோது அரிசி விலை ஏறி இருந்ததாகவும், அதில் ஊழல்கள் நடைபெற்றதாகவும், அந்த ஊழல் இந்த ஊழல் என்றெல்லாம் சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். ஊழல் நடைபெறவில்லை என்று அப்போதும் சொன்னோம், இப்போதும் சொல்கிறோம். அரிசி ஊழல் என்று இன்றும் இன்னமும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கழக ஆட்சியிலே நடந்தது என்று வேகவேகமாகப் பேசுகிறார்கள். அதிலே சம்பந்தப்பட்டவர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள். அவர்கள் அன்று உடனடியாக அ தி மு க வில் சேர்ந்தார்கள். அவர் அமைச்சராக இருந்தபோது அந்த ஊழல் நடந்தது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி விசாரணைக் கமிஷன் நடந்தபோது, அதில் சாட்சி சொல்லாமல் ஓடிவிட்டார்கள். அன்று அரிசி ஊழல் என்று சொன்னார்கள். திரு. ப. உ. ச. அவர்கள் இன்றைக்கு அவர்கள் கட்சிக்கே வந்துவிட்டார்கள். ஊழல் செய்தார் என்று சொல்வதை இன்றும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை நான் வலியுறுத்திச் சொல்லவும் இல்லை என்று சொல்கிறேன்.



ஏதோ கொள்கைகளை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். எங்கே இருக்கிறது உயிர்க் கொள்கை, யார் இருக்கிறார்கள், எங்கே இருக்கிறார்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அது அவர்களுடைய கட்சித் தலைவர்களுக்குத் தெரியும். இந்திப் பிரச்சினை வந்தபோது, அதை இன்றைக்கும் எதிர்க்கத் தயாராக இருந்தவர்கள் யார்? திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு இணைந்து போட்டியிட்ட அந்த நேரத்திலும் இரு மொழிக் கொள்கையைத்தான் ஆதரித்தோம். நாங்கள் என்றும் இந்தியை எதிர்ப்போம் என்றுதான் குரல் கொடுத்தோம். அந்தக் குரல் யார் கொடுத்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சியைக் கொள்கையாக வைத்துக்கொண்டுதான் கூட்டுச் சேருகிறோம் என்று தெளிவாகச் சொல்லிக்கொண்டிருந்தது. மாநில சுயாட்சி, அதிக அதிகாரங்கள் என்று சொல்லி குழப்பவேண்டியதில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, யாருக்கும் அதைப்பற்றிச் சந்தேகம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஊழலைப்பற்றிப் பேசுவதை வேண்டுமானாலும் நிறுத்திக்கொள்ளுங்கள். உதாரணம் என்று கேட்டார்கள். நான் தரத் தயாராக இருக்கிறேன். மே மாதம் 21 ஆம் தேதியன்று ஆளும் கட்சி அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அவர்கள் மீது அனுப்பப்பட்ட குறிப்புகள் மத்திய அரசாங்கத்துக்கு இந்த அரசாங்கத்தின் மூலமாக அனுப்பப்பட்டிருக்கின்றன. விவரங்கள் பேசுகின்ற உறுப்பினர்கள் அதை வாங்கிப் பார்த்தார்கள் என்றால், ஊழல் புரிந்தவர்கள்பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஏதோ சொல்ல எழுந்தார்கள்.)

VICE-CHAIRMAN (Thirumathi Tara Cherian): The hon. Member Thiru Veerasami has not said anything unparliamentary nor anything about the hon. Member Thiru S. R. Radha. Therefore, I am allowing the hon. Member Thiru Veerasami to proceed.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அது மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, கொள்கைகளை, லட்சியங்களை நாங்கள் யாருக்கும் எந்த நேரத்திலும் அடகு வைக்கத் தயாராக இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை

அடுத்து, நிதி நிலை அறிக்கையைப்பற்றிச் சொல்கிறேன். உண்மையிலேயே இந்த அறிக்கையைப் பொறுத்த வரையிலே, இதிலே ஒன்றுமே இல்லை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அப்படிச் சொல் ஆளும் கட்சியினர் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. அதே நேரத்திலே எல்லாம் இருக்கின்றன என்று சொல்லி, தமிழ் நாட்டு மக்களுடைய உள்ளத்திலே இருக்கின்ற எதிர்பார்ப்புகளுக்கு நான் ஏமாற்றத்தை அளிக்க விரும்பவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்சி தேர்தல் நேரத்திலே கொடுக்கின்ற வாக்குறுதிகளைப் பொறுத்தவரையிலும், மக்கள் அந்த வாக்குறுதிகளை நம்பித்தான் வாக்களிக்கிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். தேர்தல் காலத்திலே இந்த நாட்டிலே இருந்த பிரச்சினை முதலமைச்சர் கலைஞரா அல்லது எம்.ஜி.ஆர். அவர்களா என்ற பிரச்சினை என்று மாண்புமிகு திரு. இராதா அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லி விவாதித்தார்களானால், நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது ஒன்று மட்டும் தானா ? யார் முதலமைச்சர் என்ற ஒரே காரணம் தானா என்று கேட்கிறேன்.

Thiru K. RAMAMOORTHY : Madam Vice-Chairman, just a submission. The Members of this House have a right to interrupt the speech of another Member if the latter sits down or yields. It is not as if no Member should interrupt another Member when he is on his legs.

VICE-CHAIRMAN (Thirumathi Tara Cherian) : I am aware of that rule. Since there was no need for inter-party clashes in this House and since the time for general discussion on the Budget was running short, I asked the hon. Member Thiru Veerasami to continue.

Thiru K. RAMAMOORTHY : The right of the Member is the same, whether the time is running short or not.

Thiru G. SWAMINATHAN : Ultimately the Chairman has to accept the right.

திரு. செ. முத்துசாமி : இருந்தாலும், அங்கத்தினர்கள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறையில்தான் சொல்லப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



1980 ஜூலை 9]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராதா அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். அவர்கள் யார் முதலமைச்சர் என்பதை மட்டும் பிரச்சினையாக வைத்துத்தான் இந்த நாட்டு மக்கள் வாக்களிக்கிறார்களா என்பதைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், கும்பகோணத்திலே அந்தத் தொகுதி மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று சொன்னால், கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக இருப்பார்கள். அதை ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) : இப்போது உறுப்பினர் அவர்களுடைய கருத்தைச் சொல்லலாம்.

(பிற்பகல் 6-30)

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இதைப் பேச வேண்டுமென்று எதிர்பார்த்துத்தான், அதைப்பற்றி நான் பேசாமல் இருந்தேன். கும்பகோணத்தில்தான் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக வர வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் தமிழ் நாடு பூராவும் பார்த்தால், திரு கருணாநிதி வேண்டாமென்று நினைக்கிறார்கள். கும்பகோணத்தில் இருக்கிறவர்கள் மாத்திரம்தான் டாக்டர் கருணாநிதி வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

திரு ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற வாதத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். 69 தொகுதிகளில் கலைஞரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது 84 லட்சம் வாக்காளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் யார் முதலமைச்சர் என்பது மாத்திரமல்ல பிரச்சினை. தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் வாக்குறுதிகள் கொடுக்கிறார்கள். வாக்காளர்கள் படித்துப் பட்டம் பெற்று, எல்லாம் தெரிந்தவர்களல்ல. வாக்காளர்கள் யார் என்பது நமக்குத் தெரியாததல்ல. யார் எவ்வளவு வாக்குகள் பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்ததென்பதை இந்த நாடு மறந்துவிடவில்லை. வாக்குறுதிகளை எல்லாம் கொடுத்தீர்களே, அந்த வாக்குறுதிகளை எப்போது நிறைவேற்றப் போகிறீர்களென்று நான் கேட்கப் போவதில்லை. அவர்கள் ஆளப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கும் ஐந்து ஆண்டுகளில் அந்த

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை 9

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக இருந்தால், அதில் எனக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடுமில்லை. இன்றையதினம் நம்முடைய நிதியமைச்சர், நாவலர் அவர்கள் சிலவற்றை நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதிலே முக்கியமாக விவசாயிகள் கடன்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருமானால், விவசாயிகளுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும், திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் சங்கம் கொடுத்திருக்கிற 9 அம்சக் கோரிக்கை பரிசீலிக்கப்படுமென்று நாங்கள் சொன்னோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் விவசாயிகள் பிரச்சினையைப்பற்றிச் சொல்லியது. திராவிட முன்னேற்றக் கழகம் திட்டவட்டமாகச் சொல்லவில்லை, நாங்கள் திட்டவட்டமாகச் சொல்கிறோம், என்று சொல்லி விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இன்றையதினம் 60 கோடி ரூபாய் ரத்து செய்துள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அதிலும் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ரத்து செய்துவிட்டு, மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அடுத்த நாள் நம்முடைய பத்திரிகை நண்பர்களைப் பார்த்துச் சொன்ன நேரத்தில், கடிதம் எழுதப் போகிறோமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எழுதியிருந்தாலும் சரி, எழுதப் போவதாக இருந்தாலும் சரி, மத்திய அரசு கொடுத்தால், அதை மனப்பூர்வமாக வரவேற்பவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே ஆளும் கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. எனவே எந்தவிதமான நிதி உதவியும் செய்யாதீர்களென்று ...திய அரசிடம் சொல்லக்கூடிய மனப்பான்மை பெற்றவர்களல்ல திராவிட ...ன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழக அரசு மத்திய அரசிடம் ...க்கின்ற கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது தமிழ் நாட்டின் ...மைக்காக இருக்குமானால், அவர்களோடு சேர்ந்து நாங்களும் குரல் ...டுப்போமே தவிர, அவர்களுக்கு எதிராகச் செயல்படுவோமென்று எண்ண ...ண்டாம். விவசாயிகள் கடன், விவசாயிகள் கடன் என்று பெரிதாகப் ...சிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் எந்த அளவிற்குக் ...ன் பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கத்திடம் ...டும்தானா கடன் பட்டிருக்கிறார்கள்? வங்கிகளின் மூலம் கடன் வாங்கி ...க்கிறார்கள். தனியார்களிடம் கடன் வாங்கியிருக்கிறார்கள், நகைகளை ...கு வைத்து கடன் வாங்கியிருக்கிறார்கள், நில வள வங்கிகளின் மூலம் ...ன் வாங்கியிருக்கிறார்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வாங்கி ...க்கிறார்கள். இப்படி விவசாயிகள் வாங்கியிருக்கும் கடனில் நம்முடைய



1980 ஜூலை 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நிதியமைச்சர் ரத்து செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற 60 கோடி ரூபாய், இரண்டு சதவிகிதம்தான் இருக்கும். அதிலேயும் 5 ஏக்கருக்குக் குறைவாக இருக்கக்கூடியவர்களுக்குத்தான் இந்தக் கடன் ரத்து என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்காவது இந்த அரசாங்கம் முதற்படியாக உதவி செய்ய முன் வந்திருப்பதற்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி 5 ஏக்கர் என்று சொல்லும்போது, ஆற்காட்டில் 5 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய விவசாயிக்கும், காவிரி ஆற்றுப் பாசனத்தில் 5 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய விவசாயிக்கும் ஒரே மாதிரியான நியாயம்தானா என்பதை ஆளுங்கட்சியில் இருக்கிறவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

5 ஏக்கர் என்று சொல்லும்போது, பொதுவாக மற்ற பிரச்சினைகளிலே உள்ளதுபோல், ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் நிதிநிலை அறிக்கையில் ஸ்டான்டர்ட் ஏக்கரா, நஞ்சையா, புஞ்சையா என்பது குறித்து எந்தவிதமான குறிப்பும் கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய நிதியமைச்சரவர்கள் 60 கோடி ரூபாய் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்களென்று சொன்னாலும், எந்தெந்த விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது, ஸ்டான்டர்ட் ஏக்கரா, சாதாரண ஏக்கரா போன்ற விஷயங்களை என்னைப் போன்றவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, மத்திய அரசு நிதி கொடுக்காதென்று சொன்னார்கள். நான் அந்த எண்ணத்திற்குப் போகவில்லை, கொடுக்குமென்று எதிர்பார்க்கிறேன். அப்படிக் கொடுக்காவிட்டால் என்று சொல்லிவிட்டு, அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 60 கோடி ரூபாயையும் இந்த ஆண்டே ரத்து செய்யப் போகிறீர்களா அல்லது 5 ஆண்டுகளில் ரத்து செய்யப் போகிறீர்களா என்று கேட்டார்கள். எந்த ஆண்டு ரத்து செய்யப்போகிறார்கள் என்பதுபற்றி நான் கவலைப்படவில்லை. 60 கோடி ரூபாய் அளவுக்கு ரத்து செய்யப் போகிறோமென்று சொல்லிவிட்டதால், நாளைக்கு ஒருவர் மத்திய வங்கியில் நின்றுகொண்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வேண்டுமென்று கேட்கும்போது, அவர்களுக்குக் கடன் கொடுக்கப் பணமில்லை என்று சொல்லும் நிலை உருவாகக்கூடாது. இன்றைய தினம் ரிசர்வ் வங்கி மறு நிதி கொடுக்காத காரணத்தாலே, பல மாவட்டங்களிலே கூட்டுறவு சொசைட்டிகளிலே வேலை செய்கின்ற சூப்பர்வைசர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 'ஏ' கிரேட் 'பி' கிரேட் என்று சொல்லிக்கொண்டிருந்த கூட்டுறவு வங்கிகள் எல்லாம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை

கிரேட் அளவிற்கு வந்ததோடல்லாமல், அதற்குக் கீழே ஏதாவது ஒரு கிரே
இருக்குமானால், அவற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அ
படிப்பட்ட சூழ்நிலையில் 60 கோடி ரூபாய் அளவுக்கு ரத்து செய்கிறே
மென்று சொல்லிவிட்டு, அடுத்து பயிரிடப்போகும் நேரத்தில் கடன் வழங்
என்ன வழி செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சரவர்க
அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம் பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிரு
கிறார்கள். இதுவரை 8.9 லட்சம் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்
கொடுக்கப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிற
கள். இது எந்த நேரத்திலிருந்து? மின் வாரியம் என்ற ஒன்று உருவா
இதுநாள் வரையில் கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளின் கணக்காகு
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பேரறிஞர் அண்ணா அவர்க
ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், இந்த நாட்டிலே உண
உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே
காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆண்டுக்கு 10,000, 15,000 என்று பாசன
கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட சூழ்நிலையை மாற்
குறைந்தது 40,000 பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்ப
வேண்டுமென்றும், அதற்கு அரசாங்கத்திற்கு இழப்பு 10 கோடி ரூபாய்
இருந்தாலும் ஏற்போமென்று கூறி, ஆண்டுக்கு 40,000 பம்புசெட்டுகளுக்
இணைப்பு கொடுத்தார்கள். அடுத்து, கலைஞர் முதலமைச்சராக வந்
பிறகு, ஆண்டுக்கு 60,000 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்ப
என்று முடிவெடுத்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஆண்
எத்தனை பம்ப்செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படுமென்
அறிவிப்பு வைக்கப்பட்டிருக்கிறதா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
ஆட்சியில், இந்த ஆண்டு முதலிலிருந்து இன்றுவரை அளித்த மின் இணைப்
னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்த ஆண்டு எவ்வளவு மின்
இணைப்பு கொடுக்கப் போகிறார்களென்ற குறிப்பு இருக்கிறதா என்று தேடி
பார்த்தேன். அப்படிப்பட்ட குறிப்புகள் கிடைக்கவில்லை. மின்சார
திட்டங்களுக்காக, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின்
அடிப்படையிலே 155.76 கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது
இது வரவேற்கக்கூடிய ஒன்று. தமிழகம் மட்டுமல்ல, விஞ்ஞான வளர்ச்சியில்
அக்கறை கொண்டுள்ள நாடுகள் மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்து
கின்றன. மின்சார உற்பத்திக்காக 155 கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டு
ளோம் என்றும், அதற்காக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்போகிறோ
மென்றும் நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனா



1980 ஜூலை 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள இணைப்புப் புத்தகத்தில் தலைப்பு 334-ல் 'மின் விசைத் திட்டங்கள்' என்ற தலைப்பின் கீழ், இந்த ஆண்டு 22.5 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே 155 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டு 75 கோடி ரூபாய் அளிக்கப் போகிறீர்களா அல்லது இணைப்பிலே குறிப்பிட்டுள்ளபடி 22.5 கோடி ரூபாய்தான் செலவிடப் போகிறீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியில் எடுத்துரைத்தார்கள். தொழில்கள் வளர வேண்டும், தொழில்கள் வளர்ந்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட்டால்தான், வறுமையிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியுமென்ற நியாயத்தை ஏற்றுக்கொண்டவர்கள் நாம். எனவே தொழில்கள் வளர என்ன திட்டத்தை இந்த அரசு தயாரித்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் பற்றிச் சொன்னார்கள். இந்த மாநிலத்திலே தொழில்கள் வளர வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தமிழ நாட்டைப்போல கனி வளம் உள்ள மாநிலம் இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்தக் கனிவளங்களையெல்லாம் பயன்படுத்த இந்த அரசு திட்டமிட்டிருக்கிறதா என்றால், என்னைப் பொறுத்தவரையில், நான் திட்டவட்டமாக இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். 'செமி பிரீசியஸ் ஸ்டோன்ஸ்' பற்றி நான் எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். இங்கே இருக்கக்கூடிய ஜியாலாஜிக்கல் டிப்பார்ட்மென்ட் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்றால் எதுவும் இல்லை. அடுத்து, தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், அதற்குத் தகுந்த பணம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லையென்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகாரிகள் என்ன சொன்னார்களோ எனக்குத் தெரியாது. அதிகாரிகள் சொன்னதை

(பிற்பகல் 6-40)

வைத்துக்கொண்டு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். தனியார் துறை மூலம் 36 நூற்பு ஆலைகள் தொடங்க இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் போதிய பணம் இல்லை, ஆகவே தனியாரிடத்தில் அதைத் தொடங்கக் கொடுக்கிறோம் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளுகிறோம். எப்படியாவது தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் வந்து ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு வந்தால் போதும். அதை நடத்துவது

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை 9

அரசாங்கமா இல்லை தனியாரா என்றெல்லாம் நாங்கள் பார்க்கத் தயாராக இல்லை. எப்படியாவது வேலை வாய்ப்பு வந்தால், நாங்கள் வரவேற்கிறோம். தீப்பெட்டித் தொழில் மூலம் கூட்டுறவுத் துறையில் 52 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவர்கள் செலவிடும் மூலதனம் 24 இலட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். 24 இலட்சம் ரூபாய் மூலதனத்தில் 52 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் துறையிலேயே ஏன் 10 கோடி ரூபாய் ஒதுக்கி 5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக் கூடாது என்று நான் அறிய ஆசைப்படுகிறேன். புள்ளிவிவரங்கள் 52 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் போவதாகக் கூறுகின்றன. 24 இலட்சம் ரூபாயில் 52 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்று சொல்லுவதால்தான், என் போன்றவர்களுக்கு அடிப்படையிலேயே சந்தேகம் வந்திருக்கிறது. பட்டுப்புழு வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் மாவட்டங்களின் தலைநகரங்களில் 45 இலட்ச ரூபாய் செலவில் பட்டு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. அதுபோல் தேங்காய் நார் தயாரிப்பதற்கும் அதிலிருந்து கயிறு தயாரிப்பதற்கும் பத்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆக மொத்தத்தில் தொழில் வளர்ச்சிக்காக எந்த அளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள், தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி எந்தத் திசையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 1979-80 ஆம் ஆண்டில் சுமார் 37,000 பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. 967 கோடி ரூபாய் நாம் நம்முடைய மாநிலத்திற்காகச் செலவு செய்யப் போகிறோம். அதிலே தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால் வெறும் 3,79,11,000 ரூபாய். ஆனால் கடந்த ஆண்டு வருமானம் 849 கோடி ரூபாய். அதாவது 1979-80 ஆம் ஆண்டு வருமானம். ஆனால் கடந்த ஆண்டு தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கிய தொகை 4 கோடியே 40 இலட்சம் ரூபாய். காலம் செல்லச் செல்ல நாட்டின் வருமானம் உயர்ந்துகொண்டே போகிறது, அதற்கேற்ப தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கும் பணமும் உயர்ந்துகொண்டே போக வேண்டும். அதுதான் நியாயம். ஆனால் இங்கே தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் பணம் குறைந்துகொண்டே வருகிறது. புதிதாக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும். அதற்கு தொழில் வளர்ச்சிக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே தமிழக அரசு



1980 ஜூலை 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

தொழில் துறைக்கு இன்னும் அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். தமிழக அரசு ஒதுக்கும் பணத்தின் அளவு குறைந்துகொண்டே வருகிறது. இது நல்லதல்ல. இப்படிப்பட்ட நிலைமை நீடித்துக்கொண்டே போனால், தொழில்கள் தமிழகத்தில் வளர என்ன ஆதாரங்கள் இருக்கின்றன? இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஏதோ மத்திய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கக்கூடிய பணத்தில் குறை இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில் தவறு செய்தால், அது நியாயம் என்று சொல்ல என்றைக்குமே திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இல்லை. அதே நேரத்தில் இம்மாநிலம் புறக்கணிக்கப்படுகிறது என்கிற நிலை வருமானால், அதைத் தட்டிக் கேட்க ஆளும் கட்சியினரோடு ஒத்துழைக்க நாங்கள் தயார் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கோவையில் கடந்த ஆண்டு வர இருந்த ரெயில் பெட்டித் தொழிற்சாலை ஏன் திருப்பதிக்குப் போய்விட்டது? தமிழக அரசினுடைய கவனக் குறைவு காரணத்தினால்தானே? தமிழக அரசின் கவனக் குறைவு காரணமாக தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. மத்திய அரசு பொறுப்பேற்று நிதியை ஒதுக்குகிறது. ஒரு மாநில அரசை மத்திய அரசு உற்சாகப்படுத்துகிறது. அந்த நேரத்தில் மாநில அரசு கவனக் குறைவாக இருக்கிறது என்றால், இதை என்னவென்று சொல்வது? இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா ஒன்றைக் கேட்டார்கள். செப்டம்பர் மாதத்திலேதான் அவர்கள் கொடுக்கிறார்கள், அதற்குள் மார்ச் மாதம் வந்து விடுகிறது, உடனேயே திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும். மத்திய அரசு கொடுப்பது என்றால், ஏதோ டில்லியிலிருந்து கொண்டு வந்து இங்கே நிதியமைச்சர் அவர்களிடத்தில் கொடுப்பதில்லை. திட்டங்கள் முறையாகத் தயாரிக்கப்படுகின்றன. ஒரு முறை ஒப்புதல் அளித்த உடனேயே இங்கே வேலைகள் துவக்கப்பட வேண்டும். வேலை தொடங்கிய உடனேயே நம்முடைய அரசு எந்தத் தொழிற்சாலைக்கும், எந்த ஒரு கான்டிராக்டருக்கும் பணத்தைக் கொடுத்து விடுவதில்லை. முறையாக அதற்கென்று பிளான் உண்டு, எக்சிகியூஷன் உண்டு, டிஸ்டிரிபியூஷன் என்றெல்லாம் உண்டு. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொன்ன வாதம் சரியில்லை. இதற்கு முன்னாலே கழக ஆட்சி இருந்தது. கழக ஆட்சிக்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. 1977-78 ஆம் ஆண்டு இந்த அரசு சட்டமன்றத்தின் மூலம் ஒப்புதல் பெற்று ஒதுக்கிய 199.6 கோடி ரூபாயை, பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கிய

கொள்ளத் தயார். அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களைச் சொன்னால் நாங்கள் என்றைக்குமே ஏற்றுக்கொள்ளத் தயார். கட்சி வேறுபாட்டை பார்க்காமல் நியாயம் இருந்தால், அதை திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஏற்றுக்கொள்ளும். அதை விட்டுவிட்டு இந்தத் திட்டம் பாண்டிச்சேரியில் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்ன உடனேயே ஆளும் கட்சியில் உள்ளவர்கள் உடனே அதை அவர்கள் எந்த நிலையில் அறிவித்தார்களோ என்று சொல்வது மரபு அல்ல. அவர்கள் அதை அறிவிக்கும்போது எங்கே அறிவித்தார்கள், எந்த நேரத்தில், எந்த நிலையில் அறிவித்தார்கள் என்பதையெல்லாம் நான் இந்த மன்றத்திலே விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள். திட்டம் அமுலுக்கு வருவதாகச் சொன்னார்கள். உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாண்டிச்சேரியில் அமுல்படுத்தினால், இந்த மாநிலத்தில் நாங்களும் அமுல்படுத்துவோம் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு, ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அந்தத் திட்டத்தைப்பற்றிக் கேலி பேசக்கூடாது. ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் அமுல்படுத்த வேண்டுமென்றும், ஏழையெளியவர்களுக்கு தங்கத்தில் தாலி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருக்க ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-50)

1979-80 ஆம் ஆண்டில 32 லட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் புதிய பேருந்து வழித்தடங்கள் திறக்கப்பட்டன என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை பேருந்துகள் இன்றைய தினம் எங்கெங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன என்று நான் கேட்க விரும்புகிறேன். ஏதோ வார்த்தை அலங்காரத்திற்காக இதை அச்சிட்டுக் கொடுக்கவில்லை என்று நான் எண்ணுகிறேன். ஆதாரத்தோடு இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்பே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. மாவட்டங்கள் தோறும் மினி பஸ்கள் விடப்படும் என்று சொல்லப்பட்டது. வடஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை மினி பஸ்கள் ஓடும் என்றும், அவைகள் எத்தனை கிராமங்களைத் தொட்டுக்கொண்டு ஓடும் என்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் அங்கே எத்தனை மினி பஸ்கள் ஓடுகின்றன? எத்தனை குடியிருப்புகளை அந்த மினி பஸ்கள் தொட்டுக்கொண்டிருக்கின்றன? ஆளும் கட்சியினர் இதனை எண்ணிப் பார்க்க வேண்டு



மென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே உரிமம் பெற்று ஓட்டிய மினி பஸ்களேகூட இன்றையதினம் ஓடவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் இத்தகைய மினி பஸ்கள் ஓட்டப்பட்டனவே அவைகளெல்லாம் இன்றைக்கு எங்கே இருக்கின்றன என்று நாட்டு மக்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எங்கேயும் அந்த மினி பஸ்கள் கண்ணுக்குத் தென்படவில்லை.

அதுமட்டுமல்ல, இந்த ஆண்டில் பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கும் வகையிலும், கூடுதலாகச் சேர்க்கும் முறையிலும் மொத்தம் 1,800 புதிய பேருந்துகள் விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இங்கே குறிப்பில் இருக்கிறது. மாண்புமிகு நாவலர் அவர்கள் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட உடனே புதிதாக 1,800 பேருந்துகள் விடப்படும் என்று அறிவித்ததையொட்டி நான்கூட நினைத்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதும், அவர் உள்ளத்தில் இருந்த திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் சட்டமன்றத்திலே அப்போது ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். 75 மைல்களுக்கு மேலுள்ள வழித்தடங்கள் எல்லாம் தேசியமயமாக்கப்படும் என்று அப்போது அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, தனியார்களிடமிருக்கும் வழித்தடங்களை மாவட்ட வாரியாக தேசிய மயமாக்குவோம் என்று சொல்லி, அதன் தொடர்பாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருந்து வழித்தடங்களை தேசிய மயமாக்கினோம். எனவே இதைத் தொடர்ந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தேர்தல் முடிவடைந்த உடனே வட ஆற்காடு மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இருக்கும் தனியார் பஸ்களையெல்லாம் அரசாங்கம் நாட்டுடைமையாக்கி அறிவித்தாரே அதையொட்டித்தான் புதிதாக 1,800 பஸ்கள் வாங்கப்பட இருக்கின்றனவோ என்று பார்த்தேன். ஆனால் இங்கே கொடுக்கப்பட்ட விவரக் குறிப்புகளில் அதைப்பற்றி எதையும் காணோம். அப்படிப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். காரணம் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, கடந்த 3 ஆண்டுக் காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் எந்த வகையில் செயல்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் கொள்கைக்கு எதிராக இந்தியாவின் உச்ச நீதிமன்றத்திற்கு பஸ் அதிபர்கள் போய் பஸ் வழித் தடங்களை அரசுடைமையாக்குவதை எதிர்த்து ஒரு 'ஸ்டே' வாங்கி வந்தார்கள். அந்த ஸ்டேவை வெகேட் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் இந்த அரசுக்குக் கடந்த 3 ஆண்டுக் காலத்திலே இருந்திருக்கிறதா? இல்லை. விட்டுவிடுவோம். இனியாவது அத்தகைய நல்லெண்ணம் இந்த அரசாங்கத்திற்கு வருமா?

பணத்தை செலவழிக்கவில்லையே, அது ஏன் என்று வீராசாமி கேட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா போன்றவர்களுக்கும், ஆளும் கட்சி நண்பர்களுக்கும் ஆத்திரம் ஏற்படலாம். ஆனால் இந்த விஷயத்தைச் சொன்னது யார்? ஆடிட்டர்-ஜெனரல்தான். சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற்று திட்டங்களுக்காக ஒதுக்கிய 200 கோடி ரூபாய் செலவழிக்கப்படாமல் இருக்கிறது, இதற்குக் காரணம் என்ன என்று அரசைக் கேட்டால், அரசு காரணம்கூட சொல்லவில்லை. இதை எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அவர்களே புத்தகமாக அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? திராவிட முன்னேற்றக் கழகமா?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நான் பேசியதாகக் குறிப்பிட்டுப் பேசியதை அவர் எந்த நோக்கத்தில் பேசினார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்றை எனக்கு அவர் கற்றுத் தருகின்ற விதத்தில் மாநில அரசுக்கு மத்திய அரசு எப்படிப் பணம் தருகிறது என்பதையும் இன்னும் விவரங்களையும் எனக்கு அவர் கூறுகின்ற வகையில் அவர் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் சபைக் குறிப்பில் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன். தொடர்ந்து அது இருக்குமானால், நான் ஏதோ மத்திய சர்க்காரிடத்தில் பணம் கேட்டதும், அவர்கள் பணத்தை ஒரு பெட்டியில் இரவு நேரத்தில் விமானத்தில் கொண்டு வந்து கொடுப்பது போலவும் அதை உடனே 10 ரூபாய் நோட்டுக்களாக மாற்றி அதற்குரிய வழிவகைகளைச் செய்வது போலவும் பேசியதாக அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆனால் அவருக்கு ஒன்றை மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர் அளவுக்கு எனக்கு விவரங்கள் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நானும் ஓரளவு விவரங்களைத் தெரிந்துதான் கருத்துக்களைச் சொன்னேன். ஏதோ மத்திய சர்க்கார் என்றால் பணத்தைக் கொண்டு வந்து நிதியமைச்சரிடத்தில் கொடுத்து விட்டுப் போவது போலவும் வழியில் யாரோ எடுத்துக்கொண்டு போவது போலவும் சொல்வது சரியில்லை. என்னைப் போன்றவர்கள் அப்படிக் கருதுகிறவர்களும் அல்ல. இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். அவருக்கு விவரங்கள் தேவை என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எந்தெந்த நிதிகள் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டன என்கிற விவரங்களை அளிக்கத் தயாராக இருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் இத்தகைய நிலைமைகள் நடைமுறையில் எந்தெந்த நேரங்களில், எந்தெந்த நிலைமை



களில் ஏற்பட்டன என்பதையும் ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன். என்னைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து சபை நடவடிக்கைக் குறிப்பில் தொடர்ந்து இருக்கலாமா என்பதை அவர் தயவுசெய்து தெளிவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மத்திய அரசு கொடுக்கும் நிதியை காலா காலத்தில் செலவழிக்காமலிருந்தால், தமிழ்நாட்டின் நலம் கெடுகிறது. எந்த ஆட்சியில் அது நடைபெற்றது என்பது முக்கியமல்ல. அவ்வாறு கொடுக்கப்படும் பணம் எந்த ஆட்சியிலும் செலவழிக்கப்படாமல் இருக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் சொன்ன நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். இரவிலும் வரவில்லை, விமானத்திலும் வரவில்லை, 10 ரூபாய் நோட்டுகளாக மாற்றவும் இல்லை, 79 இலட்சம் ரூபாய் வாலன்டரி டிஸ்குளோஷராக அறிவிக்கப்படவும் இல்லை. ஆனால் இதிலேயே கவனத்தைச் செலுத்துவதாக இருந்தால், வாதத்திற்கு வாதம் மாண்புமிகு உறுப்பினருக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கத் தயார்.

திரு. க. இராமமூர்த்தி: விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் சிலவற்றைப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் பரிமாறிக் கொண்டிருக்கும் கருத்துக்களை அவை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சொன்னால் நலமாக இருக்கும். (சிரிப்பு)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : உறுப்பினர் புரிந்துகொள்ளாமல் இருக்கக் கூடாது. ஆனால் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு நான் பொறுப்பு அல்ல. அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

பொற்கொல்லர்கள் மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது பற்றியும் இங்கே அறிவித்திருக்கிறார்கள். மலிவு விலையில் ஏழையெளியவர்களுக்குத் தாலி செய்கின்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். நல்ல திட்டம். ஆனால் விரைவில் இதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். ஏழையெளியவர்களுக்குத் தாலி செய்து கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், ஆளும் கட்சிக்காரர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல், முதலில் கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கும், அரிசனங்களுக்கும் கொடுப்பதென்றால்கூட, அதையும் நாங்கள் முழு மனதுடன் ஏற்றுக்

நான் இங்கே ஆதாரத்தோடு பேசுகிறேன். மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது ஊழலைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் ஊழலைப்பற்றி இங்கே பேசுவதற்கு முன்வரவில்லை. ஆனால் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்படி சட்டமன்றத்திலேயே ஒரு அறிவிப்பு செய்த பிறகு, வட ஆற்காடு மாவட்டத்தின் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பலராமன் ஒரு அறிவிப்பைச் செய்தார். அது தவறான அறிவிப்பு என்று ஆளும் கட்சியால் மறுக்க முடிந்ததா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒருவேளை இது தெரியாமல் இருக்கலாம். அல்லது அவருக்கும் பக்கத்திலே இருக்கிற அமைச்சருக்குத் தெரியாமல் இருக்கலாம். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு முதலமைச்சரின் பொறுப்பில்தான் காவல்துறை இருக்கிறது. இப்படிப்பட்ட கொள்கை அறிவிக்கப்பட்ட உடனே, ஒவ்வொரு தனியார் பஸ் சொந்தக்காரரிடமிருந்தும் பஸ் ஒன்றுக்கு ரூ. 5,000 வசூல் நடைபெற்றதே அதை என் தடுக்கவில்லை? இந்த அரசாங்கம் அப்படி நிதி வசூலிக்கப்படவில்லை என்று சொல்ல முன்வருமானால், நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். தனிப்பட்ட மனிதர்கள் இவ்வாறு நிதி வசூல் செய்வதற்கு யார் அனுமதித்தார்கள்? தெரிந்துகொள்ள வேண்டாமா? ஒரு பக்கத்திலே இப்படிப்பட்ட அறிவிப்பு, மறுபக்கத்திலே இதுபோன்ற வசூல் என்றால் . . . .

VICE-CHAIRMAN (THIRUMATHI TARA CHERIAN) : The hon. Member Thiru Veerasami may kindly address the Chair. In that case the hon. Thiru Eradha may not be wanting to argue with him.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே அவையில் ஒரு பெரிய குற்றச் சாட்டைக் கூறியிருக்கிறார்கள். நான் மிகப் பணிவோடு அவரிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு பணம் வசூல் செய்தவர் யாராக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வசூலை நிரூபிப்பவராக இருந்தால், இந்த மன்றத்திலேயே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் எந்தவிதமான பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறாரோ அப்படிப் பொறுப்பேற்க நான் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர்கள் இவ்வாறு குற்றச்சாட்டுகளைச் சொல்வது என்பது வாடிக்கையாகி விட்டது. வற்புறுத்திக் கேட்கும்போது, "விசாரணைக் கமிஷன் வையுங்கள், நான் கோர்ட்டுக்குப் போகிறேன்"





என்றெல்லாம் சொல்லுவதும் வழக்கமாக இருக்கிற காரணத்தால், உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லும் குற்றச்சாட்டில் ஆதாரம் இருக்குமானால், அப்படிப்பட்ட ஆதாரத்தைத் தருவாரானால், "இன்னின்னாரிடம் வாங்கினார்கள், அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வாங்கினார்கள் அல்லது ஆட்சிக்கு வாங்கினார்கள்" என்று சொல்லுவாரானால், அது நல்லதாக இருக்கும்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) : எனக்குத் தெரிந்தவரையில், உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அப்படிச் சொன்னதாகத் தெரியவில்லை. எனவே அவர் மேலே தொடர்ந்து பேசலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் என்னுடைய பேச்சை உன்னிப்பாக கவனித்திருக்க வேண்டும். அரசாங்கத் தரப்பில் ஓர் அறிவிப்பு வருகிறது. அடுத்த நாள் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வட ஆற்காடு மாவட்டத்தில் எல்லா பஸ் முதலாளிகளிடமும் பஸ் ஒன்றுக்கு ரூ. 5,000 என்று வசூல் செய்யப்பட்டது. எந்த மாதிரி பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினர் எதிர் பார்க்கிறார்? இங்கே தலைவர் முன்னாலே பொறுப்பேற்றுக் கொள்ளவா? முதலமைச்சர் முன்னிலையிலே பொறுப்பேற்கவா? இல்லை, நிதியமைச்சர் முன்னாலே பொறுப்பேற்கவா? யார் யார் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் நிரூபிக்கத் தயார். ஆதாரமில்லாமல் நான் பேசவில்லை. இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களில் பலர் பஸ் முதலாளிகளாக இருக்கிறார்கள். இந்த நிலையில் வட ஆற்காடு மாவட்டத்தின் காங்கிரஸ் கட்சியின் தலைவரே சொல்லுகிறார். . . .

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுகிற காரணத்தால், நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் இந்த அவையில் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கத் தவறினால், அவர் அதற்காக ஏற்றுக்கொள்ளப் போகிற தண்டனை என்ன என்பதையும் இப்போதே இங்கே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் 'பஸ் முதலாளிகளிடம் பணம் வசூலிக்கிறார்கள்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான பட்டியலையும் தருகிறேன் என்கிறார். அவர்கள் எதற்கு வசூலிக்கிறார்கள், யாருக்குக் கொடுக்க வசூலிக்கிறார்கள் என்ற விவரம் கொடுத்தால், நாம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

அதற்குமேல் எடுக்க வேண்டிய நடவடிக்கையைப்பற்றி யோசிக்கலாம். பணம் வசூலிக்கிறார்கள் என்று மட்டும் சொல்வதால், அதை இப்போதே ஒரு குற்றச் சாட்டு என்று எடுத்துக்கொள்ள வேண்டாம். எதற்கு வசூலிக்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஆட்சிக்கு கொடுக்கத்தான் வசூலிக்கிறார்கள் என்றோ, நமக்குக் கொடுக்கத்தான் வசூலிக்கிறார்கள் என்றோ சொன்னால், இல்லை என்று மறுக்கும் உரிமை நமக்கு இருக்கிறது. அவரும் ஆமாம், ஆமாம் உங்களுக்குத்தான் வசூலிக்கிறார்கள் என்று அத்தாட்சி காட்டினால், நாமே அதற்குப் பிறகு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். பட்டியல் தருகிறேன் என்று சொல்கிறார். ஆனால் பணம் வசூலிக்கிறார்கள் என்றுதான் இப்போது சொல்கிறார். யாருக்கு வசூலிக்கிறார்கள் என்றும், யார் வசூலிக்கிறார்கள் என்றும் சொல்லவில்லை. அந்த விவரங்களையெல்லாம் சொன்னால், நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல முறையில் விளக்கியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, நான் பட்டியல் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அவர்கள் விசாரணைக்குத் தயார் என்றார்கள். எங்கே எந்த விசாரணை என்றாலும் நான் இப்போதே பட்டியலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். யார் யாருக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, யார் யார் பணம் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் . . .

VICE-CHAIRMAN (THIRUMATHI TARA CHERIAN). The Hon. the Finance Minister has given an assurance that if a specific instance is given, he can take action.

திரு. ஜேப்பியார் : மாற்றுத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த தேர்தலில் திரு. கருணாநிதிதான் தமிழ் நாட்டின் முதலமைச்சராக வருவார் என்று அறிவித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பஸ் அதிபர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஏறத்தாழ 9 லட்சம் ரூபாயை வசூலித்து அதில் ஒரு பகுதியைக் கூட்டுச் சேர்ந்திருக்கிற கட்சிக்குத் தந்தார்கள் என்றும், அவர்கள் அதை வாங்க மறுத்தார்கள் என்றும், அப்படி வசூலித்தவர்களின் பட்டியலை இந்த அவையில் தருவதற்கும் நாங்கள் தயார் என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, அவர்களே பதில் சொல்ல வேண்டும். ஆனால் எங்கள் கட்சிக்குக் கொடுத்தார்கள், வாங்க மறுத்தார்கள் என்பதெல்லாம் உண்மைக்குப் புறம்பான சரியில்லாத தகவல். அந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.



1980 ஜூலை 9]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, அப்படி எந்த பஸ் முதலாளியிடமிருந்தும் ஒரு ரூபாய்கூட நாங்கள் நன்கொடையாகப் பெறவில்லை என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அதை நிரூபிப்பாரானால், நீதிமன்றம் கூட தேவையில்லை, அவர் சொல்லுகிற தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்த பஸ் முதலாளியிடம் திராவிட முன்னேற்றக் கழகம் பணம் வாங்கியது, அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று அவர் நிரூபித்தால், அவர் எந்த தண்டனை அளித்தாலும், நான் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : பணம் வாங்கவில்லை. திரு. கருணாநிதி முதலமைச்சராக வருவார் என்ற அச்சத்தின் காரணமாக, வந்தால் என்ன ஆகுமோ என்ற பயத்தின் காரணமாக, அவர்களாகச் சேர்ந்து இந்தப் பணத்தை வசூலித்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் இவர்கள் வாங்க மறுத்தார்கள் என்பதை இந்தச் சபையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சர்டிபிகேட்டை எங்கள் கட்சிக்குக் கொடுத்ததற்கு நன்றி.

திரு. ஜேப்பியார் : பணம் குறைவாக வந்தது. முதலமைச்சர் அந்தஸ்துக்கு அது போதாது என்று திருப்பியனுப்பியிருக்கிறார்கள். வேறு எந்த நல்ல காரணத்திற்காகவும் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்படிக் கொண்டு வந்தவர்களிடம் சரியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு இங்கே பேச வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) : இப்போது 7 மணி ஆகி விட்டது. அதிகமாகச் சர்ச்சைகளில் ஈடுபடாமல் பேசி முடிக்க வேண்டும், இல்லாவிட்டால் நேரம் இருக்காது. May I ask hon. Member how many more minutes he wants? Will it be ten minutes?

(பிற்பகல் 7-00)

THIRU ARCOT N. VEERASAMI: I will finish within half an hour.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்): ஏழு மணி ஆகிவிட்டது. இந்த அவையின் அனுமதியோடு இன்னும் 10 நிமிடங்கள் கொடுக்கப் போகிறேன். 10 நிமிடங்கள் அனுமதிக்கலாமா?

திரு. சி. இராமலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அதிக நேரம் பேசுவதாக இருந்தால், நாளைக்கே பேசலாம்.

மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்): இன்றைக்கே முடித்து விடலாம். நாளைக்கு மினிஸ்டர் பேசவிருக்கிறார்கள். ஆகவே தர்க்கம் எதுவும் செய்ய வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் பேசி முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே முடிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், இந்த நாடு எதிர்காலத்திலே நல்ல அறிவுச் செல்வங்களை உருவாக்க வேண்டுமென்பதற்காக 226 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அதிலும் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 1,242 மேல்நிலைப் பள்ளிகளில் 12-வது வகுப்பு வரையில் கிராமப் பகுதிகளிலும் உள்ள மாணவர்களைச் சேர்த்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் கல்வி பயிலும் ஒரு அருமையான வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்காக நான் உள்ளபடியே அவரைப் பாராட்டுகிறேன். படிப்பு என்பது பட்டணத்திலே இருக்க வேண்டும், பட்டிக்காட்டிலே இருக்கக்கூடாது என்ற வாதத்தைத் தளாக்கக்கூடிய விதத்தில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். இவ்வளவு பெரிய பொறுப்புக்களை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், சென்னையிலே இருக்கக்கூடிய டான் பாஸ்கோ பள்ளியில் படிக்கும் பிளஸ்-2 மாணவனுடைய கல்வியறிவு, ஆற்றல், திறமை, அவன் கல்வி பெறுவதற்கு இருக்கக்கூடிய சூழ்நிலைகள், இங்கேயிருக்கிற விஞ்ஞான வசதிகள், ஆய்வுக் கூடங்கள், நூல் நிலையங்கள் இவைகளை எண்ணிப் பார்க்கிறேன். அதே



நேரத்தில் வட ஆற்காடு மாவட்டத்திலே, பின்தங்கியிருக்கக் கூடிய கலவை, திமிரி போன்ற கிராமங்களில் உள்ள பள்ளிகளில் படிக்கக்கூடிய பிளஸ்—2 மாணவனுக்கு இருக்கக்கூடிய வசதிகளையும், அவன் எப்படிக் கல்வியைக் கற்கிறான் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன். நோக்கம் நல்ல நோக்கம். திட்டம் அருமையான திட்டம். தமிழ் நாட்டிலே ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் பேர் கல்வியைப் பெறுகிற நேரத்தில் சென்னையிலுள்ள டான் பாஸ்கோவில் படிக்கிற மாணவனும், அதே நேரத்தில் கிராமப் பகுதியில் படிக்கிற மாணவனும் பெறுகிற கல்வியின் தரம் ஒன்றாக இருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாய நீதி இந்த நாட்டிற்குக் கிடைக்கும்.

மேல் படிப்புக்குப் போகிற நேரத்தில், அதாவது தொழில் கல்வியைப் பெறுகிற நேரத்தில், பி.ஈ.-யாக இருந்தாலும் சரி, எம்.பி.பி.எஸ், படிப்பாக இருந்தாலும் சரி, டான் பாஸ்கோ மாணவனோடு, பட்டிக்காட்டிலே படித்த மாணவன் போட்டி போடுகிற நேரத்தில் விஞ்ஞான வளர்ச்சியைப் பெறுகிறான். அதேநேரத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இருக்கிறவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. அதற்காக கிராமப் பகுதிகளில் அந்த வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு 3.3 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன் அது எந்த அளவிற்குப் போதும்? எத்தனைப் பள்ளிகளுக்கு, எத்தனை அறிவியல் கருவிகள், நூல் நிலையங்கள் வைக்க வழிவகை செய்யப்படும்? எல்லாப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு இல்லாமல் இருக்கலாம். அடுத்த ஆண்டும் இதைச் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு திட்டம் வைத்துக்கொண்டு, ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லாப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட அறிவியல் கூடங்கள், நூல் நிலையங்கள் வைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே வேலைக்கு உணவு என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 23 இலட்சம் பேருக்கு வேலை, 1,42,000 உழைப்பு நாட்கள், ரூபாய் 9.21 கோடி இதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாலரை கோடி மக்கள் வாழ்கிற தமிழகத்தில் 23 இலட்சம் பேருக்கு வேலை. அதாவது ஐந்து சதவீதம் மக்கள். 5 சதவீதம் மக்கள் எத்தனை நாளைக்கு வேலை செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு ஆறு நாட்கள் வேலை செய்திருக்கிறார்கள்.

வேலை செய்துவிட்டு அவர்கள் பெற்றிருக்கிற ஊதியம் 30 ரூபாய். வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் உழைப்பு நாட்கள் என்று சொல்லுகிறார்கள். 1 இலட்சத்து 42 ஆயிரம் உழைப்பு நாட்கள் என்று தோன்றினாலும், 23 இலட்சம் பேர்கள் உழைத்திருக்கிறார்கள் என்ற கணக்கை வைத்து வகுத்துப் பார்த்தால், ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண்டு முழுவதும் ஆறு நாட்கள்தான் உழைத்திருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் 6 நாட்கள் உழைத்து, 40 ரூபாயை—30 ரூபாய் பணமாகவும், 10 ரூபாய்க்குரிய அரிசியையும்—பெற்று எப்படிக் குடும்பம் நடத்துவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காக இந்தத் திட்டமே கூடாது என்று நான் சொல்லவில்லை. இத்திட்டத்தை விஸ்தரிப்புச் செய்ய வேண்டும். ஆறு நாள் என்பதற்குப் பதிலாக மாதத்திற்கு 15 நாள், 20 நாள் என்ற அளவிற்கு வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுக்கும் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் அருமையான திட்டம். இதைப்பற்றிக் குறை சொல்லாமல் நான் பாராட்டுகிறேன். 'ஏழையெளிய, வகை ஏதுமின்றி பட்டினியில் மிகவும் வாடும் நிலை ஏற்பட்டால், அத்தகையோர் கிராம வளர்ச்சி அதிகாரியிடம் சென்று தங்கள் நிலைமையை எடுத்துக் கூறி 100 ரூபாய் உதவியைப் பெறலாம்'' என்று சொல்லி இத்திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால், கிராம வளர்ச்சி அதிகாரிகள் எல்லாம் காலையிலே வீட்டை விட்டு அலுவலகத்திற்குப் புறப்படும் போது ஆயிரம் ரூபாய், ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வைத்துக்கொண்டு போக வேண்டுமா ? போகிற இடத்திலே பட்டினியோடு சாகிறவர்கள் விண்ணப்பம் போட்டதும், உடனே 100 ரூபாய் கொடுக்கப்படுமா ? அதற்காக இந்த ஆண்டு எவ்வளவு ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்? எத்தனை பேர் இந்த ஆண்டு பட்டினியால் சாவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்? இந்த அரசாங்கம் புதிதாகக் கண்டுபிடித்ததிலே ஒன்று வறுமைக் கோடு. இதுவரை யாருமே கண்டுபிடிக்காததைப் போலவும், இவர்கள்தான் அந்தக் கோட்டை நாட்டுக்குத் தெரிவித்ததைப் போலவும் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் வறுமைக் கோடு எந்தக் காலத்திலிருந்து இருக்கிறது என்பதை ஆதாரத்தோடு படித்துக் காட்டினார். நகர்ப்புறமாக இருந்தால், மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய்க்குக் கீழும் கிராமப்புறமாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு 65 ரூபாய்க்குக் கீழும் பெறுகிறவர்கள்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே



வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, அப்படிப்பட்டவர்கள் சென்னை நகரத்திலும் இருக்கிறார்கள், மற்ற நகரத்திலேயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் கிராம வளர்ச்சி அதிகாரியிடத்தில் தான் சென்று தன் நிலையை எடுத்துக் கூறி உதவியைப் பெற வேண்டுமென்றால், சென்னை நகரத்திலே இருப்பவன் யாரிடத்திலே போய் 100 ரூபாய் கொடு என்று கேட்பான்? விவரங்கள் தெளிவாக இல்லை. ஆகவே நகரத்திலே உள்ளவர்கள் யாராவது சாக வேண்டிய நிலை ஏற்பட்டால், யாரிடம் சென்று, உதவியைக் கேட்க வேண்டும் என்பதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு 7 ஆம் மாதம் முதல் 150 ரூபாய் வரை சத்துணவு வழங்கும் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. இத்திட்டம் முதலிலே கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே செயல்படுத்தப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு படிப்படியாக மதுரை மாவட்டம், செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களுக்கு ஐந்தாண்டுகளில் விரிவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கக்கூடிய தாய்மார்களில் 44 சதவீதம் பேர்கள் இந்த உதவியைப் பெறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 44 சதவீதம் ஒரு தாய்க்கு 150 ரூபாய் என்ற கணக்கைப் போட்டுப் பார்க்கிறேன். என்னுடைய மூளைக்கு எட்டிய வரையில் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் இதற்குத் தேவை. ஆனால் ஒதுக்கியிருப்பதோ 2.13 கோடி ரூபாய்தான். சென்னை, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, தர்மபுரி, சேலம், கோவை, நீலகிரி போன்ற மாவட்டங்களில் ஒருசமயம் இப்படிப்பட்ட உதவியைப் பெறக்கூடிய தாய்மார்கள் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியாது. ஏழ்மை, வறுமைக்கோடு என்பவற்றைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருந்தால், அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் இந்த மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அப்படிப்பட்டவர்களுக்கும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

60 வயதுக்கு மேற்பட்டு வேலை செய்ய இயலாத நிலையில் உள்ள ஆதரவற்ற விவசாயிகளுக்கு ஓய்வுதியம் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில், அரசாங்கத்திலோ அல்லது மற்ற அலுவலகங்களிலோ பணியாற்றிவிட்டு 55, 58, 60 வயதை அடைந்து ரிட்டையர்

ஆனவர்களுக்குத்தான் பென்ஷன் கொடுக்கிறோம். விவசாயத்தைப் பொறுத் வரையில், எந்த முதலாளியும் அட்டண்டென்ஸ் வைத்துக்கொண்டு, சம்ப விகிதத்தை வைத்துக்கொண்டு டைம்-ஸ்கேல் கொடுத்து பிறகு பென்ஷ கொடுப்பதாக இதுவரையிலே தெரியவில்லை. முதியோர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை விவசாயத் தொழிலாளிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமென் சொல்லிவிட்டு, "விவசாயிகளுக்கு ஓய்வூதியம்" என்றும் சொல்லுகிறார்க

(பிற்பகல் 7-10)

பெயர் எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதில் எத்தனை விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தரப் போகிறோம் என்ற விவ இருக்கிறதா என்றால், அந்த விவரம் இல்லை. அதற்கு நிதி ஒதுக்க செய்திருக்கிறார்கள். அது எவ்வளவு என்று கேட்டால், அதுபற்றி விவ இல்லை. இப்படி விவரங்கள் இல்லாமல்தான் திட்டங்கள் இருக்கின்ற விவரங்கள் இருக்குமானால், இன்னும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுவதற் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிரு கிறேன்.

அடுத்து, ஏழையெளியவர்களுக்கு இலவச உணவு, வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள ஏழைகளுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி என்று இருக்கிறது. தமி நாட்டில் இரண்டு கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஒரு வாரத்திற்கு ஒரு கில வீதம் ஒரு ஆண்டிற்கு என்று சொல்கிறார்கள். குறைந்தபட்சம் ஒரு மனி னுக்கு ஆண்டு ஒன்றுக்கு தேவை ரூ. 100 ஆகும் என்று சொல்லலாம். வார திற்கு ஒரு கிலோ அரிசி தேவை என்றால், குறைந்த விலைக்கு அரி விற்கிறது என்று சொன்னாலும்கூட, ரூ. 100, ஆண்டு ஒன்றுக்குத் தேவை ஆனால் இரண்டு கோடி மக்கள் உள்ளனர். அவர்களுக்குக் குறைந்தது 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு நி ஒதுக்கம் 1.25 கோடி ரூபாய் என்றுதான் செய்யப்பட்டிருக்கிறது. அரசாங் ஆண்டு ஒன்றுக்கு 1.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துவிட்டு, மு யோர்க்கு உதவித் தொகை, கைம்பெண்களுக்கு உதவி, உடல் ஊனமுற்றோர்க் உதவி, கண்ணொளி அற்றோர்க்கு உதவி என்று சொல்கிறார்கள். இவர்க ஏற்கெனவே இந்த உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்ப இருப்பவர்களுக்குத்தான் இந்த உதவி என்கிறார்கள், அந்த உதவி தர கொடுக்கப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந் உதவி அவர்களுக்கு மட்டும்தானா அல்லது மற்ற ஏழைகளுக்கும் உண்டா என்பதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதி உரையிலே எதிர்பார்க்கிறேன்.



பொதுவாக இந்த மன்றத்திலே தமிழன் என்று சொல்லிவிட்டாலே, சில பேர்களுக்கு ஆத்திரம் வருகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலரைப் போன்றவர்கள் மேடையிலே பேசிப் பேசி, பாரதிதாசன், பாரதியார் கவிதைகளை, அவருக்கே உரித்தான பாஷையிலே, பாணியிலே எடுத்துச் சொல்லிச் சொல்லி, அதைக் கேட்டுக் கேட்டு அந்தக் கொள்கைகளிலேயே ஈர்க்கப்பட்டவன் நான். தமிழன் என்று சொல்லிவிட்டாலே ஆத்திரப் படுகிறார்கள். அப்புறம் இந்த ஆற்காடு வீராசாமி யார், இந்த இராதா யார் என்கிறார்கள். அது ஆற்காடு வீராசாமியாக இருந்தாலும், அது ராதாவாக இருந்தாலும்; நாங்கள் தமிழர்தான். தமிழர்கள் என்றுதான் நாங்கள் இதுவரையிலே நினைத்துக்கொண்டிருக்கிறோம். நான் திரு. ராதாவையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலே எடுத்து வைத்த அந்தக் கொள்கைகளுக்கு நாங்கள் என்று அடிமை யானோமோ, அன்றுமுதல் தமிழர்கள் என்றுதான் இருக்கிறோம். வேண்டுமானால் தமிழன் என்ற வார்த்தையே அகராதியிலே இருக்கக்கூடாது என்று சொல்லிவிடுங்கள். அது மட்டுமல்ல. "தமிழன் என்றொரு இனமுண்டு, அதற்குத் தனியே ஒரு குணம் உண்டு" என்று பாடினார்களே அதையும் அகற்றி விடுங்கள். அன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மகாநாட்டிலே பேசினார்களே, எந்த லட்சியத்திற்காக நாம் இந்தத் தேர்தலிலே போட்டியிடுகிறோம் என்று சொல்லிவிட்டு, தமிழர் வாழ தமிழினம் தலை நிமிர்ந்து நிற்க, தமிழ்ச் சமுதாயம் காப்பாற்றப்பட நாம் மக்கள், கலை, கலாச்சாரம் இவைகள் எல்லாம் காப்பாற்றப்பட நாம் பாடுபட வேண்டும் என்று சொன்னார்களே, இந்தத் தமிழனுடைய நோக்கம், பண்பாடு, கலை, கலாச்சாரம் அதனையும் கூட அகற்றிவிடுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தமிழன் என்று சொல்வதை, தமிழினம் என்று சொல்வதை, தமிழ் நாடு, தமிழர் பண்பாடு என்றெல்லாம் சொல்வதை நாங்கள் மறுக்கவும் இல்லை, வெறுக்கவும் இல்லை. அதிலே விருப்பமும் இல்லை. அவர் எவ்வளவு வேண்டு மானாலும் தாராளமாகச் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்லி விட்ட பிறகு, எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடுகள் இல்லை அது போலத் தான் . . .

திரு. எஸ். ஆர். இராதா : தமிழன் என்ற நிலையிலே சென்று, பிறகு திராவிடம் என்பதை விட்டுவிட்டோம் என்று தெரிவிக்கப்போகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மனம் தான் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்கு என் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்;

**மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-20)

### 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. Ms. No. 643, Rural Development and Local Administration, dated the 10th April 1980 in regard to an amendment to the Tamil Nadu Municipal Services (Discipline and Appeal) Rules, 1970. (Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).

40. Notification issued with G.O. Ms. No. 493, Home (Transport I), dated the 22nd February 1980 in regard to concessional rate of tax in respect of Omni Bus TMS 5035 belonging to the Indian Institute of Technology, Madras. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

41. Notification issued with G.O. Ms. No. 513, Home (Transport I), dated the 23rd February 1980 in regard to concessional rate of tax in respect of the Vehicle TNN 421 belonging to Sisters of the Destitute, Balaclava Hills, Coonoor, Nilgiris. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

### B. *Reports, Notifications and other Papers.*—Nil.



### இணைப்பு.

(2 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

2—4—1979 ஆம் நாளும் 600 (நிலை) நல்வாழ்வு என்னும் கொண்ட, அரசு ஆணை வெளியிடப்பட்டதினால் அதைச் செயற்படுத்துவது குறித்து மருந்தாளுநர்களிடையேயும் செவிலியர்களிடையேயும் கருத்து வேறுபாடு மிகுதியாக இருந்தது. அரசிடமிருந்தும், மருத்துவத் துறைகளிடமிருந்தும் வெளியிடப்பட்ட குறிப்பாணைகளினாலும் ஆணைகளினாலும் நிலைமை சீர்கேடாயிற்று. இதனால் சில பணிகளை மருத்துவமனைகளில் செய்ய முடியாது என்று செவிலியர்கள் மறுத்தனர். இதனால் பொது மக்களுக்கு பெருத்த இடையூறுகள் ஏற்பட்டன. திருச்சி மாவட்ட மருத்துவமனையைச் சேர்ந்த அலுவலர்கள் செவிலியர்களை வெளியே கொண்டு சென்று கற்பழிக்கப் போவதாக மிரட்டியதாகக் கூறப்படும் புகார் ஆதாரமற்றது.

2. இந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு 7—7—1980 அன்று ஒரு கூட்டம் என்னால் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் மருந்தாளுநர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவர்களின் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மருத்துவக் கல்வித்துறை இயக்குநரும் மற்றும் மருத்துவப்பணி மற்றும் குடும்பநலத் துறை இயக்குநரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். செவிலியர்களும் மற்றும் மருந்தாளுநர்களும் தங்களுடைய கருத்து வேறுபாடுகளை தவிர்த்து எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் இனி பணிபுரிவதாக அவர்கள் உறுதி கூறியுள்ளனர் என்பதை இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. விவரமான கலந்துரையாடலுக்குப் பின்னர் கீழ்க்கண்டவாறு ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது—

(அ) எங்கெங்கு மருந்து சரக்குகளின் கோரிக்கைப் பட்டியல் ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அதே முறையைப் பின்பற்ற வேண்டும். திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவமனையில் மருந்து சரக்குகள் நாள் ஒன்றுக்கு ஒரு முறை எனும் திட்டத்தை பின்பற்றல் வேண்டும்.

(ஆ) தேவைக் குறிப்புகளை தயாரிக்கும் முறை எங்கெங்கு வார அடிப்படையில் செய்யப்படுகிறதோ அங்கெல்லாம், அவைகளை மூன்று நாட்களுக்கு ஒரு முறை தயாரித்தல் வேண்டும். இதனால் மாவட்டத் தலைமை

திரு. ஆற்காடு நா. வீராசாமி: விவாதத்திற்கு நேரம் இல்லை. திராவிடத்தை யாரும் கைவிடவில்லை. பெயரிலேயே திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. இன்று நம்மாலே திராவிட நாடு கேட்க முடியாது. காரணம் அது பேரறிஞர் அண்ணா அவர்களே விட்டுவிட்ட ஒன்று. எனவே அந்தப் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பின்னால் அதிகமான விளக்கம் எதிர்பார்க்கவில்லை. திரு. ஜேப்பியார் அவர்கள் சொன்னார்கள். அதற்கு திரு. ஆர். டி. சீதாபதி அவர்களும் உடனே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள், மாநில சுயாட்சி அவர்களுடைய கொள்கை என்று சொல்லட்டும். நாங்கள் அதை எங்கள் கொள்கை என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இங்கே ஆளும்கட்சி உறுப்பினர்கள்கூட சொன்னார்கள். பேராசிரியர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். ரெயில்வே பாதைகள் போல இரண்டு கட்சிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள் என்றார்கள். இரண்டு கட்சிகளும் மாநில சுயாட்சியைப்பற்றிப் பேசுவோம், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சிக் கொள்கையை அடகு வைத்துவிட்டது போலவும், அதைப்பற்றிப் பேசாதது போலவும், ஏதோ ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் மட்டும் பேசுவது போலவும் தயவுசெய்து பேச வேண்டாம். திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்களாகிய நாங்கள் அந்தக் கொள்கையை எந்தக் காலத்திலும் அடகு வைக்க மாட்டோம், யாருக்கும் அடகு வைக்க மாட்டோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று, நேரமில்லை. இறுதியாக ஒன்றைச் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியினர் அதிகாரங்கள், அதிக அதிகாரங்கள் என்று சொல்கின்றார்கள். அந்த அதிக அதிகாரங்களைக் கேட்டால்கூட நாங்கள் வரவேற்கிறோம். அவர்கள் பெயரிலேயே வந்தாலும், நாங்கள் அதை வரவேற்கிறோம். ஏனென்றால், ஒரு காலத்திலே அதிகாரங்கள் பரவலாக இருக்கக்கூடாது என்ற கொள்கைக்கு அவர்கள் ஒப்படைத்துக்கொண்டவர்கள். ஆனால் நமக்கு இருக்கின்ற அதிகாரங்களை வைத்து நாம் என்ன செய்கிறோம்? அதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாட்டிலே விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. இந்த ஆட்சி உருவான பின்னாலேயும் என்னென்ன பொருள்களுக்கு விலையேற்றம் ஏற்பட்டிருக்கின்றது? அரிசி விலை ஏறியிருக்கிறது. கடலெண்ணெய் விலை ஏறியிருக்கிறது. சர்க்கரை விலை ஏறியிருக்கிறது. பத்திரிகைகளிலே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இது முழுவதற்கும், விலைவாசிகள் ஏற்றத்திற்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று சொல்லக்கூடிய அளவுக்கு பொறுப்பற்றவன்



அல்ல நான். ஆனால் மாநில அரசும் அதற்கு ஓரளவு பொறுப்பு வகிக்கிறது. ஒரு வகையிலே பொறுப்பு இருக்கிறது என்று சொல்கிறேன். மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, எங்கெங்கே இந்தப் பண்டங்கள் பதுக்கப்படுகின்றனவோ, எங்கெங்கே உணவுப் பொருள்கள் பதுக்கப்படுகின்றனவோ அவைகள் கண்டுபிடிக்கப்படுமானால், அந்தப் பொருள்களின் விலைவாசிகள் தானாகக் குறையும். ஆனால் என்ன இப்போது நடைபெறுகிறது? ஜூன் மாதம் ஆட்சிக்கு வந்தார்கள் என்று நினைக்கிறேன். ஜூன் 20 ஆம் தேதி சென்னை நகரத்திற்குப் பக்கத்திலே 2.10 கோடி ரூபாய் மதிப்புள்ள பாமோலின் ஆயில் பிடிக்கப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். எல்லாப் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில், 8 காலம் செய்தியாக வந்திருக்கிறது. ரூ. 2.10 கோடி மதிப்புள்ள பாமோலின் ஆயில் பதுக்கி வைத்திருந்தார்கள். அது கண்டுபிடிக்கப்பட்டது. வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது என்றெல்லாம் செய்திகள் வந்தன. நான்கூட நினைத்தேன். பரவாயில்லையே, புதிய அரசாங்கம் வந்தவுடனே வேகவேகமாகப் பதுக்கல்காரர்களைப் பிடித்திருக்கிறதே என்று சந்தோஷப்பட்டேன், மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் என்ன நடந்தது? 20 ஆம் தேதி கண்டுபிடிக்கப்பட்ட அதன் மீது இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று நாட்டிற்கு அறிவிக்க வேண்டாமா? பதுக்கல்காரர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள் என்று சொன்னாலொழிய, அதுபற்றி நடவடிக்கைகள் வேக வேகமாக எடுத்தாலொழிய, நாட்டிலே பதுக்கி வைத்திருக்கின்ற பொருள்கள் நாட்டு மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்? கண்டுபிடித்த அதிகாரிகள் இது வரையிலே பதுக்கல்காரர்களைக் கைது செய்தார்களா? சாதாரணமான ஒன்றா கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது? ரூபாய் இரண்டு கோடி மதிப்புள்ள பொருள் கண்டு பிடிக்கப்பட்டதற்குப் பின்னாலும், அவ்வளவு பொருள்களைப் பதுக்கி வைத்தவர்களை இன்னும் கைது செய்யாமல் இருக்கிறார்கள். இதை ஏன் சொல்கின்றேன் என்றால், அந்த அதிகாரம் இருந்தும் நாம் அதைப் பயன்படுத்தவில்லையே என்பதற்காகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட நிலைமையில் நாம் எதிர்காலத்திலே அதிக அதிகாரம் பெற்று என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத் தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இன்னும் அதிக அதிகாரங்கள் பெற, இந்த மாதிரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த நிதி நிலை அறிக்கையை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். இது மனம் கவரும் மலராகக் காட்சி அளிக்கிறது, இதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பை நான் செய்ய வேண்டும். கொஞ்சம் நல்ல அனுபவம், பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்கள் எவை குறித்து தலைவரை அறையில் சந்தித்துக் கேட்க வேண்டும், எவை குறித்து அவையில் கேட்க வேண்டும் என்பதற்கு முறைகள் சரியாக இருந்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை அவையில் கேட்பது வியப்பாக இருக்கிறது. கடிதம் 22—2—1980-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்வளவு நாட்கள் அவை நடந்திருக்கிறது. ஆனால் இதைப் பற்றி இன்று கேட்கிறார்கள். இந்த அவை கலைக்கப்படவில்லை, அதிருஷ்டவசமாக கலைக்கப்படாவிட்டாலும், உத்தரவின்பேரில் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கேள்விகள் காலாவதியாகிவிட்டன என்று அறிவித்தாலும், நிச்சயமாக அவற்றைப் புதுப்பித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதே கேள்விகளைப் புதுக் கேள்விகள்போல் போட்டுக்கொள்ளலாம். இன்னொன்று, புதிய அமைச்சர்கள் வந்துள்ளதால், அவர்கள் பதில் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று தலைவர் முடிவெடுத்திருக்கிறார். அங்கத்தினர்களின் உரிமையைத் தடுக்க வேண்டுமென்றல்ல. இது குறித்து என் அறையிலேயே கேட்டு, தெளிவு பெற்றிருக்கலாம். சாதாரண விஷயத்தை அவையிலே கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர்களுக்கு உரிமை இருப்பதால் சொல்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : தலைவரவர்களுடைய தீர்ப்பு குறித்து நான் விளக்கம் பெற விரும்பவில்லை. மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால், இந்த மன்றத்திலே எழுப்பினேனே தவிர வேறு ஒன்றுமில்லை. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. இருந்தும் தலைவரின் அறையில் சொல்வது பல முறை வழக்கமாக இருந்திருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : அரசியல் சட்டத்தின்படி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மீண்டும் அரசியல் சட்டத்தை இழுக்க வேண்டாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : அரசியல் சட்டத்தின் 196 வது பிரிவில் "A Bill pending in the Legislative Council af a State which has not been passed by the Legislative Assembly shall not lapse on a dissolution of the Assembly". என்றிருக்கிறது. ஒரு மசோதாவே 'லேப்ஸ்' ஆகாதென்று கூறப்பட்டிருக்கிறதென்றால், ஏன் கேள்விகள் 'லேப்ஸ்' ஆக வேண்டும்? மசோதா என்பது கேள்விகளை விட . . . .





**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மீண்டும் அந்தப் பகுதியைப் படியுங்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** :

"A Bill pending in the Legislative Council of a State which has not been passed by the Legislative Assembly shall not lapse on a dissolution of the Assembly"

என்று 196-வது பிரிவில் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அசெம்பிளி கூட்டத்தொடர் ரத்தானாலே கேள்விகள் போய்விடுகின்றன. கூட்டத்தொடர் முடிந்தால் கேள்விகள் இயற்கையாகப் போய்விடுகின்றன.

**திரு. செ. முத்துசாமி** : தலைவரவர்களே, தாங்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிடும்போது அமைச்சர்களின் இலாக்காக்கள் மாறுகின்றன என்று கூறினீர்கள். பொதுவாக . . , இலாக்காக்கள் மாறவில்லை. புதிய அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். இருந்தாலும் கேள்விகள் பரிசீலிக்கப்பட்டு, பதில் வரும் சூழ்நிலையில் துறைகள் அப்படியேதான் இருக்கின்றன. இந்தச் சபையும் அப்படி இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு முறைதான் இதற்கு முன்னால் அசெம்பிளி கலைக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த முறையைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அதிகாரிகள் பதில்களைத் தயாரித்துள்ளதால் சிக்கல் அமைச்சரவைக்கு இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்றப் பேரவை, மேலவை எப்படி இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சட்டமன்றம் எப்படி நடைபெற வேண்டுமென்று சட்டமன்றமே விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதே போன்று மேலவை குறித்தும் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மேலவை உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைத்து விதி முறைகள் வகுத்திருக்கிறார்கள். அந்த விதிமுறையைத்தான் இங்கே குறிப்பிட்டார்கள். அதே போன்றுதான் கேள்விகள் கேட்டு 10 நாட்களுக்குள் பதில் வர வேண்டுமென்று பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். பேரவையைப் பொறுத்தவரையில், 42 நாட்களுக்குள் பதில் வர வேண்டுமென்று விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள். அதை மாற்றிக்கொள்ள, திருத்திக்கொள்ள அவர்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரைகூட, விதிமுறைகள் இருக்கின்றன. ஒரு ஆட்சி மாறி மற்றொரு ஆட்சி வருமானால், கேள்விகள் காலா

வதியாகிவிடுகின்றன என்று இப்போது விதிமுறைகள் வைத்திருக்கிறோம். நாம் விதிமுறைகளை மாற்றினால்தான், அந்த நிலைமை மாறும். எனவே இருக்கின்ற விதி முறைகளைப் பொறுத்துப் பார்க்கும்போது, தலைவரவர்கள் சொல்வதுதான் சரியாக இருக்க முடியும். எனவே விதிகளைத்தான் மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 1976-ல் அமைச்சரவை நீக்கப்பட்ட போதுகூட இதே முறையைத்தான் கடைப்பிடித்திருக்கிறோம்.

### 3. கவன ஈர்ப்பு.

### (1) மதுரை மாவட்டத்தில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் உண்ணாவிரதம் குறித்து.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"மதுரை மாவட்டத்திலுள்ள தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நெடுநாட்களாக நிறைவேறாமலிருக்கும் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்த மேற்கொண்ட உண்ணாவிரதம் குறித்து".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, விவா அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, விவா அறிக்கையின் மூலம் அதிகாரிகள் ஒரு பெரிய பிரச்சினையை உருவாக்கியிருக்கிறார்கள். விவா அறிக்கையிலே இரண்டு சங்கங்கள் இருப்பதாகவும், ஒரு சங்கத்தினுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கை இவ்வளவு என்றும், இன்னொரு சங்கத்தினுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கை இவ்வளவு என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்று கேட்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். 65 சதவிகிதம் ஒரு சங்கத்திலும், 35 சதவிகிதம் மற்றொரு சங்கத்திலும் என்று இருக்கின்றது. எந்த அடிப்படையில் இந்தப் புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கு ஆதாரம் இருக்கிறதா ? அப்படிப்பட்ட நிலை

@ 529-530 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியை சார்ந்தவர்கள்தான் அதிகமென்று தெரிவித்துக்கொள்கிறேன், எந்த அடி படையில் புள்ளிவிவரங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விருப் கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, இங்கே அறி கையிலே குறிப்பிட்டதைத்தான் நான் கூற விரும்புகிறேன். எந்த அடி படையிலே புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்க இல்லை, தனிக் கேள்வி போட்டால், கண்டிப்பாக விவரங்கள் தருகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, ஆசிரியர்களின் ஊதியத் நிர்ணயம் செய்வதற்கான கோரிக்கை பரிசீலிக்கப்படுவதாக இருக்கிற இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 1979 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆ தேதிக்குள் அவர்கள் விரும்பிய தேதியில் புதிய சம்பள விகிதத்திற்கு செல்லக்கூடியவர்களுக்குச் சம்பள நிர்ணயம் செய்வதென்று அரசாங்க உத்தரவிட்டது. ஆனால் அந்த உத்தரவு ஜூன் 30-க்குப் பிறகு கிடைத்ததால்

(பிற்பகல் 4-10)

அவர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்யப்படவில்லை. காலாவதியா விட்டது என்று சொல்லுகிறார்கள். நீதித் துறை அதற்கான உத்தரவை போட இங்கே இருக்கக்கூடிய ஆர்.டி.எல்.ஏ. டிப்பார்ட்மெண்ட் வழிவகை செய்யுமா ? மேலும் ஜூனியரைவிட சீனியர் அதிகமாகச் சம்பளம் பெ வேண்டுமென்று இருக்கிறது. டி. ஆர். டி. யில் ஏற்கெனவே வேலைப் பளு காரணமாக பைல்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே ஆங்காங்கே உள் ஒன்றிய ஆணையர்களே இதைச் செய்து கொடுக்கலாம் என்கின்ற வகையி அரசு ஒரு உத்தரவு பிறப்பிக்குமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்க சொன்ன மேலான யோசனைகளை அனுசரித்தும், ஏற்கெனவே இருக்கின் கோரிக்கைகளின்படி, அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து முடிவ எடுப்போம்.

மருத்துவமனைகளில் வேலைப்பளு அதிகரிக்குமாகையால், அரசு தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் உள்ள மிகுதியான மருந்தாளுநர்களை திரும்பப் பெற்று, அவர்களை தலைமை மருத்துவமனைகளுக்கு அனுப்புதல் வேண்டும்.

4. இந்த முடிவுகளை உடனடியாக நிறைவேற்றுமாறு மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநருக்கு சொல்லப்பட்டுள்ளது. நிலைமையை உணர்ந்து அதற்குத் தக்க நடந்தமைக்காக செவிலியர் மற்றும் மருந்தாளுநர்களின் சங்கங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

### வியாழக்கிழமை, 1980 ஜூலை 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அறிவிப்பு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இரண்டு இருக்கின்றன, அவை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவையில் இல்லாததால், அவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து, 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. க. இராமமூர்த்தி அவர்கள்

### 2. தகவல் கோரல்.

#### வினாக்கள் காலாவதி ஆனது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, on a point of clarification மேலவைத் துறையிலிருந்து 22—2—1980 தேதியிட்ட கடிதம் மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கு வந்திருக்கிறது. அரசியல் சட்டத்தின் 208-வது பிரிவு சஸ்பெண்டு செய்யப்பட்டிருந்தால், கேள்விகள் 'லேப்ஸ்' ஆகிவிட்டன என்ற பொருளைக் குறிக்கும் கடிதம் வந்திருக்கிறது. அரசியல் சட்டத்தின் 208-வது பிரிவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அது முற்றிலுமாக ரத்து செய்யப்படவில்லை. இரண்டாவதாக, மேலவை கலைக்கப்படவில்லை. ஆனால் மேலவை கூடவில்லை. பேரவைதான் கலைக்கப்பட்டது. நாங்கள் அனுப்பிய வினாக்கள் மாண்புமிகு தலைவரவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, அது சம்பந்தமாக எங்களுக்குக் கடிதங்களும் வந்திருக்கின்றன. இந்த நிலையில் கேள்விகளை நிறுத்தி வைப்பதுதான் சரியாக இருக்குமே தவிர, 'லேப்ஸ்' ஆகிவிட்டது, அந்தக் கேள்விகளுக்கு உயிரில்லை, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நோட்டீசுக்கு உயிரில்லை என்பது போல அறிவிப்பு வந்திருப்பது சரிதானா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**(2) உள்ளாட்சித் துறை ஆசிரியர்கட்கு மிதிவண்டிக் கடன் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருந்தும், தஞ்சை மாவட்ட திருமருகல் ஒன்றிய ஆணையர் மறுத்து வருவதை எதிர்த்து ஆசிரியர்களின் உண்ணாவிரதம் குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" உள்ளாட்சித் துறை ஆசிரியர்கட்கு மிதிவண்டிக் கடன் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருந்தும், அவ்வாணைக்கிணங்க விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு மிதிவண்டிக் கடன் தர தஞ்சை மாவட்ட திருமருகல் ஒன்றிய ஆணையர் மறுத்து வருவதை எதிர்த்து ஆசிரியர்களின் உண்ணாவிரதம் குறித்து ".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விவர அறிக்கையில் 31 ஆசிரியர்களுக்கு முன்னால் மிதி வண்டிக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்று காணப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வருகின்ற ஆசிரியர்களுக்குத்தான் கடன் வழங்கப்படும் என்ற அடிப்படையில் மற்றவர்களுக்கு அதை மறுத்திருக்கிறார்கள். அது இந்த அறிக்கையில் விடப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொல்லிவிட்டபிறகு, போராட்டம் நடத்திய பின்னால், நிதியில் இடம் இருந்தது என்று ஒப்புக்கொள்வதிலிருந்தே அந்த அடிப்படையில் தான் ஆசிரியர்களுக்கு அதைக் கொடுக்க மறுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் இனிமேலாவது இதுபோல் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத நிலை இருப்பதை மாற்றி எல்லோருக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வந்தால்தான் கொடுக்கப்படும் என்கிற ஆணையை அரசு பிறப்பிக்கவில்லை. எந்த ஆணையராவது அப்படிப்பட்ட உத்தரவைப் போட்டிருந்தால்,

---

@ 531-532 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அல்லது சொல்லியிருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நமக்கு பாக்கி இருக்கக்கூடிய நிதிநிலைமைகளை அனுசரித்து நாம் அவர்களுக்கு ஆவன செய்வோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பொது நிதியில் பணம் இருக்கும்போது, இப்படிப்பட்ட அரசு ஆணைகள் வருகின்றபோது, ஆணையர்கள் அதைக் கண்டிப்பாக அமுல்படுத்தியாக வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கல்வி நிதியில் பணம் இல்லாததால், பொது நிதியிலிருந்து இதற்காக ஒதுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் இதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஒதுக்கியிருக்கின்ற நிலையில் பணம் தீராமல் இருந்தால், கொடுப்போம்.

## 4. 1980-81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவை முன் வைத்து உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, இன்றைக்கு இந்த அவை இதனை நிறைவேற்றித் தர இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் தன்னுடைய 60 வது வயதை முடித்துக்கொண்டு நாளை 61 வது வயதிலே அடி எடுத்து வைக்கின்ற இந்த நல்ல நாளில் இந்த அவை ஒரு நல்ல காரியத்தைச் செய்கின்றது என்ற மன நிறைவும், அதேநேரத்தில் இந்த அவையினுடைய அனுமதியை அவர்கள் கோருகின்ற இந்த நாளில் அதிகமான அளவிலே குறுக்கீடுகள் இல்லாத அளவிற்கு எனக்கு உதவ வேண்டுமென்ற எண்ணத்தோடும் தான் இந்த அவையின் முன் பேச நிற்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனியாக ஒரு இலாக்காவிற்குப் பொறுப்பு என்கிற அடிப்படையில், அவருடைய தனித் திறமைகளையெல்லாம் ஒன்று திரட்டிச் செயலாற்றுவது என்பது வேறு. ஆனால் நிதி இலாகாப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அவருடைய தனித் திறமைகள் எதுவாக இருந்தபோதிலும், மற்ற இலாக்காக்களிடையே பல்வேறு நிர்பந்தங்கள் காரணமாக அவருடைய தனித் திறமைகள் எல்லாம் சில சமயங்களில் மிகுதியாகப் பயனளிக்கின்ற வகையிலும் சில நேரங்களில் இருக்கின்ற திறமைகள் கூட பயனளிக்க முடியாத நிலையும் ஏற்படக் கூடும். இந்த நிதி நிலை அறிக்கையிலே அது இரண்டும் கலந்திருக்கக்கூடும். 1980-81 ஆம்

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 10

ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒரு சர்ப்ளஸ் (Surplus) பட்ஜெட்டாக,
கையிருப்பை மிகுதியாகக் காட்டுகின்ற பட்ஜெட்டாகக் காட்ட வேண்டுமென்று
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு, அக்கறையோடு
செயல்பட்டிருக்கிறார்கள். தமது உரையின் இறுதியிலும் இதைத்
தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு ஏறத்தாழ 33 இலட்சம் ரூபாய்
இங்கே அரசின் மிகுதி கையிருப்பாக இருக்க முடியும் என்று தெரிவித்
திருக்கிறார்கள். ஆனால் இதிலே அவர்கள் எதிர்பார்க்கின்றவைகள் எல்லாம்
எதிர்பார்க்கின்ற விதத்தில் நடைபெற்றால், எல்லாம் சரியாக இருக்கும்.
எதிர்பார்த்தபடி எல்லாம் நடைபெறவில்லையென்றால், ஏற்படுகின்ற பற்றாக்
குறை பல இலட்சங்களாக அல்ல பல கோடிகளாக அமையும் என்பதை நான்
இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்
பாக விவசாயிகளுடைய கடன் ரத்துப் பிரச்சினையைப் பொறுத்தவரையில்
மற்றவர்கள் அதிகமாகப் பேசியிருக்கின்ற காரணத்தால் நான் அதிகமாக
உள்ளே போக விரும்பவில்லை. எத்தனை கோடி ரூபாய் கடனை ரத்து
செய்தீர்கள் என்பதை நான் இங்கே கேள்விக் குறியாக வைக்க விரும்பவில்லை.
ஆளும் கட்சி தேர்தல் நேரத்தின்போது நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதி
களை நாட்டு மக்கள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ப
தைப் பற்றி இப்போது விவாதிப்பது சரியாக இருக்காது. அந்த வாக்குறுதி
களில் முடிந்தவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசின் பொறுப்பு
என்னைப் பொறுத்தவரையில், அரசு அவற்றை நிறைவேற்றுவதால், சில
வற்றை ஆலோசனைகளாகக் கூறுகின்றேன். தவறுகள் நடக்கும்போது
தவறைச் சுட்டிக்காட்டி, கொஞ்சம் திருத்துங்கள் என்று சொல்லுகின்றோம்
நாங்கள் சொல்வதை ஏற்பதும் ஏற்காததும், கேட்பதும் கேட்காமல்
இருப்பதும் ஆளும் கட்சியின் பொறுப்பு.

விவசாயிகளுடைய கடனில் 60 கோடி ரூபாயை ரத்து செய்வதாக அர
அறிவித்திருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையில் இதற்கான நிதி ஒதுக்கீ
செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லையென்று நான் வருத்தத்தோ
சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவருக்
உரித்தான முறையில் இதில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்
இதற்காக நிதியைப் பெற இருக்கின்றோம், ஆகவே இதற்காக இந்த நி
நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்கிற பதிலைத் தருகி
றார்கள். ஒருவேளை மத்திய அரசு நிதி தராமல் போனால் நிலைமை என்ன
என்று கேட்கின்றபோது, "இப்போதே நிதி ஒதுக்கீடு செய்து விட்டால்
நிச்சயமாக மத்திய அரசு தராமல் போகலாம்" என்பதையும் தெரிவித்திரு
கிறார்கள். நிலைமை எதுவாக இருந்தபோதிலும், திட்டவட்டமாக ஒ



1980 ஜூலை 10] [திரு. க. இராமமூர்த்தி]

நிச்சயமற்ற நிலையை வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் ஒரு நிதி
நிலை அறிக்கையைத் தயாரித்திருப்பது சரியாக இருக்காது, நாளை மத்திய
அரசு மறுக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் இந்த 60 கோடி ரூபாயை ஈடு
செய்வது எப்படி என்பதற்கு வழிவகையையும் நமது மாநில அரசு வைத்
திருக்க வேண்டும். மறுத்த பிறகு என்ன நடவடிக்கை என்று யோசிப்பது
சரியல்ல. நாம் இப்போதே அதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு
இந்த நிதி நிலை அறிக்கையில் ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ற
னவா என்றால், இல்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் இந்த அவைக்
குச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, நான்
இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். மராட்டிய
மாநிலத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தைப் போலவே—
இதைப் போல என்று சொல்ல மாட்டேன், அங்கு நம்மைப் போல 4, 5 ஆண்டு
பிரச்சினை அல்ல, ஓராண்டுப் பிரச்சினைதான் அங்கே அவர்களுக்கு—விவசாயி
களுடைய கடன்களை அங்கேயும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 49 கோடி
ரூபாய்க்கான விவசாயக் கடன்களை அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.
நம் மாநிலத்தை விட பரப்பளவில் அதிகம், வருவாயிலே அதிகம் உள்ள
மாநிலம் விவசாயிகளுக்கு ஓராண்டுப் பிரச்சினையாக இருந்த 49 கோடி
ரூபாய்க் கடன்களை ரத்து செய்திருக்கிறது. ஆனால் நிதி ஒதுக்கீட்டிலே
அதற்கான ஏற்பாட்டினைச் செய்திருக்கிறார்கள். தேவையான நிதியை
'புரொவைடு' ( Provide ) செய்திருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து
வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள்
மத்திய அரசைக் கேட்டுக் கடிதம் கூட எழுதவில்லை என்கிற தகவல்
எனக்குக் கிடைத்திருக்கிறது. எழுதினார்களா, எழுதவில்லையா என்பதல்ல
இப்போதைய பிரச்சினை. அவர்களுடைய நிலைமையே வேறு. அவர்களுடைய
நிதிநிலை அறிக்கை அப்படி இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில்,
60 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். மத்திய அரசிட
மிருந்து இந்த 60 கோடி ரூபாயும் வரவில்லையென்றால், எப்படி இதை ஈடு
செய்யப் போகிறோம்? 60 கோடி ரூபாய்க்கும் புதிதாக வரி போடப்
போகிறார்களா? இல்லை, புதிதாக வரி போடாமலிருந்தால், எப்படி இந்தப்
பற்றாக்குறையை ஈடு செய்யப் போகிறார்கள்? இன்றைக்கு நாட்டிலுள்ள
அத்தனை மக்களும் இதுபோன்ற ஒரு உபரி நிதி நிலை அறிக்கையைக்
கொடுத்திருப்பதைக் குறித்து மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள். இது சர்பிளஸ்
பட்ஜெட் ஆயிற்றே என்று எல்லோரும் பேசியாயிற்று. மத்திய அரசு நிதி
உதவி கொடுக்க முடியாது என்று சொன்னால், அதற்குப் பிறகு இப்போது
உபரி பட்ஜெட் என்று சொல்லப்பட்டிருக்கின்ற பட்ஜெட்டில் துண்டு விழுகின்ற
நிலைமை வருகின்றபோது, 'எங்களுடைய நிதிநிலை அறிக்கை' கையிருப்பை

மிகுதியாகக் காட்டுகின்ற நிதிநிலை அறிக்கை' என்று சொல்லிய சொல் எல்லாம் என்ன ஆகும்? எங்களுடைய பட்ஜெட் வரி விதிப்பு இல்லாததாகத் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்று நீங்கள் புகழ் மாலை எல்லாம் பெற்ற பிறகு, மீண்டும் எப்படி வரி போடுவது? இந்தக் கடன் ரத்தைப் பொறுத்தவரையிலும், அரசு இதில் ஒரு பாலிசி மேட்டராக, கொள்கையளவில் ஒரு முடிவெடுத்திருக்கிறது. கொள்கையளவில் என்பதோடு மட்டுமல்ல, இது ஏறத்தாழ 1½, 2 ஆண்டுக் காலமாக தமிழக மக்களை மிகப் பெருமளவில் பாதித்துக்கொண்டிருந்த பிரச்சினை, இதில் இப்பொழுது அரசு கொள்கையளவில் முடிவெடுத்திருக்கிறது. இரண்டாண்டு காலமாக விவசாயிகளுடைய பிரச்சினையாக இது உருவெடுத்து, நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் குரல் எழுப்பி, போராட்டம் நடத்தினார்கள். அதோடு மட்டுமல்லாமல், தேர்தல் வந்தது. தேர்தல் அறிக்கையில் வந்தது, கட்சிச் சண்டையாக மாறி, இன்றையதினம் இந்தப் பிரச்சினையை அரசு ஒருவாறு தீர்த்திப்பதாகக் கருதுகிறது. இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அறிவித்திருக்கிறார்கள். கடன் நிவாரணம் என்பது முழுமையாக இருக்க வேண்டாமா? ரூபாய் 60 கோடிக்கு விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். எந்தக் கடன்களை! விவசாயிகளுடைய நீண்ட காலக் கடன்களை என்று சொல்ல மாட்டேன். காரணம், நீண்ட காலக் கடன்களிலே பெரும்பான்மையானவற்றை (Short-term) கடன்களாக, குறுகிய காலக் கடன்களாக அரசு மாற்றியிருக்கிறது. இந்த அரசின் கணிப்புப்படி, குறுகிய காலக் கடனில், ஐந்து ஏக்

(பிற்பகல் 4-20)

நிலத்தை வைத்திருப்பவர்கள் கடன் சுமார் ரூ. 40 கோடிக்கு வரும். ஏ குறைய 80 கோடி ரூபாய் அளவுக்கு நீண்டகாலக் கடன்களை குறுகிய கா கடன்களாக மாற்றியமைத்திருக்கிறார்கள். அப்படி மாற்றியமைக்கப்பட்டு ற 80 கோடி ரூபாய் கடனில் 5 ஏக்கர் அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்களி கடன் தொகை ரூபாய் 40 கோடி அளவுக்கு இருக்கும் என்று கணித்திரு கிறார்கள். இந்த 5 ஏக்கர் உடமை எது என்பதை இந்த நிதிநிலை அறிக்க மூலமாக இந்த அவைக்குத் தெளிவுபடுத்தி இருக்க வேண்டும் என்பதுதா என்னுடைய கோரிக்கையாகும். 5 ஏக்கர் என்பது எதைக் குறிக்கும்? நி உச்ச வரம்பு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருகிறபோது, எக்கர் எ என்பதிலே அவ்வப்போது மாற்றிக் கொண்டிருக்கிற 5 எக்கரைக் குறிக்குமா





அல்லது விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறதே அதில் குறிப்பிடப் பட்டுள்ள 5 ஏக்கரைக் குறிக்குமா? அல்லது 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தைக் குறிக்குமா அல்லது 2½ ஏக்கர் புஞ்சை நிலம் ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்திற்குச் சமம் என்கிறீர்களே, அதைக் குறிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு நிதியமைச்சரைப் பொறுத்தவரை, ஒரு வேளை அவர் இந்தப் பொறுப்புக்குப் புதியவராக இருக்கலாம். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அ.தி.மு.க. அரசு ஏற்கெனவே இந்தக் கடன்களைப்பற்றி அரசு அதிகாரிகளோடும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளோடும், விவசாய சங்கப் பிரதிநிதிகளோடும் நீண்ட காலமாகப் பேசியிருக்கிறார்கள். இந்த நிலையில் யார் யாருக்கு எவ்வளவு கடன் சுமை இருக்கிறது என்பதைச் சரிவர விளக்கியிருக்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 31—3—1980 அன்றைய நிலவரப்படி, கடன் நிலுவை மொத்தம் ரூ. 80 கோடியாகும். இதில் 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவான உடமை உள்ள விவசாயிகளின் கடன் நிலுவை ஏறத்தாழ 40 கோடி ரூபாய் ஆகும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய கணக்கில் எடுத்துக் கொண்டது 50 சதவீதம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையிலேயே நிதிநிலை அறிக்கையில் இந்த வகையில் சொல்லப்பட்டிருக்கிற பணம் ரூ. 35 கோடிதான். இதை நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

வட்டி நிலுவை மொத்தம் ரூ. 15 கோடி. அதிலே 50 சதவீதம் என்று சொல்லி, அதிலும் ஒரு 7 கோடியைத்தான் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக மொத்தம் 35 பிளஸ் 7 கோடி ஆக மொத்தம் 42 கோடி என்று கணக்குக் கூறியிருக்கிறார். ஆனால் 80 கோடி ரூபாய் நிலுவையில் 50 சதவீதம் என்று சொல்லிவிட்டு ரூ. 35 கோடியை மட்டும் எப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறார் நிதியமைச்சர் என்று எனக்குப் புரியவில்லை. விட்டுப்போன ரூ. 5 கோடி எங்கே போவது? அறிக்கைப்படி 60 கோடி ரூபாய் பற்றாக்குறையாகப் போவது ஒரு புறம் இருக்கலாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் அறிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்வது என்றாலும் மத்திய அரசு 60 கோடி ரூபாயையும் ஈடு செய்யப் போகிறது என்றாலும் கூட 50 சதவீதம் என்று சொல்லிவிட்டு, 40 கோடி ரூபாயை மட்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறார்

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 10

என்றால், மீதியிருக்கும் ரூ. 5 கோடி எங்கே போயிற்று? அது பற்றாக்குறை இல்லையா? ஏன் அதைக் கணக்கில் காட்டவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டாமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் 5 ஏக்கருக்குக் குறைவான நிலச் சொந்தக்காரர்களின் கடனை ரத்து செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நிலத்தைக் குத்தகைக்குச் சாகுபடி செய்கிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் கூட கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கும், வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. கடன் வாங்கியிருக்கிறார்கள். 5 ஏக்கருக்கும் குறைவாக உள்ள நிலத்தை குத்தகைக்குச் சாகுபடி செய்கிற விவசாயிகளும் கடன் வாங்கியிருக்கிறார்களே, அவர்களுடைய கடன் இதன் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா? அவர்களுக்கு அரசாங்கத்தின் பரிவும், பாசமும், பராமரிப்பும் தேவையில்லையா? ஏன் அவர்களை இந்த அரசு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை? அவர்களையும் இந்த அரசு கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தால், அவர்களுக்காக எத்தனை கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்படும்? இதையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு தெளிவாக்கி இருக்க வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கை உபரியானது என்பது சரியல்ல. பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை என்பது மட்டுமல்ல, உண்மையிலேயே பல தெளிவில்லாத காரியங்களைக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. இந்த ஆண்டிற்கான விவசாயத்தை விவசாயிகள் மீண்டும் துவக்கிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் மழை பெய்துவிட்டது. மேட்டூரில் தண்ணீர் வழிந்து கொண்டிருக்கிறது. எனவே விவசாயிகள் ஏர் ஓட்டிக் கொண்டிருக்க வேண்டும். சேடை உழுது கொண்டிருக்க வேண்டும். சில நாட்களில் பயிர் விதைத்தாக வேண்டும். இப்போது நான் பெரிய விவசாயிகளின் பிரச்சினையைப்பற்றிப் பேச முன்வரவில்லை. அவர்களை விட்டுவிடுகிறேன். சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை, அவர்கள் இப்போது புதிய கடன்களை வாங்கியாக வேண்டும். 60 கோடி ரூபாய்க் கடனை அரசு தள்ளுபடி செய்துவிட்டது. உண்மைதான். ஆனால் இந்தச் சிறு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று 'கிளியரன்ஸ்' சர்ட்டிபிகேட் Clearance Certificate கொடுக்கப் போவது யார்? அவர்கள் இனியும் கடன்காரர்கள் அல்ல, பாக்கிதாரர்களல்ல, கூட்டுறவுச் சங்கத்திற்கு பாக்கி செலுத்த வேண்டியவர்களல்ல என்று சொன்னால்தானே, கூட்டுறவுத் துறை மூலம் மீண்டும் அந்தச்



1980 ஜூலை 10] [திரு. க. இராமமூர்த்தி]

சிறு விவசாயிகள் புதிய கடன்களை வாங்க முடியும். அந்தக் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை எப்போது அரசு கொடுக்கப் போகிறது? அது குறித்து விதிகளை எப்போது வகுக்க இருக்கிறது? இந்த சர்ட்டிபிகேட் பெற்று, பிறகு எப்போது அவர்கள் விவசாயத்திற்குப் போவது? இடையிலே கால தாமதத்தைத் தவிர்க்க அவர்கள் தங்கள் நகைகளை வைத்து கடன் வாங்கச் செய்து மீண்டும் அவர்களைக் கடன்காரர்களாக ஆக்குகிற நிலையை அரசு உருவாக்குகிறதே தவிர, விவசாயிகளின் துயரைத் துடைக்கும் பொறுப்போடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, "எனக்கு நேரம் போதவில்லை, நிதிநிலை அறிக்கையைச் சரியாகத் தயாரிக்க கால அவகாசம் இல்லை" என்று சொல்லலாம். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினை புதியதல்ல. அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த பிரச்சினை, தீர்க்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்த பிரச்சினை. ஆட்சிக்கு வந்தவுடனே தீர்க்க வேண்டும், தீர்ப்போம் என்று சொல்லிக் கொண்டிருந்த பிரச்சினை. இந்த நிலையில் இவைகளெல்லாம் விளக்கப்படாமலிருப்பது எப்படிச் சரியாகும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே அவையில் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது, மிக அழகாக ஒன்றைப் படித்தார்கள். "கடன்களையெல்லாம் ரத்து செய்துவிடுகிறேன். எனவே, சிறு விவசாயிகளே, நீங்கள் உங்களுடைய மின்சாரக் கட்டண பாக்கிகளையெல்லாம் திரும்பச் செலுத்திவிடுங்கள்" என்று கூறினார்கள். 60 கோடி ரூபாய் கடன் பாக்கியை ரத்து செய்துவிட்ட பிறகு, நிலுவையிலிருக்கிற மின்சாரக் கட்டண பாக்கியை சிறு விவசாயிகளிடமிருந்து எப்படி இந்த அரசு வசூலிக்கப் போகிறது? மீண்டும் அவர்களையெல்லாம் கடன்காரர்கள் என்ற கணக்கில் வைக்கப் போகிறதா? அவர்கள் மின்சாரக் கட்டண பாக்கியைச் செலுத்தவில்லை என்ற நிலையை அரசு உருவாக்கப் போகிறதா? இந்தப் பிரச்சினை தீர்க்க முடியாததல்ல. இந்தப் பிரச்சினை இந்த அரசுக்குத் தெரியாததல்ல. தீர்க்க வேண்டும் என்று இந்த அரசு நினைக்காத பிரச்சினையல்ல. ஆனால், என்ன காரணத்தாலோ இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தெளிவான எந்த நடவடிக்கை குறித்தும் இந்த நிதிநிலைக் குறிப்பில் சொல்லப்படவில்லை என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 10

இந்த நிதிநிலை அறிக்கையில் என்னால் இன்னொன்றையும் காண முடிந்தது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம் கடமையை உணர்ந்து, நமது மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து ஆண்டுதோறும் கிடைத்துவந்த நிதி உதவிகளைப்பற்றிய புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு மட்டுமல்ல, திட்ட காலத்திற்குத் திட்ட காலம் அந்த உதவி எவ்வாறு குறைந்துகொண்டே வந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் இந்தப் புள்ளிவிவரங்களை இங்கே இந்த அவையிலே கொடுத்திருப்பதன் மூலம் இதனைத் தமிழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்திற்கு மட்டுமல்ல, மத்திய அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிலை தடுக்கப்பட வேண்டும் என்று சொல்லும்போது, வேறு ஒரு கருத்தையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் இது குறித்துப் பேச்சு நடந்த போது, ஏதோ இதையெல்லாம் கேட்பதற்கு அண்ணா தி.மு.க.வும், தி.மு.கவும் தான் இருப்பதைப் போலவும், காங்கிரஸ்காரர்கள் இதைக் கேட்கமாட்டார்கள் என்பது போலவும் அவர்களெல்லாம் இதற்கு எதிரிகள் என்பது போலவும், தமிழகத்தினுடைய உரிமைகளுக்காகக் காங்கிரஸ்காரர்கள் ஒருபோதும் துணை நிற்கமாட்டார்கள் என்பது போன்ற வகையிலும் பேசப்பட்டது. அப்படிப் பேசியவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அ.தி.மு.க.வினர் ஏதோ எங்களோடு நிற்காதவர்கள் போலவும், எங்களோடு துணையில்லாதவர்கள் போலவும், எங்கள் ஆட்சியின் நடைமுறைகளை வாழ்த்திப் பேசாதவர்களைப் போலவும் பேசுவது எந்த வகையில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. எந்த வகையில் அப்படிப்பட்ட கருத்துக்கள் அமைந்தன என்று என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல, மாநிலத்திற்குப் பங்கு குறைந்துவிட்டது என்ற கேள்வி எழுப்பப்பட்டபோதெல்லாம் முன்பு திராவிடர் பிரச்சினையை உருவாக்கினார்கள். தமிழர்கள் பிரச்சினையை உருவாக்கினார்கள். இப்போது நான் அவர்களைப் பார்த்து தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். இப்போது அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை "வடக்குத் தெற்குப் பிரச்சினையா அல்லது தமிழக அரசு மத்திய அரசு என்ற பிரச்சினையா அல்லது மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமான பிரச்சினையா" என்று அறிய விரும்புகிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** இதற்கான பதிலை நாங்கள் சொல்வதைக் காட்டிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே சொல்வது நலம். இவ்வாறு நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு நிதி குறைந்து வருவதற்குக் காரணம் வடக்குத் தெற்கு என்கிற பிரச்சினையா என்று உறுப்பினர்தான் தெளிவுபடுத்த வேண்டும்.



1980 ஜூலை 10]

(பிற்பகல் 4.30)

**திரு. க. இராமமூர்த்தி :** அதற்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். இதைப் பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டும். "இந்தப் பிரச்சினையை வடக்குத் தெற்குப் பிரச்சினையாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, திராவிடர்களே, ஒன்று சேருங்கள்" என்று சொல்லட்டும். அல்லது "இது தமிழகத்திற்கும், மத்திய அரசுக்குமான பிரச்சினை. தமிழக அரசை மட்டுமே மத்திய அரசு பழி வாங்குகிறது. ஆகவே, தமிழர்களே, போராடுங்கள்" என்று அறைகூவல் விடட்டும். அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அல்லது "இது மாநிலங்கள் பற்றிய பிரச்சினை. இந்தியாவினுடைய ஜனநாயக அமைப்பிலே மாநிலங்களுடைய உரிமைகள், பங்குகள், தேவைகள் பறிக்கப்படுகின்றன. அவை முறையான அளவிலே கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதுபற்றிப் புதிய சிந்தனை நமக்குத் தேவை" என்று சொல்லட்டும், ஏற்றுக்கொள்ளுகிறேன். இதிலே எந்தக் கருத்தில் அ.தி.மு.க. அரசு நிற்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மேலவைத் தலைவர் அவர்களே, இப்போதே இதற்கு விளக்கம் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். கட்சிப் பிரச்சினை, தனிப்பட்டவர்களுடைய பிரச்சினை, ஆளும் கட்சியின் பிரச்சினை, எதிர்க் கட்சியின் பிரச்சினை என்று இதில் இல்லை. இது மாநில, மத்திய அரசின் பிரச்சினை. இப்பிரச்சினையை நாங்கள்தான் எழுப்புகிறோம் என்பதல்ல. நீண்ட காலமாகவே நிதியமைச்சர்களும், முதலமைச்சர்களும் இதை எழுப்பியிருக்கிறார்கள். வங்காளத்திலே டாக்டர் பி. சி. ராய் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, வங்காளத்தின் நிதித் தன்மைகளை மத்திய அரசு போதுமான அளவிற்குக் கவனிக்காமல் உதவியைக் குறைத்து வருகிறது என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்தபோது சொல்லியிருக்கிறார். வங்காளத்தின் நிதித் தன்மைகளை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்ற காரணத்தைக் காட்டி குடியரசு நாளைக்கூட கொண்டாடாத அளவிற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டாக்டர் பி. சி. ராய் தன்னுடைய வெறுப்பை திரு. ஜவஹர்லால் நேருவிற்குக் காட்டியிருக்கிறார். இதே பிரச்சினையை திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் எழுப்பியிருக்கிறார்கள். டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும் இதை எழுப்பியிருக்கிறார்கள். கேரளாவில் திரு. நம்பூதிரிபாத் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், திரு. அச்சுத மேனன் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் இந்தப் பிரச்சினையை எழுப்பி

யிருக்கிறார்கள். முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய எல்லா முதலமைச்சர்களும் இந்த ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டு, கட்சி வேறுபாடு கருதாமல், பேசியிருக்கிறார்கள். வேறு பல கேள்விகளைக் கேட்டு, சந்தேகங்களைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வருத்தப்படத் தேவையில்லை. இந்த மாநிலத்தின் நிதி நிலைமையைப் பெருக்குவதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்லாமல், ஐந்து கோடி மக்களுக்கும் பங்கு உண்டு என்பதைத் தெரிவித்து இதிலே பிரச்சினை தேவையில்லை என்று கூறி, விவாதத்தை வேறுபல பிரச்சினைகளுக்கு மாற்றிவிட்டு, இதற்கு ஆதரவு தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழர்கள், திராவிடம் என்ற பிரச்சினைகளுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையிலே தமிழகத்தினுடைய பங்கு குறைவானதல்ல. முப்பது ஆண்டுகளுக்கு முன் சுதந்திரம் பெற்றபோது பூரண வளர்ச்சியடைந்துவிட்ட இந்திய நாட்டைப் பெற்றதைப் போலவும், அத்தனை வசதிகள் நிறைந்த இந்திய நாட்டை கையில் வைத்துக்கொண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இப்படி இப்படிச் செய்தார்களா என்ற வாதங்களில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எந்தச் சூழ்நிலையில் நாம் சுதந்திரம் பெற்றோம் என்பதை இந்த நாடும் அறியும், தலைவர் அவர்களே தாங்களும் அறிவீர்கள். சுதந்திரம் பெற்ற இந்த நாட்டை எப்படியெல்லாம் வளர்த்திருக்கிறோம் என்பதை இந்த நாடு அறியும். ஆகவே காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மிகுந்த துணிவோடு . . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, ஒரு நாடு சுதந்திரம் அடைந்து எத்தனை ஆண்டுகள் கழித்து முன்னேறும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நினைக்கிறார்கள் ?

**திரு. க. இராமமூர்த்தி :** அதற்குப் பின்பு பதில் சொல்கிறேன். ஆகவே அந்தச் சூழ்நிலையில் இந்த நாட்டினுடைய பல்வேறு திட்டங்களை அமைக்கிறபோது, சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துகிறபோது, பல நேரங்களில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஒத்துப் போகவில்லை. அதற்காக தமிழகத்திலேயிருந்து குரல் கொடுத்தவர்களுள் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். மாநிலத் தேவைகள் மிக அதிகம், அதற்கு மத்திய அரசு அனை நிற்க வேண்டும், கொடுக்கிற பங்கு போதாது என்று



உரிமைக் குரலை திரு. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொடுத்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், முதலமைச்சராக இருந்தபோதும், அதற்குப் பிறகு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோதும், மிகுந்த வேகத்தோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்து விலகி வந்தபோதும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது, இந்தப் பிரச்சினையை மீண்டும் அகில இந்திய அளவிலே பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக அரசியலில் மிகப் பெரிய மாற்றம் உருவாகி பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றபோது டாக்டர் நாவலர் அவர்களும் அவர் அருகேதான் இருந்தார்கள். அண்ணா அவர்கள் முதன் முதலாக 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பட்ஜெட்டை அளித்தபோது, மிகத் தெளிவாக நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தார்கள்.

“ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்களுக்கு வழங்கப்படுவதில், ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக அளிக்க ஒப்புக்கொண்ட நிதியுதவி அந்த அடிப்படையில் வழங்கப்படவில்லை என்பது நமது பெருங் குறையாகும். நான்காம் திட்டத்திற்கு மாநிலங்களுக்கு மானியமாக மத்திய அரசு ஒதுக்கிய தொகையில் நமக்குத் தருவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விகிதம் 7.14 ஆகும். இதன்படி கடந்த ஆண்டு திட்டத்திற்காக 44 கோடி ரூபாய் உதவியை நாம் பெற்றிருக்க வேண்டும். இதற்கு எதிராக நமக்குக் கிடைத்த உதவி ரூபாய் 40.30 இலட்சம்தான். நடப்பாண்டில் குறைக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டு சரிக்கட்டப்படும் என்று எதிர்பார்த்தோம்” என்று சொல்லி இறுதியாக “மத்திய அரசு தனது நிதி வசதிகளையும், நமது குறைந்த அளவு தேவைகளையும்பற்றி மறு ஆய்வு செய்யும். அதைப் போலவே நமக்கு அளித்த உதவியை ரூபாய் 43.50 இலட்சத்திக்கு உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. வேறு உதவிகள் கிட்டுமென்ற அடிப்படையிலும், குறிப்பாக பருவ மழை பெய்து நாம் எதிர்பார்க்கிற அளவிற்கு பொருளாதார நிலையில் மேம்பாடு அடைவதில் இந்த உதவி உறுதியாகக் கிட்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தைத் தீட்டுகிறோம்” என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை இந்த அவைக்கு இப்போதுதான் வருகிறது என்பதல்ல. நீண்ட நெடுங்காலமாகவே இருக்கிறது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் கொண்டுவரப்பட்டதென்பதல்ல. இந்த மாநிலத்தினுடைய தேவைகளை

உணர்ந்தவர்கள் அத்தனை பேரும் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே காங்கிரஸ் கட்சியினுடைய பங்கு மற்றவர்களுடைய பங்கைவிட அதிகமானதே தவிர குறைவானதல்ல.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே இதுபற்றிய ஒரு மாற்றத்தை, ஒரு புதிய சிந்தனையை உருவாக்கியது எப்போது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்காகவே 1969 ஆம் ஆண்டில் தமிழகத்தில் இராஜமன்னார் கமிட்டி அமைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமது முதலமைச்சர் பதவிக் காலத்தில் இராஜமன்னார் கமிட்டியை அமைத்ததன் விளைவாக அது எந்த அளவிற்கு தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியாவின் பொருளாதாரச் சிந்தனையையே மாற்றியமைத்தது என்பதை இங்கே நான் சொன்னால், வேறு பல உள்நோக்கத்தைச் சொல்வார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சென்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஸ இன் இந்தியா Centre State Relations in India) என்று . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுதான், கோபித்துக்கொள்ளக் கூப்பிடுவது மாதிரி தோன்றுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தியாவில் மத்திய மாநில உறவுகளைப்பற்றி பிர்லா இன்ஸ்டிடியூட் ஆஃப் சையன்டிஃபிக் ரிசர்ச் (எக்னாமிக் ரிசர்ச்) டிவிஷன் Birla Institute of Scientific Research (Economic Research Division)புது டில்லி என்ற நிறுவனம் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது

கடந்த காலங்களில் நிதிநிலை பங்கீடுகள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அதிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"It was in this heated atmosphere that the Centre-State Relations Enquiry Committee under the Chairmanship of Dr. P. V. Rajamannar, who had been the Chairman of the Fourth Finance Commission was appointed by the Government of Tamil Nadu on September 22, 1969". என்று சொல்லிவிட்டு இறுதியாகச் சொல்லுகிறார்கள்.

"It was also contended that till then the problems of Centre-State relations have not been taken seriously because the Congress was in power both at the Centre and in the States"



1969 வரையிலும் அதற்கு முன்னதாக ஓரிரு ஆண்டுகள் வரையிலும் மத்திய-மாநில உறவுகள்பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை அரசியல் ரீதியாக ஏற்படவில்லை. மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சியிருந்த காரணத்தாலே, அவர்களுக்குள்ளே பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முடிந்தது. தேவையானவற்றைக் கேட்டு வாங்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் மாநிலத்தில் வேறு கட்சிகளின் ஆட்சி வந்ததற்குப் பிறகு, இதுபற்றித் தீவிர சிந்தனை ஏற்பட்டது. அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்ட போது, கொஞ்சம் கூடத் தயங்காமல் அப்போது தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 4-40)

அதோடு மட்டுமல்ல, இதிலே இன்றைக்கு மத்திய அரசு 4 பெர்சென்ட் நிதியுதவி செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் எந்த அடிப்படையிலே இந்த கணிப்பைச் செய்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. அதைப் பொறுத்தவரையில், என்னுடைய சந்தேகங்களைச் சொல்வது என் கடமை என்று கருதுகிறேன். முதன்முதலில் திட்ட உதவியாக கணக்கு எடுத்தபோது, மக்கள் தொகை அடிப்படையிலே மாநிலங்களின் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பது என்பது கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த அடிப்படையிலேதான் உதவி கொடுத்தார்கள். ஒரு முறை இரண்டு முறைகள் கொடுத்து தொடர்ந்து அதே மக்கள் தொகை அடிப்படையில் கொடுத்தால், வேறு பிரச்சினை வருகிறது. திரும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தோற்றுப் போகின்ற நிலை இருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையிலே கொடுப்பது என்று ஏற்பட்ட பின்னர், குடும்ப நலத் திட்டங்கள் செயல்படாத ஒரு நிலை ஏற்படுவதைப் பார்த்து, அதிகப் பங்கு பெறவேண்டுமென்ற ஆர்வத்தில் மாநிலங்களில் வேறு ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. சில மாநில அரசுகள் அதிகப் பங்கைப் பெறவேண்டுமென்பதற்காகவே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தளர்த்தினார்கள். ஆகவே வேறு ஒரு திட்டம் தீட்டுகின்ற நிலைமை ஏற்பட்டது. அத்தனை மாநிலங்களிலும் இருக்கின்ற தலைவர்கள், அரசியல் தலைவர்கள், முதலமைச்சர்கள், மீண்டும் பரிசீலனை செய்து, வேறு பல முறைகளைக் கையாண்டார்கள். இப்படிப் பல்வேறு முறைகளைக் கையாண்டுவந்த நிலையை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எந்த அடிப்படையிலே மத்திய நிதி உதவியைப் பகிர்ந்தளிப்பது என்பதை அரசுதான் சொல்ல வேண்டும், நாங்கள் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்வது என்னவென்றால் தேசிய வளர்ச்சி மன்றத்திற்கு (National Development Council) அரசுப் பிரதிநிதிகள்தான் போய் பேசுகின்றார்கள். ஆகவே எந்த அடிப்படையில்

நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதை அங்கு போய் பேசுகின்றவர்கள்தான் சொல்ல வேண்டும். நான் இன்னொன்றைக் கேட்க விரும்புகிறேன். முதன் முறையாக தமிழகத்திலே தென்னகத்தின் முதலமைச்சர்கள் மகாநாடு நடந்தது. ஐந்து முதலமைச்சர்கள் இங்கே கூடிப் பேசினார்கள். பாண்டிச்சேரி மாநிலம் உட்பட முதலமைச்சர்கள் கூடிப் பேசினார்கள். அங்கே இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்கப்பட்டதா? நான் இன்னமும் கேட்கிறேன். அகில இந்திய அரசியலிலே ஏற்பட்ட சிக்கலை உட்கார்ந்து தீர்த்து வைக்கின்ற நிலைமை நமது முதல்வருக்கு ஏற்பட்டது. காஷ்மீரத்தினுடைய முதலமைச்சர் திரு. ஷேக் அப்துல்லா உங்களை வந்து பார்த்தார்களே, அன்றைக்கு அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதா? அப்போது ஏன் எழுப்பவில்லை? அன்று அந்தப் பிரச்சினை இல்லாத ஒரு நிலைமையா? மற்ற மாநிலங்களுக்கு இல்லாத பிரச்சினையா? ஏன் அதை உரிய காலத்திலே, உரிய முறையிலே எழுப்பவில்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். எல்லா முதலமைச்சர்கள் மகாநாட்டிலும் முதலமைச்சர்கள் ஒவ்வொரு தடவையும் வற்புறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒரு கொள்கை என்ற வகையில் கொண்டு வருகிறார்கள். ஆக முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு கொள்கை அடிப்படையிலே ஒதுக்கித் தந்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வேறு கொள்கையைக் கையாண்டார்கள். அவர்கள் என்ன கொள்கை வகுக்கிறார்கள் என்பதல்ல நம்முடைய கேள்வி. நமக்கு வரவேண்டிய பங்கு நமக்கு வரவில்லை என்பதைத்தான் நாம் வற்புறுத்தி வருகிறோம். ஆரம்பத்திலே 10 சதவிகிதம் என்று இருந்தது இப்போது நான்கு சதவிகிதத்திற்கும் கீழே போயிருக்கிறது. வளர்கின்ற மாநிலத்திற்கு மேலும் வளர்ந்து போக வேண்டுமே தவிர, விரிந்துகொண்டு போகின்றபோது விரிவுக்கு ஏற்றபடி அதனுடைய பங்கு விரிந்துகொண்டு போகுமே தவிர, இதனுடைய பங்கு குறையுமானால் வளர்ந்த மாநிலம் மேலும் அதனுடைய வளர்ச்சியைப் பெற முடியாது. அந்தக் கணக்கினுடைய அடிப்படையிலேதான் மாநிலத்திற்கு 10 சதவிகிதமாக அளித்துக்கொண்டிருந்தது குறைந்துகொண்டு வருவது தவறு என்று நாங்கள் வாதாடுகிறோம். நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களைக் கேட்பது ஒன்று தான். எங்கள் பக்கம் நின்று கேட்க அவர்கள் இருக்கின்றார்களா அல்லது திட்டக் கமிஷனுக்குச் சாதகமாக இருந்து அங்கத்தினர் அவர்கள் பதில் சொல்கிறார்களா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி:** தமிழகத்தின் தேவைக்குத் துணையாக இருப்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். காங்கிரஸ் (ஐ)ம் உறுதியாக இருக்கிறது. ஆனால் குறைந்துகொண்டு வருகிறது என்று சொல்கின்றபோது, எப்படிக் குறைகிறது, என்ன காரணத்தினாலே குறைகிறது, என்ன நம்முடைய தேவை என்று சொல்ல வேண்டும். அந்த விவரத்தை நாங்கள் தந்திருக்க வேண்டுமென்ற நிலையிலே இல்லை. அதை ஆளும் அரசுதான் தந்திருக்க வேண்டும். நான்கு பெர்சென்ட் அல்ல, ஆறு பெர்சென்ட் அல்ல, எட்டு பெர்சென்ட் வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும். அதைத் தர மறுக்கிறார்கள் என்றால், சொல்லுங்கள். எங்களை அழையுங்கள் தராவிட்டால் என்று சொல்கிறோம். அதை அரசு இருளில் வைத்துக் கொண்டு ஏன் வரவில்லை என்றால், அது எப்படி எங்களுக்குத் தெரியும்?

**திரு. ஆ. நல்லசிவன்:** நான் ஏற்கெனவே ஒரு யோசனை கூறினேன். மத்திய அரசு பெறுகின்ற எல்லாவிதமான வரியிலேயிருந்து 75 சதவிகிதம் மாநிலத்திற்குத் தரவேண்டுமென்று ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** தனியான கருத்துக்களுக்கு என்னுடைய பதில் இல்லை. நிதி நிலை அறிக்கையின் மீதுதான் என்னுடைய பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவருடைய கருத்துக்களை நிதி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு, அதை இந்த அவைக்குக் கொண்டு வரட்டும், அப்போது நான் பேசுகிறேன். ஆக இதுமட்டுமல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு அவையினுடைய உரிமைக்காகச் சொல்கிறேன். நான் விவாதத்திலே கலந்து கொள்ளவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கட்சி வேறாக இருந்தாலும், அவருக்கும் உரிமை இருக்கிறதல்லவா? அவர் ஒரு சகோதர கட்சியாக இருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி:** அவருக்கு உரிமை இருக்கிறது. என்னுடைய பேச்சினுடைய முழுமை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம்தான். அதன் மீதான விவாதமாக அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி அரசாங்கத்தினுடைய கருத்து தெளிவாக வந்துவிட்டால், நான் மேலும் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க முடியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பக்கம் 52, 84-வது பாராவில் அதைத் தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறேன்.

"இந்த நிலை மாறி புதியதாக உருவாக்கவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு தருகின்ற உதவிக்குக் கணிசமான உயர்வு காணுவதன் மூலம் தமிழ் நாடு அகில இந்திய சராசரி நபர் வாரி திட்ட அளவை யாவது எட்டுவதற்கு ஏற்றதோர் திட்டத்தை அமைப்பதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறேன். அதாவது கீழே போகாமல் இந்த சராசரி அளவுக்காவது கொண்டு வந்து நிறுத்துங்கள் என்று கேட்கின்ற நிலையிலேயே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த சராசரி அளவுக்காவது கொண்டு வந்து நிறுத்துங்கள் என்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களது கோரிக்கை சரியானது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே, நாம் புள்ளிவிவரங்களைச் சொல்லும்போது, எந்த அடிப்படையிலே அணுகுகிறோம் என்பதுதான் என் கேள்வி. ஆனால் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசினுடைய நிதி உதவி நான்கு பெர்சென்ட்டாக வந்திருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு சில கார்ப்பரேஷன்களுக்கு என்று சில திட்டங்களுக்கு நிதி முதலீடு செய்கின்றது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு என்று முதலீடு செய்கின்றது. இந்தியா முழுமைக்கும் தேவைக்கு முதலீடு போடுகின்றது. இரும்பை உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு முதலீடு செய்கின்றது. அதில் முதலீடு செய்ய எத்தனை கோடி ரூபாய் வேண்டியிருக்கும்? அதைச் செய்திருக்கிறது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு பிறகு மாநில வாரியாக எத்தனை பெர்சென்ட் கொடுக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கின்றது. அது போன்று வேறு பல, பெரிய திட்டங்களுக்கு என்று சொல்ல மாட்டேன், இந்தியாவினுடைய அத்தனை மாநிலங்களுக்கும் தேவையான சில திட்டங்களை அந்தந்த மாநிலங்களில் அமைக்கின்றது. சில மாநிலங்களில் குறிப்பிட்ட சில திட்டங்களைத்தான் அமைக்க முடியும். தமிழகத்தில் இரும்பைத் தோண்டியெடுக்க முடியாது. ஆனால் இங்கே நிலக்கரியைத் தோண்டியெடுக்க முடியும். கிடைக்கின்ற அளவுக்குத்தான் நிலக்கரியைத் தோண்டி எடுக்க முடியும். அதிகமாகத் தோண்ட முடியாது. அதற்காக அதிகமாகக் கிடைக்கின்ற மாநிலங்களிலே தோண்டாமல் இருக்க முடியாது.





அரசும் முதலீடு செய்யாமல் இருந்துவிட முடியாது. ஆகவே மத்திய அரசினுடைய முதலீடு சில இடங்களிலே இன்றியமையாத ஒன்று, தவிர்க்க முடியாத ஒன்று. அது ஒரு மாநிலத்திற்கு என்று சொல்ல முடியாது. இந்தியா முழுவதற்கும் உதவி செய்ய செய்கின்ற முதலீடாகும். ஆகவே அதையும் கணக்கில் வைத்துக்கொண்டு, சொல்ல வேண்டும். அதையும் சேர்த்து இந்த இரண்டு ஆயிரம் கோடியிலே நமக்குக் கிடைக்கிறது நான்கு பெர்சென்ட் என்று சொல்கின்றோமா அல்லது இதையெல்லாம் நீக்கி கிழித்து (கழித்துவிட்டு) மாநிலங்களுக்காக தனியான திட்டங்கள் என்ற அடிப்படையிலே மத்திய அரசு கொடுக்கின்ற நிதியிலே நமக்குக் கிடைத்திருப்பது நான்கு பெர்சென்ட் என்று சொல்கின்றோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்போது கிடைத்திருக்கின்ற நிதி உதவி போதுமானது என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மகிழ்ச்சி அடைவாரானால், அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் நம்முடைய மாநிலத்திற்கு அதிக நிதி உதவி தேவை என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**திரு. க. இராமமூர்த்தி :** நிச்சயமாக அதிக உதவி தேவை என்றால், நாங்கள் துணையாக இருப்போம். ஏதோ உதவி தேவை என்பதற்காக, தமிழர் மத்திய அரசு என்ற பிரச்சினையையும், திராவிடர், திராவிடர் அல்லாதவர் என்ற பிரச்சினையையும், வட இந்தியா, தென் இந்தியா என்ற பிரச்சினையையும் அல்லது மாநிலங்களை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்கின்ற குற்றச்சாட்டையும் எழுப்பியது முறையாகாது, அது நியாயமானதாகவும் இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** தமிழர்கள், திராவிடர்கள் என்ற பிரச்சினையை அடிக்கடி உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருப்பது தேவை இல்லாத ஒன்று என்று கருதுகிறேன். தமிழர்கள், திராவிடர்கள் என்று இந்தப் பிரச்சினை கூட எதனாலே எழுந்தது என்பதை அவர் கூட சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். உலகம் எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று சொல்கின்ற கம்யூனிஸ்ட்டுகள் கூட ஒதுக்கப்படுகின்ற காரணத்தினாலே, அநீதி இழைக்கப்படுகின்ற காரணத்தினாலேயே, கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களே ஒரு வாசகம் எழுதியிருந்தார்கள் :—

'தகரட்டே அங்ஙனே தகரட்டே
அ வடக்கத்திய ஆட்சி தகரட்டே
மலரட்டே அங்ஙனே மலரட்டே
இ சுதந்திர கேரள மலரட்டே'

என்று எழுதியிருந்தார்கள். அவர்கள் எங்களோடு சேர்ந்து திராவிட நாடு வேண்டும் என்று சொல்லிக்கொண்டு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது சரி, மலையாள மொழியிலே பாடிவிட்டு, அங்கத்தினர் அவர்கள் மேலே சொல்லிக்கொண்டே போனால் எப்படி என்று கேட்டுக்கொள்கிறேன்.

Thiru G. VASANTHA PAI : Sir, I know Malayalam. What he is talking is not Malayalam.

புலவர் புலமைப்பித்தன் : அந்தப் பிரச்சினை வந்ததற்குக் காரணமே என்ன என்பதை எண்ணிப்பார்த்திர்களானால், இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு தேவை என்று கேட்பார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் மேலே பேசலாம். ஏற்கெனவே மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்கள் அந்த இனப் பிரச்சினையில்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மேலே பேசலாம்.

(பிற்பகல் 4-50)

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, ஆளுந்தரப்பிலேயிருந்து பேசுகிறபோது, திரு. இராமமூர்த்தி அவர்கள் மத்திய அரசோடு போராட வர மாட்டார், திரு. சீத்தாபதிதான் வருவார் என்ற பேச்சு வந்தது. ஆகவே அதை விளக்குவதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அதைப்பற்றி தெளிவுபடுத்திவிட்டார்கள். மேலே போகலாம்.

திரு. க. இராமமூர்த்தி : நமக்கு அதிகமாக நிதி தேவைப்படுகிறது. அதற்காக மத்திய அரசின் உதவி தேவையென்று சொல்கிற நேரத்தில், இந்த மாநிலத்திலே மத்திய அரசு முதலீடு செய்ய வேண்டிய தொழில்கள் எவை யெவை என்ற பட்டியலைத் தயாரித்திருக்கிறோமா ? அப்படிப்பட்ட தொழில்கள் ஏதாவது மத்திய அரசுக்கு நாம் சிபாரிசு செய்திருக்கிறோமா ? இந்தத் தொழிலிலே இத்தனை கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டுமென்ற தகவல் தந்திருக்கிறோமா ? இதை நான் போட்டிக்காகச் சொல்லவில்லை. தமிழ் நாட்டின் தேவைக்காக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது,



இதற்கும் பதில் சொன்னால் தமிழகம் அதனால் பயன்பெற முடியும், இந்தியாவும்கூட அதனால் பயன் பெற முடியுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மூல தன முதலீட்டை மத்திய அரசிடமிருந்து கேட்கிறோம். அதே நேரத்தில் மாநிலத்தின் மூலதனத்தைப் பெருக்க நாம் என்ன நடவடிக்கைகள் எடுத் திருக்கிறோமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா ? அண்ணா அவர்கள் முதல்வராகப் பதவியேற்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம் முடைய கட்சிக்கொள்கை "Pat the poor and tap the rich" என்று சொன்னார்கள். இல்லாதவர்களுக்குத் துணையாக இருப்போம், அவர்களுடைய துயர் துடைப்போம், வசதி படைத்தவர்களிடமிருந்து வரி போட்டு வாங்குவதற்குத் தயங்க மாட்டோமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். வரியில்லாத பட்ஜெட்டைத் தந்திருக்கிறோமென்று இன்று சொல்லுகிறீர்களே, நீங்கள் அண்ணாவிற்குச் செய்கின்ற நியாயமா இது என்று கேட்க விரும்புகிறேன். வரி போட வேண்டியவர்களுக்கு வரி போட்டுத்தான் ஆக வேண்டும். அதில் ஏன் தயங்க வேண்டும் ? எதனால் அந்தத் தயக்கம் ஓர் ஆட்சிக்கு இருக்க வேண்டும் ? பல்வேறு பொறுப்புக்களிலே, பல்வேறு நிலைகளிலே அரசு தன்னுடைய பணிகளைப் பரவலாக்கிக்கொண்டிருக்கும் போது, யாருக்குமே வரி போடவில்லை, அதனாலே எங்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட வேண்டுமென்று சொல்லுவதேகூட வசதியற்றவர் களுக்கு, ஏழைகளுக்கு இந்த அரசு இழைக்கும் தீங்காக இருக்குமென்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய சீரிய யோசனையை எப்போது நான் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அப்போது பயன்படுத்திக் கொள்கிறேன் என்பதை உறுதிமொழியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய சீரிய யோசனை என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன் (சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி : நான் யோசனை சொல்லியிருக்கிறேன் என்பதை நிதியமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு, அது என்ன யோசனை என்பதை மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இன்னும் ஒன்றை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : வசதியுள்ளவர்களுக்கு வரி போடலாமென்று மாண்புமிகு உறுப்பினவர்கள் சொன்னார்கள். என்ன மாதிரி வரி போடலாமென்பதைச் சொன்னால், நாங்கள் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும், அரசுக்கும் அது சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் மேலே பேசலாம்.

திரு. க. இராமமூர்த்தி : நாட்டு மக்கள் இந்த முறை அந்த வாய்ப்பை எனக்குத் தரவில்லை. அடுத்த முறை தரும்போது (சிரிப்பு) சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நிதியமைச்சர் ஆகும்போது விளக்குவார். (சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி : இன்னொரு கருத்தை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலேதான் அந்தப் பிரச்சினை புறப்பட்டது. இப்போது அதை மீண்டும் பிரச்சினையாக்குவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பிரச்சினை தோன்றி, அதன்மூலம் வேறொரு பிரச்சினை வந்துள்ள இந்த நேரத்தில் நான் மன வேதனையோடு ஒரு கருத்தைத் தெரிவிக்கிறேன். அவைத் தலைவரவர்களை விவாதத்தில் இழுக்கக்கூடாது, சபை மரபுகூட அதுதான். ஆனால் இரண்டு மூன்று நாட்களாக எனக்கிருக்கிற வேதனை, நீங்கள் ஏன் மேலவைத் தலைவராக உட்கார்ந்திருக்கிறீர்கள் என்பதுதான். நீங்கள் கீழே இருந்திருந்தால் எந்த அளவிற்கு கோபத்தோடு, உரிமையோடு குரல் கொடுத்திருப்பீர்களென்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஒரு குரல் கேரளத்திலிருந்து வந்தது. வீணாகப் போகின்ற * தமிழகத்திற்கு ஒரு சொட்டுகூட கொடுக்க மாட்டோமென்று கேரள அமைச்சர் ஒருவர், கேரள அரசின் சார்பிலே அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்கள். எந்த நிலையிலே இந்தப் பிரச்சினை வந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே திருப்பதி பற்றி முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் மிகுந்த வேகத்தோடு சொல்லவில்லை. தங்களைப் பாராட்டியபோது அதைச் சொன்னார்கள். உடனே ஆந்திர மாநிலத்தில் அதனுடைய எதிரொலியாக சட்டமன்றப் பேரவையில் அமைச்சர்களாலும், முதலமைச்சரவர்களாலும் கருத்துக்கள் சொல்லப்பட்டன. இன்னொரு விழாவில் தங்களைப் பாராட்டும் போது நமது முதலமைச்சரவர்கள் மீண்டும் தமது கருத்தைச் சொன்னார்கள். மற்ற மாநிலங்கள் தங்களுடைய உரிமைகளை, தேவைகளைக் காத்துக் கொள்வதில் எந்த அளவிற்கு வேகமாக, பொறுப்பாக இருக்கிறார்களென்பதைப்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



புரிந்துகொள்ள வேண்டும், இது நமக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு என்ன ஆகியிருக்கிறது ? மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பங்கீடுபற்றி ஆராய மத்திய அரசு ஒரு குழு அமைக்க முடிவெடுத்தது. அதை அறிவிக்கின்றது. அடுத்த நாளே கேரளாவிலிருந்து ஒரு குரல் ஓங்கி ஒலிக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கொடுக்க மாட்டோம். * * * கொடுக்க மாட்டோம் என்ற குரல் ஒலிக்கிறது.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, இன்னொரு மாநில அரசைப்பற்றி, குறிப்பாக அங்கே சட்டசபை நடந்துகொண்டிருக்கும் நேரத்திலே, அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிற காரணத்தாலே தவறான தகவல்கள் வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன் * * * ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் சொன்னதாகத் தகவல் இல்லை. பத்திரிகைகளிலும் அப்படி வரவில்லை. இது நுட்பமான பிரச்சினை. பேரவையில் இந்தப் பிரச்சினை வந்தபோதுகூட, நாங்கள் ஒன்றைச் சொன்னோம். அவர்கள் தர வேண்டிய நிலையிலும், நாம் பெற வேண்டிய நிலையிலும் இருக்கிறோம், எனவே கொஞ்சம் எச்சரிக்கையாக இந்த விஷயங்களை அணுகுவது நல்லது என்று சொன்னோம். அவர்கள் சட்டசபையில் பேசியதாக, அது பத்திரிகையில் வந்ததாகக் குறிப்பில்லை. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கொடுக்க மாட்டோம் என்று சொன்னதாகத் தகவல் வந்திருக்கிறது. சர்ப்ளஸ் வாட்டர் இருக்கிறதென்று சொல்லுகிறோம். அவர்கள் உபரி நீர் கிடையாது என்று சொல்லி, அதற்கு விஞ்ஞான ரீதியான காரணங்களைச் சொல்லுகிறார்கள். எனவே சொல்லுகின்ற வார்த்தைகளைக் கூட கொஞ்சம் மாற்றிச் சொன்னால் நல்லதென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எந்த வார்த்தைகளை எடுக்க வேண்டும் ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : * * * ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கொடுக்க மாட்டோம் என்று சொன்னதாகத் தகவல் வரவில்லை. * * * என்பதை எடுத்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : * * * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகளும் அதைப் போட வேண்டாம்.

திரு. க. இராமமூர்த்தி : ஆக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கொடுக்க மாட்டோமென்று அறிவித்திருக்கிறார்கள். . .

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் அதையே சொல்லு கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய வேதனையெல்லாம் அவர்கள் கொடுக்கும் நிலையிலும், நாம் பெறுகின்ற நிலையிலும் இருக்கிறோமென்பது தான். அவர்கள் வாய்திறந்த முகூர்த்தம் நம்முடைய அணைகளெல்லாம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன இப்போது. எத்தனை பொருள்களை நாம் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எந்தெந்தப் பொருள் களைக் கொடுத்திருக்கிறோம்.

எப்போதாவது கேரளத்திடம் நாம் கை நீட்டியதுண்டா? இதுதான் முதன்முறை. சென்ற முறை மின்சாரத்திற்கான அக்ரிமென்ட் முடிந்து . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** தேசிய ஒருமைப்பாட்டை வற்புறுத்தும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தமிழகத்திற்கும், கேரளத்திற்கும் இப்படி மோதல் ஏற்படுத் துவது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இராம மூர்த்தி அவர்கள், சொன்ன கருத்தைச் சொல்கிறார். சொன்ன சொல்லைக் குறிப்பிடுவதிலே தப்பில்லையே. அதில் ஒருமைப்பாடு என்ன கெட்டுப் போய் விடுகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதில் ஒரு பிரச்சினையும் இல்லை. அவரவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல லாம். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்லியதற் கிணங்க கேரளா தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. நாம் வாங்கும் நிலையில் இருக்கிறோம். நதி நீர்ப் பங்கீடுபற்றி அகில இந்திய அரசு அக்கறை எடுத்து, அதற்கென்று குழுக்கள் அமைத்து, அதிகாரிகளெல் லாம் கூடி, பல்வேறு மாநிலங்களில் பாய்கின்ற நீரை எப்படிப் பங்கிடலா மென்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் மத்திய அரசு மிக அக்கறையாக இருக்கிறது. வீணாகும் தண்ணீரைப் பயன் படுத்தும், மாநிலத்திற்குத் திருப்ப வேண்டுமென்ற முயற்சியில் அவர்கள் ஈடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேரளம் எந்தச் சூழ்நிலையில், எதற்காக, யாரைத் திருப்திப்படுத்த அந்தக் கருத்தைச் சொன்னது என்பது அந்தச் சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால் அந்தப் பதில்கூட நமக்குச் சொல்லப் பட்ட பதிலல்ல. கேரளாவிலே இருப்பவர்களுக்கு, சூழ்நிலையையொட்டி அங்கே சொல்லப்பட்ட கருத்தாகும். ஆகவே இப்போதிருக்கின்ற நிலைமை



களைக் கெடுத்துவிடுமோ என்பதற்காகத்தான் சொல்கிறேன். நம்முடைய உணர்ச்சிகளைக் காட்ட, நம்முடைய மாநிலத்தின் உரிமையைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் எள்ளளவும் வேறுபாடில்லை. அங்கே பேசியது எப்படி செய்தித்தாளில் வந்து பரபரப்பு உண்டாகிவிட்டதோ, அப்படிப்பட்ட பரபரப்பை உண்டாக்குவதால் லாபம் நமக்கல்ல, நஷ்டம்தான் நமக்கு ஏற்படும். எனவேதான் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினை பொறுத்த சர்ச்சையை இதோடு முடித்துவிடுகிறேன். மேற்கொண்டு அதைப்பற்றிப் பேச அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மேலே பேசலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் அது பற்றிய சர்ச்சையில் இறங்கவில்லை. தலைவரவர்களுடைய அனுமதியோடு ஒரேயொரு கருத்தைச் சொல்கிறேன். ஒரு சொட்டுத் தண்ணீரல்ல, இங்கே இருக்கின்ற கேரள மாநிலத்தவர்கள் குடிக் கின்ற தண்ணீரைக் கொடுத்தால்கூட, கேரளத்தின் நதிகளில் தண்ணீர் ஓடாது. அந்த அளவிற்கு இருந்து கொண்டிருக்கும்போது இப்படிச் சொல்லு கிறார்கள். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, மேலே பேசலாம்.

(பிற்பகல் 5-00)

**திரு. க. இராமமூர்த்தி :** அடுத்து, தொழில் துறையைப் பொறுத்தவரை யில், என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்களைப்பற்றிச் சொல்கின்றபோது, மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்கள் இன்னொரு உண்மையை மிக அழகாக, தெளிவாக பெருமையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியா முழுமைக்கும் சிறு தொழில் மேம்பாட்டுக்கான கார்ப்பரேஷனுக்கு 69 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. இதிலே 10 கோடி ரூபாயை தமிழக அரசு பெற்று சென்ற ஆண்டுகளிலே பயன்படுத்தியிருக்கிறது. இந்த விவரத்தை மிகுந்த பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நாம் தொடர்ந்து முயற்சி செய்தால், மத்திய அரசிடத்திலிருந்து வர வேண்டிய பணத்தை நாம் முழுமையாகவும், தேவைக்குக் கூடுதலாகவும் இன்னும் சொல்லப்போனால் மற்ற மாநிலங்களைவிட அதிகமாகவும் பெற முடியும். 69 கோடி ரூபாயில் 10 கோடி ரூபாயை நாம் சிறு தொழில்களுக்காக மத்திய அரசிடமிருந்து பெற முடிகிறது

என்றால், நாம் முயன்றால், அரசு அதற்குத் துணையிருந்தால், உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்தால், இவற்றையெல்லாம் நாம் நிச்சயம் பெற முடியும், வெற்றி காண முடியும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகளிலே தொழில் துவங்கினால், மத்திய அரசு மானியம் தருகிறது. அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது 15 சதவிகிதம். அதை மற்ற மாநிலங்களை விட மிக நல்ல முறையில் நம் மாநிலத்தில் பயன்படுத்தியிருக்கிறோம். முன்பு இருந்ததை விட நம் மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிறந்த முறையில் சிறு தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதைத்தான் இது காட்டுகிறது. நாம் இப்போது கேட்பது அதைப் பற்றி அல்ல. நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய முதலீட்டில் பங்கு குறைந்துள்ளதுபற்றி. இது சப்சிடி ஆகும். ஆகவே இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை உறுப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தொழில் வளர்ந்திருக்கிறது என்பதல்ல. ஏதோ சிறு தொழில்கள் அதிகரித்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பொதுவாக தமிழ் நாட்டில் தொழில் துறை என்று எடுத்துக் கொண்டால், அதன் வளர்ச்சி என்று பார்க்கும்போது, தேவையான அளவு வளரவில்லை. அதற்கான முயற்சி எடுக்கவில்லை. சிறுதொழில் விஸ்தரிப்பைப் பொறுத்தவரையில் முயற்சி இருக்கிறது. அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நான் உணர்ந்து தான் இருக்கிறேன். ஆனால் எந்த வகையிலும் நாம் தொடர்ந்து முயற்சி செய்தோமானால், நிச்சயம் நாமும் மத்திய நிதியுதவியைப் பெற முடியும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொன்னால், அவர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே புதிய தொழிற்சாலைகள் துவங்குவது பற்றி ஏற்கெனவே பல உறுப்பினர்கள் பேசி விட்டார்கள். இந்த நேரத்தில் இந்தியாவின் ஈடு இணையற்ற தலைவி அன்னை இந்திரா அவர்கள் ஒலித்த குரலை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொழிற்கூடங்கள் ஏவ்வளவாக இருந்த போதிலும், தொழிற்சாலைகள் பெரிய அளவில் அமைந்த போதிலும், முதலீட்டைப் பொறுத்தவரையில், எவ்வளவு பெரிய முதலீடாக அமைந்த போதிலும் அவை எல்லாவற்றையும்விட தொழில் அமைதி, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் நல் உறவு முறையாகவும், சுமுகமாகவும் அமைந்தால் தான், இந்தியா முழுவதும் பொருளாதார அடிப்படையில் செழிப்பான நிலைக்கு வளர முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையின் கவனத்திற்குச் சொல்கிறேன். பாரத பிரதம மந்திரி அவர்கள் கூட்டிய ஒரு மாநாட்டிலே



"In situations where all people are subjected to hardship, we must do better than we have done so far, whatever be the reasons for earlier slackness and whatever be the difficulties we are facing", she said.

தொடர்ந்து அவர் சொல்கிறார்.

'The number of man-days lost due to strikes and lock-outs have gone up from 12.79 million in 1976 to 25.32 million in 1977 and 43.9 million in 1979, she said and added, if this situation continues, we shall only sink deeper into the morass."

இந்தியாவிலே இன்றைக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினை வேலைநிறுத்தப் பிரச்சினை. அதுமட்டுமல்ல. 200 கோடி ரூபாய் முதலீடு செய்கின்றோம். திட்டங்களையெல்லாம் வகுக்கின்றோம். தொழிலை வளர்க்க வேண்டுமென்று என்னுகிறோம். மேலும் சில கோடி ரூபாயை முதலீடு செய்கின்றோம். மேலும் மேலும் தொழிலை வளர்க்க என்னுகின்றோம். இரண்டே நாள் ஸ்டிரைக் நடைபெறுகிறது. அதன் விளைவாக 300 கோடி, 400 கோடி ரூபாய் அந்த 2 நாள் ஸ்டிரைக்கிலே வீணாகிறது, நஷ்டமாகிறது. மெல்ல மெல்ல சறுக்கு மரம் ஏற முயன்றவன் 10 அடி ஏறுவதற்குள் 15 அடி கீழே வருவதைப்போல, இதையெல்லாம்பற்றி இந்த அரசு எண்ணிப் பார்த்ததா? நிதி நிலை அறிக்கையிலே மாநிலத்தின் சங்கடங்களையெல்லாம் சொல்லுகின்றபோது, நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது, மேலும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு இடம் அளிக்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது, தொழிற்சாலைகளை இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் சிலர். எப்படி இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கப் போகிறார்கள்? இதைப்பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் ஏதாவது தெரிவித்திருக்கிறதா என்றால், இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான பாதுகாப்பு நடவடிக்கை வேண்டுமென்று உறுதியோடு அறுதியிட்டுக் கூறிய இந்தியாவின் ஈடு இணையற்ற தலைவி, பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு இந்த விஷயத்தில் மாநில அரசு துணை நிற்போம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? இந்தியாவினுடைய நலன் கருதி, இந்திய நாட்டின் பொருளாதார நலன் கருதி, இதை அறிக்கையில் சொல்லியிருக்க வேண்டாமா? இதையெல்லாம்

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது
என்னுடைய நீங்காத கடமை என்று கருதுகிறேன். சிலவற்றை நான் நேர
மின்மையால் இன்றைக்குச் சொல்லாமல் விட்டு விட்டாலும், பிறகு வசதியும்
வாய்ப்பும் கிடைக்கும்போது சொல்வேன் என்று சொல்லி நான் சொன்ன
கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்தில்
கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய நல்வாழ்வுத் திட்டங்கள் (Social Security Schemes )
போன்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். பின்தங்கியவர்களுக்கு.
நலிந்தவர்களுக்கு எல்லாம் நல்வாழ்வுத் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.
ஏற்கெனவே எடுத்த திட்டங்களுக்கு மேலும் முன்னோடித் திட்டங்களாக சில
அமைந்திருக்கின்றன. இன்னும் சில திட்டங்கள் புதிய திட்டங்களாக அமைந்
திருக்கின்றன. பல்வேறு புதிய திட்டங்களைத் தீட்டிய மாண்புமிகு நிதி
யமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து நான்
சொல்லிய கருத்துக்களை அவர்கள் செயல்வடிவிற்குக் கொண்டு வரும்போது
அல்லது நிறைவேற்றும்போது, அல்லது சட்டங்கள் ஆக்கும்போது கவனத்தில்
மனத்தில் கொண்டு செயல்பட வேண்டும், செயல்படுவார்கள் என்று நம்பி
உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, 1980-81 ஆம்
ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது எனது கருத்துக்களை எடுத்து வைப்ப
தற்கு முன்னால், இந்த நிதி நிலை அறிக்கையை நமக்குத் தந்திருக்கின்ற நிதி
யமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் 60 வது ஆண்டு நிறைவு பெறுகின்ற
நிலையிலே ஒரு முதிர்ந்த அறிவோடு, முதிர்ந்த பருவத்தோடு, அறிவு முதிர்ச்சி
யோடு, நல்ல அனுபவ முத்திரையோடு நிதி நிலை அறிக்கையைத் தந்திருப்ப
தற்காக அவர்களை முதலில் நான் பாராட்டுகிறேன். அடுத்து, புதிதாக
அமைந்திருக்கின்ற இந்த அரசை நான் வாழ்த்துகிறேன். அமைச்சரவையையும்
வாழ்த்துகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை நாவலர் அவர்கள் தன்னுடைய
புலமைக்கேற்ப திருக்குறளின் சொல்லைச் சொல்லி வள்ளுவரது பொருளாதார
நுண்ணறிவை நமக்கு ஆரம்பத்திலேயே பயன்படுத்தியிருக்கிறார்கள். "இயற்
றலும் ஈட்டலும் காத்தலும்—காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்று
சொல்லி அத்தகைய வல்லமை பெற்ற அரசு தருகிற நிதி நிலை அறிக்கை இது
என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால்
வாழ்த்துவதற்குரியது. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது இயற்றலும்
என்பது தான். அதுதான் மிக முக்கியமானது. நிதியை உருவாக்குதல் தான்
முக்கியம். நிதியை உருவாக்கி விட்டால், அடுத்து வேலை ஆரம்பமாகும்.



இயற்றிய பிறகு இடையில் ஈட்டல், பிறகு காத்தல், அதன் பிறகு தான் வ
தல். ஆகவே நிதியை இயற்றல் அல்லது உருவாக்குதல் என்கிற பணி அல்
தொழில் மிக மிகச் சிறப்பானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறே
நிதியை இயற்றுவதற்கு இரண்டு விதமான வழிகள் உண்டு. அரசாங்கத்தி
பொது மக்களிடத்திலிருந்து வரி மூலம் வருவது ஒரு வழி. அது எ
அளவுக்கு வரும் என்பது மத்திய அரசு வரி போட்டு விட்டு மிஞ்சி இருக்கி
வரியைப் பொறுத்தது. மத்திய அரசு ஏராளமாக வரி போட்டு விட்ட
நாம் அந்தத் துறையில் மறுபடியும் வரி போட முடியாது. மத்திய அரசு
வரி மூலம் ஏராளமான வருமானம் வருகிறது. மாநில அரசுகள் மத்
அரசுக்குச் சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டிய முறை
சொல்லி அந்த வருவாயிலிருந்து நியாயமான அளவுக்கு வர வேண்டிய உரி
களை வாதாடி. போராடி அதிகமாக நிதியைப் பெறுவது என்ப

(பிற்பகல் 5-10)

இரண்டாவது முறை. ஆக, எப்படியாவது ஒரு முறையில் அரசு நிதி
பெற்றுத்தான் மற்ற தொழில்களை இயற்ற வேண்டும். இந்த ஆண்டு மத்தி
அரசு மாநில அரசுகளுக்கு நிதியை வகுத்துக் கொடுக்கிற முறையில் ஒ
பெரும் மாற்றத்தைச் செய்திருப்பது வரவேற்கத் தக்கது என்பத
எல்லோரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையும் அதுதான். ஏழாவ
நிதியாணைக் குழுவால் அதற்கான அறிகுறி நமக்குத் தெரிவிக்க
பட்டிருக்கிறது. நான் அதனை வரவேற்கிறேன். ஆனால் இத்தகைய நில
எப்படி உருவானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அதன் நிதி வாயில்க
இரண்டு. மக்களிடமிருந்து வரக்கூடியது ஒன்று. மக்களிடமிருந்து மத்தி
அரசு வரிமூலம் பெற்றது நமக்குத் திரும்ப வருவது என்பது மற்றொன்று
அதுவும் மக்களிடமிருந்து போன பணந்தான். அப்படித் திரும்ப வருகி
வரியில் நியாயமான பங்கு இதுவரை கிடைக்கவில்லை என்ற குரலை முத
முதலில் தமிழகத்தில் எடுத்துச் சொல்லி, நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு
உணர்த்தி, மற்ற முதலமைச்சர்களின் பேராதரவைப் பெற்றது பேரறிஞ
அண்ணா அவர்களின் நிதிநிலை அறிக்கையிலிருந்துதான் தொடங்கியது
என்பதை யாரும் மறுக்க முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 280-வது விதிப்படி நிதியாணைக்குழு
அமைக்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த நிதியாணை
குழு அமைக்கப்பட்டு, அது நாட்டின் நிதிவசதிகளையெல்லாம் ஆராய்ந்து,

அதோடு மாநிலங்களின் நிலைமைகளையும் ஆராய்ந்து, மாநில அரசுகளின் கருத்துக்களையும் தெரிந்து, மத்திய அரசின் கருத்தையும் அறிந்து, நிதியை வகுத்துக் கொடுக்கிறது. அதை ஒரு அறிக்கை வாயிலாகக் கொடுக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 268-வது பிரிவிலிருந்து 281-வது பிரிவு வரை மத்திய மாநில அரசுகளின் உறவுமுறைகள் எப்படி இருக்க வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இந்த வரையறைக்குள்தான் அந்த நிதிகளும் வகுத்துக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு வகுத்துக் கொடுக்கும் பணியை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த நிதியாணைக் குழு செய்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 280-வது பிரிவையே திருத்த முயற்சி எடுத்து, நிரந்தரமான நிதியாணைக் குழு இருக்க நாம் வகை செய்ய வேண்டும். காரணம், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதியாதாரங்களை ஆய்வு செய்யும் நிதியாணைக் குழு இதுவரை 7 முறை நியமிக்கப்பட்டுவிட்டது. ஏழாவது நிதியாணைக் குழுவின் அறிக்கையும் வெளிவந்துவிட்டது. அது 1979 முதல் 1984 வரை எவ்வாறு நிதிகளை வகுத்துக்கொள்ள வேண்டும், வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. 1982-ல் ஏற்படும் சூழ்நிலைகள், 1983-ல் ஏற்படும் சூழ்நிலைகளையெல்லாம் முன்கூட்டியே அக்குழு யோசித்துச் சொல்லுகிறது. இதை மாற்றி ஆண்டுதோறும் ஏற்படுகிற மாற்றங்களுக்கு ஏற்ப நெறிமுறைகள் வகுக்கப்பட்டு நிதி வகுக்கப்படுவதுதான் முறை. எனவே தற்போது இருக்கிற முறையைத் திருத்தியமைக்க நாம் முயல வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பிலிருந்த டாக்டர் கலைஞர் அவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள். அதன் விளைவாகத்தான் இன்றையதினம் 7-வது நிதியாணைக் குழுவால் நமக்கு அதிகமான நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழாவது நிதியாணைக் குழுவிற்கு உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ். எம். ஷீலாட் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டு, அந்தக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. நிதியாணைக் குழு அமைக்கப்படுவதற்கு இந்தியாவின் குடியரசுத் தலைவர் இந்திய அரசியல் சட்டத்தின் 280-வது பிரிவின்படி ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அதன் மூலம்தான் நிதியாணைக் குழு அமைக்கப்படுகிறது. இதுவரை அவ்வாறு 6
நிதியாணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. குடியரசுத் தலைவரின் ஆணைப்படி ஒரு தலைவரும் 4 உறுப்பினர்களும் இந்த நிதியாணைக் குழுவிற்கு நியமிக்கப்படுவார்கள். ஆனால் இந்த ஆண்டு குடியரசுத் தலைவரின்





அத்தகைய உத்தரவின் 5 வது பாராவில் முதல் தடவையாக குடியரசுத் தலைவர் ஒரு 'டேர்ம் ஆஃப் ரெபரன்சை'ச் சேர்த்திருந்தார்கள். அந்தக் குறிப்பு என்னவென்றால்

"பின் தங்கிய மாநிலங்களை, ஏனைய மாநிலங்களுக்கொப்ப உயர்த்துவதற்கு ஏற்ப நிதிப் பங்கீடு செய்வதுபற்றி ஆராய வேண்டும்"

என்பதாகும். இதன் காரணமாக நிதியாணைக் குழுவுக்கு ஒரு கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. இந்தத் தத்துவத்தை மனதில் கொண்டு நிதிப் பங்கீடு செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு நிதியாணைக் குழு ஆளாக்கப் பட்டது. ஐந்தாவது பாராவில் சொல்லப்பட்ட டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்சை மனதில் கொண்டு இப்போது நிதியாணைக் குழு ஒரு கைடுலைன்ஸ், அதாவது நெறிமுறையை வகுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வான்முறைகள் 3 வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முதலாவது, மத்திய அரசு விதிக்கும் வரிகளில் மாநிலப் பங்கைப் பெற்ற பிறகு, மாநிலங்களுக்கு ஏற்படுகிற நிதிப்பற்றாக்குறையின் இடைவெளியைக் குறைக்க முன்னுரிமை அளிக்கப்படும். அடுத்து, திட்டச் செலவுகளுக்கு மாநில நிதியிலிருந்து எந்த மாநிலம் அதிகமாகச் செலவு செய்கிறதோ அந்த மாநிலத்திற்கு திட்ட மூலதனச் செலவுக்குக் கொடுக்க வேண்டும். மூன்றாவதாக, பொதுத்துறை நிறுவனங்களைத் திறமையாக நடத்துகிற மாநிலத்திற்கு, மற்ற மாநிலங்களின் நிர்வாகச் செலவுகளைச் செம்மைப்படுத்த நிதியுதவி அளிக்கப்படும்.

அடுத்து, நிர்வாக சமுதாயப் பணிச் செலவுகளில், முன்னேறிய மாநிலங்களுக்கும் பின்தங்கிய மாநிலங்களுக்கும் ஏற்படுகிற இடைவெளியைக் குறைப்பது ஒரு நெறிமுறை.

அடுத்தது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விசேஷ சூழ்நிலைகளில் அதிக நிதிப் பளுவைத் தாங்கும் மாநிலத்திற்குச் சலுகை.

இப்படி 3 முறைகளை மனதில் கொண்டு நிதியைப் பங்கிட்டுத் தருகிறார்கள். திரு. எம். எஸ. ஷிலாட் தலைமையில் உள்ள அந்த நிதியாணைக் குழுவில் இடம் பெற்ற 4 உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் டாக்டர் ராஜ் கிருஷ்ணா என்ற உறுப்பினர் இந்தக் கருத்துக்களுக்கு மாறுபட்டு டிசண்டிங் நோட்டாக ஒரு குறிப்பைத் தெரிவித்தார்கள். அதை மிகுந்த விளக்கத்தோடு நிதியாணைக் குழுவின் அறிக்கையிலே எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். நான் மேலே குறிப்பிட்ட 3 முறைகளில் நிதியைப் பங்கீடு செய்ய அந்தக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதலைத் தந்தார்கள். ஆனால் டாக்டர். ராஜ் கிருஷ்ணா என்ன சொன்னார் என்றால், "இந்த முறையைவிட மாநிலங்களுக்கிடையே வேறுபாடு இல்லாமல், சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். இது சமமான பங்கீட்டு முறையல்ல என்ற கருத்தைச் சொல்லிவிட்டு அவர் வேறு ஒரு நெறிமுறையைச் சொன்னார். அதாவது இந்தியாவிலிருக்கிற மாநிலங்களின் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற மக்களின் எண்ணிக்கை, சதவீதம் எந்த மாநிலத்தில் கூடுதலாக இருக்கிறதோ அதற்கு முதல் சலுகை தரப்பட வேண்டும் என்று சொன்னார். அதாவது அகில இந்தியாவிலும் தனி நபர் வருவாய் மிகவும் குறைவாக உள்ள மாநிலத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் சொன்னது மட்டுமல்ல, அந்த முறையில் நிதியைப் பங்கீடு செய்தும் அளித்தார். அதாவது மேலே சொன்ன 4 பேர்களும் ஒரு ரேஷியோ போட்டு இந்த இந்த மாநிலத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்கீடு என்று பட்டியல் டேபுலேஷன் போட்டுக் கொடுத்தார்கள். டாக்டர் ராஜ் கிருஷ்ணா தனியாக தன்னுடைய பரிந்துரைப்படி, தான் விரும்பிய முறைப்படி, ஒரு டேபுலர் பார்ம் போட்டுக் கொடுத்தார். இந்தியாவின் வறுமைக்கோடு என்பது எது? அதனை எப்படி நிர்ணயிப்பது என்ற கேள்வி பிறந்தபோது, 1977-78 ஆம் ஆண்டு விலைவாசிப் புள்ளி விபரப்படி, இந்தியாவின் வறுமைக் கோட்டின் எல்லையை நிர்ணயிக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு ரூ. 65-க்கும் கீழே, ஒரு கிராமத்தில் உள்ளவருக்கு வருமானம் இருந்தால், அவர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவராகக் கருதப்படுவார். அதைப்போலவே நகர்ப்புறத்தில் இருக்கிற ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 75-க்கும் குறைவான வருமானம் வந்தால், அவர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவராகக் கருதப்படுவார். இந்த விபரப்படி பார்த்தால், இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே ஒரிசாவில்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களில் 71.01 சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற நாம் இரண்டாவது நிலையில் இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில், 62.98 சதவீத மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள்.

நகர்ப்புறங்களில் வசிப்பவர்களைப் பார்த்தால், இந்தியாவிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்களில் அதிகமான மக்களைக் கொண்ட மாநிலம் கேரளமாகும். அங்கே 59.62 சதவீத மக்கள் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். அடுத்து தமிழ் நாட்டில் அதிகமாக நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் இருக்கிறார்கள். அதாவது 59.22 சதவீத மக்கள் நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்கிறார்கள். இப்படி இரண்டாவது இடத்தை இரண்டு வகையிலும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது.



(பிற்பகல் 5-20)

ஆகவே அகில இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் இந்த வறுமைக் கோடு எந்த அளவில் இருக்கிறதென்று கணக்கிட்டுப் பார்த்தால், கிராமப்புறமானாலும் சரி, நகர்ப்புறமானாலும் சரி, தமிழ்நாடு இரண்டாவது நிலையிலே இருக்கிறது. முதல் நிலையிலே இருக்கிறவர்களுக்குக் கூடுதலாகவும், அதன் பிறகு இருப்பவர்களுக்குக் குறைவாகவும் தருகிற நிலை வருகிறது. எஞ்சிய மாநிலங்கள் எல்லாம் நமக்கு மேலே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நம்மைவிட வருமானம் அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே அவர்கள் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் சொன்னார்கள். இன்னுமொரு அடிப்படையையும் சொன்னார்கள். தனி நபர் வருமானத்தைக் கணக்கில் எடுத்து, அகில இந்திய வருமானம் என்னவோ அதைவிடக் குறைவாகப் பெறுகிற மக்கள் உள்ள மாநிலத்திற்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் தனி நபர் வருமானம் ஒரு வருஷத்திற்கு ரூ. 912. நம்மைவிட கேரளாவில் கூடுதலாக வருகிறது, அதாவது 948 ரூபாய். மேற்கு வங்கம் 1,033 ரூபாய், கர்நாடகா ரூ. 1,045, மகாராஷ்டிரம் ரூ. 1,349, அரியானா ரூ. 1399, பஞ்சாப் ரூ. 1,586. மற்ற மாநிலங்கள் நம்மைவிட கீழே இருக்கின்றன. நம்மைவிட கீழே இருப்பவர்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று சொல்லி அவர்கள் வாதிட்டு அந்த நிலையிலே அவர்கள் நிதிப் பங்கீட்டைச் செய்திருக்கிறார்கள். பெரும்பான்மையினர் வகுத்த விதிகளின்படி, தமிழ்நாட்டிற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், அதாவது 1983 ஆம் ஆண்டு வரையில், ரூ. 1,503.60 கோடி கிடைக்கும். ஆனால் டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் செய்த பகுப்பின்படி, 1,613.178 கோடி ரூபாய் கிடைக்கும். இப்படிப் பார்த்தால், மேற்கு வங்கத்திற்கு, பீகாருக்கு, ஒரிசாவிற்கு இன்னும் கூடுதலாகக் கிடைக்கிறது. ஆகவே அந்த நிதியாணைக் குழுவிலே பொருளாதார நிபுணர்களும், சுப்ரீம் கோர்ட் நீதிபதியும், மத்திய அரசின் நிதிச் செயலாளரும் வேறு சில துறைகளில் உள்ள நிபுணர்களும், கொடுத்த குறிப்புக்கு மாறாக பொருளாதாரத் துறையில் வல்லுநராக இருந்த டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் இந்த முறையைச் சொன்னார். இந்த முறையால் தமிழ் நாட்டிற்கு நன்மை வருகிறது. ஏழாவது நிதியாணைக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இந்த மாநிலத்தில் சமர்ப்பிக்கப்படுகிற நிதிநிலை அறிக்கை இது. இதைப்பற்றி தங்களுடைய கருத்து என்ன என்பதை

நிதிநிலை அறிக்கையிலே சொல்லி, அந்தக் கருத்தின் அடிப்படையிலே தொடர்ந்து முதலமைச்சர்கள் மாநாட்டிலும், தேசிய வளர்ச்சிக் குழுவிலும் 1983 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் வலியுறுத்தினால்தான், அதற்கடுத்த நிதியாணைக் குழுவிலாவது நன்மையைப் பெற முடியும். அதை இந்த மாநில அரசு செய்யவில்லை என்பது என்னுடைய எண்ணம். ஒரு வேளை பிறகு செய்யப் போகிறோம் என்றால், விரைவிலே செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்கிறேன். ஏனென்றால் 1967-68 ஆம் ஆண்டு டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தால், அதிலே ஐந்தாவது நிதியாணைக் குழுவினுடைய சிபார்சுபற்றி, மாநிலங்களுக்கு எப்படி பங்கு தர வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரி 1973 ஆம் ஆண்டு ஆறாவது நிதியாணைக் குழு தன்னுடைய அறிக்கையைத் தந்த பிறகு, 1974-75 ஆம் ஆண்டில் தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கையைத் தந்த எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், நிதியாணைக் குழு எப்படி நிதியை வகுத்திருக்கிறது, எப்படி சிபார்சு செய்திருக்கிறது, அது எந்த அளவில் தமிழகத்தைப் பாதிக்கிறது, அதை எந்த அளவுக்கு மாற்ற வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறி வழிகாட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்திய வரலாற்றிலே, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்ட பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும், நிதியாணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் நம்முடைய நிலை என்ன, கொள்கை என்ன, எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் 1967 முதல் 1976 ஆம் ஆண்டு வரை வலியுறுத்தியதன் பலனாக 1978 ஆம் ஆண்டில் வருமான வரியிலிருந்தும், ஆயத் தீர்வையிலிருந்தும், சொத்து வரியிலிருந்தும், எஸ்டேட் டியூட்டியிலிருந்தும் அதிகப் பங்கு நிதியைப் பெற்றிருக்கிறோம். இப்போது நாம் அதிக நிதியைப் பெற உழைத்தவர்கள் அவர்கள். ஆகவே நாவலர் அவர்கள் அந்த வழியைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டு வருமான வரியில் 85 சதவீதத்தை நமக்கு மத்திய அரசு தந்திருக்கிறது. அதற்கு முன்னால் 80 சதவீதம் கொடுக்கப்பட்டது. அதற்கும் முன்னால் 75 சதவீதம், 70 சதவீதம் என்ற முறையில் கொடுக்கப்பட்டது. ஆயத் தீர்வையில் 40 சதவீதத்தை இப்போது தருகிறார்கள். இதற்கு முந்திய ஆண்டில், அதாவது 1973 ஆம் ஆண்டில் 20 சதவீதம்தான் தரப்பட்டது. அதற்கு முன் அதைவிடக் குறைவாகத் தரப்பட்டது. அதைப் போலவே எஸ்டேட் டியூட்டியிலும், இரயில்வே பயணிகளுடைய கட்டணத்திலும் உரிய பங்கு நமக்குக் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன் அவர்கள் வருமான வரியின் மீது சர்சார்ஜைப் போட்டு நம்முடைய





பாகத்தை மத்திய அரசினர் பிரித்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது குறித்து டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு, "தொடர்ந்து சர்சார்ஜ் இரண்டு வருடங்களுக்கு மேல் போடுவதாக இருந்தால், அந்த வரியையும் சேர்த்து மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும்" என்று நிதியாணைக் குழு சொல்லியிருக்கிறது. நிதியைப் பெருக்க வேண்டுமென்றால், அவர்களிடம் வாதாடி அதிகமாகப் பெற வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு 2 சதவீதம் கூடுதல் போடுவதாலோ, ஒரு முனை வரியாகப் போட்டு 4 சதவீதமாக இருந்ததை 8 சதவீதமாக உயர்த்துவதாலோ, பலன் இல்லை. இது குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுவதைப் போல் இருக்கிறது. பரந்த குளத்திலே, கடலிலே நீந்த வேண்டும். இங்கேயே சுற்றிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை.

1967-க்குப் பிறகும் அப்படிப்பட்ட நிலை இருந்தது. அப்போது முதலமைச்சராக இருந்து நிதித் துறையின் பொறுப்பேற்றிருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது, ஐந்தாவது பாராவில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த ஒரு விஷயத்தை முடிக்க விரும்புகிறார்கள் போலும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நிதிபற்றி இந்த விஷயத்தை முடிக்க விரும்புகிறேன். "பல்வேறு சமூகப் பணிகளுக்கு அனைத்திந்திய அளவில் தபர் வாரியாகச் செய்யப்படுகின்ற செலவைவிட குறைவாகச் செலவு செய்யும் மாநிலங்களுக்குக் கூடுதல் மானியங்கள் அளிப்பதை ஆறாவது நிதியாணைக் குழு தன்னுடைய கொள்கையாகக் கொண்டது. மாநிலங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வை மேலும் பெருக்குவதற்குக் காரணமாக அமையும். தன்னால் இயன்ற வரை வசதிகளைத் திரட்டி, சிக்கனமாகவும், சீராகவும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள நம்மைப் போன்ற மாநிலங்களுக்குக் கிடைத்த பரிசு, அந்தப் புள்ளிவிவரங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு வேறு சில மாநிலங்களுக்கு அதிக உதவி கொடுத்து நமக்குக் குறைத்துவிட்டதுதான்" என்று டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், முதலமைச்சரோடு கலந்து நிதியாணைக் குழுவிலே சொல்லப்பட்டிருக்கக் கூடிய நெறிமுறைகளைப்பற்றி, டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் நமக்குச் சாதகமாகச் சொல்லியிருக்கும் கருத்தை ஒத்துக்கொள்ள

லாமா இல்லையா என்பதை வல்லுநர்களோடு கலந்து பேசி, நம்முடைய அரசின் கருத்தை தெளிவாகச் சொல்லி மத்திய அரசோடு கருத்துப் போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கடந்த பத்து ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை தமிழகத்தின் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த பத்தாண்டுக் காலமாகச் சொல்லப்பட்டும் ஒன்றும் நடைபெறவில்லை. மேற்கொண்டு என்ன செய்வது என்பதற்குரிய வழியை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னால், உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய நிதி வாயில் பிரிவு, மாநிலங்களிலிருந்து பிரித்துக்கொண்டு செல்கிற வரியை மத்திய நிதியில் சேர்த்துக்கொண்டு அதிலிருந்து மாநிலங்களுக்கு என்று ஒரு பங்கைத் தருகிறார்கள். முன்பு 75 சதவீதமாக இருந்தது இப்போது 80 சதவீதம். இந்திந்த மாநிலங்களுக்கு இவ்வளவு இவ்வளவு என்று சொல்லுவதைவிட, நிதியாணைக் குழுவின் நெறிமுறைகளை வைத்து, நெறிமுறைகள் நமக்குச் சாதகமாக மட்டும் இல்லாமல், நியாயத்தின் அடிப்படையிலே, தன்மையின் அடிப்படையிலே பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்துகிற நிலையிலே எப்படி பங்கீடு செய்யப்பட வேண்டுமென்று நமது மாநிலம் நம்முடைய நிலையைத் தெளிவுபடுத்தியாக வேண்டும்.

THIRUMATHI TARA CHERIAN : Mr. Chairman, if the statistics given on page 40 are correct, irrespective of the political tinge, from 1951 onwards it has been continuously dwindling, whether it was in the hands of the Congress, or in the hands of the D.M.K., or in the hands of the Anna D.M.K. It has been going down consistently; we do not know the reason. Ultimately it has come to 4.1 per cent. Anna's time, I think, will be betweeen 1967 and 1969 and since then also it has come down.

(பிற்பகல் 5-30)

*திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் கூறிய பிரச்சினை வேறு. அதையும் ஒரு கோணத்திலிருந்து பார்க்க வேண்டும். நான் இதில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமக்கு நிதி அளிக்கின்ற வாயில், மத்தியிலிருந்து திட்ட நிதி ஆணைக் குழுவின் சிபாரிசுப்படி வருகின்றது. அது நம்மிடத்தி





லிருந்து பிரித்துச் செல்கின்ற வரிகள் மூலம் வருகிறது. எஸ்டேட் டியூட்டி, வெல்த் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் மற்ற அடிப்படை வரிகளிலேயிருந்து நமக்குரிய பங்கைத் தருகிறார்கள். இதைத் தவிர மத்திய நிதியிலிருந்து பிளானிங்குக்கு உதவித் தொகை தருகிறார்கள். அதற்கு என்று ஒரு கவுன்சில் தனியாக வைத்திருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டக் குழு என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அது அரசியல் அமைப்புச் சட்டத்திலே இல்லாத ஒரு குழு. அந்தக் குழு எப்படிச் செயல்படுகிறது? பண்டிட் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது, பாராளுமன்றத்திலே அதை உருவாக்கினார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திலே இல்லாமல், நிதியைப் பங்கிட்டுக் கொடுக்கக் கூடிய ஒரு அமைப்பு என்ற அளவில் ஒரு திட்டக் குழுவை உருவாக்கினார்கள். இன்றைக்கு இந்தக் குழு எப்படிச் செயல்படுகின்றது? நிதி ஆணைக் குழுவும், திட்ட ஆணைக் குழுவும் எப்படிச் செயல்படுகின்றன? இதற்கிடையே 'கோஆர்டினேஷன்' இருக்க வேண்டும். இந்தத் திட்டக் குழு தேவைதானா? நம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எது எது தேவை என்று பார்க்க வேண்டும். திட்டங்களைப் போட்டுப்போட்டுப் பார்க்க வேண்டும். எத்தனை திட்டங்கள் போட்டால், எத்தனை பேர்கள் வேலையில்லாமல் இருப்பார்கள், எத்தனை பேர்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே வருவார்கள் என்று பார்க்க வேண்டும். திட்ட ஆணைக் குழுவிலே 'கோஆர்டினேஷன்' இல்லாமல் நிதி பங்கீடு செய்யப்படுகிறது. நான் இப்போது சொல்வது இந்த நிதி ஆணைக் குழு வழியாக வரும் உதவியை எதிர்க்கிறேன். இந்தத் திட்டக் குழு அந்த வகையிலே அரைகுறையாக வரையறை செய்வதை எதிர்க்கிறோம். நமக்கு அதிக அளவுக்கு நிதி வரவேண்டும். திட்டக் குழுவிலே நிதி ஒதுக்கிடுவது சரியாக இல்லை. செயலற்ற நிலையில் இருக்கின்ற, சீரழிக்கின்ற சில மாநிலங்களுக்கு அதிகமாகவும், திறமையாகச் செயல்படுகின்ற மாநிலங்களுக்குக் குறைத்துக் கொடுக்கின்ற தண்டனை முறையையும் நாங்கள் எதிர்க்கின்றோம். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சூசகமாகச் சொல்லியிருக்கிறார்கள். கூறியது கூறல் என்ற குற்றத்திற்கு ஆளாகாமல் சொல்லாமல் விடுகிறேன் என்றார்கள். நானும் என்னுடைய கருத்துக்களை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக இங்கே எடுத்து வைத்திருக்கிறேன். அது விவாதத்திற்குரிய ஒன்றல்ல. எல்லாக் கட்சியினரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். அரசு என்றால், ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும், எல்லோரும் நாட்டிலுள்ள அனைவரையும் சேர்த்ததுதான் என்று சொல்லிக்கொள்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து நம் உரிமைகளைப் பெறவேண்டிய பிரச்சினை. நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கன்சல்டேடிவ் கமிட்டி போட்டு அல்லது நிதித் துறையிலே திறமை பெற்றவர்களை வைத்து, திறமை பெற்றவர்களாக விளம்பரம் பண்ணிக்கொண்டிருப்பவர்களாக அல்லாமல் திறமை

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 ஜூலை 10

பெற்றவர்களாக நடத்துக் கொண்டிருப்பவர்களாக இல்லாமல், உண்மையிலேயே திறமையுள்ளவர்களைப் போட்டு, அந்த பைனான்ஸ் கமிஷனை அமைக்க வேண்டும். இந்த பைனான்ஸ் கமிஷன் பெர்மெனன்ட்டாக இருக்க வேண்டும். ஆண்டுக்காண்டு அதனுடைய சிபாரிசுகளைத் தருவதற்கும், இந்த நிதிக் குழுவிலே எல்லா ஸ்டேட்டுகளினுடைய நிதித் துறையினரை வைத்து கூடிப் பேசி ஆலோசனைகளைத் தரவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஐந்து பேர்களை வைத்து ஒவ்வொரு தடவை கூட்டிப் பேசுவார்கள். அது இரண்டு நாட்களுக்கு நடக்கும். நாம் நடத்துகின்ற கான்பரன்ஸ் மாதிரிதான் இருக்கும். நிதியைப் பெறுகிற, உரிமையைப் பெறுகின்ற ஒரு அமைப்பாக இது அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மற்ற விவரங்களுக்கு இப்போது நான் வர ஆரம்பிக்கிறேன். நமது நிதி நிலை அறிக்கையிலே பல வளர்ச்சித் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் வெற்றி பெற வாழ்த்துகிறேன். அவைகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அரசு இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. சொன்னாலும் கெடும். சொல்லாமையாலும் கெடும் என்று சொல்வார்கள். அதிகமாகச் சொன்னால் அதிகமாகக் கெடும் என்பதாலும், நான் எதையும் கெடுக்க விரும்பவில்லை என்பதனாலே, அதை அப்படியே விட்டு விடுகிறேன். அதே நேரத்தில் இரண்டொன்றைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே குறிப்பாக சில உறுப்பினர்கள் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றிச் சுட்டிக்காட்டிப் பேசி அரசுக்கு ஆலோசனைகள் சொன்னார்கள். அதை விட்டு விடுங்கள், அரசுக்கு அதிகமான நிதி கிடைக்கும் என்றார்கள். அதை வைத்திருப்பதனால் என்ன நன்மை கிடைக்குமோ அதுவும் கிடைக்கவில்லை. அதை வைத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டால் என்ன நன்மை கிடைக்குமோ அதுவும் கிடைக்கவில்லை. ஆக இரண்டு வகையிலும் நாம் நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்துதான் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, இந்த மாநிலம் மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்துகின்றபோது அதனால் ஏற்படுகின்ற இழப்பை, முழுவதையும் மத்திய அரசு தர வேண்டும் என்று கேட்டார்கள், வற்புறுத்தினார்கள், வாதாடினார்கள், தேசிய கவுன்சிலிலே எடுத்துச் சொன்னார்கள். இன்னும் அரசை எச்சரிப்பதுபோல ஒன்றிரண்டு ஆண்டுகள் மதுவிலக்கைத் தளர்த்திக் காட்டினார்கள். மத்திய அரசு இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றவரை எதிர்ப்பாக மதுவிலக்கைத் தளர்த்திக் காட்டினார்கள். பிறகு மதுவிலக்கைத் திருப்பிக் கொண்டு வந்தார்கள். இவ்வளவு வற்புறுத்தலை இந்த 7-வது நிதி ஆணைக் குழு ஏற்றது. இந்த நிதி ஆணைக் குழுவிலே சேப்டர் 9-லே பக்கம் 77-லே



1980 ஜூலை 10] [திரு. ம. சங்கரலிங்கம்]

அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதை ஆராய்ந்தோம். ஏழாவது நிதி ஆணைக் குழு என்ன சொல்கிறது? 'மதுவிலக்குக் கொள்கையால் ஏற்படும் இழப்பினை மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதியாக அளிக்க சிபாரிசு செய்தது'. இந்த நிதி ஆணைக் குழுவிலே அந்தப் பரிந்துரை செய்யப்பட்டது. இப்போது 1983 ஆம் ஆண்டு வரை அவர்கள் அதைத் தரலாம். அந்த வார்த்தையை வாசிக்க விரும்புகிறேன்.

We have taken Prohibition as a National Policy and are recommending grants from the Centre to States to cover losses of excise revenue.

இது நாங்கள் எடுத்து வைத்த கொள்கையினுடைய வெற்றி. அதை இன்றைய அரசு பயன்படுத்தி தமிழ் நாட்டைக் காப்பாற்றுவதற்கு முயல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMAHI TARA CHERIAN : Mr. Chairman, if I remember correctly, Thiru R. Venkataraman, who was at that time in charge of Finance as well as Industries, made it very clear on the floor of the House that they were not going to be rigid in the Prohibition policy and that they were going to allow the various States to take a decision as per their financial conditions and as they wanted. That is very correct in my view.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசு எந்த நெறிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டப்படி நம் குடியரசுத் தலைவருடைய ஆணையின்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழு சிபாரிசு செய்திருக்கிறதோ அந்தச் சிபாரிசை நாம் ஏற்று அதை அமுல் நடத்த வேண்டும் என்று சொல்வதற்கு நமக்கு உரிமையுண்டு. அரசியல் அமைப்புச் சட்டப்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அரசும், நானும், அரசு என்று சொன்னால், அவர்கள் மாத்திரம் அல்ல, நம்மையும் சேர்த்துத்தான் சொல்ல வேண்டும். நாடு என்று சொல்கின்றபோது, நாட்டிலுள்ள 5 கோடி மக்களையும் சேர்த்துத்தான் சொல்கிறோம். எல்லோரும் சேர்ந்து வரவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம் என்னுடைய ஆசையை எடுத்துச் சொல்கிறேன். எனக்கு மாற்றுக் கருத்தாகச் சொன்னவர்களும் ஒத்துழைத்து அரசு நிதி வாங்குவதற்கு துணை செய்ய வேண்டும். அவர்கள் துணையுடன் நிதியைப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : நிதி வாங்குவதிலே மாறுக் கருத்து கிடையாது. மத்திய அரசு மீது குற்றச்சாட்டு சுமத்துவதிலே எந்த அளவுக்கு நியாயம் என்பதுதான் என்னுடைய கருத்து. மத்திய அரசிலிருந்து வாங்குவதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. முழுமையாக நான் மட்டுமல்ல, காங்கிரஸ் பேரியக்கமும் இதில் துணையாக நிற்கிறது. கடந்த காலத்திலேகூட அவ்வாறு அது வழி காட்டியிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : திருமதி தாரா செரியன் கூறியதுபோல, இந்த மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்துவிட்டு அப்புறம் இதற்கு நஷ்ட ஈடு கொடுங்கள் என்று மத்திய சர்க்காரைக் கேட்பதைவிட நாமே மதுவிலக்கைக் கை விட்டுவிட்டு ரூபாய் 180 கோடிக்கு வருமானம் பெறலாம். அங்கே கிடைக்காத இடத்திலே போய் கேட்பதைவிட இங்கே கைவிட்டால் என்ன என்று கேட்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய சொந்தக் கருத்து என்று நினைக்கிறேன். அதிலேயிருந்து நான் மாறுபடுவதிலே எனக்குச் சொந்த உரிமையுண்டு. அது அவர் கட்சியின் கருத்தாகவும் இருக்கலாம், சொந்தக் கருத்தாகவும் இருக்கலாம். அப்படி அது கட்சிக் கருத்து என்று நான் கருதவில்லை. அப்படித்தான் நான் நினைக்கிறேன். அவர் அப்படி நினைக்கிறார். அது கட்சிக் கருத்தே தவிர சொந்தக் கருத்து அல்ல என்று அவர் சொன்னால், அதை நான் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய சொந்தக் கருத்து, இந்த நாடு வாழ, இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் நெறிமுறைப்படி வாழ, ஒழுக்க நெறிப்படி, பண்பட்ட முறையிலே வாழ, எந்தத் துறையிலே இருந்தாலும், எங்கே இருந்தாலும், இந்த நாடு மதுவை விடவேண்டும். அப்போதுதான் இந்த நாடு வளர முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். குடிப்பதுதான் உயர்வு என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அது ஒரு பெரிய ஹை சொசைட்டியினுடைய அடையாளம் என்றுகூட நினைக்கிறார்கள்.

THIRUMATHI TARA CHERIAN : Sir, I want to make the point clear. If we can have total Prohibition, it will be the best thing. Whether it is going to be possible is one question. Secondly, the Government of India have made it very clear that they are not going to give us any subsidy to make good the loss of Revenue. Further. corruption has crept in. Moreover, we have different yardsticks for different people. The people in the Armed Force can drink. The man having a permit can drink. But a poor man cannot drink.



THIRU K. RAMAMOORTHY : Sir, is it a reply on behalf o the Hon. the Finance Minister or a clarification by the hon Member?

THIRUMATHI TARA CHERIAN : It is a clarification. It is my own point of view.

(பிற்பகல் 5-40)

தலைவரவர்களே, நான் விளக்கம்தான் சொல்கிறேன். பொதுவாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால் இதனால் மாநிலத்தின் ரெவின்யூ கீழே போய்க்கொண்டிருக்கிறது. கடவுள் அருளால் டோட்டல் ப்ரொஹிபிஷன் கொண்டு வந்து எல்லோரையும் ஒன்றாக்கினால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மது விலக்கு விஷயத்தில் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தமிழில் பேசினால் நன்றாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இதிலே நான் ஒருமித்த கருத்தை எதிர்பார்ப்பதில் பயனில்லை. எனவே என் கருத்தையும், என் கட்சியின் கருத்தையும் சொல்வதில் தவறில்லை. அந்த நிலையில்தான் சொன்னேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அதை ஆய்ந்து, நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நாம் மது குடிக்க அனுமதி கொடுத்திருக்கிறோம், லைசன்ஸ் கொடுத்திருக்கிறோம். ரூபாய் 25 கொடுத்து லைசன்ஸ் வாங்கிக்கொள்ளலாம், ஆனால் மதுவை எங்கே விற்கச் சொல்லியிருக்கிறோம் ? எங்கே அதை உற்பத்தி செய்யச் சொல்லியிருக்கிறோம் ? ' இல்லிசிட் ' மது குடித்துவிட்டு வரும்போது, போலீஸ் பிடிக்காமல் இருப்பதற்குத்தான் லைசன்ஸ் உபயோகப்படுகிறது. லைசன்ஸ் வைத்திருந்தால் போலீஸ் கேஸ் போட முடியாது. மது குடிப்பதற்கு லைசன்ஸ் கொடுத்த பிறகு மதுவை உற்பத்தி செய்து, நல்ல மதுவைக் கொடுக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யவில்லை. நான் அதைச் செய்யச் சொல்லவில்லை. மது விலக்கை அமல்படுத்தி, மத்திய அரசிடமிருந்து நிதி பெறுங்கள் என்றுதான் சொல்லுகிறேன் . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், ஆளுநர் அவர்கள் ஆட்சி இருந்த காலத்தில், அதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அகற்றப்பட்டு, ஆளுநர் ஆட்சி இருந்தபோது, இதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டது. அதில் எல்லோரும் வந்து பேசி

னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அந்தக் கூட்டத்திற்குப் போய் 25 ரூபாய்க்குப் பெர்மிட் கொடுப்பது சரியானதுதான், அதை நிலையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அது பத்திரிகையில் வந்தது. அதன்மூலம் லைசன்சுக்கு 25 ரூபாய் கொடுப்பது சரிதான் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்பதை அறிந்தேன். இப்போது அந்தக் கருத்தை மாற்ற இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இப்போது பெர்மிட் இருக்கிறது. முழு மதுவிலக்கு அமலில் இருக்கும்போதுகூட நோயாளிகள் டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொண்டு மது குடிக்கலாமென்று இருந்தது. அப்படி பெர்மிட் கொடுப்பதிலே சில விதிகளைத் தளர்த்தினார்கள். டாக்டரிடம் போய் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டாம், அவர்களே மனுச் செய்து வாங்கிக்கொள்ளலாமென்ற அளவிற்குத் தளர்த்தினார்கள். நாங்கள் அதை எதிர்க்கவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முடிவையொட்டி ஆளுநர் அவர்கள் ஆட்சியில் பெர்மிட் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுக்காமல் இருந்தது தவறு, அந்த முடிவை ஆதரிக்கிறோமென்று தீர்மானம் போட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்பியதாக என்னுடைய கவனம். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போன்று, ஆளுநர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்தியது உண்மை. ஆனால் அதனுடைய உட்பொருள் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த அரசாங்கமும் மது விலக்கை ரத்து செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகமும் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று அங்கே வற்புறுத்தவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 25 ரூபாய் கொடுத்து பெர்மிட் வாங்கிக்கொள்ளலாமென்று விதிமுறைகள் வகுத்ததை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேறு கொள்கையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த அளவில், தமிழ்நாட்டில் நீண்ட காலம் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோதும், தோல்வியடைந்த நடைமுறை அது. அடுத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மதுவிலக்கை அமல் நடத்துவதில் தோல்விதான் ஏற்பட்டது. இன்றைக்கும் தோல்வி இருக்கும் நிலைதான் . . .





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் தனித்தனியாக அபிப்பிராயம் சொல்ல இது விவாதமல்ல. அவர்கள் ஏதேனும் தவறாகச் சொன்னால், அதை மறுக்க அல்லது விளக்கம் அளிக்க எழுந்திருக்கலாம் இதில் அபிப்பிராயம் சொல்ல முடியாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** விவாதத்தின்போது சில விளக்கங்கள் கேட்டால் விட்டுக்கொடுக்கலாம். இப்போது மதுவிலக்குபற்றி விவாதம் நடப்பதாக இருந்தால் பரவாயில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மது சப்ஜெக்டே அப்படித்தான் போகும் போலிருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதிநிதி போய் கலந்துகொண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். இதற்கு முன்னாலிருந்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முடிவெடுத்திருக்கிறது, அந்த அரசு 25 ரூபாய் கொடுத்து லைசன்ஸ் வாங்குவதற்கேற்றவாறு சில விதிகளைத் தளர்த்தியிருக்கிறது, மதுவிலக்கை ரத்து செய்யவில்லை, அந்த முடிவை ஆளுநரின் ஆட்சிக் காலத்தில் ஏற்று நடத்த வேண்டும், அதில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசு வந்துதான் அதில் மாற்றம் காண வேண்டுமென்ற எண்ணத்தில் கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் மது விலக்கை ரத்து செய்வதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறதென்று சொல்வது தவறு. இன்னும் தெளிவாகச் சொல்வதானால், நாங்கள் மதுவிலக்கைத் தாற்காலிகமாகத் தளர்த்தியபோது, எங்களுடைய முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தபோது, தெளிவாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதனால் ஏற்படும் இழப்பைப் பெற இன்னின்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது, அதில் எந்த அளவிற்கும் நம்பிக்கை இழக்காமல் அந்தக் கொள்கையை மீண்டும் அமுல் நடத்தப் போகிறது, இப்போது தாற்காலிகமாக தளர்த்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று, தலைவரவர்களே, உங்கள் மூலமாக திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் தொழில் துறையைப் பொறுத்தவரையில், நாம் எதிர் பார்க்கும் முன்னேற்றம் வர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நாம் அனைத்திந்திய அளவில் மூன்றாம் இடத்தில் இருக்

கிறோமென்று பேரவையில் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். தமிழகம் முதலிடத்திலே இருக்கிறது என்று சொன்னாலும் மகிழ்ச்சியே. வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் அளவிற்குத் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதுதான் நம்முடைய திட்டம். அதற்காக இந்த அரசு எடுக்கக்கூடிய முயற்சிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்குமென்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தொழில் வளம் முன்னேறுவதற்கு மிக்க இன்றியமையாதது மின்சாரத்தைப் பெருக்குவதுதான். அதற்காக நிதிநிலை அறிக்கையில், திட்டச் செலவில் பெரும் பகுதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நீர் மின்சாரம் உற்பத்தி செய்திட தொடர்ந்து திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் குறைந்த அளவு மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்கள் தான். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கேட்டுக்கொள்வது இப்போது நிறுவி இருக்கக்கூடிய நீர் மின்சாரத் திட்டங்களுடைய நிறுவனத் திறன் அவ்வளவும் உற்பத்தியாகிறதா என்பதுதான். கோதையாறு மின்சாரத் திட்டத்தின் உற்பத்தித் திறனளவு 112 மெகாவாட். ஆனால் 60, 80 மெகாவாட்டுக்குமேல் அங்கே உற்பத்தி செய்ய முடியவில்லை. இது பெரு நஷ்டம். எந்த அளவிற்கு உற்பத்தி செய்ய வேண்டுமென்று குறியீடு வைத்திருக்கிறோமோ அதற்காக முதலீடு செய்து, உற்பத்தியையும் ஆரம்பித்த பிறகு, அந்தக் குறியீட்டளவை எய்தாமல், இன்னொரு திட்டத்திற்கு முதலீடு செய்வது பெரு நஷ்டமாகும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்தத் துறையிலே புலமை பெற்றவர்கள், படித்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் இதுகுறித்து ஆராய்ந்து, நல்ல நிபுணர் குழுவைப் போட்டு, அவர்களெல்லாம் உட்கார்ந்து, அவரும் உட்கார்ந்து பேசி, ஏன் இந்தத் திட்டங்களில் நிறுவனத் திறன் அளவிற்கு உற்பத்தி செய்யவில்லை என்பதைக் கண்டுபிடித்து, அவை நிறுவனத் திறன் அளவிற்கு உற்பத்தியைச் செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லைன் லாஸை 21 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். இதை இன்னும் குறைக்க வேண்டும். நிலக்கரியிலிருந்து அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். இப்போது நிலக்கரிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. 100 இரயில்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. ஐந்து, ஆறு பேசஞ்சர் ரயில்கள் நிலக்கரிப் பற்றாக்குறையால் நமது மாநிலத்தில் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. வேறு வழியில்லை. எனவே மேலும் சில முறைகளில் மின்சாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம். Necessity is the mother of invention கடலில் இருக்கும் அலையை வைத்து மின்சாரம் எடுக்கலாமென்று சொல்லுகிறார்கள். அலையிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென்று சொல்லுகிறார்கள்.



* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அலையிலிருந்து மின்சாரம் பெறுவதென்பது ஒன்று. கடல் நீரிலுள்ள வெப்ப ஏற்றத்தாழ்வை வைத்து மின்சாரத்தைப் பெறுவது வேறு ஒன்று.

திரு. ம. சங்கரலிங்கம் : 'பாசிபிள் சோர்சஸ்' என்று சொல்வது போன்று, எல்லா வழிகளிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மத்திய அரசு உதவியுடன் திட்டங்களைத் தொடங்குவோம், பிற நாட்டு உதவிகளுடன் தொடங்குவோமென்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மத்திய அரசு 'கிளீயரன்ஸ்' கொடுத்தாகிவிட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : மத்திய அரசு 'கிளீயரன்ஸ்' கொடுத்தாகிவிட்டதென்று அறிவித்தார்கள் . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்தான் 'கிளீயரன்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு 'கிளீயரன்ஸ்' கொடுக்கவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் செல்வாக்கால் 'கிளீயரன்ஸ' கிடைக்குமென்று நம்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை என்று சொல்லுவார்கள். இப்போது பூசாரி வரம் கொடுத்துவிட்டார். சாமி வரம் கொடுக்க வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் அமைச்சரவர்களிடத்தில் கேட்டுக்கொள்வது சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்க முயற்சி எடுக்க வேண்டும். இப்போது சின்னச் சின்ன லேபரட்டரிகளில் உற்பத்தி செய்து காட்டுகிறார்கள். ஆனால் உற்பத்திச் செலவு என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. கேரளாவிடமிருந்து 25 பைசா கொடுத்து மின்சாரம் வாங்குகிறோம். அனல் மின்சாரத்தை 18 பைசாவிற்கு உற்பத்தி செய்கிறோம். அதற்கான நிலக்கரி கிடைக்கவில்லை. சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் 40 பைசாவில் உற்பத்தி செய்தால் பலன் இல்லை. எப்படியாயினும் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி

(பிற்பகல் 5-50)

செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்தத் துறையில் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். கோபர் கியாஸ் என்பதை இப்போது கண்டுபிடித்திருக்

கிறார்கள். ஏற்கெனவே கியாஸுக்குப் பற்றாக்குறை இருக்கிறது. கோபர் கியாஸை பம்பாயில் இருக்கக்கூடிய ஒரு கமிஷன் தலைமையில் தயாரிக்கிறார்கள். அதற்கு 20 பெர்சென்ட் மத்திய அரசு சப்சிடி கொடுக்கிறது. 10 பேர் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்திற்கு இதைப் பயன்படுத்தலாம். ஏழு ஆயிரம் ரூபாய் இதன் விலை. மத்திய அரசு 20 சதவிகிதம் சப்சிடி கொடுக்கும். கோவை விவசாயப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி மேற்கொண்டதன் பயனாக அதேமாதிரி தரமுள்ள வேறு ஒரு கியாசை நிறுவி நான்கு ஆயிரம் ரூபாய் செலவில் செய்து காட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் தனிப்பட்ட முறையில் காதி கமிஷனுக்கும், மத்திய அமைச்சருக்கும் எழுதியிருக்கிறேன். அதையொட்டி கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்தோடும் தொடர்பு கொள்ளுமாறு சொல்லியிருக்கிறேன். இந்த அரசு அதைச் செயல்படுத்த முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசு தொழிற்சாலைகளுக்கு அவற்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்க காலதாமதம் ஆகிறது, காலதாமதம் காட்டுகிறது என்றும், ஏதோ ஏறத்தாழ 100 தொழில்களுக்கு உரிமம் கேட்டு, அவை அங்கே தேங்கியிருப்பதாகவும் சொன்னார்கள். உரிமம் பெற்று அதைக் கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்து கோடி ரூபாய் மூலதனத்துக்கு மேல் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதாக இருந்தால்தான், மத்திய அரசுக்குப் போக வேண்டும். அதற்குக் கீழே மூலதனம் உள்ள தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான உரிமத்தை மாநில அரசே வழங்கலாம் என்று இருக்கிறது. முதலிலே இங்கே தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமென்று உரிமம் கேட்டால், எவ்வளவு காலதாமதம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். முதலில் தம் வீட்டைச் சரிப்படுத்த வேண்டும். பிறகுதான் அடுத்த வீட்டைச் சரிப்படுத்த முயற்சிக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறைய ரப்பர் உற்பத்தியாகிறது. எனக்கும் கொஞ்சம் ரப்பர் கிடைக்கிறது. அங்குள்ள ரப்பர் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் எல்லாரும் சேர்ந்து கூட்டுறவு முறையில் ஒரு ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று அரசிடம் உரிமம் கேட்டோம். மூன்று வருடம் ஆயிற்று. அரசுத் துறைச் செயலாளரை அணுகிக் கேட்டேன். நாங்களே அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலையை அங்கு ஆரம்பிக்க யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். "அப்படியா நல்லது, ரொம்ப சந்தோஷம், நாங்கள் ரப்பரை எல்லாம் தருகிறோம், விரைவிலே ஆரம்பியுங்கள்" என்று சொல்லிவிட்டு வந்தேன். பிறகு பதிலே இல்லை. ஒரு வருடம் கடந்த பிறகு மீண்டும் செயலாளரைக்



கேட்டேன். அப்போது அரசாலே அதை நடத்த முடியாது என்றும், அது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். அதுகுறித்து விரைவிலே பதில் தருகிறோம் என்றும் சொன்னார். ஏழு மாதத்திற்குப் பிறகு மீண்டும் கேட்டேன். விரைவில் முடிவு எடுக்கிறோம் என்று சொன்னார். பிறகு மீண்டும் கேட்டேன். "முடிவு எடுத்துவிட்டோம். நீங்கள் கூட்டுறவுத் துறையில் நடத்துங்கள்" என்று சொன்னார். ஆனால் இதுவரை அவரிடமிருந்து பதில் வரவில்லை. உரிமம் வழங்க இந்த அரசு எவ்வளவு காலதாமதம் செய்கிறது என்பதை நாம் முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும். இதை அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பொது விஷயம்பற்றி மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினால், பதில் எழுதுவதில்லை. ஆனால் அண்டர் செக்கரட்டரியின் பெயரை மேலே எழுதி, கீழே செக்ஷன் ஆபிசர் ஒப்பமிட்டு கடிதம் வரும். அப்படி வந்த கடிதம் என்னுடைய ரூமில் இருக்கிறது. நாங்கள் அமைச்சர்களுக்கு எழுதி, கடிதங்களுக்கு செக்ஷன் ஆபிசர் ஒப்பமிட்டு, பதில் வருவது சரிதானா ? அதே நேரத்தில் நான் இன்னொன்றை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மத்திய ரெயில்வே அமைச்சர் திரு. கமலாபதி திருப்பதிக்கு 16—6—1980 அன்று ரெயிலில் நான்கு சீட்டுகள் ரிசர்வேஷன் தேவைபற்றி ஒரு கடிதம் எழுதினேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருப்பதியா, இல்லை திரிபாதியா ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** தற்பவம், தற்சமம் என்று தமிழில் சொல்வார்கள். அதுபோல் நானும் சொன்னேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நானும் அதைப்பற்றிச் சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாக கடிதங்களைச் செயலாளருக்கு எழுதினால்கூட, அண்டர் செக்கரட்டரியின் சார்பாக செக்ஷன் ஆபிசர் கையெழுத்துப் போட்டுத்தான் பதில் வருகிறது. இனிமேல் நாம் எழுத வேண்டுமென்று சொன்னால், எங்கள் பெர்சனல் கிளார்க்குகள்தான் கையெழுத்துப் போட வேண்டுமா ? மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினால்கூட, அண்டர் செக்கரட்டரியின் சார்பாக செக்ஷன் ஆபிசர் கையெழுத்துப் போட்டுதான் பதில் வருகிறது. அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினால், அமைச்சர்கள் கையெழுத்துப் போட்டு உறுப்பினர்களுக்கு பதில் போட வேண்டும். செக்கரட்டரிக்கு எழுதினால், அண்டர் செக்கரட்டரியாவது

கையெழுத்துப் போட்டுத்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதில் அனுப்ப வேண்டும். இப்படிச் செய்வது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதைக் குறைவான ஒரு காரியம். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: இதைப்பற்றி இந்த அவையிலே நான் ஏற்கெனவே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதற்காக இதை நான் இந்த மன்றத்திற்குச் சொல்கிறேன் என்றால், ரிசர்வேஷன்பற்றி நான் 16—6—1980 அன்று மத்திய ரெயில்வே அமைச்சர் திரு. கமலாபதி திரிபாதி அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு 21—6—1980 ஆம் தேதியே அவரே கையெழுத்துப் போட்டு எனக்கு பதில் எழுதியிருக்கிறார். எவ்வளவு வயதான ஒரு பெரியவர் அவர், எவ்வளவு அக்கறையோடு அவர் உடனே பதில் எழுதியிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

“ Dear Mr. Sankaralingam,

Received your letter and the attention of the Government is on it. I will write to you again about the decision.”

என்று எழுதியிருக்கிறார். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்முடைய அமைச்சர்களுக்கு பொதுவான பிரச்சினைகள்பற்றிக் கடிதம் எழுதினால், அன்டர் செக்கரட்டரியின் சார்பில் செக்ஷன் ஆபீசர் கையெழுத்துப் போட்டு கடிதம் வருகிறது. நாங்களும் அதுபோல் எழுதினால், எங்களுக்கு மதிப்பு அதிகம் என்றோ அல்லது அமைச்சர்கள் அவ்வாறு செய்வதால் அமைச்சர்களுக்கு மதிப்பு அதிகமென்றோ நாங்கள் நினைக்கவில்லை. அதுபோல் அமைச்சர்கள் பதில் எழுதினால், அதனால் அமைச்சர்களுக்கு மதிப்புக் குறைவு ஏதும் வந்து விடாது. ஆனால் இந்த விஷயத்தில் ஒரு வரையறையை அமைச்சர்கள் செய்துகொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதினால், டிராப்ட் போட்டு என்னிடம் ஒப்புதல் வாங்க வேண்டுமென்று அமைச்சர்கள் செயலாளர்களிடம் சொன்னால், அவர்களும் சரியான பதிலை எழுதிக் கொடுத்து அமைச்சர்களிடத்திலிருந்து கையொப்பம் வாங்குவார்கள். இல்லாவிட்டால் இப்போது பொதுவாக அவர்கள் பதில் எழுதிக்கொண்டிருப்பதுமாதிரி “அன்டர் கன்சிடரேஷன்” என்றுதான் எழுதுவார்கள். இதை மாற்றியமைக்க இந்த அரசு முனைய வேண்டும். அப்படி மாற்றியமைத்தால், நான் மூன்று ஆண்டுகளாக பதில் வரவில்லையென்று சொன்னமாதிரி நிலைகள் வராது. இப்போது பதில் எல்லாம் செக்ஷன் ஆபிசர்களிடமிருந்துதான்



வந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு இதை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையின் 19-வது பக்கத்தில் 29-வது பாராவில் நம் மாநிலத்தில் எப்படி தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சற்று முன்பு குறுக்கிட்டுச் சொல்லும்போது ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். அதில் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், மத்திய அரசு இந்தியா முழுவதற்கும் 69 கோடி ரூபாயை தொழில் வளர்ச்சிக்காக உதவித் தொகையாகக் கொடுத்தது. அதில் ரூ. 10 கோடி பெற்று தமிழகம் முதலிடம் பெற்றதாகச் சொன்னார்கள். அதற்காகப் பெருமைப்படுகிறேன். காரணம் அமைச்சர் அவர்கள் சொன்ன தொழில் வளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சிப்காட், இராணிப்பேட்டை, ஓசூர் போன்ற பல இடங்களில் அமைந்துள்ள தொழில்கள், இன்னும் பெரும்பாலான தொழில்கள் அடங்கும். பெரும்பாலான தொழில்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து இவ்வரசும் அந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சேலம் உருக்காலையைப்பற்றி இங்கே எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் ஒரு கருத்தைச் சொன்னார். அவருக்குப் பின்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவருக்கு ஏதோ பதில் சொன்னார். அவருக்கு இவர் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. காரணம் சேலம் உருக்காலை என்பது எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டிய விஷயம். எப்போது அது தொடங்கப்பட்டது, யார் அப்போது முதலமைச்சராக இருந்தது, கல் போடப்பட்டது யாரால், தங்க மாம்பழம் கொடுக்கப்பட்டதே அதை யார் கொண்டு போனார்கள் என்றெல்லாம் சம்பந்தமில்லாமல் பேசினார். சற்று விரிவாகவே சொல்கிறேன். 1970-ஆம் ஆண்டு சேலம் உருக்காலைக்குக் கல் நாட்டினார்கள். அப்போது கலைஞர் முதலமைச்சராக இருந்தார். இப்போது பேரவையிலே சபாநாயகராக இருக்கிற திரு. ராஜாராம் அவர்கள் அப்போது சேலம் எம்.பி. பாரத பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்தான் கல் நாட்டினார்கள். சேலம் மக்கள் சார்பில் அப்போது எம்.பி. யாக இருந்த திரு. ராஜாராம் அவர்கள் தங்க முலாம் பூசிய ஒரு மாம்பழம் கொடுத்தார்கள். வேறு யாரும்

அதைக் கொண்டு போகவில்லை. இப்போது அதுவல்ல பிரச்சினை. கல் போட்டது யார், கொடுத்தது யார், வாங்கியது யார் என்பது அல்ல இப்போது பிரச்சினை. அந்த ஆலை இப்போது எப்படிச் செயல்படுகிறது என்பதுதான் இப்போதைய முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அந்த இரும்பு ஆலை சேலத்தில் வருவதற்கு நானும் பாடுபட்டேன். டில்லிக்கு டெப்யூடேஷன் கூட போனேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : அதற்காக இந்த அவையே மாண்புமிகு தலைவரவர்களுக்கு நன்றி செலுத்துகிறது. இங்கே இருக்க வேண்டியவர்கள் அங்கே போய் உட்கார்ந்திருக்கிறார்கள். இங்கே இருந்திருந்தால் இன்னும் அதுமாதிரி பாடுபட்டிருக்கலாம். (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : வரச் சொன்னால் வந்து விடுகிறேன். (சிரிப்பு).

**திரு. ம. சங்கரலிங்கம்** : இப்போது பாடுபட முடியாத இடத்தில் நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : இங்கே இருப்பதில் ஒன்றும் தொல்லையில்லையே (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம்** : இல்லை, இல்லை. இதைவிட இன்னும் உயர்ந்த இடத்தில் நீங்கள் இருந்துகொண்டு தொண்டு செய்ய வேண்டும். கஞ்சமலையில் உள்ள இரும்பு தாதுவைத் தோண்டி எடுத்து வந்து இரும்பாக்க வேண்டும். அது தான் திட்டம். 1960ஆம் ஆண்டில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டு அதற்கு 26 ஆயிரம் ஏக்கர் வேண்டுமென்று கம்பெனி சொன்னது. 8 ஆயிரம் ஏக்கர் தான் கையகப்படுத்தினார்கள். பிறகு ஜெர்மனி கம்பெனி அதுபோதும் என்று ஆலோசனை சொன்னது. 4 ஆயிரம் ஏக்கர் தான் இது வரை வாங்கியிருக்கிறார்கள். இப்போது தொழிலும் நடைபெறுகிறது. கஞ்சமலையிலிருந்து இரும்பு தாதுவை எடுத்து இரும்பு எடுப்பதற்குப் பதிலாக பொக்காரோ இரும்பு ஆலையிலிருந்து தாது கொண்டு வந்து இரும்புத் தகடாக்கும் முறையில் இப்போது வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இதை நாம் அனுமதிக்கக் கூடாது. இது 150 கோடி ரூபாய்க்கான திட்டம். கல் நாட்டுகிற போது அது 280 கோடி ரூபாய் ஆயிற்று. இப்போது ரூ. 600 கோடி இருந்தாலும் போதாது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று தான் எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. வீரபாண்டி ஆறுமுகம் சொன்னார். அவர்



ழத்தைப்பற்றிச் சொல்லவில்லை. இப்போதெல்லாம் பேசும்போது க பேச்சைக் கொண்டுபோக வேண்டுமோ அங்கே கொண்டு போவதில்லை. எங்கோ போய்க்கொண்டிருக்கிறோம்.

**ாண்புமிகு மேலவைத் தலைவர்** : எங்கே பேசி முடிக்க வேண்டுமோ க பேசி முடிக்கவில்லை என்பதை உறுப்பினருக்கும் ஞாபகப்படுத்து ர். (சிரிப்பு).

**திரு. ம. சங்கரலிங்கம்** : இந்தமாதிரிச் செய்வதால் இப்போது அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். அங்குள்ள கம்பெனிக்கு யார் யார் நிலம் கொடுத்தார்களோ அவர்களை எல்லாம் அங்கே பதிவு செய்து ஒரு சர்ட்டிபிகேட் கொடுத்து அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாட்டினை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்தோம். இப்போது அவர்கள் ஒரு கன்டிஷன் போடுகிறார்கள். இரும்பு ஆலையில் வேலை செய்து 6 மாதம் அனுபவம் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள்

(பிற்பகல் 6.00)

ஆகவே, வட இந்தியாவில் எங்காவது ஒரு கம்பெனியிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வந்து இங்கே பெயர்களைப் பதிவு செய்து அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். இதில் எந்த மாநிலத்துக்காரர்கள் வருகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. இந்த இரும்பாலைத் தொழிலுக்காகத் தங்கள் இடத்தைக் கொடுத்தவர்கள், அந்த வட்டாரத்தில் வேலையில்லாமல் வாழ்கிற இளைஞர்கள் ஆகியோர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதை அரசு கண்காணிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றியும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பற்றியும் கொள்கைக் குறிப்பில் பேசும்போது பேசலாம் என்று அவைகளைத் தற்போது விட்டுவிடுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தேவைகள் என்பதன் அடிப்படையில் சட்ட மன்ற நூலகத்தை, உறுப்பினர்கள் போய் தங்கியிருந்து படிப்பதற்குரிய நூலகமாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், அவரை "நடமாடும் பல்கலைக் கழகம்" என்று அழைப்பார்கள். ஆனால் எங்களைப் போன்ற வர்கள் நூலகத்திற்குள்ளே போனால்தான் பல்கலைக் கழகமாக வர முடியும்.

அண்மையில் நான் 7-வது நிதியாணைக் குழுவின் அறிக்கையைப் படித்து விட்டுத்தான் இப்போது அவையில் பேசினேன். அதைப் பெறுவதற்கு நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், கஷ்டங்களையும் விளக்கினால் அதிசயப் படுவீர்கள். 'செவன்த் பைனான்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டு' தேவை என்று நான் நமது சட்டமன்ற நூலகத்திற்குச் சென்று கேட்டபோது, "இங்கே இருந்தது ஒரே ஒரு காப்பி தான். அதையும் யாரோ எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்" என்று சொல்லிவிட்டார்கள். எடுத்துக்கொண்டு போனவர் யார் என்று கேட்டால், அவர் பெரிய ஆள் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இதை அங்கே பெற முடியாது என்று விட்டுவிட்டேன். சரி வேறு எங்காவது கேட்டுப் பெற முடியுமா என்று முயற்சி செய்து எங்கேயும் கிடைக்காத காரணத்தால், திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களுக்கும் போன் செய்து, "உங்களுக்குத் தெரிந்த தொழில் அதிபரிடமிருந்தாவது கேட்டு வாங்கித் தாருங்கள்" என்று கேட்டேன். அவராலும் முடியாது என்ற நிலையில் ஒரே ஒரு காப்பி பிளானிங் கமிஷனின் மெம்பர்—செகரட்டரி டேபிளில் இருக்கிறது என்று கேள்விப்பட்டு, நேற்று அங்கே போய் அந்தக் காப்பியைக் கேட்டேன். அதைத் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். எனவே அங்கே இரவு 8 மணி வரை இருந்து படித்துவிட்டு வந்து இன்று இங்கே பேசினேன். இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மக்களுடைய வரிப்பணத்தை—பாழாக்கியல்ல—பயன்படுத்தி இங்கே வந்திருந்து பொதுமக்களுக்காகப் பேசிக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் விஷயத்தைப் படித்துத் தெரிந்து, அரசுக்கு ஆலோசனை தருவதற்கான வாய்ப்பு வசதிகள் தரப்பட வேண்டும். அதைச் செய்து தருவதற்காகத்தான் லைப்ரரிகள் இருக்கின்றன. ஆனால் சட்டமன்ற லைப்ரரியில் அந்த வசதிகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அங்கே எத்தனை பேர் போய்ப் படிக்க முடியும்? அங்கே எத்தனை நாற்காலிகள் இருக்கின்றன? உறுப்பினர்களோடு உடன் வரும் நண்பர்களை எங்கே உட்கார வைப்பது? தனியாக ரேபரன்ஸ் செக்ஷன் இருக்கிறது. எம்.ஏ., அரசியல், பொருளாதாரம், சரித்திரம், மற்றும் சோஷியாலஜி எல்லாம் படித்துவிட்டு, பிறகு லைப்ரரி சயன்சும் படித்து விட்டு இங்கே வேலைக்கு வருகிறார்கள். பெரிய ரேபரன்ஸ் செக்ஷன் இருக்கிறது. ஆனால் அங்கே எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? ஒரு பைனான்ஸ் கமிஷனின் ரிப்போர்ட்டு ஒரு காப்பிதான் ஒரு லைப்ரரியல் இருக்க வேண்டுமா? ஒரு 10 காப்பியாவது வாங்கி வைக்கக்கூடாதா? இருந்த ஒரு காப்பியை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். வேறு எந்த லைப்ரரியிலும் அந்தக் காப்பி கிடையாது. இந்த நிலையில் நாம் நமது லைப்ரரியை வைத்துக் கொண்டிருக்கிறோம். இதில் ஒரு பெரிய விஷயம்



என்னவென்றால், இந்த லைப்ரரி உதவி இல்லாமல், புத்தகங்களைப் படிக்காமல், எல்லோரும் பேசுகிற திறமை பெற்றிருக்கிறார்கள். இதைச் சொல்லும்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஒருமுறை எஸ்ஸோ ஆயில் கம்பெனியின் வெள்ளைக்கார மானேஜர் ஒருவரோடு நான் பயணம் செய்ய நேரிட்டது. அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர் சொன்னார், "நான் இந்தியாவை விட்டு என் தாய்நாட்டுக்குப் போகிறபோது, இந்தியாவிலிருந்து அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ் ஓட்டுகிற ஒரு டிரைவரை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கு அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ் பற்றித் தெரியும். நான் பலமுறை பயணம் செய்திருக்கிறேன். ஒவ்வொரு பஸ்ஸும் தினம் 500, 600 மைல் போகிறது. ஆனால் பஸ்ஸில் பிரேக் இருக்காது. நின்றால் ஓடாது, ஓடினால் நிற்காது. அப்படிப்பட்ட பஸ்ஸை வைத்துக்கொண்டு இந்த டிரைவர்கள் வேகமாகக் கொண்டுபோய் நம்மைச் சேர்த்துவிடுகிறார்கள். ஆக இவ்வளவு திறமை வாய்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு போனால் என்னுடைய நாட்டுக்கு இன்னும் உதவியாக இருக்கும் என்று அவர் சொன்னார். அந்த அடிப்படையில் நமது சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்றும் தெரியாமலே பேசுகிற திறமை பெற்றிருக்கிறார்கள். எனவேதான்...

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு தமிழ் எம்.ஏ. படித்த உறுப்பினரே இந்த அளவுக்குப் பொருளாதாரத் திட்டங்களைப்பற்றி எடுத்துச சொன்னதற்காக, அவையில் உள்ள நாங்களெல்லாம்கூட மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இதற்குக் காரணம் நான் பி.ஏ. படிக்கும்போது பொருளாதாரம் படித்திருக்கிறேன். எம்.ஏ.தான் தமிழில் படித்தேன். பி.ஏ.வில் சரித்திரம் மெயின், பொருளாதாரமும் அரசியலும் துணைப்பாடங்கள். இப்போது பி.ஹெச்.டி. செய்து கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதையெல்லாம் சொல்லாமல் இருந்திருந்தால், தமிழுக்கு இன்னும் பெருமையாக இருந்திருக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தமிழுக்கு வருகிற பெருமையை நான் குறைக்க விரும்பவில்லை. இந்தத் துறையில் நான் ஒரு ஆராய்ச்சியையே மேற்கொண்டிருக்கிறேன். கேரளப் பல்கலைக் கழகத்தின் பி.ஹெச்.டி.-க்கு என்னைப் பதிவு செய்துகொண்டு 2 ஆண்டுகளாகின்றன. இன்னும் ஓராண்டிற்குள்

இதற்கான ஆய்வுப் பேப்பர்களைத் தந்துவிடுவேன் என்று நம்புகிறேன். என்னுடைய ஆராய்ச்சி "The contribution of Agriculturists towards the growth and development of Tamil Literature". பற்றியதாகும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இன்று மாலை 7 மணியளவில் காமன்வெல்த் பார்லிமெண்டரி கான்பரன்சையொட்டி செய்திப்படம் ஒன்றைக் காட்டுவதாகச் சொன்னார்கள். அது உண்டா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அவருடைய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சீக்கிரத்தில் நான் பேச்சை முடித்துக்கொள்கிறேன். சில நேரங்களில் நாம் பொருளியலில் ஆழ்ந்துவிடுகிறபோது, நம்மையே மறந்து விடுகிறோம். உரிய நேரத்தில் நம்மை நினைவுபடுத்த வேண்டியது நண்பர்களின் கடமை. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** (திரு. ஜி. சுவாமிநாதனைச் சுட்டிக் காட்டி) இப்படிப்பட்டவர்களை பின்னாலே வைத்துக் கொண்டிருப்பது மிகுந்த கஷ்டமானது. இவர்களையெல்லாம் முன்னே கொண்டு வந்துவிட வேண்டும். (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம் :** எனவே இந்தக் கருத்துக்களையெல்லாம் எங்கள் கட்சியின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இவற்றை மனதில் கொண்டு நல்ல முறையில் நம் மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றிட உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த அவையில் ஒரு கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் பணியாற்றுவதால், எங்கள் கட்சியைப்பற்றி வேறு ஒரு சாரார் சொல்லுகிற கருத்துக்களுக்கு இங்கே பதில் அளிப்பது இந்த அவையின் மரபாக இல்லாவிட்டாலும்கூட, பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாகியிருக்கிறேன். ஒரு கட்சியின் தலைவராகச் செயல்படுவதால், இந்தக் கருத்துக்களை அவையிலே சொல்லுவதற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவை மேலவை, சட்டப் பேரவையிலிருந்து வருகிற சூட்டினைத் தணிக்கிற அவை. காலை முழுவதும் மக்களுக்கு இருக்கிற பல்வேறு பிரச்சினை அனலுக்கு இடையே சிக்கிய அமைச்சர்கள் இங்கே வருகிறபோது



அத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரிய ஆலோசனைகளைச் சொல்லுகிற அவை. இந்த நிலையில் பேரவையிலிருக்கிற நிலையை இங்கே கொண்டு வந்து சேர்க்க சிலர் முயல்வது முறைதானா என்று நாம் சிந்திக்க வேண்டும். அவர்களோடு சேர்ந்த கட்சிக்காரர்களும் அவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வேறு ஒன்றிரண்டு கருத்துக்களுக்கும் பதில் சொல்ல விரும்புகிறேன்.

மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவரான மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு ஆலோசனை என்று சொல்லிவிட்டு, "நீங்கள் அண்மையில் பிராமணர்களை எதிர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினரான நாங்கள் பிராமணர்களை எதிர்க்கவில்லை. ஆனால் பிராமணியத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் ஆதரிக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். 1967-க்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்களும் அதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். திரு. நல்லசிவன் அவர்கள் எவ்வாறு தனிப்பட்ட முதலாளிகளை எதிர்க்காமல் முதலாளித்துவத்தை எதிர்க்கிறாரோ, எப்படி காந்தியடிகள் வெள்ளையர்களை நண்பர்களாக வைத்துக்கொண்டு வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தார்களோ, அதைப்போல் நாங்கள் பிராமண ஆதிக்கத்தை எதிர்க்கிறோம். பிராமணர்கள்தான் இந்த பிராமணியத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல. அவர்களைக் காட்டிலும் கூடுதலாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், நானும் திரு. நல்லசிவன் அவர்களும் சார்ந்திருக்கிற திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சைவ வேளாளர்கள் ஆவார்கள். அவர்கள் பிராமணர்களுக்கு மேலே இருப்பவர்கள். பிராமணர்கள் 1½ மணிக்கு ஒரு முறை பூசை செய்தால், இவர்கள் 1 மணிக்கு ஒரு முறை பூசை செய்வார்கள். இவர்களுக்கு மேலாக இவர்களோடு இந்த வகையில் போட்டி போடுகிறவர்கள் முதலியார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியானால் நாம் எல்லாவற்றையும் சேர்த்து எதிர்ப்போமே !

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த முதலியார். மாண்புமிகு உறுப்பினர் எல்லா மாவட்டத்தையும் சார்ந்த முதலியார்களையும் குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1980 ஜூலை 10

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு விதிவிலக்காகக் கேட்டால் விட்டுவிடலாம். நான் எதற்குச் சொல்லுகிறேன் என்றால், பிராமணியம் என்பதற்கு இலக்கணம் இருக்கிறது. அதற்கு ஒரு குறும்புத் தனம் இருக்கிறது. பிரித்து வைக்கும் வேலை செய்யும் குணம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது அவையானதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "குறும்புத்தனம்" என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொள்வதோடு அப்படிப்பட்ட வார்த்தைகளைக் கூடுமானவரை நீக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் நானே மாற்றிக் கொள்கிறேன். அதை எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, எந்தத் தனிப்பட்டவரையும், எந்தத் தனிப்பட்ட ஜாதியையும் எதிர்த்து வளருகிற மரபுடைய கட்சியல்ல திராவிட முன்னேற்றக் கழகம் என்று திரு. நல்லசிவன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதோடு, இதுவரை இந்த அரசுக்குத் தொகுத்துச் சொன்னவற்றில் ஒன்றை மட்டும் வலியுறுத்த விரும்பு கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை உபரி பட்ஜெட் என்று கொடுக்கப்பட் டிருக்கிறது. அதாவது 15.39 கோடி ரூபாய் உபரியுள்ள பட்ஜெட் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் இது ஒரு உபரி பட்ஜெட் அல்ல. உபரி பட்ஜெட்டாக இருப்பதும் தமிழ் நாட்டிற்கு நல்லதல்ல. நான் ஏற் கெனவே சொன்னதைப்போல் நிதியாணைக் குழு தனது கைடு லைன்சில் "எங்கே நிதிப்பற்றாக்குறை ஏற்படுகிறதோ அங்கே ஈடு செய்யப்படும்" என்று சொல்லியிருப்பதால், விவசாயக் கடன்களை ரத்து செய்வதற்கு 42 கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே ஒதுக்கீடு செய்துவிட்டு, இதை ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 130 விலையாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு சிபாரிசு செய்கிறது. சென்ற ஆண்டு 62 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 69 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ய இருப்பதாகவும் திட்டமிடப்பட்டிருக் கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 69 லட்சம் டன் அரிசி என்றால் 130 லட்சம் டன்னுக்கு மேல் நெல் உற்பத்தி செய்தாக வேண்டும். எனவே இந்த உற்பத்தியில் பாதி அளவுக்காவது மாநில நிதியிலிருந்து ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 130 விலை கொடுக்க வழி வகை செய்து இந்த நிதிநிலை அறிக்கையை உண்மையிலேயே பற்றாக்குறை பட்ஜெட்டாகக் காட்டி இதற்காக மத்திய அரசிலிருந்து நிதி பெற ஆலோசனை செய்யுங்கள். வீண் டம்பம் நமக்குத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.



[திரு. ம. சங்கரலிங்கம்]

(பிற்பகல் 6-10)

இயல்பாகவே உலகம் முழுவதும் ஒரு தத்துவம் இருக்கிறது. ரஷ்ய வானாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி, சைனாவானாலும் சரி, ஒ கெமிக்கலோடு இன்னொரு ஆசிட் சேர்த்தால் அதிலிருந்து உற்பத்தியாக கூடிய பொருள் ஒன்றாகத்தான் இருக்கும். அதே மாதிரிதான் பொருள தாரச் சட்டமும். பொருளாதாரச் சட்டம் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கு சைனாவுக்கும் ஒன்றுதான். கம்யூனிஸ்ட் பொருளாதாரத் தத்துவம் வே லன்றி, நல்ல முறையில் வளர்ந்து அதிகக் கல்வி பெற்ற மக்கள் இருப்ப கேரளா மாநிலம். எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் அங்கே அதிகமாக இருக் றார்கள். சப்ளை ரொம்ப இருக்கிறது, ஆனால் டிமாண்ட் இல்லை. கமு பிலே ஒரு கல்லூரி. அங்கே கேரளாவிலிருந்து வந்த ஒருவர் விரிவுரையாள ராக இருக்கிறார். நான் அங்கே போயிருந்தபோது, "ஏன் இங்கே வந்தீர்கள் கேரளாவில் வேலை கிடைக்கவில்லையா?" என்றேன். அங்கே கிடைக்க வில்லை, அதனால்தான் வந்தேன் என்றார். பிறகு எப்படி இங்கே வேலை கிடைத்தது என்று கேட்டேன். "பத்தாயிரம் ரூபாய் கொடுத்தேன், வேலை கிடைத்தது. அங்கே இருபதாயிரம் ரூபாய் கொடுத்தால்தான், கிடைக்கும்" என்றார். அந்த அளவிற்கு அங்கே டிமாண்ட் அதிகம். இங்கேயுள்ள மானேஜரைக் கூப்பிட்டுக் கேட்டால், "எங்களுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. முதன் முதலில் சொன்னவர் இவர்தான், ஆகவே வாங்கினேன்" என்று சொன்னார். சப்ளை கூடியாகிவிட்டதென்றால் இந்த மாநிலத்தில் டிமாண்ட் உண்டாகும் என்பதுதான் பொருளாதாரச் சட்டம்.

அதைப்போலவே வறுமை மிகுந்துவிட்டால் வர வேண்டியது புரட்சி. ஆனால் நமது நாட்டிலே—தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும்—தமிழ்ப் புலவர்கள் எல்லோரும் சேர்ந்து வறுமையில் செம்மையைக் காண வேண்டு மென்று கூறியிருக்கிறார்கள். வறுமையில் புரட்சிதான் வரும். ஆனால் நாம் வறுமையில் செம்மையை உண்டாக்கிவிட்டோம். விவசாயிகள் கட்ட வேண்டிய 45 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்துவிட்டு, மேலும் 15 கோடி ரூபாய் தக்காவிக் கடனையும் தள்ளுபடி செய்துவிட்டு— ஆக மொத்தம் 60 கோடி ரூபாய் அளவுக்குப் பற்றாக் குறை வைத்துக் கொண்டு, 15 கோடி ரூபாய் உபரியாக இருக்கிறது என்று சொன்னால், அது வறுமையில் செம்மையைக் காட்டுவதைப் போலத்தான் இருக்கிறது. இப்படி நாட்டுக்குத் தவறான வழியைக் காட்டக்கூடாது என்று சொல்லி, எதிர்க் கட்சி என்ற நிலையிலே இந்த அரசுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று நான் என் கருத்துக்களைக் கூறினேனே தவிர, வேறு ஒன்று மல்ல என்று சொல்லி அமைகிறேன்.

5. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் மானியக் கோரிக்கைகள் குறித்து வைக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து.

THIRU G. SWAMINATHAN : Sir, I rise on a point of order. Some books have been placed on the table of the House. Any document placed on the table of the House is a public document. I find that on a document with the title "General Sales Tax and other Taxes" and on some other documents that have been placed here, it has been mentioned as "Circulated in advance. Should not be published in any manner till the demand is taken up for discussion in the Legislative Assembly". I wish to state that it is not in conformity with the rules of the Council or with the procedure that is being followed in Parliament.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவையின் முன்னவர் என்ன சொல்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :* தலைவர் அவர்களே, அந்த மானியக் கோரிக்கைகள் சட்டப் பேரவையில் நாளை காலையில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்புவது வழக்கம். உறுப்பினர்களுடைய பார்வைக்காக மட்டுமே அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே வேறுவிதமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவைக்கு அனுப்பிவிட்டால், பொது மக்களுக்குக் கொடுத்ததாக ஆகிவிட்டது. வெளியே போகக்கூடாது என்று தடை போட்டிருக்கிறதென்றால், ஏன் என்று கேட்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN : Because it is a public document it is entered in the proceedings of the House. If it is placed on the table of the House, on the very same day it has to be entered in the Proceedings of the House and then it becomes a public document. Immediately thereafter, anybody will be able to take it from the Library also. That is the procedure that is being followed as per the rules and conventions that are being followed in India and elsewhere. What has been done now is that they place a document on the table of the House but say that it is confidential and that it should not be circulated or published. I think that it is against the rules of the Council and also against the rules of Parliament.



Secondly, any such instructions should not be given on the booklets without the permission of the Chair. Such instructions have been given now. I think that it is not in conformity with the rules of the House.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* மேலவைத் தலைவர் அவர்களே, மறுநாள் விவாதத்திற்கு ஏதுவாக இருக்கின்ற வகையிலே இந்தப் புத்தகங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதல் நாளே தரப்படுவது வழக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதைப்போல், இந்த அவையில் வைத்தால், அது 'பப்ளிக் டாக்குமெண்ட்'தான். ஆனால் அதே நேரத்தில் அந்தப் புத்தகங்களின் மேல், "அவையில் பேசப்படுகிறவரை அவற்றை வெளியிடக்கூடாது" என்று சீல் போடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மட்டும் படிக்கத் தரப்படுகிறது. அதன் மூலமாக பத்திரிகைகளில் வெளியிடாமல் இருப்பார்கள்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லுவதை எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னால், அவை ஆரம்பிக்கும் நேரத்தில்தான் கொடுக்க முடியும், அப்போது "படிக்க அவகாசம் தர வேண்டாமா? அவகாசம் இல்லாமல் எப்படி வாதிக்க முடியும்?" என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்பார்கள். இது பத்திரிகைகளுக்காகப் பண்ணுவது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : This practice has been followed for long.

THIRU G. SWAMINATHAN : Sir, I would only read what is given in page 845 of the book "Practice and Procedure of Parliament". It says :

"When a paper is laid on the Table, it becomes public and a part of the permanent record of the House. The paper is placed in the Library and in the printed debates. It becomes privileged and accordingly no person is liable to any proceedings in respect of the publication of such paper or document".

This is what is said in that book and that is the practice which is being followed. My personal view is that the kind of instructions that it is confidential till it is discussed by the Legislative Assembly should not be there. If somebody publishes the contents in the papers, we cannot take any action because the document becomes a public document on the day and at the hour when it is placed on the table of the House.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேற்கொண்டு இதுபோல் நடக்காமலிருக்க ஆலோசனை செய்யலாம். இதற்காக இந்த நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, மேலவைக் கூட்டம் இன்று முடிகிறது. உறுப்பினர்கள் வெளியூர் செல்லக்கூடும் என்பதைக் கருதிக் கூட இப்படிச் செய்திருக்கலாம். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

## 4. 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதங்களில் இதுவரை இந்த அவையில் 32 பேர் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவ்வளவு பேர்தான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவையினுடைய மொத்த இடங்களின் எண்ணிக்கை 63. இதிலே நிரப்பப்படாமல் இருக்கின்ற இடங்கள் 22. ஆகவே உறுப்பினர்களாக இருப்பவர்களுடைய எண்ணிக்கை 41. இதிலே தங்களையும், அமைச்சர்கள் நான்கு பேர்களையும் சேர்த்தால் 5 பேர். இதைத் தவிர பேசியவர்கள் 32 பேர்கள், பேசாதவர்கள் 4 பேர்கள். அந்த 4 பேர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவே எதிர்த்தரப்பிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், ஒருவர்கூட விடாமல், தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பை இந்த நிதிநிலை அறிக்கை விவாதம் பெற்றிருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

தமிழகத்தினுடைய நிதி ஆதாரங்களை, இருக்கின்ற நிதி ஆதாரங்களை, எதிர்பார்க்கிற நிதி ஆதாரங்களை அடிப்படையாக வைத்து தமிழகத்தினுடைய மேம்பாட்டைக் கருதியும், தமிழர்களுடைய நிலை மாற வேண்டுமென்ற நிலையைக் கருதியும், ஏழையெளிய மக்களுடைய துயர், தொல்லைகள் நீக்கப்பட வேண்டுமென்று கருதியும், குறிப்பாக சிற்றூர் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்களுடைய துயர், தொல்லைகள் அகற்றப்பட வேண்டுமென்று கருதியும், எந்த அளவுக்கு ஏற்றம் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்வதில் இந்த நிதிநிலை அறிக்கை தரப்பட்டிருக்கிறது.



நிதிநிலை அறிக்கை மீது இந்த அவையில் பேசியவர்கள் அத்தனை பேரும் தங்களுடைய கருத்தை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த அவையில் பரவலாக பாராட்டுதலையும், ஆதரவையும் இந்த நிதிநிலை அறிக்கை பெற்றிருக்கிறது என்பதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சி. இதை சில பேர் வரவேற்றிருக்கிறார்கள். சிலபேர் பாராட்டியிருக்கிறார்கள். சில பேர் வாழ்த்துரையை வழங்கியிருக்கிறார்கள். சில பேர் கருத்துரையை வழங்கியிருக்கிறார்கள். சில பேர், செய்ததைச் சுட்டிக்காட்டி, செய்ய வேண்டியதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சில பேர் செய்தக்க இவை, செய்தக்க இவையல்ல என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே இவைகள் அத்தனையும் எங்களுக்குப் பயன்படுகிற அளவிற்கு மிகச் சிறப்பாக அமையும் என்ற முறையிலே பாராட்டி, நல்ல எண்ணத்தோடு கருத்துக்களை வழங்கிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை, மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலத்தினுடைய நிதிநிலையைப் பெருக்க வேண்டும் என்பதிலும், மாநில நிலைமைகள் சீர்பட்டு, செம்மைப்பட்டு விளங்க வேண்டுமென்பதிலும் இந்த அவையில் கூறுகிற அத்தனை பேரும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணலாம். அத்தனை பேரும் வரவேற்றிருக்கிறார்கள், பாராட்டியிருக்கிறார்கள், கருத்துரை வழங்கியிருக்கிறார்கள் என்று முதலில் சொன்னாலும்,

(பிற்பகல் 6-20)

ஒருவர்தான் "கானல் நீர் பட்ஜெட்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மற்றொருவர், "ஏமாற்றுகிற பட்ஜெட்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மற்றொருவர் "இதிலே ஒன்றுமேயில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். நிதி நிலை அறிக்கையைப் புரட்டிப் பார்த்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள், அத்திப் பழத்தைப் புட்டுப் பார்த்தால் அதிலே அத்தனையும் சொத்தை என்பதைப் போல "சொத்தை பட்ஜெட்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே அத்திப் பழத்தில் சொத்தை இருக்கலாம். கூட "செத்ததை"—சொத்து என்று சொல்லப்படுகிற சொத்தைக் காணலாம். சொத்துக்களைக் காணலாம். நாட்டினுடைய சொத்துடைமைகளைக் காணலாம். அத்தனையையும் தெரிவிக்கிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆக நெருங்கினால் இது கானல் நீர்; நெருங்கினால் கானல் நீர் மாதிரி தண்ணீர் இல்லை; கானல் நீரிலே தண்ணீர் எப்படி இருக்காதோ அந்த மாதிரி இதிலே எதுவுமே இல்லை என்ற கருத்தி னுடைய அடிப்படையிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன்

அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, அமைச்சரவையை வாழ்த்தி, அமைச்சர்களையும் இந்த அரசையும் வாழ்த்தி, தன்னுடைய உரையை மிகச் சிறப்பாகத் தொடங்கியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் நேற்று பேசும்போது, இந்த நிதிநிலை அறிக்கையை "நான் பாராட்டவும் மாட்டேன், எதிர்க்கவும் மாட்டேன்" என்றார்கள். நான் பாராட்டை எதிர்பார்க்க முடியாதவன். நான் அதைப்பற்றி வருத்தப் படவில்லை. அவர்கள் எதிர்க்கவில்லை என்று சொன்னால், ஆதரிக்கிறேன் என்று சொன்னால், நான் அதற்காக மகிழ்கிறேன். பாராட்டவும் வேண்டாம், எதிர்க்கவும் வேண்டாம், ஆதரித்தால் போதும் என்ற அளவுக்குத்தான் அத்தனை பேருடைய ஆதரவையும் நான் கோரியிருந்தேன். அந்த அளவுக்கு சிறப்பான ஆதரவையும், மற்றவற்றையும் பலரும் இங்கே தந்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்து பலர் பல கருத்துக்களை எடுத்துச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் புது வரி போடவில்லை என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துச் சொன்னார்கள். புது வரி போட்டுத்தான் தீர வேண்டும், அதுதான் நல்ல பட்ஜெட் என்பதற்கு அறிகுறி என்றும் வற்புறுத்தி எடுத்துச் சொன்னார்கள். பற்றாக்குறை பட்ஜெட் போடுவதா அல்லது உபரி பட்ஜெட் போடுவதா என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

நிதி நிலை அறிக்கையிலே உபரி நிதிநிலை அறிக்கையும் வருவதுண்டு, பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையும் வருவதுண்டு. பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை வெளியிடுவது கடினமானதல்ல. ரொம்ப சுலபமான ஒன்றுதான். உபரி நிதி நிலை அறிக்கை வெளியிடுவதானால்தான் அதிக மான கஷ்டங்கள் எல்லாம் வரும். எவ்வளவு வேண்டுமானாலும் பற்றாக் குறையை நாம் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படை யிலே பற்றாக்குறை பட்ஜெட் போடலாம். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே புதிய வரிகள் போடாத அளவுக்கு உபரி பட்ஜெட்டாக இருக்கின்ற நிலைமை இப்போது இருக்கின்றது. இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் நாம் போட்டிருக்கின்ற திட்டங்களை, நிறைவேற்றுவதில் ஏற் படுகின்ற இன்னல்களையும், கஷ்டங்களையும் இழப்புகளையும் அவ்வப்போது சரிப்படுத்தி, சீர்படுத்திகொண்டு வருவதற்கு வேண்டிய சூழ்நிலை நமது



சட்டத்திலே இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன். கூடுதலான புது வரிகள் போடப்படவில்லை என்று கருதுவதனாலேயே இது சாதாரணமான பட்ஜெட் என்று ஆகிவிடாது.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது குறிப் பிட்டார்கள். அண்மையிலே மத்திய அரசு போட்ட நிதிநிலை அறிக்கையின் மூலமாக அவர்கள் பெட்ரோல், டீசல் ஆயில், கெரோசின் ஆயில் மற்றவை களுக்குக் கட்டணங்களை உயர்த்தியதன் காரணமாகவும், வேறு பல வகை களிலேயும், ரெயில் கட்டணத்தை உயர்த்தியதன் மூலமும், புள்ளிவிவரங்கள் போட்டு, ரூ. 3,500 கோடிக்குக் கிடைக்கிறது என்று சொன்னார்கள். புதிய வரிகள் காரணமாகவும், கட்டணங்களை உயர்த்தியதன் காரணமாகவும் கிட்டத் தட்ட மக்கள் அந்தச் சுமையைத் தாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய மாநிலம் ரூ. 3,500 கோடியிலே கிட்டத்தட்ட ஏறத்தாழ ரூ. 350 கோடிக்குத் தாங்க வேண்டிய நிலைமை ஏற்படும். நமது மக்கள் ரூ. 350 கோடிக்குத் தாங்க வேண்டிய நிலையில் இருக்கும்போது, நாமும் மேற் கொண்டு பல வரிகளைப் போட்டால், அது அவர்களுக்கு அதிகமான சுமையை ஏற்றிவிடும் என்று விட்டுவிட்டோம். இந்தத் தடவை விட்டுவிட் டோம். அடுத்த தடவையாவது மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் சொன்ன சீரிய யோசனையைக் கடைப்பிடித்து, அவருடைய யோசனையையும் மற்றவைகளையும் பயன்படுத்தி, நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம். அதற்கான வழிவகைகளை பிறகு காணலாம், இப்போது மேலும் சுமையை அதிகமாக்க வேண்டாம் என்ற எண்ணத்தின் அடிப்படை யிலேதான் இப்படி வெளியிட்டிருக்கிறோம். அத்திப் பழத்தைப் பிரித்தால் அதிலே ஒன்றுமே இல்லை, சொத்தை, கானல் நீர் இதுபோன்று உதாரணம் சொல்லி பேசினார்கள் என்பதற்காக நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படு கிறேன்.

16 கோடி ரூபாய் அளவுக்குத் தக்காவிக் கடன்கள் நீக்கம். ரூபாய் 42 கோடிக்கு சிறிய விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் நீக்கம். சைக்கிள் களுக்கு விற்பனை வரி குறைப்பு. குடிசைத் தொழில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கான வரி அறவே நீக்கம். புதிய பொருள்கள் பலவற்றிற்கு பல முனை வரியாக இருந்தது ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. ரூ. 383 கோடியிலிருந்து ரூ. 436 கோடிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசு திட்டக் குழு ரூ. 383 கோடிக்குத் தான் இந்த ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் முதலாவது ஆண்டுக்காக நம்முடைய திட்டத்திற்கு நிதிக் குழு நமக்கு

அறிவித்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய நன்மையைக் கருதியும், இங்கு இருக்கின்ற நிதி ஆதாரத்தையும் பொறுத்து, திட்டச் செலவுகளை நாம் கூடுதலாகக் காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இந்த மாநிலத்தினுடைய தனி முயற்சியின் அடிப்படையிலே திட்டக் குழு ரூ. 383 கோடிக்குத்தான் இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்தபோதிலும் கூட நாம் 436 கோடி ரூபாய் அளவுக்கு இந்த ஆண்டுத் திட்டத்திலே உயர்த்திக் காட்டியிருக்கின்ற தன்மைகளைப் பார்க்கிறோம். இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியை, வளத்தை கருத்தில் கொண்டு இதைச் செய்கிறோம்.

மின் உற்பத்தி முதலீடுக்கு, எல்லா உறுப்பினர்களும் பாராட்டிக் கேட்டதற்கு இணங்க, ரூ. 156 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியை 84 லட்சம் டன்னிலிருந்து 89 லட்சம் டன்களாக உயர்த்துவதற்கான கூறுபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தென்னை வளர்ப்புக்கான சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. உழவு மாடுகளுக்கு வேண்டிய காப்புறுதித் திட்டம். சுவீடன் நாட்டு உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம். மீனவர் குடியிருப்புத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வசதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசன வசதித் திட்டங்களுக்கு ரூ. 32.74 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பின் தங்கிய பகுதிகள் மேம்பாட்டுக்கு அதன் வளர்ச்சிக்கு நிதி உதவி, பட்டுப்பூச்சி வளர்ச்சிக்காக ரூ. 265 லட்சம். தீப்பெட்டித் தொழில் வளர்ச்சிக்கு சிறப்பு முயற்சிகள். பேருந்து செல்லும் கிராமப்புற சாலைகளை அரசு மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கம் ரூ. 6 கோடியிலிருந்து இந்த ஆண்டு 10 கோடி ரூபாய்க்கு உயர்த்துவது என்று இருக்கிறது. 1,500 மக்கள் தொகை கொண்ட இடங்களுக்கு இணைப்புச் சாலைகள் தர நிதி ஒதுக்கம். அது ரூ. 3 கோடியாக இருந்தது. அதை இரட்டிப்பாக ஆக்கி ரூபாய் 6 கோடியாக ஆக்கியிருக்கிறோம். புதிய பேருந்துகள் 1,800 விட திட்டமிடப்பட்டிருக்கிறது. கூடுதலாக 150 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவது. அதன் மூலம் ஆங்காங்கு வாழ்கின்ற மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே நிதி அளித்தல். கிராமப் பள்ளிகளுக்கு இந்த ஆண்டு கட்டிடம் கட்ட மட்டும் 5.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். 3 புதிய பாலிடெக்னிக்குகள் இந்த ஆண்டு பெறுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டு, அதைத் தொடங்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. குழந்தைகளின் நோய் தடுப்புக்கான மருத்துவ வசதிகளை விரிவாக்குவது. அதற்கான சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டிருப்பது. குடிநீர் வடிகால் வாரியப் பணிகளுக்கு ரூ. 6.8 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது. கிராம வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்ற இருப்பது. புதிய பல்கலைக் கழகங்கள் இரண்டு





உருவாக்குவது. புதிய தமிழ் பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நிலைமைகள் இருக்கின்றன. கிராமப்புற வீடு கட்டும் திட்டம். இதில் தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும்போது. அவர்களுக்கு மானியமாக ரூ. 600 கொடுத்தோம். அதையே இந்த ஆண்டு முதல் ஆயிரம் ரூபாயாகக் கொடுக்கிறோம். 30 ஆயிரம் வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அந்த அடிப்படையில் தருவதற்கு திட்டத்தை மேற்கொள்கிறோம். வேலைக்கு உணவு, வேலை வாய்ப்புத் திட்டங்களை விரிவுபடுத்துதல். அதற்கு என்று ஒரு லட்சம் டன் உயர்த்தியிருக்கிறோம். அதன் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்று 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி தருகின்ற அளவுக்கு, 16,200 பேர்களுக்குப் பயிற்சி தரும் திட்டத்தை மேற்கொள்கிறோம். பட்டினிச் சாவு ஏற்படுவதைத் தடுக்கும் திட்டம். குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் மருந்துகள், சத்துணவு மருத்துவ மனைகளில் வழங்கும் திட்டம். கிராமங்களில் மகளிர்க்கு தனி கழிப்பிடங்கள் கட்டும் திட்டம். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இலவச உதவி. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்கள் நலன்களுக்காக சிறப்புத் திட்டங்கள். அலுவலர்கள் வீட்டுவசதி நலன் பெறுவதற்காக ரூ. 207 லட்சம். காவலர் வீட்டு வசதி பெருக்கத்திற்காக ரூ. 332 லட்சம். புதிய துணைப் பதிவாளர்கள் அலுவலகங்கள், நீதி மன்றங்கள், காவல் நிலையங்கள், கிளை கருவூலங்கள் ஏற்படுத்துவது போன்று எத்தனையோ இருக்கின்றன. இதை சொத்தை என்று சொல்ல முடியாது என்ற காரணத்தினாலேதான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

எதுவுமே இல்லை இந்த நிதிநிலை அறிக்கையில் என்று சொல்கிறார்கள். எல்லாம் இருக்கின்றன. இன்னமும் வேண்டுமென்று கேட்க மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. வேண்டுமென்று கேட்கின்றபோது, இருக்கின்ற நிதிநிலைகள் இவ்வளவு, இதிலே இவ்வளவு செலவு இருக்கின்றது என்று சொல்கின்றோம். இதிலே இந்த முயற்சியிலே ஈடுபடுங்கள், இந்த முறையில் வரியைப் பெருக்கினால், அதைச் செய்யலாம் என்று அங்கத்தினர்கள் சொல்லலாம். அப்படிச் சொல்லியிருப்பார்களானால் மிகவும் நல்லது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம், இயற்றலையும் எனக்குச் சொல்லி, ஈட்டலையும் எனக்குச் சொல்லி, அதைக் காப்பதையும் சொல்லி அதைச் செலவழிக்கின்ற வழியையும் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச்

சொல்லியிருந்தால், மேற்கொண்டு விரைவாக நம்முடைய தேவைகளை நிறை
வேற்ற முடியும். தேவைகள் எத்தனையோ அத்தனையையும் நிதி நிலை
அறிக்கை நிறைவேற்றிவிட்டது என்று நான் சொல்லவில்லை.

தமிழகத்திலே இருக்கின்ற கஷ்ட நஷ்டங்கள், இன்னல்கள், இழப்புக்கள்
ஆகிய அத்தனையையும் தீர்க்கின்ற தன்மையில் இந்த நிதி நிலை அறிக்கை
அமைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. சென்ற ஆண்டு இருந்த நிதி
நிலை அறிக்கையிலிருந்து, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை உயர்த்து
வதன் மூலம், மேம்பாடு செய்வதன் மூலம், அதிகமான அளவுக்கு நன்மை
களைச் செய்ய முடியும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் இந்தக்
கருத்துக்களையெல்லாம் நான் எடுத்து வழங்கியிருக்கிறேன். அதிலேயே
பலர் சீரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே குறை
களே இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. அந்தக் குறைகளைக்
குறைக்கக் கடமைப்பட்டிருக்கிறது அரசு. பல சீரிய கருத்துக்களை பலரும்

(பிற்பகல் 6-30)

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறைகள் இல்லையென்று சொல்ல
வில்லை. குறைகளை நீக்கக் கடமைப்பட்டிருக்கிறது அரசு. அதிகாரிகள்,
அலுவலாளர்கள் அப்படியே இருக்கிற நிலைமையில்தான் நாம் ஆட்சி நடத்த
வேண்டும். ஆட்சி மாறும், ஆனால் அதிகாரிகள் மாறமாட்டார்கள்.
Men may come; men may go. but I go on for ever என்று டென்னிசன்
ஒரு அழகான ஆங்கிலக் கவிதை பாடினான். சிற்றாறுகள் பாடுகின்றனவாம்,
மனிதர்கள் வருவார்கள், மனிதர்கள் போவார்கள், நாம் ஓடிக்கொண்டே இருப்
போமென்று. அதுபோல Ministry may come; ministry may go; but we
go on for ever என்று சொல்லத்தக்க அளவிற்கு ஆட்சி வரும் ஆட்சி மாறும்,
ஆனால் அதிகாரிகள், மற்றவர்கள் அப்படியேதான் இருப்பார்கள். அவர்
களை வைத்துக்கொண்டு நாம் பணியாற்றுகின்ற நேரத்தில், அவர்கள் சிறப்
பான பணிகளைச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் இருக்கிற சூழ்நிலையை ஒப்பிட்டுப்
பார்த்தால் தெரியும். தனிப்பட்ட முறையில் நான் எதையும் சுட்டிக் காட்ட
வில்லை. 22 மாநிலங்களில் தமிழ்நாட்டின் நிலை உயர்ந்துதான் காணப்படு
கிறது. தமிழ்நாட்டில் குறைபாடுகள் இல்லையென்று சொல்லவில்லை.
இந்தியாவிலுள்ள மற்ற 21 மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது,
தமிழகத்திலே நிர்வாகம் மிகச் சிறந்ததாக இருக்கிற நிலையை இன்றைக்கும்
தமிழகம் பெற்றிருக்கிறது. ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்து, அதைத்



தொடர்ந்து எந்த அமைச்சரவை இருந்த காலத்திலும், தமிழ் நாட்டு நிர்
வாகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறந்ததாகத்
தான் இருந்திருக்கிறது. காவல் துறையை எடுத்துக்கொண்டாலும், அப்படித்
தான். தமிழ் நாடு காவல் துறையில் சிலபல குறைபாடுகள் இருக்கலாம்.
ஏசுநாதர் நம்பிக்கைக்குரியவர்கள் என்று வைத்துக்கொண்டிருந்த 12 பேர்
களிலே, அவரையே காட்டிக் கொடுக்கும் அளவிற்கு ஒருவர் இருந்திருக்கிறார்
என்று சொல்லும்போது, ஏசுநாதருக்கே அந்தக் கதி என்று சொல்லும்போது,
ஏமாளிகளாக இருக்கிற நமக்கு என்ன நிலைமை ஏற்படுமென்பதைச் சொல்ல
வேண்டிய அவசியமில்லை. மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது,
நம்முடைய மாநிலத்தில் நிர்வாகம் சிறந்த முறையில் இருக்கிறது.
தமிழகத்தை அமெரிக்காவோடு அல்லது ஜெர்மனியோடு அல்லது ரஷ்யாவோடு
ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது வேறு. ஆனால் இந்தியாவிலுள்ள மற்ற
மாநிலங்களோடு தமிழ் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்த வகையிலே
பார்த்தால், தமிழகம் சிறப்புற்றுத்தான் விளங்குகிறது. எந்த அளவிற்குச்
செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்
கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்தின் நிதி ஆதாரங்
களைப் பெருக்க வேண்டுமென்ற கருத்தில் யாருக்கும் கருத்து மாறுபாடு
இருப்பதாகக் கூறவில்லை. அத்தனை பேரும் நிதி வசதிகளைப் பெருக்க
வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். இன்றைக்குப் பெரும்பாலான நிதியை
ஏற்கும் தன்மை மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மத்திய
அரசுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டால், அதைத் தீர்க்க நாசிக் பிரஸ் வைத்திருக்
கிறார்கள். எவ்வளவு பற்றாக்குறை இருந்தாலும், அந்த அளவிற்கு நோட்டுக்
களை அச்சடித்துப் பறக்கவிடும் தன்மை மத்திய அரசுக்கு இருக்கிறது. அப்படி
புழங்குகின்ற பணத்தை வைத்துத்தான் மாநில அரசு தன்னுடைய பணி
களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நிதி ஆதாரங்கள் முழுவதையும் பெறு
கின்ற இடம் மத்திய அரசாக இருப்பதால், மாநில அரசுக்கு அவதி ஏற்படும்
போது, மத்திய அரசைக் கேட்டு வாங்கும் நிலைமை ஏற்படுகிறது. அப்படிக்
கேட்கும்போது, அதில் நியாயம் இருக்க வேண்டும், நீதி இருக்க வேண்டும்.
மற்ற மாநிலங்களைப் புறக்கணித்துவிட்டு அதிகம் கொடுக்க வேண்டுமென்று
நாம் கேட்கவில்லை. ஒவ்வொரு முறை ஒரு நியதியை அவர்கள் வகுக்
கிறார்கள். அதனால் வளரும் தமிழகம் கெட்டுப்போகிறது என்பதுதான்
அரசின் கருத்து. வளர்ந்தது போதும், கொஞ்சம் உட்காருங்கள் என்று
வளர்கின்ற மாநிலத்திற்குக் கொடுக்கும் உதவியை 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி
விட்டு, வளர வேண்டிய மாநிலம் பிகார், வளர வேண்டிய மாநிலம் ஒரிஸ்ஸா,
அது வளரும் வரையில் நின்றுகொண்டிருங்கள், அதற்குப் பிறகு பிகாரோடு

சேர்ந்துகொள்ளலாம், ஒரிஸ்ஸாவோடு சேர்ந்துகொள்ளலாம் என்று சொல்லக்
கூடாது. அவர்களுக்குத் தனியாக நிதி ஆதாரங்களைப் பெருக்க மத்திய
அரசு திட்டங்களைத் தீட்டி, அவர்களுக்குத் தனியாக உதவி செய்தால், அதை
எல்லா மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ளும். திடீரென்று போர் ஏற்பட்
டால்—சீனப் போர், பாகிஸ்தான் போர் ஏற்பட்டால்—அதிலிருந்து நாட்
டைக் காப்பாற்ற தனி நிதி ஆதாரங்களை மத்திய அரசு பெறும்போது, மாநில
அரசுகள் மத்திய அரசை வலுப்படுத்துவோமென்று சொல்லுவது போன்று
பிற்பட்ட மாநிலங்களுக்குத் தனியாக முயற்சி எடுத்துச் செய்கிறோமென்று
சொன்னால் பரவாயில்லை. எனவே இப்படி ஒதுக்கீடுகள் செய்வதன் காரண
மாக நமக்கு அநீதி ஏற்படக்கூடாதென்பதுதான் நம்முடைய கோரிக்கை.
இதில் கட்சித் தலைமைக்கும், கட்சித் தலைமைக்கும் தகராறு இல்லை
கட்சித் தலைமை பிரிந்திருந்தாலும் இருக்கலாம், சேர்ந்திருந்தாலும் இருக்க
லாம். காங்கிரஸ் கட்சியின் தலைமையும், அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தின் தலைமையும் சேர்ந்தாலும், பிரிந்தாலும் நாட்டுக்கு நட்டம் கிடை
யாது. அது அரசியல். காங்கிரஸ் கட்சியின் தலைமையும், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையும் ஒற்றுமையாக
இருந்தாலும் சரிதான், வேறுபட்டு இருந்தாலும் சரிதான். அது அரசியல்
ரீதியானது. ஆனால் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே
இருக்கும் உறவு கெடாமல் இருக்க வேண்டும்.

Party ve:sus Party இருக்கலாம் ;
Congress versus Anna D.M.K. இருக்கலாம் ;
Centarl Governmeat versus State Government இருக்கக் கூடாது

மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்துதான் தமிழகத்தில் இருக்கி
4-3/4 கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள்
அதை எடுத்துச் சொல்லும்போது, ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள்
1967 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டுத்தான்
ஆட்சிக்கு வந்தார்கள். அப்போது மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆண்டது
மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையேயுள்ள உறவை நாம் காப்பாற்றி
மாநில மக்களுக்கு எந்த அளவிற்கு நாம் பணியாற்ற முடியுமோ அந்த அ
விற்குப் பணியாற்றுவோமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்
அண்ணா வழி நின்று அண்ணாவின் கொள்கைக்கு மதிப்புத் தந்து. அந்த
தன்மையில் அரசோடு அரசு மோதக்கூடாது ; ஆனால் கட்சியோடு கட்
மோதலாம். அரசோடு அரசு மோத வேண்டுமென்று நாங்கள் எண்ண
வில்லை. மத்திய அரசுக்கு ஒத்துழைப்புத் தருகிற உணர்வோடு எப்படி





மாநில அரசு இருக்கிறதோ அப்படி மாநில அரசுக்கு உதவி செய்யும் தன்மை யோடு மத்திய அரசு இருக்க வேண்டுமென்றுதான் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறேன். இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். தொடர்ந்து இருக்கும் கொள்கை அது. திடீரென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் கொண்டிருக்கிறதென்று கூறவில்லை. தொடர்ந்து பல முதலமைச்சர்கள் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். 17—6—1967-ல் சட்டமன்றப் பேரவையில் அண்ணா அவர்கள் நிதிநிலை அறிக்கையை அளித்தபோது, "திட்டமிட்ட பொருளாதார அமைப்பின்கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து, மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன. அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை முதலியன குறித்து அரசியலமைப்பில் வகைசெய்துள்ள அதிகாரங்களின்கீழ் நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரியதாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிற்குள்ள உரிமை வாய்ப்பின் மூலமும் தேசிய வருமானப் பெருக்கத்தின் பெருமளவுப் பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலையிலே அது உள்ளது. தமிழக அரசு உட்பட பெரும்பாலும் எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசிடமிருந்து நிதி வசதிகளை மாநிலங்களுக்கு மாற்றுகிற இன்றைய ஏற்பாடுகளிலுள்ள குறைபாடுகளை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டியுள்ளன. மத்திய அரசு பரிவு காட்டி இதை ஏற்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்" என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே எந்த உணர்வின் அடிப்படையிலே சொன்னார்களோ. அந்த மாற்றம் இன்னும் ஏற்படாத அளவிற்கு, வருந்த வேண்டிய நிலையில் மாநிலங்கள் இருக்கின்றன. தமிழகம் இருக்கிறது. அதை மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறோம் என்பதைத்தான் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறோம். இப்போது அண்மையிலே வந்த நிதியாணைக் குழுவின் கருத்துக்கள் பற்றியும், அதனுடைய தன்மைகள் பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இங்கே எடுத்து சிறப்பாகத் தெரிவித்தார்கள். அதனுடைய தன்மைகளைச் சுட்டிக் காட்டினார்கள். நிதி ஆணைக் குழுவின் சிறப்பான தன்மைகளை, இதற்கு முன்னாலிருந்த நிதி ஆணைக் குழுக்களைவிட, எந்த அளவிற்குச் சிறப்பாக இருக்கிறதென்று சொன்னார்கள். நிதி ஆணைக் குழுவின் கருத்துக்கேற்ப நாம் நம்முடைய சட்ட மன்றத்திலே அதை வலியுறுத்தி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லும் நிலைமையைப் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

யிலே நிதி ஆணைக் குழுவின் தன்மைகளை விளக்கி இந்த மாநில அரசு தன் கருத்துக்களைத் திட்டவட்டமாக, தெளிவாக பத்திகள் 57, 58, 59-ல் சொல்லியிருக்கிறது. மேலும் தேசிய வளர்ச்சி மன்றத்தில்—நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில்—டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலே தமிழகத்தைப் போன்ற மாநிலங்கள் வற்புறுத்தி, மத்திய அரசு திட்டங்களால்—சென்ட்ரலி ஸ்பான்சர்ட் ஸ்கீம்—மாநில அரசுக்கு மாற்றப்படும்போது, தமிழ் நாட்டைப் போன்ற குறைந்த நபர் வாரி வருமானம் உள்ள மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி தர வேண்டுமென்று வாதிட்டிருக்கின்றன. 5 ஆண்டுகளில் 2,000 கோடி ரூபாய் மத்தியிலிருந்து மாநிலங்களுக்கு இவ்வாறு மாற்றப்பட்டது. காட்கில் முறைப்படி இதில் 6.8 சதவீதம் தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கும். காட்கில் முறைப்படி வகுத்துப் பார்ப்போமானால் அது தெரியும். தமிழ் நாட்டை ஒத்த மாநிலங்கள் கூறிய தன் விளைவாக, 2,000 கோடி ரூபாயைப் பகிர்ந்து தரும்போது, நபர் வாரி வருமானம், மொத்த மக்கள் தொகை இரண்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன்மூலம் இருக்கும் 2,000 கோடி ரூபாயில் சுமார் 7.5 சதவிகிதம் தமிழகம் பெற்றுள்ளது. ஆக டாக்டர் ராஜ் கிருஷ்ணா அவர்களின் அறிக்கையில் குறிப்பிட்டதை எல்லா மாநிலங்களும் வற்புறுத்தியதன் காரணமாக ஓரளவிற்கு நிதி உதவி உயர்த்தப்பட்டுள்ளது. காட்கில் முறைப்படி 6.8 சதவிகிதம் பெற வேண்டிய நிலை மாறி ஓரளவிற்கு அதிகமாக—7.5 சத

(பிற்பகல் 6.40)

விகிதம் அளவிற்கு—தமிழகம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான் தமிழ் நாட்டில் நிதி ஆணைக் குழுவில் டாக்டர் ராஜ் கிருஷ்ணாவின் கருத்துக்களின் அடிப்படையில் நாம் கூடுதல் நிதி பெற முயற்சி எடுத்துக்கொண்டு ஓரளவு வெற்றி பெற்றாலும் கூட, இன்னும் பல்வேறு வெற்றிகளை நாம் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல், மதுவிலக்கை எடுத்துக்கொண்டால், மதுவிலக்கை நடைமுறைப்படுத்துகின்ற மாநிலங்களுக்கு அதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். மதுவிலக்குத் திட்டத்தை இந்தியா முழுமைக்கும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. சில மாநிலங்கள், குறிப்பாக தமிழகமும் குஜராத்தும் மட்டும் தான், அன்றிலிருந்து இன்றுவரை விடாப்பிடியாக மதுவிலக்கைத் தீவிரமாக கடைப்பிடித்து வருகின்றன. இந்த இரண்டு மாநிலங்களுக்கும் மட்டும்தான் பெரிய இழப்பு இன்றைய தினம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 22 மாநிலங்களிலும் மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்தி, அவர்களும்





மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற வற்புறுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை வந்தால், எப்படி கொடுக்க முடியும் என்கின்ற நிலை காரணமாக, ஒருவேளை அவர்கள் தமிழகத்துக்கும், குஜராத்துக்கும் நஷ்ட ஈட்டைத் தராமலிருக்கலாம். இந்த நிதி ஆணைக்குழுவினுடைய சிபாரிசுப்படி கொடுப்பதாக இருந்தால், குஜராத் மற்றும் தமிழகத்திற்குத் தான் அவர்கள் கொடுக்க வேண்டும். அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியபடி, அடுத்து அடுத்து அந்தக் கருத்தை மத்திய அரசிடம் வலியுறுத்தி எந்த அளவு வெற்றி பெற முடியுமோ அந்த அளவு வெற்றி பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வோம் என்பதை மட்டும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். பொதுவாக விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்களை அத்தனை பேரும் உணர்ந்திருக்கிறார்கள். பல உறுப்பினர்களும் விவசாயிகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்களைப் போக்குகின்ற வகையில் நாம் 60 கோடி ரூபாய் அளவுக்கு இப்போது கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொன்னோம். தக்காவிக் கடன் ரூ. 16 கோடி. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மற்றும் பயிர்களுக்காக வழங்கிய கடன் ரூ. 42 கோடி. கடன் வாங்கி 5 ஏக்கருக்குக் கீழே இருக்கிற விவசாயிகள், புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு கடனில் மூழ்கிக்கொண்டும் அதிலிருந்து மீள முடியாமல் தவித்துக்கொண்டும் இருப்பவர்கள், மேலும் கடனைப் பெற்று திரும்பத் திரும்ப வற்புறுத்தியும் கட்ட முடியாமல் இருப்பவர்கள்—இப்படிப் பட்டவர்களுக்கு நிவாரணம் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு கிட்டத்தட்ட 60 கோடி ரூபாயை விவசாயிகளின் நன்மையைக் கருதி தள்ளுபடி செய்திருக்கிறோம். எல்லோரும் ஏ.. 60 கோடி ...னார்கள். நானும் 60-வது கோடியில் தான் நின்று கொண்டிருக்கிறேன். (சிரிப்பு). இன்றைக்கு எனக்கு 60 வது கோடி முடிந்து நாளைக்கு 61 ஆரம்பிக்கிறது. (சிரிப்பு). 60 கோடி, 60 கோடி என்று திரும்பத் திரும்ப எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள். விவசாயிகளுக்கு நிவாரணம் ரூ. 60 கோடி போதாது என்றும் எடுத்துச் சொன்னார்கள். நானும் இருக்கின்ற நிலைமையை விளக்கிச் சொல்கிறேன். தேர்தல் நேரத்தின்போது விவசாயிகளுடைய கடன் சுமையை நீக்க வேண்டுமென்று நாங்களும் மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துச்சொன்னோம். அப்படி எடுத்துச்சொல்கின்றபோது, காங்கிரஸ்—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணியினர் குறைந்தபட்ச தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் முன் எடுத்து வைத்தார்கள். விவசாயிகளுக்கு உடன் கடன் நிவாரணம் என்று கூட்டுக் கொள்கையில் எடுத்துச் சொல்லியிருக்

கிறார்கள். நாங்களும் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்கப்படும் என்று சொன்னோம். எத்தகைய விவசாயிகளுக்கு என்று சொல்லும்போது தான், நான் அதற்காக விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாகக் கடன் நிவாரணம் என்றால் தி.மு.க.—காங்கிரஸ் கூட்டுக் கொள்கை அறிவிப்பில் உள்ளதற்கு ஏழையாக இருந்தாலும், பணக்காரனாக இருந்தாலும், நலிந்தவனாக இருந்தாலும், நலியாதவனாக இருந்தாலும், கடன் அத்தனையும் நீக்கப்பட வேண்டுமென்று விளக்கம் இப்போது சொல்லுகிறார்கள். அது அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். ஆனால் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் என்றால், நாங்கள் படுகிற பொருள் ஏழையெளிய சிறிய விவசாயிகள் தான். ஆனால் தி.மு.க.—காங்கிரஸ் கூட்டணி கொண்டிருக்கிற கொள்கையிலுள்ள பொருள் விவசாயிகளுக்கு உடன் கடன் நிவாரணம் என்றால், எல்லா விவசாயிகளும் என்று பொருள்படும் என்று இப்போது சொல்லுகிறார்கள். ஏனென்றால் சொல்லுகிறவன் எந்தப் பொருள்பட சொல்கிறான், எதை வைத்துக்கொண்டு சொல்கிறான் என்பது தான் மிக மிக முக்கியம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடன் வாங்கி, கடனைக் கட்ட முடியாமல், மீள முடியாமல் தவிக்கின்ற சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் என்று "விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்கப்படும்" என்று தேர்தலின்போது சொன்ன வாக்குறுதிக்குப் பொருள் கூறுகிறோம். ஆனால் கூட்டணி அமைத்து கொள்கை அறிவிப்பு செய்தவர்கள் கடன் வாங்கியவர்கள் அத்தனை பேருடைய கடன்களையும் நீக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சரியல்ல. கடன் படுவதோ, கடன் இருப்பதோ சகஜம். கடன் படுவதோ, கடன் இருப்பதோ இழிவான நிலையாகாது, கஷ்டமான நிலையாகாது. அப்படிப் பார்த்தால், உலக வங்கியிடமிருந்து அத்தனை நாடுகளும் கடன் வாங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. டாட்டா, பிர்லா போன்ற பெரிய தொழிலதிபர்கள் கூட ஏராளமான கடன் வாங்கியிருக்கிறார்கள். எந்தத் தொழிலதிபர்களானாலும் கடன் வாங்கித் தான் இருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அத்தனை பேருக்கும் பொருள் புரியும்படி தான் தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும். அப்போது சொல்லியதற்கு ஒரு பொருள் என்றும், இப்போது உணர்வு பூர்வமாக பார்ப்பதற்குப் பிறகு வேறொரு பொருள் என்றும் அமைச்சர் அவர்கள் கூறுவது சரிதானா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அறிக்கை கொடுக்கும்போது அப்படித் தான் கொடுப்பார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1963ஆம் ஆண்டு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை பெருந்தலைவர்



காமராசர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது "முதியோர் ஓய்வூதியத் திட்டம்". என்று தான் அறிவித்தார்கள். முதியோர் என்றால், ஒவ்வொருவரும் ஒரு கணக்குப் போட்டு வைத்திருந்தார்கள். 55 வயதானவர்கள், 60 வயதானவர்கள் எல்லாம் தங்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்று நினைத்திருப்பார்கள். அப்போது தமிழ் நாட்டு ஜனத்தொகை கிட்டத்தட்ட 3½ கோடி இருந்திருக்கலாம். அப்போது எவ்வளவு இலட்சக்கணக்கான முதியோர் இருந்திருப்பார்கள்? அத்தனை பேருக்கும் ஓய்வூதியம் தர முடியுமா ? பெருந்தலைவர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்திலுள்ள 'ஸ்பிரிட் பிகைன்ட் இட்' என்று சொல்லுவார்களே அது எப்படிப்பட்டது என்பது தான் முக்கியம். சொல்லுகின்ற கருத்துக்கும், செயல்படுகின்றபோது ஏற்படுகின்ற உணர்வுக்கும் எவ்வளவு முக்கியம் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 40 ஆயிரம் பேர்களுக்குத் தான் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிந்தது. 65 வயதுக்கு மேல் இருக்க வேண்டும், அனாதையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் உணர்வு பூர்வமாக நிபந்தனைகளை விதித்தார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி : முதியோருக்கான உதவித் திட்டம் ஒரு புதிய திட்டம். அது கோரிக்கையின் அடிப்படையில் அமைந்தது அல்ல. ஆனால் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று விவசாயிகள் தொடர்ந்து 2 ஆண்டு காலமாகப் போராட்டம் நடத்தி அரசுக்குக் கோரிக்கையாக வைத்தார்கள். அரசுத் தரப்பில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலின்போது அளித்த வாக்குறுதி அப்படியே இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் "விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்கப்படும்" என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதை ஒரு நோக்கத்தோடு அறிவித்து விட்டு, இப்போது செயல்படுத்தும்போது இன்னொரு உணர்வோடு செயல்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே மற்றவர்கள் அதைப் புரிந்துகொண்ட விதத்தில் தவறு இருக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் என்ன அடிப்படையில் சொன்னார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் எந்த அடிப்படையில் தெரிவித்தோமோ அதே அடிப்படையில், அதே உணர்வோடு செயல்படுத்துகிறோம். முதியோருக்கு ஓய்வூதியம் கோரிக்கை எதுவும் வைக்காமல் கொடுத்தார்கள் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்தார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதுவல்ல பிரச்சினை. முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்றால், என்ன பொருள் கொள்வார்கள் ? முதியோர் எல்லோருக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் என்று தானே

நினைப்பார்கள். பிறகு அதைச் செயல்படுத்தும்போது உணர்வு பூர்வமாக 65 வயது என்றும், அனாதையாக இருக்க வேண்டுமென்றும் நிபந்தனைகளைப் போட்டார்கள். நாங்கள் இதில் அதே மாதிரி பொருள்படுத்துவது வசதியற்றவர்களைத் தான். நீக்கப்பட வேண்டியது கஷ்டம் தான். கஷ்டத்தை நீக்குகின்ற அளவுக்கு உணர்வு பெற்றிருக்கிறோமா என்பது தான் முக்கியம். "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கம்பன் சொன்னான். பிறகு கம்பன் அல்ல, வெள்ளியம்பலத்து தம்பிரான் பாடினான் என்று சொல்லுவார்கள். ஆகவே இப்போது அதை மாற்றி "கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான்" என்று சொல்ல வேண்டும். நீக்கப்படுவது கடனை என்று சொல்லுபவர்கள் எல்லாக் கடன்களையும் நீக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். வசதி படைத்தவர்களுடைய கடனை நீக்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் போய் இன்னொரு கட்சி ஆட்சிக்கு வந்தால்கூட, இப்படிப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது, எல்லாக் கடன்களையும் நீக்க முடியாது. அதுபோல் வேலையில்லா பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் உதவித் தொகை என்று தான் இப்போது சொல்ல முடியும். பிறகு வங்காளத்தில், கேரளாவில் உள்ளது போல் நாமும் நிபந்தனைகளைப் போட்டுத் தான் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறோம். முதலில் அறிக்கையில் "வேலையில்லா பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் உதவித் தொகை" என்று தான் போடுவார்கள். உணர்வு பூர்வமாகத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, பதிவு செய்து 3 ஆண்டுகள் முடிந்திருக்க வேண்டும், 5 பேர் உள்ள குடும்பத்தில் 4 பேருக்கு ஒருவருக்குமே வேலையில்லாமல் இருந்தால் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் வரலாம். வேலையில்லா பட்டதாரிகள் அத்தனை பேருக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், எந்த ஆட்சியும் நடைமுறைப்படுத்த முடியாது. எதற்கு இதைச் சொல்லுகிறேன் என்றால், வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகைத் திட்டத்தைப் பொறுத்தவரை, நாங்கள் 50 ரூபாய் என்றுதான் தேர்தலின் போது சொன்னோம். ஆனால் தி.மு.க.—காங்கிரஸ் கூட்டணி 100 ரூபாய் என்று சொன்னது. எல்லோருக்கும் தருவது என்று எளிதில் சொல்லி விடலாம். ஆனால் உணர்வைக் காட்டுகின்றபோது எது நியாயமோ அதைத் தான் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற கன்டிஷன் எல்லாம் தமிழகத்துக்கும் பொருந்துமா ? அதாவது வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை அளிக்கும்போது, மேற்கு வங்கம் போல் இங்கும் கன்டிஷன் வைப்பார்களா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த கன்டிஷன்களையெல்லாம் இப்போது தான் ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். எதை எதை இங்கேயும் கொண்டு வரலாம் என்பதை ஆராய்ந்து அதன் அடிப்படையில் தான் இங்கும் கொண்டு வருவோம். அதுமட்டுமல்ல, தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் நேரத்தின்போது எடுத்துச் சொல்கின்றபோது, தெளிவுபட அவர்களும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

"The Party will consider taking steps to waive completely the arrears of loan due from farmers". என்று தமிழ்நாடு காங்கிரஸ் மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தது. 1980 ஆம் ஆண்டு மே மாதம் பொதுத் தேர்தலின்போது, தமிழ்நாடு காங்கிரஸ் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள். "பன்னெடுங்காலமாக விவசாயிகள் பட்டுள்ள பல்வேறு கடன்களும் ஒவ்வொரு பிரிவாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்கள் கடன்கள் ரத்து செய்யப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒரேயடியாக மொத்தமாக ரத்து செய்வோம் என்று எங்கேயும் சொல்லவில்லை. ஒவ்வொரு பிரிவாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்கள் கடன்கள் ரத்து செய்யப்படும். கடன் சுமையைத் தீர்க்க ஒரு டிரிபியூனல் அமைக்கப்படும் என்றும் அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-50)

* **திரு. க. இராமமூர்த்தி :** தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும் மற்றவர்களும் மிகத் தெளிவாக, எச்சரிக்கையோடு, தாங்கள் ஆட்சிக்கு வந்தால், இதை எப்படி நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அவ்வாறு தெரிவிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விவசாயிகளின் கடன்களை உடனடியாகத் தீர்ப்போம் என்று நாங்களும் சொன்னோம். அவர்களும் சொன்னார்கள். ஆனால் விவசாயிகள் என்றால், என்ன பொருள் என்பதிலே தான் இருவருக்கும் வித்தியாசம் இருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில், விவசாயிகள் என்றால், சிறு விவசாயிகள் என்பதைத்தான் குறிக்கும். 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி இந்தியா முழுவதற்கும் என்ன கொள்கையைக்

கடைப்பிடிக்க இருக்கிறது என்று தன்னுடைய தேர்தல் அறிக்கையிே சொன்னதை இங்கே பத்திரிகைக் குறிப்பிலிருந்து படிக்க விரும்புகிறேன் அவர்கள் அதிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"The Manifesto promises that all holdings with an acreag equivalent to 5 acres or less would be exempted from land revenu and steps will be taken to abolish farmers' loans; Small an marginal farmers will be treated as economically weaker sections.'

இது 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அகில இந்திய காங்கிரஸ் கட் இந்தியா முழுமைக்கும் கடைப்பிடிக்க இருப்பதாக அறிவித்த கருத்து வெறும் 5 எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் என்ற தன்மையில் மட்டும் அல்ல "Small and Marginal farmers will be treated as economically weaker sections." அவர்கள்தான் பொருளாதாரத்தின் அடிப்படையில் பலகீனமான பிரிவினராகக் கருதப்படுவார்கள் என்றும், அவர்களுடைய நிலவரி தான் ரத்து செய்யப்படும் என்றும், அவர்களுக்கு இருக்கிற கடன்தான் நீக்கப் படும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டு, விவசாயிகள் என்றால் அது எல்லா விவசாயிகளை யும் குறிக்கும் என்று சொல்வார்களானால், அது அவர்களுடைய கட்சியின் கொள்கை என்ற அளவுக்குத்தான் கொள்ளப்படும். இதை எதற்காகச் சொல்லு கிறேன் என்றால், இன்றைய சூழ்நிலையில் ஏழை எளிய மக்களுக்கு தன்மை செய்ய வேண்டுமே தவிர 15 லட்சம், 20 லட்சம் ரூபாய் வைத்துக்கொண்டு, டிராக்டர் வாங்கி வைத்துக்கொண்டு, இன்னும் பல வசதிகளை வைத்துக் கொண்டிருக்கிறவர்களின் கடனையும் நீக்கிவிட வேண்டும் என்பது எந்த வகையிலும் சரியல்ல.

இதே அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

"To treat the equal as unequals or unequals as equals both are bad"

கந்தனுக்குக் கால்படி என்றால் கருணாநிதிக்கும் கால்படியா என்று கேட்டார்கள். கருணாநிதி என்று நான் சொல்லுகிறபோது சட்டப் பேரவையின் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் குறிப்பிடவில்லை. அண்ணா அவர்களுக்கு அப்போது வந்த, எதுகை மோனையின் அடிப்படையில் கந்தன், கருணாநிதி என்று குறிப்பிட் டார்கள். அதாவது சமமாக இருப்பவர்களை வேறுபடுத்துவதும், வேறு பட்டிருப்பவர்களை, அதாவது தாழ்ந்த நிலையில் இருப்பவர்களையும்



உயர்ந்த நிலையில் இருப்பவர்களையும் ஒன்றுபடுத்திப் பார்ப்பதும் இரண் டுமே தவறானவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தாலும், எல்லோருடைய கடனையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோருவது சரியல்ல. யாருக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டுமோ, யாருக்குக் கடன் நிவாரணம் அளிப்பதன் மூலமாக இந்த அரசு தொடர்ந்து செம்மையாக நடக்க முடியுமோ அவர்களுக்குத்தான் நிவாரணம் அளிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. இப்போது கடன்களை ரத்து செய்வதன் மூலம் இனி எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளும் எண்ணங்களும் இடம் பெறாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இதுபோன்ற நிலைமை எதிர்காலத்தில் வரும் என்று சொல்லி, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத் தாமல் இருப்பது சரியல்ல. அவ்வப்போது அரசாங்கம் கடனையெல்லாம் ரத்து செய்யும் என்ற எண்ணத்தோடு கடன் வாங்கியவர்கள் எல்லாம் திருப் பிச் செலுத்தாமல் இருக்கிற நிலை ஏற்படுமானால், இனி எதிர்காலத்தில் இந்தியாவில் எந்த ஒரு மாநில ஆட்சியும் நடக்க முடியாது. எனவே இப் போது நமக்கிருக்கிற கஷ்ட நிலையைப் பார்க்க வேண்டும். இதன் காரண மாகத்தான் நாம் மத்திய அரசிடம் நிதி உதவி கோருகிறோம். விவசாயி களுக்கு ரத்து செய்யப்படும் கடன் தொகையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் கேட்கிறோம். மத்திய அரசை வற்புறுத்துகிறோம். ஒரு தடவை கேட்டு, வற்புறுத்தி அவர்கள் இல்லை என்று சொன்னாலும், பிறகு பலமுறை வற்புறுத்தி, கடைசியாக நாம் அவர்களிடம் நிதியுதவி பெற்றிருக்கிறோம் என்பதற்குச் சான்று உண்டு. அந்தத் தன்மையின் அடிப் படையில்தான் இப்போது மத்திய அரசை நாம் வற்புறுத்துகிறோம். மத்திய அரசே இந்தக் கடன் சுமையை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மத்திய அரசு கொடுக்காவிட்டாலும், நாமே நமது மாநில நிதியிலிருந்து இந்தக் கடனை எப்படியாவது கட்டித் தீர வேண்டிய அவசியத்தில் இருக் கிறோம். எனவே இப்போது நாம் மத்திய அரசிடமிருந்து இந்த நிதியைக் கோருவதால்தான், இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயக் கடன்களை ரத்து செய்வதற்குத் தேவையான ஒதுக்கீட்டை நாம் செய்யவில்லை என் பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அண்டையிலுள்ள மகாராட்டிரா மாநிலத்தில்கூட ஏறத்தாழ 49 கோடி ரூபாய் வட்டியும் முதலுமாக விவசாயிகளின் கடன்கள் ரத்து செய்யப்பட் டிருக்கின்றன என்று அறிகிறோம். அங்கேகூட ஏழை விவசாயிகளின் கடன் தான் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் "ஸ்மால் லேண்டு ஹோல் டர்ஸ்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஏழை விவசாயிகளின் கடனை மட்டும் நீக்க வேண்டும் என்றுதான் காங்கிரஸ் கட்சி

ஆளுகிற மராட்டிய மாநிலத்திலேகூட போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இதற்கான நிதியை தனது நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்திருந்தாலும், இந்தத் தொகையை மத்திய அரசிடமிருந்து கோரிப் பெறுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே அண்மையில் உள்ள கேரள மாநிலத்திலும் விவசாயிகளின் வட்டியை மட்டும் நீக்கியிருப்பதாகக் கருதுகிறேன். அதுபற்றிய முழு விவரமும் எனக்குக் கிடைக்கவில்லை. வேறு மாநிலங்கள் இந்த வகையில் மத்திய அரசை நிதிகோரி வலியுறுத்தும்போது, நாமும் அவர்களோடு சேர்ந்து வலியுறுத்துவதில், உரிய நிதியுதவி கேட்பதில் தவறு ஏதுமில்லை. ஆனால் மத்திய அரசிலிருந்து நமக்கு நிதியுதவி அளிக்க முன்வந்தால், தயவுசெய்து நீங்கள் ' வேண்டாம் ' என்று சொல்லிவிடாதீர்கள் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

இந்த மாநிலத்தின் நிலைமையைக் காப்பாற்ற, மத்திய அரசு முன்வருமானால் அதைத் தயவு செய்து வேண்டாம் என்று சொல்லி விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட இக்கட்டான நெருக்கடி எந்த ஒரு மாநிலத்திற்கும் வரலாம். எந்த ஒரு நாட்டிற்கும் வரலாம். அப்படிப் பட்ட நேரங்களில் கஷ்டங்களிலிருந்து மக்களை மீட்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளுக்கு மட்டும்தான் உண்டு என்று மத்திய அரசு கருதுமானால், அது மிகவும் தவறாகும். தமிழகத்தில் உள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களுக்கும் வாழ்வளிக்கிற பொறுப்பு, கஷ்டத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுகிற பொறுப்பு, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் சேர்ந்தே இருக்கிறது. மிகுதியான நிதியாதாரங்களைப் பெற்ற மத்திய அரசு இவைபோன்ற சந்தர்ப்பங்களில் மாநிலங்களின் உதவிக்கு வர வேண்டும். பொதுவாகவே ஒரு மாநிலத்தில் புயல் அடித்து சேதம் ஏற்பட்டாலோ, அன்றி வெள்ளம் ஏற்பட்டு சேதம் ஏற்பட்டாலோ, அந்த நட்டத்தில் ஒரு பங்கை மத்திய அரசு ஏற்று சரிக்கட்ட வேண்டும் என்று சொல்லுகிறோம். பல நேரங்களில் மத்திய அரசு சேதத்தில் பெரும்பங்கை ஏற்றுக்கொள்கிறது. சில சமயங்களில் குறைந்த பங்கையே ஏற்றுக்கொள்கிறது. சில சமயங்களில் சமமாகவும் ஏற்றுக்கொள்கிறது. அந்த அடிப்படையில்தான் விவசாயிகளுக்குக் கஷ்டம் வருகிறபோது, ஏழை விவசாயிகள் புயலால் பாதிக்கப்பட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விளைச்சல் இல்லாமல், மகசூல் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு, வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஏற்கெனவே கடன் வாங்கிய காரணத்தால் மேற்கொண்டு கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அந்தக் கஷ்டத்



திலிருந்து அவர்களைக் காக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு மட்டும்தான் உண்டு, எனக்கில்லை என்று மத்திய அரசு சொன்னால், நியாயமில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இத்தகைய பணிகளில் மாநில அரசுக்கு மத்திய அரசு துணை நிற்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது இந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், முதலில் 5 ஏக்கருக்குக் குறைவாக உள்ள கஷ்டப்படுகிற விவசாயிகளின் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். அத்தகைய சிறு விவசாயிகள் இனி எதிர்காலத்தில் கடன் பெறுவதில் கஷ்டம் இல்லாத அளவுக்கு எந்த அளவுக்கு விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை இந்த அரசு மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகிறேன்.

தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், நாம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டியதை வசூலிக்காமல் தள்ளுபடி செய்கிறோம். இதனால் நமக்குப் பிரச்சினையில்லை. நாம் வசூலிக்காமல் விடுவதால் இதன் காரணமாக நாம் யாருக்கும் நிதி செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில், நாம் ஏறக்குறைய 42 கோடி ரூபாய் கடனை ரத்து செய்திருக்கிறோம். இந்தப் பணத்தைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நாம் தர வேண்டும். இந்த மாநில அரசிடமிருந்து கோரண்ட்டி கொடுத்தால், அந்த கோரண்டியின் அடிப்படையில் ' புக் அட்ஜெஸ்ட்மென்ட் ' என்ற அடிப்படையில்—விவசாயிகளுக்குக் கஷ்டம் வராத அளவுக்கு 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக உள்ள விவசாயிகள் தங்களின் வேளாண்மைத் தொழிலைச் செய்ய என்னென்ன வழிவகைகளைக் காண முடியுமோ அவைகளைக் காணும் என்று சொல்லிக்கொண்டு, நாங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி இருக்கிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வாக்குறுதிகளைப்பற்றிச் சொல்லும்போது, வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து வைத்துப் பார்த்தால், எதுவும் சரிவர வராது. கடந்த 30 ஆண்டுக் காலத்தில் யார் யார் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள், அதில் எவையெவைகளை நிறைவேற்றினார்கள் என்று நிதிநிலை அறிக்கைகளை வைத்துக்கொண்டு ஆராய்ந்தால், அதிலே பி.ஹெச்.டி. பட்டம் கூட பெறலாம். எந்த எந்தக் கட்சிக்காரர்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள், அவர்களால் எந்த அளவுக்கு அவற்றை நிறைவேற்ற முடிந்தது என்று பார்த்தால், இது நன்றாகப் புரியும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் இதிலெல்லாம் " the spirit behind it " என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1967 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் ஒன்றைச் சொன்னார்கள். அரிசி விலை ஏறியிருந்த நேரம் அது. நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்போம் என்றார்கள். இதுதான் அதற்கு 'ஹெட்டிங்'. ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதும், அவரைப் பார்த்து எல்லோரும் கேட்டார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் கேட்டார்கள், சட்டமன்றத்திலும், இந்தப் பேரவையிலும்கூட கேட்டார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி தருவேன் என்றீர்களே, எத்தனை பேருக்குத் தந்தீர்கள்?" என்று கேட்டார்கள். அப்போது அண்ணா அழகாகப் பதில் சொன்னார்கள். "ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி தர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். கடன் எல்லாவற்றையும் நீக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். கடனே இல்லாத நாடு இருந்தால் இன்னும் நல்லதுதான். எந்தக் கஷ்டமும், வறுமையும் இல்லாமல் ஒரு நாடு இருக்குமானால், அது இன்னும் நல்லதுதான். ஏழ்மை, இல்லாமை, போதாமை இவையெல்லாம் இல்லாமல் இருந்தால் நல்லதுதான். ஆக அப்படி ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி தர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம்தான். ஆனால் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவதென்றால் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் தேவைப் படுகிறது. ஏழை மக்களுக்கு மட்டும் தரலாம் என்றாலும், 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது, குறைந்தபட்சம் தொழிலாளர்களுக்கு மட்டுமாவது தரலாம் என்றால் அதற்கும் சுமார் 40 கோடி தேவைப்படுகிறது என்று கணக்கைப் பார்த்து, பிறகு எங்கே விலைவாசி அதிகமாகி, வீட்டு வாடகைப் படி தந்து தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு ஏழை எளிய மக்களும் தொழிலாளர்களும் இருக்கிறார்களோ அப்படிப்பட்ட இரண்டு இடங்களைத் தேடிக் கண்டு பிடித்து—அதாவது சென்னையையும் கோவை யையும் கண்டு பிடித்து—அதிலும் 300 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ளவர்களுக்கு மட்டும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி" என்று பேறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அப்போது அண்ணா அவர்கள் குறிப் பிட்ட வாசகத்தைத்தான் நான் இங்கே அவையில் முன்னே குறிப்பிட்டேன். அவர்கள் சொன்ன வாக்குறுதிகளில் எழுத்தை வைத்துப் பார்க்கக் கூடாது. "the spirit behind" இருக்கிறதே அதைப் பார்க்க வேண்டும் என்றார்கள். அதையேதான் முதியோர் ஓய்வுத் திட்டத்தில் திரு. காமராஜர் அவர்கள் செய்தார்கள். அவர்களின் வார்த்தைகளைப் பார்க்காமல், அவர்களின் உணர்வுகளைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 7-00)

ஆகவே நாங்கள் எல்லாம் வாக்குறுதிகளை வாரிவாரி வழங்கினோம், அதன் மூலமாக மக்களுடைய கவர்ச்சியைப் பெற்றோம் என்பதல்ல. மற்றவர்களும் வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் கூட, 'பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம், அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் கிடைக்கப் பொது விநியோக முறை, அரசு ஊழியர்களின் நலன்களைக் கவனிக்க ஊழியர்கள் நலத் துறை, ஏழைகள் திருமணம் செய்ய குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம், கிராமங்களில் ஏழையெளியவர்கள் வீடு கட்டிக் கொள்ள இலவச வீட்டு மனைப் பட்டா, பிற்பட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை அரசே தத்து எடுத்துக் கொண்டு பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரையில் சகல செலவுகளையும் ஏற்றுக்கொண்டு உதவுதல், அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், 27 பொருள்களை பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரிக்குக் கொண்டு வருதல், தொழிலில் 14-வது இடத்தில் உள்ள தமிழகத்தை முன்னேற்றத் திட்டங்கள், நெசவாளர் களுக்கு நூல் கிடைக்க நூற்பாலைகள் ஆரம்பிக்க நிதியொதுக்க திட்டம், தாழ்த்தப்பட்டவர்கள், மீனவர்கள் ஆகியோருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்" என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலே கவர்ச்சி இல்லையா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: The Hon. Minister should appreciate the spirit behind this also.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நானும் சொல்கிறேன். அவர்கள் சொல்லுகிற உணர்வை நாங்கள் மதிக்கிறோம். நாங்கள் சொல்லுவதில் உள்ள உணர்வை அவர்கள் மதிக்க வேண்டும். எங்களுடைய நிதிநிலை அறிக்கையை எந்த உணர்வில் காண்கின்றனரோ அதே உணர்வில்தான் மற்றவர்களுடைய நிதிநிலை அறிக்கையையும் நான் மதிக்கிறேன். எங்கள் வாக்குறுதிகளை அவர்கள் நினைவுபடுத்துவதைப் போல் அவர்களுடைய வாக்குறுதிகளை நான் நினைவுபடுத்துகிறேன்.

THIRU A. R. DAMODARAN: I only regret that only political parties will appreciate the spirit behind their election manifesto. The public may have an entirely different view.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். வாக்குறுதிகளைக் கொடுத்து அந்தக் கவர்ச்சியின் காரணமாகத்தான் வெற்றி பெற்றோம் என்பதல்ல. வேறு பல சூழ்நிலைகள், நிலைமைகள் சேர்கின்றன என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமல்ல. மத்திய அரசினுடைய துணை அமைச்சராக இருக்கிற திரு. எம். பரூட் அவர்கள் ஜூன் 20 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் ஒரு விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். "விவசாயிகளுக்குத் தரப்பட்ட கூட்டுறவுக் கடனைக் குறைப்பது என்பதும், முழுவதும் ரத்து செய்வது என்பதும் சாத்தியமல்ல. வாங்கிய கடனை, பொது நிறுவனங்களிலிருந்து, பொதுப் பணத்திலிருந்து வாங்கிய கடனைத் திருப்பித் தர வேண்டாமென்று சொல்வது தார்மீக அடிப்படைக்கு விரோதமான கொள்கை. ஆகவே இதை ஏற்க இயலாது. வாங்கிய கடனைத் திருப்பித் தருவதுதான் முறை" என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கருத்தும் அதுதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வாங்கிய கடன் என்றால் கடனே. வாங்கிய கடனைக் கொடுத்துத்தான் தீர வேண்டும். ஐந்து ஏக்கர் நிலச் சொந்தக்காரர்கள் ஆயுள் உள்ள அளவும், பார் உள்ள அளவும், நீர் உள்ள அளவும் கடன் வாங்கிக் கொண்டேதான் இருப்பார்கள். வாங்கிய கடனைக் கட்டித்தான் தீர வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். சிறு விவசாயிகள், ஐந்து ஏக்கருக்குக் கீழ் நிலம் வைத்துள்ளவர்களுக்குக் கடன் நிவாரணம் என்று தலைப்புப் போட்டு அதற்குக் கீழே விளக்கம் சொல்லும்போது, புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, கடனே செலுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு மட்டும் இந்தக் கடன் நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் சிறு விவசாயிகளாக இருக்கிற மற்றவர்களுக்கு இந்தக் கடன் நிவாரணம் பயன்படாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நிதிநிலை அறிக்கையிலே தெளிவுபடச் சொல்லியிருக்கிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்குத்தான் இந்தக் கடன் தள்ளுபடி



என்று சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொன்னால் மற்றவர்களுக்கு இல்லை என்றுதான் பொருள். இதைத் தெளிவுபடச் சொல்லியிருக்கிறோம். மற்றொரு கருத்து இந்த அவையிலே எல்லோரிடமும் நிலவுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 60 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். மேற்கொண்டு அடுத்தடுத்த கட்டமாக மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுமென்ற ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. அது மாதிரி திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அடுத்தடுத்து வருகிற பல கட்டங்களைப்பற்றி நாங்கள் நினைக்கவில்லை. இப்போதிருக்கிற ஒரே கட்டத்தைப் பற்றித்தான் நாங்கள் நினைக்கிறோம்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் பதில் சொல்லும்போது இவ்வளவு குறுக்கீடுகள் இருந்தால் எப்படி ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நான் அமைதியாகத்தான் இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் கேட்ட விளக்கத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன பதிலையொட்டி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் கூறியவாறு குறிப்பிடப்படவில்லை. "சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை முழுவதையும், முதலும் வட்டியும் உட்பட அடியோடு ரத்து செய்வது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கு முன் உள்ள பக்கம் எட்டுக்கு வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். பக்கம் எட்டில், "குறுகிய கால கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் சுமார் ரூபாய் 97 கோடி பல ஆண்டுகளில் பருவ நிலைப் பொய்த்ததன் காரணமாகவும், விளைச்சல் பாதிக்கப்பட்டதன் காரணமாகவும் மத்திய காலக் கடன்களாக நீட்டிக்கப்பட்டுள்ளன. அத்தொகையில் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று ஏறத்தாழ ரூபாய் 80 கோடி அசல் மட்டும் நிலுவையில் இருந்தது. வட்டித் தொகையில் இதுவரை ஏறத்தாழ ரூபாய் 15 கோடி நிலுவையில் உள்ளது. இதில் ஐந்து ஏக்கர் நிலத்திற்குக் குறைவான உடைமை உள்ள விவசாயிகளின் கடன் நிலுவைகள் ஏறத்தாழ 50 விழுக்காடு இருக்கும். ஆகவே சிறிய விவசாயிகள்

செலுத்தவேண்டிய நிலுவையில் அசலாகச் சுமார் 35 கோடி ரூபாயும், இதுவரை செலுத்தவேண்டிய வட்டி நிலுவையாகச் சுமார் 7 கோடி ரூபாயும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேனே தவிர மற்றவர்களுக்கு என்ற நிலையில் இல்லை.

தொழில் துறையைப் பொறுத்த வரையில், பல பேர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 1977 வரையில் மூன்றாவது இடத்திலிருந்த தமிழ் நாடு 1978-79 ஆம் ஆண்டுக்குப் பிறகு திடீரென்று 14-வது இடத்திற்குப் போய்விட்டதென்று சொல்லியிருக்கிறார்கள். சிலர் 15-வது இடத்திற்குப் போய்விட்டதென்றும், சிலர் 13-வது இடத்திற்குப் போய்விட்டதென்றும் சொல்லியிருக்கிறார்கள். தொழில்களைத் துவக்க உரிமங்களுக்காக அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்த மாநில அரசு தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைபட எடுத்துக்கொண்டு வருகிறது. இயன்ற சக்தியின் அடிப்படையில், முடிந்த அளவிற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெளிவுபடச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் பெருந் தொழில்களை ஆரம்பிக்க மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்று கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிற எல்லாத் தொழில்களுக்கும் மத்திய அரசிடமிருந்து உரிமம் வாங்க வேண்டும். மூன்று கோடி ரூபாய்க்குக் கீழே இருக்கிற திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியதில்லை. அந்நியச் செலாவணியில் ஈடுபடுகிற அளவிற்கு அல்லது அந்நிய நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்து தொழிலைச் செய்கிற அளவிற்கு இருந்தால், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த வகையில் மத்திய அரசுக்கு உரிமங்கள் கேட்டு நாம் அனுப்பியிருக்கிற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1977-ல் 55, 1978-ல் 45, 1979-ல் 49, 1980-ல் 49. ஆகமொத்தம் 196 விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இதிலே அனுமதி வழங்கப்பட்டவை 76. அதாவது 196 உரிமங்களுக்காக அனுமதி கேட்டு அனுப்பியவைகளில் 1977-லிருந்து 1980 ஆம் ஆண்டு வரையில் அனுமதி வழங்கப்பட்டிருப்பவை 76, நிராகரிக்கப்பட்டவை 13, திரும்பப் பெறப்பட்டவை—முதலில் உரிமம் கேட்டு பிறகு வேறுபல சூழ்நிலை காரணமாக நடத்த முடியவில்லை என்று திரும்பப் பெற்றுவிடுவார்கள்—அல்லது மத்திய அரசால் முடக்கி வைக்கப்பட்டது 17. இன்னும் முடிவு எடுக்கப்படாமல் மத்திய அரசிடத்தில் இருப்பது 90. ஆக மொத்தம் 196.



நடுத்தரத் தொழில்களைப் பொறுத்தவரையில், 1977-ல் இங்கே பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளாக விளங்கியவை 19, 1978-ல் 29, 1979-ல் 37. சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் நிலையாகப் பதிவு செய்யப்பட்டு, துவங்கப்பட்டு செயல்படுபவை 1977-ல் 5,394, 1978-ல் 5,144, 1979-ல் 6,126.

மார்ச் 31, 1980 வரையில் 1,795 சிறு தொழில்களுக்கு இடங்கள் தரப் பட்டிருக்கின்றன. ஆனால் இடத்தைப்பற்றிக் கூறும்போது 1976-77 வரையில் இந்த மாநிலம் மூன்றாவது இடத்திலிருந்து திடீரென்று 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டால், 13-வது இடத்திலிருந்த ஒன்பது மாநிலங்கள் இந்த ஆண்டுகளில் தங்களுடைய நிதி நிலையைப் பெருக்கி உற்பத்தியைக் கொண்டு வந்து தொழில் வளர்ச்சியைக் காட்டியிருக்க வேண்டும். ஆனால் மற்றொரு இடத்திலே, மூன்றாண்டுக் காலத்திலே, ஜனதா ஆட்சி வந்தவுடனே தொழில் வளரவில்லை என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. பொதுவாகவே ஜனதா மத்தியில் ஆட்சி செய்த போது பொதுத் தொழில்கள் வளரவில்லை என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் தமிழகம் 13-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று குற்றம் சாட்டினால், மற்ற ஒன்பது மாநிலங்கள் முந்திக்கொண்டு போயிருக்கிறதா என்றால், இல்லை. தொழிற்சாலைகளுக்கான உரிமம் பெற ஆறு மாதம் ஓராண்டுகூட ஆகும். பிறகு தொழிற்சாலையைத் துவக்க இரண்டு, மூன்று ஆண்டுகள் பிடிக்கும். உற்பத்தி தொடங்கி பொருள்கள் வெளிவர நான்கைந்து ஆண்டுகள் ஆகும். முழு வளர்ச்சியைப் பெற ஆறேழு ஆண்டுகள்கூட ஆகும். சில சமயம் ஏழெட்டு ஆண்டுகள்கூட ஆகும். விதை ஊன்றிய மூன்று நாட்களில் கீரை வருவதைப் போல் தொழில் வளர்ச்சியைக் காட்ட வேண்டுமென்ற தவறான எண்ணம் இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 7-10)

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா என்பதிலே லேட்டஸ்ட்டாக நமக்குக் கிடைத்திருக்கின்ற புள்ளிவிவரங்கள் இதுதான். 1976-77-க்கான மத்திய அரசால் நடந்துவரும் வருடாந்திர தொழில் வளர்ச்சி ஆய்வு அறிக்கையில், அதாவது 'அன்னுவல் சர்வே ஆப் இன்டஸ்ட்ரிஸ்' என்ற அறிக்கையில் மத்திய அரசு ஆய்வு எடுத்த வகையில், அதன் முடிவுகளின்படி, தமிழ் நாட்டில் 8,247 தொழில் நிறுவனங்கள் உள்ளதாகவும், இதில் 6.63 லட்சம் பேர்கள் வேலை செய்வதாகவும், உற்பத்தி மதிப்பு 69.1 கோடி என்றும் கூறப் பட்டிருக்கிறது. இந்த உற்பத்தியின் கூடுதல் அளவின் மதிப்பு, அகில இந்திய

மதிப்பில் பார்க்கும்போது, 9.4 சதவிகிதம் என்று வருகிறது. மகாராஷ்டிரம் 24.4 சதவிகிதம். மேற்கு வங்காளம் 12.1 சதவிகிதம், அதற்கு அடுத்து தமிழகம் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது என்று தெரிகிறது. 1976-77-ல் கிடைத்த அறிக்கை இப்படிக் கூறுகிறது. அந்த வகையிலே மகாராஷ்டிரம் தொழில் வளர்ச்சியில் முதல் இடத்தையும், மேற்கு வங்காளம் இரண்டாம் இடத்தையும் பெறுகிறது. மேற்கு வங்காளம் பெறுவது 12.1 சதவிகிதம். தமிழகம் 9.4 சதவிகிதம், மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. அதற்கு அடுத்து வருகின்ற சூழ்நிலைகளைப் பார்ப்போமானால்,—' ஸ்டேட் வைஸ் டிஸ்டிரிபுயுஷன் ஆஃப் அசிஸ்டென்ஸ்' என்று சொல்வார்கள். தொழில் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு செய்து தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்ற நிலைகளை நாம் அடிப்படையாக வைத்துப் பார்த்தால், 1977—88-ல் முதல் இடத்தைப் பெற்றிருப்பது குஜராத் மாநிலம். ரூ. 142.67 கோடி அளவில் மொத்த முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது இடத்தைப் பெற்று இருப்பது மகாராஷ்ட்டிரம். அதன் மொத்த முதலீடு ரூ. 94.28 கோடி. மூன்றாவது இடத்தை 1977—78லே பெறுகிறது தமிழகம். ரூ. 57.48 கோடி தமிழகத்தைப் பொறுத்து இருக்கிறது.

1978—79-ம் ஆண்டு கணக்குப்படி நாம் பார்த்தால், முதலிடம் மகாராஷ்ட்டிர மாநிலம் அடைகிறது, 181.81 கோடி. இரண்டாவது இடத்தை குஜராத் அடைகிறது. 123.49 கோடி. மூன்றாவது இடத்தை தமிழகம் பெறுகிறது, 108.53 கோடி. ஆனால் சதர்ன் ரிஜன் என்று பார்க்கின்றபோது, தென் மண்டலத்திலே பார்த்தால், பலர் கணக்குப் புள்ளிவிவரங்கள் இல்லாமலே, கர்நாடகம் வளர்ந்து விட்டது, ஆந்திரம் வளர்ந்து விட்டது, கேரளம் வளர்ந்து விட்டது, ஆனால் தமிழகம் தூங்கிக்கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். சொல்வதைக் கேட்கின்ற போது ஒரு மாதிரியாக இருக்கிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன. அவர்கள் எல்லாம் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி யாரால் தூங்கிற்று, எப்படித் தூங்கிற்று என்று பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால் தெரியும். 1977—78 ஆம் ஆண்டைப் பார்த்தால், ஆந்திரா ரூ. 27.14 கோடி. அதுவும் வளர்ந்து வருகிறது. கர்நாடகம் வளர்ந்து வருகிறது என்பது உண்மை. எந்த அளவுக்கு வளர்ந்து வருகிறது என்று பார்க்க வேண்டும். 1978—79 ஆம் ஆண்டை எடுத்துப் பார்த்தால் கர்நாடகம் ரூ. 53.50 கோடி, கேரளா ரூ. 29.29 கோடி. தமிழகம் ரூ. 59.48 கோடி. இந்த நான்கு மாநிலங்களில் தமிழகம்தான் முன்னணியில் நிற்கிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம் பின்னாலே நிற்கின்றன. 1978—79 கணக்குப்படி எடுத்துப் பார்த்தாலும்



கூட, ஆந்திர மாநிலம் ரூ. 69.98 கோடி அளவுக்கு உதவி செய்யப் பட்டிருக்கிறது. கேரளாவிலே ரூ. 51.51 கோடி. ஆனால் தமிழ் நாடு ரூ. 108.53 கோடி என்று வரும்போது, நான்கு மாநிலங்களிலும் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், இப்போதும் தமிழகம் மூன்றாவது இடத்திலேதான் இருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் இனிமேல்தான் வரவேண்டும் 1978—79 வரை மூன்றாவது இடத்தில் இருந்தது. திடீரென்று 13 வது இடத்திற்கு 14 வது இடத்திற்குப் போய்விட்டது என்பதில் எந்தப் பொருளும் இல்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I want one clarification. The figures which the Hon. Minister mentioned, I hope, pertain to private sector industries and do not include public sector industries.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், பெருந் தொழில்கள் வரவில்லை. பெருந்தொழில்கள் வருவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்த லிஸ்ட் கொஞ்சம் நீண்டதாக இருந்தாலும், அங்கத்தினர்கள் கேட்க வேண்டுமென்பதற்காக நான் அவைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். பெருந்தொழில்கள் வரவில்லை, பெருந்தொழில்கள் வருவதற்கு யாரும் முயற்சி செய்யவில்லை என்று குற்றம் சாட்ட வேண்டியதில்லை. மொத்தத்தில் 196 உரிமங்களுக்கு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது, அதிலே ஏறக்குறைய 70 உரிமங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 90 இன்னும் முடிக்கப்படாமல் இருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை நான் சொன்னேன். அந்த வகையிலே பார்க்கிறபோது, கிட்டத்தட்ட கொஞ்சம் 5 கோடி ரூபாய் மதிப்புக்கு மேலே இருக்கின்றவைகளை மட்டும், கோடிக்கணக்கில் மதிப்புள்ள தொழில்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈ. ஐ. டி. பாரி (இந்தியா) லிமிட்டெட் கம்பெனி, சென்னை க்ளோரோ பேக்வேர்ட் பெனிகால் எட்செட்ரா, (Chloraphenicol, etc.) ஆரம்பிப்பதற்கு 18—1—1972 லே எரியாவிலே ரூ. 7.20 கோடி திட்டம் அதுபோலவே, லிம்கோ லிமிட்டெட், பாம்பே உரிமம் கேட்கப்பட்டிருக்கிறது. (Processed Frozen Sea Food, etc.) புராசெஸ்ட் புரோசன் சீஃபுட் எட்செட்ரா, தூத்துக்குடியிலே ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் செய்து 1—4—1977-ல் அனுமதி கேட்டு, மாநில அரசு மத்திய அரசுக்குப்

பரிந்துரை செய்தது. பரிந்துரை செய்த தேதியைத் தான் நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் விண்ணப்பம் செய்தது 4—1—1977. நாம் பரிந்துரை செய்தது 21—4—1977. 4.90 கோடி ரூபாய்க்குத் திட்டம். இதே மாதிரி, சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ், மதுரை, ஆயில் சீட்ஸ் நிறுவனம். அதை மதுரையிலே ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அது ரூ. 109.84 லட்சம் திட்டம். அது 19—7—1977 லே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே மெசர்ஸ் டால்மியா சிமெண்ட்ஸ் பார்த் லிமிடெட், நியூ டெல்லி அவர்கள் Verticle Shaft Kiln (Cement Machinery) டால்மியாபுரத்திலே நிறுவுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு 8.47 கோடி ரூபாய் முதலீட்டின் அடிப்படையில் 3—7—1977 அன்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து இந்துஸ்த்தான் மோட்டார்ஸ் லிமிட்டெட், கல்கத்தா, டீசல் என்ஜின் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு முயற்சி எடுத்து, பேக்வேர்ட் ஏரியாவிலே தொடங்குகிறோம் என்று அவர்கள் கருத்துரை தெரிவித்து, 17—8—1978 லே நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். இதற்கு முதலீடு அவர்கள் செய்ய இருப்பது ரூ. 9.50 கோடி. அடுத்து மெசர்ஸ் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ், மதுரை, டையர் ரி டிரிடிங் (Tyre retreading) தொழிற்சாலை ஒன்று தொடங்குகின்ற முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அதன் முதலீடு 5 கோடி ரூபாய். அதைத் தொடங்க முயற்சி செய்து 12—12—1978-ல் நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அடுத்து, திரு. டி. என். ஆரவின்ட் ரெட்டி, மதனபள்ளி, சித்தூர் டிஸ்ட்ரிக்ட், அலுமினியம் ஃபாயில், பேக்வார்ட் ஏரியா Aluminium Foil, Backward area) வில் தொடங்க முயற்சி செய்து, ரூ. 7.50 கோடிக்கு முதலீடு திட்டத்தை 21—6—1979-ல் இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறது. அடுத்தது, மெசர்ஸ் பிமல் குமார் போட்டார், கல்கத்தா, பை புராடக்ட்ஸ் ஹார்ட் கோக், (By Products Hard Coke) மெட்ராசிலே தொடங்குவதற்கு முயற்சி செய்து, 4.75 கோடியில் மூலதன முதலீடு செய்யும் திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அதை 3—9—1979-ல் நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அடுத்து, மெசர்ஸ் சதர்ன் ரோட்வேஸ், மதுரை, அவர்கள் என்ஜின் வால்வ்ஸ் (Engine Valves) அருப்புக்கோட்டையிலே தொடங்குவதற்கு ஒரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். 2.83 கோடி ரூபாய் திட்டம் இது. அதற்கு 3—9—1979 லே நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். அடுத்து, மெசர்ஸ், மேட்டூர் பேர்ட்ஸ்சென் லிமிடெட், சென்னை அவர்கள் மெக்கானிக்கல் ஹேண்ட்லிங் கன்வேயிங் சிஸ்டம்ஸ் (Mechanical Handling Conveying Systems) சைதாப்பேட்டையில் தொடங்க முயற்சி செய்திருக்கிறார்கள். அது 3.05 கோடி ரூபாய் திட்டம். அதை 4—9—1979 லே பரிந்துரை செய்திருக்



கிறோம். மெசர்ஸ் திருமலை கெமிகல்ஸ் லிமிடெட், பாம்பே, பிதாலிக் அன்ஹைட்ரேட் (Phthalic Anhydride) ராணிப்பேட்டையிலே தொடங்க முயற்சி செய்திருக்கிறார்கள். ரூ. 4.52 கோடி முதலீடு செய்யும் திட்டம். 24—9—1979-லே அதற்கு நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம். அடுத்து, எம். டி. டிட்கோ, லிமிட்டெட், சென்னை, 2. எதில் ஹெக்சோனால் புடானால் (2 Ehyl Hexanol Butanol) கடலூரிலே அல்லது ஈரோட்டிலே தொடங்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இது ரூ. 20 கோடியிலே திட்டம். அதை 12—10—1979 லே பரிந்துரை செய்திருக்கிறார்கள். அடுத்து, மெசர்ஸ் லஷ்மி மெசின் ஓர்க்ஸ் லிமிட்டெட், கோயம்புத்தூர், புளோ ரூம் ஹோசூரில் தொடங்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். ரூ. 9.04 கோடி முதலீடு செய்யும் திட்டம். அதை 13—6—1979-லே நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். இது போன்று, திரு. வேலாயுதம், சுதர்சன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட், சென்னை. அவர்கள் ஜிப்சம் கார்பன் போர்ட் எட்செட்ரா Gypsum Carbon Board, ect) தூத்துக்குடியில் தொடங்க முயற்சி செய்திருக்கிறார்கள். அது 26 கோடி ரூபாய்க்குத் திட்டம். அது 30—1—1980 லே, ஜனவரியிலே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து, கார்போரான்டம் யூனிவர்சல் லிமிட்டெட், சென்னை. அவர்கள் செராமிக் ரிபிராக்டரி பைபர் அண்டு புராடக்ட்ஸ் (Ceramic Refractory Fibre and Products) ஹோசூரில் ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அது 3.25 கோடி ரூபாய் முதலீடு செய்யும் திட்டம். அது 14—2—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து, கோயம்புத்தூர் கெமிகல்ஸ் அண்டு மேனுபாக்சரிங் கம்பெனி லிமிட்டெட், கேரளா. அவர்கள் தோரியம் கார்ப்னெட் எடசட்ரா Thorium Carbonate, etc.) தொழில் ஒரு கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டு அது 18—2—1980-லே நம்மால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து வில்ஸ் இந்தியா லிமிட்டெட், பாடி, சென்னை அவர்கள் ரியர் ஆக்ஸில் ஹவுசிங் (Rear Axle Housing) மறைமலை நகர் அல்லது சோளிங்கர் பகுதியில் ஆரம்பிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்கு முதலீடு ரூ. 4.20 கோடி. இந்த அரசு அதை 5—3—1980-ல் பரிந்துரை செய்திருக்கிறது.

அடுத்தது, மெசர்ஸ் கிரசன்ட் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிட்டெட், கல்கத்தா, அவர்கள் மெதில் க்ளோராசைன் க்ளேன்ஸ் எட்செட்ரா Methyl Chlorosin clanes, etc.) ஆரம்பிக்க முயற்சி செய்திருக்கி

றார்கள். மனலியிலே ஆரம்பிக்க இருக்கிறார்கள். அது 8.90 கோடி ரூபாய் முதலீடு செய்யும் திட்டம். அது 12—1—1980 லே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தது, கோத்தாரி (மெட்ராஸ்) லிமிட்டெட், மெட்ராஸ். அவர்கள் காஸ்டிக் சோடா ( Caustic Soda, etc. ) மனலியிலே ஆரம்பிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்கு முதலீடு 10.60 கோடி ரூபாய். அதை 3—3—1980 லே இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

அடுத்து, கார்போரண்டம் யூனிவர்சல்ஸ், சென்னை அவர்கள் மைக்கா பேப்பர், பேக்வார்ட் ஏரியா (Mica Paper, Backward area) விலே தொடங்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்கு முதலீடு 2.14 கோடி ரூபாய். அது 20—3—1980-லே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தது, குஜார்மல் மோடி அண்டு பிரதர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், மோடி நகர், உத்தரப்பிரதேசம். அவர்கள் பெஸ்டிசைட்ஸ் (பைரிதிரின்) பேக்வார்ட் ஏரியா ( (Pesticides (Piyrethrin) Backward area) விலே தொடங்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்கு முதலீடு 4.95 கோடி ரூபாய். அதை 24—3—1980 லே பரிந்துரை செய்திருக்கிறது நமது அரசு.

(பிற்பகல் 7-20)

திரு. ஏ. ஆர். நரசிம்மன், மெட்ராஸ் பென்சேன் ஹெக்சா க்ளோரைட் (Benzene Hexa Cloride) பேக்டரி மனலியில் ஆரம்பிக்க முயற்சி செய்து, 8—4—1980-ல் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. தொழிலுக்கான முதலீடு 3.65 கோடி ரூபாய். அடுத்து, திருவாளர்கள் விஜயநகர் டெக்ஸ்டைல்ஸ் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிட்டெட், மெட்ராஸ் ஹோசூரில் பிளாஸ்டிக் பிலிம் கேபாசிடர்ஸ் பேக்டரிக்கு 4 கோடியே 25 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்கிறோமென்று சொல்லி 22—2—1980-ல் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அதை 10—4—1980-ல் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். திருவாளர்கள் குட்லாஸ் நெக்கலாக் பெயிண்ட்ஸ் லிமிட்டெட், பாம்பாய் (Goodlass Necolac Paints Limited, Bombay) நிறுவனத்தால் 1 கோடியே 33 லட்சம் முதலீட்டில் பெயின்ட்ஸ் வார்னிஷஸ் எட்சிடிரா தயாரிக்க 11—2—1980-ல் விண்ணப்பம் செய்து, அது 19—4—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. திருவாளர்கள் சுந்தரம் பார்ட்னர்ஸ் லிமிடெட், மெட்ராஸ் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் முதலீட்டில் ஆட்டமேடிவ் பவுடர் மெடல் பார்ட்ஸ்





தயாரிக்கும் தொழிற்சாலையை ஹோசூரில் துவங்க அனுமதி கோரி அனுப்பிய விண்ணப்பம் 22—4—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. திருவாளர்கள் வேவின் இந்தியா லிமிடெட், மெட்ராஸ் (Thiruvalargal Wavin India Limited, Madras) 5—4—1980-ல் சென்னையில் பி. வி. சி. பைப்ஸ் அண்ட் பிட்டிங்ஸ் ரூபாய் 1 கோடியே 50 லட்சம் முதலீட்டில் தயாரிக்க விண்ணப்பித்து, அது 21—5—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்)

ஒன்றுமே இல்லையென்று சொல்லிவிட்டு, நான் என்ன செய்திருக்கிறோமென்பதைப் படிக்கும்போது, அதைக் கேட்கக்கூட பொறுமையில்லை. (சிரிப்பு)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் படிப்பது குறித்து எந்தவித ஆட்சேபணையும் இல்லை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பட்டியல் முடியட்டும். பிறகு விளக்கம் கேளுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நிதியமைச்சரவர்கள் பரிந்துரை செய்யப்பட்டது என்று விவரங்கள் சொல்லுகிறார்கள். எனக்குத் தேவைப்படுவது, எப்போது அவர்கள் விண்ணப்பம் போட்டார்கள், எப்போது பரிந்துரை செய்யப்பட்டது என்ற இரண்' விவரங்களையும் சொன்னால், எந்த அளவிற்குக் கால தாமதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதையும் நிதியமைச்சரவர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் விண்ணப்பம் எப்போது போட்டார்கள் என்பதையும் சொன்னேன். திரும்பவும் சொல்ல வேண்டுமென்றால், இன்னும் கொஞ்சம் காலமாகும். திருவாளர்கள் வைப்ரோ பிராடக்ட்ஸ் லிமிடெட், பம்பாய் (Thiruvalargal Wipro Products Limited, Bombay) ரூ. 2.93 கோடி முதலீட்டில் இராணிப்பேட்டையில் வனஸ்பதி தயாரிக்க 29—1—1980-ல் விண்ணப்பம் செய்தார்கள். 23—5—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும் சொல்கிறேன். ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்னது செய்திருக்கிறோமென்று சொல்லுகிறேன். கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ளவற்றை மட்டும் சொல்கிறேன். மேனேஜிங் டைரக்டர். பென்டாகிரைகிராக்ட்கோ அவர்கள் ரூ. 6.65 கோடி மூலதனத்தில்

சோடியம் பார்மேட் (Pentacrythritol Sodium Formate) தொழிற்சாலையை தென் ஆற்காடு மாவட்டத்தில் துவங்க 22—5—1980-ல் விண்ணப்பம் செய்து, அது 29—5—1980 அன்று பரிந்துரை செய்து அனுப்பப் பட்டிருக்கிறது. விண்ணப்பித்த தேதி 22—5—1980, பரிந்துரை செய்து அனுப்பிய தேதி 29—5—1980. அவ்வளவு விரைவாகப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : அப்படிப் பரிந்துரை செய்து, சீக்கிரமாக அனுப்பியது ஆளுநர் அவர்கள் ஆட்சியின்போது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 'அரசு' என்று தான் சொன்னேன். எங்கள் அரசு என்று சொல்லவில்லை. (சிரிப்பு). 1967-லிருந்து இந்த ஆண்டு பிப்ரவரி வரை ஒரு கணக்கு சொல்ல வேண்டுமென்றால் சொல் கிறேன், பிப்ரவரியிலிருந்து ஜூன்வரை ஒரு கணக்கு சொல்ல வேண்டுமென் றால் சொல்கிறேன். தனித் தனியாகப் பிரித்துச் சொல்ல வேண்டுமென்றால், அரை மணி நேரம் தேவைப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ரொம்ப நேரமாகிவிட்டது. எனவே குறுக்கீடுகள் இல்லாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஓரிரண்டு விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றால் கடைசியில் கேட்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 3 மாதங்கள் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது மாநிலத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பு ஆளுநர் அவர்களிடம் இருந்தது. அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் அரசு தான் செய்யுமென்று சொல்லி வந்தார்கள். ஆனால் அந்த 3 மாதத்தில்தான் எல்லாம் நடந்ததாக எண்ணி, இந்த ஆட்சி அக்கறை செலுத்தவில்லை என்று கருதினால் அது தவறு. மூன்று வருஷ இடைவெளியாக இருந்தால், அவர்கள் அதிகமாகச் செய்தார்கள், நீங்கள் செய்யவில்லை என்று சொல்லலாம். மூன்று மாத இடைவெளியில், கவர்னர் அவர்கள் வருகின்ற பாபுலர் கவர்ன் மென்ட் செய்யட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதும்கூட பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்த நிர்வாகத்தை ஆண்டு விட்டுச் சென்றதோ, அந்த நிர்வாகத்தைத்தான் மறுபடியும் இப்போது வந்து ஏற்றுக்கொண்டிருக்கிறது. கோத்நாரி (மெட்ராஸ்) லிமிடட், மெட்ராஸ் 2.25 கோடி மூலதனத்தில் க்ளோரோமெதன்சஸ் (Chloromethances) மனாலியில் தயாரிக்க 19—3—1980-ல் விண்ணப்பித்து, அது 28—5—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது



திருவாளர்கள் மிட்கோ பேப்ரிகேஷன் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடட், கல்கத்தா ஹோசூரில் கிளாஸ் வுல் (Glass Wool) ரூ. 9 கோடி முதலீட்டில் தயாரிக்க 22—1—1980-ல் விண்ணப்பித்து, அது 28—5—1980-ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நான் இவ்வளவு விவரங் களையும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், 15 நாட்களில் என்ன செய்திருக் கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதற்குள்ளாக விண்ணப்பங்கள் வந்திருந்தால், அவை பிராசசிங்கில் இருக்கும். அதைப்பற்றி 5, 6 மாதங்களுக்குப் பிறகு சொல்லலாம். ஆனால் ஒன்றை மட்டும் சந்தேகிக்கக்கூடாது. இந்த மாநிலத்தில் தொழில்கள் வளரக்கூடாதென்பதற்காக ஒரு ஆட்சி இருக்காது. மாநிலம் வளர வேண்டுமென்றுதான் ஆட்சியில் உள்ளவர்கள் நினைப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே, 10, 15 நாட்களிலே ஏறக்குறைய 10 தொழில்களுக்கான விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்து அனுப்பி யிருக்கிறோம்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொழில் வளர்ச்சியிலே அக்கறை காட்ட வில்லை, முயற்சி எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்ப தற்காகத்தான் இவ்வளவு புள்ளிவிவரத்தையும் சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. வேறு எந்தக் கட்சிக்கும் அக்கறையில்லை, எங்களுக் குத்தான் அக்கறை இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இந்த அவை யிலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். 14-வது இடத்திலிருந்து தமிழகம் 19 ஆம் இடத்திற்குப் போய்விட்டது என்று சொன் னால், புதிதாக இந்த மாநிலத்திலே தொழில் துவங்க விரும்பும் பம்பாய், கல்கத்தா மாநிலத்தவர்கள் தமிழ்நாடு பின் நோக்கிச் சென்றுவிட்டதே, அங்கே ஏன் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று எண்ணிவிடுவார்களோ என்ற கவலை வருகிறது. தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடக்கின்றன என்ற நிலை ஏற்பட்டால்தான், அவர்கள் வருவார்கள்.

அசோக் லேலன்ட் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி விளக்கம் அளிக்க விரும்புகிறேன். வர இருந்ததைத் தவற விட்டு விட்டார்களென்று சொன்னார்கள். வர இருந்த ஒரு தொழிற்சாலையை விட்டுவிட்டார்களென்ற குற்றச் சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. அவர் களுடைய நிலைமையைப் பற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அசோக் லேலன்ட் நிறுவனத்தால் சென்னையிலே லாரிகள் உற்பத்தி செய்யும் தொழிற் சாலை ஆரம்பிக்க முயற்சி எடுத்து, அதற்கான வசதிகளைச் செய்ய வேண்டு

மென்று அரசைக் கேட்டார்கள். 13 ஆண்டுகளுக்கு அந்தத் தொழிலிலிருந்து
கிடைக்கும் விற்பனை வரியை—சேல்ஸ் டாக்ஸ்—வட்டியில்லாக் கடனாகத் தர
வேண்டும், 12 ஆண்டுகள் அரசு பெறும் பர்சேசிங் டாக்சை வட்டியில்லாக்
கடனாகத் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதோடு மட்டுமல்ல, "மகா
ராட்டிர மாநிலம் குறைந்த வட்டியில் 25 கோடி ரூபாய் தர இருக்கிறது.
ராஜஸ்தான் மாநிலம் 10 கோடி ரூபாய் குறைந்த வட்டிக்குத் தர இருக்கிறது.
நீங்கள் அதைவிடக் கூடத் தருவீர்களா ?" என்று இவ்வளவு கன்டிஷன்களைப்
போட்டுக் கேட்டார்கள். மாநில அரசு, இப்படிப்பட்ட தொழிற்சாலைகள்
தமிழ் நாட்டில் வர வேண்டுமென்று, அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி
னார்கள். நம்முடைய மாநிலத்தில் என்ன வைத்திருக்கிறோமென்றால்,
வட்டியில்லாக் கடனுக்கு உச்சவரம்பு 48 லட்சம் ரூபாய்தான். அதுவும் 72
மாதங்களுக்கு வருகின்ற விற்பனை வரியை வட்டியில்லாக் கடனாகத் தரு
கிறோம். அதிலும் உச்சவரம்பு 48 லட்சம் ரூபாய்தான். அதற்குமேல்
எந்தத் தொழிற்சாலைக்கும் விற்பனை வரியை வட்டியில்லாக் கடனாகத்
தரும் பாலிசியை அரசு வைத்திருக்கவில்லை. அவர்கள் 13 ஆண்டுகளுக்கு
கேட்கிறார்கள். நாம் பத்து மடங்கு அதிகமாகத் தருவதாக இருந்தால்
ரூ. 4.80 கோடியாகிறது. ஆனால் அவர்கள் கேட்ட அளவிற்குத் தரவேண்(
மென்றால், இன்னும் பல கோடி ரூபாய்கள் தர வேண்டிவரும். அதற்கு
பிறகு பர்சேசிங் டாக்சையும் வட்டியில்லாக் கடனாகத் தந்து, அதற்குமே
25 கோடி ரூபாய் கடன் தந்து, அசோக் லேலண்ட் தொழிற்சாலை வ
வேண்டுமா என்ற நிலைமை வரும்போது, அதற்காக குடியரசுத் தலைவ
ஆட்சியின்போது முடிவெடுக்கப்பட்டது. அதற்கு முன்னாலிருந்த ஆட்சியில்
தீர்மானிக்கப்பட்டது. மேலும் இதன் அடிப்படையிலே ஏராளமானவ
களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்று பார்த்தால், மிகக் குறைவான
அளவுக்குத்தான் கிடைக்கும். பதிமூன்று வருடங்களுக்கு விற்பனை
வரியை வட்டியில்லாக் கடனாகத் தருகிறோமென்று ஒப்புக் கொண்டால்,
தமிழ் நாட்டில் துவங்குகிற ஒவ்வொரு தொழிற்சாலையும் அவ்வாறு
கேட்டால், தொழில் கொள்கையை நாம் நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படாது
என்பதற்காக இதைச் செய்தோம், அவர்கள் வரக்கூடாதென்பதற்காகச்
செய்யவில்லை என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 7.30)

வேறு பல விவரங்களும் தரலாம். வேறு வாய்ப்புகள் வரும்போது தரு
கிறேன். ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட்டுக் கூறுகிறேன். இருப்புப்
பாதைபற்றிச் சொன்னால், அதற்கு நீண்ட விளக்கம் தேவை. குறைந்தது
அரை மணி நேரமாகும். வேறு வசதி, வாய்ப்பு வருகிறபோது அதைப்பற்றி
விளக்கமாகக் கூறுகிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லும்போது,
பம்ப்செட் பற்றிச் சொன்னார்கள். எவ்வளவு இடங்களுக்கு இணைப்பு
தரப்படும் என்றும் புள்ளிவிவரம் கேட்டார்கள்.

1974—75—25,930 இணைப்புகள்.

1975—76.—34,475 இணைப்புகள்.

1976—77.—31,262 இணைப்புகள்.

1977—78.—24,238 இணைப்புகள்.

1978—79:—34,941 இணைப்புகள்.

1979—80.—46,670 இணைப்புகள்.

ஏப்ரல் 1980 லிருந்து ஜூன் 1980 வரையில் 10 ஆயிரம் இணைப்புகள். இந்த
ஆண்டு மொத்தத்தில் 50 ஆயிரம் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று
திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே குறைக்க வேண்டுமென்ற எண்ணம் எங்க
ளுக்கு இல்லை. வளர்க்க வேண்டுமென்ற எண்ணம்தான் எங்களுக்கு
இருக்கிறது.

ஏப்ரல் 1980-லிருந்து ஜூன் 1980 வரையில் 10 ஆயிரம் இணைப்புகள். இந்த
நீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி கேட்டார். தமிழ்
நாடு போக்குவரத்து நிறுவனங்கள் 1980-81 ஆம் ஆண்டில் 1,200 பழைய்
பேருந்துகளைப் புதுப்பித்து விடுகின்ற வகையிலும், 600 புதிய பேருந்து
களை விடுகின்ற வகையிலும் ஆக மொத்தம் 1,800 பேருந்துகளைச் செயலுக்
குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. அது ஒவ்வொன்றுக்கும் விவரம்
இருக்கிறது. அதற்காக நான் புதிதாக விளக்கம் கூற வேண்டிய அவசிய
மில்லை. எது எதற்கு நாம் புதுப்பிக்கிறோம் என்கிற விவரங்களையெல்லாம்
மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்
னார்கள். சிலவற்றைப் புதுப்பிக்க வேண்டிய அவசியமும் சிலவற்றைப்
புதிதாக விட வேண்டிய அவசியமும் இருக்கிறது. இரண்டையும் கணக்கில்
எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு 1,800 பேருந்துகள் விடுகின்ற நிலை
வருகின்றது.

200 கோடி ரூபாய் திருப்பிச் செலுத்தப்பட்டது சம்பந்தப்பட்ட வரை
யில், அது 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் பற்றிய கணக்கைப்
பற்றி இருக்கும் என்று நான் கருதுகிறேன். மொத்தம் 199 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டதை அப்படியே மொத்தமாக அந்த ஆண்டு பயன்படுத்தப்பட
வில்லை. அப்படியே திருப்பிக் கொடுத்துவிட்டோம் என்கிற கணக்கை
மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில்

பெரும்பகுதி அதாவது 113 கோடியே 44 இலட்சம் ரூபாய் சாட்டிய தொ
யைச் சார்ந்தது. மத்திய அரசிடத்திலிருந்து வழிவகை முன்பணமா
பெறும்போதும், ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகப்பற்றாகப் பெறும்போது
அவற்றை அதே ஆண்டில் திருப்பிச் செலுத்துவது சாட்டிய தொகையா
கணக்கில் வரவு வைக்கப்படும். அந்த ஆண்டில் நமது அதிகப்பற்றுகள்
முன் பணங்கள் மிகக்குறைவாக இருந்ததால், இந்த நிதி ஒதுக்கீடு நமக்கு
தேவைப்படவில்லை. இவ்வாறு கடனாகவும், அதற்கான வட்டியாகவும்
ரூ. 113 கோடி நிதியைப் பயன்படுத்தாதது அரசு தனது நிதி நிலைமையைச்
சரியாக நடத்தியதன் விளைவே தவிர, நிதி நிலைமையை நடத்தியதில்
உள்ள செயல் திறனுடைய குறைவால் அல்ல. கடனாகப் பெற்றிருக்க
வேண்டும், வட்டியும் கட்டியிருக்க வேண்டும். அது தேவையில்லையென்ப
தால், நிதி நிலைமையைச் சரியாகப் பயன்படுத்தியதன் விளைவாக அப்படி
ஏற்பட்டதே தவிர, செயல்திறமையினுடைய குறைவால் அல்ல என்பதை
மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசே நேரடியாக உரங்கள் வாங்கி இங்கே விற்பதற்காக ரூபாய்
10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. கையிருப்பில் இருந்த உரங்களின்
அளவையும் வெளிச் சந்தையில் கிடைத்துக்கொண்டிருந்த நிலவரத்தையும்
கருத்தில் கொண்டு பார்த்தபோது, அரசே நேரடியாக உரம் வாங்க வேண்டிய
தேவை ஏற்படவில்லை. எனவே 10 கோடி ரூபாய் தேவைப்படவில்லை.

அடுத்து, மாநில அரசுகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் த
வதற்காக 7.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ரிசர்வ் வங்
80 இலட்சம் ரூபாய் மட்டுமே தந்தது. எனவே இதில் பெரும்பகுதி மிச்ச
ஏற்பட்டது.

அடுத்து, பால் வள நிறுவனத்திற்கு அரசு தரும் சொத்துக்களை மாற்
வதற்காக கணக்கு வகையில் 2.4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறப்பட்டது
இது கணக்கு முறையில் பெறப்பட்டதாகும். பணமாகப் பெறப்படவில்லை
கணக்கீடு இறுதி செய்ததன் அடிப்படையில் அந்த ஆண்டு இந்த மாற்ற
செய்யப்பட வேண்டியதில்லை. எனவே ரூ. 2.4 கோடி மிச்சம் ஏற்பட்டது.

இப்படிப்பட்ட நிலையில் அகவிலைப்படி அளிக்க பலமுறை செலவினத்
தின் வகையில் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெறப்பட்டது. பின்னர்
அந்தந்த மானியங்களின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் பெறப்பட்டது. ஆகை
யால் மொத்தமாக 6 கோடி ரூபாய் நிதியும் திருப்பித் தரப்பட்டது. இந்த
வகைகளில் தான் பெறப்பட்ட நிதி திருப்பிச் செலுத்தப்பட்டதே தவிர,





உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு 199 கோடி ரூபாயும் மொத்தமாகச்
செலுத்தப்படவில்லை என்கிற விளக்கத்தை நான் அளிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி
ஒதுக்கம் ஏன் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது என்பதற்
கான விளக்கங்களையெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக
விளக்கமாக இங்கே தெரிவித்தார்கள். வீட்டு வசதி வாரியம் போன்றவற்
றுக்கு எல்லாம் நிதி ஒதுக்கப்பட்டு, ஆணைகள் சரியாகப் போய் சேரவில்லை
யென்றும், போதிய அலுவலர்கள்கூட நியமிக்கப்படவில்லையென்றும் சொல்லு
கிறார்க. பலவற்றை நான் குறிப்பிட்டேன். சிலவற்றைத்தான் அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். கடந்த காலத்தில் நிர்வாகத் துறையில் தேக்கம்
ஏற்பட்டிருந்தது என்ற காரணத்தால்தான், இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படியே போய்க் கொண்டிருந்தால்,
பொது விவாதம் முடியும்? குறுக்கீடு அதிகமாக வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எதற்காக நான் சொல்கிறேன் என்றால்,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னவைகளில் ஒரு பகுதிக்குத்
விளக்கம் தந்தார்கள். ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் அச்சடித்துக்
கொடுத்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன்.
அவையில் வைக்கப்பட்டதை வைத்துத்தான் நான் சொன்னேன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எனக்குத் தரப்பட்ட விவ
ரங்களை நான் சொன்னேன். கூடுமானவரை முக்கியமாகச் சொன்ன எல்லா
வற்றுக்கும் விளக்கம் தந்திருக்கிறேன். இப்போது மேலும் விளக்கம் கேட்
கிறார்கள். தேவைப்பட்டால், விவரங்களைப் பெற்று விளக்கங்களைத்
தருகிறேன். இன்னும் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.
ஒவ்வொன்றுக்கும் நான் விளக்கமாக பதில் வைத்திருக்கிறேன். இன்னும் ஒரு
மணி நேரத்திற்குமேல் உறுப்பினர்கள் உட்காருவதாக இருந்தால், நான்
சொல்லத் தயாராக இருக்கிறேன்.

என் உரையை முடித்துக்
கொள்ளும் இடைசியாக, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி
விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிடு
ம்போது, ரூபாய் 982 கோடி கொண்ட நிதிநிலை அறிக்கையிலே தொழில்
துறைக்காக அரசு ரூபாய் 3 கோடிதான் ஒதுக்கியுள்ளது என்று சொன்னார்கள்.
தொழில் வளர்ச்சிக்கு மிகக் குறைவாக வரவு-செலவுத் திட்டத்திலே நிதி
ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்டுத் திட்டத்தில்

கிறேன். இந்த மாநிலத்தின் நிலைமைகள் வளர வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு அவர்கள் கருத்துக்களை நல்கியிருக்கிறார்கள். யார் ஆட்சியில் இருந்தாலும் இந்த மாநிலம் வளர வேண்டும் என்ற எண்ணத்திலே எதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு என்றாலும், மன்றம் என்றாலும், அது எல்லாக் கட்சிகளுக்கும் உரியதொன்று, எல்லோரும் சேர்ந்ததுதான் அரசு. அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வுக்கு மட்டும் இந்த அரசு சொந்தமானது அல்ல. எனவே எங்களிடம் குறைபாடு இருந்தால், அதை மற்றவர்கள் சுட்டிக்காட்டினால், நாங்கள் நீக்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். குற்றங்கள் இருந்தால், சுட்டிக்காட்ட வேண்டிய நேரத்தில் சுட்டிக்காட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே நிறைகள் இருக்கும்போது, எங்களுக்கு ஆதரவு தாருங்கள், உதவி செய்யுங்கள், எங்களோடு சேர்ந்து குரல் கொடுங்கள், எங்களுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். டெல்லியைப் பார்த்து நாங்கள் கோரிக்கை வைக்கிறபோது, உதவி கோருகிறபோது, அதில் எல்லோருடைய குரலும் ஒருமித்து இருக்க வேண்டும். எல்லாக் கட்சிகளின் குரலும் ஒருமித்து இருந்தால்தான், நாமெல்லாம் மாநிலத்தின் வளர்ச்சியில் ஒருமித்து, முனைப்போடு இருக்கிறோம் என்று அவர்கள் உணர முடியும். அதன் மூலம் நமது மாநிலத்திற்கு அதிக ஒதுக்கீடு கிடைக்கும். இந்த மாநிலத்தின் வளர்ச்சி துரிதப்பட வேண்டுமென்றால், எல்லோருடைய முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தொடர்ந்து இருக்க வேண்டும். அதன் மூலமே இந்த மாநிலம் வாழ்வும் வளமும் பெற்று, வசதிகள் பெற்று, சீர்மையும் சிறப்பும் பெற்று நல்ல முறையில் உயர முடியும். அதற்கு இங்கே உறுப்பினர்கள் தந்த கருத்துக்களை எந்தெந்த வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அமைச்சரவை நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்ளும். இதில் யாருக்கும் ஐயம் தேவையில்லை என்று எடுத்துச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் இங்கே மிக அமைதியாக, நல்ல முறையில், பண்போடும், நாகரீகத்தோடும் நடைபெற உதவி செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் நன்றியையும் வணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை செம்மையாக—குறிப்பிட்ட ஒரு 10, 15 நாட்களில்—எல்லாவற்றையும் ஆராய்ந்து தயாரித்துக் கொடுத்ததோடு, இங்கே நான் பல்வேறு துறைகளைப்பற்றி எடுத்துச் சொல்ல பேருதவி செய்த நிதித் துறையின் செயலாளர் அவர்களுக்கும், இணைச் செயலாளர் அவர்களுக்கும், துணைச் செயலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றைய துறை அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு,





இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்து, படக்காட்சியைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வராமல் இருந்து என் உரையைக் கேட்ட அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 21—7—1980 திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்குக் கூடும்.

இன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு 60 வயது நிரம்புகிறது. நமக்கிருக்கிற சிறப்பு என்னவென்றால் நாளை முதல் 61 தொடங்குகிறது. அவருடைய 60-வது வயது நிறைவடையும் நாளில் நாம் அவருடைய உரையைக் கேட்டோம். நம்மிடம் அவர் உரை நிகழ்த்திவிட்டு, இன்று நள்ளிரவில் 61-வது வயதைத் தொடங்குகிறார். இதில் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைகிறோம். அவர் இங்கே இல்லாத நாட்கள் நமக்கு வருத்தத்தைத் தந்தது. அதே இடத்தில், அதைவிட இன்னும் சிறப்பான பொறுப்பில் மீண்டும் வந்து அமர்ந்திருக்கிறார். அவர் ஒருவர்தான் எப்போதும் சிரித்த முகத்தோடு இருப்பார். எனவே இந்த அவையில் உள்ள அனைவர் சார்பிலும் அவருக்கு நல்வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.45)

### 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders*

42. Notification issued with G.O. Ms. No. 817, Home, dated the 19th March 1980 in regard to an amendment to Rule 375 (a) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

43. Notification issued with G.O. Ms. Noo. 2402, Education, dated the 26th December 1979 in regard to the constitution of the Academic Council, the Faculties and the Board of Studies of the Perarignar Anna University of Technology. [Laid on the table of the House under section 43 (2) of the Perarignar Anna University of Technology Act. 1978. (Tamil Nadu Act 30 of 1978).]

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

44. Notification issued with G.O. Ms. No. 2358, Education, dated the 19th December 1979 in regard to the framing of Perarignar Anna University of Technology Employees' Conduct Rules. [Laid on the table of the House under section 43 (2) of the Perarignar Anna University of Technology Act, 1978 (Tamil Nadu Act 30 of 1978).]

B. *Reports, Notifications and Other Papers.*—Nil.



## இணைப்பு I.

*[426 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 351 ஆகும். இதில் 65 சதவிகிதத்தினர் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சார்ந்தவர்கள், மற்றவர்கள் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சார்ந்தவர்கள்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சார்ந்த தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், தங்களது கோரிக்கைகளான வருடாந்திர ஊதிய உயர்வு, ஊதியம் நிர்ணயம் செய்வது, மருத்துவ விடுப்பு அளிப்பது, ஒப்படைப்பு செய்துள்ள விடுப்புகளுக்கு ஊதியம் அளிப்பது (Surrender Leave), ஆசிரியர்கள் மாறுதல், போன்ற கோரிக்கைகள் அடங்கிய 20 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி 11—6—1980 முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். அதே ஒன்றியத்தில் பணிபுரியும் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சார்ந்த ஆசிரியர்களும் மேற்கூறிய கோரிக்கைகள் அடங்கிய 31 கோரிக்கைகளை வலியுறுத்தி 11—6—1980 முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

ஊராட்சி ஒன்றியத்தின் தலைமை எழுத்தரும், கல்வி விரிவாக்க அலுவலரும் விடுப்பில் சென்றதால் மேற்கூறிய கோரிக்கைகள்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை என ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்தார். அதனால் திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர், உடனடியாக பழனி, திண்டுக்கல் மற்றும் ரெட்டியார் சத்திரம் போன்ற அருகிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அலுவலர்களை அனுப்பி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டார். அதன் பயனாக, தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் 31 அம்ச கோரிக்கைகளில் மூன்றைத் தவிர மற்ற அனைத்து கோரிக்கைகளும், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் 20 அம்ச கோரிக்கைகளில் பெரும்பாலான கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. இதனால் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி தனது உண்ணாவிரதப் போராட்டத்தை 21—6—1980 அன்று கைவிட்டது. ஆனால் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தனது போராட்டத்தை தொடர்ந்து செய்து வந்தது.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் மாநிலத் தலைவரின் விருப்பத்திற்கிணங்க மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கிழக்கு), திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர் மற்றும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலத் தலைவர்

ஆசிரியோர், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 28—6—1980 அன்று பேச்சுவார்த்தை நடத்தினர். அக்கூட்டத்தில் ஆசிரியர் பிரதிநிதிகள் தங்களது ஏழு கோரிக்கைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வலியுறுத்தினர், அவைகளாவன :—

(1) 50 ஆசிரியர்களின் ஊதியத்தை 2—5—1979 நாளிட்ட நிதித் துறை ஆணை எண். 598-ன்படி நிர்ணயம் செய்வது,

(2) ஏழு ஆசிரியர்களின் ஊதியத்தை 21—12—1978 நாளிட்ட நிதித் துறை ஆணை எண். 1400-ன்படி நிர்ணயம் செய்வது,

(3) மருத்துவ விடுப்பு மற்றும் ஒப்படைப்பு விடுப்பு செய்துள்ள விடுப்புகளுக்குரிய ( Surrender Leave ), ஊதியத்தை வழங்குவது,

(4) தலைமை ஆசிரியர்களுக்குரிய வருடாந்திர ஊதிய உயர்வை வழங்குவது,

(5) மதிய உணவு திட்டத்திற்கு ஒன்றியத்தால் கொடுக்கப்பட வேண்டிய மானியத் தொகையை 1—7—1978 முதல் கொடுப்பது,

(6) 1979 மே திங்களில் மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பயணப்படி வழங்குவது குறித்து ; மற்றும்

(7) மிதிவண்டி வாங்குவதற்கு முன்பணத்தை வழங்குவது.

5—7—1980-க்குள் மேற்கூறிய கோரிக்கைகளை நிவர்த்திக்க ஆவன செய்வது என அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கூட்டணியும் தனது போராட்டத்தை 29—6—1980 அன்று கைவிட்டது.

மேற்கூறிய கோரிக்கைகளில் ஆசிரியர்களின் ஊதியம் நிர்ணயம் செய்வதற்கான கோரிக்கைகளைத் தவிர மற்ற கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன. ஆசிரியர்களின் ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## இணைப்பு II.

428 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

உள்ளாட்சித் துறையில் பணிபுரியும் எல்லா ஊழியர்கட்கும் ஆசிரியர்கள் ட்பட விதிகளுக்குட்பட்டு மிதிவண்டிக் கடன் வழங்க அரசு ஆணைப் றப்பித்துள்ளது. நிதி நிலை மற்றும் வருடாந்திர ஒதுக்கீடு இவைகளை ருத்திற் கொண்டு முன்பணம் வழங்க இயலும். சென்ற ஆண்டு திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் 31 ஆசிரியர்களுக்கு மிதிவண்டி வாங்க முன்பணம் வழங்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மொத்த செலவு ரூபாய் 18,600 ஆகும். 1—4—1980 முதல், ஆசிரியர்களுக்கு முன்பணம் அனைத்தும் கல்வி நிதியிலிருந்தே வழங்கப்பட வேண்டியுள்ளதாலும் மேற்கொண்டு மிதிவண்டி முன்பணம் வழங்க ஊராட்சி ஒன்றிய கல்வி நிதியின் பட்ஜெட்டில் தேவையான நிதி ஒதுக்கப்படாததாலும், ஒன்றிய கல்வி நிதியின் நிதி நிலைமை தேவையான அளவு இல்லாததாலும் மேற்கொண்டு ஆசிரியர்களுக்கு மிதிவண்டி முன்பணம் வழங்கப்படாமல் இருந்தது. குடும்பநல திட்டத்திற்கு ஆட்கள் கொண்டுவரும் ஆசிரியர்களுக்குத்தான் மிதிவண்டி கடன் கொடுக்கப்படும் என்று கூறவில்லை என்று பஞ்சாயத்து யூனியன் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், ஊரக வளர்ச்சி இயக்குநர், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மிதிவண்டி வாங்க ஊழியர்களுக்கு முன்பணம் வழங்க தகுதிகளைக் குறிப்பிட்டு தாம் பொதுவான சுற்றறிக்கை வெளியிடும் வரை முன்பணம் வழங்குவதை நிறுத்தி வைக்கும்படி அறிவுரை வழங்கியுள்ளார். இதன்படி திருமருகல் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கு தொடர்ந்து மிதிவண்டி வாங்க முன்பணம் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களைத் தவிர வேறு எந்தக் காரணத்தாலும் முன்பணம் வழங்க மறுக்கப்படவில்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 10

தொழில் துறைக்காக மொத்தம் ரூபாய் 23.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழில்களை ஊக்குவிப்பதற்காக தொழில் வளர்ச்சிக் கழகம், தொழில் முன்னேற்றக் கழகம், தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவை நிதி நிறுவனங்களின் உதவி பெற்று அரசின் முதலீட்டுடன் பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. தொழில் துறையைப் பொறுத்தவரை, இ கழகங்களின் முயற்சிகளை அரசின் முயற்சியின் ஒரு பகுதியாகவே கருத்தில் கொள்ளவேண்டும். 1980-81 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) ரூபாய் 24 கோடி அளவில் தொழில்களுக்கு நிதி உதவி செய்யத் திட்டமிட்டுள்ளது. அரசின் முதலீட்டுடன் நிதி நிறு வனங்களின் உதவி பெற்று தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) அது செயல படுத்திவரும் தொழிற்சாலைகளில் கூடுதல் பணிகளை மேற்கொள்ளுவதற்காக அடுத்த ஆண்டு ரூபாய் 5.45 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது. தமிழ் நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (சிப்காட்) தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 12 கோடி நீண்ட காலக் கடனாகவும் ரூபாய் 2.9 கோடி வட்டியில்லா விற்பனை வரிக் கடனாகவும் முதலீட்டுத் தொகையாக ரூபாய் 75 இலட்சமும் பிற்பட்ட பகுதிகளில் தொடங்கும் நிறுவனங்களுக்கு ரூபாய் 2 கோடி மானிய மாகவும் அளிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த மூன்று நிறுவனங்கள் மொத்த மாக ரூபாய் 45.10 கோடி பல்வேறு தொழில் நிறுவனங்கள் இயங்குவதற்கு உதவியாக வழங்கும். ஆக அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால், தொழிற் வளர்ச்சிக்கு ஊக்கம் தருகின்ற வகையில் தமிழக அரசு வழங்கும் தொகை ரூபாய் 45.10 கோடி என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாப அவர்கள் குறிப்பிட்டதுமாதிரி, ரூபாய் மூன்று கோடி அல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கணக்கிட்டுப் பார்க்கும்போது, எல்லா வற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும். தனியே ஒன்றை மட்டும் பார்த் தால், சரியாக வராது. இதுபோன்ற பல்வேறு கருத்துக்களை மற்ற உறுப் பினர்களும் இங்கே சொன்னார்கள்.

அடுத்து, ஆசிரியப் பெருமக்களின் பிரதிநிதிகள் மிகுந்திருக்கின்ற அவை இம் மேலவை. அவர்களும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். கல்விபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு இங்கே வர இருக் கிறது, விவாதமும் நடக்க இருக்கிறது. அப்போது பல்வேறு பிரச்சினை களைப்பற்றி எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய பிரச்சி னைகளைப்பற்றியெல்லாம் இப்போது பேச ஆரம்பித்தால், அதற்கு நேரம் இடம் தராது. அதில் பல பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டியிருக் கின்றன. அவைகளையெல்லாம் கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்தாலோ சித்து நிதி நிலைமையப் பொறுத்து செய்யலாமா, இயலுமா, முடியுமா என் பதைப்பற்றியெல்லாம் ஆய்வு செய்ய இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது



1980 ஜூலை 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதுமட்டுமல்ல. அவ்வப்போது கேள்விகள் கேட்டு அதற்கு விளக்கங்க தருகின்ற நிலையும் இருக்கிறது. மேலும் கல்விபற்றிய விவாதம் இங்கே நடைபெறும்போது, மிக விரிவாகப் பேச வாய்ப்பும் வசதியும் இருக்கிறது கல்விக் கொள்கை, உணவுக் கொள்கை, தொழிற் கொள்கை, தொழிலாள நலக் கொள்கை மற்றும் பல்வேறு தன்மைகளைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் "பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ்" ஒன்று ஏற்படுத்த வேண்டு மென்று சொன்னார்கள். அதற்காக வேண்டி 1977 ஆம் ஆண்டிலிருந்தே முயற்சி செய்த விவரங்களையெல்லாம் வைத்திருக்கிறேன். 1974 ஆம் ஆண் டிலே மத்திய அரசை வற்புறுத்தி வற்புறுத்திப் பார்த்தும் அதை இங்கே நடத்துவது பலனளிக்காது, ஆகவே நடத்துவதற்கில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். மறுபடியும் 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடர்பு கொள்ளச் சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு கேட்டோம், இப்போதும் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அது தவிர ஆல்காலி மூலம் இந்த இணையத்தை ஏற்படுத்த முடியுமா என்றும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்கும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன கருத்து இந்த மாநிலத்திற்குப் பலன் தரக்கூடிய கருத்து. பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஆக இருந்தாலும். ஆல்காலி ஆக இருந்தாலும், அது பல துணைத் தொழில்களுக்கு நிச்சயம் பயன்படக் கூடும். தொடர்ந்து அதில் ஈடுபட்டு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-40)

ஆக, மொத்தத்தில் பார்க்கிறபோது, கடந்த 5 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கெல்லாம் நான் 1¼ மணி அல்லது 1½ மணி நேரத்தில் பதில் சொல்வது என்பது இயலாத ஒன்று. ஆகவேதான் சிலவற்றை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்டி யிருக்கிறேன். இருக்கிற நிலைமைகளை இன்னும் விரிவாக ஆராய்வதற்கு இந்த மன்றத்திலே நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வப்போது நுணுக்கமான கருத்துக்களைச் சொல்லி, விளக்கம் கோரி, இறுதியில் நல்ல முடிவுகளைக் காண்பதற்கான வாய்ப்புகள் இந்த மன்றத்தில் நிறைய இருக் கின்றன. எனவே இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் சொன்ன கருத்துக்களை மாறுபாடாகவோ வேறுபாடாகவோ நான் கருத வில்லை. அவர்கள் அனைவரும் மிகுந்த அக்கறையோடு தங்கள் கருத்துக் களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருது

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

கோ எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.

28—6—1980 அன்று ஆசிரியர்கள் உண்ணாவிரதம் கடைப்பிடித்த சமயத்தில் திருமருகல் ஊராட்சி ஒன்றிய ஆணையரும், நாகப்பட்டினம், கோட்டவளர்ச்சி அலுவலரும் கலந்துரையாடிய பின் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மிதிவண்டி வாங்க முன்பணம் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டது. இதன்படி, 28—6—1980 அன்று உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

22007